# சுதேசமித்திரன்

Vol 20

ஜூன் 1949

DIGITIZED

JL
m211, N305.
N4.9.20.E-21.
144098.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
144098
சென்னை-8

# சுதேசமித்திரன்

-6—'49 THE SWADESAMITRAN WEEKLY விலை அணா 4.

THE REGISTRAR OF BOOKS
5 JUL 1949
MADRAS








இயற்கையான வாஞ்சையுடன்

அனைடய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்யத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியரின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

# WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 JUL 1949
MADRAS

# சிறு விளம்பரங்கள்

ஆபீஸ் ஸ்தாபிதம் 1924.

## பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். 1வருஷ பலன் மாதவாரி எழுத ரூபா 5 ஆருடம் மூன்று கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

பண்டித காமிதூர்
**ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,**
"தபோ நிதி," தியாகராய நகர்,
மதராஸ் 17. தபால் பெட்டி 1417.

---

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரியாரின்

## ஆனந்த பற்பொடி (Reg)

(40 வருஷங்களாகப் புகழ்பெற்றது)




சரீரத்துக்கு வாசபடியான வாய், பற்கள் இவைகளில் தங்கிக் கொண்டிருக்கும் பயங்கரமான பற்பல விஷக் கிருமிகளை நாசம் செய்வதுடன், பற்களின் வேர்களை பலப்படுத்தி ஒழுங்காயும், அழகாயும் ரக்ஷிப்பதில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்குமகிடைக்கும் கேட்லாக்இனும்.

ஆனந்த பற்பொடி ஆபீஸ்,
வைத்திய வித்தியாச்ரமம், மதராஸ் 4.

---

வெற்றிக்கு ஒரே வழி!

பரீக்ஷை, தொழில், வழக்கு, வியாபாரம், காதல் இவை வெற்றிக்கும், புத்திரன், தனம், அதிகாரம், ஞானம் இவை விருத்திக்கும், ஆரோக்யம், சுகம், சம்பத்து கைகூடுவதற்கும் இன்றியமையாத **ஸாயி கவசம்** (உத்தரவாதம் பெற்றது) பூஜைக்கு ஜென்ம நக்ஷத்திரம் or எழுதும் நேரம் தேவை;



விலை ரூ. 3—8—0.
ஸ்பெஷல் ரூ. 10.
பலனில்லையேல் பணம் வாபீஸ்.

**ஸாயி ஆஸ்ட்ரல் ஸ்டுடியோஸ்,**
உறையூர் — திருச்சி.

---

## மணவாழ்க்கையின் மர்மங்கள்

தம்பதிகளின் வாழ்க்கையைச் சீர்படுத்தும் அருமையான நூல். க. வீ. மதிப்புரையைக் கவனியுங்கள்.

"இந்நூலில் ஒழுக்கத்திருக்கேடு விளைக்கக்கூடியனவோ, வெறும் காம உணர்ச்சியைத் தூண்டுவனவோ யாதொன்றும் இல்லை. ஆகவே இந்நூலை யாவரும், இளைஞர்கள் அனைவரும் தாராளமாகப் படித்துப் பயனடையலாம். திருமணத்தின்போது இந்நூலைப் பரிசாகவும் வழங்கலாம்." மலிவு பதிப்பு ரூ. 3/12/0. த. செலவு 9 அணா. பைண்ட் பதிப்பு ரூ. 5/8/0. த-செ. 11அணா.

ஷாஜஹான் புக் டெப்போ,
460, திருவல்லிக்கேணி ஹைரோடு,
சென்னை 5.

---

## சக்தி ஆருடம்!

தாசில், தந்தி இலாகா ஆபீசர் Sri K. S. சுப்பய்யர் B. A., 23—6—48ல் எழுதுகிறார்:—"தாங்கள் கூறியபடியே நான் பிரமோஷனுடன் கெஜட் பதவி உத்தியோகம் பெற்றேன்."

3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ 5 ஜாதகம் கணிக்க ரூ 2 சக்தி கவசம் ரூ 7—8—0. வி. பி. தனி. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B:—வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம் P. O. (S. I.)

---




---

## ஷாப் ஆக்ட் ரிஜிஸ்டர்கள்

செட் 1-க்கு ரூ. 2—2—0.

| | | | |
|---|---|---|---|
| B. தமூனு ரிஜிஸ்டர் | 0—4—0 | J. தமூனு நோட்டீஸ் | 0—1—0 |
| C. ,, | 0—4—0 | K. தமூனு ரிஜிஸ்டர் | 0—4—0 |
| D. ,, | 0—4—0 | சம்பள ரிஜிஸ்டர் | 0—6—0 |
| E அல்லது H ,, | 0—8—0 | விசிட் புத்தகம் | 0—4—0 |
| G. தமூனு நோட்டீஸ் | 0—1—0 | வேலை நேர நோட்டீஸ் | 0—1—0 |

25 செட்டுக்கு குறையாமல் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 15% கமிஷன் கொடுக்கப்படும்.

விலாசங்களுக்கு:— சந்திர விலாஸ் பிஞ்சராபோல் பிரஸ்,
பெரிய கடை வீதி, திருச்சிராப்பள்ளி.

---

இப் பக்கத்தில்
விளம்பரம்
செய்யுங்கள்.
★
2"X2" அளவுக்கு
கட்டணம் ரூபாய்
பத்தே தான்.




144098
... 600 008.

☆பொருளடக்கம்☆


| | | பக்கம் |
|---|---|---|
| ...ழும் பாம்பு | வை சு. | 5 |
| தேர்த்தட்டு வார்த்தை | வரன் | 9 |
| சொப்பன வாழ்க்கை (தொடர்கதை) | 'ஆர்வி' | 11 |
| மூன்று சிநேக மணிகள் | ஆர். லட்சுமி அம்மாள் | 17 |
| ஆயிரத்தில் ஒருவர்! | தில்லை வாசி | 19 |
| கலா மண்டபம் | | 23 |
| சந்திப்பு | ஹரிசரண் | 27 |
| யோக க்ஷேமம் | குங்குமம் | 31 |
| பெரிய புராணம் | பி. ஸ்ரீ. | 33 |
| அன்பு உள்ளம் | எஸ் பு. ஸ்ரீ. | 35 |
| பூர்விகக் கலைச் செல்வம் | 'ராவி' | 40 |
| குடும்ப வைத்தியம் | குச்சா மாமா | 43 |
| சுந்தரியின் கணவன் (சிறுவர் கதை) | மாமு | 47 |


"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும், பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUL 1949
MADRAS

சுதேசமித்திரன்
வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XXI] விரோதி-ளு வைகாசிமீ 23உ ★ 1949-ளு ஜூன்மீ 5உ No. 18

# இன்னொரு தொல்லை தீர்ந்தது

சட்ட சபைகளில் இனி மத அடிப்படையை ஆதாரமாகக் கொண்டு எந்த மைனாரிட்டி வகுப்புக்கும் இடம் ஒதுக்குவதில்லையென்று சமீபத்தில் அரசியல் நிர்ணய சபை செய்த முடிவு கண்டு நாட்டின் நலனில் சிரத்தையுள்ள ஒவ்வொருவரும் பெரு மகிழ்வெய்துவரென்பது திண்ணம். மைனாரிட்டிக்கு தனி ஸ்தானம் ஒதுக்குவது என்ற தொல்லை பிடித்த ஏற்பாட்டினால் இந்திய சமூக வாழ்வுக்கு ஏற்பட்ட கோளாறுகள் அனைவரும் அறிந்ததே. கடைசியாக இப்போதுதான் இந்த ஏற்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட ஒரு சில வகுப்புகளுக்கு மட்டும் தற்காலிகமாக அதாவது 10-வருஷம் வரை ஸ்தானங்கள் ஒதுக்குவது என்று அரசியல் நிர்ணய சபை தீர்மானித்துள்ளது.

மத வாரித் தொகுதி முறையும், மத அடிப்படையில் ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதும் ஒரே பேயின் இரு முகங்கள். இந்திய சமுதாயத்தை நிலை குலைத்து, சின்னாபின்னமாக்கி தங்கள் ஆதிக்கத்தை ஸ்திரப்படுத்திக்கொள்வதற்காக அந்நிய அதிகார வர்க்கம் ஏவிவிட்டதே இந்தப் பேய். சுதந்திரம் வந்த பின்னும், சிறிதும் கலப்படமற்ற ஒரு ஜனநாயகத்தை உருவாக்குவதையே நமது லட்சியமாக மேற்கொண்ட பின்னும் இந்த பேயின் வெறியாட்டம் நீடிக்க இடங்கொடுப்பது சிறிதும் பொருத்தமற்றது. இதனால் மேற்குறித்த லட்சியத்துக்கு ஏற்படும் தீங்கு ஒருபுறமிருக்க, மத பேதத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த ஏற்பாடு யார் நலத்துக்கென்று தோன்றியதோ, அவர்களுக்கே தற்போதைய நிலையில் இதனால் கேடுதான் விளையக்கூடும்

சர்தார் படேலும், மௌலானா ஆஸாத் மோஹானியும் சுட்டிக் காட்டியதுபோல், இனி எந்த மைனாரிட்டியும் மத அடிப்படையில் கட்சி கட்டப் பார்ப்பது தனது தலையில் தானே மண் அள்ளிப் போட்டுக் கொள்வதேயாகும். மைனாரிட்டிகள் இந்த வழியைக் கையாளும் வரை, அவை மந்திரி சபையில் ஸ்தானங்களோ, பொதுவாக நிர்வாகத்தில் முக்கியப் பங்கோ பெறுவதென்பது ஒரு நாளும் சாத்தியமில்லை. பெரும்பாலான மக்களுடன் தொடர்பின்றி, எப்போதும் மைனாரிட்டியாகவே ஒரு மூலையில் திக்கற்றவர்களாக ஒதுங்கி நின்று பிரலாபித்துக் கொண்டிருக்கத்தான் இந்த விபரீத ஏற்பாடு உதவும். அவர்களிடம் பரிவு கொண்டவர்கள் போல் நடிக்க இப்போது அந்நியக் கும்பல் எதுவும் அதிகாரத்திலில்லை.

இதே அரசியல் நிர்ணய சபை இரண்டு ஆண்டுகளுக்கு முன் முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் மேற்கொண்டு சட்ட சபைகளில் ஸ்தானம் ஒதுக்கும் யோசனையை அங்கீகரித்ததென்றால், அது அந்த யோசனையின் சிறப்பைக் கருதியல்ல; அப்போது தேசப் பிரிவினையைத் தொடர்ந்து மூண்ட கலவர நிலையில், மெஜாரிட்டி, மைனாரிட்டி வகுப்புகளிடையே முறையே சந்தேகமும், அச்சமும் ஓங்கியிருந்த சந்தர்ப்பத்தில் அந்த யோசனையை அரசியல் நிர்ணய சபை வேண்டா வெறுப்பாக ஏற்றது. அப்போதே மைனாரிட்டி சமூகங்களைச் சேர்ந்த பலர் இத்தகைய பாதுகாப்பை நீடிக்கத் தேவையில்லையென்று வற்புறுத்தினர். இந்தக் கருத்து சென்ற இரண்டு வருஷ காலத்தில் மைனாரிட்டி சமூகங்கள் முழுதும் பரவி விசேஷமாக வலுத்துவந்திருக்கிறது. உண்மையில் மைனாரிட்டிப் பிரச்னை பற்றிய ஆலோசனைக் கமிட்டியிலுள்ள அந்த சமூகப் பிரதிநிதிகள் அநேகமாக ஒருமுகமாகக் கோரியதன் பேரிலேயே இப்போது அரசியல் நிர்ணய சபை, மத அடிப்படையில் ஸ்தானங்கள் ஒதுக்கும் ஏற்பாட்டை ரத்து செய்திருக்கிறது. மைனாரிட்டிகளிடையே இந்த மனோபாவம் வலுத்து வந்திருப்பதற்கான காரணம் தெளிவு. புதிய அரசியலின் கீழ் எந்த மைனாரிட்டியும் தனிப் பாதுகாப்பு என்ற பெயரில் எந்த விபரீதத்தையும் நாடத் தேவையில்லை; இந்நாட்டுப் பிரஜைகளாயுள்ள யாரும் எந்த மதத்தைச் சேர்ந்தவராயினும், மற்றவர்களுக்குச் சமமான அந்தஸ்துடன், உரிமைகளுடன் வாழ எவ்வித தடையுமில்லையென்

—அடுத்த பக்கம்.



வாஷிங்டனில் இந்தியத் தூதராகப் பதவி ஏற்றிருக்கும் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்துப் பேசியபோது எடுத்த படம்.

பதை இந்திய சர்க்கார் வெட்ட வெளிச்சமாக்கியிருக்கின்றனர். இதற்குப் பின் மைனாரிட்டிகள் மதசார்பற்ற ஜனநாயக அடிப்படையில் மெஜாரிட்டியுடன் ஒத்து வாழ்வதைப்போன்ற ஒரு பாதுகாப்பு தங்களுக்கு எதுவுமில்லையென்று உணர்ந்திருப்பதில் ஆச்சரியத்துக்கிடமில்லை.

ஆனால் ஆச்சரியமெல்லாம் இப்போதும் சிலருக்கு மதவாரிப் பிரதிநிதித்துவப் பித்து நீங்கவில்லை என்பதுதான் இவ்விஷயத்தில் தமக்கே முதல் பரிசு உரியது என்று காட்டிக்கொண்டிருப்பவர் இம்மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் லீக் தலைவரே. மைனாரிட்டிக்கு மத அடிப்படையில் ஸ்தானங்கள் ஒதுக்கும் ஏற்பாட்டுடன் அவர் திருப்தியடையத் தயாராயில்லை. மதவாரி அல்லது வகுப்புவாரித் தொகுதிகளும் நீடிக்கவேண்டுமென்று அவர் வற்புறுத்துகிறார். வாழ்க்கையைப் பொறுத்த விஷயங்களில் மைனாரிட்டி மனோபாவத்துக்கும், மெஜாரிட்டி மனோபாவத்துக்கும் ஒருமைப்பாடு இல்லை, இனி ஏற்படவும் முடியாது என்பதே இந்தக் கோரிக்கைக்கு அவர் கூறும் காரணம்.

உண்மையில் இதே காரணத்தைச் சொல்லித்தான்; அதாவது, ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒருபோதும் ஒன்றுபட முடியாத வெவ்வேறு ஜாதிகள் என்ற அடிப்படையிலேயே முஸ்லிம் லீகினர் பாகிஸ்தான் பெற்றனர். இனியும் அவ்வாறு வாதிக்கக்கூடிய முஸ்லிம்கள் இந்நாட்டில் இருந்தால், சர்தார் படேல் சுட்டிக்காட்டியது போல், அவர்கள் இருக்கவேண்டிய இடம் இந்தியாவல்ல; தங்களைப்போன்றவர்களுக்கென்று தனியாக ஏற்பட்டுள்ள தேசத்துக்குப் போய்விடுவதுதான் யோக்கியம். இத்தகைய பிரகிருதிகள் இங்கு நீடிப்பதைப்போல் இங்குள்ள முஸ்லிம்களுக்கு அபாயகரமானது எதுவுமில்லை. ஆனால் இந்த தனித் தொகுதிப் பித்தர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவர்களுக்கு அரசியல் நிர்ணய சபையிலோ, வெளியேயுள்ள முஸ்லிம் மக்களிடையோ ஆதரவில்லையென்பது பகிரங்க விஷயம்.

— :: —



# வாழும் பாம்பு



வை. சு.

OFFICE OF THE [illegible] OF BOOKS
[illegible] JUL 949
[illegible]

“சீமா, இங்கே உக்காரப்படாது. நோக்கு உடம்பு சரியில்லை போன்றே. எழுந்திருந்து உள்ளே போய்ப் படுத்துக்கோ.”

“உம்”

“எழுந்திரேன்”

“உம்”

“என்ன உம்?”

“இருப்பா...எனக்குக் காலை வலிக்கிறது சித்தெக்கழிச்சு போறேனே”

“சித்தெக் கழிச்சா? அதுக்குள்ளே என்ன காரியம் பண்ணப்போறே இங்கே? பூச்சி பொட்டு கிடக்கும்; உன்னைக் கடிச்சுடும்.”

சீமாவின் முகத்தில் ஒரு ஒளிக்கோடு மின்டது. 'பூச்சி பொட்டு' என்ற வார்த்தைதான் அந்த முக மலர்ச்சிக்குக் காரணம். அந்த வார்த்தைகள் அவனுக்குச் சுவாரஸ்யத்தை அளித்தனபோலும்! தவிர அவன் ஸ்திரமாக அந்த இடத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த பாவனையில் சிறிது அசைந்து நல்ல இடமாகப் பார்த்து மீண்டும் பழைய நிலையில் உட்கார்ந்துகொண்டான்.

ஒரு அதிசயப் பொருளைப் பார்ப்பதுபோன்று சீமாவைப் பார்த்துக்கொண்டிருந்தான் ராசு. சொன்னதைக் கேட்காமல் பெரிய மனிதன் மாதிரி ஏதோ பதில் சொல்லிக்கொண்டு அந்த இடத்தை விட்டு அசையாமல் உட்கார்ந்திருக்கிறானே என்பதை நினைத்தபோது தன் குழந்தையின் 'ஆண்மை' அவனுக்குப் பெருமையை அளித்தது. அந்தப் பெருமை உணர்ச்சியுடன்தான் அப்படிப் பார்த்தான் சீமாவை. தன்னை நிலைத்துப் பார்ப்பதை அறிந்த சீமாவின் இதழ்கள் புன்னகையைத் தோற்றுவித்தன. சீமாவின் இந்தத் தோற்றம் ராசுவைப் பரவச நிலையிலேயே ஆழ்த்தியது என்று சொல்லலாம்.

* * * * *

வீட்டின் வெளிச் சுவரையொட்டி குற்போலிருந்த பெரிய பரணிலிருந்து மூங்கில் கழிகளைப் புரட்டிக்கொண்டிருந்தனர் நாலைந்து வேலையாட்கள். ராசு பக்கத்தில் நின்று அவர்கள் வேலை செய்வதைக் கவனித்துக்கொண்டிருந்தான். சீமாவும்தான் கவனித்துக்கொண்டிருந்தான் என்பது விளங்கியிருக்கும். பக்கத்திலிருந்த எலுமிச்சைச் செடியின் மேலே போடப்பட்டிருந்த கள்ளிப் பெட்டியின் மீது உட்கார்ந்துகொண்டிருந்தான் சீமா.

அப்பொழுது உச்சி வேளை. ஆனால் பிழம்பை மேலும் மேலும் உக்கிரமாக்கிக்கொண்டிருந்தது வெயில். ஆனால், அவர்கள் வேலை செய்துகொண்டிருந்த இடத்திலும் எலுமிச்சை மரத்தடியிலும் நிழல் குளிரப் படர்ந்திருந்தது.

மேற்சொன்ன சம்பாஷணை முடிவுற்றபின் ஒரு புரியாத மௌனம் நிலைபெற்றது அந்த இடத்தில். வேலையாட்கள் அந்தப் பழைய கழிகளில் தேறக்கூடியவைகளைப் பார்த்துப் பார்த்து உருவி வெளியே இழுத்துக்கொண்டிருந்ததில் 'சரக் சரக்' கென்று ஏற்பட்ட சப்தம் மட்டில் நிலைத்திருந்தது மற்றபடி. தெருவும் அந்த மௌன நிலையுடன் ஒன்றிக் கிடந்தது.

இந்த நிலையில் வேலை துரிதத்தையடைந்தது. திடீரென்று சீமா. “அப்பா. அப்பா! அதோ பார்!” என்று கூவிக்கொண்டே தன் கையைப் பரணிடையே சுட்டிக்காட்டினான்.

“என்னடா, ராஜா?” என்று வெகு அலட்சியமாக, பரணைப் பார்ப்பதை விட்டு சீமாவின் முகத்தைப்பார்த்தான் ராசு. சீமாவுக்குப் பெரும் ஏமாற்றமாகப்போய்விட்டது. தன்னுடைய பரபரப்பு தன் தகப்பனிடம் துளிக்கூட எதிரொலிக்கவில்லையே என்ற ஏமாற்றம்தான் அது. திடீரென்று கள்ளிப்பெட்டியின் மீதிருந்து கீழே குதித்தான். சடசடவென்று பரணருகில் ஓடினான். அப்படியும், இப்படியும் தலையை ஆட்டிக் குனிந்தும் நிமிர்ந்தும் பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்குப் பரண் எட்டவில்லை, பாவம்!

சீமாவின் செய்கையைக் கண்டு இப்போதுதான் கொஞ்சம் பரபரப்படைந்தனர் ராசுவும் வேலையாட்களும். வேலையை நிறுத்திவிட்டுக் குழந்தையின் செய்கையைக் கவனித்தனர்.

அடுத்தகணம் அவர்கள் மூச்சு அடைத்துப் போகும்படியான ஒரு சம்பவம் நிகழ்ந்தது. 'ச்.......ர்.......ர்' றென்ற ஒரு பயங்கரமான பேரிரைச்சல் அவர்கள் இதயத்தைக் கெட்டியாக அமுக்குவதுபோன்றிருந்தது. ராசு ஓடிவந்து சீமாவைத் தூக்கித் தோளில் சார்த்திக்கொண்டான். விஷயத்தை ஊகித்துக்கொண்ட வேலைக்காரர்கள் ஒரே எட்டில் இப்பால் ஓடிவந்தனர். அந்தக்கணத்தில் நிகழ்ந்த காட்சி என்ன தெரியுமா?

அடுக்குக் கலைந்த மூங்கில் கழிகளிடையே பின்னிக்கொண்டு பாதி உடல்மட்டும் தெரியும்படியாக ஒரு பாம்பு வெளிப்பட்டது. வெளிப்பட்டு, பக்கத்தில் இருந்த சிறு கூட்டத்தைப் பார்த்ததும் 'சட்'டென்று தலையைத் தூக்கிப் படமெடுத்து ஆடியது.

'ஆ' என்று வீறிட்டு அலறினன் அந்த ஆட்களில் ஒருவன் சப்தங் கேட்ட நாகம் இன்னும் சீற்ற மடைந்து சுழற்றிச் சுழற்றிப் படத்தை ஆட்டியது. அதன் தோற்றத்தைக் கண்டு பயந்தனர், எல்லோரும் அதன் நீளம் தெரியவில்லை; ஆனல் அதன் பருமனைக காணும் போது அசாதாரணமான நீளம் என்பதை ஊகிக்கமுடியும். சாதாரணமாகக் கிராமத்து வீடுகளில் உள்ள சிறு தூணின் சுற்றளவுக்குக் குறைச்சலிராது! அத்தனை பருமன்.

இதைத்தான் குறிப்பிட்டான் குழந்தைசீமா. அவன் திட்சண்யமான பார்வையில் அந்தப் பாம்பு முன்பே இலக்காகிவிட்டது; ஆனல் அது தானக வெளிப்பட்ட பின்னர்தான் அவர்களால் பார்க்க முடிந்தது! 'சித்தைக் கழிச்சு போறேன்' என்ருனல்லவா? சீமா சற்று முன் அவன் இந்த முக்கியமான காரியத்துக்காகத் தான் அங்கே நிலைத்து உட்கார்ந்தான்போலும்!

"என்னடா நிக்கறீங்க?" என்று வேலையாட்கள் பக்கம் பார்த்து விழித்தான் ராசு

"என்னங்க?" என்ருன் அவர்களில் ஒருவன்

"என்ன என்னங்க? அடிங்கடா அதை!" என்ருன் பாம்பு இன்னும் அந்த நிலையிலேயே ஆடிக்கொண்டிருந்தது அதன் பின் பாகம் நெளிந்துகொண்டே முற்றும் பரணின் மேல் பரப்பில்வந்து சுருட்டிக்கொண்டது.

பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்த சீமாவின் மார்பு 'படபட'வென்று அடித்துக்கொண்டிருந்தது அவனை இறுக அணைத்துக்கொண்டிருந்தான் ராசு அப்போதுதான் சீமாவின் உடம்பு நெருப்பாய்ச் சுட்டுக்கொண்டிருந்ததை உணர்ந்தான் அவன் ஏற்கனவே சீமாவுக்கு ஜுரம்; 'உள்ளே போ' என்று சொன்னதைக் கேட்காமல் அடம் பிடித்துக்கொண்டு அங்கே உடகார்ந்திருந்துவிட்டு. இப்போது இந்தப் பயங்கரமான காட்சியைக் கண்டதும் பீதியடைந்துவிட்டான்.

'நல்லபாம்பையா அடிக்கச் சொல்றீங்க?...ஊஹூம் மாட்டோமுங்க?" என்றனர் அவர்கள்.

"அடிக்கமுடியாதா? ஒத்தனும் அடிக்கமாட்டீங்களா?"

"முடியவே முடியாதுங்க. அந்தப் பாவம் வேணும்..."

இரண்டு நிமிஷகாலம் சென்றிருக்கும் இதற்குள். எத்தனை நேரம் அந்தப்பிராணி ஒரே நிலையில் நிலைத்திருக்கும். மெள்ளத் திரும்பி சுவரைப்பற்றியது அது: படம் அடங்கியது.



பாம்பு மறைவதைப்பார்த்த பின்னர் ராசுவின் நிலையில் மாறுதல் கண்டது தோளிலிருந்த குழந்தையை ஒருவன் கையில கொடுத்துவிட்டு, 'உள்ளே கொண்டு போடா இவனை" என்ருன் பிறகு வேஷ்டியைத் தூக்கிக் கச்சமாகக் கட்டிக்கொண்டு சுற்று முற்றும் பார்த்து ஒரு வாட்டமான கழியைத் தேடி எடுத்துக்கொண்டான். தானே அந்தப் பாம்பை அடிப்பது என்று எண்ணினன் அவன். இதற்குள் கும்பல் கூடிவிட்டது. உள்ளேயிருந்து அவன் தாயார் வந்தாள். சற்று நேரம் பிடித்தது அவளுக்குப் பாம்பு இருக்குமிடம் தெரிய. அதைத் தன் கண்களால் கண்டாளோ இல்லையோ, மறு கணம் "குழந்தை அடிக்காதே அதை! அது வாழும் பாம்பு!" என்றாள். உடனே கூட்டத்தில் 'வாழும் பாம்பு, வாழும் பாம்பு' என்று குரல்கள் கிளம்பின.' அந்த நிலையில் அந்தப் பாம்பின் பயங்கரமான தோற்றமும் அதற்கு ஏற்ற 'வாழும் பாம்பு' என்ற பிரமாதமான பெயரும் அதற்கு ஒரு அலாதியான மதிப்பைத் தந்தன.

குரல்கள் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகி விட்டன. பாம்பு சுவரில் தாவித் தாவி கடைசியில் ஒரு சாளரத்துள் நுழைய வாரம்பித்தது! போயிடுது: தன் இடத்துக்குப் போறது அது ...என்ற குரல் கேட்டது ஒருவரிடமிருந்து. அதற்குள் அவன் தாயார் சொன்னாள்:

"அது சமையற்கட்டுலேதான் முன்னாடி இருந்தது; புகையும் சூடும் அதிகமானப்புறம் இங்கே இடம் வச்சிண்டிருக்கு ரெண்டு வருஷமாறதோல்லியோ இங்கே கழி போட்டு, இந்த இடத்தையே ஸ்திரமா வச்சிண்டுடுத்து. எங்கே



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 JUL 1949
MADRAS

யாவது சுத்திப்பிட்டு மறுபடியும் இங்கேயே வந்துடும் இது..." என்ருள் வயதானவள். "நானும் தெரிந்தவள் என்ற தோரணையில் அவள் பேசியதைக்கேட்டு எல்லோரும் அதை ஆமோதித்தனர்.

ஆனல் அவள் பிள்ளை ராசு மாத்திரம் மாறுபட்ட அபிப்ராயம் கொண்டிருந்தான் இந்த விஷயங்களில் எல்லாம் நம்பிக்கை வைக்காதவன் அவன் அலட்சிய மனோபாவம் அவனுக்கு.

"நல்ல வேளை, இந்த சமயத்திலே இந்த இடத்தை ஒழிச்சு அதை வெளிக்கிளப்பிவேளே..." என்ருன் அவன் பெருமையாக.

"சரிதான் போறும் நீ கோடைப் பந்தல் போட்டது கழிவேணும்னு கொத்துலே அறுக்கச் சொல்லு; இல்லாட்டா விலைக்கு வாங்கு. இதைக்கிளப்பி இதும் கோபத்துக்கு ஆளாகாதே..."

"இதும் கோபமா? கெட்டது ன்னு தெரிஞ்சிருந்தும் இதை இன்னும் இங்கே வைக்கவா?...இன்னியோட இது தீர்ந்துது..."

"அப்படிச் சொல்லாதேடா, குழந்தை. அதை அடிக்காதே, உனக்குப் புண்ணியமுண்டு..."

"கண்ணாலேபார்த்தும் அதைவிட்டு வச்சிருந்து குழந்தை குட்டியைக் கடிக்கவைக்கிற புண்ணியமா?"

"அப்படிச் சொல்லாதே. அது ஒண்ணும் பண்ணாது அது குல தெய்வம் மாதிரி எத்தனை வருஷமா நம்மாத்திலே அது இருக்கு தெருயுமா?..."

"எனக்குத் தெரியாது. அதனலே தான் இத்தனை நாள் உயிரோடே இருந்திருக்கு இது" என்ருன்.

அவன் தீர்மானம் வலுத்திருந்தது. உரம் பெற்றிருந்த அவன் மனதிலே பலமாக கூடியிருந்தவர்களின் மறுப்புச் சொற்கள் கனவிலே கேட்பது போன்று தோன்றின அவற்றிற்கு மசியத் துணியவில்லை அவன்.

பாம்பு கண்ணுக்கு மறைந்துவிட்டது எல்லோரையும் விலக்கிக்கொண்டு 'பரபர'வென்று உள்ளே ஓடினன் கையும் கழியுமாக எல்லோரும் அவனைத் தடுத்தனர். பலனில்லை அவன் தாயார் உள்ளே ஓடி வந்து, அவனிடம் கெஞ்சும் பாவனையில் சொன்னள்: 'குழந்தை



குலநாசம் ஏற்பட்டுவிடும். வாழும் பாம்பை அடிக்காதே அந்தப் பாவம் நம் குலத்தை வேரோடே எரிச்சு விடும். அதுக்குப் பதிலா அது நம் ஆத்திலேயே குடியிருந்தா நமக்கு நல்லது: ஒரு கெடுதலும் வராது ஐசுவரியம பொங்கும்...' என்ருள்.

இளம் ரத்தம் கொதிப்படங்கவில்லை ஒரேபிடியாக அதைக் கொல்வதில் இருந்தான் அவன்.

ஒருவர் பேச்சையும் கேட்காமல் அதைத் தேட வாரம்பித்தான். சாளரத்து வழியாக உள்நுழைந்த பாம்பு சுவர்மேல் ஏறி மோட்டு வளையில் சஞ்சரிக்க வாரம்பித்தது. அது செல்லுமிடமெல்லாம் கண்ணோட்டத்தை விட்டுப்பார்த்து அதைத் துரத்தலானுன் ராசு. பெரிய சரீரம் ஆதலால் அந்தப்பாம்பு. பாவம் தன்னை எளிதில் மறைத்துக்கொள்ள முடியாமல் அவன் திருஷ்டியிலேயே பட்டுக்கொண்டிருந்தது. அவனை அன்று பூராவும் பாய்ச்சல் காட்டி இழுத்தது: கடைசியில் சுற்றிச்சுற்றி வந்து விளக்குவைக்கும் சமயத்தில் கொற்றங்கரைச் சாக்கடையோரம் இருந்த பூச்செடியின் இடையில் வந்து ஒளிந்துகொண்டிருந்தது. பகல் பன்னிரண்டு மணியிலிருந்து அதைக் கொல்லும் குறியில் அலைந்த ராசு நீராசையுடன் கை கால் கழுவக் கொல்லைப்புறம் வந்தான். அந்தக் கணத்தில் அந்தப் பாம்பின் செவி அதனிடமிருந்து பிரிந்து ராசுவிடம் ஒட்டிக்கொண்டதுபோலும்; செடி மறைவில்பாம்பைப்பார்த்துவிட்டன அவன் கண்கள்! உள்ளே ஓடோடியும் சென்று சுளுக்கியைக் கொண்டு வந்தான்; குறிபார்த்து அதன் முதுகில் பாய்ச்சினன்! ஐயோ, சக்தியில் அவனை விடப் பதினாயிரம் மடங்கு அதிகமான அந்த நல்ல பாம்பு அந்தச் சந்தர்ப்பத்தில் அவனிடம் சிக்கி, உயிருக்குத் தவித்தது; சில நிமிஷங்களில் உயிரை நீத்து உடலை நீட்டியது.

ராசுவின் உள்ளம் துணுக்குற்றது. அப்போதுதான் அவன் கண்கள் திறந்தன. 'ஐயோ கொன்றுவிட்டோமே' என்று அலறினன். தெருவில் கூட்டம் கூடியது நடுவே இறந்து போன 'வாழ்ந்த பாம்'பின் உடல் பயங்கரமான கோலத்தில் கிடந்தது. நீலம் பூத்த அதன் உடல் உள்ளத்தைக் கலக்கியது.

'கசமுச' வென்ற கூக்குரல்களில் ராசு கிரகித்துக்கொண்டதும் அவன் மனசைப் பின்னிக்கொண்டதுமான விஷயம் ஒன்றே ஒன்றுதான் அது எதிர் வீட்டுக் கிழவர் கூறிய சொல்.

"பாவி. வாழும் பாம்பைக் கொன்னுடடையே. அது உன்னைக் கறுவிக் கொண்டுதான் உயிரை விட்டிருக்கும். உன் குழந்தையைக் கொன்னமாதிரிதான் நீ பாம்பைக் கொன்னது."

குழந்தை சீமாவின் ஞாபகம் வந்தது அவனுக்கு. தொடர்ந்த நினைவு

களுக்குப்பின் அவனுக்குப் பளிச்சென்று ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. தான் இந்தப் பாம்பைக் கொன்றதற்குக் குழந்தை சீமாதான் காரணம் அவன்தான் சரியில்லாத உடம்புடன் பிடிவாதமாக அங்கே உட்கார்ந்துகொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்துவிட்டு கடைசியில் பாம்பையும் சுட்டிக்காட்டி எல்லோரையும் கலங்க அடித்தான் அவனுக்கு என்ன நேருமோ?......ராசுவின் மூளை கலங்கியே கிடந்தது.

* * * * *

அந்த வாரக் கடைசியன்று அமாவாசை காலையில் சீமாவின் உடம்பு இருந்தாற்போலிருந்து அதிகரித்தது. பாம்பைக் கொன்ற சம்பவத்திற்கு முன்னயே சீமாவுக்கு உடம்பு சரியில்லையென்பது உண்மையானாலும் ராசுவின் மனத்தில் ஏற்பட்ட பிரமையில் அந்தச் சம்பவமே சீமாவின் அன்றைய உடல் நிலைக்குக் காரணமோ என்றுதான் நினைக்கத் தோன்றியது. எது எப்படியோ எதற்கும் காரணத்தைக் கற்பிப்பது முறையல்ல என்னவில் அந்தச் சம்பவம் காரணமாகவே, நீல நிற விஷம் பரவிய அந்தப் பாம்பின் உடலைப் பார்த்திருந்த காரணமாகவே, சீமாவின் உடல் நிலை அந்த நிலைக்கு வந்திருக்கலாமல்லவா?

ராசுவுக்கு இப்போதுதான், தான் மகத்தான தவறு செய்துவிட்டதாகத் தோன்றியது.

இரவு குழந்தையின் நிலைமை மோசமாகிவிட்ட து. கும்பகோணத்திலிருந்தும் டாக்டரை அழைத்துக்கொண்டு வந்து காட்டியதில் அவர் 'அதிர்ச்சி காரணமாக மூளைக் கலக்கம் ஏற்பட்டுள்ளது. எதுவும் நிச்சயமாகச் சொல்லமுடியாது ஒரு வாரத்திற்கு" என்றார் அவரை நம்பாமல் நாட்டு வைத்தியரைப் பார்க்கச் சொன்னதில் அவர், 'இன்று அமாவாசை: இரவு தாண்டவேண்டும்" என்றுவிட்டார்.

குழந்தையின் நிலை ஒரு புறமும். ஊரின் முணுமுணுப்பு ஒருபுறமும் ராசுவைச் சித்திரவதை செய்தன. அதிர்ச்சி காரணமாக அவனுக்குத்தான் உண்மையில் மூளை கலங்கியிருந்தது 'குழந்தை பிழைக்க என்ன வழி?' என்று எண்ணும்போதே அவன் மனக்கண் முன் அன்று அவனிடம் அகப்பட்டு உயிர் நீங்கும் தருவாயில் ஏக்கத்துடன் சுற்றுமுற்றும் பார்த்த இந்தப் பாம்பின் தோற்றம் தெரிந்தது. 'ஐயோ' என்று வாய்விட்டலறினான். அதைக் கேட்ட அவன் தாய் பதைத்தாள். "என்னடா, குழந்தை' என்றாள். மௌனம் சீமா வாய் திறவாமல், கண் திறவாமல் கடந்தான்.

திடீரென்று இரவு மூன்றுமணி சுமாருக்கு சீமா, 'ஐயோ, பாட்டி.. அப்பா........பாம்பு........" என்று உளறினான். அவ்வளவுதான் அடுத்த கணம் அவன் உடம்பை ஒருமுறை முறித்துக்கொண்டு கண்ணை மூடினான்.

'கோ'வென்று கதறினாள் பாட்டி; ராசுவும் தரையில் விழுந்து புரண்டான்.

அவன் ஆவேசத்துடன் பேசினான்: "ரங்கநாதா, உன் உடைமையை என் குழந்தை தெரியாமல் கொன்றான் நான் உனக்குத் தங்கத்தாலே ஆதிசேஷன் பண்ணிவைக்கிறேன். குழந்தையைக் காப்பாத்து' என்றான். ராசு வாய் திறந்து வேண்டிக்கொள்ளவில்லையே தவிர, அந்தக் கோரிக்கையின் நம்பி நின்றான் அவன் ஆனால் சீமா தான் கண்ணைத் திறக்கவேயில்லையே!

* * * * *

நம்பிக்கையற்றுப் போய் வரண்ட கண்களுடனும் சூன்ய மனசுடனும் ராசுவும் அவன் தாயாரும் உட்கார்ந்திருந்தனர் சீமாவின் பக்கத்தில் காலைச் சூரியன் கிளம்பிவிட்டதற்கு அறிகுறியாக ஓடுகளின் இடுக்கு வழியே வெளிச்சம் விழுந்தது உள்ளே தற்செயலாக அந்த ஒளி சீமாவின் முகத்திலே விழுந்தது. தினசரி அந்த இடத்தில்தான் காலை வேளையில் ஒரு ஒளி வட்டம் தரையில் விழுவது வழக்கம் அன்றும் ஆனால் சீமாவின் முகத்தின்மேல் விழுந்தது அந்த ஒளிபெற்ற காரணத்தாலோ என்னவோ. சீமாவின் இதழ்களில் புன்னகை தோன்றியது. அடுத்த நிமிஷம் இன்னும் கொஞ்சம் வாயைக் காட்டிச் சிரித்தான் அவன். கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த ராசுவின் தாயார், "என் பிரார்த்தனை பலிச்சுது. ரங்கநாதர் மனசு இரங்கிவிட்டார்" என்றாள்

"பாட்டீ, காப்பி..." என்று மெல்லக் கேட்டான் சீமா. எழுந்து ஓடோடியும் சென்றாள் பாட்டி. சீமா உயிர்பெற்று எழுந்துவிட்டான். அவன் மட்டுமில்லை; ராசுவும் அப்போது உயிர் பெற்றான்; அவன் தாயாரும் உயிர் பெற்றாள். இறந்து போன வாழும் பாம்புகூட உயிர் பெற்று மீண்டும் வாழப்போகிறது! ராசுவின் தாயார்தான் அந்தப் பாம்புக்குப் பிலாகந் தங்கத்தால் பாம்பு பண்ணிவைக்கப்போகிறளே!

இந்த சமாதானம் சரியோ தப்போ வாழும் பாம்பு உயிர்பெற்று விட்டது என்றுதான் அந்தக் கிராமத்தில் எல்லோரும் கூறினர் ஏனெனில் அடுத்த மாதத்தில் ஒரு நாள் ராசுவின் வீட்டு மோட்டு வளையில் ஒரு பாம்பு நெளிந்ததை எல்லோரும் பார்த்தனர்!

"நான் இதைக் கொல்ல மாட்டேன்" என்று முணுமுணுத்தது அவன் வாய்.



OFFICE OF THE REGISTRAR
JUL 1949
MADRAS

# தேர்த்தட்டு வார்த்தை

"வாரன்"

## 29

## ஞானி கருமம் செய்வது பிறருக்காகவே

ஞானுபவத்தால் முதிர்ந்த ஞானிக்குப் பிரபஞ்சத்தில் எவரிடமிருந்தும் பெறவேண்டியது எதுவும் இல்லை பிறருக்கு வெவ்வேறுகத் தோன்றுகின்றவற்றை, ஞானி தனக்குக் கிட்டிய ஸர்வாத்மபாவம் காரணமாகச் 'சமமாகவே' என்றுகிருன். சமமாகவே அநுபவிக்கிருன் அவனுக்கு, உரிய கர்மங்களைச் செய்வதாலும், செய்யாமல் விடுவதாலும் புண்ணியமோ பாவமோ எந்த விதமான பலனும் உண்டாவதில்லை செய்வதும் விடுவதும் ஞானிக்கு ஒன்றுதான்' என்று கண்ணன் சொல்லியதைக் கேட்ட அர்ஜுனன் 'இத்தகைய ஞான நிலையை அடைந்தவர் எவரேனும் உலகத்தில் இருந்ததுண்டா? கருமத்தைச் செய்வதும், செய்யாமல் விடுவதும் அத்தகைய ஞானிக்கு ஒன்ருனால், முதிர்ந்த ஞான நிலையை அடைந்து இதற்கு முன்னே உலகில் இருந்தவர், கரும விஷயத்தில் எவ்வாறு நடந்துகொண்டனர்?' என்று ஆலோசிக்க ஆரம்பித்தான்.

அதை அறிந்த கண்ணன் முதிர்ந்த ஞானத்தால் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஜனகனை எடுத்துக்காட்டாக வைத்து மேலும் உபதேசிக்கிருர்.

முன்னும் சனகாதி யோகியரும்
மூண்டு இயன்ற
அன்ன கருமத்தால்
ஆனபயன்—மன்னினர்காண்
இந்த உலகம்
இசைவகையும் பார்த்து இயலாய்
அந்த உயர்கருமம் ஆய்ந்து.

(இ-ள்) முன்னம் சனகாதி யோகியரும்—முன்னே ஜனகர் முதலான யோகியர்கள், மூண்டு இயன்ற அன்ன கருமத்தால்—பிரவர்த்தித்துந் தக்கதான நிஷ்காம கருமத்தாலே, ஆனபயன் மன்னினர்காண்—பிராப்தமான மோக்ஷஸித்தியை அடைந்தார்கள் என்று அறி; இந்த உலகம் இசை வகையும் பார்த்து—இவ்வுலக ஜனங்கள் (நல்வழியில்) ஒன்றுபடும் தன்மையை உத்தேசித்து, அந்த உயர் கருமம் ஆய்ந்து இயலாய்—அந்த மேலான நிஷ்காம கருமத்தின் (அவசியத்தை) ஆராய்ந்து மேற்கொள்வாயாக.

34
கர்மணைவ ஹி ஸம்ஸித்திம்
2 3
ஆஸ்திதா ஜநகாதய:
3
லோகஸங்க்ரஹமேவாபி
ஸம்பச்யந் கர்(த்)துமர்ஹஸி

(இ-ள்) ஜனகாதய:—ஜநகர் முதலானோர், கர்மணைவ—கர்ம யோகத்தாலே, ஸம்ஸித்திம்—மோக்ஷ ஸித்தியை, ஆஸ்திதா:—அடைந்தார்கள், ஹி—அல்லவா? லோக ஸங்க்ரஹம்—ஜநங்களுக்கு (தர்மப்பிரவர்த்தியில்) உதவுவதை, ஸம்பச்யந் அபி—(தன் கடமையாகப்) பார்த்தாவது, கர்த்துமேவ அர்ஹஸி—கருமம் செய்யத் தக்கவனாகிருய்.

பகவானுக்குக் கருமம் செய்து ஆகவேண்டியது எதுவும் இல்லை. அவருக்கொப்பாகக் கருமம் செய்து பெறவேண்டிய பயன் எதுவும் இல்லாத ஞான யோகிகள் பலர் முன் காலத்தில் இருந்தனர். அவர்கள் அனைவரிலும் ஞான அனுஷ்டானத்தால் மிக்க கியாதி பெற்றவர் ஜனகன் இவர் பிரசித்தியைத் தெரிவிக்கும் பல கதைகளுண்டு. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரும் தமது உபதேச நூலில் ஒன்றைத் தெரிவிக்கிருர்.

அரண்மனையில் ஒரு நாள் துருவாஸ முனிவர் ஜனகரைக் கண்ட போது ஜனகர் கால்களின் அடியில் ஒரு பாத்திரத்தில் சந்தனமும், மற்றொன்றில் நெருப்பும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றைக் கண்ட துருவாஸர் ஆச்சரியமடைந்து ஜனகரை அவற்றிற்குக் காரணம் கேட்டார். ஜனகர் உடனே காரணம் சொல்லாமல் துருவாஸரை ஒரு அறைக்குள் சாப்பாட்டிற்கு அழைத்துச் சென்றார். இருவரும் பேசிக்கொண்டே சாப்பிட ஆரம்பித்தனர். ஜனகர் நிமிர்ந்து உயர உற்றுக் கவனித்துவிட்டு மறுபடி முன்போலவே தன் தலையைக் குனிந்து சாப்பிடப் போனார். அதைக் கவனித்த முனிவரும் உயரப்பார்த்தார்.

துருவாஸர் தலைக்குநேரே கனமான கூரிய வாள் ஒன்று ஒரு மயிரிழையில் கட்டப்பட்டுத் தொங்கிக்கொண்டிருந்தது 'அது தன் தலையின் மீது அறுந்து விழுந்துவிடுமோ' என்று பயத்தால் துருவாஸர் உடம்பு நடுங்க ஆரம்பித்தது. இலையில் பரிமாறியதைச் சாப்பிடாமல் உடல் பதற நாக்குக்குழற 'இது என்ன விபரீதம்!' என்று ஜனகரிடம் மேலே தொங்கிய வாளைச்சுட்டிக் காட்டினார். ஜனகர் என்ன சொல்லியும் முனிவருக்குப் பயம் நீங்கவில்லை இலையைவிட்டு நகர்ந்து போய்விட்டார். அப்பொழுது துருவாஸருக்கு உபதேசம் செய்தார். 'சுகத்தை விரும்பி அடைவதற்கான முயற்சி; துக்கத்தை

வெறுத்து விலக்குவதற்கான முயற்சி இரண்டையும் ஒன்றுபோல் கைவிட வேண்டும். சுகத்திற்கிடமானவற்றையும் துக்கத்திற்கிடமானவற்றையும் சமமாகவே பாவிக்கவேண்டும். இந்த உண்மையைத் தெரிவிப்பதற்காகத்தான் எனது காலடியில் சந்தனமும் நெருப்பும் வைக்கப்பட்டிருந்தன. சமபாவனையை மனப்பயிற்சி, தேகப் பயிற்சி இரண்டாலும் பெறவேண்டும்' என்று ஜனகர் தெரிவித்தாராம்

முனிவர்களுக்கு உபதேசம்செய்யும்படியான முதிர்ந்த ஞான அனுபவத்தால் சிறந்த ஜனகாதியர் ஆத்மத்ருப்தி அடைந்தவர்கள். 'மரண காலத்தில் க்ஷணநேரம் இத்தகைய ப்ரும்ம நிஷ்டையில் இருந்தாலும் மறுபடி ஒருவன் பிறப்பதில்லை' என்று இரண்டாம் அத்யாய முடிவில் கண்ணன் சொல்லியிருப்பதால், இக வாழ்க்கையிலேயே ப்ரும்ம நிஷ்டை, கைகூடப்பெற்ற ஜனகாதியருக்குப் பிறப்பும் பிறப்பிற்குக் காரணமான மோகமும் எதனாலும் உண்டாக முடியாது 'பந்த நிவர்த்தியை ஏற்கனவே அடைந்திருக்கின்ற ஜனகாதியரும் கர்மத்தால் மோக்ஷஸித்தியை அடைந்தனர்' என்று கண்ணன் கூறியதற்குச் சந்தர்ப்பத்தைக் கொண்டே தக்க பொருள்கொள்ளவேண்டும்.

ப்ரும்மஞான நிஷ்டனுக்குக் கருமம் செய்வதும், செய்யாமல் விடுவதும் ஒன்றேதான். இரண்டும் அவனைப் பாதிக்கப்போவதில்லை என்று சொல்லிப் பின்னரே அத்தகைய ஞானிவர்க்கத்தில் சிறந்த ஜனகாதியரும் கருமத்தாலே ஸித்தி அடைந்தனர் அல்லவா? என வருகிறது இப்பகுதியைக்கொண்டு 'நிஷ்காம கருமம்தான் மோக்ஷ சாதனம். ஞானமும் பக்தியும் மோக்ஷத்திற்கு நிஷ்காம கருமத்தின் உதவியின்றி ஸாதனங்களாகமாட்டா' என்று சொல்வது சந்தர்ப்பத்திற்குச் சேராது.

'ஞானத்தால் ஏற்கனவே பந்த நிவர்த்தியடைந்து கருமம் செய்து எதையும் பெறவேண்டாத ஜனகாதியரும் கருமங்களைச் செய்தனர் ஏற்கனவே கைவரப் பெற்றிருந்த பந்த நிவர்த்தியாகிய மோக்ஷமும் முடிவில் பெற்றனர்' என்பதே பொருத்தமான பொருள். 'கருமத்தால்' என்பதில் சுற்றில்வரும் வேற்றுமை உருவை வடமொழி, தென்மொழி இரண்டிலும் இலக்கண ஆசிரியர்கள் அனுமதித்திருக்கிற வேற்றுமை மயக்கமாகக்கொண்டு உரைசெய்வதே நடுநிலைமை கடவாதார்க்கு அழகும் கடமையுமாகும். அவ்வாறு செய்வதுதான் பின்வரும் சுலோகங்களுக்கும் சிறந்த உரையாசிரியர்களின் கருத்துக்கும் முரண்படாதிருக்கும்.

'பரமஞானியாகிய ஜனகரே கர்மங்களை விடாமல் செய்ததால் நீயும் உலகத்தின் நன்மைக்காக நிஷ்காமிய கருமத்தைச்செய்ய ஜனகாதியரையே பின்பற்று' என்பது கண்ணன் கூறியதின் சாரம். ஜனகாதியர் போன்ற ஞானிகள் எதற்காகக் கருமம் செய்வார்கள் என்பதை அடுத்தபடியாகச் சொல்லுகிறார்.

மேலொருவன் செய்த
மிகுகருமம் தான் எதுவென்று
ஏனும் அதில் மற்றிங்கு
இயல்சனமும்—சால அவன்
யாதைத்தன் அங்கம்
என இயலும் இவ்வுலகம்
ஆதைப்பின் செல்லும் அமர்ந்து.

(இ-ள்) மேல் ஒருவன் செய்த மிகு கருமம்—பெரியவன் ஒருவன் செய்துவந்த சிறந்த கருமம், எது என்று—எது என்பதைத் தெரிந்து, இங்கு இயல் சனமும்—இவ் வுலகிலுள்ள பிற ஜனங்களும், அதில் ஏனும்—அந்தக் கருமத்தையே செய்வார்கள், அவன்—அந்த மேலோன், சால யாதை தன் அங்கம் என இயலும்—எதைத் தனக்கு மிகுதியான பிரமாணமாகக் கொண்டு நடக்கிறானோ, ஆதை—அதையே, இ உலகம்—இவ்வுலகத்திலுள்ள பிற ஜனங்கள், அமர்ந்து பின் செல்லும்—விரும்பிப் பின் பற்றுவார்கள்.

3 3
யத்யதாசரதி ச்ரேஷ்ட:
தத்தத் ஏவ இதரோ ஜன:
ஸயத்ப்ரமாணம் குருதே
3
லோகஸ்த தநுவர்(த்)ததே.

(இ-ள்) ச்ரேஷ்ட:—பிரஸித்தமானவன், யத் யத்கர்ம—எந்தெந்தக் கர்மத்தை, ஆசரதி—செய்கிறானோ, தத் தத் ஏவ—அவ்வற்றையே, இதர: ஜன:—பிற ஜனங்களும், (ஆசரதி,) செய்கிறது ஸ:—அந்தச் சிரேஷ்டன், யத் ப்ரமாணம் குருதே—எதைப் பிரமாணமாகச்செய்கிறானோ, தத் ஏவ—அதையே பிரமாணமாக, லோக:—பிற ஜனங்களும், அநுவர்த்ததே—அநுசரிக்கிறார்கள்.

உலகம், ஞான அனுஷ்டானத்தால் மேம்பட்டுப் பிரபலமடைந்தவர்களையே பிரமாணமாகக் கொள்ளுகிறது. பின் பற்றவும் செய்கிறது. மஹாத்மாவுக்குச் சர்க்காவினுல் நூல் நூற்றுத் தனக்காக ஆகவேண்டியது எதுவும் இல்லை. நூல் நூற்கும் நேரங்களில் மிக மிக அவசியமாகக் கவனிக்கவேண்டிய அலுவல்கள் பல மஹாத்மாவுக்கு இருக்கத்தான் செய்தன. அவற்றை உத்தேசித்துத் தானே நூல் நூற்காமல் இருந்திருந்தால் இந்தியாவில் பல அறிஞர்களும் பாமரர்களும் இந்த அளவிற்குச் சர்க்காவில் நூல் நூற்பதை மேற்கொண்டிருப்பார்களா?

கண்ணன் மேலும் சொல்கிறார் 'பார்த்தா! (ஸர்வேச்வரனுகவும் ஸர்வக்ஞனுகவும் தேவமனுஷ்ய ரூபங்களாய் அவதாரம் செய்பவனுயும் அடையவேண்டுவது ஒன்றில்லாதவனுயுமுள்ள) எனக்குச் செய்ய வேண்டிய கருமம் எதுவும் இல்லை. அவ்வாறுயினும் நான் கருமம் செய்துகொண்டே இருக்கிறேன் நான் கருமம் செய்யாதபோனுல் மனிதர்கள் சகல விதத்திலும் என் மார்க்கத்தையே தழுவுவார்களல்லவா? நான் கருமம் செய்யாதிருந்தால் உலக ஜனங்கள் கரும லோபத்தால் கெட்டுப்போவார்கள் நானும் இங்க உலக ஜனங்களைக் கெடுத்தவன் ஆவேன் ஆகையால் ஞானிகளும் கர்மம் செய்வார்கள்.

நசையுடையார் செய்கைபோல்
ஞானி நசையின்றி
இசை உலகுக் காக இயல்வான்

(இ-ள்) நசை உடையார் செய்கைபோல்-(ஆத்மக் ஞானமில்லாதவர்கள்) பலனில் ஆசையுடையவராய் கருமம் செய்வதுபோல், ஞானி-ஞானியும், நசை இன்றி—பலத்தில் ஆசை இல்லாமல், இசை உலகுக்காக இயல்வான்—உலக ஜனங்களின் நன்மைக்காகச் செய்வான்.

3
ஸக்தா: கர்மண்ய வித்வாம் ஸ:
2 4
யதா குர்வந்தி பாரத,
3 2
குர்யாத் வித்வாந் ஸ்ததா ஸக்த:
3
சிகீர்ஷுர் லோக ஸங்க்ரஹம்
3

(இ-ள்) அவித்வாம் ஸ:—ஞானமில்லாதவர்கள், கர்மணி—கருமத்தில், ஸக்தா: ஸந்த: பற்றுள்ளவர்களாய், யதா குர்வந்தி—எப்படிச் செய்கிறார்களோ, ததா—அப்படியே, வித்வாந்—ஞானியும், அஸக்த:—பற்றில்லாதவனுய், லோக ஸங்க்ரஹம்—உலகத்திற்கு நன்மை, சிகீர்ஷு:—செய்யக்கோரினவனுய், குர்யாத்—(கர்மத்தைச்) செய்யக்கடவன்.

ஞானஸ்வரூபமான பகவான் அவதாரங்களில் பிறர் நன்மைக்காகக் கருமம் செய்வதுபோல் ஞானிகளும் பிறருக்காகவே கருமம் செய்வார்கள். அக்கருமம் ஜனகாதியர் போல்வார்க்கு மோக்ஷ ஸாதனமாகாது.



# சொப்பன வாழ்க்கை

## 35

காரியாலயத்தையும் தொழிற்சாலையையும் சூழ்ந்திருந்த புகைமூட்டம் இன்று அடியோடு இல்லை. ஆனால் உள்ளே வேறுவிதமான புகை கனிந்துகொண்டிருந்தது. விசுவத்தின் அஜாக்கிரதையினால் விளைந்த புகைதான் அது!

எதிலும் முன்ஜாக்கிரதையுடனும் முன்யோசனையுடனும் நடந்துகொள்பவன் ஒரு சிறிய விஷயத்தில் தவறிவிட்டான். கப்பல் பெரியதாய் இருந்தாலும் அடியில் ஒரு சிறு துவாரம் ஏற்பட்டாலும் போதாதா—! ஆனைக்கு அடி சறுக்கிவிட்டது.

முதல்நாள் தொழிற்சாலையை நோக்கி ஓடும்பொழுது சங்கு அலறுவதுகூடக் காதில் விழாமல் மனத்தைக் குழப்பிவிட்ட கடிதத்தை, அவன் மற்ற ஆபீஸ் தபால்களுடன் வைத்துவிட்டுப் போய்விட்டான் போனவன் சும்மா போய் இருக்கக்கூடாதா? நாகோஜிக்குத் தலையை ஆட்டிவிட்டுப் போகவேண்டுமா? நாழிகையாகி விட்டதென்று நாகோஜி தபாலை எடுத்து வந்தார். மனைவியின் கடிதத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த கல்யாணராமனைத் தவிர மற்றவர்கள் தொழிற்சாலைப் பக்கம் ஓடலானார்கள். நாகோஜி வெள்ளெழுத்துக் கண்ணாடியை விளிம்பில் மாட்டிக்கொண்டு கற்பகத்தின் கடிதத்தைக் கண்டு பிடிக்கிறவரையில் கல்யாணராமனால் பொறுக்க முடியுமா? அவனும் அங்கே என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க ஓட வேண்டாமா?

"அட, இங்கே கொண்டு வாருங்காணும்! ஒன்னரை நாழி பண்ணிக்கொண்டு!" என்று தபால்களைக் கையில் வாங்கிக்கொண்டான்.

முதல் கடிதம் விசுவத்துக்கு வந்ததுதான்! கல்யாணராமன் கண்ணி கற்பகத்தின் காதல் மிஞ்சும் கடிதத்தைக் கூட மறந்துவிட்டு அந்தக் கடிதத்தைப் படிக்கலானான்:

'அன்புள்ள விசுவத்துக்கு:

ஆசிர்வாதம். சுவாமி உன் மாமனார் வீட்டில் இருப்பதாக எழுதியிருக்கிறான். லீவு முடியுமுன் ஒருவாரம் போல வந்து இருந்துவிட்டு அங்கு வருவானும். நிற்க, பானுமதியைத்தான் உனக்குத் தெரியுமே. அவளுடைய அம்மா என்னிடம்தான் தன் வீட்டை விற்றிருக்கிறாள். அந்தப் பானுமதிக்குத் தற்சமயம் உன்னுடைய சிபாரிசினால் உன் காரியாலயத்திலேயே வேலை செய்து வைத்திருப்பதாய் திம்மையா என்ற உன் ஆபீஸ் ஆள் மூலம் தெரிந்தது. இதுபற்றி நான் எதுவும் உனக்கு எழுதவேண்டியதில்லை—ஆனால் ஒன்று மட்டும் அவசியம் எழுதவேண்டும் என்று நினைக்கிறேன். அதாவது, பானுமதியினுடைய தாயார் அவளுடைய கல்யாணத்தை உத்தேசித்துத்தான் என்னிடம் வீட்டை விற்றிருக்கிறாள். எல்லோரும் வீட்டை ரொம்பவும் மலிவாக நான் தட்டிக்கொண்டு போய்விட்டதாகச் சொல்லிக்கொள்கிறார்களேயன்றி முதலில் அதே இரண்டாயிரத்துக்கு வாங்க முன்வரவில்லை. போனால் போகிறதென்று நான் பணம் கொடுத்து வாங்கினேன். இந்த நிலைமையில் பானுமதியைக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைத்து அவளை உடனே அனுப்பி வைக்க வேண்டும், இல்லாவிட்டால் எனக்குப் பொல்லாப்பு வந்து சேரும். வீட்டையும் வாங்கிக்கொண்டு... உனக்கு இதெல்லாம் புரியுமென்று நம்புகிறேன். இன்னொரு முக்கியமான செய்தி: பெங்களூரில் சமையல் செய்து கொண்டிருந்தாளே அந்த அம்மாள் தன் பெண்பிரசவத்துக்காக இங்கு மூன்றுநாள் வந்துவிட்டுப் போனாள். சுசீலா உனை விட்டுப் புறப்படும் போது ஒரு மாசமோ இரண்டு மாசமோ ஸ்நானம் செய்யாமலிருந்தாள் என்று சொன்னாள். இப்பொழுது நான்கு மாதமாக இருக்கும் வளைகாப்பு, சீமந்தம்



என்றெல்லாம் செய்யவேண்டும். நம் சந்ததியில் மூத்த பிரஜையின் முதல் காரியம். இதெல்லாம் சம்பிரதாயம் என்பது மட்டுமல்ல; அலட்சியம் செய்வது ஆபத்தாகக்கூட முடியலாம். ஆகவே அவளை உன் தம்பி சுவாமியுடன் புறப்பட்டு இங்கு வரும்படி எழுது. நானும் சுப்பண்ணுவுக்கு எழுதுகிறேன். குடும்பத்தில் எவ்வளவோ நடுநடுவில் ஏற்படும். மூத்தவனுக இருப்பவனுக்குச் சில கடமைகள் உண்டு. அந்தக் கடமையிலிருந்து எந்தக் காரணம் கொண்டும் தவறக்கூடாது. என் காதில் என்னென்னவோ விழுகின்றன. அதையெல்லாம் நான் பொருட்படுத்துகிறேனு? உடனே பதில் எழுதுவாய் என்று நம்புகிறேன். பலராமன்—"

ஆஹா! பிறருடைய கடிதத்தில்தான் எவ்வளவு ருசி!

மனிதன் எப்போதுமே யோக்கியனுகத்தான் இருக்க விரும்புகிறுன்; ஆனுல் தீயகுணங்களின் தன்மை அவனை எங்கே யோக்கியனுக இருக்கவிடுகிறது? தவறு என்ற காரியத்தைத் திருட்டுத்தனமாகவேனும் செய்ய வேண்டும் என்ற மோகமும் தாகமும் கட்டுக்குள் எங்கே அடங்குகின்றன? அதில் என்ன இன்பம், என்ன ருசி, என்ன இனிமை! தீய சக்திகளைக் கிண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் தோழன் போன்றது சந்தர்ப்பவிசேஷம்! கை நிறையத் தேன் இருக்கட்டும், கூட்டிலிருந்து வடிகிற சொட்டுத் தேனுக்கு அவன் நாக்கையாவது நீட்டும்படி செய்கிறது அவன் மனசு. சந்தர்ப்பம் கிடைக்காவிட்டாலும் ஏற்படுத்திக்கொள்ளத் தெரிகிற அந்த மனசுக்கு வலுவில் சந்தர்ப்பமே கிடைத்துவிட்டால் கேட்கவா வேண்டும்?



கல்யாணராமன் கல்யாணமாகியும் பிரம்மசாரியாக இருப்பவன். காதல் விவகாரத்தை என்னவிக் கற்பனையில் நினைப்பவன். நாகோஜிராவ் சுத்த அப்பட்டமான வெகுளி. நெருப்புப் பெட்டியைக் கொடுத்துவிட்டார். கல்யாணராமன் குச்சி கொளுத்திவிட்டான். பொறி பற்றிக்கொண்டது; புகைச்சல் கிளம்பிவிட்டது.

'பானுமதிக்குக் கல்யாணம்! செகரடரிக்குக் கல்யாணம்! அம்மாளுக்குப் புது அகமுடையான்!' விஷயம் இந்த ரீதியில் ஆரம்பமாகி, விசுவம் தகப்பனுர் ஆகப் போவதில் முடியாமல் இன்னும் மேலே போய், இரவு ரத்தம் கொடுத்ததில் வந்து முடிந்தது.

அதுகூடத் தவறு. தபால் கிடைத்த விஷயம் முடிந்ததே தவிர புகைந்து கொண்டிருந்த விஷயம் முடியவில்லை.

"எல்லாம் சரிதாண்டா, இனிமேல் என்ன நடக்கும்? அதைச் சொல்லு!"

கல்யாணராமனுக்குத் திடீரென்று ஞானம் பிறந்துவிட்டது. "அட, மனுஷன்—பாவம்—எழுந்திருந்து வரட்டும்! நர்ஸே சொன்னுளாமே, செகரடரி சமயத்தில் மட்டும் வராமல் இருந்திருந்தால் நிலைமை மோசமாகப் போயிருக்கும் என்று! நீயானுல் ஒரு பொட்டு ரத்தம் கிந்துவாயா? எல்லாம் நல்லதுக்குத்தான்; வைத்துக்கொள்!" என்றுன்.

"சும்மாவா?" என்றுன் ஒருவன். மற்றவர்கள் இதைக் கேட்டுச் சிரித்தார்கள். இந்தக் காட்சியைக் கவனித்துக் கொண்டே வந்துவிட்டான் சுந்தரராஜன். அவன் அறைக்குள் நுழைந்ததும் கல்யாணராமனுக்கு அழைப்பு வந்துவிட்டது. பல்லால் நாக்கைக் கடித்துக் கொண்டவன்போல கல்யாணராமன் விரலைச் சுண்டிக்கொண்டு போய்ச் சேர்ந்தான்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பானுமதி காரிலிருந்து இறங்கி உள்ளே நுழைந்தாள். அவள் உள்ளே போனதும் ஒரு குமாஸ்தா நாகோஜியிடம் வந்து, "இன்னும் இவனுக்குச் சமாசாரம் தெரியாதே?" என்று கேட்டான். நாகோஜிக்குப் பயமும் கோபமும் கலந்து வந்தன. "ஏய், என்ன, என்னை முட்டாளாய் அடிக்கப் பார்க்கிறுயா? இதோ, இப்பவே கொண்டுபோய் எல்லாத் தபால்களையும் கொடுக்கப் போகிறேன். அப்புறம் தெரியும் யார் முட்டாள் என்று!" என்றுர். சொன்ன அக்ஷரம் மாறுமல் அப்படியே செய்யவும் செய்தார்.

ஆபீஸில் அன்று வேலையா நடந்தது? திரும்பிவந்த கல்யாணராமன் கம்மென்று உட்கார்ந்துவிட்டான். முகம் சுண்டிப்போய் இருந்தது. அவனிடம் வந்து, "என்னடா?" என்று ஆவலுடன் கேட்டவர்களிடம், "போங்கடா!" என்று வள்ளென்று விழுந்தான். அதன்பிறகு அவன் வாயையே திறக்கவில்லை. சற்று நேரங்கழித்து பானுமதியிடமிருந்து அழைப்பு வந்தது. மனசு 'பக்பக்' கென்று அடித்துக்கொள்ள நடையே எழும்பாமல் தள்ளாடிக்கொண்டே சென்றுன். போகும்போதே இந்த மாதம் பிறந்து எவ்வளவு நாளில் வேலை செய்திருக்கிறேம்; என்பது ரூபாய்வீதம் எவ்வளவு ஆகியிருக்கும்! அடுத்த வேலை கிடைக்கும் வரையில் இந்தப் பணம் போதுமா—இதே எண்ணத்துடன் போனுன். எல்லாம் கற்பகத்தின்



கழுத்தில் தாலிகட்டிய வேளை!'—இதுதான் அவன் எண்ணத்தின் முடிவு.

பானுமதி எதிர்பாராதபடி, "நீங்கள்தான் கல்யாணராமனு?" என்று விசாரித்துவிட்டு, "உங்களுக்கு எப்பொழுது கல்யாணமாயிற்று?" என்று கேட்டாள்.

அவன் பதில் சொல்லாமல் விழித்தபடி நின்றுன்.

"எக்ஸ்கியூஸ் மீ! தெரியாமல் ஆபீஸ் தபாலாக்கும் என்று பிரித்துவிட்டேன். எங்கேயோ ஞாபகத்தில் படித்துவிட்டேன். உங்கள் மனைவி பெயர் கற்பகமா? நல்ல பெயர்!" என்றுள் பானுமதி.

கல்யாணராமன் அசட்டுச் சிரிப்புடன், "அதனுலென்ன, பரவாயில்லை!" என்று தைரியமடைந்து கடிதத்தை வாங்கிக்கொண்டான். வெளியில் வந்ததும்தான், அவன் அதிர்ஷ்டத்தினுல்தான் பிழைத்தேன் போலிருக்கிறது என்று பெருமூச்சுவிட்டான். திடீரென்று பானுமதியைப்பற்றிய அவன் அபிப்பிராயமே மாறிப் போயிற்று! "என்ன இனிமையான குரல்! என்ன குளுமையான முகம்! மானேஜர் என்ன; மகரிஷிகளை மயங்கிவிடுவார்களே!" என்று தோன்றியது அவனுக்கு. மானேஜர் ரொம்ப நல்லவர்—கெட்டிக்காரர் என்றும் எல்லாம் இவள் வந்தபிறகுதான் அந்த நல்ல மனுஷன் விருகப் போய்விட்டார் என்றும் காலையில் அவள் வருவதற்கு முந்தி வாதாடி ஜயித்த அதே கல்யாணராமன், "பாவம், அவள் என்ன செய்வாள்! அவர்தான் என்ன செய்வார்! அப்படி ஓர் அழகு! எனக்கே புத்தி மயங்கிப் போய்விட்டதே" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அடுத்தகணமே, 'கற்பகம் எப்படி இருப்பாளோ இப்பொழுது?' என்ற ஞாபகம் வந்தது. கடிதத்தைப் பத்திரமாக வைத்துக்கொண்டு இடத்தில் வந்து உட்கார்ந்துகொண்டான். அதுவே ஒரு காரியத்துக்கு நல்லதாயிற்று! 'பையனுக்குச் சீட்டு கொடுத்தாகிவிட்டது' என்று ஒருவரும் அவனிடம் நெருங்கவில்லை. தூரத்திலிருந்தபடியே பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இடைவேளை முடிந்து வழக்கம்போல நாகோஜி பானுமதியின் அறைக்குள் தலையை நீட்டியவர் பொடுக்கென்று தலையை இழுத்துக்கொண்டு வெளியே வந்துவிட்டார். சுந்தரராஜன் அங்கே உட்கார்ந்து பானுமதியிடம் பேசிக்கொண்டிருந்தான். அவளுடைய அறையில் அவன் உட்கார்ந்து பேசியது இதுதான் முதல் தடவை என்பது அவருக்குத் தெரியும். அவனும் இவரைப் பார்த்தான். பானுமதியும் பார்த்தாள். ஆச்சரியமாய் இருந்தாலும் ஆயிரம் இருக்கும்; நாகோஜிக்கு என்ன வந்தது? அப்புறம் போனுல் போகிறது! இந்தத் தீர்மானத்துடன் திரும்பியபொழுது அவர் செவிகளில் இரண்டொரு வார்த்தைகள் விழுந்தன:

"அந்தக் கடிதம் எப்படி வந்தது? என் வெளியில் போயிற்று?" என்று கேட்டாள் பானுமதி.

"அதையேதான் நானும் கேட்கிறேன்! இப்படியா அலக்ஷியமாகப் போட்டுவிட்டுப் போவது? இதற்கெல்லாம் இந்த அசட்டு நாகோஜிதான் காரணம்!" என்று சொல்லிக்கொண்டிருந்தான் சுந்தரராஜன்.

கல்யாணராமனைக் கூப்பிட்டு விசாரித்த விஷயம் அதுதான். அதற்குமேல் நாகோஜி அங்கே ஏன் நிற்கிறுர்! வெகுநேரம் கழித்துத்தான் சுந்தரராஜன் தன் இடத்தில் காணப்பட்டான். பானுமதியுடன் அவன் பேசிக்கொண்டிருப்பதற்குள் எத்தனைபேர் வந்துவிட்டார்கள்! முதலில் சம்பளம்பற்றி விசாரணை நடத்த ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்தார்; தொழிற்சாலையிலிருந்து பாக்டரி இன்ஸ்பெக்டர் வந்தார்; பிறகு போர்மென்



னும், கையில் கட்டுக் காயத்துடன் அந்தத் தொழிலாளியும் வந்தனர். இன்னும் தொழில் சம்பந்தமாக இரண்டொருவர். ஆக எல்லாருக்கும் இருவரும் சேர்ந்தே பதில் கூறி அனுப்பினுர்கள். விசுவத்தைப்பற்றி விசாரித்தவர்களுக்குமட்டும் சுந்தரராஜன்தான் "தேவலை" என்று பதிலளித்தான். பானு வாயைத் திறக்கவில்லை.

தன் இடத்துக்கு வந்தபிறகு சுந்தரராஜன் முகத்தில் ஒரு புதிய ஒளி வீசுவதுபோல இருந்தது. என்றுமில்லாத பரபரப்புடன் தென்பட்டான். ஒவ்வொரு குமாஸ்தாக்களிடமும் சென்று அவர்கள் வேலையைப் பார்த்து ஏதாவது சொல்லிக்கொண்டே போனுன். கடைசியாகக் கல்யாணராமன் முறை வந்தது. "இது ஏன் இப்படி? அது ஏன் அப்படி?" என்று பிடித்துக்கொண்டான். கல்யாணராமன் தவிக்க ஆரம்பித்தான். மணி அடித்துவிட்டது. இதற்குள், "சரி; நாளைக்கு ஆகட்டும்" என்று கடுபிடியுடன் திரும்பிச் சென்றுன். காரியாலயத்தை விட்டு வெளியில் வரும்போது பானுமதியுடன் அவனும் வந்து, வண்டியில் தாஸ்ஸுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

"ஆஸ்பத்திரிக்கு!" என்றுள் பானு.

கார் புறப்பட்டது.

# 36

விசுவத்துக்கு முற்றிலும் குணமாகிவிட்டது. மூன்றும் நாள் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்துவிட்டான். இன்னும் இடதுகையில் கட்டுப் பிரிக்கவில்லை. ஒரு வாரம் கழித்துக் காரியாலயத்துக்குப் போகலாம் என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள் ஊரிலிருந்து அவன் தந்தை பலராமன்மட்டும் தந்தி கிடைத்ததும் பறந்து கொண்டு வந்துவிட்டார். வேறு யாரும் வரவில்லை. விசுவமோ ஒன்றுமே நடக்காததுபோலவும் தனக்கு ஒன்றும் நேர்ந்துவிடாததுபோலவும் இருந்து வந்தான். தந்தையிடமோ மற்றவர்களிடமோ அவன் அதிகமாக ஒன்றும் பேசவில்லை. தன்னுடைய சுகமயமான புதுவாழ்க்கையில் கண்ணுக்குத்தெரியாத ஒரு முட்டுக்கட்டை விழுந்துவிட்டதுபோல அவன் எண்ணி மனசுக்குள்ளேயே கவலைப்பட்டுக்கொண்டான். உறுதியும் தீரமும் நிறைந்த அவன் சுபாவத்தில் மேலுக்கு மாறுதல் தெரியாவிட்டாலும் உள்ளுக்குள்ளே ஒரு பலவீனமும் அதிருப்தியும் கலந்துகொண்டிருந்தன. இதற்கு முக்கிய காரணம், பானுமதி அவன் நினைவு தெளிந்த பிறகு வந்து எட்டிப் பார்க்கவில்லை! அவள் தன் முகத்தில் விழிக்கக் கூசுகிறாள் என்று அவன் ஊகித்துக்கொண்டான். கடிதம் அவன் கையில் இருக்கிறது. அதை எழுதியவர் ஊரிலிருந்து நேரில் வந்திருக்கிறார். எல்லாவற்றிற்கும் காரணமாயிருந்த சுசீலா தந்தி கிடைத்ததும் கணவனைக்காண வரவில்லை. எதனாலோ விசுவம் அதைரியமடைந்தான். சுசீலாவின் இந்த உல்லங்கனம் அவன் மனசில் நறுக்கென்று தைத்தது. நேர் எதிர்த் திசையில் ஓடும் இரண்டு சக்திகளை விதி இறுகப் பிணைத்துக்கொண்டிருந்தது. அந்தப் பிணைப்பை அறுத்து எறிந்துவிடவே முடியாதோ? பானுமதி தன்னை வந்து பார்த்துப் போகாதது கூட அவனுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. யாரோ அவன் தலைநிமிர முடியாதபடி அவனை அவமானப்படுத்திவிட்டதுபோலவும் அவனைச் சுற்றிலும் ஒரு சூனியத்தை ஏற்படுத்திவிட்டது போலவும் எண்ணிக்கொண்டு மனம் புழுங்கிக் கொண்டிருந்தான். பானுமதியுடன் ஆடிய ஆட்டமெல்லாம் இன்றைய நிலையில் மிகவும் கேவலமானதாகவும் தன்னையே இழிவுபடுத்துவதாகவும் தோன்றின. எவ்வளவு சிறுபிள்ளைத்தனமாக அவன் நடந்துகொண்டிருக்கிறான்! தன் கௌரவத்தைத் தானே எவ்வளவு குறைத்துக்கொண்டு விட்டான்!.........

ஆனால், பானுமதியின் அந்த வெப்பமான பெருமூச்சு; பசந்த அந்த விழிகள்: சூழ்ந்திருக்கும் சூனியத்தையெல்லாம் நொடியில் சிதற அடிக்கும் அவள் பிரஸன்னம்—

கடைசியாக வெட்கத்தைவிட்டு விசுவம் தாஸை மேலே அழைத்தான். தாஸ் வந்து நின்றதும் அவன் மனசை, ஒதுக்கிவிட்டபாசிபோல வெட்கம் வந்து மூடிக்கொண்டது.

"ஒன்றுமில்லை; ஆபீஸில் ஒன்றும் விசேஷமில்லையே?" என்று கேட்டான். திடீரென்று டிரங்குபோன் மூலம் மானேஜிங் டைரக்டர் அவன் உடம்பைப்பற்றி விசாரித்தது ஞாபகத்துக்கு வந்தது. அந்தச் சமயத்தில் அது எவ்வளவு ஆறுதலாய் இருந்தது! "தாஸ்! மானேஜிங் டைரக்டர்கூட என்னைப் பார்க்க வருவதாக டிரங்க் போனில் சொன்னார். 'வேண்டாம்; அது அவசியமில்லை' என்று கூறிவிட்டேன். அப்படி என்ன வந்துவிட்டது எனக்கு? நான் நன்றாகத்தானே இருக்கிறேன் இல்லையா?" என்றான் சம்பந்தமில்லாமல்.

தாஸுக்குத் தன் எஜமானைப்பற்றித் தெரியாதா?

"அப்பாதான் ரொம்பவும் பயந்து போனாங்க! நீங்க கண்விழிச்சாப் போதும் என்று தவிச்சுப்போயிட்டாங்க! என்னமோ இந்த மட்டிலே......" என்று ஆரம்பித்தான் தாஸ்.

"சொல்லு, தாஸ்! பாக்கியையும் சொல்லு" என்று உளறினான் விசுவம், பானுவைப்பற்றி ஏதாவது வார்த்தை வராமலா இருக்கும் என்ற ஆவலுடன்.



தாஸ் அவன் மனநிலையைப் புரிந்துகொண்டு ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் பலராமன் மேலே வந்துவிட்டார். விசுவத்தைப் பார்த்து, "மருந்து சாப்பிட்டு விட்டாயா?" என்று கேட்டார். மருந்தைப் போலவே அவர் பேச்சு, அவர், தாஸ், இந்த வீடு, உத்தியோகம், உலகம் எல்லாமே கசந்தது அவனுக்கு. முகத்தைச் சுளித்துக்கொண்டு, "தாஸ்! அந்த மருந்தை எடுத்துக் கொடு! அதற்குத்தான் உன்னைக் கூப்பிட்டேன்" என்றான் விசுவம்.



பலராமன் பெரிய உத்தியோகத்திலிருந்து ரிடையரானவர். அவரிடம் விசுவத்துக்கு உள்ளூற மதிப்பும் பயமும் உண்டு. பலராமனுக்கும் தம் பிள்ளையிடம் விசுவாசமும் அதேபோலப் பயமும் உண்டு. பரஸ்பரம் உள்ள பயத்தினால் வார்த்தைகள் வளரவில்லை. நிலைமைக்குத் தகுந்ததுபோல இருவரும் நடந்துகொண்டார்கள். பானுமதியிடம் காதல்வரம் கேட்ட அதேமுகத்தை வைத்துக்கொண்டு ஒருநாள் அவர் முன்நிற்க வேண்டியிருக்கும் என்பதை அவன் எண்ணிப் பார்த்தது கிடையாது. பலராமன் பிள்ளையிடம் பயப்பட்டாலும் கொஞ்சம் முரட்டுச் சுபாவமுள்ளவர்: எதைக் கேட்கக்கூடாது என்று பிறர் அஞ்சுவார்களோ அதை அவர் விட்டுவிடமாட்டார். கடைசியில் சண்டை போட்டுக்கொண்டு போனாலும் போவாரேயன்றி மனசில் பட்டதை அப்பட்டமாக, ஒளிவுமறைவின்றி, நாச்சம் கூச்சமின்றி கேட்கத் தயங்கமாட்டார். விசுவம் இதை முன்னிட்டே அவரிடம் வெகு ஜாக்கிரதையாக நடந்துகொண்டான். அவனுக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது, அவர் வேறு எதைப்பற்றியும் பேசாதது.

தாஸ் கொடுத்த மருந்தைச் சாப்பிடாமல் விசுவம் எதையோ யோசித்துக்கொண்டிருந்தான். பலராமன் இதைப் பார்த்துவிட்டு, "மருந்தைச் சாப்பிடும்போது யோசனை என்ன? எல்லாவற்றிலும் சிறுபிள்ளைத் தனமா?" என்றார்.

'எல்லாவற்றிலும்' என்ற வார்த்தை அர்த்தம் நிறைந்ததாக விசுவத்துக்குத் தோன்றியது. பேசாமல் டக்கென்று மருந்தைக் குடித்துவிட்டு, "சரி; நான் சிறிது தூங்குகிறேன்" என்றான். உண்மையில் தூக்க மயக்கமாக இருந்தது அவனுக்கு.

பலராமன் தாஸைப் பார்த்து, "நேற்றுக் கேட்டேனே, அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாமா?" என்றார்.

விசுவம் திடுக்கிட்டு, "யாரை?" என்று கேட்டுவிட்டான்.

தாஸ் திருதிருவென்று விழித்தான். தன்னை அடக்க முடியாமல், "எதற்காக அங்கே போகவேண்டும்? அவளை நீங்கள் ஏன் பார்க்கப் போகவேண்டும்?" என்றான் விசுவம்.

"ஏன், அதில் என்ன தவறு?" என்றார் பலராமன். விசுவத்துக்குத் தலை சுற்றியது.

"எனக்கொன்றும் அதனால் கௌரவம் குறைந்து போய்விடாது. 'அவளாக வருவாள்' என்று நினைத்தேன், வரவில்லை. நான்தான் போகிறேனே. ஆபத்து சமயத்தில் அவள் உன் உயிரையே காப்பாற்றினாளே!" என்று சொல்லிக்கொண்டே இருந்தார் பலராமன். விசுவத்துக்கு அதொன்றும் காதிலேயே விழவில்லை.

"வேண்டாம், வேண்டாம்" என்று அவன் கூவிய பொழுது பலராமனோ, தாஸோ அங்கே இல்லை. அதற்குள் அவர்கள் கீழே இறங்கிப் போய்விட்டார்கள்!

அன்று பேசியதுதான் அவரிடம். அவர் ஊருக்குக் கிளம்பும்வரையில் அவன் அவரிடம் பேசவேயில்லை. அவரும் பேச்சுக்கொடுக்க வரவில்லை. ரெயிலுக்குக் கிளம்புகிற சமயத்தில், "நான் எவ்வளவோ பேச வேண்டும் என்று நினைத்தேன். உனக்கு எவ்வளவோ சொல்லவேண்டும் என்று எனக்கு எண்ணம். ஆனால் இனிமேல் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைக்கிறேன். எல்லாம் சரியாகிவிடும். போகும்போது சுசீலாவை அழைத்துக்கொண்டு வரும்படி உன் அம்மா ஆசைப் பட்டாள். அழைத்துக்கொண்டுபோய் ஒரு மாதம் வைத்துக்கொள்ளவேண்டாமா?" என்றார்.

"எனக்குத் தெரியாது. உங்கள் சௌகரியம்" என்றான் விசுவம்.

"என் சௌகரியம் இருக்கட்டும்; உன் எண்ணம் என்ன? அதைச் சொல்லேன்!"

"நான் ஒன்றும் சொல்லத் தயாராய் இல்லை. எனக்கு ஒரு எண்ணமும் இல்லை. அம்மாவுக்குத் தன் பிள்ளையைவிட மாட்டுப்பெண் உயர்வாக இருக்கலாம்; நல்லவளாக இருக்கலாம். நான்தான் ஒப்புக்கொள்கிறேனே: நான் கெட்டவன்தான்! உங்கள் மாட்டுப்பெண்ணுக்குத் தகுந்தவனில்லைதான்!" என்றான் விசுவம்.

பலராமன் சிறிது நேரம் சும்மா இருந்தார். கடைசியாகத் தீர்மானமான குரலில், "உடம்பில் தெம்பும் இளமையும் இருக்கும் வரையில் இந்தமாதிரி பேசுவது சரியாக இருப்பதுபோலவே தோன்றும். ஆனால் வயது வந்தபின்பு வருந்தப்பட வேண்டியிருக்கும். நிச்சயம் சொல்லி வைக்கிறேன்: அப்படி ஒரு நாளும் நடக்க விடமாட்டேன். கட்டிய பெண்டாட்டி ஒருத்தி கல்போல இருக்கும்போது ரிஜிஸ்தர் கல்யாணம் செய்துகொண்டு இஷ்டம்போல இருக்க ஒரு நாளும் விடமாட்டேன். நீ என்னை மீறிப் போகலாம். ஆனால் பானு என்னை மீறிப் போகமாட்டாள். எனக்குத் தெரியும்! மீறிப் போகமுடியாது!" என்றார்.

விசுவம் சர்வ நாடியும் ஒடுங்கிப் போய் நின்றான். தன்னைவிட மானேஜிங் டைரெக்டர் தன் தந்தைக்கு மிகவும் வேண்டியவர் என்பது அவனுக்குத் தெரியும். அவர் நினைத்தால் அடுத்த நிமிஷமே பானுமதியின் உத்தியோகம் காற்றில் பறக்கும்! விசுவம் தலைகீழாக நின்றாலும் அதன் பிறகு ஒன்றும் நடவாது. ரோசம் தாங்காவிட்டால் அவனும் வேண்டுமானால் வெளியில் வந்துவிடலாம்.

"என்ன?" என்றார் பலராமன்.

"போய்விட்டு வாருங்கள்!" என்றான் விசுவம்.

"அழைத்துக்கொண்டு போவதற்கு என்ன சொல்கிறாய்?"

"எனக்குத் தெரியாது!"

விசுவம் அசையவில்லை; கலங்கவுமில்லை. உறுதியும் வீம்பும் அவன் முகத்தில் ஜொலித்தன. கார் புறப்பட்ட சப்தம் கேட்டதும் அவன் குப்புறப் படுத்துக்கொண்டு, பெண்களைப்போலப் பீறிவரும் அழுகையை அடக்க மாட்டாமல் விசித்து விசித்து அழுதான்.

வெகுநேரம் கழித்து அவன் ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய் எழுந்திருந்து புது ஆடைகளை தரித்துக்கொண்டான். அத்தையைக் கூப்பிட்டுச் சாதம் போடச் சொல்லிச் சாப்பிட்டான். ரெயிலுக்குப் போய்விட்டுவந்த கார் வாசலில் நின்றுகொண்டிருந்தது. தாஸ் வீட்டுக்குப் போயிருந்தான். விசுவமே காரில் ஏறி உட்கார்ந்துகொண்டு முதல் முதலாக ஆபீஸுக்கு ஓட்டினான்.

மாறுதல் எதுவுமின்றி காரியாலயத்தில் வேலை நடந்துகொண்டிருந்தது தான் வரவில்லை என்பதற்காக ஒன்றும் நின்றுவிடாது என்பதே அவனுக்குப் பிடிக்கவில்லை. 'எப்படி வேலை அமைதியாக நடக்கிறது? அது எப்படி நடக்கும்? நான் வரவில்லையே—இரண்டு வாரம் வராமல் இருந்திருக்கிறேனே—நான் இருந்தாலும் ஒன்றுதான்; இல்லாவிட்டாலும் ஒன்றுதானோ?' விசுவத்தின் மனத்தில் அருவை படர்ந்துகொண்டு வந்தது. நடை வேகமாகவே விழுந்தது. குமாஸ்தாக்கள் முகமலர்ச்சியுடன் அவனைக் கண்டதும் எழுந்து மௌனமாக வரவேற்றார்கள். அவன் யாரிடமும் பேசாமல் தலையையாட்டிக் கையை அமர்த்திக்கொண்டே நடந்தான். போகிற போக்கில் சுந்தரராஜுவின் அறையை எட்டிப் பார்த்துக்கொண்டே தன் இடத்துக்குள் நுழைந்தான். இடம் காலியாக இருந்தது. அதே சமயத்தில் பக்கத்தில் பானுமதியின் அறையில் பேச்சுக்குரல் கேட்டது. அடுத்து சிரிப்புச் சத்தமும் தொடர்ந்தது. விசுவம் பிரமித்துப்போய் வந்ததே தெரியாமல் உட்கார்ந்துகொண்டு காதை உன்னிப்பாகத் தீட்டிக்கொண்டு கவனித்தான்.

'ரொம்பக் குஷியாகத்தான் இருக்கிறார்கள்போலிருக்கிறது!' என்று முணு முணுத்தது அவன் வாய்.

உண்மையில் பானுமதியிடம் அவனுக்குச் சிறிதும் சம்சயம் தோன்றவில்லை. சுந்தரராஜனிடம் பேசிக் கொண்டிருந்ததுதான் அவனுக்கு வெறுப்பாக இருந்தது. தான் இல்லாதபோது வேலைகள் தடங்கலின்றி நடப்பதும், தனக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்வதும் அவன் வெறுப்பைக் கிளறிவிட்டன. தன்னைமீறி நடக்க சுந்தரராஜனுக்கோ பானுவுக்கோ அவ்வளவு தைரியம் போதாது என்று அவன் எண்ணினான். பக்கத்து அறையில் சிரிப்பு வலுத்துக்கொண்டே இருந்தது.

'இவர்கள் சிரிக்கிறார்களா? வேலையைக் கவனிக்கிறார்களா?—அப்படிச் சிரித்துக்கொண்டே இருக்க என்னதான் விஷயமிருக்கும்!'

விசுவம் காதுகொடுத்து நன்றாகக் கவனித்தான்; பானுமதியின் குரல் ஸ்பஷ்டமாகக் காதில் விழுந்தது:

"சுந்தரராஜன்! நீங்கள் இவ்வளவு வேடிக்கையாகப் பேசுகிறீர்களே! உங்களை இத்தனை நாளும் எப்படி எண்ணிக்கொண்டிருந்தேன் தெரியுமா? வெறும் முசுடு என்றுதான்! அது பெரிய முசுடு! இது சின்ன முசுடு என்று முடிபோட்டு வைத்திருந்தேன்!" என்றாள் பானு.

மீண்டும் சிரிப்பு ஆரம்பமாயிற்று!

விசுவத்தின் அறையிலிருந்து எழும்பிய 'டண்-டண்' என்ற மணிச் சத்தம் அவர்களைத் திடுக்கிட வைத்தது. சுந்தரராஜன் விசுக்கென்று வெளிப்புறமாய்த் தன் அறைக்குப் போய்விட்டான். பானுமதி விசுவத்தின் அறைப் பக்கத்துக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே எட்டிப் பார்த்தாள்.

விசுவம் அவளைக் கவனிக்காததுபோல எதிரே வந்து நின்ற அட்டெண்டர் பையனிடம், "சுந்தரராஜன்" என்றான்.

"எப்பொழுது வந்தீர்கள்?" என்றாள் பானு கதவில் ஒயிலாக ஊன்றிச் சாய்ந்துகொண்டு.

"ஓ, பானுவா?" என்றான் விசுவம். அவள் மௌனமாகத் தன்னைப் பார்த்துக்கொண்டே இருப்பதைக் கண்டு, "ரொம்ப வேலையோ?" என்று கேட்டான்.

பானுமதி தலைமறிக்கொண்டு நின்றாள். திடீரென்று ஆவேசம் வந்தவளைப்போல வெளியிலிருந்து யாரும் வர முடியாதபடி கதவைத் தாளிட்டுக்கொண்டு அவன் பக்கத்தில் தாவி வந்து உட்கார்ந்து, "எப்படி வந்தீர்கள்? அதற்குள் உங்களை யார் வரச் சொன்னது? ஏன், எனக்கு ஒரு வார்த்தை சொல்லியனுப்பவில்லை?" என்று கேள்விமேல் கேள்வியாக அடுக்கினாள்.

கட்டுமீறி வரும் ஆசையுடன் அவன் தோளைப் பிடித்துக் களி வெறியுடன், "மூஞ்சியெல்லாம் எப்படி வெளுத்துக் கிடக்கிறது!" என்று கொஞ்சினாள்.

"பேசவே மாட்டீர்களோ! கோபமெல்லாம் இப்பொழுதான் அழகாய் இருக்கிறது. உரித்துவிட்ட கோழிமாதிரி உடம்பு ஒரு வெளுப்பு வெளுத்துக்கொண்டு—கண்ணெல்லாம் ஜோராய்—கை வழவழவென்று—உம்... உம்......ஜம்மென்று வாசனை கொழுத்துகிறதே. இது எது புது வாசனை?—ஆளை மாறிப் போய்விட்டீர்களே? எங்கே வாயைத் திறவுங்கள்! எங்கே என்னைப் பாருங்கள்! எங்கே, இப்படி...இந்தக் கன்னம் சுருக்கென்று குத்தட்டுமா? இப்படி...இப்படி சுருக்கென்று கிள்ளட்டுமா? வெடுக்கென்று—?"

பானுமதி சுருண்டு சுருண்டு அவன்மீது துவண்டு தவழ்ந்தாள்.

"சரி, விடு!" என்று சீறி விழுந்தான் விசுவம்.

பானுமதி அவன் பேச்சைப் பொருட்படுத்தினால்தானே?

(தொடரும்)



# மூன்று சிநேக மணிகள்

ஸ்ரீமதி லட்சுமியம்மாள்

"அதோ பார்: நன்றாகப் பார். அவன் போனதும் அந்தக் கதையை உனக்குச் சொல்லுகிறேன்' என்று குப்பம்மாள் மங்களத்தை நோக்கிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே விஜயசுந்தரியும் வந்து சேர்ந்தாள். வெள்ளைக்காரரைப்போல் தொப்பியும் சொக்காயும் ஜோடும் தரித்துக்கொள்ளிவாய்ப் புகைச் சுருட்டுமாக விளங்கிய அந்த மனிதனை விஜயசுந்தரி வியந்து நோக்கிக்கொண்டுதான் உள்ளேவந்து உட்கார்ந்தாள்.

அந்த நவநாகரிக மனிதன் திருக்குப்புசாமி முதலியாரைப் பார்க்கத்தான் வந்திருந்தான். சிறிது நேரத்தில் முதலியாரும் அந்த இளைஞனும் பேசிக்கொண்டு வெளியே போய் விட்டதும் மங்களம் குப்பம்மாள் முகத்தை நோக்கினாள், வாக்களித்தபடி அவனுடைய கதையைச் சொல்லப்போகிறாளென்று. விஜயசுந்தரியும், 'அந்த நவநாகரிக இளைஞனைக் குறித்து இந்தக் கர்நாடக அம்மாள் என்ன சொல்லப்போகிறாளோ?' என்று ஆவலுடன் இருந்தாள்.

'அந்த இளைஞனுடைய பாட்டி பழுத்த கிழம். வாது தொண்ணூறு. பல்லுப் போனதால் சொல்லுப்போக வில்லை. இடைவிடாது மணியடிப்பது போல் அவளுடைய நாக்கும் கணகணவென்று ஆடிக்கொண்டே இருக்கும். இப்போது கொஞ்சம் இந்த அம்மாளுக்கு உடம்பில்லாமை சரியாக இல்லை' என்று ஆரம்பித்தாள் குப்பம்மாள்.

'அந்தப் பாட்டி இந்த நாகரிகப் பேரனை எப்படித்தான் சகித்துக் கொண்டிருக்கிறாளோ?' என்று பெரு மூச்சுவிட்டாள் விஜயசுந்தரி.

'சகிப்பதுமட்டுமா? பேரனிடத்தில் எவ்வளவு அபிமானம்!' என்றாள் குப்பம்மாள்.

'எந்தப் பாட்டியும் எவ்வளவு நவநாகரிகமுள்ள பேரனையும் வெறுப்பதில்லை. மற்ற விட்டிலுள்ள நாகரிக கோரங்களைத்தான் கண்டிப்பது வழக்கம்' என்றாள் மங்களம்.

'அப்படிச் சொல்லம்மா நாகரிக கோரம் என்று வாயார, மனமார' என்று குப்பம்மாள் சொல்லிவிட்டு அந்த 'நாகரிக கோர'த்தின் கதையைச் சொல்லத் தொடங்கினாள். விஜயசுந்தரிக்கோ அந்த இளைஞனை 'நாகரிககோரம்' என்றது சிறிதும் பிடிக்கவில்லை. 'அவனுக்குத் தாய் இல்லையா? அவனுக்குத் தற்காலக் கல்வியறிவு உண்டா? தாயும் பாட்டியும் சேர்ந்து அவனுக்குத் தொந்தரவு கொடுத்தார்களா?' என்றெல்லாம் கேள்விகளை அடுக்கினாள் விஜயசுந்தரி.

'தாயும் பாட்டியும் சேர்ந்து அவன் வெகு விரைவில் கலியாணம் செய்து கொண்டுதான் ஆகவேணும் என்று தொந்தரவு கொடுத்தார்கள். 7,000 ரூபாய் ரொக்கம் வரதட்சிணையும், ஆயிரரூபாய்க்குச் சொக்காயும் கொடுக்கத் தயாராக இருந்த மிட்டாதார் விட்டலராவின் புதல்வியைச் சோமசுந்தரம்—நவநாகரிக இளைஞனின் பெயர்தான்—மணந்துகொள்ள வேண்டுமென்று தொந்தரவு கொடுத்தார்கள், அந்தக் "கர்நாடக"த்தாயும் பாட்டியும் ஆம். இருவரும் என்னைப் போல் கர்நாடகப் பேர்வழிகள்தான் அம்மா!' என்று சொல்லிக்கொண்டே விஜயசுந்தரியை நோக்கினாள் குப்பம்மாள்.

'அதெப்படியம்மா? உங்கள் கர்நாடகத்தில் அந்த அநாகரிக வரதட்சிணை—ஆசை கிடையாதே! இது இருக்கட்டும். நவநாகரிக சோமசுந்தரம் இசைந்தானா? தனக்கு விலை ஏழாயிரம் ரூபாயென்றே மதித்து விட்டானா?' என்று கேட்டாள் விஜயசுந்தரி. அதைத் தொடர்ந்து மங்களமும், 'அவன் பாரிஸ்டர் படிக்கச் சீமைக்குப் போகவா "ஆயிரரூபாய்ச் சொக்காய்" என்ற பேச்சு ஏற்பட்டது! அந்தச் சீமை-ஆசையில் ஏழாயிர ரூபாய்-ஆசையும் ஏற்பட்டிருக்கலாம்' என்றாள்.

குப்பம்மாள் சொன்னாள்: 'சோமசுந்தரம் அவ்வளவு மோசமில்லை. அப்படியிருந்தால் என் சமானருடன் அவன் சிநேகமாயிருக்க முடியுமா? சீமைக்குப்போய் வியாபாரத் துறையில் பயிற்சி பெற்றுத் திரும்ப வேண்டுமென்று விரும்பினான். வீட்டிலோ காசு கிடையாது. எனினும், பாட்டியிடத்திலும் தாயிடத்திலும் எவ்வளவோ பக்தியும் மரியாதையும் செலுத்திய பேரனும், அந்த வரதட்சிணை—வியாபாரம் கூடவே கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். மேலும் மிட்டாதார் தம் பெண்ணைச் சுத்த முட்டாளாக வைத்திருந்தால் அவளை மணந்துகொள்ள இஷ்டமே இல்லை சோமசுந்தரத்துக்கு. ஆனால் புஷ்பவல்லியென்ற ஒரு படித்தபெண்ணை மணஞ்செய்துகொண்டு, கூடுமானால் அவளையும் அழைத்துக்கொண்டே சீமைக்குப்போய்வர உத்தேசித்திருந்தான். மிட்டாதார் விட்டல்ராவோ விடுவதாயில்லை. பெண்ணையும் கொடுத்துப் பொன்னையும் கொடுத்துப் பெற்றுக்கொள்ள வேண்டிய மாப்பிள்ளைதான் என்று துணிந்து, தமக்கு மாப்பிள்ளை பிடித்திருப்பதாகவும், இன்ன தேதி இன்ன லக்கினத்தில் நிச்சய தாம்பூலம் செய்து கொள்ளவேணுமென்றும், சோமசுந்தரத்தின் தாயாரிடத்திலும் பாட்டியிடத்திலும் நேரே போய்ச் சொல்லிவிட்டார். அப்படி

யிருந்தும் இந்த விவாகத்தைத் தன் விவேகத்தால் தடுத்துவிட்டான் சோமசுந்தரம். நாங்கள் வைதிகமாகவும் கர்நாடகமாகவும் இருந்த போதிலும், விட்டலராவின் மனப்பான்மை எனக்காவது என் கணவருக்காவது பிடிக்கவில்லை. எங்கள் அனுதாபம் அந்தப் பையனுடைய நலத்திற்காகவே தான்'

இப்படிச்சொல்லி நிறுத்திக் குப்பம்மாள் மங்களத்தின் முகத்தையும் விஜயசுந்தரியின் முகத்தையும் நோக்கினாள். 'அந்த விவாகத்தை விவேகம் எப்படித் தடுத்ததம்மா?' என்று கேட்டாள் விஜயசுந்தரி. குப்பம்மாள் கதையைத் தொடர்ந்தாள்.

'மிட்டாதார்விட்டலராவ் பார்க்கப் போன ஒரு சினிமாவுக்குச் சோமசுந்தரமும் போனான். யாரோ சட்டைக்காரி கூட்டத்திலே டிக்கெட் வாங்க முடியாமல் தவித்துக்கொண்டிருந்தாள். அவளை நோக்கிச் சோமசுந்தரம், "அம்மா, உங்களுக்கு டிக்கெட் நான் வாங்கித் தருகிறேன்' என்று, சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருந்த மிட்டாதார் காது கேட்கச் சொன்னான். அது மிட்டாதாருக்குப் பிடிக்கவில்லை. அந்த அம்மாள் டிக்கெட் வாங்கக்கொடுத்த பணத்தையும் மறுத்துவிட்டுத் தானேபோய் இரண்டு முதல் வகுப்பு டிக்கட்டுகள் வாங்கிவந்து, அவளையும் அழைத்துக்கொண்டு உள்ளே போனான் மிட்டாதாருக்கு நெஞ்சு பகீரென்றது.

'மாப்பிள்ளையின் யோக்கியதையை மேலும் துலக்கவேண்டுமென்று மிட்டாதாரும் அவர்களுக்குப் பின்புறமாகப்போய் உட்கார்ந்துகொண்டார். அதைச் சோமசுந்தரம் அறிந்தும் அறியாதவன்போல், அருகேயிருந்த சட்டைக்காரியுடன் நட்புரிமை கொண்டவன்போல் பேசிக்கொண்டிருந்தான். மிட்டாதார் வெறுப்புடன் எழுந்துபோய்விட்டார். அது குறித்துச்சோமசுந்தரத்துக்கு அளவு கடந்த மகிழ்ச்சி, அதே சமயம் அவ்வளவு மகிழ்ச்சியும் துன்பமாக மாறியது: மணிக்கயிறு கண்ணொடி. விரியன் பாம்பாக மாறிவிடுவதுபோலே!

இப்படிச் சொல்லி நிறுத்திவிட்டுக் குப்பம்மாள் தன் சிநேகிதிகள் இருவரையும் நோக்கினாள். 'என்ன, புதிர்போடுகிறமாதிரி இருக்கிறதே!' என்று அதிசயித்தாள் விஜயசுந்தரி. 'அந்தப் புஷ்பவல்லியும் அங்கு வந்திருந்தாளோ?' என்று கேட்டாள் மங்களம். கதை தொடர்ந்தது.

'மங்களம் ஊகித்தது சரிதான். புஷ்பவல்லியென்ற, வைத்திய பரீட்சை தேறியிருந்த அப்பெண்ணும் அப்போது அங்கே பின்புறத்திலிருந்து சினிமா பார்த்துக்கொண்டிருந்தாள் என்பது சோமசுந்தரத்திற்குத் தெரியாது. இவன் மிட்டாதாருக்காக ஒரு "குட்டிநாடகம்" நடத்திக்கொண்டிருந்தான் என்பது தான் அவளுக்கு எப்படித் தெரியும்? இதயம் கொதித்தது: மூளை வெறிகொண்டது: உணர்ச்சி படுகாயமடைந்தது. அவளும் மிட்டாதார் போனபின் எழுந்து போய்விட்டாள்.

சோமசுந்தரத்திற்கோ புஷ்பவல்லி அங்கே வந்ததும் தெரியாது, போனதும் தெரியாது. பல தினங்களாக அவளைச் சந்திக்க முடியவில்லையே என்று விசாரித்துப் பார்த்ததில், செல்வக்குடும்பத்தைச் சேர்ந்த அவள் அமெரிக்காவில் மேற்கொண்டு வைத்தியத் தொழிலிலே பயிற்சி பெறவேண்டுமென்று புறப்பட்டுப் போயவிட்டதாகத் தெரியவந்தது. சொல்லிக்கொள்ளாமல் போய்விட்டாளே என்று இவனுக்கும் இதயம் கொதித்தது: மூளைவெறிகொண்டது: உணர்ச்சி படுகாயமடைந்தது. இந்த நிலையில் இளைஞன் எங்கள் வியாபாரசாலைக்கே குமாஸ்தாவாக வந்து சேர்ந்தான். அவனுடைய நவநாகரிகம் கொஞ்சமும் முதலியாருக்குப் பிடிக்காவிட்டாலும், அறிவுத்திறமை கண்டு வியந்து அவனை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தார், மேற்கொண்டு வியாபாரத்துறையில் பழகி வரட்டுமென்று. இங்கே பிரித்து விட்ட விதி அங்கே அவர்களைச் சேர்த்துவிட்டது' என்றாள் குப்பம்மாள்.

'இருவரும் எதார்த்த நிலையை அன்னிய நாட்டில் அல்லவா உணர்ந்துகொண்டார்கள்?' என்று சொல்லிவிட்டு விஜயசுந்தரி அன்னிய தேச யாத்திரைகளின் அவசியம் குறித்தும், நவநாகரிகக் கல்வியின் ஏற்றம் குறித்தும் ஒரு குட்டிப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டாள்.

அந்தப் பிரசங்கவெறி ஓய்ந்தபின் குப்பம்மாள் சொன்னாள், 'இருவரும் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்ததும் முதலியாரைச் சந்தித்தார்கள். டாக்டரம்மாளின் உதவியுடன் சோமசுந்தரம் சொந்த வியாபாரம் செய்யக்கூடுமென்றுதான் முதலியார் நம்பினார். அவளோ தன் அறிவுடன் இவருடைய வியாபார முயற்சிகளுக்கே தானும் உதவிசெய்ய விரும்பினாள். ஆகவே முதலியார் எங்கள் காரியாலயத்தின் மானேஜராகச் சோமசுந்தரத்தை நியமித்திருக்கிறார்.

'இந்த நவநாகரிக புருஷனையா?' என்று இருவரும் அதிசயித்தார்கள். அதற்குக் குப்பம்மாள், நவநாகரிக அமெரிக்காவிலே தனக்கு நவநாகரிகப் பித்தம் ஒருவாறு தெளிந்துவிட்டதாக இளைஞன் தெரிவித்ததாய்ச் சொன்னாள்.

'சோமசுந்தரம் மதுபானத்தோடு ஊறுகாயையும் விலக்கிவிட்டான். சுருட்டுப் பிடிப்பதையும் விரைவில் விட்டுவிடுவதாக வாக்களித்திருக்கிறான் முதலியார் "அப்படிச் செய், இப்படிச்" செய் என்று வற்புறுத்தாமலே,' என்று குப்பம்மாள் கூறி முடித்தாள்.

மதுவிலக்கைத்தான் அரசாங்கம் வற்புறுத்திவிட்டதே' என்று நொந்துகொண்டதுபோலப் பேசினாள் விஜயசுந்தரி.



# ஆயிரத்தில் ஒருவர்!

தில்லைவாசி

சரோஜினி: இதுதான் அந்த சிறுமியின் பெயர்: அவள் ஐந்து வயசுக்குழந்தை.

அவள் அம்மா சரசுவதி பிரசவத்திற்காகப் பிறந்தகம் போனாள். சரோஜினி தாயுடன் கூடத் தானும் போனாள்.

மூன்றுமாதங்களுக்குப்பிறகு அவள் தன் தாயுடனும், 'புதுத்தங்கை'யுடனும் திரும்பி வந்தாள்.

ராமநாதன் தன் மனைவியும், குழந்தைகளும் சுகமாகத் திரும்பி வந்ததற்காக எல்லையில்லா ஆனந்தத்தில் மூழ்கிப்போனார்.

இந்த மகிழ்ச்சியிலும், அவர் உள்ளத்தின் அடிப்பாகத்தில் ஒரு சொல்லொணா சோகரேகையும் படர்ந்து விரவிக்கிடந்தது.

தன் அருமைக்குமாரி சரோஜினியைக் கண்டதுமே அவர் சிந்தனை பலதிசையிலும் சிதறி ஓடிற்று.

வண்டியிலிருந்து சரோஜினி கீழே இறங்கினாள். தந்தை மகளைத் தாவித் தூக்கிக்கொண்டார்.

சரசுவதி, வந்ததும், வராததுமாக சிதறிக்கிடந்த சாமான்களை ஒழுங்குபடுத்தி, வீட்டைச் செப்பனிடத் தொடங்கினாள். சரோஜினியோ இங்கு மங்குமாக வீட்டின் பல பாகங்களுக்கும் ஓடினாள். இதெல்லாம் கொஞ்ச நேரந்தான்.

ஏதோ ஞாபகம் வந்தவள்போல் சரோஜினி "நான் பக்கத்து மாமா வீட்டுக்குப் போகிறேன். மாமாவுடன்போய் விளையாடப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அடுத்த வீட்டுப்பக்கம் ஓடினாள். ராமநாதன் அவளைத் தடுக்கவில்லை. அவர் முகந்தான் மாறுதலடைந்தது.

எப்பொழுதும் சரோஜினி பக்கத்து வீட்டுக்குப்போனால், திரும்பிவருவதற்கு குறைந்தபட்சம் ஒருமணி நேரமாவது ஆகும். இன்றோ அவள் அங்குபோய் கால்மணி நேரங்கூட ஆகவில்லை. அதற்குள்ளேயே திரும்பி விட்டாள்.

அவள் திரும்பி வந்து விட்ட தன் காரணம் ராமநாதனுக்குத் தெரிந்ததுதான். சரசுவதியும் அந்தக் காரணத்தை அவர் சொல்லித்தான் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஆவலோடு அடுத்த வீட்டிற்கு ஓடின சரோஜினி சீக்கிரத்திலேயே ஏன் அப்படி திரும்பிவந்துவிட்டாள்.? அவள் தேடிச்சென்ற மனுஷர்—அந்த உத்தமர் அங்கில்லை. இனி அங்கிருக்கவும் மாட்டார். சரோஜினி அவரைக் காணமுடியாது. கண்டு அவருடன் ஆடிப்பாடி விளையாடவும் முடியாது.

"அப்பா! பக்காத்து மாமாவைக் காணுமே! எங்கே அப்பா?" என்று செல்லமாகக் கேட்டுக்கொண்டே சரோஜினி ராமநாதன் மடியில்வந்து ஏறிக்கொண்டாள்.

சரோஜினி இப்படிக் கேட்டதும் ராமநாதன் திகைத்துப் போய்விட்டார். அவளுக்கு அவர் என்ன பதில் சொல்வார்? எந்தப் பதில் அவளைத் திருப்திப்படுத்தும்?

"பாவம்! குழந்தை ஏமாந்து போய் விட்டாள்" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டார்.

எந்த மனிதர், தன்னுடன் கொஞ்சிக்குலாவி, அன்புடன் பேசி, ஆதரவுடன் விளையாட்டுக் காண்பித்தாரோ, அவரை அவள் ஊரிலிருந்து திரும்பி வந்ததும், மறக்காமல் பார்க்கச் சென்றாள். அவரை அவளால் பார்க்க முடிந்ததா? "பிறகேனும் அவரைப் பார்க்கலாம்" என்று ஒரு நம்பிக்கை அவள் கொண்டிருந்தாலும் அது இனி முடியக்கூடிய காரியந்தானா?

அத்தகைய நம்பிக்கையை சிதறடிக்க அவர் விரும்பவில்லை. "மாமா ஊருக்குப்போயிருக்காரம்மா. திரும்பி வர கொஞ்ச நாளாகும். வந்ததும் உன்னைப் பார்க்காமல் இருக்கமாட்டார்" என்று ஒரு பதிலை அவளுக்குச் சொல்லிவைத்தார். எத்தகைய பொய்யை அவளிடம் சொல்லி வைக்கிறோம் என்பதை அவர் அறிவார். அவளுக்கு அவர் சொல்லக்கூடிய பதில் அது ஒன்றுதானே!

* * * *

ராமநாதன் ஒரு சங்கோசப் பேர்வழி. ரொம்ப சாது. நண்பர்களைச் சம்பாதித்துக் கொள்ளும் வழியே தெரியாதவர். யாரிடத்திலும் தானாகவே போய் ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டார். பஸ்ஸிலோ ரயிலிலோ உட்கார்ந்திருப்பவர். தன் பக்கத்திலும், எதிரிலும் யார் யார் இருக்கிறார்கள் என்பதைக் கூடக் கண்ணால் ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்.

எல்லோருமே ராமநாதனைப்போல் குணம் படைத்தவராகவா உலகில் இருக்கிறார்கள்? "என்ன சார், எந்த ஊருக்குப் போறீங்க? என்ன விசேஷமாய்ப் போறீங்க?" என்று யாராவது ஒருவர் கேட்ட பிறகுதான் ராமநாதனும் அவர்களுடன் கொஞ்சம் தாராளமாகப் பேசத் தொடங்குவார். பெரும்பாலும் அவர் பேசுவது அப்படிப்பட்ட ஒருவர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்வதாகவே இருக்கும். இப்படி தானாகவேவந்து தன்னுடன் சிநேகம் பிடிக்கும் அந்த 'ரயில் சிநேகிதரை' அவர் ரயிலிலிருந்து கீழே இறங்கியதும் அடியோடு மறந்துவிடுவார்.

ராமநாதன் யாருடனும் சரியாகப் பழகாமல், தான் உண்டு, தன் காரியம் உண்டு என்றிருந்ததினால், அவருக்கு யாரும் அத்தியந்த நண்பர்கள் என்று ஏற்பட்டது கிடையாது

அண்டை வீட்டில் குடி வரும் நபர்களிடமாகிலும், அவர் வலியப் போய் பேசி, சிநேகிதம் பிடித்து இருந்தாரா? அதுதான் இல்லை.

ராமநாதன் அந்த வீட்டில் குடி புகுந்து, பத்து வருஷங்களுக்கு மேலாகியிருந்தது. அந்த வீடு தெருவின் கடைசிக் கோடியிலிருந்தது. அதற்கு ஒரே ஒரு பக்கத்து வீடு தான்.

இந்தக் காலத்திற்குள், ராமநாதனின் பக்கத்து வீட்டில், எத்தனையோ பேர்கள் வந்து குடி புகுந்து, ஆறு மாதமோ, ஒரு வருஷமோ, இரண்டு வருஷமோ, வசித்துவிட்டுப் போயிருந்தார்கள். அவர்களில் யாரும் ராமநாதனை சட்டை பண்ணி பேச வராத காரணத்தினாலோ அல்லது அவர்களும் இவரைப்போலவே சங்கோசப் பேர்வழிகளாக இருந்துவிட்டார்களோ என்னவோ, அந்த அடுத்த வீட்டுக்காரர்கள் அவரிடம் நட்புக் கொள்ளவில்லை. ராமநாதன்பாட்டுக்குத் தன் வீட்டு வெளிக் குறட்டில் நின்றுகொண்டிருப்பார். அண்டை வீட்டுக்காரர்கள், அவர்கள்பாட்டுக்கு வெளியே வந்து நின்றுவிட்டு தன்னாலேயே உள்ளே போய்விடுவார்கள். யாரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் அறிமுகம் செய்துகொள்ளும் அசட்டுச் சிரிப்புக்கூடச் சிரித்துக் கொள்ள மாட்டார்கள்.

ராமநாதன்தான் இப்படி என்றால் அவர் மனைவி சரசுவதியாகிலும், பக்கத்து வீட்டுப் பெண்மணிகளுடன்

அன்று மகாலிங்கம் வீட்டில் ஒரு விசேஷம். அதற்குமுன் இரவு அவரும் ராமநாதனும் கடைக்குப்போய் வேண்டிய சாமான்களை எல்லாம் வாங்கி வந்திருந்தார்கள். அன்றிரவு அவர்கள் இருவரும் எதேதையோ பற்றி வெகுநேரம் வரை பேசிக் கொண்டிருந்தார்கள்.

மகாலிங்கம் வீட்டில் விசேஷமும் பூர்த்தியடைந்தது. மத்தியான சாப்பாடு முடிவதற்கு பகல் ஒரு மணிக்கு மேலாயிற்று. மகாலிங்கம் சாப்பிட்டு விட்டு தெருத்திண்ணையில் வந்து உட்கார்ந்தார். அவர் கையில் அன்றைய தினசரிப் பத்திரிகை இருந்தது. அதைப் பிரித்துக் கொஞ்ச நேரந்தான் படித்திருப்பார். உட்கார்ந்திருந்தவர் திண்ணையில் சாய்ந்துவிட்டார். அவர் ஹிருதயம் அப்படியே நின்றுபோய்விட்டது. ஒரு நொடிப் பொழுதில் அவர் ஆவி பிரிந்து போய்விட்டது.

மகாலிங்கத்தின் இந்த எதிர்பாராத மரணம் ராமநாதனின் மனத்தை எவ்வளவுதூரம் அழுத்தி வேதனை செய்திருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். தன்னுடைய சொந்தத் தமையன் தன்னைவிட்டுப் பிரிந்து போனதுபோல் அவர் உணர்ந்தார். அவர் கதறிக் கதறி அழுததைக் கண்டு மற்ற தெருவார்களே ஆச்சரியப்பட்டார்கள்.

மகாலிங்கத்தின் பிரிவு ராமநாதனுக்கு ஒரு பூர்த்திசெய்ய முடியாத குறையாகவே ஆகிவிட்டது.

"தன்னுடைய வாழ்க்கையில் அன்பிற்குரிய மனிதராய், அந்தரங்க நண்பராய் வந்து அமைந்து, ஏன் அவ்வளவு சீக்கிரத்திலேயே அவர் பிரிந்துபோய் விடவேண்டும்" இது ஒரு புரியாத புதிராகவேயிருந்தது ராமநாதனுக்கு.

'இதுவரை வந்துபோன அடுத்த வீட்டுக்காரர்களைப்போல் அவரும் ஒருவராக இருந்திருக்கக்கூடாதா? இதுவரையில்தான் சந்தித்தோ, சந்திக்காமலோ இருந்த எத்தனையோ பழக்கமில்லாத மனிதர்களில் அவரும் ஒருவராக இருந்திருக்கக்கூடாதா?" என்று பலவாறு நினைத்து மனதைப் போட்டுக் குழப்பிக்கொண்டார்.

"நம் வாழ்க்கையிலும் இப்படி ஒரு கட்டம் வரவேண்டுமென்று ஈச்வர சங்கல்பம் இருக்கும்போது, இதை எப்படித் தவிர்க்கமுடியும்? மகாலிங்கம் தன்னுடன் பழகிப் பிரியவேண்டியது இவ்வளவு காலந்தான் என்றிருக்கும்போது, கவலைப்பட்டுத்தான் என்ன பிரயோசனம்" என்று தன்னையே தேற்றிக்கொள்வார்.

மகாலிங்கத்துடன் பேசிப் பழகியிருந்த ஒவ்வொரு நிமிஷத்தையும், ராமநாதனால் மறக்கவே முடியவில்லை.

அவர் மனைவியும் பிரசவித்தாள். மகாலிங்கம் வாழ்த்தி அனுப்பியபடி மகனாய்ப் பிறக்கவில்லை. மற்றதும் மகளாகவே பிறந்திருந்தது. அது ஆண் குழந்தையாக இருந்தால் அதற்கு 'மகாலிங்கம் என்றே அவர் பெயர் வைத்திருப்பார்.

மூன்று மாத காலத்திற்குப் பிறகு சரசுவதி கைக்குழந்தையுடனும், சரோஜினியுடனும் வந்து சேர்ந்தாள்.

சரசுவதிக்கு, ராமநாதன் அப்பொழுது சொல்லித்தான் தெரியும். மகாலிங்கத்தின் பிரிவைப்பற்றி. அதுவும் சரோஜினி "மாமா எங்கே, அப்பா?" என்று கேட்டக் கேள்விக்குப் பிறகுதான் அவளுக்குச் சொன்னார்.

சரஸ்வதி பக்கத்து வீட்டுக்கு துக்கம் விசாரிக்க இதைக்கேள்விப்பட்ட உடனேயே தாமதிக்காமல் போனாள். சரோஜினியும் "மாமாவைப் பார்க்கப் போறேன்" என்று சொல்லிக் கொண்டே மீண்டும் தாயுடன் கூடவே போனாள்.

போனவர்கள் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு திரும்பி வந்தார்கள். அப்பொழுது சரஸ்வதி சொன்ன விஷயம் அப்படியே அவரை ஆச்சரியத்தில் மூழ்கடித்துவிட்டது. அவர் காதுகளையே அவரால் நம்ப முடியவில்லை.

அவளிடமிருந்து அவர் அறிந்து கொண்ட விஷயம் இதுதான்.

மகாலிங்கம் சாவதற்கு முன்பு ஒரு உயில் இந்தப் பக்கத்துவீட்டுக்கு வருவதற்கு முன்பே எழுதிவைத்திருந்தார். அதுவுன்கூட இந்த வீட்டிற்கு வந்த பிறகும் ஒரு உயில் எழுதியிருந்தார். இரண்டாவதாக எழுதிய உயிலில், "சரோஜினியின் கல்யாணத்தின்போது, கல்யாணச் செலவிற்காக ஆயிரம் ரூபாயை ராமநாதனுக்கு இனாமாகக் கொடுத்து உதவும்படி எழுதிவைத்திருந்தார்.

இதைக் கேட்டதும், ராமநாதனுக்கு அவர் மகாலிங்கத்திடம் கொண்டிருந்த மதிப்பு மேலும் உயர்ந்தது.

"அவரும்தான் எத்தகைய பரோபகார சிந்தனையுடையவராக இருந்திருக்கிறார்" என்ற நினைப்பிலேயே ஆழ்ந்துபோனார்.

"மனுஷர் என்றால் இப்படியல்ல இருக்கணும். நமக்கென்று அவர் என்னென்ன செய்திருக்கிறார். பார்த்தீர்களா? இப்படிப்பட்ட தங்கமான மனுஷரை நாம் பிரிந்து போய்விடுவோமா? பாவம்! சரோஜினியை நினைத்தால்தான் எனக்கு அழுகை அழுகையாக வருகிறது. அவரிடத்தில் அவளுந்தான் எவ்வளவு உயிராய் இருந்தாள்" என்று சரஸ்வதி வருத்தமாய்க் கூறிக்கொண்டதைக் கேட்டுத்தான் ராமநாதன் சிந்தனை கலைந்தது.

"மகாலிங்கம்போன்று இனி வேறு ஒரு மனிதரை என் வாழ்க்கையில் காணமுடியாது. அவர் ஆயிரத்தில் ஒருவர்" என்று ராமநாதன் கூறி முடித்தார்.

சரோஜினிக்கு இவர்கள் பேசிக் கொண்டது ஒன்றுமே விளங்கவில்லை. பக்கத்துவீட்டு மாமாவைப்பற்றித்தான் அவர்கள் பேசிக்கொள்கிறார்கள் என்பதைமட்டும் அவள் நன்குணர்ந்திருக்கமுடியும்.

அவள் 'என்ன நினைத்தாளோ? "மாமாவாத்துக்குப் போறேன்" என்று சரோஜினி கூறிக்கொண்டே மீண்டும் அடுத்தவீட்டுப்பக்கம் ஓடினாள்.

ராமநாதன் தம்பதிகள் அவளைப் பார்த்துக்கொண்டே நின்றார்கள். அவர்கள் முகத்தில் ஏமாற்றக்குறி தோன்றித் தோன்றி மறைந்து கொண்டே இருந்தது.

"அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழ்"

## "அனுபாஸதன யோகம்" திருத்தம்

மேற்படி தலைப்பில் சென்றவார இதழின் 27, 28-ம் பக்கங்களில் வெளியாகியுள்ள கட்டுரையின் கடைசி 'பாரா'வில் "...8-வது வீட்டுக் கிரகமான புதன் கன்னியில் கேந்திரமாயிருந்தால் இந்த யோகமுண்டு" என்றிருப்பதை "உச்ச கேந்திரமாயிருந்தால்" என்று திருத்தி வாசித்துக்கொள்ள வேண்டும். இதே போன்று ஏனியிலிருந்து 8-வது இடத்திலுள்ள கிரகம் லக்னத்திலிருந்து கேந்திரமென்பதை உச்ச கேந்திரமென வாசிக்கவும்.

—ப ி.



# சினிமாக் கொட்டகைகளுக்கு விமோசனம்

"வியார்"

நான் இக்கட்டுரை எழுத ஆரம்பிப்பதற்கு முன்பே நமது சென்னை சர்க்கார் இவ்வளவு நாட்கள் கழித்து "செய்யலாமா? வேண்டாமா? என்று யோசித்து யோசித்து முடிவு செய்திருக்கும் ஒரு நல்ல காரியத்தைக் குறித்து சந்தோஷப்படவேண்டியிருக்கிறது—அது தான் "கொட்டகைக்குள் புகை பிடிப்பது கூடாது" என்று கொண்டுவந்திருக்கும் சட்டம்.

நான், சினிமாவுக்குச் செல்லும் போதெல்லாம், சினிமாவைப்பற்றி விமர்சனம் செய்வதற்கு முன்பு, "நாம் பார்க்கும் நல்ல காட்சிகளைக் கூட அருவருக்கச் செய்யக்கூடிய விதத்தில் கொட்டகையில் நம்மைச் சுற்றியுள்ள ஆபாசங்களில் ஒன்றான புகை பிடிக்கும் தொல்லையை என்று ஒழிக்கப்போகிறார்கள்" என்று எண்ணுவதுண்டு. நண்பர்களிடமும் இதைப்பற்றி விவாதிப்பதுமுண்டு. சென்ற ஆண்டு பம்பாய் சர்க்கார் இதுபோல் சட்டம் கொண்டு வந்தார்கள். நம் சென்னை சர்க்கார் இது விஷயத்திலும் முந்திக் கொள்ளாவிட்டாலும் உடனே பின்பற்றவாவது செய்வார்கள் என்று எண்ணினேன். ஆனால் அன்று அவர்கள் ஆரம்பித்த சீர்க்காலோசனை சட்டமாக இத்தனை காலம் பிடித்தது.

சினிமாக் கொட்டகைக்குள் புகை பிடிப்பது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தோன்றுகிறது. காரணம் கீழ்க்கண்டவைகள்தான்:—

1. சினிமா பார்த்துக்கொண்டே புகை பிடிப்பதில் ரசிகர்களுக்கு ஒரு ஆனந்தம் 2. மறைவான இருட்டடைப்பு, ரகசியமாக புகை பிடிப்பவர்களுக்கு ஒரு சௌகரியமான இடம். 3. புகை பிடிப்பதை—வெறுப்பவர்கள் பக்கத்திலிருந்தால் அவர்களைத் திணற அடிக்கவேண்டுமென்ற ஒரே கொள்கை 4. பள்ளிச் சிறுவர்கள்-(ஆரம்ப பள்ளி சிறுவர்கள்கூட) முதல் பெரிய ஆபீஸர்கள் வரை முறையில்லாதபடி ஒரு குறிக்காக செய்யும் செய்கை இந்த 'புகை பிடிப்பு.'

கனம் ராஜாஜி அவர்கள் சென்னை பிரதம மந்திரியாயிருந்த காலத்தில் பீடி, சுருட்டு முதலிய லாகிரி வஸ்துகளுக்கு (லாகிரி வஸ்து என்று அவர் மட்டும் கருதினார்போலும்!) வரி போட்டதன் கொள்கையே அதன் அதிகரிப்பைக் குறைப்பதற்குதான். ஆனால் இன்று அதன் பலன் ஒன்றுக்கு நாலாக பெருகியதோடல்லாமல் அதன் கெடுதல் விளைவுகள் வெளியில்மட்டுமல்லாமல் சினிமாக் கொட்டகைகளுக்குள்ளும் அதிகம் பரவிவிட்டன. டாக்டர்கள் மட்டுமல்ல, அறிஞர்களும் பல பெரியோர்களும் 'சிகரெட் முதலிய உபயோகிப்பதால் மனிதன் தேக சுகம் பாதிக்கப்பட்டு சீக்கிரமே மரண வேதனையை எதிர்கொண்டழைக்கிறான்' என்று கூறுகிறார்கள். (ஆனால் அவர்களில் பலர் இன்னும் சுய காரியத்தில் இதை நிறுத்த விரும்புவதில்லை!) இம்மாதிரி ஒருவன் புகை பிடிப்பதால் சினிமா (டிராமா)க் கொட்டகைக்குள்-நான்கு புறங்களும் நன்றாக அடைக்கப்பட்ட இருட்டறைக்குள்,-அவனுக்குமட்டும் அது கெடுதல் விளைவிப்பதோடல்லாமல் உட்கார்ந்திருக்கும் பலருக்கும் அது ஹானி விளைவிக்கிறது.



கிளை மேல் ஒரு பைங்கிளி:— வாடியா மூவிடோன் 'மோனா'வில் மரத்தின் மேலேறி விஷமம் செய்யும் வசந்தி.

# இன்றைய தமிழ்ப்படங்கள்

★

"பைராகீ"

சென்ற வருஷ ஆரம்பத்தில் பத்திரிகைகளில் புது புது படங்களின் விளம்பரங்கள் நூற்றுக்கணக்கில் வெளி வந்துகொண்டிருந்தன. அப்பொழுதெல்லாம் நமக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அதாவது இவ்வளவு படங்களையும் பார்க்க நம்முடைய மணிபர்ஸ் நம்மை அனுமதிக்குமா என்றுதான்! நல்ல வேளையாக அந்தக்கவலை இப்பொழுது நீங்கிவிட்டது. அப்படி விளம்பரம் செய்யப்பட்ட படங்களில் நூற்றுக்கு இருபதுகூட வெளிவரவே இல்லை. இன்னும் சில அரைகுறையில் நிறுத்தப்பட்டு தகரடப்பாக்களில் தூங்குகின்றன. இந்த கதி ரொம்ப படங்களுக்கு ஏற்பட்டு விட்டது என்று சொல்லலாம். இவற்றிற்கெல்லாம் காரணம் நாணயத் தடைதான்!

தற்சமயம் தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட பத்து ஸ்டுடியோக்கள் இருந்தும், அவைகளை நல்ல முறையில் உபயோகித்து ஏராளமாகப் படங்களை வெளியில் கொணர்வது மிகவும் சொற்பமே.

இரண்டு காசு கையில் கிடைத்ததும், சினிமாக்கலையில் அனுபவமே இல்லாதவர்கள்கூட, ஏதாவது ஒரு படக்கம்பனியின் பெயரை வைத்துக் கொண்டு, இரண்டொரு பிரபல நட்சத்திரங்களின் பெயர்களின் பேரால், புதுப்புது படத்தின் பெயரை மூவர்ணக் கலரில் விளம்பரம் செய்யலாயினர்.

அதைப்பார்த்த நம் நோட்டுக்காரர்கள், நான், நீ யென்று போட்டிப் போட்டுக் கொண்டு, ஏகப்பட்ட பணம் அட்வான்சும் கொடுத்தும், (பஸ்ட் ரிலீசுக்கு) படம் கிடைப்பதற்காக 'கறுப்பு மார்க்கெட்' பேரமும் செய்தனர். ஆயிரக்கணக்கில் பணத்தைக் கொடுத்து விநியோகஸ்தர்களும் உரிமை பெற்றனர். இதெல்லாம் படம் எடுக்க ஆரம்பிப்பதற்கு முன்பேதான்! இந்தப்பணத்தை வைத்துக் கொண்டுதான், மேற்சொன்ன புதுக்கம்பெனிகளில் நூறு அடிகள் படம் பிடித்தனர். இந்த சமயத்தில்தான் "........வெளியிடத் தயார்" என்று பிரமாதமான விளம்பரங்கள் வெளி வரும்.

வர வர பணவரத்து குறையவே, படப்பிடிப்பு முன்னேறவில்லை. அத்துடன் கொஞ்சகாலத்திற்கு கர்சா

[தொடர்ச்சி 26-ம் பக்கம்]

சமீபத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்லி இக்கட்டுரையை முடித்துக்கொள்கிறேன். நான் சென்ற மாதம் ஒரு சினிமாவுக்குச் சென்றேன். சாய்வு பெஞ்சியில் தனியாக உட்கார்ந்திருந்தேன். பக்கத்தில் இருவர் வந்து உட்கார்ந்தனர். விளக்குகள் அணைக்கப்பட்டன. இருவரும் ஆளுக்கு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தனர், புகை, கம்பீரமாக சுழல்விட்டுக் கொண்டு மேலே கிளம்பி என்னையே மறைத்துவிட்டதென்றுகூட சொல்லலாம். நான் மூச்சை அடக்கிப் பார்த்தேன். மேல் துண்டினால் விசிறிக்கொண்டு பார்த்தேன். தாங்க முடியவில்லை. எழுந்திருந்து வேறு ஓர் இடத்தில் உட்கார்ந்தேன். இடைவேளைக்கு விளக்குகள் ஜொலித்தன. அவ்விருவரும் என்னைப் பார்த்து புன்னகை புரிந்தனர். காரணம் விளங்கவில்லை. மறுபடியும் அணைந்தன விளக்குகள். சிறிது நேரம் சினிமாத் திரையில் என் மனது ஈடுபட்டிருந்தது. ஆனால் முகத்தருகில் ஏதோ ஒரு நாற்றம் (தவறு மன்னிக்கவும்; வாசனை!) தெரிந்தது. திரும்பி உற்றுப் பார்த்தேன். பின் பெஞ்சியில் அவ்விரு நண்பர்களும்!!—இதை என்னவென்று கூறுவது?

நமது சென்னை சர்க்காருக்கு இது மட்டுமாவது, இப்போதாவது கருணை பிறந்திருக்கிறதே இவ்விஷயத்தில். அது குறித்து நாம் முதல் பாராவில் கூறியுள்ளதுபோல் சந்தோஷப்பட வேண்டியதுதான்.





சுடமுடியன் கைத்துப்பாக்கியும் நான்கு கைப் பூமாலையைப் போலவே ஒழுங்காக உபயோகப்படுமென்பதை நவஜீவனத்தில் டி. ஆர். ராமச்சந்திரன் ருசுப்படுத்துகிறார்.

# இன்றைய தமிழ்ப் படங்கள்

[ 24-ம் பக்கத் தொடர்ச்சி ]

பிலிம் தடையும் ஏற்பட்டது. பிறகு படத் தயாரிப்பு சமாப்தி அடையலாயிற்று. இந்த நிலைமையைத்தான், சில படங்கள் அரை குறையாக தகர டப்பாக்களில் தூங்குவதாகக் கூறினேன்.

இந்த அரை குறை படத்திலேயே, படம் யாருக்குச் சொந்தம் என்று தகராறு ஏற்பட்டு, கோர்ட்டிலும் கேஸ்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

வரவர தியேட்டர்காரர்கள் விஷயம் தெரிந்துகொள்ள ஆரம்பித்தனர். இப்பொழுதெல்லாம் அவர்கள் முன்போல், பணம் அட்வான்ஸ் செய்வதில்லை. படம் முடிந்து Pre-Viewக்கு வந்து அதைப்பார்த்து படத்தின் திறத்தை நன்கு அறிந்துகொண்டு பிறகுதான் படத்தை எடுத்துக்கொள்கிறார்கள். அதனால்தான் வெகு படங்கள் முக்கிய பெரிய நகரங்களில் முதலில் திரையிடப்படாமல், சிறிய ஊர்களிலெல்லாம் முதல் முதலில் திரையிடப்படுகின்றன! தமிழ்ப்படங்களில் சில, முதன் முதலாக ஆந்திர நாட்டில் திரையிடப்படுவதின் மர்மம் இதுதான்! நம் ஊரில் முதலில் அந்தப்படங்கள் வராமலிருப்பது ஒரு விதத்தில் நமக்குச் சந்தோஷந்தான். மற்ற இடத்தில் படம் ஓடுவதைப் பார்த்து; அதன் தராதரத்தை அறிந்துகொண்டு பிறகு நாம் செல்லலாம் அல்லவா?

தமிழ் படங்களைவிட, ஹிந்திப் படங்களுக்கு நம் நாட்டில் நல்ல ஆதரவு இருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

தமிழ் படங்களிலோ, ஆபாசக் காட்சிகளும், நடைமுறைக்கு ஒவ்வாத, மாறுபட்ட செய்கைகளும், அதிகம் புகுத்தப்படுகின்றன. அதுதான் தமிழ் படங்களின் 'ஹாஸ்யம்' என்று சொல்லப்படுகிறது!

எழுத்து வாசனையோ, படிப்பு வாசனையோ, அறியாதவர்களின் மனதில்கூட, எப்படி சினிமாப் பாட்டுகள் மிக எளிதில் மனதில் பதிந்துவிடுகிறதோ, அதே போல்தான். மேற் சொன்ன அசம்பாவித காட்சிகளும் நம் மனதை விட்டு அகலுவதில்லை. நல்ல காட்சிகளோ செய்கைகளோ ஞாபகத்துக்கே வராது. ஆனால், பெண்டாட்டி, புருஷனை ஏசுவதும் திட்டுவதும், புருஷன் அடுப்பங்கரையில் சமைப்பது: அவள் வெளியே ஊர் சுற்றிவிட்டு வந்து புருஷனை அதிகாரம் செய்வது, இந்தக் காட்சிகள் நம் மனதில் நன்றாகப் படிந்துவிடுகின்றன. இதைத்தான் 'ஹாஸ்யம்' என்று சொல்லி நம் தமிழ் படங்களில் காண்பித்து வருகின்றனர்.

குல்லாய்க்கு ஏற்றதலையைக் கண்டு பிடிப்பதுபோல், அகப்பட்ட நடிகர் நடிகைகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, பிறகு என்ன படம் பிடிக்கலாம் என்று கதைகளைத் தேட ஆரம்பிக்கின்றனர். கதைக்குத் தகுந்த பாத்திரங்கள் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் 'மேக்கப்' மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டாப் போலத்தான் இருக்கும். 40 வயதுடைய நடிகையும், 25 வயதுடைய நடிகரும், கணவன் மனைவி போல் அநேக படங்களில் இன்னும் காட்சியளிக்கின்றனர்.

படத்தின் நீளம் 18,000 அடி என்றால் 'ஹாஸ்யம்' என்று சொல்லப்படும் குட்டிக்கதை 5,000 அடிக்கு மேல் சேர்க்கப்படுகிறது. கதைக்கும் ஹாஸ்யத்துக்கும் சம்பந்தமே இருக்காது. எப்படியாவது ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுவிடும். ஹாஸ்யம் என்றால் எப்படி? புருஷன் காதைப்பிடித்து பெண்டாட்டி இழுப்பது! இன்னும் என்னென்ன ஆபாசம் வேண்டுமோ அவ்வளவும் இருக்கும்.

இந்த ஆபாசக் குட்டிக் கதைகள் இராவிட்டால் படம் எடுபடாதென நினைக்கின்றனர் பட முதலாளிகள். படம் பிடித்து கொஞ்ச நாள் ஓடிய பிறகும்கூட, குட்டிக்கதையை அநேக படங்களில் சேர்த்து இருக்கின்றனர். இந்தக்குட்டி ஹாஸ்யங்கள் இல்லாமலேயே எத்தனையோ ஹிந்திப் படங்கள் மேன்மையாக விளங்கவில்லையா?

தமிழ் படங்களுக்கும் ஹிந்தி படங்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். ஹிந்தி படங்களில் தனியாக ஹாஸ்ய பாகம் விளங்காது. கதையுடன் சேர்ந்தே கோர்வையாக இருக்கும்.

சில வருஷங்களுக்கு முன்பு, தமிழ் படங்களில் நடிகைகளுக்கு ஆண் வேடம் தரிப்பது ஒரு 'மவுசாக' இருந்து வந்தது! பழய படங்களிலெல்லாம் நாரதர் பஞ்சகச்சம்கட்டிக் கொண்டு காட்சியளித்து வந்தார். ஆனால் நடிகைகள் நாரதர் வேஷத்தில் அவ்விதம் காட்சியளிக்க முடியவில்லை. காரணம் ஸ்திரீகள், மேல் வஸ்திரம் இல்லாமல்-பஞ்சகச்சத்தில் தோன்ற முடியுமா? அதனால்தான் நாரதர் கவுன் வேஷம் தரிக்கவேண்டியதாயிற்று! ஏன்? அந்த வேஷத்துக்கு வேறு பொருத்தமான ஆண் நடிகர்கள் கிடைக்கவில்லையா? அந்த ஆண் வேடம் எவ்வளவு ஆபாசமாயிருந்ததென்றும் டைரக்டர்களுக்குத் தெரியாதா? குரலை உத்தேசித்து விகாரத் தோற்றத்தில் படம் எடுப்பதா? அவர்கள் குரலைக்கொண்டு, படத்தை ஒரு Box Office ஆக ஆக்கிவிடலாமென்றால், உட்கார வைத்து இரண்டு பாட்டுக்கள் பாடச் செய்வதுதானே?

ஏதோ ஒரு படத்தில், ஒரு தமாஷ் கட்டம் வருகிறது. சமையற்காரன் அடுப்பங்கரையில், தன் காதலியுடன் விளையாடும் தோரணையில், காய்கறிகளையெல்லாம் மற்றொரு புறத்துக்கு வீசியெறிகிறான். கடைசியில், தான் சமயல் செய்ததையும் எறிகிறான். என்ன ஆச்சரியம்! விட்டெறிந்த சாமான்கள் எல்லாம் உடனுக்குடனே அவனை நோக்கியே திரும்பி வந்துவிடுகின்றன. ஹாஸ்யத்தின் கற்பனை எவ்வளவு தூரம் இருக்கிறது பார்த்தீர்களா? இதெல்லாம் சாதாரண வாழ்க்கையில் நடக்கக்கூடியதா? எவ்வளவு பெரிய பணக்காரர்களாய் இருப்பினும், அவர்கள் வீட்டு சமையற்காரன் இது மாதிரி செய்ய முற்படுவானா? இதுதான் ஹாஸ்யம்!

மற்றொரு படத்தில் ஒருவன் தன் தொந்தியின்மேலுள்ள அழுக்கைத் திரட்டிக் கொடுக்கிறான். அதுதான் கர்ப்பம் தரிப்பதற்கு மருந்து என்று!

30, 35 வயதுள்ள மகனை, தன் தாயார் கழியால் அடிப்பதுபோல் காண்பிக்கப்படுகிறது. அவ்வளவு வயதுள்ள மகனை எந்த தாயார்தான், தடிகொண்டு அடிக்க முற்படுவாள்? வாழ்க்கையில் இது நடக்கக்கூடியதாவென்று, டைரக்டர் சற்றும் யோசிப்பதாகத் தெரியவில்லை.

இந்தக்காட்சிகளை எல்லாம், ஹாஸ்யம் என்று நமக்குக் காண்பிக்கிறார்கள்.

குளத்திலோ ஆற்றிலோ குளிப்பதாகக் காண்பிக்கப்படும் நடிகையின் நெற்றிக்குங்குமம் தண்ணீரில் பட்டுக்கூட அழிவதில்லை. அவள் பதிவிரதைபோலும்!

ஹிந்திப்படங்களில் 'மும்தாஸ் அலி'யும், ஆங்கிலப் படங்களில் 'லாரல், ஹார்டி'யும் ஹாஸ்யத்துக்குப் பெயர்போனவர்கள். அவர்களது ஹாஸ்ய நடிப்பும் மிகவும் மேன்மையாகத்தானிருக்கிறது.

இவ்விதம் தமிழ் படங்களைப்பற்றி இன்னும் பக்கம் பக்கமாக எழுதலாம்; என்ன பயன்? தமிழ் படங்கள் நாளுக்குநாள் மோசமடைந்து வருகின்றனவேயொழிய முன்னுக்கு வருவதாகக் கொஞ்சம்கூட அறிகுறிகள் தென்படவில்லை. நாமும் காசைக் கொடுத்து, இந்த ஆபாசங்களைப் பார்த்துவிட்டு ஆனந்திக்கிறோம்.

நல்ல படங்களைத் தவிர மற்றவைகளைப்பார்ப்பதில்லை என்று ரசிகர்கள் ஒரு விரதம் பூண்டாலொழிய, இன்னும் ஏழேழு ஜென்மத்துக்கும், தமிழ் படங்கள் சீர்திருந்துவதை நாம் எதிர்பார்க்கமுடியாது.





# சந்திப்பு

ஹரிஹரன்

## 'காணோம்'

★

ரங்கராஜன் ராமஸ்வாமியின் புதல்வன் வயது 23. உயரம் 5 அடி 6 அங். வலது தாடையில் சிறு மச்சம். சிவப்பு நிறம். கம்பீரமான தோற்றம் கிராப்புத்தலை. கழுத்தில் செயின். சில்க் ஜிப்பா அணிந்திருப்பான். 1946ளு நவம்பர்மீ 6௳ புதன்கிழமை இரவு 7-30 மணி சுமாருக்கு தனது ஜாகையாகிய சென்னை 127, பஞ்சாட்சர முதலித் தெருவிலிருந்து புறப்பட்டுச் சென்றவன் இன்னும் வீடு வந்து சேரவில்லை. இருக்குமிடத்தைத் தெரிவிப்பவர்களுக்கு மேற்படியாருடைய சகோதரர் 127, பஞ்சாட்சர முதலித் தெருவிலுள்ள கோபாலகிருஷ்ணனால் 300 ரூபாய் வெகுமதி அளிக்கப்படும்.

அன்புள்ள ரங்கராஜு,

உன் மனைவி, தாயார், தகப்பனார், சகோதரர்கள், சகோதரி சாந்தா எல்லோரும் கதறிக்கொண்டிருக்கிறார்கள். தாயார் அன்ன ஆகாரமில்லாமல் துரும்பாய் இளைத்துவிட்டிருக்கிறாள். இன்னும் கொஞ்ச நாளானால் அவளுடைய நிலைமை கேவலமாகிவிடும் போலிருக்கிறது. உன் மனதில் எந்தக்குறை இருந்தாலும் இருக்கட்டும். சீக்கிரத்தில் வீட்டுக்கு திரும்பிவிடு. உன் பிரிவை எங்களால் அடியோடுதான் முடியவில்லை குறிப்பாக உன் மனைவியின் கஷ்டத்தைக் கண்டு எங்களால் சகிக்க முடியவில்லை அவளுக்காகவாவது வந்துவிடும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

உன் வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கும்,

உன் அன்புள்ள சகோதரன்,

கோபாலகிருஷ்ணன்.



ரங்கராஜன்.........பத்திரிகையைப் பிரித்தவுடனே கொட்டை எழுத்துக்களில் வெளியாகியிருந்த மேற்சொல்லிய விளம்பரத்தைப் படித்தான்.

'வீட்டுக்கா திரும்பி வரவேண்டும்? ஹூம். இந்த ஜன்மத்தில் இல்லை. அப்புறம் என்னவோ பார்த்துக்கொள்ளலாம். மனைவியின் கஷ்டத்தைக் கண்டு சகிக்கமுடியவில்லை! ஹூம். அன்று என்ன சொன்னாள்?' கோகிலாவுடன் 'உறவு' வைத்துக்கொள்வதானால் இந்த வீட்டு வழி திரும்பவேண்டாம். அவளுடனேயே இருந்துவிடுங்கள். பிழைக்க முடியுமானால் பார்க்கிறேன். இல்லையானால் செத்து மடிகிறேன். இந்த ஒரு குழந்தை! பிச்சை யெடுத்துக் காப்பாற்றுகிறேன்.' என்று வீராப்புப் பேசினதெல்லாம் இப்பொழுது எங்கே போயிற்று! பிறந்தகத்து மாமாவுடன் சொல்லி என்னிடமிருந்து கோகிலாவைப் பிரித்து வைக்க முயன்று எனக்குக் கெட்ட பெயரை உண்டாக்கிய துரோகி பிச்சையாவது எடுக்கட்டும் செத்தாவது மடியட்டும். அந்த வீட்டு வழி இனி நான் திரும்புவதில்லை. அந்தச்

சண்டாளியின் முகத்தில் விழிப்ப தில்லை' என்று முணுமுணுத்துக் கொண்டே பத்திரிகையை விசி எறிந்தான் ரங்கராஜன்.

ரங்கராஜன் நல்ல குடும்பத்தில் பிறந்தவன். சகவாஸதோஷத்தினால் துர்நடத்தைகளில் ஈடுபட ஆரம்பித்துவிட்டான். அவன் இருந்த தெருவில் கோகிலா என்றொரு பெண் இருந்தாள். அவளுடைய கணவன் ராணுவத்தில் சேர்ந்து எகூரிலோ, அஸ்ஸாமிலோ இருந்தான். கோகிலா நல்ல அழகாக இருப்பாள். எப்படியோ அவளுக்கும் ரங்கராஜனுக்கும் 'ஸ்நேகம்' ஏற்பட்டுவிட்டது.

முதலில் காதோடு காதுவைத்த மாதிரி ரகசியமாக இருந்த விஷயம் கொஞ்சம் கொஞ்சமாக' பகிரங்கத்துக்கு வர ஆரம்பித்துவிட்டது எங்கு சென்றாலும் கோகிலா—ரங்கராஜன் பேச்சுதான். வம்பளப்பு காது கொண்டு கேட்க முடியவில்லை. ரங்கராஜன் மனைவி ரங்கநாயகிக்கு அவமானம்தாங்க முடியவில்லை. ரங்கராஜனிடம் நயமாகச்சொல்லி பார்த்தாள். பயமுறுத்திப் பார்த்தாள். அவன் காது கொடுத்தே கேட்கவில்லை. ரங்கநாயகிக்குத் தன் கணவன் கெட்டழிந்து விடுகிறானே என்ற விசாரம் கூட இல்லை. பாவம்! ஒரு பெண்ணின் வாழ்க்கை அநியாயமாய்க் கெட்டுவிடுகிறதே என்ற விசாரந்தான். உடனே தன் பிறந்தகத்து மாமாவுக்குக் கடிதம் எழுதி வரவழைத்தாள். அவருக்கும் கோகிலாவின் மாமனாருக்கும் ரொம்ப ஸ்நேகம். ஆகையால் கோகிலாவை அவளுடைய மாமனார்வீட்டில் கொண்டு விட ஏற்பாடு செய்துவிட்டாள். இதிலிருந்துதான் ரங்கராஜனுக்கு அவன் மனைவியிடம் துவேஷம் அதிகரிக்க ஆரம்பித்தது.

இதன் மத்தியில் ரங்கராஜனும் கோகிலாவும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். 'இருவரும் வீட்டை விட்டுக் கிளம்பிவிட வேண்டியது. பெங்களூருக்குச் செல்லவேண்டியது எங்காவது ஒரு பெரிய ஹோட்டலில் ரூம் வைத்துக்கொண்டு காலத்தைப் போக்க வேண்டியது. கோகிலா இதற்குச் சம்மதித்துவிட்டாள்.

அவ்வளவுதான். திடீரென்று ஒருநாள் இருவரும் வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டார்கள். பெங்களூருக்குச் சென்றார்கள். சென்ற ஒரு வாரத்துக்கெல்லாம் கோகிலா காலராவுக்குப் பலியானாள்.

ரங்கராஜன் மறுபடி வீட்டுக்குத் திரும்ப மனமில்லாதவனாய் அங்கேயே தங்கிவிட்டான். இந்த சமயத்தில்தான் ஒரு நாள் காலை ரங்கராஜன் ஹோட்டலில் தனது ரூமில்... பத்திரிகையில் மேற்சொல்லிய விளம்பரத்தைப் படித்தான்.

இந்த இரண்டு வருஷ காலத்தில் ரங்கநாயகி பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. பக்கத்தில் ஒரகத்திகள் செய்த உதாசீனத்தையும் அண்டை வீட்டிலும் எதிர் வீட்டிலும் பேசிய பேச்சையும் அவளால் சகிக்க முடியவில்லை. பிறந்தகம் போகவேண்டாமென்று மனதை எவ்வளவோ கட்டுப்படுத்திப் பார்த்தாள். நிலைமை சகிக்கமுடியாமல் போகவே பிறந்தகம் சென்றுவிட்டாள்.

ராமேச்வரம் போனாலும் சனீச்வரன் விடாது என்பார்களே, அந்த மாதிரி ரங்கநாயகியின் கஷ்டகாலம் அவளைக்கூடவே தொடர்ந்து வந்தது. திடீரென்று தாயார் தகப்பனார் ஒருவர் பின்னொருவராய் பரலோகம் சென்றுவிட்டார்கள். ஒரே சகோதரன். அவனைக் கல்கத்தாவுக்கு மாற்றிவிட்டார்கள். பிறந்தகத்துச் சொத்தும் கடனில் போய்விட்டது.

ரங்கநாயகி அநாதையாய் நின்றுவிட்டாள். தன் நெஞ்சுமட்டுமல்லாமல் மூன்று வயதில் ஒரு பெண் குழந்தை! எங்காவது பங்களாக்களில் சென்று சுற்று வேலை செய்து ஜீவனம் செய்யலாமென்று யோசித்தாள். அவளுடைய பால்யவயதை உத்தேசித்து ரொம்ப பேர் வேலைக்கு வைத்துக் கொள்ளச் சம்மதிக்கவில்லை. ஒன்றிரண்டுபேர் வேலைக்கு வைத்துக் கொண்டார்கள். பல இடங்களில் வம்பளப்புகள் கிளம்ப ஆரம்பித்தன. உடனே வேலையிலிருந்தும் நீக்கிவிட்டார்கள். ரங்கநாயகிக்கு இன்னது செய்வதென்றே புரியவில்லை. ஒன்று குழந்தையையும் கொன்றுவிட்டுத் தானும் செத்து மடியவேண்டும், அல்லது இழிதொழிலில் ஈடுபட வேண்டும். இவ்விரண்டில் எதைச் செய்வதென்று அவளுடைய மனது வெகுநேரம் போராடியது. கடைசியில் மனதைக் கல்லாக்கிக்கொண்டு ஒருவிதமான முடிவுக்கு வந்துவிட்டாள்.

ரங்கராஜன் பத்திரிகையை விசிறிவிட்டுச் சிறிது நேரம் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருந்தான்.

அப்பொழுதுதான், ரங்கராஜன்! என்ன ஏதோ ஆழ்ந்த யோசனைபோலிருக்கிறது! எந்த கோட்டையைப் பிடிப்பதாக யோசனை என்று சொல்லிக்கொண்டே அவனுடைய நண்பன் கிருஷ்ணகாந்தன் அங்கே வந்துசேர்ந்தான்.

'யோசனை என்ன இருக்கிறது! ஒன்றுமில்லை. நீ வரக்காணோமே என்றுதான் யோசித்துக் கொண்டிருந்தேன்' என்றான் ரங்கராஜன்.

'அதெல்லாம் கிடக்கட்டுமடா, ஒரு சந்தோஷச் செய்தி உனக்கு.'

'என்னடா திடீரென்று அப்படிப்பட்ட சந்தோஷச் செய்தி?'

'கிளி என்றால் கிளி! பச்சைக்கிளி மரகதக் கிளி, கன்னத்தைக் கிள்ளிப் பிடித்துக் கொஞ்சும் கிளி. பஞ்சவர்ணக்கிளி.'







[illegible] சேர்ந்தவர்கள் இந்தியாவுடனேயே இணைந்திருக்க விரும்புவதாக சில தினங்களுக்கு முன்பு பண்டித நேருவைக் கண்டு பேசியபோது தெரிவித்தனர். அந்நாட்டு கோஷ்டியினர் உள்ளனர்.

"என்னப்பா! காலை வேளையில் கவிதாப்பிரவாகம் கட்டுக்கடங்காமல் ஓடுகிறது!

கவிதாப் பிரவாகமாவது, நீ நேரில் பார்த்திருந்தால் அப்படியே மதி மயங்கிக் கல்லாய்ச் சமைந்திருப்பாய்.

'என்ன சமாசாரம்? வளர்த்தாமல் சொல்லு.'

'...ஹோட்டலுக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு அழகான பெண் ணும் வந்திருக்கிறாள். அழகானது அழகு. சொல்லியே முடியாது. மைனர்களின் கூட்டம் பிரமாதப்படுகிறது... ஹோட்டல் முதலாளி அவளை வசியப்படுத்தித் தனது ஹோட்டலிலேயே வைத்துக் கொள்ளப் பார்ப்பதாகக் கேள்விப்பட்டேன். உன்னிடம் தெரிவிக்கலாமென்று வந்தேன்' என்றான் கிருஷ்ணகாந்தன்.

'தெரிவிப்பது ஒருதரம், அப்புறம் அழைத்துக்கொண்டு வருவது ஒருதரமா? கூடவே ஒரு டாக்ஸியில் அழைத்துக்கொண்டு வந்துவிடக் கூடாதோ? போ சீக்கிரம். ஒரு டாக்ஸியில் அழைத்துக்கொண்டு வந்து சேர். பணத்தைப்பற்றி அக்கறை இல்லை' என்றான் ரங்கராஜன்.

கிருஷ்ணகாந்தன் அவ்விடத்தை விட்டகன்றான்.

அரை மணிக்கெல்லாம்...ஹோட்டல் வாசலில் ஒரு டாக்ஸி வந்து நின்றது. கிருஷ்ணகாந்தனும் அந்த 'பச்சைப் பசுங்கிளியும்' ரங்கராஜன் ரூமுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

இவர்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு ரங்கராஜன் ரூம் வாசலில் நின்றுகொண்டிருந்தான். அந்த மரகதக்கிளியைப் பார்த்ததுதான் தாமதம். ரங்கராஜன் அப்படியே திக்பிரமை பிடித்து நின்றுவிட்டான். முகத்தில் பிரேதக்களை சொட்டியது. கிருஷ்ணகாந்தன் காரணம் தெரியாமல் விழித்தான்.

பாவம்! அவனுக்கு எப்படித் தெரியும் காரணம்! அங்கே வந்திருக்கும் 'மரகதக்கிளி' ரங்கநாயகியல்லவா?

'வர வரப் பெண்கள் உலகம் எப்படித்தான் சீரழிந்துவிட்டது பார்த்தீர்களா?' என்கிறது ஒரு குரல்.

'அநாதையாக நடுத்தெருவில் விட்டு விட்டு வேறு மாதர்களை 'இழுத்துச்' செல்லும் ஆண்கள் நிறைந்துவரும் உலகில் இவ்வளவுதானா எதிர்பார்க்கலாம் இன்னும் எவ்வளவோ எதிர்பார்க்கவேண்டுமே' என்று பதிலைச் சொல்லவா மாட்டாதா என்று யோசித்துக்கொண்டிருக்கிறது ஒரு சாது பிரகிருதி.

# தர்ம சங்கடம்!

தான் மனப்பூர்வமாக விரும்பி மணந்த காதலியிடம் கொண்டுள்ள எல்லையற்ற அன்புமிகுதியினால் தலைமகன் "உன்னை இனி ஒருக்கணமும் பிரிந்திருக்கமாட்டேன். இது பற்றி நீ எள்ளளவும் சந்தேகப்பட வேண்டாம்" என்று தன் இல்லக்கிழத்தியிடம் உறுதி, கூறுகிறான். இத்தகைய உறுதி தலைவியின் மனத்திடை எல்லையில்லாத மகிழ்ச்சியை விளைவிக்கிறது. தன்னிடம் தன் நாயகனுக்குள்ள பிரேமையை எண்ணும்போது அவளது உடலும் உள்ளமும் பெருமிதத்தால் ஒருங்கே பூரித்துப் போகின்றன. ஆனால் இது எப்போதுமே சாத்தியமாயிருக்கக்கூடிய காரியந்தானா? இல்லை. புதுமணம் முடித்த காலத்திலே தலைவன் தன் மனையாளுடன் இல்லறத்தில் ஈடுபட்டு, எப்போதும் அவள் அண்மையிலேயே யிருந்துவருகிறான். இல்லறத்தைச் செவ்வனே நடத்தி அதை நல்லறமாக்கவேண்டுமல்லவா? அதற்காகப் பொருளீட்ட தலைவன் வெளியேபோய் தீரவேண்டியிருக்கிறது. தலைவியிடம் சொல்லிக்கொண்டு புறப்படுவோமென்றால் அவள் தன்னுடைய பிரிவுக்காக வருந்தி துயர்ப்படுவாள். இதைச் சமாளிக்க வழியென்ன? அவனுக்கு இந்த நிலைமை மிகவும் தர்மசங்கடமாகிவிடுகிறது. மெதுவாக தலைவியிடமிருந்து பிரிந்து வாயிற்புறம் வருகிறான். அங்கு தலைவியின்




அறைக்குப் பக்கத்திலே தோழி நின்றுகொண்டிருப்பதைக் கண்டவுடன் அவளிடம் சென்று தான் வெளியே போய் பொருள் தேடிக்கொண்டு விரைவில் வந்துவிடுவதாகச் சொல்லி தலைவியைச் சமாதானப்படுத்தும்படி கூறுகிறான். "இது மிகவும் சிரமமான காரியம். என் தலைவி உம்மை அரைக்கணங்கூடப் பிரிந்து வாழமாட்டாள். ஆகவே தாங்கள் பிரிந்துபோய் விரைந்து வருவதாகச் சொல்கிறீர்கள். இதை ஏன் சொல்லுகிறீர்கள்? இங்கேயே இருப்பதானால் மட்டும் சொல்லுங்கள். இதில்லாமல் போய்த் திரும்புவதாகச் சொல்வதானால் தாங்கள் திரும்பும்போது உயிர் வாழ்பவர்களிடமே அதைத் தெரிவியுங்கள்' என்று தோழி பதில் சொல்கிறாள். அதாவது 'போகிறேன்' என்றால் "தலைவியின் உயிரும் போய்விடும்" என்பதை அவள் உணர்த்துகிறாள். இக்கருத்தை நன்கு விளக்கமாகக்கொண்டுள்ள குறள்:—

"செல்லாமை யுண்டேல்
எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்குரை".



படத்திலே தோன்றுவது கொழுக்கட்டையல்ல! கோழிமுட்டையுமன்று! ஆனால் முட்டை பரிமாணத்துக்குச் சமீபத்தில் அமாரில்லோ (யு. எஸ்.) என்ற இடத்தில் சென்ற மாதம் 15-ந் தேதி ஆலங்கட்டி மழை பெய்தது. இதனால் நால்வர் உயிரிழந்தனர். அநேகருக்குக் காயம்.





# யோக க்ஷேமம்

தங்கம்மா

## 2

'கோபாலனடா! எப்பொழுதடா வந்தாய் ஊரிலிருந்து? வா உட்காரு' என்று தன் சகோதரனின் மூத்த பிள்ளையை வரவேற்றாள் சேஷிப்பாட்டி.

'ராத்திரி வந்தேன் அத்தை. மாம்பலத்துக்கு ராஜத்தின் (சகோதரி) அகத்துக்கு வந்தேன். நாழிகையாகி விட்டது. அங்கேயே இருந்துவிட்டேன்' என்றான் கோபாலன்.

'கடைசியில் சுந்தரம் (கோபாலனின் இளைய சகோதரன்) அவனுடைய பிடிவாதத்தை நிறைவேற்றி விட்டான்.'

'என்ன பிடிவாதம் அத்தை! அசட்டுப் பிடிவாதம்!'

'என்னடா அது அப்படிச் சொல்லிவிட்டாய்? பாட்டு வேணும், கூத்து வேணும், படிப்பு வேணும், அழகு வேணும் என்று ஒரே பிடிவாதமாய் வந்த வரன்களையெல்லாம் தள்ளிவிட்டான். அந்த லப் ஜட்ஜ் பாவம், தன் பெண்ணை இவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஒற்றைக் காலால் நின்றார். கிளி என்றால் கிளி மாதிரி இருந்தது பெண். அதன் மந்தைச் சொல்லியோ முடியாது என்றார்கள். குரல் இல்லை என்று அதை, வேண்டாம் என்று சொல்லிவிட்டான். தாசில்தார் பெண்ணைத்தான் படிப்பு போதாதென்று சொல்லிவிட்டான். அந்த வக்கீல் பெண்ணுக்குத்தான் என்ன? அவன் எதிர்பார்த்த படிப்பு, பாட்டு, கூத்து, அழகு எல்லாம் இருந்தது. ரொம்ப லக்ஷணமாக நமக்கு அடங்கின 'சரக்காக' இருக்கும்போலிருக்கிறது இது முடிந்தால் சுந்தரம் அதிர்ஷ்டசாலிதான் என்று எல்லோரும் எண்ணி மனப்பால் குடித்துக் கொண்டிருந்தோம். 'அதுக்கு 'டக்'காகவே நடக்கத்தெரியவில்லை. தலையைக் குனிந்துகொண்டு கால் கட்டை விரலைப் பார்த்துக்கொண்டு நடக்கிறது. கட்டுப்பெட்டி' என்று அதை வேண்டாமென்று சொல்லி விட்டான்.

குணம்தானடா முக்கியம். அதற்குப்பிறகுதான் அழகு, பாட்டு, கூத்தெல்லாம்' என்று கிளிப்பிள்ளைக்குச் சொல்கிறமாதிரி சொன்னேனும், கேட்கவில்லை. சரி இவன் எதிர் பார்ப்பதெல்லாம் ஒரே இடத்தில் ஒரு நாளும் அமைந்திருக்கப் போகிறதில்லை. கடைசியில் இவன் பிரம்மசாரியாகத்தான் நின்றுவிடப் போகிறான் என்று எண்ணிக்கொண்டிருந்ததற்கு அவன் பிடிவாதம் நிறைவேறிவிட்டதோ லியோ? பெண் ரதி மாதிரி இருக்கிறது. கச்சேரி, ரேடியோவில் எல்லாம் பாடுகிறது. குயில் மாதிரி இருக்கிறது குரல். பி. ஏ. படித்திருக்கிறது, பரதநாட்டியம் நன்றாகத்தெரியும். அவன் எதிர் பார்த்தது நிறைவேறிவிட்டது.

'என்ன, பரிகாசம் பண்ணுகிறாயா அத்தை?'

'பரிகாசமென்னடா? கலியாணத்துக்கு எனக்கு வர ஒழியவில்லை. ராமு (பாட்டியின் பேரன்) சொன்னான். நிஜந்தானுக்கும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். ஏன்? அவன் சொன்னது தப்பா?

'தப்பு ஒன்றுமில்லை...' என்று இழுத்தான் கோபாலன்.

'ஏன், என்ன இழுக்கிறாய்?' என்று கேட்டாள் பாட்டி.

'ராமு சொன்னதெல்லாம் சரிதான். அது நமக்கு ஒட்டினால்தானே?

'அப்படி என்றாய்?'

'அது சினிமாவில்சேர்ந்துவிட்டது?

'என்னது? சினிமாவில் சேர்ந்துவிட்டதா? அதென்னடா அது?' என்று அதிசயத்துடன் முகவாய்க்கட்டையில் விரலை வைத்தாள் பாட்டி.

'சினிமாவில்தான் சேர்ந்துவிட்டது அத்தை! அதெல்லாம் குடித்தனத்துக்கு லாயக்கப்பட்டுவருமா என்ன? சமையலறைப் பக்கமே இன்னதென்று தெரியாது. ஷோக்காக டிரெஸ் செய்துகொண்டு 'வெளி பிரவர்த்தகம்' செய்துகொண்டிருப்பதற்குத்தான் அதெல்லாம் லாயக்கு.'

'எல்லாம் கிடக்க திடுதிப்பென்று சினிமாவில் சேருவானேன்?

'சினிமா என்பதென்ன அத்தை? 'மேலே பெரியவர்களுக்கு அடங்கி இருக்கவேண்டும். மனம் போனபடியெல்லாம் போகக்கூடாது. மானம்தான் பெரிது. குடும்ப கௌரவத்துக்கு நம்மால் ஹானி ஏற்படக் கூடாது' என்ற விசால புத்தி இல்லாவிட்டால் சினிமா என்பதென்ன? மனம் போனபடி போய்க்கொண்டிருக்கவேண்டியதுதான். "அது சரி சினிமாவில் சேருவானேன்?

'தியாகையர் உத்ஸவத்தின்போது இவள் கச்சேரி செய்துகொண்டிருந்தாள். ஒரு சினிமா முதலாளி அந்தக் கச்சேரிக்கு வந்திருந்தார். இவள் முகவெட்டையும் சாரீர சுகத்தையும் கண்டு பிரமித்துப்போய்விட்டாராம். தன்னுடைய ஸ்டுடியோவில் சேருவதானால் இவளுக்கு முக்ய 'பார்ட்' கொடுத்து, வெகு சீக்கிரத்தில் இவளை ஒரு பிரபல சினிமா 'ஸ்டாரா'க விளங்கச் செய்வதாகச் சொன்னாராம். அவ்வளவுதான். உடனே சம்மதம் தெரிவித்துவிட்டு, மறுநாளே அதில் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

'பணமில்லையா? அகமுடையான் ஐந்நூறு ரூபாய் சம்பாதிக்கிறான். நல்லரஸிகன். கர்வமில்லை. முற்போக்கோ. முன்னேற்றமோ என்னமோ சொல்கிறீர்களே, அதில் ரொம்ப சிரத்தை உள்ளவன். கடல் மாதிரி வீடு. இத்தனைக்கும் சிங்காரம் (கோபாலனின் தாயார்) 'தங்கமான மனுஷி. மாமியார் அதிகாரத்தையெல்லாம் காட்டாமல் தன்னுடைய சொந்தப் பெண் மாதிரி வைத்துக் கொண்டிருப்பாள். இதையெல்லாம் விட்டுவிட்டு சினிமாவில் சேர்ந்து 'பேர்' எடுத்து அவளுக்கு என்னடா ஆகவேண்டும்?'

'இந்தக்காலத்துப் பசங்கள் செய்கிற காரியங்களுக்குக் காரணகாரியமே வேண்டாம். அதைக்கேட்டாலும் சரியானபடி பதில் சொல்லாதுகள். பொதுவாகப் பேரும் புகழும் வேண்

டும். அது எந்தவழியில் வந்தாலும் சரிதான். அதுகளுடைய லட்சியமெல்லாம் அவ்வளவுதான். என்னமோ சினிமாவில் சிலருடைய பெயர்கள் பிரமாதப்படுகிறதோ இல்லையோ, அதைப் பார்த்துவிட்டுத் தாங்களும் அந்த மாதிரி ஆகிவிடவேண்டுமென்று தீர்மானித்து விடுகிறதுகள். யார் யாருக்கு எந்த எந்த துறையில் லாயக்கு என்று கொஞ்சம்கூட யோசிக்கமாட்டேனென்கிறதுகள்.'

'சரிதான் போ. இதை நீயே செய்ய ஆரம்பித்துவிட்டாயா? நாங்கள்தான் கண்ட கண்கள் லோகம் தலைகீழாய் மாறி நிலைத்தெரியாமல் தவித்துத் திண்டாடுவதைப்பார்த்து மனம் சகிக்காமல் ஏதாவது சொன்னால் நமக்கு அசட்டுப்பட்டம் கட்டிவிடுகிறதுகள். நீயே சொல்ல ஆரம்பித்துவிட்டாயா? தெரியாமலா பெரியவர்கள் சொல்கிறார்கள். 'கல்யாணம் என்பது' ஆயிரங்காலத்துப்பயிர். கண்டதே காதல், கொண்டதே கோலம் என்பது குடும்பிகளுக்கு லாயக்குப்பட்டுவராது' என்று அந்த வக்கீல் பெண்ணைக்கலியாணம்செய்து கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? தாயார் யாரோ, தகப்பனார் யாரோ, குலம், கோத்திரம் என்னவோ, அதனுடைய பூர்வோத்தரங்களையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் அவசரப்பட்டு ஒரு காரியத்தைச்செய்து விடுவதின் விபரீதம்தான் இது. என்னமோ அவன் தலையெழுத்து அப்படியாயிற்று! என்ன சொல்கிறான் சுந்தரம் இதற்கு?'

'சொல்லவேதென்ன. வெளியில் தலையைக் காட்டமுடியாமல் சங்கோஜப்பட்டுக் கொள்கிறான்.'

'முன்னேற்றம், முற்போக்கு என்று தொண்டை கிழியப் பேசுகிறார்களே. தங்கள் சொந்த விஷயத்தில் அதுஏற்பட்டுவிட்டால் அப்பொழுது மாத்திரம் அவமானமாமோ? நன்றாக இருக்கிறது வேடிக்கை! எல்லாம் உலகத்தை ஏமாற்றித்திரிகிறகாலம்!'

'நீ ஒன்று. இவ்வளவுதான் நீ தெரிந்துகொண்டது? உலகத்தை ஏமாற்றிவிடுவதாய்த்தான் எண்ணம். ஆனால் கடைசியில் தங்களைத்தாங்களேதான் ஏமாற்றிக்கொள்கிறதுகள். அவ்வளவுதூரம் போவானேன் இதோ பெரிய மாமா இல்லையோ?'

ஆமாண்டா. நானே கேட்கவேண்டுமென்றிருந்தேன். நல்ல வேளை ஞாபகப்படுத்தினாய். என்ன ஆயிற்று சீனுவின் (பெரிய மாமாவின் பிள்ளை) கலியாண விஷயம்? வரன் ஏதாவது 'தட்டுப்பட்டதா?'

'வரனாவது அகப்படுவதாவது. நிற்க சொந்தத்தில் துளி நிழல் (வீடு) கிடையாது. உத்யோகம் இல்லையென்றால் ஒருவேளை உட்கார்ந்து சாப்பிடுவதற்குச் சோறுகிடையாது. (சொந்த சொத்தோ பிதுரார்ஜித சொத்தோ கிடையாது.) 'என் பிள்ளை பி. எல். பாஸ் செய்திருக்கிறான். மன்மதன் மாதிரி இருக்கிறான் பதினாயிரம் ரூபாய்க்குக் குறைந்து கையில் (வரதக்ஷிணை) வாங்குவேனா என்ன?' என்று விராப்புப் பேசிக்கொண்டிருந்தால், பெண்ணைக் கொடுக்கிறவர்கள் பிள்ளையின் படிப்பை மாத்திரமா யோசிப்பார்கள்? அவர்கள் முன்பின் அந்தஸ்தையும் யோசிக்கமாட்டார்களா? பதினாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கொடுத்து அதற்குத் தகுந்த மாதிரி சீர்வரிசைகளைச் செய்து பெண்ணைக் கொடுக்கிறவர்கள் கூடிய வரையில் கொஞ்சம் உயர்ந்த அந்தஸ்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கவேண்டும். அவர்கள் பார்க்கும் வரன் அவர்கள் அந்தஸ்துக்கு ஏற்றமாதிரி, இருக்கும்படியாகத் தானே பார்ப்பார்கள்? இது தெரியாமல் பையன் 'பி. எல்., பி. எல்.' என்று மாத்திரம் சொல்லிக்கொண்டிருந்தால் முடியுமோ? அன்று ஒருவர் வந்தார். நினைத்துக்கொண்டால் சிரிப்புத்தான் வருகிறது. ரிடையர்டு ஆபீஸராம் அவர். எனக்குத் தெரிந்த ஒருவரின் பிள்ளைக்குத் தன்னுடைய பெண்ணைக்கொடுக்கலாமா என்று யோசனை கேட்பதற்காக என்னிடம் வந்தார். அவர் பார்த்த வரன் பி. ஏ. பரிக்ஷை எழுதியிருக்கிறான். சீர்வரிசையெல்லாம் நன்றாகச் செய்து தருவதாகச் சொன்னார். அதைவிட உயர்ந்ததாக நான் மாமாவின் பிள்ளையைப் பற்றி சிபார்சு செய்தேன். படிப்பு தவிர சொத்துசுதந்தரம் இருக்கிறதோ?' என்று கேட்டார். 'அதெல்லாம் ஒன்றும் கிடையாது.' என்றேன். 'அப்படியானால் அதை விட்டுத்தள்ளுங்கள். வேறு ஏதாவது சொல்லுங்கள். அவன் இனிமேல் வக்கீல் தொழில் ஆரம்பித்து அதில் முன்னுக்கு வந்து நன்றாக சம்பாதிக்கிற அன்று பார்த்துக் கொள்வோம். நாளை நாற்று ஜாம் பதோ இப்பொழுது நன்றாக சம்பாதிக்கிறவனாக சொல்லுங்கள்' என்றார். மாமாவினுடைய விராப்புக்கும், இவருடைய போக்குக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்று எண்ணிக்கொண்டேன்'

சரி அது எப்படியாவது போகட்டும். மேற்கொண்டு சுந்தரம் என்ன செய்யப்போகிறான்?'

'என்னமோ அந்தப்பெண்ணையே நல்ல வார்த்தை சொல்லிப்பார்க்கலாமென்று யோசிப்பதாகத் தெரிகிறது.'

அது நடக்கிற காரியமா? இந்த வேலை இவனும் சினிமாவில் சேர்ந்து இரண்டுபேரும் நடித்தால் என்னவோ! அவள் இனி திரும்பமாட்டாள். படிக்கிறதென்றும் உத்தியோகத்துக்காகத்தான் என்ற மனோபாவம் ஏற்பட்டிருக்கிற மாதிரி, பாட்டு, கூத்து தெரிந்ததென்றால் அது கச்சேரிக்கும், சினிமாவுக்கும் தான் என்ற மனோபாவமும் ஜனங்களிடையே ஏற்பட்டுவருகிறது' என்று சேஷிப்பாட்டி சொல்லிக் கொண்டிருக்கையில் எதிரகத்து எச்சுமி ஏதோ அவசர வேலையாய் வந்தாள்.

'சரி நான் போய் சாயங்காலம் வருகிறேன் அத்தை' என்று சொல்லிவிட்டுச் சென்றான் கோபாலன்.



---






## 55
## கோடியுகம் இருந்தார்!

சாத்தனூரிலுள்ள மூலன் என்னும் இடையன்— காவிரிக்கரையில் அந்தப் பசுங் காட்டிலே பசுக்களை மேய்த்துக்கொண்டிருந்தவன் அன்று இறந்துவிட்டதால், பசுக்களுக்கு ஏற்பட்ட துயரை நீக்க வேண்டுமென்றுதான் சிவயோகியார் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து இடையன் உடலை உயிர் பெற்று எழச் செய்தார். அதாவது, தம் உடம்புக்கு அரண் செய்து அதை ஓரிடத்தில் பேணி வைத்து தம் உயிரை இடையன் உடலில் பாய்ச்சினார். திருமூலராய் எழுந்தார்.

கூடு விட்டுக் கூடு பாய்தல் ஒரு சித்து விளையாட்டு. இதைப் பரகாயப் பிரவேசம்என்பர் வட நூலார். திருமூலர் பாடிய திருமந்திரம் என்ற நூலில் 'அஷ்டமாசித்தி' என்ற தலைப்பில் 'பரகாயப் பிரவேசம்' குறித்து ஒரு பாடல் காணப்படுகிறது. திருமூலரின் பரகாயப் பிரவேசம் குறித்துச் சேக்கிழார் பெருமான் கூறுகிறார்:

> தவமுனிவர் தம்உடம்புக்(கு)
> அரண்செய்து தாம்முயன்ற
> பவனவழி அவனுடலில்
> தம்முயிரைப் பாய்த்தினார்

[அரண்-காவல். பவனம்-பிராணவாயு. பாய்த்தினார்-பாய்ச்சினார்.]

திருமூலர் எழுந்ததும் பசுக்களின் களிப்பைத்தான் என்னென்பது? நக்கின; மோந்தன; கனைத்தன; வாலெடுத்துத் துள்ளின: மறுபடியும் மேயத் தொடங்கின பசும் புல் தரையிலே கூட்டம் கூட்டமாக:

> பாய்த்தியபின் திருமூல
> ராய் எழலும், பசுக்களெலாம்
> நாத்தழும்ப நக்கி,மோந்(து)
> அணைந்து, கனைப் பொடுநயந்து
> வாய்த்தெழுந்த களிப்பினால்
> வாலெடுத்துத் துள்ளிப்பின்
> நீத்ததுயர் நினைவாகி,
> நிரைந்துபோய் மேய்ந்தனவால்.

[அணைந்து—அணுகி. நயந்து—விரும்பி. நீத்த—நீங்கிய, நிரைந்து போய் கூட்டங்கூட்டமாகப்போய்.]

பசுக்கூட்டங்களின் மகிழ்ச்சியை அன்புகூர்ந்த அருளுடன் கண்டார் திருமூலர். மேயும் இடங்களுக்கெல்லாம் சென்றார், அந்தப் பசுக்களுக்குப் பின்னே மேய்ந்த பசுக்களுக்குக் காவிரியில் தண்ணீர் காட்டி, அவை கரையேறியதும், காட்டு மர நிழல்களில் தங்கி இளைப்பாறச் செய்த வண்ணம் அவற்றை இனிதாகப் பாதுகாத்தார்.

பொழுதுபோயிற்று பசுக்கள் வழக்கம்போலச் சாத்தனூரைநோக்கி நடந்தன. திருமூலரும் கன்றை நினைந்து முன்னே பையச்செல்லும் பசுக்களுக்குப் பின்னே மகிழ்ச்சியுடன் போனார்:

> மையநடப் பன,கன்றை
> நினைந்துபடர் வனவாகி,
> மெய்யம்நிகழ் சாத்தனூர்
> வந்தெய்தப் பின்போனார் .

பசுக்கள் வீடுதோறும் நுழைவனவாயின. திருமூலர் வீதியிலே நின்றார் ஓரிடத்தில். மூலன் என்ற அந்த இடையனின் மனைவி, 'கணவர் இன்னும் வரவில்லையே' என்று வெளியே வந்து பார்த்தாள். யோகியார் நின்ற இடத்திற்கு வந்தாள். 'ஏன் இவர் இங்கே நிற்கிறார்?' என்று ஆலோசித்தாள். இவருக்கு என்ன, நேட்டா?' என்று எண்ணினாள். 'என்னைத் தீண்டாதே என்றார் யோகியாரும்.

அவள் மருண்டாள்; தளர்வுற்றாள். அவளை நோக்கி யோகியார் 'எனக்கும் உனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை' என்று சொல்லி ஒரு பொது மடத்திலே நுழைந்தார். அவளோ இரவு முழுவதும் கண்துயிலாது அகம் வருந்திக்கொண்டிருந்தாள். பொழுது விடிந்ததும் அவ்வூர் அறிஞர்களிடம்போய்த் தன் கணவனின் செயலைத் தெரிவித்தாள். பித்தமா, மயக்கமா, வேறு எந்தச் சித்த விகாரம் இது?

ஊரிலுள்ள நல்லறிஞர்கள் பொது மடம் வந்து திருமூலரின் நிலையைப் பார்த்தார்கள்.

> 'பித்துற்ற மயல் அன்று;
> பிறி(து) ஒரு சார்(பு) உடையதன்று;
> சித்தவிகற் பங்களைந்து
> தெளிந்தசிவ யோகத்தில்
> வைத்தகருத் தினராகி,
> வரம்பில்பெரு மையிலிருந்தார்;
> இத்தகைமை அளப்பரிதால்
> யாராலும்' எனஉரைப்பார்

[பித்து-பைத்தியம் மயல்-மயக்கம் பிறது ஒரு—வேறொரு. சித்த விகற்பம்-மனவிகாரம் வரம்பில்—அளவில்லாத. அளப்பரிதால்—அடக்கமுடியாத.]

'இவருக்கா சித்தவிகாரமும் கலக்கமும்? "சித்தவிகாரக் கலக்கம் தெளிவித்த" சிவயோகம் அல்லவா இது?'' என்று சொன்ன அறிஞர்கள், மூலன் மனைவியிடம், 'அம்மா, சித்தம் சிவயோகத்தில் ஈடுபட்டிருக்கச் சுற்றத்துடன் சேர்ந்து வாழ்வாரோ?' என்று சொல்லிவிட்டார்கள். அது கேட்டுத் துயர்க்கடலில் ஆழ்ந்த மனைவியை அருகேயிருந்தவர்கள் தேற்றி அழைத்துப் போனார்கள்.

பிறகு திருமூலர் எழுந்து பசுக்கள் வந்த வழியே திரும்பிப்போனார். சேமித்துவைத்திருந்த தம் உடலைத் தேடிப் பார்த்தார். ஆஹா, அந்த உடலைப் பார்த்தாரில்லை!

> முந்தை உடற் பொறைகாணார்;
> முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச்
> சிந்தையினில் வந்தசெயல்
> ஆராய்ந்து தெளிகின்றார்



ஜன உரிமைகளை நிர்த்தாரணம் செய்யும் கமிஷனின் 5-வது கூட்டத்திற்கு வந்துள்ள மெம்பர்களான மிஸஸ் மினர்வா பர்னுடிஜோவும் (இடது) மிஸ் அனுபிகரோஸவும் (வலது) ஐக்கிய நாடு சபைக்கு வந்திருந்த ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிதரைச் சந்தித்தனர்.

[முந்தை-பழைய. உடற்பொறை—உடலாகிய சுமை.]

தம் மெய்ஞ்ஞானச் சிந்தையால் 'ஏனிப்படி வந்தது? இந்தச் செயலின் பொருள் என்ன? யார் செயல் இது?' என்று ஆராய்ந்து பார்த்தார். அந்த உள்ளத்திலே தெளிவு பிறந்தது. 'எல்லாம் எனையாளும் ஈசன் செயல்' எனத் தெளிந்தார். தம் மெய்ஞ்ஞான உணர்வுகொண்டு எங்கும் நிறைந்த சிவஞானப் பெருங்கடலை உணர்ந்து, தம் உடலை ஒளித்தது திருவருளே எனத் தெளியலானார். 'திருவருள் இப்படி உடலை ஒளித்ததற்கு உட்பொருளென்ன?' என்று ஆலோசித்தார். 'சரி, சரி; சிவாகமத்தின் உண்மைப் பொருளைத் தமிழாக்கம் செய்து தரவேண்டுமென்றுதான் என் உடலை மறைந்து விட்டது எம்பெருமான் இன்னருள்' என்ற ஞானத் தெளிவு ஏற்பட்டது. இந்ஞானத்தெளிவை,

என்னை நன்றாக
இறைவன் படைத்தனன்,
தன்னை நன்றாகத்
தமிழ் செய்யுமாறே

என்று திருமூலர் திருமந்திரம் தெளிவாக வெளியிடுகிறது.

திருமூலரைச் சுற்றத்தார் தொடர்ந்து சூழ்ந்துகொண்டார்கள். 'உங்களுக்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையே. நீங்கள் போய்விடுங்கள்' என்று அவர்களை அனுப்பிவிட்டார் திருமூலர். அப்பால் திருவாவடுதுறை சேர்ந்தார்; கோயிலுக்குள் புகுந்து சிவம் என்ற அரும் பொருளை வணங்கி, மேற்புறத்திலுள்ள அரசமரத்தடியில் சிவயோகத்தில் அமர்ந்தார்.

சேர்ந்திருந் தேன்சிவ
போதியின் நிழலில்
சேர்ந்திருந் தேன்சிவன்
நாமங்கள் ஓதியே

என்றும்,

நானும் இருந்தேன்
நற்போதி யின்கீழே

என்றும் திருமந்திரத்தில் திருமூலரே பாடியிருக்கிறார்.

இப்படித் திருமூலர் மூவாயிரம் ஆண்டு சிவயோகத்தில் அமர்ந்திருந்ததாகவும் ஆண்டு ஒன்றுக்கு மந்திரம் ஒன்றாகத் திருமந்திரம் மூவாயிரமும் அருளிச்செய்ததாகவும் பெரியபுராணம் கூறுகிறது. இன்று திருமந்திரத்தில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் காணப்படுகின்றன. திருமந்திரம்போன்ற யோக நூலில் இடைச் செருகல் ஏற்பட்டதில் அதிசயமில்லை.

மூலன் உரைசெய்த
மூவா யிரந்தமிழ்

என்று திருமந்திரமே தெரிவிக்கிறது.

திருமூலர் நீண்ட காலம் வாழ்ந்ததாகப் பொருள் கொள்வதற்கும் இசைந்த திருமந்திர வாக்கியங்கள் உண்டு.

இருந்தேன்இக் காயத்தில்
எண்ணிலி கோடி

[காயம்—உடம்பு.]

என்றும்,

ஒப்பிலி கோடி
யுகம்இருந் தேனே

என்றும் திருமூலரே அருளிச் செய்திருப்பதால், திருமூலர் வாழ்ந்தது மூவாயிரம் ஆண்டு என்றுதான் ஏன் கருதவேண்டும்? திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் தம் பெரியபுராணப் பதிப்பிலே 'திருமூலர் ஒவ்வோராண்டுக்கு ஒவ்வொரு மந்திரமாக மூவாயிரம் ஆண்டிருந்து மூவாயிரம் மந்திரம் சொன்னார் என்பதற்கு அகச்சான்று இல்லை' என்கிறார். ஆனால் கோடிக்கணக்கான யுகங்கள் வாழ்ந்ததாகச் சொல்லுகிறரே திருமூலர், அந்த இரகசியம் தான் என்ன? அடுத்த கட்டுரையில் ஆராய்ந்து தெளியலாமே.

—:—



# அன்பு உள்ளம்

பொழுது பல பலவென்று விடிந்துகொண்டிருந்தது. இரவு முழுவதும் தூக்கமில்லாமலும் மன நிம்மதியின்றியும் படுக்கையில் புரண்டு படுத்திருந்த பார்வதி, சீக்கிரமே எழுந்து குளித்துவிட்டு, காப்பி குடித்துவிட்டு ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தாள். அவள் கண்கள் எதிரே மாட்டப்பட்டிருந்த கடியாரத்தை அடிக்கொருதரம் பார்த்துக்கொண்டிருந்தன.

மணி ஏழடிப்பதற்கும் வாசலில் ஒரு டாக்ஸி வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. இரவெல்லாம் பிரயாணம் செய்த அலுப்பினாலும் பத்து நாட்களாகச் சுற்றி அலைந்த களைப்பினாலும் மிகவும் சோர்வுற்று இருந்த விஸ்வநாதன் டாக்ஸியில் இருந்து கீழே இறங்கினான். வேலைக்காரன் ஓடிச் சென்று பெட்டியையும் படுக்கையையும் உள்ளே எடுத்து வந்தான். விச்வநாதன் டாக்ஸிக்காரனுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு உள்ளே வந்தான். பார்வதி எழுந்து வந்து அவனுடைய கைப்பெட்டியை வாங்கிக் கொண்டாள்.

விச்வநாதன் அவள் முகத்தை ஒருதரம் ஏறிட்டுப்பார்த்தான். அதில் உற்சாகம் காணப்படவில்லை. புன் சிரிப்பில்லை சோபையில்லை.

விச்வநாதனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் அறையில் நுழைந்த அவன் தன் கைப்பெட்டியுடன் பின்னால் வந்து நின்ற பார்வதியைப்பார்த்து "பாரு! உனக்கென்ன உடம்பு சரியாக இல்லையா?" என்று கேட்டான் அவன்கேள்வியில் ஒரு பதட்டம் காணப்பட்டது.

"எனக்கு ஒன்றும் இல்லை. நேற்று லீலா ஆத்துக்குப் போயிருந்தேன். ரமணிக்கு கடும் ஜுரம் அடிக்கிறது..."

துக்கம் அவள் தொண்டையை அடைத்தது கண்களில் நீர் தளும்பி நின்றது.

"என்ன ரமணிக்கு ஜுரமா? எத்தனை நாளா? நீ ஏன் அதைப் பத்தி எனக்கு ஒண்ணுமே எழுதலே! நான் முன்னாடியே வந்திருப்பேனே!"

"நாலைந்து நாளா அடிக்கிறதாம். எனக்கே ஒண்ணும் தெரியாது. அந்த அசடு சொல்லி அனுப்பலே. நேத்து வெறுமனே போய் பார்த்துட்டு வரலாம்னு போனேன். குழந்தை படுக்கையாக படுத்திண்டிருக்கு... எனக்கு அப்படியே தூக்கி வாரிப் போட்டது..."

"மருந்து?..."

"ஏதோ வாங்கிக் கொடுக்கிறாளாம்—"

"சரி! சீக்கிரம் ஸ்நானம் பண்ணிவிட்டு போய் பார்த்துவிட்டு வரேன்..."

ஸ்நானம் செய்யச் சென்றான் விச்வநாதன்.

## 2

பத்து நிமிஷங்களில் ஸ்நானம் செய்து காப்பி சாப்பிட்டுவிட்டு ரிக்ஷாவில் ஏறிக்கொண்டு லீலாவின் வீட்டுக்குக் கிளம்பிவிட்டான் விச்வநாதன். அவன்மனம் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது.

லீலாவின் வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தினான் ரிக்ஷாக்காரன்.

விச்வநாதன் அவசர அவசரமாக இறங்கி உள்பக்கம் தாளிடப்பட்டிருந்த கதவைத்தட்டினான். சில விநாடிகளில் கதவு திறக்கப்பட்டது. வாசற்படியண்டை லீலா நின்றுகொண்டிருந்தாள். அவளைக் கண்டவுடன் அப்படியே ஸ்தம்பித்து விட்டான் விஸ்வநாதன்.

மெலிந்துபோன தேகம். வாடிய முகம் வாரி பின்னப்படாத கூந்தல். இடிந்த கண்கள். பத்து நாட்களுக்குள் பெரியமாறுதல்!

விஸ்வநாதனைக்கண்டதும் ஒரு கணம் அவள் கண்கள் அகல விரிந்தன. மறுகணம் விவரிக்க முடியாத ஏதோ ஒரு ஏக்கத்தின் அறிகுறி அவள் முகத்தில் தோன்றியது.

"உள்ளே வாருங்கோ! நீங்க எங்கேயோ டூர் போயிருக்கிறதாக பாரு சொன்னாளே!......"

"டூர்தான் போயிருந்தேன். இப்போ கொஞ்ச நாழிக்குமுன்னாடி தான் வந்தேன். ரமணிக்கு உடம்பு சரியாக இல்லைன்னு சொன்னாள். உடனே ஓடிவந்தேன்... இப்போ எப்படி இருக்கு குழந்தைக்கு......" என்று சொல்லிக்கொண்டே அவள் பின்னேடு ரமணி படுத்திருந்த அறைக்குள் சென்றான்.

"இபபோ கொஞ்சம் தேவலை போலதான் இருக்கு..." என்றாள் லீலா. ஆனால் அவள் முகம் மாத்திரம் அவள் மனதில் தோன்றியிருந்த அவநம்பிக்கையைப் பிரதிபலிப்பது போல் இருந்தது.

ரமணி தரையில் ஒரு பாயின்மேல் படுத்திருந்தான். அவன் கண்கள் மூடிக்கிடந்தன. மேலே ஒரு கம்பளி மூடப்பட்டிருந்தது.

விச்வநாதன் ரமணியின் அருகே சென்றான் கீழே உட்கார்ந்தான். குழந்தையைத் தொட்டுப்பார்த்தான், உஷ்ணம் கையைச் 'சுரீர்' என்று தீண்டியது.

"அப்பா! உடம்பு கொதியாய்க் கொதிக்கிறதே!" என்று சொல்லிக்கொண்டே விச்வநாதன், "டேய்! ரமணி! ரமணி!!" என்று இரண்டு முறைகள் கூப்பிட்டான். ஆனால் குழந்தை கண் திறக்கவில்லை. அவன் ஒருதரம் லீலாவைப் பார்த்தான். அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. மெதுவாகத் தன் புடவைத் தலைப்பால் அதைத் துடைத்துக்கொண்டிருந்தாள் அவள்.

ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே எழுந்து நின்றான் விச்வநாதன். அவன் நெஞ்சு கலங்கியது.

"சிவராமன் எங்கே?..."

"காலையிலே எழுந்து எங்கேயோ வெளியிலே போனார்..."

"குழந்தைக்கு மருந்து வாங்கிக் கொடுக்கிறேயோ?"

"ஹூம்..."

"எந்த டாக்டரிடம்?..."

"கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரியிலே!......"

என்ன லீலா! நீ சொல்றது எனக்கு ஒண்ணும் பிடிபடலே! குழந்தைக்கு இவ்வளவு அதிகமாக ஜுரம் அடிக்கிறது. வீட்டிலே அவனைக் காணோம்... நல்லவைத்தியனைப் பார்த்துக் காட்டி மருந்து வாங்கிக் கொடுக்கிறதை விட்டு விட்டு எங்கேயோ தர்மத்துக்கு வைத்தியம் பண்ணுகிறேன் என்று சொல்றேயே...",

லீலா பதில் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவள் இருதயம் ஒருதரம் விம்மியது அவள் தலையைக் குனிந்துகொண்டாள்.

"கையில் போதுமான பணம் இல்லாததினால்தான் லீலா சரியான வைத்தியம் செய்ய முடியவில்லை என்று ஒரு நொடியில் உணர்ந்துகொண்டான் விச்வநாதன்.

"குழந்தையையும் எடுத்திண்டு நம்பாத்துக்கு வந்துடேன். இங்கே ஏன் தனியாகக் கஷ்டப்படறே! கார் கூட இன்னிக்கு கம்பெனியிலே இருந்து வந்துடறது. நம்ப டாக்டர் கிட்டே கொண்டுபோய் காண்பிக்கலாம். சிவராமனும் அங்கேயே வந்து எல்லாரும் ஒரு வாரம் இருங்களேன் குழந்தைக்கு உடம்பு சரியாகப் போனப்புறம் இங்கே வந்துடலாம்' என்றான் விஸ்வநாதன்

"வேண்டாம்! பரவாயில்லை! குழந்தைக்கு இன்னும் இரண்டு நாளிலே எல்லாம் சரியாகிப் போயிடும்..."

அவர்கள் வீட்டில் ஏதோ நடந்திருக்கவேண்டும், இல்லாமற்போனால் லீலா இப்படி மறுத்துக் கூறமாட்டாள் என்று சிவராமனுக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. அவன் தன் மணிபர்ஸைத் திறந்து அதிலிருந்து இரண்டு பத்து ரூபாய நோட்டுக்களை எடுத்து. லீலா! இந்தா இதை வச்சிக்கோ! அவன் வந்ததும் குழந்தையை ஒரு நல்ல டாக்டரிடம் கொண்டுபோய் காட்டு...' என்றான்.

ஆனால் லீலா அந்தப் பணத்தை வாங்கவில்லை

"வேண்டாம்! நீங்க வச்சுக்கோங்கோ! இப்போ பணம் தேவையில்லை..." என்றாள் அவள்.



தசா

அவர்களிடம் பணம் இல்லை என்பதை நன்றாக உணர்ந்துகொண்ட விச்வநாதன், "பரவாயில்லை......... வச்சுக்கோ..." என்று அவள் கையில் மறுபடியும் கொடுக்கப்போனான். ஆனால் அவள் மறுபடியும், 'வேண்டாம் என்று சொல்லவே விச்வநாதன் பக்கத்தில் இருந்த ஒரு அலமாரியில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த புஸ்தகங்கள் ஒன்றினுள் அந்த இரண்டு நோட்டுகளையும் வைத்தான். அதேசமயத்தில் சிவராமன் உள்ளே நுழைந்தான்! விச்வநாதனும் லீலாவும் எதிரும் புதிருமாக நின்றுகொண்டிருப்பதைக் கண்டு அவன் முகம் கடுகடுத்தது. லீலாவை ஒரு தரம் முறைத்துப் பார்த்தான்.

இதற்குள் விச்வநாதன். "சிவராமா! என்ன குழந்தைக்கு ஒரேயடியாக ஜுரம் அடிக்கிறதுபோல இருக்கே!..." என்றான் ஆனால் அவன் பதில் ஒன்றும் சொல்லாமல் ஏதோ தன் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தான்.

விச்வநாதனுக்கு சிவராமன் நடந்துகொண்ட விதம் பிடிக்கவில்லை. இருந்தாலும் ஜுரத்துடன் அவஸ்தைப்படும் குழந்தையை விட்டுப் போகவும் அவன் மனம் இடந்தரவில்லை. கடைசியில் ஒருவிதமாகத்தன் மனதைத் தேற்றிக்கொண்டு லீலாவிடம் குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

வீட்டைவிட்டு தெருவில் இறங்கி பத்தடி நடந்திருப்பான் இதற்குள் தன் செருப்பை வாசற்படியண்டை விட்டுவிட்டு வந்துவிட்டது அவன் ஞாபகத்திற்கு வரவே, அதைப்போட்டுக்கொண்டுவர மறுபடியும் லீலாவின் வீட்டிற்குச் சென்றான். உள்ளே சிவராமன் ஏதோ உரக்க கத்திக்கொண்டிருந்தது அவன் காதில் கேட்டது.

"எதற்காக அவன் நான் இல்லாத சமயத்தில் இந்த வீட்டிற்கு வர வேண்டும்!..."

'வந்தால் என்ன தவறு? பாவம் குழந்தை மூடினகண் திறக்காமல் படுத்துக்கொண்டிருக்கிறது; உங்களுக்குத்தான் அதைப்பற்றிய கவலை துளிக்கூட இல்லை பார்வதிக்கும் அவருக்கும் இதன் மேல் உயிர்..."

"புரிகிறது விஷயம். கல்யாணத்தின் போதே அவனையும் என்னையும் பத்தி ஏதோ ஜாடை மாடையாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுதே எனக்குக் கொஞ்சம் சந்தேகம்தான் ஏதடா அப்பா என் மேல் அவ்வளவு கரிசனம் என்று



நினைச்சேன்... ஹூம் இப்போதானே புரியறது..."

"சிவ சிவா! என் காதுகொண்டு சகிக்கப்போகலையே, இந்த வார்த்தைகளை நீங்களா சொல்றேள் இதையெல்லாம்?—பாவம் ஒருகல்மிஷமும் இல்லாதவரை வீணுக்குப் பழிக்காதேயுங்கோ.........பாவம் விடாது..."

"உள்ளதைச் சொல்லவே கோபம் வருகிறாப்போல இருக்கு. நீங்க கொஞ்சம் நாழி முன்னாடி இங்கே பேசினதைக் கேட்காமல் இருந்தேன்னு நினைச்சிண்டிருக்கே?... பரிவோடு.

ஆத்துக்குவந்துடுன்னு, கூப்பிட்டானே. போகிறதுதானே! ஜோரா குலுக்கிண்டு மினிகுண்டு அவனோடு உறவாடலாம்......'

லீலாவின் முகம் கோபத்தாலும் ஆத்திரத்தாலும் சிவந்தது.

"என்னை எது வேணுமானு சொல்லுங்கோ; அவரைப்பத்தி ஒரு வார்த்தைச் சொன்னாலும் நான் பொறுக்கமாட்டேன்.........கொஞ்சம் நிதானமாக பேசுங்கோ! அவமானமாக இருக்கு கேட்கிறதற்கு..."

அவள் கண்கள் நீரைச்சொரிந்தது. அவள் விம்மினாள். விம்மலுக்கிடையே ஒரு பெருமூச்சு.

"என்னடீ நீலிக்கண்ணீர் விடறே ...போயேன் அவன் வீட்டுக்குத்தான்...என்று சொல்லிக்கொண்டே 'பளீர்' என்று அவள் கன்னத்தில் இரண்டு அறைகள் கொடுத்தான் சிவராமன். 'ஐயோ' என்ற அவள் போட்ட சப்தம் வெளியே நின்றுகொண்டிருந்த விச்வநாதனை நடுங்கச் செய்தது. அவன் இதயத்தில் இருந்து ஒரு ஆழ்ந்த பெருமூச்சு வெளிப்பட்டது. மேலும் அங்கு நிற்க மனம் இல்லாமல் அவன் படிக்கட்டுகளை விட்டுக் கீழே இறங்கி தெருவில் நடக்கலானான். அதே சமயத்தில் வாசற் பக்கம் வந்த சிவராமனும். ஜன்னல் அருகே நின்று அழுதுகொண்டிருந்த லீலாவும் விச்வநாதன் அப்பொழுதுதான் தங்கள் வீட்டை விட்டுப் போவதைப் பார்த்தார்கள். தனக்கும் தன் கணவனுக்கும் நடந்த சம்பாஷணையை விச்வநாதன் கேட்டுத்தான் இருக்க வேண்டும் என்ற நிச்சயம் லீலாவின் மனதில் தோன்றியது. அதைத் தொடர்ந்தாற்போல் விச்வநாதன் மனம் எவ்வளவு சங்கடப்படுகிறதோ என்ற ஒரு கவலை அவளை வாட்ட ஆரம்பித்தது.

வீதி வழியே தன் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்த விச்வநாதனின் மனமும் பெரும் சஞ்சலத்தில் ஆழ்ந்திருந்தது.

## 3

விச்வநாதன் கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தபோது அவனுக்குக் கல்யாணம் ஆயிற்று. அவனுடைய மாமனார்—பரமேச்வர ஐயர்-ஒரு கம்பெனியில் உத்தியோகத்தில் இருந்தார். அவருக்கு பார்வதி, லீலா இரண்டு பெண்கள்தான். தாய் தந்தையரையும் இழந்து நெருங்கிய உறவினர் யாரும் இன்றி இருந்த தனக்கு அவர் சம்பந்தம் கிடைத்ததைக்குறித்து விச்வநாதன் மிகவும் சந்தோஷப்பட்டான். படிப்புமுடிந்ததும் அவர் விச்வநாதனுக்கு ஒரு நல்ல கம்பெனியில் உத்தியோகம் பார்த்துக் கொடுத்தார். விச்வநாதன் தன் திறமையினால் சீக்கிரத்திலேயே நல்ல நிலைக்கு வந்துவிட்டான். அவனுக்குப் பரமேச்வர அய்யரிடம் அபார வாஞ்சை அவரும் அவனிடம் தன் பிள்ளையைக் காட்டிலும் மேலான அன்பு வைத்திருந்தார்.

விச்வநாதனுக்குக் கல்யாணம் ஆகி ஐந்து வருஷங்களாகி இருக்கும் அப்போது லீலாவுக்கு பத்து வயது. பரமேஸ்வர ஐயர் திடீரென்று 'டைபாயிட்' ஜுரத்தில்படுத்துவிட்டார் அவர் இறக்கும் தருவாயில் விச்வநாதனை அருகே அழைத்து. லீலாவை எங்காவது ஒரு நல்ல இடத்தில் கொடுத்துக் கல்யாணம் செய்து வைத்துவிடும்படி கேட்டுக்கொண்டார். கலங்கிய கண்களுடன் விச்வநாதனும் அவ்வாறே செய்வதாக வாக்களித்தான்.

பரமேச்வர அய்யரின் மறைவு அம்மூவருக்கும் ஆராத் துயரத்தை அளித்தது.

லீலா சிறு வயது முதலே மிகவும் குறும்புக்காரி படிப்பிலும் மிகவும் கெட்டிக்காரி. விச்வநாதனும். பார்வதியும் தாய்தந்தையற்ற அவளை, அத்துயரம் தெரியாமல் வளர்த்து வந்தனர். பார்வதிக்கும் குழந்தை எதுவும் பிறக்கவில்லையாதலால் இருவரும் லீலாவைத் தங்கள் குழந்தையைப்போலவே பாவித்தனர் விச்வநாதன் இதற்குள் தான் வேலை பார்த்த கம்பெனிக்கு ஒரு மானேஜிங் டைரக்டராகவும், ஒரு கூட்டாளியாகவும் ஆகிவிட்டதால் நல்ல அந்தஸ்துடன் கூடிய வாழ்க்கை ஏற்பட்டது.

லீலா மிகவும் செல்லமாக வளர்ந்தாள். அவள் எஸ் எஸ் எல் ஸி. பாஸ் பண்ணினவுடன் அவளை ஒரு நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுக்க விச்வநாதன் பல நாட்கள் இரவு பகலாய் அலைந்தான் கடைசியில் ஒரு வரன் குதிர்ந்தது. பிள்ளை—சிவராமன்-ஒரு பாங்கியில் காரியஸ்தர். லீலாவுக்கு அவனை ரொம்பப் பிடித்திருந்தது. வரதக்ஷிணை சீர் முதலிய வகைகளில் சற்று அதிகம் செலவு ஆனபோதிலும் விச்வ



நாதன் லீலாவுக்கு மிகவும் பிடித்தமாய் இருந்த அந்த வரனையே முடித்தான்.

கல்யாணத்தின்போது லீலா மிகவும் சந்தோஷமாகக் காணப்பட்டாள். பார்வதியும் விச்வநாதனும் பரமதிருப்தி அடைந்தனர்.

கல்யாணமாகி ஆறுமாதங்களுக்கெல்லாம் லீலாவைக்கொண்டு விடும்படி சிவராமன் சொன்னான். குழந்தைபோல் வளர்த்துவிட்ட லீலாவைப்பிரிய மனம் இல்லாத விச்வநாதன் சிவராமனையும் தங்களுடனேயே வந்து இருந்துவிடும்படி கூறினான். ஆனால் அவன் அதற்கு இசையாமல் போகவே கடைசியில் ஒரு நல்ல இடமாகப்பார்த்து ஏற்பாடு செய்து ஒரு நல்ல நாளில் லீலாவைக் கொண்டுபோய் விட்டான்

விச்வநாதன் எதிர்பார்த்தது போல் லீலாவின் தாம்பத்ய வாழ்க்கை இன்பகரமானதாய் இல்லை. சிவராமன் முன்கோபக்காரன் அதோடு ரேஸ் பைத்தியமும் சீட்டுப் பைத்தியமும் அவனைப் பிடித்துக்கொண்டிருந்தன. அவன் வாங்கும் சம்பளத்தை எல்லாம், இவைகளிலேயே ஒழித்துவிடுவான். நாளாவட்டத்தில் அந்தப் பணமும் போதாது போகவே கொஞ்சம் கொஞ்சமாக, லீலா அணிந்துகொண்டிருந்த நகைகளும் அவள் கொண்டு வந்த, வெள்ளிப் பாத்திரங்களும் வட்டிக் கடைக்குப் போய்விட்டன

லீலா கட்டியிருந்த மனக்கோட்டையெல்லாம் தகர்ந்து விழுந்தன அவள் போட்டிருந்த திட்டங்களெல்லாம் பகற்கனவாய் மாறின. கணவனின் அன்பும் அவளுக்குக் கிடைக்கவில்லை அவனுடைய ஊதாரித்தனத்தால் சில சமயங்களில் சாப்பாட்டிற்கே கஷ்டமாகிவிடும். அவள் எத்தனை தரம் முட்டிக்கொண்டும் சிவராமன் திருந்தவில்லை செல்வமாக வளர்ந்த பெண்ணுக்கு முதலில் இக் கஷ்டங்களைத் தாங்கும் சக்தி இல்லாமல் இருந்தது ஆனால் நாளாக ஆக அவள் மனது வைரம் பாய்ந்துவிட்டது. ஆனால் அவள் தன் கஷ்டங்களை ஒருபோதும் வெளிக்காட்டிக் கொள்வதில்லை தன் விதியை நினைத்துக்கொண்டு பேசாமல் இருந்தாள்.

கொஞ்சம் கொஞ்சமாக சிவராமனின் நடத்தை விச்வநாதனுக்குத் தெரியவந்தது. ஒன்றிரண்டு தடவைகளில் அவன் சிவராமனிடம் ஏதோ சில வார்த்தைகள் சொல்லிப் பார்த்தான் ஆனால் அவன் எதையும் காதில் போட்டுக்கொள்ளவில்லை இதன் மத்தியில் லீலா ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள்.

தங்களுக்குக் குழந்தையில்லாத குறையால் லீலாவுக்குப் பிறந்த குழந்தையின்மேல் அபார ஆசை வைத்தனர் பார்வதியும், விச்வநாதனும்.

அவர்கள் அடிக்கடி குழந்தையைப் போய்ப் பார்த்துவந்தனர். ஆனால் நாளாவட்டத்தில் சிவராமனின் மூளை பலவிநோதமான யோசனைகளில் ஆழ்ந்தது விச்வநாதன் தன் வீட்டுக்கு அடிக்கடி வந்துபோவதை அவன் விபரீதமாக எடுத்துக் கொண்டுவிட்டான் அவன் மனதில் பற்பல சந்தேகங்கள் எழுந்தன. அன்றுமுதல் லீலாவின்மேல் அவன் அநாவசியத்துக்கெல்லாம் சீறி விழுந்தான் விச்வநாதன் தன் வீட்டுக்கு வரக்கூடாதென்பதையும் அவள் தெரிவித்துவிட வேண்டும் என்ற கண்டிப்பான உத்திரவையும் அவன் போட்டிருந்தான்

கள்ளங்கபடற்ற லீலாவின் முகம் துயரத்தால் ததும்பியது. அன்னையைக்காட்டிலும் மேலாக அன்பு காட்டி வளர்த்த, தனக்கு இவ்வளவு தூரம்செய்த விச்வநாதனைத் தன் வீட்டுக்கு வரவேண்டாம் என்று சொல்ல அவள் மனம் ஒப்பவில்லை. மேலும் அநாவசியமான சந்தேகத்துக்கு இடங்கொடுக்கவும் அவள் விரும்பவில்லை. ஒரு வழியும் போக முடியாமல் அவள் தவித்துக்கொண்டிருந்தாள்.

சிவராமன் இப்படிப்பட்ட எண்ணம் கொண்டிருக்கிறான் என்பதை விச்வநாதன் துளிக்கூட அறியான். இன்று அவன் காதுபட சிவராமன் லீலாவைப்பழித்தது அவனால் தாங்கமுடியவில்லை அவன் மனம் வெடித்துவிடும்போல் இருந்தது சிவராமனின் கடுஞ்சொற்கள் அவன் இருதயத்தை ஈட்டிபோல் தாக்கின. வீட்டை அடைந்த அவனுக்கு வேலையே ஓடவில்லை. லீலாவின் சுகத்தை முன்னிட்டு இனிதான் அந்த வீட்டுவழி போவதில்லை என்று சங்கல்பம் செய்துகொண்டது அவன் மனம் ஆனால் மறு நிமிஷம் ஜுரத்துடன் பாயின்மேல் படுத்திருக்கும் ரமணியின் உருவமும், அதன் பக்கத்தில் கண்ணீரும் கம்பலையுமாய் உட்கார்ந்திருக்கும் லீலாவின் தோற்றமும் அவன் அகக் கண்முன் காட்சியளித்தன. அவன் இதயத்தில் இருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

## 4

அன்று திங்கட்கிழமை. காலை மணி ஒன்பதரையாகிவிட்டது. ரமணிக்கு ஜுரம் சற்றுக் குறைந்திருந்தது. லீலா சமைத்து வைத்துவிட்டு, வெந்நீர் எடுத்து அண்டாவில் வைத்துவிட்டு சிவராமனைக் கூப்பிட வந்தாள். அவன் கூடத்தில் மேஜை அருகில் உட்கார்ந்துகொண்டிருந்தான். அவன் மனம் பெருத்த யோசனையில் ஆழ்ந்திருந்தது.

"மணி ஒன்பதரையாச்சே குளிச்சுட்டு சாப்பிட வரலையோ......ஆபீஸுக்குப் போகவேண்டாம்?..." என்றாள் லீலா.

"ஹூம்......" என்று சொல்லிவிட்டு அவன் மறுபடியும் தலையைக் குனிந்துகொண்டே யோசனை செய்யலானான்.

'ஏன் ஒரு மாதிரியாக இருக்கேள்?...'

"ஒன்றும் இல்லை..."

'இல்லை! என்னிடத்திலே இருந்து ஏதோ ஒண்ணை ஒளிக்கப்பார்க்கறேள்..."

சிவராமன் நிமிர்ந்து லீலாவை நோக்கினான் அவன் முகம் பேயறைந்ததுபோல் காணப்பட்டது

'லீலா!..." அவன் குரலில் ஒரு ஒடுக்கம் காணப்பட்டது.

'லீலா!" என்றான் மறுபடியும். ஆனால் மேலே பேச அவன் நா எழவில்லை.

"என்ன விஷயம். சொல்லுங்களேன்! ஏன் உங்களுக்கு இப்படி உடம்பு நடுங்குகிறது. முகத்திலே வியர்வை. வார்த்தை தடுமாறுகிறதே..." அவள் பேச்சில் ஒரு பதட்டம். பார்வையில் ஒருவித பயம்.

"முந்தாநாள் ரேஸுக்குப் போனபோது ஆபீஸ் பணத்திலே இருந்து ஐந்நூறு ரூபாய் எடுத்துண்டு போனேன் நிறைய ஜெயித்துவிடலாம், ஐந்நூறு ரூபாயை இன்றைக்கு ஈடு செய்துடலாம்னு நினைச்சேன். ஆனால் என் அதிர்ஷ்டம் ஒரு தம்பிடிகூட மிஞ்சாமல் அத்தனையும் போயிடுத்து. இப்போ எப்படி ஆபீஸுக்குப் போகிறதுன்னு தெரியலை. இன்னிக்குப் பணத்தைப் போட்டு ஈடு செய்யலைன்னு வந்தது ஆபத்து. லீவு போட்டா இன்னும் சந்தேகம் வலுக்கும். யார்யாரையோ எல்லாம் கேட்டுப் பார்த்தாச்சு. கிடைக்கலை...என்ன பண்றதுன்னு புரியலை—' என்று முடித்தான் அவன். இதைச் சொல்வதற்குள் அவன் நா பலதடவை குழறிற்று. கண்களில் நீர் முட்டி நின்றது.

ஆபீஸ் பணத்தைக் கையாண்டு விட்டால் அதன் விளைவு என்ன என்பதை லீலா நன்றாக அறிவாள் டிஸ்மிஸ், கைது, விசாரணை, சிறைவாசம், தன் கதி, உலகத்தாரின் அபவாதம் ஒரு நிமிஷத்தில் இத்தனை காட்சிகளும் அவள் மனக்கண் முன் தோன்றி மறைந்தன. தலை 'கிர்' என்று சுழன்றது.

"லீலா! நான் கெட்டவன். அந்தக் காலத்தில் நீ சொன்ன வார்த்தைகளைக் கேட்கவில்லை இப்பொழுது அனுபவிக்கிறேன்—லீலா! லீலா! நான் ஜெயிலுக்குப் போக நேர்ந்தால்-உணர்ச்சிப் பெருக்கால் அவன் வார்த்தைகள் தடைப்பட்டன.

லீலாவும் "கோ" என்று அலறிவிட்டாள்.

ஆனால் மறு நிமிஷம் 'பளிச்' என்று ஒரு யோசனை அவள் மனதில் உதயமாகியது ஆனால் அதை வெளியே சொல்லவும் பயம், சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை கடைசியில் ஒருவிதமாக சமாளித்துக்கொண்டு, சிவராமனின் அருகில் வந்தாள். சாய்ந்து அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு கீழே மண்டியிட்டு உட்கார்ந்தாள். நீரைப்பெருக்கும் அவன் நயனங்களை நோக்கினாள். அதில் பரிதாபம் தேங்கி நின்றது.

"நான் ஒன்று சொல்லுகிறேன், கேட்பீர்களா?..."

ஏதோ ஒருவித நம்பிக்கை தோன்றிவிட்டதுபோன்ற உணர்ச்சியுடன் அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

'பேசாமல் எழுந்து குழந்தையையும் எடுத்திண்டு அத்திம்பேர் ஆத்துக்குப் போவோம். நடந்ததை ஒளிக்காமல் அவர் கிட்டே சொன்னால் கட்டாயம் அவர் ஒத்தாசை செய்வார்...'

சிவராமனின் முகத்தில் தோன்றியிருந்த நம்பிக்கை குறி கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பித்தது. தழுதழுத்த குரலில் லீலா! அன்றைக்கு நான் உன்னையும் அவரையும் தூஷித்தது அவ்வளவையும் கேட்டுக்கொண்டு இருந்தாரே. இன்னுமா நமக்கு அவர் ஒத்தாசை செய்வார் என்று நம்பிக்கை உனக்கு?

"நீங்கள் என்னமோ அவரைப் பற்றி ஏதேதோ தப்பெண்ணமெல்லாம் கொண்டிருக்கிறீர்களே தவிர என்றைக்கும் அவர் நம் நன்மைக்காக உழைப்பவர், அன்றைக்குக்கூட குழந்தையின் நிலைமையைப் பார்த்துவிட்டு வைத்தியம் செய்யப் பணம் கொடுத்தார். நீங்கள் தப்பாக நினைத்துவிட்டீர்கள். அவர் என் அன்னையைக் காட்டிலும் மேலான அன்போடு என்னை வளர்த்து வந்தவர்—எழுந்திருங்கள் நாழியாகிறது. பணம் வாங்கித் தருவது என் பொறுப்பு—' என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் லீலா.

சிறிது நேரத்தில் ரமணியையும் எடுத்துக்கொண்டு ஒரு ஜட்கா வண்டியில் அவர்கள் புறப்பட்டனர்.

ஜட்கா விச்வநாதனின் பங்களா வாசலில் நின்றது. மேலே வராண்டாவில் பேபர் படித்துக்கொண்டிருந்த விச்வநாதன் லீலாவும் சிவராமனும் வண்டியில் இருந்து இறங்குவதைப் பார்த்துவிட்டு, கீழே இறங்கி வந்து, 'வா! வா! சிவராமா! லீலா! வா! குழந்தைக்கு உடம்பு தேவலையா!...பாரு! லீலா, ரமணி சிவராமன் எல்லாரும் வந்திருக்கா பார்..." என்று கூறிக்கொண்டே அவர்களை வரவேற்றான் சிவராமன் எதிர்பார்த்ததற்கு நேர் மாறாக நடந்தது. விச்வநாதனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அதில் கோபமோ, ஆத்திரமோ காணப்படவில்லை அதற்குப் பதிலாக சாந்தமும், அமைதியும் புன்சிரிப்பும் குடிகொண்டிருந்தன தான் அன்று அவனைப்பற்றி தூஷித்ததை அவன் கேட்டுக்கொண்டிருந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. ஆத்திரத்தினால்தான் அன்று நடந்துகொண்ட விதத்துக்குத் தன்னைத் தானே நொந்துகொண்டான்.

இதற்குள் லீலா உள்ளே சென்றாள் பார்வதியுடன் ஏதோ பேசினாள். பார்வதி விச்வநாதனை அழைத்து ஏதோ சொன்னாள் விச்வநாதன் மாடிக்குச் சென்று கையில் ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளுடன் கீழே இறங்கிவந்தான். சிவராமன் கண்கள் அதைப்பார்த்து ஆச்சரியத்தால் அகலவிரிந்தன இந்த ஒத்தாசையை அதிலும்தான் அவரிடம் அவ்வளவு கேவலமாக நடந்து கொண்ட பிறகு அவரிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை.

விச்வநாதன் சிவராமனிடம் அந்தப் பணத்தை நீட்டிக்கொண்டே, 'சிவராமா! நடந்த விஷயமெல்லாம் தெரிந்துகொண்டேன்...இதற்காக மனம் உடைந்துபோகாதே!... ஒவ்வொருவரும் தன் வாழ்க்கையில் சில சமயம் தவறு செய்வது சகஜம்... ஆனால் அத்தவறை உணர்ந்தபிறகு தங்கள் வாழ்க்கையைப் புதியபாதையில் திருப்பவேண்டும்.... அவ்வளவுதான்...அதை நீ தெரிந்துகொண்டால் போதும்...எழுந்திரு...சாப்பிட்டுவிட்டு ஆபீஸுக்குப்புறப்படு... என்றான்.

மௌனமாக சிவராமன் பணத்தைக் கையில் வாங்கிக்கொண்டான். அவமானம் ஒரு பக்கம், ஆச்சரியம் ஒரு பக்கம் அவனை பேச முடியாமல் தடுத்துவிட்டது. பலவித உணர்ச்சிகள் ஒன்றுடன் மற்றொன்று மோத சடாரென்று எழுந்து அவன் விச்வநாதனின் கைகளைப் பிடித்துக்கொண்டு. "அன்று நான் சொன்னவற்றையெல்லாம் மறந்து விடுங்கள்...ஏதோ உங்களைப்பற்றித் தப்பாக நினைத்துக்கொண்டுவிட்டேன்... உங்களுடைய பெருந்தன்மை எனக்கு இப்பொழுதுதான் விளங்கியது..." என்றான். இதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை.

"சிவராமா! நான் அதை அப்பொழுதே மறந்துவிட்டேன். கடந்துபோன விஷயத்தை நினைத்துக் கொண்டு வருத்தப்படாதே...பணத்தைக்கொண்டு கட்டிவிட்டு. அந்த வேலையையும் ராஜிநாமா செய்துவிட்டு வந்துவிடு...எங்கள் கம்பெனியில் காரியர் உத்தியோகம் காலியாக இருக்கிறது...அதில் நான் உன்னை அமர்த்துகிறேன்...நீங்களும் இனிமேல் எங்களுடனேயே இருந்துவிடலாம்..."என்றான் விச்வநாதன்.

சமயத்தில் தனக்குப் பணம் கொடுத்து ஒத்தாசை செய்து தன் மானத்தைக் காப்பாற்றி, தன்னைச் சிறைச்சாலையினின்றும் தப்புவித்ததோடல்லாமல் தனக்குத் தன் கம்பெனியிலேயே வேறு உயர்ந்த உத்தியோகமும் கொடுப்பதாக வாக்களித்த விச்வநாதனுக்கு எப்படி நன்றி செலுத்துவது என்று தெரியாமலே சிவராமனின் கண்கள் நீரைச் சொரிந்தன தூரத்தில் நின்று இக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த பார்வதியும், லீலாவும் உணர்ச்சிப் பெருக்கால் கண்ணீர் சிந்தினர்.

# பூர்விகக் கலைச்செல்வம்

ராவி

## மதுரை

**உலகம் ஒருநிறையாத்**
**தானோர் நிறையாப்**
**புலவர் புலக்கோலால்**
**தூக்க-உலகனைத்தும்**
**தான்வாட, வாடாத**
**தன்மைத்தே. தென்னவன்**
**நான்மாடக் கூடல் நகர்**

என்றவாறு, உலகம் முழுமையையும் ஒரு தட்டிலும் மதுரையை மற்றோர் தட்டிலும் வைத்துச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, தானே கனமுடையதாக விளங்கும் புகழ் வாய்ந்த நகரமாக விளங்கும் என்று புலவர்கள் கொண்டாடும் பெருமை வாய்த்தது இந்நகரம். பரதகண்டத்திலேயுள்ள முக்தி தரும் நகரங்களுள் ஒன்றாக விளங்குவதும், ஆலவாய், கடம்பவனம், கூடலம்பதி, சிவராஜதானி, சீவன் முத்தித்தலம், துவாதசாந்தத் தலம், நான்மாடக்கூடல், நீபவனம், மதுரை மூதூர், மாடக்கூடல் என்ற பல பெயர்களால், சிறப்பிக்கப்படுவதும், மீனாட்சியம்மை அரசியாக வீற்றிருந்து ஆளப்பெற்றதும், சுந்தரேசக்கடவுளின் திருவிளையாடல்கள் அறுபத்து நான்கைத் தன்னிடத்திலே ஆட்கொண்டதும், நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் அருட் பாடல்கள் பல பாடப்பெற்றதும், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் முதலான பெரியோர்களின் அற்புதச் செயல்கள் விளங்கப்பெற்றதும், தமிழகம் முழுமையும் தம் ஒரு குடைக் கீழ் வைத்தாண்டும் இமயம் வரை தம் வெற்றியைப் பரப்பியும் புகழ்பெற்ற பாண்டியர் பலருக்கு இராசதானியாய் விளங்கியதும், நக்கீரர் முதலான நல்லிசைப் புலவர்கள் கூடிய தமிழ்ச்சங்கத்தைத் தன்னிடத்தே கொண்டதும், பல மகாத்மியங்களையும், புராணங்களையும், பிரபந்தங்களையும் தனக்கெனவே செய்வித்துக்கொண்டதும், யவனம்,

## 11

## நகர வாழ்க்கை

✯

சீனம் முதலான சேய்மை நாடுகளுடன் உறவு கொண்டதும், கலைகள் பலவற்றின் பிறப்பிடமாகவும் வளர்ச்சியிடமாகவும் விளங்கியதுமான இப்பெரும் நகரத்தைக் கொண்டாடாத நூல்களே இல்லை: இதனைப் புகழாத அந்நிய யாத்திரிகர் இல்லை. இதனுடைய சரித்திரத்தை ஆதிமுதல் இன்றுவரை ஆராய்ந்து தொகுப்பது ஓர் அருங்கலை விநோதமாகும். பண்டைத் தமிழரின் நாகரிகம், கலைச் செல்வம், பண்பாடு இவை படிப்படியாக வளர்ந்து உச்சநிலையடைந்து நின்ற கடைச்சங்க காலத்தில் உள்நாட்டுப் பெருநகர வாழ்க்கை எவ்வாறு அமைந்திருந்தது என்று அறிய உதாரணமாக மேலெழுந்த வாரியாகச் சில கூறவே இந்நகரத்தை இங்கு குறிப்பிட நேர்ந்தது.

சிலப்பதிகாரம் எழுந்தகாலம் ஏறக்குறைய கி. பி. இரண்டாம் நூற்றாண்டென்பர்: கோவலனைக் கொல்வித்த மன்னவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனென்றும், அவனுக்குப்பின் ஆண்டவன் தலையாலங்கானச் செருவென்ற நெடுஞ்செழியனென்றும் கூறுவர். இவ்விருவரைப்பற்றியும் பலசிறப்பான நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் மேம்பட்ட சிலப்பதிகாரம், மதுரைக் காஞ்சி என்ற இரண்டிலும் மதுரை வாழ்க்கை விளக்கமாகச் சித்தரிக்கப் பட்டுள்ளது. அவற்றை ஆதாரமாகக் கொண்டே இங்குச் சில விஷயங்களைக் கவனிக்கலாம்.

## வையை

'உலகுபுரந்து ஊட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப் புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி'என வருணிக்கப்பட்ட வையையாறு நகரத்திற்கு மாலையிட்டதுபோல அதன் இருபுறங்களில் ஓடிற்று. (தெற்குப் பகுதியாறு இப்போது தனியாறுகிக் கிருதமாலை என்ற பெயருடன் வழங்குகிறது) வையையின் வடபகுதியே மிகுந்த சிறப்பு வாய்ந்திருந்தது. சோழ நாட்டிலிருந்து வருபவர்கள் அதைத் தாண்டியே மதுரைக்கு புகவேண்டும். அதற்காகப் பலவகை ஓடங்களும் புணைகளும் அங்கே உண்டு. அவ்வோடங்கள் குதிரைமுகம், யானைமுகம், சிங்கமுகம் முதலியவற்றைப் பெற்றிருக்கும். 'பரிமுக அம்பியும், கரிமுக அம்பியும், அரிமுக அம்பியும் அருந்துறை இயக்கும் பெருந்துறை' என்று சிலப்பதிகாரம் கூறும். அம்பி என்பது ஓடம், பள்ளியோடம், நாவாய் என்ற வேறுவகை ஊர்திகளும் இங்கே உண்டு. இவைகளேயல்லாமல் எளியமக்கள் மரப்புணைகளிலே ஏறியும் அவ்வாற்றைக் கடப்பர்.

அவ்வாற்றைக் கடந்து தெற்கே வந்தவுடன் புறம்சேரி என்ற பகுதி காணப்படும். இது பல பகுதி. பல பகுதிகளையுடையது ஒரு பகுதி பறவைகள் நிறைந்த ஏரிகளும், தண்ணீர் நிறைந்த வயல்களும் ஓடைகளும் தெங்கு, வாழை, கமுகு, மூங்கில் ஆகிய மரங்கள் நிறைந்த சோலைகளும், தண்ணீர்ப்பந்தர்களும் பொருந்தி தபோதனர்களே வசித்தற்கு உரியதாய் விளங்கும். இது நகரத்தின் கீழ்த்திசை வாயிலுக்கு அயலே உள்ளது. மற்றொரு பகுதியில் பாண்டியரும் தோற்கடிக்கப்பட்ட அரசர்களும் நாடிழந்த அகதிகளும் அவரவர்களுக்குரிய இடங்களைக் கொண்ட தெருக்கள் இருந்தன. மற்றொரு பகுதியில் பல பூந்தோட்டங்களுக்கிடையே சிறுதொழில்களைப் புரிந்து வந்த பாணர்கள் குடியிருந்து வந்தனர். பிறிதொரு பகுதியில் இடைச்சேரி விளங்கிற்று. அதைச் சூழ்ந்து கட்டுவேலி யொன்றுண்டு. 'மிளை சூழ் கோவலர் இருக்கை' என்று கூறப்பட்டிருக்கிறது. மிளை கட்டுவேலி. ஆடு மாடுகளை நகரத்துக்கு அப்பாலே வைத்திருத்தல் நல்லதென்ற எண்ணம் அக்காலத்து இருந்ததால் அவ்வாறு அவர்களுடைய சேரி நகரத்துப் புறம்பே அமைந்தது போலும்.



புறம் சேரியை ஒட்டிக் காவற்காடொன்று நகரைச் சூழ்ந்து கிடந்தது. சூரியனுடைய கதிர்கள் நுழைய முடியாதபடி மரங்களை இங்கே வைத்துப் பயிர் செய்திருப்பார்கள். இதனுள் செல்வதற்குப் பழகினவர்களாலேதான் முடியும். பகைவர்களால் இதனைக் கடத்தல் இயலாது.

இக்காவற்காட்டையொட்டி மிக ஆழமான அகழி ஒன்று உண்டு. 'மண் உற ஆழ்ந்த மணி நீர்க்கிடங்கு' என்று இதனைக் கூறுகின்றனர். மண் உள்ளமட்டும் ஆழமாக இதனைத் தோண்டுவார்களாம். இதனில் முதலை, சுறா முதலிய கொடிய பிராணிகள் கிடக்கும். இவ்வகழிகளிலே யானைகளைக் கொண்டு வந்து குளிப்பாட்டிச் செல்வதற்காக தரைக்குள்ளாக இடப்பட்ட சுருங்கை வழியொன்றுண்டு. அல்லாமலும் நகரிலுள்ள சாக்கடை நீரைத் தரைக்குள்ளாலே கொண்டு வந்து சேர்ப்பிக்கும் கரந்து படைகளும் உண்டு. 'கரந்துறை, ஒழுகுநீர் புதவொடு ஒருங்குடன் அறியாதபடி மறைத்துப்படுத்த வழி வாய்த்தலை' என்று அரும்பத உரையாசிரியர் கூறுகின்றனர். பரிபாடலில் 'உயர்மதிலின் நீர் ஊர் அரவத்தால் துயில் உணர்பு எழுமி' என்ற பகுதிக்குப் பரிமேலழகர் 'மதிலிற் சுருங்கையில் நீரோடுகின்ற அரவத்தால் துயிலுணர்ந்து எழுந்து' என்று பரிமேலழகர் உரை கூறுகின்றனர். இவற்றால் நிலத்துக்குள்ளே நீரோடும் வழிகளும், யானைகள் செல்லும் பாதைகளும் அமைக்கப்பெற்றிருந்த செய்தி தெரிய வருகின்றது. பெருங்கதையில் 'பொய்ந்நிலம்' என்பதுவும் இதுவே. பிற்காலத்திலும் தமிழக அரண்மனைகளிலிருந்தும் பெருங்கோயில்களிலிருந்தும் சுருங்கைகள் (சுரங்கங்கள்) அமைக்கப்பட்ட செய்திகளை நாம் கேள்விப்படுகிறோம்.

அகழியை ஒட்டி, நகரைச் சூழ்ந்து வானளாவும் பெரிய மதில்கள் உண்டு. இம்மதில்கள் பல கற்படைகளைப் பெற்றிருக்கும். இம்மதில்கள் நகரைக்காக்கவே அமைந்திருந்தலால் இதனில் பல வீரர்கள் தங்க இடமுண்டு. அல்லாமலும் பகைவர்களைத் தூரத்திலிருந்தே வெட்டித் தள்ளத் தக்க அருமையான பொறிக் கருவிகளும் அங்கே வைக்கப்பட்டிருக்கும். மதுரை மதில்களில் இருந்த இயந்திரக் கருவிகள் பின்வருவனவாகும்:—வளைந்து தானே எய்யும் எந்திரவில்; கரிய விரலையுடைய குரங்குபோலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறி; கல்லை உமிழும் கவண்; கழுக்கோல்போலக் கழுத்திற் பூட்டி முறிக்கும் சங்கிலி; ஆண்தலைப் புள் வடிவாகப் பண்ணிப் பறக்கவிட, உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பொறிகள்; கிடங்கிலேறுபவர்களைத் திரும்பத் தள்ளும் இரும்புக் கவைகள்; கழுக்கோல்கள்; கழுகுபோன்ற இயந்திரங்கள்; அம்புக்கட்டுக்கள்; சிற்றம்புகள் வைத்தெய்யும் இயந்திரம்; மதில் தலையைப் பற்றுவாரின் கையைப் பொருக்கும் ஊசிப்பொறிகள்; பகைவர் மேற்சென்று கண்ணைக் கொத்தும் சிச்சிலிப் பொறிகள்; மதில் தலையில் ஏறினாரைக் கொம்பால் கிழித்துக் கொல்லும்படி இரும்பாற் செய்து வைத்த பன்றிப் பொறிகள்; மூங்கில் வடிவாகப்பண்ணி அடித்தற்கமைத்த பொறிகள்: எழு, சீப்பு, கணையம், கோல், குந்தம் என்ற கதவடைக்கும் கருவிகள்; ஈட்டி முதலியன, சதக்கினி, தள்ளிவெட்டி, களிற்றுப் பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப் பொறி, புலிப் பொறி, குடப் பாம்பு: சகடப் பொறி; தகர்ப்பொறி, அரிநூற் பொறி முதலிய பொறிகள், இவை யாவும் ஞாயில்கள் என்ற மதிற் சூட்டுக்களில் மறைவிடமாக வைக்கப்பெற்றிருந்தன (சிலப்பதிகாரம்) பக் 413-415)

இத்தகைய மதிலுக்குப் பெரிய தொரு வாயிலுண்டு. அதனை யவனர் என்ற துருக்கர்கள் கையும் வாளுமாக நின்று எப்போதும் காவல் புரிவார்கள்.

அக்கோட்டை வாயிலின் நிலை மிக உயரமானது; அதனில் தெய்வம் உறைதலால் அதற்கு வெண்சிறு கடுகு முதலியன அப்புவார்கள். 'ஐயவியப்பிய நெய்யணி நெடு நிலை' என்று நெடுநல் வாடை என்ற நூல் கூறுகிறது. கதவு எப்பொழுதும் நெய் பூசப்படுவதால் கருகிக் கிடக்கும். மேலே மாடம்போலக் கட்டியிருப்பார்கள். 'மழையாடும் மலையின் நிவந்த மாடம்' என்று மதுரைக் காஞ்சி கூறுகிறது மூன்று யானைகள் வெற்றிக் கொடியோடு ஒருங்கே புகத்தக்கபடி கோட்டை வாயில் நீள அகல உயரமுடையதாயிருக்கு மென்று மற்றோர் நூல் கூறுகின்றது. இவ்வாயிலின் மேலே அரசருடைய வெற்றியைக் காட்டும் கொடிகள் பறந்துகொண்டிருக்கும். மதுரை வாயிலின் பெருமையை **நக்கீரர்** **உரைப்பதைக் காண்க:—**

**செருப்புகன்று எடுத்த சேணுயர்**
**நெடுங்கொடி.**
**வரிப்புனை பந்தொடு பாவை**
**தூங்கப்**
**பொருநர்த் தேய்ந்த போரரு வாயில்**

இவ்வடிகளின் பொருள்:—போரை வென்று கட்டிய மிக உயர்ந்த கொடி நாலால்வரிந்துகட்டிய பந்தும் பாவையும் அறுப்பார் இல்லாமையால் வாயில் தொங்கிக்கொண்டு கிடக்கின்றன. போர் செய்வார் இல்லாமையாலே போரற்றுக் கிடக்கிற வாயில்' பகைவரை மகளிராக்கி, அவர்கள் கொண்டு விளையாடும் வண்ணம் பந்தும்பாவையும் கோட்டை வாயிலிலே கட்டப்பட்டிருந்தன. அவர்களுக்கு ஆண்மையிருந்தால் அங்கே வந்து அவற்றை அறுத்திருப்பார்கள்.

இவ்வகைய வாயிலைக் கடந்தவுடன் பரத்தையர்கள் வாழும் வீதிகள் தென்படும். இவர்களைச் சிறுதனக்காரர்கள், பெருந்தனக்காரர் என்று இருவகையாகப் பிரித்திருக்கிறார்கள். இவ்விரு வகையினரும் வெவ்வேறு வீதிகளிற் குடியிருந்தனர். இவர்கள் அறுபத்துநான்கு கலைகளிற்றேர்ச்சி பெற்றிருந்தார்கள். அவற்றைப்பற்றிப் பிறிதொரு கட்டுரையிற்காணலாம்.

அதை அடுத்தது அங்காடி வீதி. அது நாளங்காடி, அல்லங்காடி என இருவகைப்படும். இவற்றை 'ஓவு கண்டன்ன இரு பெரு நியமத்து' என்கின்றனர். சித்திரம்போலக் கண்ணுக்கு இனிமையைத்தரும் நாளங்காடி, அல்லங்காடி என்ற இரு பகுதிகளையுடைய கடைத்தெரு என்பது இதன் பொருள். அல் அங்காடி—மாலைக் கடை. அல் அங்காடியில் ஓசை மிகுதியாயிருக்குமாம்.

இவ்வங்காடித் தெரு கோட்டை வாசலிலிருந்து நேராகத் தொடங்கி வருவதாக மதுரைக்காஞ்சி கூறுகிறது. ஆகவே அது நகரின் நடுவே பிற வீதிகளைப் பிளந்து கொண்டு சென்றது போலும். 'யாறு கிடந்தன்ன அகல் நெடு தெரு'என்று அதனை வருணிக்கின்றனர். இருபுறங்களிலுள்ள வீடுகள் கரைகள்போலவிருந்தன. வீடுகள், மண்டபம், கூடம், தாய்க்கட்டு, அடுக்களை என்ற பகுதிகளைப் பெற்றிருந்தன. வீடுகள் சுடுமண்ணால் ஆனவை. முன்னிடமான மண்டபமே கடைகள் வைக்க உரியது. இவ்வங்காடியிலே பண்டங்களைக் கொள்ளும் பல சாதியார்களும் பல பாஷைகளைப் பேசி இரைச்சலிடுதலால் ஓசை கடலொலிபோல முழங்கிற்று. கோயில் விழாக்களெல்லாம் இவ்வீதியிலே நடைபெறும். பலவகை வாத்தியங்கள் ஒலிக்கும்.

அரசருடைய வெற்றிக்கொடிகளும், விழாக்களிலே எடுத்த கட்டுவட்கொடிகளும், வியாபாரிகள் தத்தம் சரக்குகளைக் குறிக்கக் கடைகளின்மேலே கட்டிய பலவகைக் கொடிகளும் வானத்திலே அருவிகள் ஓடுவனப்போலக் காணும் அரசருடைய யானைகள், குதிரைகள், தேர்கள், காலாட்கள் ஆகிய நால்வகைப் படைகளும் அவ்வீதியின் வழியே சில சமயங்களிற் செல்லும்.

இனி அக்கடை வீதிகளிலே தலைகளிற் சுமந்து விற்கும் பண்டங்களையும் அவற்றை விற்பாரையும் பார்ப்போம். பூந்தட்டுக்களிலே வைத்த பலவகைப் பூக்களை விற்பாரும், பலவகையாகக் கட்டப்பட்ட மாலைகள் விற்பாரும் நன்ருக இடித்துப் பொடியாக்கிய பல நிற வாசனைப் பொடிகள் விற்பாரும், (இவை, நவமணிகள், பொன், சந்தனம், கருப்பூரம் முதலியவற்றைப் புழுகிலும் பனி நீரிலும் நனைய வைத்து இடிப்பது வழக்கம்) கருங்காலி சீவிக்காய்ச்சின களிப்பாக்கும் வெற்றிலையும் விற்பாரும், (அங் கருங்காலி சீவி யூறவைத்தமைக்கப்பட்ட, செங்களி விராய காயும் என்பது சிந்தாமணி) சங்கு சுட்டு சுண்ணும்பு விற்பாரும், பலவகைப் பணியாரங்கள் விற்பாருமாகிய பலர் ஆண்களும் பெண்களுமாகி ஆங்காங்கே விற்றுக்கொண்டு திரிவர்.

அறுத்த சங்கை வளை முதலியனவாகக் கடைபவர்கள், அழகிய மணிகளைத் துளையிடுபவர்கள், பொன்னைப் பணிகலாகப் பண்ணும் பணித்தட்டார்கள், பொன்னை உரைத்துக் காட்டும் உரை வாணிகர்கள், புடவைகளை விற்பவர்கள், செம்பை நிறுத்து வாங்குபவர்கள், கச்சக்களை நன்ருக முடித்து விற்பவர்கள், பூ, புகைப் பொருள்கள், சந்தனம் இவற்றை ஆராய்ந்து விலைகூறுகிறவர்கள், எவ்வகையான சித்திரங்களையும் எழுதிப் பாடமெடுப்பவர்கள், கைகளாலே மெல்லிய புடவைகளை விரித்துக் காட்டி ஏலங் கூறுபவர்கள் முதலியோர் நாலைக் கடக்காரர்கள் ஒருபுறத்திலே அறச்சாலைகளிலே சோறளிக்கும் அமளி முழங்கும்.

ஓரிடத்திலே கம்மியர்கள் தாம் பண்ணி வைத்த கொல்லாப்பண்டி (வண்டிவகை), தேர்வட்டை (சக்கரம்), தேர்மொட்டு இவற்றை விற்பனைக்காக வைத்திருப்பர். படைக்கல விற்பனைச் சாலைகளிலே கவசம், மணிகள் பதித்த அங்குசம். தோல் கைத்தளம், அரைப்பட்டிகை, கட்டுக்குழியம், வெண்சாமரம், பன்றி முகக்கடகு, தோற்கடகு, கானத்துள்ள விலங்குகள் எழுதிய கடகு, செம்பாற் செய்த கருவிகள், வேண்கலத்தாற் செய்தவை, அல்லிக்கயிறு குசைக்கயிறு முதலியன. வாள் முதலிய வெட்டுங் கருவிகள், முதலியன விற்கப்பெறும்.

ஒரு வீதியிலே வயிரம், மாணிக்கம், புருடராகம், வயிடூரியம், நீலமணி, கோமேதகம், முத்து, கொடிப்பவளம் ஆகிய ஒன்பது வகை மணிகளும், அவற்றின் வகைகளும் விற்கும் இரத்தினக் கடைகள் உண்டு. மற்ருெரு வீதியிலே சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்ற நால் வகைப் பொன்களையும் விற்கும் பொன் வாணிகர்கள் தத்தம் சரக்குகளை விளம்பரப்படுத்த வெவ்வேறு தொழில்களைக் கட்டிக்கொண்டு வாணிபம் செய்வர். இன்னொரு வீதியிலே, நூலினும், மயிரினும் நுழை நூற்பட்டினும் நெய்யப்பட்ட மடிகள் நூறு நூருக அடுக்கப்பட்ட புடவைக் கடைகளிருந்தன. இப்புடைவைகளுக்கு வாசனை யூட்டுவது வழக்கமாகையால் வீதியெல்லாம் நறுமணம் கமழும். தானியக் கடைகளிலே எள், கொள், பயறு, உளுந்து அவரை, கடலை; துவரை, மொச்சை முதலிய பலவகைக் கூலங்களையும், மிளகு, பாக்கு முதலியவற்றையும் பறைகளாலும் மரக்கால்களாலும் அளந்து விற்கும் நரகர்கள் அளந்த வண்ணம் நிற்பர்.

இவ்வாறமைந்த கடைத் தெருக்களைத் தாண்டினுல் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகியோர் வாழும் வீதிகளில் காணப்படும். முச்சந்தி, நாற்சந்தி கோயிலங்காடி, பலிவிடும் மன்றிடங்கள், கவர்க்கும் நெறிகள், தேர் வீதிகள் ஆகியவை ஆங்காங்கே குறுக்கிடும்.

சிவபெருமான், முருகன், பலதேவன், திருமால் முதலிய தெய்வங்களுக்கெடுத்த கோட்டங்கள் நகரிற் பலவிடங்களிலுண்டு. அரசனுடைய அரண்மனை ஊரின் நடுவிலிருந்தது அதனைச் சூழ்ந்து படைத்தலைவர், அமைச்சர், ஐம்பெருங்குழுவினர், எண்பேராயத்தார். அரசனின் சுற்றத்தார் முதலியோர் தத்தம் வீதிகளிலே வாழ்ந்து வந்தனர். அந்தணர், ஜைனர், பௌத்தர், தருமோபதேசகர் முதலியோர் தத்தமுக்குரிய வீடுகளிலும், பள்ளிகளிலும், அவையங்களிலும் இருந்து தத்தம் ஒழுக்கங்களில் தவருதவர்களாய் நடந்து வந்தனர்.

அறங்கூறும்
அவையத்தார்கள்
அச்சமும் அவலமும்
ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும்
செய்யாது காத்து,
ஞெமன்கோ லன்ன
செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை
அறங்கூர். அவைய'

இருந்து, தராசின் முள்போல் நடுநிலை வகித்து நீதிமொழிந்து வந்தனர்.

அமைச்சர்கள்,

நன்றும் தீதும்
கண்டு ஆய்ந்து அடக்கி,
அன்பும் அறனும்
ஒழியாது காத்து,
பழிஞசி உயர்ந்து
பாய்புகழ் நிறைந்து

விளங்கினர்கள்.

செல்வர்கள் தோளிலே மேலாடையும், காலிலே கோத்துக்கட்டிய வீரக் கழலும் கழுத்திலே செங்கழுநீர் மாலையும் முத்துமாலையும் கொண்டு கையிற் பிரம்புகொண்டும் ஏழைகளுக்குத் தானங்களை வழங்கிக் கொண்டும் வீதிகளிலே திரிந்தனர். அவர்களுடைய பெண்டிர் பலவகை ஆபரணங்கள் மின்ன, உடலெல்லாம் புனுகு பூசி மணம் கமழ, மகாக்குழை தொங்கும் காதோடு, தங்கள் இல்லங்களின்மாடங்களிலே நின்றுகொண்டு, கொடிகளுக்கிடையே விளங்கிய தோற்றம் மஞ்சிலே மறையும் மதிபோல் தோன்றிற்று.

நடுச் சாமத்திலே ஊர்க்காவலர் கள்வர்களை நாடி, யானையை நாடித் திரியும் புலிபோலே. தூங்காத கண்ணராய், அஞ்சாக் கொள்கையராய், அறிந்தோர்புகழ்ந்த ஆண்மையராய், நூல்வழிப் பிழையாத அறிவினராய் நகரைக் காவல்புரிந்து வந்தனர்.

விடியற்காலத்திலேயே, பொய்கைகளிலே பூக்களில் தாதையுண்ணும் தும்பிகள் பாடினாற்போலே அந்தணர்கள் தெய்வங்களைத் துதித்துப் பாடினர்: யாழோர் தாளத்துடன் இனிமையாக யாழ் வாசித்தனர்: யானைப் பாகர் யானைகளுக்குக் கவளம் ஊட்டினர், குதிரைகள் புல்லைக் குதட்டின: வீட்டிலுள்ளார் வாசற்புறங்களைப் பெருக்கி, மெழுகி, கோலமிட்டு, அறுகம் புல்லையும் அக்ஷதையையும் இல்லுறைத் தெய்வத்திற்குக் கொடுத்தனர்; ஊர் பெருக்குகிறவர்கள் கையிற் பிடித்த அலகாலேசெற்றை குப்பைகளை வாரி அப்புறப்படுத்தினர். (கலித்தொகை II(?)) அரண்மனையிலே. சூதர் வாழ்த்தினர். வைதாளிகர் நாழிகை சொல்லினர்; பள்ளியெழுச்சி முரசங்கள் ஒலித்தன; காளைகள் முழங்கின: கோழிச் சேவல் கூவிற்று; அன்னச் சேவல்கள் தம் பேடைகளை அழைத்தன. மயில்கள் அகவின; யானைகள் முழங்கின கூட்டிலே கண்காட்சிச் சாலைகளிலே வைக்கப்பட்ட புலி, கரடி முதலிய முழங்கின. வண்டுகளும் ஆரவாரித்தன.

இவ்வாறு விடியலில் மதுரை அஷ்டைசுவரியங்களுடன் விளங்கிற்று.

—::—



# குடும்ப வைத்தியம்

...குச்சர்மாமா...

சென்ற சில தினங்களில் நான் சந்தித்த சிலர் வீடுகளில் நடந்த சம்பவங்களையும், சம்பாஷணைகளையும் தெருவிக்கிறேன்.

"இந்தக் குழந்தை எப்பொழுதும் கண்டதையெல்லாம் தின்கிறது மண், செங்கல், கரி, சாம்பல், சாக்குக்கட்டி, நாமக்கட்டி, பருப்பு தினுசுகள் மற்றும் பச்சையாகவே காய் கிழங்குகள் எல்லாம் திருடித் தின்கிறது. ஒருநாள் பச்சைக் காயாக்கும் என்று எண்ணி, பிரண்டையைத் தின்றுவிட்டு வாயில் அரிப்பு எடுத்துக்கொண்டு அழ ஆரம்பித்து விட்டது. இரண்டுமணி நேரம் தவித்துப்போய்விட்டது. இது ஏன் இந்தக் குழந்தை இப்படி பண்றது? இதுக்கு என்ன பண்ணலாம்?" என்ருர்.

"காரணத்தைப்பற்றி இப்போது சொல்லி பயனில்லை." என்றதும்—"அதேன் அப்படி? என்ன காரணத்தால் இப்படி பண்றதுன்னு தெரியனமோல்லியோ?" என்று இரண்டாவதும் கேட்டார்.

"சிரமப்படியல்லாது முன்னதாகவே தாய்ப்பாலை மறக்கடிப்பதால் இது ஏற்பட்டிருக்கலாம். பல் முளைக்குங் காலத்தில் இவ்விதம் ஏற்படுவதும் குழந்தைகளுக்கு அஸாதாரணமல்ல இதை கவனிக்காத காரணத்தால் கண்டதைக் கடிக்கவும் மெல்லவும் குழந்தை ஆரம்பிக்கிறது பிறகு இது ஒரு பழக்கமாகிவிடுகிறது."

"ஒரு ஸிப்பிளை சீவிக்கொடுத்தால் இப்படியாகாதாக்கும்."

"பிறகு ஸிப்பிளை எடுத்தால் விரலைச் சப்ப ஆரம்பிக்கும். இந்தப் பழக்கம் நெடுநாள் வரையில் நிற்குமே."

அதற்குள் வேறொருவர் குறுக்கிட்டு "போறுமே நம்ம பேபி இந்தக் கட்டை விரலை வாயில் போட்டுக்கொண்டு பழக்கம் பண்ணிடுத்து. அடிச்சாகூட இப்பவும் விடமாட்டேங்கறது. க்ளாஸிலேகூட இப்பவும் தனக்கே தெரியாதே மறந்தாப்பலே வாயிலே விரலைப் போட்டுண்டுடறதாம். ராத்திரிலே படுத்துண்டு தூங்கச்சே ஒருநாள் தப்பாதே வாயிலே விரல். என்ன பண்ரது. பூனைல் போட்டாகனும். இப்படி இருந்தா எச்சல் தெரியாதே."

"பேபி" என்பது மூன்ருவது பாரத்தில் வாசிக்கும் சிறுவன் கேள்விமாரிகளைத் தொடங்கிய அம்மையின் பேரன். இடைமறித்துச் சொன்னது "பேபி"யின் தாயார்.

"இதற்கெல்லாம் அடிப்படையான காரணத்தை இன்றல்ல, அன்றே தடுத்திருக்கவேண்டும். வீட்டில் தின்பண்டங்கள் செய்யும்போது "சீப்பான்" என்று ஒன்றுண்டாக்குவதுண்டு. சீடை, முறுக்கு முதலியவை உண்டாக்கும்போது அவற்றின் மாவினுல் விரல் நீளத்தில் ஒன்றையுண்டாக்கி நெய்யில் வேகவிட்டுக் கொடுப்பர். குழந்தைகள் இதை வாங்கி வைத்துமென்றுகொண்டே இருக்கும் ரொம்பவும் கடினமானதால், உடனே மென்று தின்றுவிட முடியாது. நனைந்து நனைந்து, வாயில் ஊறி ஊறி— சுவைக்க மட்டுமியலுமே யன்றி தின்னமுடியாது. இதனுல் ஒருமாதிரி நாக்கின் தினவைப் போக்கி, கண்டதை மெல்ல வேணுமென்ற அவாவைத் தவிர்க்க முடியும்."

"அதை இப்பச்சொல்லி என்ன பண்றது.?"

"அதுதான் நானும் முதலில் சொன்னேன். கூடியவரையில், குழந்தை கண்டதையும் தின்னுமல் பார்த்துக் கொள்வதென்றுதான் இப்போது செய்யமுடியும். பேபிக்கு வேணுமானுல் "குயிங்கம்" என்பதைக் கொடுத்துப்பாருங்கள். படுக்கும்போது விரலில் துணியைச் சுற்றி அதில் கொஞ்சம் கசப்பான ஒன்றை தடவிவிடுங்கள். தூக்கத்தில் விரலைச்சப்பமாட்டான்."

அப்போது, டி. கண்டதைத் தின்னும் குழந்தையின் சிறு தாயார் குறுக்குட்டு,

"இப்படித்தான் நம்ப லக்ஷ்மி மொலாம்பழம் சாப்பிட பிடிவாதம் பிடிக்கும். சின்னதா ரெண்டு சாப்பிட்டாக்கூட வயத்தாலே போக ஆரம்பிச்சுடும். அதுக்காக மொலாம் பழம் கொடுக்கமாட்டேன்னுலோ அழ ஆரம்பிச்சிடும். அதற்காக ஒருநாள் ஒரு சின்ன மொலாம்பழம் துண்டுலே ஒரு சொட்டு வேப்பெண்ணெயை தடவிட்டுக் கொடுத்துப் பார்த்தோம். குழந்தை அதைக் கொஞ்சம் ருசி பார்த்துட்டு தூ! தூ! ன்னு துப்பிட்டு இது கசக்கும் என்றுவிட்டது! அன்னிலேந்து மொலாம் பழத்தே நாமாகொடுத்தாக்கூட கசக்கும், எனக்கு வேண்டாம்னு ஓடிவிடுகிறது" என்று சொல்லி இடி இடி என்று சிரித்தாள்.

ஆமாம் அதுபோலத்தான் ஒவ்வொரு பிடிவாதத்தையும், வேண்டாத பழக்கங்களையும் போக்க, ஸந்தர்ப்பத்துக்கேற்ற மாதிரி ஒவ்வொரு உபாயத்தைத் தேடியாக வேணும்" என்றேன். இதே ஸந்தர்ப்பத்தில் தெரிவித்த வேறு சில விஷயங்கள்.



கம்யூனிஸ்டுகள் வசமான ஷாங்காய் நகரத்தின் தோற்றம்.

மணத்தக்காளி இலையின் இரசம் ஒரு ஸ்பூன், தேன் அரை ஸ்பூன் இவற்றை ஒன்றாய்த் தேய்த்து குழந்தையின் நாக்கில் தடவி இருந்தால் பிரண்டையை மென்றதால் உண்டான நமச்சல் போயிருக்கும்.

அவரையிலையைக் கசக்கி பிழிந்த ரஸத்திலும் இதேபோல் தேனைக் குழப்பித் தடவலாம்.

கோவையிலையின் ரஸமும் இதே போல் உதவும், சுண்ணாம்பு, முதலியவற்றை மென்றுவிடுவதால் நாவு வெந்து போகலாம். மஞ்சளைத் தேய்த்து இதேபோல் நாவிலும் வாயிலும் விரலாலெடுத்துத் தடவுவதால் வேக்காடு ஏற்படாமல் தடுக்கலாம். அதிகம் சூடுள்ள தின் பண்டங்களை அவசரமாக எடுத்து தின்ன வாயிலிட்டுக்கொண்டு குழந்தை துடிதுடித்து நாவையும் கொளுத்திக் கொண்டுவிடும். இதிலும் மேற்சொன்னதுபோல் மஞ்சளைத் தடவலாம். மணத்தக்காளி இலையின் ரஸத்தையும் தேனையும் கூட்டிக் குழைத்துத் தடவலாம்.

"அதெல்லாம் ஸரிதான்—இந்த வெயில்லே அம்மை குத்திவந்து குழந்தைக்கு அம்மேயே குத்திப்பிட்டான்—அதன்னடான்னு ஏகத்துக்கு பூரிச்சிண்டு புண்ணாய்ப் போயிடுத்து. குழந்தை அதைக் கண்டபடிக்கிலும் தேய்ச்சுண்டுடறது. அங்கங்கயும் புண்ணாப்போயிடறது. உடம்பெல்லாம் அந்த சூடுதானோ என்னமோ-வேர்க்குருமாதிரி இப்படி (குழந்தையைக் கொண்டுவந்து காண்பித்து) வாரிக் கொட்டி இருக்கு."

"தேங்காயின் பாலில் $\frac{1}{4}$-படி எடுத்து, ஒரு ரூபாயிடை இதில் கடுக்காய்ப் பொடியைக் கூட்டி அடுப்பிலேற்றிக் காய்ச்சுங்கள். பால் சுண்டி தேங்காய் எண்ணெய் வந்து அதில் கடுக்காய்த்தூள் வறுபட்டுக் கறுகும். இதைத் தடவி, பயத்தம்மாவால் தேய்த்துக் குழந்தையைத் தினமும் குளிப்பாட்டுங்கள். காசி மண்ணைப் பாலில் ஊறவைத்துக் கலக்கித் துணியில் வடிகட்டி, வெயிலில் உலர்த்தி வில்லைகளாகத் தட்டி பத்திரமாக வைத்துக்கொள்ளவும். ஒரு செட்டி பாலைச் சந்தனக்கல்லில் விட்டு ஒரு காசிமண் வில்லையை இதில் தேய்த்து சாந்துபோல் வரும்போது எடுத்து, புரிந்திருக்கும் அம்மைகளின்மேல் தடவிவைத்தல், ஜலம் வறியாது. அது பல இடங்களிலும் பரவாது. ஆங்காங்கும் புண்களும் வராது."

"இன்னும் எத்தனையோ உங்களிடம் இப்படிக் கேட்டுக்கறோம். உங்களுக்கு தெரிந்தால் இப்படி வந்துண்டு போயிண்டிருந்தேன்னு இதெல்லாம் கேட்டுக்கலாம். தெரியறதே."

"தெரியறப்போதெல்லாம் கட்டாயம் வருகிறேன். நீங்கள் கேட்பதிலெல்லாம் தெரிந்த வரையில் பதிலும் சொல்கிறேன்.





சென்ற வாரம் சென்னை விஜயம் செய்திருந்த ஆசார்ய விநோபாபாவே மயிலை ஸ்ரீனிவாஸ சாந்தி நிலயத்தில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் முக்தி அடைவதற்கான மார்க்கம் பக்தியும், சேவையும் என்பதை வலியுறுத்திப் பேசினர்.



டேராடூனில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தின் தோற்றம்.



(இடது)

இதோமாதிரிவிமானத்தை ரேடியோ மூலம் பறக்கச் செய்யும் காட்சி. தரையிலிருந்தே இதன் வேகத்தைக் கட்டுப்படுத்த இயலும்.

(வலது)

கப்பல்கள், விமானங்கள், கார்கள் இவற்றைரேடியோவைக்கொண்டு இயக்கி வைக்கும் சாதனம் இப்போது கண்டு பிடிக்கப்பட்டுளது. இதை 3 மைல் தூரத்திலிருந்து இயங்கச்செய்யலாம் ஹாலண்டில் இது சமீபத்தில் செய்து காட்டப்பட்டது. ரேடியோவினால் இயங்கும் கப்பலின் தோற்றம்.

(கீழ்)

ரேடியோவை 'விமானத்தில் பொருத்தி பறக்க விடுகையில் எடுத்த படம். ஹாலண்டு லேசல் ஜர்கள் இதைப் பார்வையிடுகின்றனர் இத்தகைய 'மாடல்''களைப் பிரிட்டிஷ் கம்பெனியொன்று தயாரித்துள்ளது.







# சுந்தரியின் கணவன்

சுந்தரி ஒரு இளவரசி. பதினாறு வயதுடைய அழகி. அவள் தோழிகளுடன் நந்தவனம் சென்றாள். வேடிக்கையாகப் பந்தாடினாள் அவள் ஆடுவதற்கு அரசன் ஒரு பொன் பந்தைக் கொடுத்திருந்தான்.

பந்தை உயரமாகப் போட்டுப் பிடித்தனர்; ஓங்கி அடித்தனர் ஒரு சேடி பந்தை எறிந்தாள். சுந்தரி அதைப் பிடிக்க முயன்றாள் முடியவில்லை பந்து கீழே விழுந்து உருண்டது அருகே ஒரு ஆழமான கிணறு—அதிலே விழுந்து விட்டது பந்து சுந்தரி கதறினாள் சேடிகள் பதறினர்.

'ஐயோ! என் அழகான பந்து தொலைந்துபோய்விட்டதே. யாரவது அதை எடுக்க முடியுமா? எடுத்துத் தந்தால் எது வேண்டினாலும் தருவேன் என்று சுந்தரி கூறினாள். சேடிகள் ஒருவர்முகத்தை ஒருவர் பார்த்தனர் முடியாது எங்களால் என்று உதட்டைப் பிதுக்கினர்; கைகளையும் விரித்து விட்டனர்.

"சுந்தரி! நீ வருந்துவது ஏன்!" என்று ஒரு குரல் கேட்டது எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். என்ன விந்தை! அங்கே கிணற்று அருகே—ஒரு பெரிய தவளை குதித்தது பெண்கள் அதனை அருவருப்புடன் பார்த்தனர்.

"சீச்சீ! அற்பத் தவளையே! உனக்குச் சொன்னால் என்ன பலன் உண்டு? என் பந்து கிணற்றில் விழுந்துவிட்டது. எடுத்துத் தர இயலுமா உன்னால்?" என்று சொன்னாள் சுந்தரி.

"என்னைத் தாழ்வாக...இழிவாக எண்ணாதே சமமாக உன்னுடன் நடத்துவதாகச் சொல்லு பந்தை உடனே எடுத்து விடுவேன். எனத் தவளை கூறியது.

கழுதையின் காலைக்கூடப் பிடி, காரியம் முடிந்தால் சரி ஆகவே சுந்தரி இணங்கினாள். "நீ பந்தை—என் பந்தை—பொன்பந்தை எடுத்துக்கொடு. விரும்பியது கிடைக்கும். இது உண்மை" என்று உறுதியாக உரைத்தாள்

அடுத்த விநாடியில் தவளை 'தொப்' என்று கிணற்றில் குதித்தது. தண்ணீரில மூழ்கியது நீர்க் குமிழிகள் பல கிளம்பின; 'சள பள' என்று வெடித்தன மறு விநாடி தவளை மேலே வந்தது. அதன் சிறு கைகளால் பந்தை ஏந்தியது. வாயும் கௌவி இருந்தது பந்தைப் பெற்றுக் கொண்டாள் சுந்தரி. அவள் முகம் மலர்ந்தது. சேடிகள் குதூகலமாகக் கூச்சலிட்டனர் எல்லோரும் ஆனந்தமாக ஆடினர். பாடினர்—பேசிக்கொண்டே போய்விட்டனர். பாவம் தவளையை எல்லோரும் மறந்துவிட்டனர் ஆனால் தவளை மறந்து விடுமா?



'சுந்தரீ! சுந்தரீ! என்னையும் அழைத்துப்போ சொன்னபடி செய். இல்லாவிடில் வம்பு வரும். என்று பல விதமாகக் கூறியது தவளை அதன் கூச்சலைக் கேட்க யாரும் அங்கில்லை,

மறுநாள் காலை சுந்தரி அரண்மனையிலே, ஒரு மாடியிலேஇருந்தாள். பலகாரங்கள் ஒரு தட்டிலே இருந்தன எதிரே இருந்தாள் சுந்தரி சாப்பிட ஆரம்பித்தாள். 'டொக், டொக்' என்ற சப்தம் கேட்டது சலவைக் கற்களால கட்டியது மாடிபடிகள் அங்கே யாரோ வருவதாகத் தெரிந்தது, கதவும் தட்டப்பட்டது.

"கதவைத் திறந்திடு என் கண்ணே சுந்தரி கதவைத் திறந்திடு 'என் அன்பே சுந்தரீ! சத்தியம் செய்வதோ சத்தியம்செய்த பின்?

பாட்டு தெளிவாகக் கேட்டது. சுந்தரி ஓடிச் சென்றாள். தாளைத் திறந்தாள் தவளையைக் கண்டு 'டார்' எனக் கதவை மூடினாள் தவளையை அடியுடன் மறந்தே போயிருந்தாள். இப்போது கண்டு மிகவும் பயந்தாள்; கலங்கிப் போனாள்.

"சுந்தரீ! நீ ஏன் பயந்து கூச்சலிட்டாய்? அங்கே நீ யாரைப் பார்த்தாய்?" என்று அரசனும், அரசியும் கேட்டனர்.

"அங்கே ஒரு தவளை-அசிங்கமான தவளை இருக்கிறது. நேற்று பந்து தந்த தவளை அது தான் உள்ளேவர முயல்கிறது" என்றாள் சுந்தரி. அவள் உடல் பதறியது-வியர்த்தது; நாக்குழறியது. அதேசமயம் கதவு தப, தப' எனத் தட்டப்பட்டது

"கதவைத்திறந்திடு என் கண்மணி சுந்தரீ." என்று தவளை பாடியது.

'சொன்னசொல் தவறலாமா-மீறலாமா? சுந்தரி! என் மகளே! வாழ்வு சிறியது: மானம் பெரிது-விலை மதிப்பில் உயர்ந்தது. உன் வாக்கை காப்பாற்று. ஊம். போ" என்றான் மன்னன்.

சுந்தரி சென்றாள்; கதவைத் திறந்தாள். தவளை தாவிக் குதித்து வந்தது." அரசே! வணக்கம்: அரசியே உனக்கும்! சுந்தரீ! என் ஆவலைப் பூர்த்தி செய்வது உன் பொறுப்பு. நான் உன்னுடன் உன் தட்டிலேயே சாப்பிட வேண்டும். என்னை மேஜைமேல் விடு" என்றது தவளை.

சுந்தரி தவளையைத் தூக்கிவிட்டாள். அது வயிறுபிடித்த அளவு சாப்பிட்டது. "விசித்திரமே!" என்றுவருத்தமுடன் பார்த்தனர் மற்றவர்கள்.

"சுந்தரீ! நான் சாப்பிட்டது போதும். இனி களைப்பாற வேண்டும். உன் படுக்கைக்கு எடுத்துச்செல் என்னை!" என தவளை கட்டளை இட்டது. சுந்தரி அதனை எடுத்துச்சென்றாள் ஒரு சிறிய தலையணை மேல் அதனை வைத்தாள் தவளை உறங்கிவிட்டது!

விடியற்காலை. கோழி கூவியது: கிழக்கு வெளுத்தது தவளை சிடேரெனத் துள்ளி எழுந்தது சுந்தரியும் உடனே எழுந்தாள். அவள் இரவு முழுவதும் தூங்கவே இல்லை. துக்கமும், யோசனையும் இருக்கும்போது தூக்கம் எப்படி வரும்? தவளை எங்கோபோயிற்று." சனி விட்டது; இனி நிம்மதிதான்' என்று எண்ணி சுந்தரி தூங்கினாள்.

அன்றுமாலைதான் எழுந்தாள். அதுவரை யாரும் அவளை எழுப்பவில்லை: தவளையும் வரவில்லை. இருள் படர ஆரம்பித்தது. எல்லாரும் சாப்பிடும் நேரம். 'டக்,டக்' என்ற சப்தம்-கதவைத்திறந்திடு என்கண்மணி சுந்தரீ-என்ற பாட்டு; தவளை மறுபடி வந்துவிட்டது: உன்



டது, உறங்கியது மூன்று இரவும் இப்படியே. அதன் தன்னை அறியாமல் சுந்தரி தூங்கி விட்டாள்!

நான்காம்நாள் சுந்தரி விடியற்காலையில் எழுந்தாள். என்ன ஆச்சரியம்! அவள் படுக்கையின் மேல் தவளையைக் காணோம் அதைவிட வியப்பு!......அழகு அழகிய அரசகுமாரன் ஒருவன் இருந்தான்.

'சுந்தரீ! ஒரு வனதேவதை என்னைத் தவளையாகச்சபித்தாள் ஒரு சிறுதப்புக்கு! மூன்று இரவுகள் ஒரு இளவரசியுடன் தங்கினால் சாபம் நீங்கும்" என்றாள். அதன்படி இருந்தேன்; பழைய உரு அடைந்தேன் என்னை மணக்க சம்மதிப்பாயா?" என்று கேட்டான் இளவரசன்.

'மனப்பூர்வமாக" என்றாள் சுந்தரி. நன்னாளிலே இருவரும் மணம் செய்துகொண்டனர். அரசனும் அரசியும் வாழ்த்தினர்; குடிகள் கல்யாணவிருந்து சாப்பிட்டுக் களித்தனர்.


தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.

(பிராஞ்ச்: மன்னார்குடி.)

**சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்**

**கோகுல் கூந்தல் தைலம்**

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.



Estd: 1920

சேலம்
மூன்று தாமரை
பீடிகளை உபயோகித்து,,
சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd. No. 2221.

Prop: S. துரைசாமி உடையார்,
கோட்டை, சேலம் S.I.R.



## பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்

காயகசிகாமணி அரியக்குடி.
ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:

| | | |
|---|---|---|
| 1 | அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு | ரூ 8 0 0 |
| 2 | திருப்பாவை 30 பாட்டுக்கு | ரூ. 7 8 0 |
| 3 | பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு | ரூ. 6 0 0 |
| 4. | ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு | ரூ. 3 0 0 |

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால்
ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு | ரூ. 3 12 0 |
| 2. | ஸ்வாதித் திருநாள் 80-க்கு | ரூ. 20 0 0 |

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபமாக இல்லை. தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும

தபால் செலவு பாத்தியேகம.

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை.
மவுண்ட் ரோடு, சென்னை.


Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press. Victory House Mount Road, Madras Editor: C. R Srinivasan B. A.

நவரத்ன நகைகள்

விவாக பரிசுகள்



விஷயம் தெரிந்தவர்கள் பரிசு வழங்க நகைகளையே தேர்ந்தெடுப்பர். ஏனெனில் இந்த ரத்னங்கள் பதித்த நகைகள் தலைமுறை தலைமுறையாக புகழுடன் விளங்குபவை என்பது அவர்களுக்குத் தெரியும்.

இதர பரிசுகளைப்போலின்றி, நகைகள் வருஷக்கணக்காக உழைக்கும். தேயாது, கெடாது, அழியாது. பரிசளித்தவரின் ஞாபகமும் என்றும் மறக்காது.



எங்கள் வசமுள்ள ஏராளமான மோதிரங்கள், புரோச்சுகள், பெண்டன்டுகள், நவரத்தினங்களிலிருந்து உங்களுக்கு வேண்டிய நகைகளை தெரிந்தெடுங்கள்.

சிறிய தொகையான 50 முதல் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொகைகள்வரை உங்கள் உத்தேசத்திற்கு தகுந்த மதிப்பில் நாங்கள் அழகிய நகைகளையளிக்க முடியும். எமது ஐம்பது வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமும் நாணயமான வியாபாரத்திற்காக எமக்குக் கிடைத்துள்ள கீர்த்தியும் உங்களுக்கு உத்தரவாதமளிப்பவை.

ஸூரஜ்மல்ஸ்

1895ல் முதல் நாணயத்துக்கு
பெயர்பெற்ற நகை வியாபாரிகள்.

இவை
பரம்பரையான
பொக்கிஷங்கள்

313, நேதாஜி ரோட் :: சென்னை.



# சுதேசமித்திரன்

41

12–6–'49 THE SWADESAMITRAN WEEKLY விலை அணா 4




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 JUL 1949
MADRAS




தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

**WOODWARD'S GRIPE WATER**

*keeps baby well*

(WW/108-11) ... W. WOODWARD LTD. LONDON ENGLAND



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 JUL 1949
MADRAS

# சிறு விளம்பரங்கள்

உயர்ந்த ஜவுளிகள்
கிடைக்குமிடம்

## V. N. சுப்ரமணிய அய்யர்

ஜவுளிக்கடை

ராஜ வீதி : கோயமுத்தூர்

H. O. பெரிய தெரு,
கும்பகோணம்.

---

ஆபீஸ்: ஸ்தாபிதம் 1924.

## பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். 1வருஷ பலன் மாதவாரி எழுத ரூபா 5 ஆருடம் மூன்று கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காமியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோ நிதி," தியாகராய நகர்,
மதராஸ் 17. தபால் பெட்டி 1417.

---

## உயர் ரக கைக்கடியாரங்கள்



ஸ்விஸ் தயாரிப்பு. 7-ஜூவல் உத்தரவாதம், 4 ஜுவல் குரோமியம் கேஸ் வட்ட ஷேப் ரூ.12 நெக்கது ரூ.13. நீண்ட சதுர குரோமியம் கேஸ் 6 ஜுவல் ரூ. 18. ரோல்டு கோல்டு 12 வருஷ உத்தரவாதம். 7 ஜுவல் ரூ. 25. நெக்கது ரூ. 27. ஸ்பெஷல் 15 ஜுவல் ரூ. 30. செண்டர் செகண்ட் ரூ. 10 பாக்கெட் வாட்ச் ரூ. 9. அலாரம் டைம்பீஸ் ரூ. 14. நெக்கது ரூ. 15. தபால் செலவு அணா 14.

FRENCH COMMERCIAL STORES, (R.M.)
P. B. No. 12216, CALCUTTA. (5)

---

ஜோதிஷ வித்வான்

## V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு,
தியாகராய நகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு ரூ. 2
மேல் கேள்வி ஒன்றுக்கு அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 8.
பிறந்த ஊர். தேதி. மணி தேவை.
வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

---

## ஜீவ வசிய பரம ரஹஸ்யம்

ஹிப்னடிஸம், மெஸ்மெரிஸம் முதலிய கலைகளைக் கற்றுத் தேர்ச்சிபெற விரும்புவோருக்கும், பல அற்புதானந்த ரஹஸ்யங்களை அறிந்துகொள்ள விரும்புவோருக்கும் இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும். ஹிப்னடிஸ தத்துவங்களைமட்டும் கூறும் நூலன்று. அந்த மெஸ்மெரிஸ வித்தையை எப்படிக் கற்றுக்கொள்வதென்பதை சவிஸ்தாரமாக விளக்கும் அருமையான நூல் இதுவரை தமிழில் யாரும் வெளியிடவில்லை. விலை ரூ. 4-8-0. தபால் செலவு 9 அணா.

ஷாஜஹான் புக் டெப்போ,
460, திருவல்லிக்கேணி ஹைரோட்,
சென்னை 5.

---

## சக்தி ஆருடம்!

தபால், தந்தி இலாகா ஆபீசர் Sri K. S. சுப்பய்யா B. A., 23—5—48ல் எழுதுகிறார்:—"தாங்கள் கூறியபடியே நான் பிரமோஷனுடன் கெஜட் பதவி உத்தியோகம் பெற்றேன்."

3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ 5 ஜாதகம் கணிக்க ரூ 2 சக்தி கவசம் ரூ 7—8—0. வி பி. பி. தனி. ஜாதகம் அல்லதுகடிதம் எழுதும நேரம் தேவை. N. B:—வெளி நாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம் P. O. (S. I.)

---

புது ரக பட்டு & நூல்
ஜவுளி தினுசுகளுக்கு

## குடந்தை V. S. R

ஜவுளிகடைக்கு விஜயம்செய்து மேலும் ஆதரிக்ககோருகிறோம்.

சுப்ரமணிய விலாஸ்,
பெரிய தெரு, கும்பகோணம்

பிராஞ்சு:
ஸ்ரீ காமகோடி வஸ்த்ராலயம், மாயவரம்.

---

## குறைந்த கட்டணத்தில் உயர்தர ஜோதிடம்!

இந்த அரிய சந்தர்ப்பத்தை உடனே பயன்படுத்திக்கொள்ளுங்கள் !

ஆயுள் பூராவும் எல்லாத்துறைகளிலும் பலன்கள் அறிய ரூ. 5.

உங்கள் அற்புத வாழ்க்கைச் சித்திரம் ரூ. 2.

கேள்வி 5-க்கு ரூ. 1—4—0.

ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை.

ஸாயி ஆஸ்ட்ரல் ஸ்டுடியோஸ்,
உறையூர் — திருச்சி.

---



# சுதேசமித்திரன்

## வாரப்பதிப்பு

### ✡பொருளடக்கம்✡


| | | பக்கம் |
|---|---|---|
| மறந்த நீலை | வித்தியா | 5 |
| மூன்று சிநேக மணிகள் | லட்சுமி அம்மாள் | 9 |
| சொப்பன வாழ்க்கை (தொடர்கதை) | 'ஆர்வி' | 11 |
| உங்கள் கால பலன் | பீ. வி ராவ் | 17 |
| கலா மண்டபம் | | 23 |
| எழுதுவது எப்படி? | கபி | 29 |
| பூர்விகக் கலைச் செல்வம் | 'ரவி' | 32 |
| தேர்த்தட்டு வார்த்தை | வாரன் | 35 |
| யோக க்ஷேமம் | குங்குமம் | 37 |
| பெரிய புராணம் | பி. ஸ்ரீ. | 41 |
| ஆளப் பிறந்தவள் (சிறுவர் கதை) | லைபங்காநாடு | 45 |


"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும், பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.




சுதேசமித்திரன் வாரப்பதிப்பு

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

Vol. XX] விரோதி௵ வைகாசி௴ 30௳ ★ 1949-௵ ஜூன்௴ 12௳ No. 19



OFFICE OF THE REGISTRAR OF ... 5 JUL 1949


# ஆட்சேபனை என்ன?

இன்றைய பொது வாழ்வில் ஒற்றுமை உரம் பெறவேண்டும் இதற்கு முதல்படியாக சட்டசபைப் பிரதிநிதித்துவம் சர்க்கார் உத்தியோகம்போன்ற பொதுத் துறைகளில் பழைய அந்நிய அதிகார வர்க்கம் ஏவிவிட்ட ஜாதி-வகுப்புப் பிரிவினைப் பேயை மடியச் செய்ய வேண்டும் என்பதில் அபிப்பிராயபேதம் கிடையாது. சென்னை சர்க்கார்கூட இதிலடங்கிய கொள்கையை பரிபூர்ணமாக ஏற்றுக்கொண்டேயிருக்கின்றனர் எனினும் மற்றவர்களைப்போல அதை அனுஷ்டானத்தில் கொண்டுவர மட்டும் அவர்கள் மனம் இடந்தரவில்லை. தனி வழியில் செல்ல அவர்கள் சொல்லும் வாதம் மிகக் குயுக்தியானது.

உத்தியோகங்களிலும், மற்ற பொதுத் துறைகளிலும் நீடித்துவரும் வகுப்புவாத விஷத்தை ஒழிக்கவேண்டுமென்று சமீபத்தில் பார்லிமெண்டில் ஒரு தீர்மானம் வந்தது. மத்திய சர்க்கார் அதை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி வைப்பதற்கான நடவடிக்கைகளைத் தொகுத்துக் கூற ஒரு கமிட்டியை நியமித்தது நண்பர்களுக்குத் தெரியும். இந்தக் கமிட்டியின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில்தான் தென்னிந்தியாவில் அதிகாரம் வகிப்பவர்களின் தனி சொரூபம் வெளியாகியிருக்கிறது. மற்ற மாகாணங்கள் பலவும் மேற்குறித்த தீர்மானத்துக்கு ஆதரவு காட்டியது மட்டுமில்லை; ஏற்கெனவே தாங்கள் அதையொட்டி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாகவும் உண்மையான பெருமையுடன் அங்குள்ள சர்க்கார்கள் பதில் அனுப்பியிருக்கின்றனர். ஆனால் சென்னை சர்க்காரின் பதிலென்ன? இத்தகைய ஒரு தீர்மானமே போடக்கூடாதாம். அதுமட்டுமில்லை: இதைப்பற்றி தீர்மானம் நிறைவேற்றுவது இதன் அடிப்படையான நோக்கத்துக்கே கேடு விளைவித்துவிடுமாம். எனினும், ஒரு காலவரையைக் குறிப்பிட்டு அதற்குள் வகுப்புப் பாகுபாடு மறையவேண்டுமென்று விதிக்கலாமென்று சென்னை சர்க்கார் பதிலளித்திருக்கின்றனர். இவ்வாறு காலவரை ஏற்படுவதற்கு தயாராயிருப்பதாகச் சொல்பவர்கள் மேற்குறித்த தீர்மானத்தை ஏன் ஆட்சேபிக்கவேண்டுமென்று விளங்கவில்லை.

சமுதாய ஐக்கியத்தை முன்னிட்டு இனி வகுப்புவாத உணர்ச்சிக்கு எவ்விதத்திலும் இடங்கொடுப்பதில்லையென்ற உறுதியை அரசியல் நிர்ணய சபை ஏறகெனவே வெளிப்படுத்தியிருக்கிறது. குறிப்பாக சட்டசபைகளில் மத அல்லது வகுப்பு அடிப்படையில் ஸ்தானங்கள் ஒதுக்கும் ஏற்பாட்டை சமீபத்தில் அந்தஸ்தாபனம் நிராகரித்த தன் கருத்தும் அதுவே அதையொட்டி பொதுத் துறைகள் அனைத்திலிருந்தும வகுப்புப்பேயை விரட்ட மத்திய சர்க்காரோடு மாகாண சர்க்கார்கள் எல்லாம் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்வதேபொருத்தம். ஆனால் சென்னை சர்க்காரைப் பொறுத்தவரை இப்போதைக்கு அவ்வாறு செய்யத் தயாராயில்லை என்பதுதான் அவர்கள் பதிலின் சாரம். வகுப்பு பேதங்கள் மறையக்கூடிய ஒரு நிலைமையை முதலில் சிருஷ்டித்தாகவேண்டுமாம். இதில் சிறிதேனும் சாரமுண்டு என்றே வைத்துக்கொள்வோம். இத்தகைய நிலைமையை விளைக்க அவர்கள் என்ன செய்யப்போகின்றனர்? உத்தியோகங்கள், பள்ளிக்கூடங்கள் முதலிய துறைகளில் இப்போதுபோலவே வகுப்புவாரி விஷத்தை மேன்மேலும் செலுத்திக்கொண்டிருந்தால், ஒரு நாள் திடீரென்று அது தானாக அடி


—அடுத்த பக்கம்.



மே 29-ந் தேதி ஸ்ரீநகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் பண்டித நேரு பேசியபோது எடுக்கப்பட்ட படம்.

யோடு மறைந்துவிடுமென்று சென்னை சர்க்கார் நம்புகின்றனரா ?

பிற்போக்கான நிலையிலுள்ளவர்கள் முன்னுக்கு வர அவர்களுக்குத் தனி வசதி அளிப்பதை யாரும் என்றும் ஆட்சேபிப்பதற்கில்லை. அதற்கு மாறாக அத்தகைய வசதிகள் அளிப்பது சர்க்காரின் மூலாதாரக் கடமை என்றே வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஆனால் வகுப்பு வாரி அடிப்படையில் முற்போக்கு, அல்லது பிற்போக்கை நிர்ணயிப்பதென்பது ஒரு சிலரது சுயநல வளர்ச்சிக்கே உதவ முடியும். சர்க்கார் அளிக்கும் தனிச் சலுகை சம்பந்தப்பட்டவர்களது ஜாதி அல்லது வகுப்பைப் பொறுத்ததாயிராமல், பொருளாதார நிலையொன்றையே ஆதாரமாகக் கொண்டதாயிருக்கவேண்டும். ஜாதி, வகுப்புப்பாகுபாடு இருந்துவரும் வரை அதை மதித்து நடந்தாக வேண்டியிருப்பதாக சென்னை சர்க்கார் பேசுவது நேர்மையில்லாத வாதமே. பூரண மது விலக்கை அவர்கள் அமுலுக்குக் கொண்டுவந்தபோது, குடிகாரர்கள் பலர் இருந்து கொண்டுதான் இருந்தார்கள். அவர்களில் ஒரு சிலராவது எஞ்சியுள்ளவரை மது விலக்கை அமுலுக்குக் கொண்டுவர முடியாது என்று பேசியிருந்தால் அது எவ்வளவு நகைப்புக்கு இடமாயிருந்திருக்கும்! எனினும் வகுப்பு வாதக் கேட்டை நீக்க மட்டும் அதே வகையான வாதத்தை அவர்கள் பிரயோகிப்பது ஆச்சரியமல்லவா ? சமீபத்தில் அவர்கள் சமூகத் துறையிலும், பொருளாதார வழியிலும விளைவித்த வேறு பல மாறுதல்கள் விஷயத்தில் இவ்வாதம் பொருந்தாதென்பது அவர்கள் எண்ணமா ?






"ஏய்! கிருஷ்ணு!" என்று அதட்டிக் கூப்பிட்டேன் அந்தச் சிறுவனை. ஒன்பது வயதுச் சிறுவன் அவன். தாயில்லாப் பையன். சில மாதங்களுக்கு முன்புதான் தாயை இழந்த அந்தச் சிறுவனை, நான் இதுவரை ஒரு நாள்கூட இவ்வாறு அதட்டி அழைத்தது கிடையாது. ஆனால் அன்று அவ்வாறு கடிந்து கூப்பிடத் தூண்டிவிட்டது, பொறுமையை இழந்துவிட்ட என் மனம்!

"ஏன் மாமா?" என்றான் அவன் இடம் விட்டுக் கொஞ்சமும் நகராமலே. அவன் அருகே சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருந்தது, அவனுடைய புது நாய்க்குட்டி. அதை விட்டு என் பக்கம் வர அவனுக்கு மனமில்லை. அதைக் கூட்டிக்கொண்டு என்னண்மையில் வரவும் அவனுக்குத் துணிவு இல்லை! ஆம்! என் குரல் கடுமையினின்று அவன் ஒருவாறு ஊகித்திருந்தான் என் அழைப்பின் காரணத்தை! அதையும் நான் உணர்ந்தேன்!

"இங்கே வா!" என்றழைத்தேன் நான். நான் கூற நினைந்த வார்த்தைகளை, என் குரலை உயர்த்திக் கூற எனக்குத் தயக்கம்! தாயற்றச் சிறுவனைக் கடிந்து பேசும் கடன் நான் என்று அக்கம் பக்கம் நினைக்க என் இடந்தரவேண்டும்? நான் அவனுடன் குளிர் மொழிகள் பல பேசுவதை உலகம் பாராட்டாது—ஆனால், கடுமொழி ஒன்று கூறினாலும் குறை காணும்! அதனால் அவனை என் அருகே வரச்சொன்னேன்.

"ஏன்? என்ன வேணும் மாமா?" என்று கேட்டான் அவன். அப்போதும் என் பக்கம் நகரவில்லை. ஆனால் "என்ன வேணும்?" என்னும் அவன் வினா என் மனதை இளக்கிவிட்டது. எனக்கு உதவிசெய்ய—தபாலாபீசுக்குப் போய்வரவோ, பத்திரிகைக்கடைக்குப் போய்வரவோ அவன் அடிக்கடி உதவி செய்வதுண்டு எனக்கு. இன்றும் அதுபோலே......

"இங்கே வா, சொல்றேன்" என்றேன் இப்போது கோபமில்லாமலே.

"உம், வரேன்!...ஐயையோ... இருங்கோ மாமா! ஏய் ஜிக்கி! இங்கே வாடா......எங்கேடா போறே!"

கிருஷ்ணு வரவில்லை என்னருகில். அவனைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்த அவனுடைய புது நாய்க்குட்டி சற்று அப்பால் போயிருந்தது........ மாட்டுக்கொட்டிற்கருகே போயிற்று...அதைப் பிடிக்கும் சாக்கில் ஓடிவிட்டான்...பத்தடி தூரத்திற்குள் அதை அவன் பிடித்தாச்சு... ஆனால் தன் தோழன் காட்டிய உதவிக் குறியை ஏற்றுக்கொண்டு அதையே சாக்காகக் கொண்டு கிருஷ்ணு தப்பிவிட்டான்.

"மாமா, இருங்கோ! ஒரு நல்ல கயிறு கொண்டுவந்து..." என்று சொல்லிக்கொண்டே வீட்டுள் மறைந்துவிட்டான், கையில் நாய்க்குட்டியுடன்.

நான் ஏமாந்தேன்...ஆனால் வியந்தேன் அவன் பதிலைக்கேட்டு!

"போகிறான் பையன்! பாவம்!" என்ற எண்ணமுடன் நானும் என் காரியம் கவனிக்க வந்துவிட்டேன்.

அப்போது வாசலிலிருந்து தடதடவென்று ஓடி வந்துகொண்டிருந்தார்கள் என் குழந்தைகள் மூவரும்.

"நன்னாருக்குடா ஜிக்கி!"

"ஆமாண்டி. நமக்கும் ஒண்ணு வேணும்டி!

"அதுக்கு ஒண்ணு வேணும்! கிருஷ்ணுவையேகேட்கலாம்...எப்படியானும் எடுத்துத் தந்திடுவாண்டா குட்டிகளே!"

கொம்மாளம் போட்டுக்கொண்டே அவர்கள் புழக்கடைக்கு ஓடினார்கள். நான் எங்கு நின்றிருந்தேனே அதே இரைப்பாத்தி யருகு நின்றுகொண்டு கிருஷ்ணுவை அழைத்தார்கள். ஒன்றுமே பேசாமல் தத்தக்கப் பித்தக்க வென்று நடைமட்டும்போட்டவாறே அவர்களைத் தொடர்ந்து சென்றிருந்த கடைசிக் குழந்தைகூட கிருஷ்ணுவை ஆஊ வென்று அழைத்தது!

நாய்க்குட்டியுடன் காட்சியளித்த கிருஷ்ணு எங்கள் வீட்டுப்பக்கம் வர மட்டும் மறுத்தான்! பயம்போலும் என்னை நினைந்து!

"நாம்பளே போலாண்டா?" என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்த சிறு மூங்கில் வேலியைத் தாண்டி அடுத்த வீட்டுப் புழக்கடையில் நுழைந்தார்கள் என் குழந்தைகள். கடைக்குட்டிகூட தன் அண்ணு உதவியால் போய்விட்டான் அவர்களுடன். பக்கத்துப் புழக்கடையிலேயே கொம்மாளம் போடத் தொடங்கினார்கள் எல்லாக் குழந்தைகளும், நாய்க்குட்டியுடன்!

ஆம்! அடுத்த வீடும் எங்கள் வீடும் அத்தனை நெருங்க இருந்ததனால்தான் கிருஷ்ணுவின் புது நாய்க்குட்டியின் வருகை எனக்குத் தொல்லையளித்தது! ஒரே வீட்டின் இரண்டு பகுதிகள் எங்கள் இல்லங்கள். முதல் நாள் மாலையும் இரவும் அந்த நாய்க்குட்டி போட்ட கூக்குரல் என்னை இரவு முழுதும் படுக்கவொட்டாமல் பாடுபடுத்தியதை நானன்றோ அறிவேன் ?

"பேரனைக் கடியவேண்டாம்!" என்று சகித்துக் கொண்டிருக்கிறார்கள் அவனுடைய பாட்டியும் தாத்தாவும்! நான் சும்மாயிருப்பானேன்? பக்கத்துவீட்டுக்காரன் என்னும் உரிமையுடன் நான் சொல்லி நாய் தொலைந்துபோனால், அவர்களுக்கும் இது ஒரு உதவிதானே ஆகும்? அதனால், சொல்வோம் கிருஷ்ணுவுக்கு என்றே உறுதிகொண்டிருந்தேன் சற்றுமுன்வரை.

ஆனால் திடீரென்று அந்தஎண்ணம் போய்விட்டது!

"நல்ல ஜாதி நாய்தான்—காது இரண்டும் நன்றாகத் தொங்கியிருக்கே!" என்று நினைத்துப் பார்த்த

போது, எனக்குக் கலப்பற்றச் சமாதானமே ஏற்பட்டது.

ஆனால் அன்றுமாலை காரியாலயத்திலிருந்து விடு மீளும்போது...என் அற்ப மனம்...அல்ல, என்கோபம்,... காலையில் சீர்செய்யப்பட்டிருந்த என் காப்புஉணர்ச்சி—குப்பைமேட்டு நாயைப்போலத் திரும்ப பழைய நிலையையடைந்து விட்டது! என் செய்வேன்?

நான் விடுவந்தபோது, வீட்டிலே என் கடைசிக் குழந்தைகள் இரண்டும் ஒரு நாய்க்குட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள்!.

"அட ராமா! நம் வீட்டுக்கும் வந்தாச்சு ஒன்று?" என்ற பீதிகொண்டேன்.

"ஏய் பிரேமா? யாருடி உங்களையெல்லாம் நாய்க் குட்டியை வளர்க்கச் சொன்னு? உம்? கொண்டே விட்டுட்டுவாடி' எங்கானும்?" எனக் கடிந்து ஒரு கூப்பாடு போட்டேன்.

"இல்லேப்பா! இருக்கட்டும்பா!"

"சட்! அசிங்கம்! வீட்டில் நாய்க் குட்டியை வளர்க்கிறது என்ன சுலபமோ? மகாபாடு!"

அவள் முகத்தில் சட்டென கலக்கம் போயிற்று.

கம்மலில்லாத குரலில், "இல்லேப்பா! இது நம்மாத்துது இல்லேப்பா! கிருஷ்ணுது!.. என்ருள்.

"அவன் எங்கே! இங்கே இதை விட்டுட்டு எங்கே போனுன்?"

"கிருஷ்ணுவும் துரையண்ணுவும் இன்னும் பள்ளிக்கூடத்திலிருந்து வரல்லேப்பா! இன்னிக்கு வர நாழியாகும்னு கூடச் சொன்னுன்! நானும் அம்பியும்தான் இதைப்பார்த்துக்கரோம்! கிருஷ்ணு வந்ததும் தந்துவிடலாம்பா!"

"உம், சரி, இருக்கட்டும்! பாவம் இந்த நாய்க்குட்டியைப் பார்த்தாலும் பரிதாபமாத்தான் இருக்கு—வாயில்லா ஜீவன்...ஒரு மாசங்கூட ஆகியிருக்காதுபோலிருக்கு இது பிறந்து..." என்றேன் நான்.

பிரேமாவுக்கு உற்சாகம் பிறந்துவிட்டது. "ஆமாம்பா! இதே குட்டி மாதிரி இன்னும் மூணு நாலு குட்டி இருந்ததுப்பா!போஸ்ட்டாபீஸ் காம்பவுண்டுலே விளையாடப்போன போது இருந்துதுப்பா! கொஞ்ச நாளைக்கு முந்தி பார்த்தோம்...நாங்களும் ஆளுக்கு ஒண்ணு எடுத்துண்டு வந்திருக்கலாம்பா...எவ்வளவு நன்னாருக்கு நாய்க்குட்டி! பாவம், எப்படி குய்ங் குய்ங்னு கத்தறதுப்பா!...



இந்தாடா அம்பி...பிடிச்சுண்டே இருடா குட்டியை!...ஏம்பா பிஸ்கோத்து ஒன்னு கொண்டுவந்து போடறேம்பா! பாவம் ஜிக்கி!"

இத்தனை நேரம் பெண்ணின் பேச்சில் குறுக்கிடாத என் மனைவி, இப்போது குரல் கொடுத்துக்கொண்டே உள்ளேயிருந்துவந்தாள்!

"டீ, போதும் அதுக்கு பிஸ்கட்! அதிகம்போட்டால் தின்னமுடியாம சாகும்! பாருங்கோன்னு.....இன்னிக்குப் பூராவும் இந்த இரண்டுபேருக்கிட்டத்தான் இருக்கு இந்தக் குட்டி! நாலு அஞ்சு பிஸ்கோத்துப்போட்டு நாசமடிச்சாச்சு...ஆனாலும் சின்னக் குட்டி! தாய்ப்பால் குடிக்கவேண்டியது...அதுக்கு இத்தனை பிஸ்கோத்துப்போட்டா என்னகும்? சகிக்கல்லே இந்த மத்தியானம் பூரா இந்தக் குட்டிகள் பாடு!" என்ருள் மனைவி ஆதியோடந்தமாய்.

எனக்குத் திடீரென்று ஆவேசம் பிறந்தது. கிருஷ்ணுமீதும் நாய்க் குட்டியின் மீதும் சொல்லத் தெரியாத கோபம் மூண்டெழுந்தது!

"இதோ பாரு, பிரேமா...கிருஷ்ணு கிட்டக்கூட தரவேண்டாம்...அந்த போஸ்டாபீஸ் காம்பவுண்டுலேயே விட்டுட்டு வந்துடு! மகா பாவம், தெரியுமா, இப்படிக் குட்டியை அம்மா பால் குடிக்கவிடாமல் தடுக்கிறது! அந்த மூணு நாலு குட்டியோட அம்மா நாயும் இருந்துதோ இல்லியோ?—உம்?..."

"உம்...இருந்துது ஒரு நாய்...நாங்கள் எட்டி எட்டிப் பார்த்தபோது கூட குலேச்சுது..."

பிரேமா என் முகத்தைப் பார்த்தாள்—அவளுக்கு மனமில்லை குட்டியைவிட்டுவிட. சின்னஞ் சிறு குட்டி, அது! குண்டாய், சின்னக் குட்டியாய், மெத்தென்ற கறுப்பு உடலுடன், நெற்றியிலும் நான்கு பாதங்களிலும் மட்டும் வெள்ளை மச்சங்களுடன் இருந்தது. அழகாகத் தான் இருந்தது குட்டி. ஆனால் அதனுடன் படவேண்டிய மற்ற தொல்லைகள்?......நேற்று இரவு அது தன் சின்னக் குரலை உச்சத்திற்கு உயர்த்தி செய்த அட்டகாசம்? கிருஷ்ணுவிடம் மட்டுமா இருக்கப்போகிறது குட்டி? முக்கால்வாசிப் போது இங்கே என் குழந்தைகளிடையே அல்லவா இருந்துவிடும்?......

அதனால் பிரேமாவின் பார்வையைக்கண்டு மனம் தளரவில்லை நான்.

"போறயாம்மா, சமத்தாய்?" என்று உந்தினேன். "உம், சரிப்பா?" என்று அரை மனதுடன் எழுந்து கிளம்பினுள் அவள். அம்பிப்பயல் விவரமறியாதவன்—அவனும், 'அவளும்' நானும் என் தடை செய்கிரும்? பிரேமா போய்விட்டாள் வெளியே... அடுத்த தெருவுக் கருகிலிருக்கும் தபாலாபீசை நோக்கி!...



நான் திரும்பினேன் என் மனைவியை நோக்கி. "அழகாத்தான் இருக்கு குட்டி!...பாவம், கிருஷ்ணுவுக்கு வருத்தமும் கோபமும் வரும்... ஆனல்...அப்புறம் நம்ப குழந்தைகள் கூடன்னு நாய்க்குட்டியோடேயே சுற்றும்?...அதுக்காகத்தான்..."

"பாரேன்! அவனுக்கு அம்மா போய் இரண்டு மூணுமாசந்தானுகிறது! என்ன அழு அழுன்னு அழுதான் ஊரிலிருந்துவந்து எட்டுநாள் வரைக்கும்! இப்போ, பார் நாய்க் குட்டியை அதன் அம்மாகிட்டேயிருந்து பிரிக்கிருமே என்கிற நினைப்பு இல்லை அவனுக்கு!" என்றேன் வியப்புடன்!

அதான் சகஜமாயிருக்கே உலகத்துலே...தன் நிலையை மறந்து நடக்கிறது!" என்ருள் திடும் என்று அவள்.

நான் சொன்னதும் அதே உட்பொருளைத்தான்! ஆனல் அவள் வெளிப்படையாக, எனக்குப் பதில் போல அவ்வாறு கூறவே நான் ஏனே துணுக்குற்றுப்போலானேன் ... திடீரென்று, ஆனல் இயற்கைப் பேச்சாகி, வானம்போலத்தான் அவள் வாயிலிருந்து உதிர்ந்திருக்கிறது. அந்த அறிவுரை...ஆனல் நான் மட்டும், தயக்கமுடன் 'ஆமாம்!" என்றேன்.

"நான் ஏதாவது என் நிலை மறந்து பிறத்தியாருக்கு உபதேசம் செய்தேனே?" என்று யோசித்துவிட்டு, பிறகு அவள் பேச்சை ஆமோதித்தேன்.

"எத்தனையோ தடவைகள் நாம் ஒவ்வொருவரும் நம் நிலை மறந்து தான் பேசுகிரும்...ஆனல் இப்போது கிருஷ்ணுவுக்கு ஆன உபதேசம் நம் நிலை மறந்து கூறுவதல்ல. என்ற உறுதியுடன் அவள் பேச்சை ஆமோதித்துவிட்டு கிருஷ்ணுவுக்காக எதிர்பார்த்திருந்தேன்.

கிருஷ்ணு நாய்க்குட்டிக்காக வருவான் இங்கே......அவனை நிறுத்தி வைத்து போதிக்கவேணும்...அவன் தாய் இறந்து அவன் பிரிந்ததைச் சுட்டிக்காட்டிப் பேசாமல், பிரேமாவுக்குச் சொல்லி அறிவுறுத்தியதை மட்டும் சொல்லவேண்டும் என்று நிச்சயித்துக்கொண்டு, உத்தியோக உடை களைந்து மாற்று உடை அணிந்தேன்.

அப்போது வந்தார்கள் துரையும் கிருஷ்ணனும். முதற்கேள்வி நாயைப் பற்றித்தான்.

அப்போது ஒரு மாபெரும் மதகுரு போலே திரும்பினேன் நான் அவர்கள் பக்கம். கிருஷ்ணனை விளித்துக் கூறினேன்...நாய்க்குட்டியை அதன் தாயிடம் சேர்த்துவிடுமாறு பிரேமாவுக்குப் பணியிட்டதை, காரண காரியங்களுடன் தெளிவாக்கினேன்.

"ஐயையோ, மாமா?" என்ருன் அவன் ஆவேசமாக! அவன் கண்களில் நீர் நிரம்பிவிட்டது குப்பென்று.

"ஏன் கிருஷ்ணு? அது பத்திரமாயிருக்கும், அம்மா கிட்டத்தான்!" என்றேன் அர்த்த புஷ்டியுடன்.

"அது சரிதான், மாமா! ஆனல் அதோட அம்மா அங்கே இல்லையே! இருக்காதே!"

பேதைபோல நின்றிருந்தான் அந்த ஒரு நிமிஷம். மறு நிமிஷம், "இருங்கோ, நான் பார்த்துட்டு வரணும்!" என ஒரேபாய்ச்சலில் வாசலை நோக்கிப் பாய்ந்தோடி விட்டான் கிருஷ்ணு!

ஏதும் பேசாமல் ஏதேதோ யோசிப்பதற்குள் பிரேமா வந்து விட்டாள். அவள் கையில் நாய்க் குட்டி இல்லை.

"விட்டுட்டயாம்மா அதோட அம்மாகிட்ட!" என்றேன் நான் ஆவலுடன்.

"இல்லேப்பா கிருஷ்ணுகிட்டவே தான் இருக்கு! நாய்குட்டியோட அம்மாவைக் காணும் போஸ்ட்டாபீஸ் காம்பவுண்டுலே! எப்படி விட்டேறதுன்னு எடுத்துண்டு வந்திண்டிருந்தேன். வழியிலே கிருஷ்ணுவந்து அதை எடுத்துண்டேடான்! அவனண்டை கொடுத்தூட்டேன்!"

'அவன் வீட்டுக்கு வந்துட்டானேல்லியோ?"

"உம், வந்துட்டான்! இங்கே கொண்டா விளையாடலாம்னேன்! மாட்டேன்னுட்டான்..."

அவள் வார்த்தைகளுக்கு ருசுப்போல் பக்கத்து வீட்டில், நாங்கள் இருந்த அறைக்கு ஒட்டினாற்போலிருந்த அவர்கள் தாழ்வாரத்தில், 'குரும் குரும்' என்று நாய்க் குட்டியின் கூச்சல், கிருஷ்ணுவின் கொஞ்சு மொழிகள்!

"அம்மா நாயைக் காணேமென்று, யோசனையுடன் குட்டியைத் திருப்பி எடுத்து வந்துவிட்டானே! இந்தப் பிரேமாவை என்னன்னு சொல்றது!" என்று எனக்கு பெருமையுடன் கூடிய வியப்பு பிரேமாவைப் பற்றி.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 JUL 1949
MADRAS

"அம்மா நாயை விரட்டி விட்டு மற்ற குட்டிகளில் ஒன்றைத் தூக்கி வந்துவிட்டானே, இந்தத் தாயில்லாப் பையனை என்னவெனச் சொல்றது?" என்று கிருஷ்ணுமேல் ஒரு அருவருப்பான எண்ணமும் எழுந்தது!

"பாவம். இதற்குப்போய் அவனை கோபிப்பானேன், கடிவானேன்!" என்று அலக்ஷியமாக இருந்துவிட முயன்றாலும், நான் கண்டு பிடித்த ஒரு மாபெரும் உண்மை...தாயை இழந்து தவிக்கும் அவன், தாய் நாயிடமிருந்து குட்டி நாயைப் பிரித்தானே என்னும் மாபெரும் விஷயம் பிரமாதமாக என் மனதில் வேலை செய்தது. அதைத் தொடர்ந்து பல வேதாந்த விசாரங்கள், மனித உள்ள ஆராய்ச்சிகள் கிளம்பின மனதில். இவற்றினூடே, "இன்றிரவுத் தூக்கம். எவ்வளவு கெடுமோ?" என்னும் விசாரமும் சேர்ந்துகொண்டது! எனவே எனக்கு கிருஷ்ணுவை நல் உணர்ச்சிகளால் நினைக்க முடியவில்லை. தாயற்ற அவனை வெளிப்படையாக அதட்டவும் மனம் இடம் கொடாததால் மனதில் அவனைப் பற்றிய அன்பு உணர்ச்சிகள் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டன!

கடைசியில் நான் பயந்தபடியே, அன்று இரவு படுக்கப்போகும் சமயம் நாய்க்குட்டியின் கூக்குரல் படிப்படியாக ஏறியும் இறங்கியும் கேட்டது. கிருஷ்ணுவின் தாத்தா வாசற்புறம்படுத்திருந்தார்போய்கேட்டேன் நாய் ஏன் அப்படி விம்புக்குக்கத்துகிறப்போல் அடித்தொண்டையுடன் கூச்சலிடுகிறது என்று: அந்தச் சிறு பிராணிக்கு அத்தகைய விம்புக்குரல், குரலை உயர்த்திக்கத்த சக்தி இருக்கிறதா என்று எனக்கு ஆச்சரியம்!

கிருஷ்ணு அதை ஓர் அறையில் வைத்துச் சாத்திவிட்டு, உள்ளே அதற்குக் குடிக்கப்பால், படுக்கப் பாய் போட்டுவிட்டுத்தான் வந்து படுத்திருக்கிறானாம். அது அந்தப் பாலைக் குடிக்கவும் மாட்டேனென்கிறதாம்—வெளியேவந்து வீடு முழுதும் சுற்றறும் என்கிறதாம். கிருஷ்ணு எழுந்து எழுந்து, போய்ப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறானும், வந்துவந்து படுக்கிறானும்—அவனுக்கு, மட்டும் நாயின் தொல்லையால் அலுப்புச் சலிப்புத்தோன்றவில்லையாம்!

இனி நான் என்ன சொல்ல முடியும்? அவன் அதன்மீது அவ்வளவு ஆசை—நியாயமில்லாத—கொடுமை நிறைந்த ஆசை வைத்து இருக்கிறான்—தன் நிலைமை மறந்து விட்டான்—நான் சொல்ல வேணுமானால் அவன் மனம் புண்படுமாறு சொல்லித்தான் அவனை உண்மை உணர வைக்கவேண்டும்—ஆனால் எனக்கு இந்த முறையில் இஷ்டம் இல்லை.

"சரி வந்து படுக்க வேண்டியது தான்!" தொல்லையை சகித்துக் கொண்டு இரவைக் கழிக்கவேண்டியதுதான் என்று நாயுறக்கம் உறங்கத் தயாராய் வந்து படுத்தேன். ஆனால்—விடியற்காலம் நான் எழவில்லை! நான் துயில்விழிக்கும்பொழுது சூரிய வெளிச்சம் நன்கு பொன்னிறம் ஏறி விட்டது.

குழந்தைகள் வெகு பரபரப்பாக இருந்தார்கள் - பிரேமா மட்டும், என்னைக் கவனித்ததும், "நாயைக் காணோமாம்பா! கிருஷ்ணு அழறான்!" என்றாள்.

அந்தத் தகவலின் முற்பகுதி மகிழ்ச்சியே அளித்தது - பிற்பகுதி மனதை இளக்கிற்று. பாவம் இரண்டு நாள் வளர்த்த தோஷம் அவன் மனம் அதன்பால் அத்தகைய உருக்கங் கொண்டுவிட்டது! இதை எண்ணிய போதும், அவன் தன் நிலையை மறந்து அதற்கு செய்துவிட்ட தீங்கினை நினைத்தபோதும். எனக்கு, "ஐயோ. அசட்டுப் பிள்ளையே!" என்றுதான் தோன்றியது!

கிருஷ்ணு கண்களைத் துடைத்துக் கொண்டே எங்கள் வீட்டுப் பக்கம் வந்தான் அதேசமயம்.

"மாமா! இந்தப் பக்கமெல்லாம் நன்றாகப் பார்த்துட்டுப் போறேன்! மாமா! நாயைக் காணோம்!" என்றான் அவன்.

"உம், பாரப்பா!" என்றேன் "இங்கில்லே அது," என்று நிச்சயமாகத் தெரியும் எனக்கு— அடேயப்பா! இவ்வளவு சமத்தாகச் சத்தம் செய்யாமல் இருக்குமா நாய்க்குட்டி?

"இதோ!" என்றான் கிருஷ்ணு, கொஞ்ச நேரங்கழித்து-ஆம், நானும் பார்த்தேன்—நாய்க்குட்டி தென்பட்டது—ஆனால் அதன் கூண்டில் உயிரில்லை! எங்கள் வீட்டுப்பக்கம்இருந்த மூங்கில் கேட்டுக் கதவில் இரண்டு ஜல்லிக் கட்டைகளுக்கிடையே தலையை நுழைத்திருக்கிறது—கழுத்துச் சிக்கிக்கொண்டது! இதுதான் நான் ஊகித்த விஷயம்.

"ஐயோ மாமா," என்று அழுது கொண்டே அதன் அருகே ஓடிய அவனை, அதைத் தொடவொட்டாமல் தடுத்தேன்.

"ஐயோ, மாமா—உங்களுக்குப் பிடிக்கல்லே தன்னைன்னு நாய்க் குட்டிக்குத் தெரியாது!—அதுதான் இந்தப்பக்கம் வந்திருக்கு! தெரிஞ்சிருந்தால் அது வந்திருக்காது..." என்று சர்வசாதாரணமாகச் சொல்லி விட்டு நாயைப் பார்த்தான் மீண்டும்.

எனக்கு விடை சொல்லத் தெரியவில்லை. ஆனால் சமயோசித யோசனை வந்தது.

"பாரு கிருஷ்ணு! நான் அதுக்கு நல்லதுபண்ணத்தான் நினைச்சேன்னு அதுக்குத் தெரிஞ்சுபோயிருக்கு...! அதன் அம்மாவிடம் கொண்டுபோய் விடுன்னு சொல்லி அனுப்பிச்சேனே இல்லியோ? பிரேமா எடுத்துண்டு போனதுலேருந்தே அதுக்குத்தெரிஞ்சிரிக்கு அடுத்தாத்து மாமா நல்லவர்னு! அதான் இந்தப்பக்கம் வரப் பார்த்திருக்கு...பாவம்! அதோட அம்மா கிட்டருந்து அதை பிரிச்சிருக்கக் கூடாது! ஏன், கிருஷ்ணு நீ ஏன் அதை அதோட அம்மாவைப் பிரிச்சு எடுத்துண்டு வந்தே?......" என்றே பேசிவிட்டேன் அவனுடன்.

"நான் எங்கே மாமா பிரிச்சு எடுத்துண்டு வந்தேன்? போஸ்டாபீஸ் மாமா அந்த அம்மா......நாயையும் குட்டி நாய்களையும் விரட்டு விரட்டுன்னு விரட்டிண்டிருந்தார். நான் அங்கே போனபோது இந்தக் குட்டி பின்னாடி மொள்ளப்போச்சு! அதையும் விரட்டிண்டிருந்தார். "மாமா! மாமா! விரட்டாதேங்கோ! அதோட அம்மாவும் அத்தனை தூரம் ஓடிப் போயிடுத்து! நான் எடுத்துண்டு போய் வளர்க்கிறேன்னு எடுத்துண்டு வந்தேன், மாமா. எங்க அம்மா செத்துப்போனப்புறம் தாத்தா என்னை வளர்க்கிறாரே மாமா நாய்க்குட்டியை மனுஷாள்தானே வளர்க்கணும் அம்மா இல்லாட்டா? ஆனால், பாவம் குட்டி செத்துப்போச்சு..."

தொண்டை அடைத்துக்கொண்டது கிருஷ்ணுவுக்கு. எனக்கு நாவும் அடைப்பட்டது. மூச்சும் அடைபட்டுத் திணறியது நெஞ்சம்!

"ஆஹா! என்ன தவறு செய்துவிட்டேன்! பாவம் கிருஷ்ணு தன் நிலைமை உணர்ந்துதான், கடமையுணர்ச்சியும் அன்பும் பொங்கத்தான்—குட்டியை எடுத்து வந்திருக்கிறான்!

கண்களில் நீர் பொங்க நின்றிருந்தான் கிருஷ்ணு. "பரவாயில்லை, போ, கிருஷ்ணு! இதுக்காக இப்படி வருத்தப்படாதே! இதெல்லாம் பிரமாதப்படுத்தி அழக்கூடாது! எனக்கென்னமோ நாய்க்குட்டி வளர்க்கிறது பிரமாத கஷ்டமான்னுதான் தோணும்! ஆனால் பாரு, ஒரு காரணமுமில்லாமல் எப்படியாச்சோ! நம்ம வீடுகளுக்கெல்லாம் இதெல்லாம் சரிப்பட்டு வராது கஷ்டம்! இது நாமே வரவழைச்சுண்ட மனக்கஷ்டமாச்சு, பார்! இதுக்குத்தான் இந்தத்தொல்லைகளெல்லாம் வச்சுக்கக்கூடாதுங்கிறது. தெரியுமா?".....

இப்படி ஏதோ பொதுவாகவும் தனிப்படவும் சொல்லிவைத்து அவனைத் தேற்றினேன் நான். ஆனால் அப்போதும் நான் என் நிலைமை மறந்துதான் பேசியிருக்கிறேன் என்பதை அறிந்தபொழுது....வெட்கித்தான் போனேன். ஆம்!

—— :: ——



# மூன்று சிநேக மணிகள்

ஸ்ரீமதி லட்சுமியம்மாள்

## குடும்ப கோஷம்

குசேலர் குழந்தைகள் இருபத்தேழு நட்சத்திரங்களுக்கும் வஞ்சகம் இல்லாமல் பிரதிநிதிகளாய் இருந்தன; இந்தக் குபேரர் குடும்பமோ, அரை டஜன் குழந்தைகள் செய்யும் கோஷத்திலே 'ஐம்பது குழந்தைகளா இந்த வீட்டிலே?' என்று தெரு வாசலில் போகிறவர் வருகிறவர்களெல்லாம் அதிசயிக்கத் தோன்றும். அவ்வளவு துஷ்டத்தனமுள்ள பிள்ளைகளைக் குறித்துக் குப்புசாமி முதலியாரும் குப்பம்மாளும் பெருமைகொண்டார்கள். மனைவியைக் குறித்தும் பெருமைதான் முதலியாருக்கு. தம்முடைய வியாபார வெற்றியைக் குறித்து எவ்வளவு பெருமையோ அவ்வளவு பெருமை 'குலக்குமரர்' குறித்தும் குடும்பத்தலைவி குறித்தும்.

'வியாபார வெற்றியா? வியாபார வெறியா?' என்று ஜனங்கள் முதலியாரின் குதூகலம் குறித்துப் பேசுவதுண்டு. அவர் வீட்டில் இருக்கும் பொழுது, வீடும் வியாபாரக் காரியாலயம்போல் இருக்கும். 'ஒரு நிமிஷம் கூட வீணாக்கலாகாது' என்பார் பிள்ளைகளை நோக்கி. விளையாட வேண்டியதுதான் என்பார்; ஆனால் விளையாட்டும் வேலைத்திறமையுடன் நடைபெறவேண்டும் என்பார்.

கவி பாரதியார் ஜிலேபி சாப்பிடுவது முதல் 'ஜயமுண்டு பயமில்லை' பாடுவது வரை வீராவேசமாகச் செய்துவிடுவார் என்று கேள்வி. குப்புசாமி முதலியாரோ பல்துலக்குவது, நீராடுவது, திருநீறு அணிவது, நாமம் சொல்வது எல்லாம் வியாபாரத் திறமையுடன் நடைபெற வேண்டுமென்று பிள்ளைகளிடம் வற்புறுத்துவார்.

'நீறு இல்லாத நெற்றி பாழ்; நெறி இல்லாத புத்தி பாழ்' என்ற கொள்கையில், 'எட்டும் இரண்டும் பத்து' என்ற கூட்டலில் உள்ள நம்பிக்கை முதலியாருக்கு உண்டு. குப்பம்மாளின் தாயுள்ளம் குழந்தைகள் விஷயத்தில் இவ்வளவு கண்டிப்பாக நடந்துகொள்ளத் துணியவில்லை. ஆகவே சில பிள்ளைகள் திருநீறு பூசிக்கொள்ளாமலும் இருப்பார்கள், வீட்டிலே தந்தை இல்லையானால். அவர் அதோ வருகிறார் என்று கண்டுகொண்டதும் பிள்ளைகள், வெள்ளையடித்த சுவரில் கையைத் தேய்த்து அந்தக் கையை நெற்றியிலும் தேய்த்துக்கொண்டாவது திருநீறு பூசியது போன்ற ஒரு தோற்றத்தை உண்டாக்கிக் கொள்வார்கள்.

முதலியார் வியாபார விஷயங்களில் அபார ஞாபக சக்தியுள்ளவர். கணக்கு வழக்குகளில் நிபுணர். என்றாலும் 'இப்படியும் ஒரு மறதி உண்டா?' என்று பிறர் பிரமிக்கும்படி நடந்துகொள்வதும் உண்டு. 'குப்பு, நான் சாப்பிட்டேனா அம்மா?' என்று ஒரு சமயம் மனைவியைக் கேட்டதும், அப்போது அங்கே வந்திருந்த விஜயசுந்தரியால் சிரிப்பை அடக்கிக்கொள்ளவே முடியவில்லை.

வேறொரு சமயம் குப்பம்மாள் மங்களத்தின் வீட்டுக்குப் போயிருந்தாள். 'வீட்டைக் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று முதலியாரிடம் சொல்லிவிட்டுப் போயிருந்தாள். அன்று ஞாயிற்றுக்கிழமையானதால் ஆபீஸ் கிடையாது. அம்மாள் திரும்பி வந்ததும், 'குழந்தைகள் எல்லாரும் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்காமல் இருந்தார்களா?' என்று கேட்டாள். அதற்கு முதலியார், 'அதோ அந்தப் பயல் தவிர வேறொருவரும் தொந்தரவு கொடுக்கவில்லை; அவனுக்கு நன்றாகத் திருநீறு பூசச்சொன்னேன்' என்று பதில் சொன்னார். குப்பம்மாள் திகைத்துப்போனாள். 'அவன் எதிர்வீட்டு ஐயங்கார்ப் பிள்ளையல்லவா?' என்றாள். 'அரைடஜன் பிள்ளைகள்தானே நமக்கு! இப்படியிருந்தும் இந்த மறதியா?' என்றாள் குப்பம்மாள்.

முதலியாருக்கும் இந்த மனக்குறை உண்டு. 'ஒரு டஜன்கூட இல்லையே குடும்பம்!' என்று சில சமயங்களில் அவர் தமக்குள் தாமே வருந்துவதும் உண்டு. ஆம்; நமது வியாபார சம்பத்திற்கு இசைந்த புத்திரசம்பத்தை இறைவன் அருளவில்லையே' என்ற எண்ணம் இருவருக்கும் பொதுவுடைமைதான். இப்படியிருந்தும் ஆபீஸ் கட்டுப்பாட்டை வீட்டுக் குழந்தைகள்மீதும் சுமத்தக் கூசுவதில்லை முதலியார். அதட்டாமலே கண்டிப்பு; தண்டனையில்லாமலே கட்டுப்பாடு. இவருடைய வியாபாரக் கட்டுப்பாடு ராணுவக் கட்டுப்பாடு போலவே இருக்கும்.

'உங்கள் சத்தத்தை அவ்வளவு சுருதியில் உயர்த்தவேண்டாம்—ஏக காலத்திலே இருபத்தைந்து கழுதைகள் கத்துகிறமாதிரி! நீங்கள் ஆறு பேர் ஆறு குதிரைகள் கனைப்பது போல் அந்த அளவிற்குச் சத்தம் போட்டால் போதும். நான் அரை மணி நேரம் உறங்கிக்கொள்ளவேண்டும்' என்பார் ஒரு சமயம்.

நீராடி நீறு பூசிக்கொள்ளாத குழந்தையைத் தீண்டவும் மாட்டார் முதலியார். தம்மிடம் வரும்போது வயதுக்கிரமத்தில் ஒருவர்பின் ஒருவராகத்தான் வரவேண்டும். தம் முன் நிமிர்ந்துதான் நிற்கவேண்டும்.

குன்றென நிமிர்ந்துநில்
கோபுரம் போல நில்
கூனிக் குறுகி நில்லாதே

என்றெல்லாம் எச்சரிக்கை செய்வார். இப்படி நிற்கும் குழந்தை 'உட்கார்' என்ற உத்தரவு பெற்றால் தான் உட்காரலாம்.

சாப்பிடும் சமயத்திற்கு வேலைக்காரன் மணியடிப்பான். மணியடித்த ஐந்து நிமிஷத்திற்குள் வந்து இலைமுன் உட்கார்ந்துவிடவேண்டும். விளையாடிக்கொண்டிருந்தாலும் வாசித்துக்கொண்டிருந்தாலும், விளையாட்டுக்கருவிகளையும் புஸ்தகங்களையும் அப்படி அப்படியே போட்டுவிட்டு வந்துவிடவேண்டும். முதலில் வந்து உட்கார்ந்தவனுக்கு நெய்யும் தயிரும் அதிகமாய்ப் பரிமாறவேண்டும்.

'கையைக் காட்டுங்கள்' என்பார்; நகத்தைப் பார்வையிடுவார். அழுக்கு இல்லாமல் இருந்தால் பரிசு கொடுப்பார். அடக்கு முறையில் நம்பிக்கை இல்லாத முதலியாருக்குப் 'பரிசு' என்ற பெயரால் லஞ்சம் கொடுப்பதில் நம்பிக்கை உண்டு.

பொதுவாகப் பயமுறுத்தமாட்டார். ஆனால் 'துஷ்டப்பிள்ளைகள் செத்துப்போனால் சிவபெருமான் நரகத்தில் தள்ளிக் கஷ்டப்படுத்துவார்!' என்று பயமுறுத்துவதற்குக் கூசமாட்டார். சிவபெருமானும் விசேஷ வியாபாரத் திறமையுடன் உலக வியாபாரத்தைக் கவனிப்பதாகவே முதலியாரின் நம்பிக்கை. அதுமட்டுமா? ஆனைமுகக் கடவுளும் ஆறுமுகக் கடவுளும் சேர்ந்த அந்தச் சிவ குடும்பத்திலே அந்த இரண்டு

பிள்ளைகளும் எத்தனையோ பிள்ளைகளின் கோஷ்டியைக் கிளப்பிவிடுவார்களே! கண்டிப்பு இல்லாமல் அந்தச் சொந்தக் குடும்பத்தைத்தான் காப்பாற்ற முடியுமா?' என்பார்.

தம் குழந்தைகள் எல்லாரும்—இரண்டு சிறுமிகளும் நான்கு சிறுவர்களும்—தம்மைப்போல் கணக்கு வழக்குகளில் திறமையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது முதலியாரின் விருப்பம். '19ஐ 17ஆல் பெருக்கு' 'என்பார் ஒரு சிறுமியை நோக்கி பெண்களுக்குத் துடைப்பும் எடுத்துப் பெருக்கவும் தெரிய வேண்டும்; தொகைகளைப் பெருக்கவும் தெரிய வேண்டும்' என்பார். '75X75?' என்று கேட்டதும் சரியான பதில் கிடைத்துவிட்டால், 'நீ நல்ல பெண் ஸரோஜா!' என்பார். 'கணித அறிவும் அப்பியாசமும் இருந்தால்தான் ஒருவன் நல்லவனாக இருக்கமுடியும்; உண்மை சொல்வது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானது 28X28 என்ற பெருக்கலை மனக்கணக்காகச் சொல்லிவிடுவதும்!' என்பது முதலியாரின் சித்தாந்தம்.

ஒரு சமயம் ஆறு பிள்ளைகளையும் வரிசையாக நிமிர்ந்து நிற்க வைத்து மனக்கணக்குகளாகப் பெருக்கல் கேள்விகளை அவர்கள்மீது சரமாரியாக முதலியார் பொழிந்துகொண்டிருந்தார். ஒரு சிறுமியை நோக்கி '97X97? பத்து செகண்டில் பதில் சொல்லு' என்று தம் கைக் கடிகாரத்தை நோக்கினார். அப்போது குப்பம்மாளிடம் பேசிக்கொண்டிருந்த ஆதாரப் பள்ளிக்கூட ஆசிரியை ஒருத்தி முதலியார் நடத்திக்கொண்டிருந்த மனக்கணக்கு வைபவத்தைக் கண்டு கலங்கிப் போனாள். 'அதோ ஒரு முரட்டு வாத்தியார் ஏன் அப்படிக் குழந்தைகளை ஹிம்ஸிக்கிறார்? ஏன் அந்தகைய முறையில் பள்ளிக்கூடம் நடத்துகிறீர்கள்?' என்று குப்பம்மாளைக் கேட்டுவிட்டாள். விஷயம் தெரிந்ததும் அந்த அம்மாள், 'ஐயோ பாவம், பாவம்!' என்று அலறிக்கொண்டே விரைந்துபோய்விட்டாள்.

மாண்டிஸோரிக் கல்வி முறையில் பழகிய வேறொரு ஆசிரியை முதலியார் பிள்ளைகளைப் படுத்தும்பாடு கண்டதும் 'ஏதோ பட்டாளப் பயிற்சி நடக்கிறதோ இச்சிறுவர்களுக்கு?' என்று மனம் நொந்து கேட்டுவிட்டாள். இந்த இரண்டு ஆசிரியைகளின் அபிப்பிராயங்களையும் தமது மனைவி மூலமாகத் தெரிந்துகொண்ட முதலியார், 'நான் கர்நாடகம்; புது நாடகங்களுக்குக் கல்வித் துறையிலும் இடம் கொடுக்கமாட்டேன்!' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

ஞாயிற்றுக்கிழமை முதலியார் பிள்ளைகளைப் படாதபாடு படுத்துவதால், திங்கட்கிழமை இரண்டொருவருக்கு உடல் நிலை அசௌகரியப்படுவதுமுண்டு. குப்பம்மாள் மிளகுக் கஷாயம், சுக்குக் கஷாயம் போட்டுக் கொடுப்பாள். 'இப்படிப் பிள்ளைகளுக்கு வாரம் முழுதும் பாடம் சொல்லிக்கொடுக்கும் பள்ளிக்கூடத்திலே வாத்தியாரோடு வைத்தியரும் தேவை' என்று மேலே சொன்ன இரண்டு ஆசிரியைகள் மட்டுமல்ல மங்களமும் துணிந்து சொல்லிவிட்டாள் குப்பம்மாளிடம்.



பிரபல சினிமா நடிகை ரீட்டா ஹேவொர்த்துக்கும், இளவரசர் அலிகானுக்கும் பிரான்ஸ் தென்பகுதியிலுள்ள கான்ஸ் என்ற இடத்தில் சென்ற மாதம் 27-ந்தேதி விவாகம் நடந்தது.





## 37

கோயில் குளத்துக்குச் சென்று அவசர அவசரமாக ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பிய சுசீலாவின் சிறிய பாட்டி வாசலில் சுவாமியும் குமாரும் 'உர்'ரென்று ஒருவருடன் ஒருவர் பேசாது முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு உள்ளே போனாள். போனவள் சிறிது நேரத்துக்கெல்லாம் ஈரப் புடவையுடனேயே திரும்பிவந்து வெயிலில்காயும்விறகுக் கட்டையொன்றை எடுத்துக்கொண்டு, "ஏண்டாப்பா சுவாமி! உன்மன்னி எங்கே காணோம்!" என்றுகேட்டாள்

"ஸ்டேஷன் குளத்துக்குக் குளிக்கப் போயிருக்கிறாள்" என்றான் சுவாமி.

"ஸ்டேஷன் குளத்துக்கா? அதெப்படி அவள் இந்தப் பிதைபதைக்கிற வெயிலிலே போவாள்? அவளை யார் இந்த உடம்போடே போகச் சொன்னது தனியாய்! யாரின்டே சொல்லிண்டு போனாள்னு கேட்கறேன்! வெத்துடம்பா ஒண்ணு? அவள் அப்பன்தான் எப்படிப் போகவிட்டான்!" என்று விறகுக் கட்டையை வைத்துக்கொண்டே இரைய ஆரம்பித்தாள்.

சுவாமிக்கும் குமாருக்கும் பாட்டியின் இந்தக் கோபத்துக்குச் சரியான அர்த்தம் விளங்கவில்லை. 'நேற்று வரைக்கும் பாட்டியுடனேயேதானே அந்தக் குளத்துக்கு ஸ்நானம் செய்யப் போய் வந்தாள்? இன்றைக்கு மட்டும் அங்கே என்ன வந்துவிட்டது?" என்று சுவாமிக்கு ஒன்றும் புரியவில்லை.

"தனியாகப் போகவில்லை, பாட்டி! அந்த பெண் சீதாவும் போயிருக்கிறாள் துணைக்கு!" என்றான் அவன்.

"சீதாவுமாச்சு; கீதாவுமாச்சு! அதென்ன காரியம்! படிச்சுப் படிச்சுச் சொல்லியிருக்கச்சே போயிருக்காளே. அதெப்படி போவாள்?"

இதற்குள் அஞ்சலை வந்து சேர்ந்தாள். பாட்டி கோபத்துடன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, "பெரியம்மா! கையிலே இருக்கிறதைப் போட்டுடாதீங்க!" என்றாள்.

"நீ ஒருத்திதான் பாக்கி! உன்னைப் பாத்து அவளும் கத்துனுட்டாப்போல இருக்கு! ஸ்நானம் பண்ணி மூணு மாசமாகிறதுன்னு சந்தேகமாய் இருக்கறப்போ இவளுக்குக் குளத்துக்கும் ஆற்றுக்கும் போகவேண்டிய வேலை என்ன? நீயே சொல்லு! ஒரு சொம்பு ஜலத்தைச் சுட வைச்சுக் கொடுக்காமே போயிடுவேனா என்ன? வெந்நீர் போடலாம்னு அவளைப் பாத்தா—"

அஞ்சலை தன் வயிற்றை ஒரு முறை பார்த்துக்கொண்டாள். எவ்வளவோ ஏமாற்றத்துக்குப் பிறகு அவள் முகத்தில் பசலை கண்டிருந்தது. அவளுக்கும் சந்தேகம்தான்; நிச்சயப்படவில்லை. இந்தச் சந்தேகத்தையெல்லாம் தெளிவுபடுத்தக்கூடிய அநுபவ ஞானம் பொன்னுப்பாட்டிக்கு உண்டு. அதற்காகத்தான் அவள் அங்கே வந்தது. வந்த இடத்திலும் இதேபேச்சு! அஞ்சலையின் பசிய முகத்தில் செவ்வரி தோன்றிற்று.

"இதானேம்மா புதிசு! முத முதல்! தெரிஞ்சா போவுமா? சோந்து சோந்து உக்காரப்பவே எனக்குக் கூடச் சந்தேகந்தான். கேட்பமான்னு எண்ணிக்கிட்டு இருந்தேன் ஆனா—" என்று சமாதானம்போலச் சொல்லிக்கொண்டே வந்த அஞ்சலை திடீரென்று பேச்சை நிறுத்தி எதனாலோ சுவாமியைப் பார்த்தாள். பக்கத்தில் குமார் உட்கார்ந்திருப்பதையும் அப்போதுதான் அவள் கண்டாள்.

"தம்பி எப்போ வந்திச்சு. பார்க்கவேயில்லையே!"

குமாரின் முகத்தில் என்ன காரணத்தாலோ ஈயாடவில்லை, அசட்டுச் சிரிப்புடன், "காலையிலேதான் வந்தேன்" என்றான்.

அஞ்சலைக்கு வந்த காரியம்கூட மறந்துபோயிற்று. வளவளவென்று குமாரை என்னவோ அசட்டுக் கேள்வியெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாள். சுவாமிக்கு ஒருவிதத்தில் தொல்லை விட்டதுபோலிருந்தது. ஆனால் அஞ்சலையின் கூரிய பார்வைகள் அடிக்கடி தன்மீது பாய்ந்து செல்வது அவன் மனதை உறுத்திக்கொண்டேயிருந்தது. அந்தப் பார்வையின் விசேஷ உட்கருத்தை அவன் தெரிந்துகொள்ளவில்லை. கபடு, சூது அறியாத அவன் உள்ளத்தில், உலக மக்களுடைய சகஜமான பார்வையிலும் கூட ஒரு கேள்வி தொக்கி நிற்கும் என்பது உறைக்கவேயில்லை. அவன் உள்ளம் கஷ்டத்தைப்பார்த்துக் கசிந்து உருகிவிடும் தன்மை வாய்ந்தது. மூன்றுமுறை கர்ப்பம் தரித்ததும் பலனற்றுப்போன அஞ்சலையைப்பற்றி அவனுக்குத் தெரியும். இப்போது மீண்டும் கருவுற்றிருக்கிறாள். இதுவாவது அவள் ஆசையைப் பூர்த்திசெய்து பலன் தரவேண்டும். சுவாமியின் சிந்தனை இப்படி ஓடிக்கொண்டிருந்தது அதேசமயத்தில் ஒரு குழப்பம்-கிட்டத்தட்ட ஓர் அதிர்ச்சிதான்! சுசீலாவும் ஊரிலிருந்து வந்ததிலிருந்தே—

வந்ததிலிருந்தே என்ன—?

சரியாகப் புரியவில்லை; புரியாமலும் இல்லை!

குமாருக்கும் தனக்கும் சற்றுமுன் நடந்தபேச்சு வார்த்தைகள் அவன் கவனத்துக்கு வந்தன. பானுமதிஎன்பவள் யாரென்றும் அவளுக்கும் விசுவத்துக்கும் எவ்விதமான பழக்கமென்றும் அவன் விசாரித்தான். போதும் போதாதற்கு, சீதா கொடுத்துவிட்டுப்போன கடிதத்தைக் குமார் கையிலிருந்து பிடுங்கிப் படித்துவிட்டான். சுவாமிக்கு மௌனம் சாதிப்பதைத் தவிர வேறு வழியில்லை. திம்மைய்யாவுக்குத் தஞ்சாவூர் விலாசம் எழுதிக்கொடுத்த

தைக் கூறினான் குமார். அதுவேறு அவன் நெஞ்சைக் கலக்கிக்கொண்டிருந்தது.

சென்னையில் அவர்கள் இருவரும் பழகிய உரிமையில், ஆத்திரம் பொறுக்காமல் குமார், "அடேய், உண்மையைச் சொல்லப்போகிறாயா இல்லையா?" என்று கேட்டான்.

சுவாமிதான் எதையும் யாரிடமும் கூறுவதில்லை என்று மன்னிக்கு வாக்குறுதியளித்திருக்கிறானே "என்னை ஒன்றும் கேட்காதே. எனக்கு ஒன்றும் தெரியாது" என்று ஒரேயடியாகச் சாதித்தான் அவன்.

"ஒன்றுமே தெரியாதா? அப்படியானால் இது என்ன? இதுவும் தெரியாதா உனக்கு?" என்று விசுவத்தின் அன்றையக் கடிதத்தைக் காட்டிக் கேட்டான் குமார்

சுவாமிக்கு, இவனிடமிருந்து எப்படித் தப்பித்துக் கொள்வது என்பது தெரியவில்லை. அசட்டுத்தனமும் முரட்டுத்தனமும் கலந்த குரலில், "என்னை ஒன்றும் கேட்காதே தெரிந்தாலும் நான் எதுவும் சொல்லமாட்டேன் உன்னிடம் சொல்லிவிட்டு மன்னியிடம் மனஸ்தாபப் பட நான் தயாராய் இல்லை" என்றான்.

பேச்சுக் கொடுத்துப் பேச்சு வாங்கி வெகு நேரமாகி விட்டது ஆனால் இப்போதோ ஒரு புதிய விஷயம் காதில் விழுகிறது அதாவது சுசீலா மன்னி சீக்கிரத்தில் தாயாகப் போகிறாள்! இது என்ன அதிசயமா, ஆச்சரியமா? ஒன்றுமே புரியாமல் குழப்பமாய் இருக்கிறதே! அது உண்மையானால் எவ்வளவோ காரியங்கள் யாதொரு விக்கினமுமின்றி நடக்கவேண்டுமே! எப்படி நடக்கும்? எப்படி முடியும்?

குமாரிடம் பேசிக்கொண்டேயிருந்த அஞ்சலை, "அதோ வருதே நடக்கமுடியாமல் நடந்துகிட்டு! நல்ல பொண்ணு!" என்றாள், சுசீலா வருவதைப் பார்த்து விட்டு.

அதற்குமேல் சுவாமியால் அங்கே உட்கார்ந்திருக்க முடியவில்லை எழுந்திருக்கக் கிளம்பினான் சுசீலா இதற்குள் அருகில் வந்துவிட்டாள். வந்தவள் சும்மாயிராமல், "சுவாமி! மத்தியான்ன வண்டிக்குக்கிளம்பப் போகிறாயா?" என்று கேட்டாள்.

மௌனம்—

"வேண்டாம்; இப்போது போகவேண்டாம்; நாளை, மறுநாள் பார்த்துக் கொள்ளலாம்!" என்றாள் சுசீலா மீண்டும் தலைக்கொதிப்புத் தாங்காதவள்போல கையால் தலையைப் பிடித்துக்கொண்டே. அஞ்சலை பக்கம் திரும்பி, "என்னடி, சிரிப்பு பொங்குகிறது முகத்திலே—ஒரு மாதிரி இருக்கிறாயே. என்ன விஷயம்? தம்பி வந்திருக்கிறானே பார்த்தாயா?" என்று கேட்டாள்.

"பாக்காமலா பேசிக்கிட்டிருக்கிறேன்!" என்றாள் அஞ்சலை

"பேசு, பேசு!" என்றுசொல்லிக்கொண்டே வேதனை தாங்காத முகத்தைத் திருப்பிக்கொண்டு உள்ளே நுழைந்தாள் சுசீலா சற்று நேரம் கழித்து உள்ளிருந்தபடியே குமாரைக் கூப்பிட்டு, "வாசலில் உட்கார்ந்துகொண்டு என்ன பேச்சு? உள்ளே வந்து பேசப்படாதா?"

என்று கேட்டாள். அதேசமயத்தில் வெளியில் சுவாமியிடம் அஞ்சலை, "ஏன்னா, ஊருக்கா அதுக்குள்ளற போகக் கிளம்பிட்டீங்க!" என்று கேட்டது சுசீலாவின் காதில் விழுந்தது சுசீலாவின் நெஞ்சே இந்த வார்த்தைகளைக் கேட்டு வெடித்துவிடும் போலிருந்தது. குமார் சிறிதும் இரக்கமற்ற குரலில், "சுவாமியை நீ ஏன் இன்று ஊருக்குப் போகவேண்டாம் என்கிறாய்!" என்று கேட்டான்.

கோபமும் அவமானமும் கலந்த உணர்ச்சியுடன் சுசீலா குமாரைப் பார்த்துச் சிறிது நேரம் நின்றாள். தன் பேச்சுக்குக் காரணம் கேட்க குமாருக்கு என்ன அவசியமோ உரிமையோ இருக்கிறது என்ற பாவனையில் நின்றாள் அவள் பிறகு தன் குரலில் அந்த உணர்ச்சிகள் பிரதிபலிக்காதபடி அடக்கிக்கொண்டு, "எனக்குத் தெரியும்; அவனிடம் எவ்வளவோ சொல்லியனுப்பவேண்டியிருக்கிறது இன்றைக்குக் கிளம்புவதற்குள் அதெல்லாம் சொல்ல நேரமில்லை......அதெல்லாம் ரொம்ப முக்கியமான விஷயங்கள்......தெரிந்ததா!" என்றாள்.

வேறொரு சந்தர்ப்பமாய் இருந்தால் குமார் அத்துடன் விட்டிருக்கமாட்டான் அவளைப் பற்றி சற்றுமுன்தான் கர்ப்பிணி என்று பொன்னுப்பாட்டி சொல்லக் கேட்டிருந்தான் இன்பமும் இளக்கமும் நிறைந்த அந்தச் செய்தியை ஊர்ஜிதம் செய்துகொள்ள அவன் மனசு விரும்பியது. வெளிப்படத்தெரியும் மாறுதல் ஒன்றும் அவளிடம் தோன்றவில்லை. நுணுக்கமான சின்னங்களைப் பார்த்துக் கண்டுபிடிக்கக்கூடிய அநுபவமோ அவனுக்குக் கிடையாது இருந்தாலும், நிலையற்ற நீர் நிலையின் தரங்கங்கள் மேலும் மேலும் படிப்படியாக ஒன்றின்மேல் ஒன்றாக வசந்த காலத் தென்றலினால் ஊர்ந்து வந்து சேருவதுபோல் சுசீலாவிடம் ஒரு மின் அலைவு தோன்றிக்கொண்டேயிருந்தது அவள் நிலைத்து, நின்ற இடத்தில் ஒரு கணமாவது சேர்ந்தாற்போல நின்றால்தானே? உள்ளத்தின் பரபரப்போ உடலின் படபடப்போ அவளைச் சும்மா இருக்கவிடவில்லை கண்கள் புயலில் சிக்கிய கார்காலத்து மேகங்கள்போல அலை பாய்ந்துகொண்டிருந்தன. தொட்டதற்கெல்லாம் அவளுக்குக் கோபம்தான் மூண்டுக்கொண்டு வந்தது. குமார் மேலும் அங்கு நிற்பதைக் கண்டும் அவள் கோபம் கொண்டாள் சரசுடையை மாற்றிக்கொண்டு வெளியே வந்து, ஆழ்ந்த சிந்தனையில் தென்பட்ட குமாரைப் பார்த்து விட்டு முதலில் பேசாமல் திரும்பிவிட நினைத்தாள் ஆனால் அது அவளால் முடியவில்லை.

"இதோ பார் குமார்! நான் ஊரிலிருந்து வந்து கிட்டத்தட்ட இரண்டரை மாதத்துக்கு மேல் ஆகிறது. இதற்குள் என்னால் எவ்வளவு பேர்களுக்குச் சிந்தனைகள், கற்பனைகள், கவலைகள், அபூர்வ சந்தேகங்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொண்டு விட்டேன். ஒரு பெண்ணுக்கு இதைவிடக் கேவலமானது வேறு எதுவும் ஒரு குடும்பத்தில் செய்யமுடியாது நினைக்கவும் முடியாது! பெண்ணென்றால் ஒரு மூன்று மாசம்கூட தன் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது; கூடாது! அதுதானே? என்னிடம் ரகசியம் ஒன்றும் இல்லை! உங்கள் குடும்பத்தின் நல்லபெயர் போய்விடும் என்று நீங்கள் கவலைப்



படுகிறீர்கள்! ஆனால் அதற்கெல்லாம் மேலே, அதையெல்லாம் விடப் பெரிய உண்மை ஒன்று இருக்கிறதே—ஒரு பெண்ணின் தூய்மையான சௌபாக்கிய வாழ்வு! தூய்மையைக் காப்பாற்றிக்கொள்வது என் சொந்த விஷயம். அதில் நீங்கள் தலையிடுகிறீர்கள்: கவலைப்பட்டு மண்டையை உடைத்துக்கொள்கிறீர்கள். சந்தேகம் கொள்கிறீர்கள்; போலீஸ்காரர்களைப்போல என்னைக் கண்காணிக்க விரும்புகிறீர்கள்!..."

சுசீலா தன்னை மறந்த நிலையில் பேசிக்கொண்டே போனாள். சுருதி மீட்டிய வீணையின் கம்பியை விளையாட்டுக் குழந்தையொன்று முரட்டுத்தனமாய் மீட்டிக் கொண்டே இருப்பதைப்போல அவள் குரலின் . கடுமையான தொனி திக்கு திசை எங்கும் பரவி ஓர் அவசத்தை ஏற்படுத்தியது பிரசங்கம் செய்பவன் ஆவேசம்கொண்டால் சட்ட வரம்பு, மத்தியஸ்த மனப்பாங்கு, நடு நிலையிலிருந்து ஆராயும் தன்மை இவற்றிலிருந்து விலகிச் சென்று, ஒரு தலைப்பக்ஷமான வெறிக்கு அடிமையாகி, அந்த வெள்ளத்திலேயே அடிபட்டு இழுத்துச் செல்லப்படுபவன்போல் ஆகிவிடுகிறானே அதற்கும் சுசீலாவின் இந்த அவா நிலைக்கும் வித்தியாசம் இருந்தது. வாசலிலிருந்து அஞ்சலையும், சுவாமியும் இந்த ஒலி அலையின் உக்கிரத்தைக் கேட்டு உள்ளே வந்தார்கள் கொல்லைப் புறத்தில் ஆட்களை வைத்துக்கொண்டு வேலி கட்டிக்கொண்டிருந்த சுப்பண்ணாவும் சமையலறைப் புகை மண்டலத்தில் சிக்கிக்கொண்டிருந்த பொன்னுப்பாட்டியும் சுசீலாவின் குரல் கேட்டு வந்து நின்றனர் வந்தவர்கள் அவளுடைய ரத்தம் தெறிக்கும் பேச்சைக் கேட்டு அசையாது நின்று விட்டார்கள். நடுவில் அவர்கள் தலையிட்டு எப்படி அவளை நெருங்கிச் சமாதானப்படுத்துவது?

எல்லாரையும் விட குமாருக்குச் சுசீலாவிடம் அன்பு மிகுதி உண்டென்பது அவளுக்கே தெரியும். தெரிந்தோ, தெரியாமலோ அவள் மனதை அவன் புண்படுத்திவிட்டான் அப்படித்தான் அவன் என்ன சொல்லிவிட்டான்? ஒன்றும் இல்லையே!

திடீரென்று சுசீலாவுக்கு உணர்வு பிறந்தது சொப்பனத்தில் பேசியவளைப்போலத் தன்னைச் சுற்றி எல்லாரும் நிற்பதைக் கண்டு மிரண்டு போனாள் வார்த்தைகள் தொண்டையைவிட்டு எழும்பி வர மறுத்துவிட்டன. அவள் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. ஒன்றும் நினைக்கவுமில்லை. கண்கள்கூட எதிரே பார்க்க மறுத்து விட்டன. தன் அறையில் நுழைந்து சோர்ந்து போய்ப்படுத்துக்கொண்டாள். வீட்டிலே பிறகு நிசப்தம் நிலவியது.

## 38

சாயங்காலம் துள்ளிக் குதித்தபடி சீதா ஓடி வந்து சுசீலாவின் பக்கத்தில் இடித்துக்கொண்டு உட்கார்ந்தாள் சுசீலாவின் மனப்புயலின் வேகம் அடியோடு தணிந்து அமைதி குடிகொண்டிருந்தது மத்தியானம் நடந்தது எதுவுமே அறியாத சீதா, மன்னி!, உன் மைத்துனர் ஊருக்குப் போகவில்லைபோலிருக்கிறதே—எனக்குத் தெரியாதா என்ன, உன் மனசு? உண்மையைச் சொல்லு, குளிக்கப் போனபோது விளையாட்டுக்காகத்தானே அப்படிச் சொன்னாய்? நான் என்ன சொல்கிறேன் என்று பார்க்கத்தானே அந்தமாதிரி பேசினாய்?" என்றாள்.

பச்சாத்தாபத்தினாலும் கழிவிரக்கத்தாலும் சுசீலாவின் மனசு பாகாய் இளகி ஓடவாரம்பித்தது வயிற்றில் உதித்த குழந்தை ஒன்றின் வினையறியாத கேள்வியைப்போல, "அம்மா, அந்த அம்புலி மாமா உனக்கு எட்டுமோல்லியோ, எனக்கு அதைப் பறிச்சுத் தருவியா, அம்மா?" என்று கேட்கும் மழலையைப்போல சீதாவின் குதலைமொழி ஒலித்தது அவளுக்கு'

"அப்படியானால் நீ விளையாட்டுக்காகத்தான் கல்யாணமே வேண்டாம் என்று சொன்னாயா?" என்றாள் சுசீலா. மனசுக்குள் சுவாமியைப் போகவேண்டாமென்று ஏன் சொன்னோம் என்பதை யோசித்தும் அவளுக்கே புரியவில்லை

"அதெல்லாம் இருக்கட்டும். நீ வந்து கல்யாணத்துக்கு முந்தியெல்லாம் என்ன சொல்லிக்கொண்டிருந்தாய்? அதைச் சொல்லேன். மன்னி! கேட்போம்!" என்றாள் சீதா.

உடனே சுசீலா பேச்சை மாற்றி, "உன் அண்ணாவுக்கு உடம்புளப்படியடி இருக்கிறது?" என்று விசாரித்தாள்.

"எல்லாம் தேவலை. உன் மைத்துனரைக்கூட வழியில் பார்த்தேனே 'அண்ணாவைப் பார்க்கத்தான் போகிறேன்' என்று சொன்னார்."

"நீ என்ன சொன்னாய் அதற்கு?"

"ஐயோ! நான் ஏன் பேசுகிறேன் அவரிடம்? சரி சரி என்று தலையை ஆட்டிவிட்டு ஓடி வந்துவிட்டேன் ஆனால் இருந்தாலும் அவர் ரொம்ப மோசம், மன்னி! இல்லையா? ஏதாவது கேட்க வேணும்போல இருந்தால் என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால் என்னவாம்! அந்தி வெயிலோ கொளுத்தறது. 'வந்து...வந்து' என்று இழுத்துக்கொண்டே நின்றார். நானும் விடவில்லை என் பெயர், சீதா! என் பெயர் "வந்து" இல்லை: என்றேன் தைரியமாய். எதுவேணுமானாலும் நினைத்துக்கொள்ளட்டுமே! எனக்கே பரிதாபமாய் இருந்தது 'இப்படி நிழலிலே வந்து நிற்கப்படாதா?' என்றும் கேட்டேன் என்ன...?"

சீதாவுக்கு நடுவில் சிரிப்பு வந்துவிட்டது விழிகள் அற்புதத்தைப் பேசுவதுபோல சுழன்று ஓடிச் சுற்றின.

"உன்னை எதற்குக் கூப்பிட்டான், அதைச் சொல்லித் தொலையேன்! அப்புறம் சிரிச்சு மகிழ்ந்து போகலாம்" என்றாள் சுசீலா.

"சீ, இதென்ன பேச்சு, மன்னி! என்னைக் கூப்பிடவுமில்லை: கும்பிடவும் இல்லை" என்று கொட்டாற்சுருங்கி இலைபோலச் சிணுங்கினாள் சீதா.

"நீதானே சொன்னாய்!"

"ஐயையோ! அப்படியா மன்னி, சொன்னேன் நான்?"

"சரி; மேலே நடந்ததைச் சொல்லு!"




சீதா உடனேயே குழையப் பிணங்கிக்கொண்டு, "அப்புறமென்ன? நான் வந்துவிட்டேன், அவ்வளவுதான்" என்றாள்.

"பொய்!"

"பின்னே எது நிஜம், சொல்லேன்!"

"நிழலிலே வந்து நிற்கச் சொல்லிவிட்டு நீ வந்து விட்டாயோ? அதுதான் நிஜமோ?" என்று கேட்டுவிட்டுச் சுசீலாவும் சிரித்தாள்: சீதாவும் சிரித்தாள்.

"நான் சொன்னதேயொழிய அவர் எங்கே வந்து நின்றார்? அப்புறம் நானாக, 'ஏதோ கேட்க வந்தீர்களே, என்ன?' என்று கேட்டேன். 'ஒன்றுமில்லை: உன் அண்ணா வீட்டில் இருக்கிறாரோ என்றுதான் கேட்க வந்தேன்' என்கிறார்—எப்படி இருக்கிறது, பார்த்துக்கொள்! இதைக் கேட்கிறதற்குள் எவ்வளவு தயக்கம், எவ்வளவு வந்து, எவ்வளவு ஒன்றுமில்லை........."

சீதா சிரித்துக்கொண்டேயிருந்தாள்.

சுவையோ ஹாஸ்யமோ இல்லாததற்கு இப்படி அவள் சிரித்துக்கொண்டிருந்தது. சுசீலாவுக்குத் துன்பமாகத்தான் இருந்தது. அளவற்ற பொறுமையுடன் அவள் சகித்துக்கொண்டிருந்தாள். அதற்குப் பிறகு சீதா தான் வந்த காரியத்தைப்பற்றிப் பேசவாரம்பித்தாள். அவளுடைய தந்தைக்கு லீவு முடிந்துவிட்டதென்றும் மறுநாளே போகவேண்டும் என்று அவர் சொல்லுவதாகவும் தெரிவித்தாள். சுசீலா அவள் பேச்சைப் புரிந்துகொண்டாள். அவர் போனாலும் சீதாவை இருக்கவேண்டும் என்று கூறுகிறாளா, 'அது அவசியமில்லை: அவளும் போகலாம்' என்று கூறுகிறாளா என்பதைத் தெரிந்து



கொள்ளவே அவள் வந்திருக்கிறாள். சுசீலா இதற்கு என்ன பதில் கூறுவது? சுசீலா இருக்கும் வரையில் சுவாமி அவளை மீறிப் போய்விடப்போவதில்லை என்ற சர்வ நிச்சயத்துடனேயே இருந்தாள் சீதா. இது சுசீலாவுக்கு நன்றாய்த் தெரிந்தது. பெண்களுக்குத் தம் கணவனிடம் பக்தியும் பிரேமையும் எவ்வளவு தூரத்துக்கு உண்டாகும் என்பதைச் சுசீலாவால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனாலும் இப்படியா? 'ஏது, ஏது? நாளைக்குக் கல்யாணம் என்று ஆகிவிட்டால் சுவாமி எந்தத் தகாத காரியத்தை—அவனுடைய அண்ணாவைப்போல—செய்தாலும் அவனிடம் உள்ள பக்தியினால் சகித்துக்கொள்வாள் போலிருக்கிறதே! இப்படிக்கூட ஒரு பிரியம் உண்டா என்ன? அப்படிப்பட்ட பிரியம் எனக்கு இல்லாததனால்தான் அவரைவிட்டு நான் இப்படிப் பிரிந்து ஓடிவந்து அவதிப்படுகிறேனோ? அப்படிப்பட்ட ஒரு பிரியமோ, பக்தியோ எனக்கு அவரிடம் ஆதிமுதலே இல்லையோ! இல்லையானால் ஏன் உண்டாகவில்லை?' என்று எண்ணினாள் சுசீலா. இதைத்தான் அவளுக்கு என்ன யோசித்தும் புரிந்துகொள்ளமுடியவில்லை. சீதாவின் பக்தி உபாசனை எவ்வளவு தூரத்துக்குப் போகிறது என்பதைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் அதிகரித்து வந்தது சுசீலாவுக்கு. கடைசியில்; "அவருக்குத்தான் லீவு முடிந்துவிட்டது; போகவேண்டும். உனக்கென்ன வந்தது நான் இருக்கும்வரையில் இருக்கக்கூடாதா நீ? வேண்டாம், கல்யாணம் நிச்சயமாகும் வரையிலாவது இருக்கக்கூடாதா?" என்றாள்.

சீதாவுக்கு இந்த வார்த்தைகள் எவ்வளவு ஆறுதலைக் கொடுத்தன! தேன் பருகக்கூட மறந்துபோய் அந்த வண்ணாத்திப் பூச்சி அந்த வாச மலர்க்காட்டைச் சுற்றிச் சுற்றிப் பறந்து வந்தது. பிரிவுத் துயர் நீங்கிய ஆசைக் கனவன் மாதிரி அவள் சுசீலாவை இறுகப்பற்றிக் கொண்டு, "உண்மையைச் சொல்லு—என் தலையில் அடித்துச் சத்தியம் செய்—என் மேலே உனக்கு உண்மையான பிரியம் இருந்தால் முகத்தைத் திருப்பாமல், சந்தோஷமாய்ச் சொல்லு...உனக்கு இப்போது எத்தனை மாசம்?" என்று கேட்டாள் சீதா.

சுசீலா உண்மையில் இந்தக் கேள்வியை எதிர்பாராமல் திகைத்து திடுக்கிட்டுப் போனாள். "உனக்கு எப்படித் தெரியும்?" என்று அவள், வாய் குளறியது.

"எனக்கா தெரியாது? உன் முகம் சொல்லுகிறதே! உண்மைதானே அது?"—சீதாவின் பிடி மேலும் இறுகியது.

"சீ, இதெல்லாம் என்ன பேச்சு! விடேன் கையை" என்றாள் சுசீலா திமிறிக்கொண்டு.

"அப்படியானால் போனவளைக் கூப்பிட்டுச் சொன்னாளே அஞ்சலை. பொய்யா சொல்கிறாள் அவள்?"

"எனக்கென்ன தெரியும்? எனக்கே சந்தேகமாகத்தான் இருக்கிறது! போதுமா? கையைவிட்டுத் தொலை, இனிமேல்!" என்று பொய்க் கோபத்துடன் கடிந்து கொண்டாள் சுசீலா. ஆனால் அவளுக்குக் கோபமே

வராமலும் இல்லை! அஞ்சலைக்கு இது எப்படித் தெரியும்? அவள்வரைக்கும் இது ஏன் போயிற்று? அப்படியானால் ஊராருக்கு எட்ட எத்தனை நாளாகும்? அசட்டு அஞ்சலை வஞ்சனையே தெரியாமல் தமுக்குப் போட்டுச் சொல்லிவிட்டு வந்துவிடுவாளே! ஏன் தெரிந்தது அவளுக்கு? இந்தப் பொன்னுப்பாட்டியின் வாய் சும்மா இருந்தால்தானே? சுசீலாவின் உடலெல்லாம் சிலுசிலு வென்று சிலிர்த்துக் குலுங்கிற்று. 'அப்படியானால், அப்படியானால்?' என்று கூவியது அவள் உள்ளம்! நாளைக்கு எப்படியும் இதை மறைக்க முடியாது என்பது சரிதான்! ஆனால், ஏற்கனவே ஊரில் மிதந்துகொண்டிருந்த வதந்திக்கும் இந்த நிதர்சன உண்மைக்கும் எவ்வளவு விபரீதமான முடிச்சு விழுந்துவிடும்!

அந்த முடிச்சு அவள் கழுத்தையே சுருக்கிட்டு இறுக்குவதுபோல இருந்தது அவளுக்கு. நேரம் ஆக ஆக வேதனை விசுவரூபம் எடுத்தது. அபவாதம் என்ற மாயப் பிசாசு கோர கர்ஜனை செய்தது. காது செவிடுபடச் சிரித்துக் கெக்கலி கொட்டியது. பொய் வென்றது! உண்மை, கோழையைப்போல, ஆதரவே இல்லாத நோஞ்சல் குழந்தைபோல, அடங்கி ஒடுங்கி அழக்கூடச் சக்தியற்று நடுத்தெருவில் நின்றது!

ஒருவிதமாக அன்றைக்குச் சீதாவிடம் அவமானப்படாமல் அவள் தப்பித்துக்கொண்டாள். ஆனால் மறுநாள்...

சீதாவின் தந்தை ஊருக்குப் புறப்பட்டார். வந்த காரியம் திருப்திகரமான ஹேஷ்யத்துக்குக்கூட இடமளிக்கவில்லை. சுவாமியைப்பற்றிய வரையில் அவர் மனசில் நம்பிக்கையோ, நல்ல அபிப்பிராயமோ ஏற்படவில்லை. தம் பழைய திட்டத்தையாவது விடாமல் இருக்கக் கருதி குமாரிடமும் சுப்பண்ணாவிடமும் பேசிப் பார்த்தார். எல்லாரும் சம்மதித்தால் சுப்பண்ணாவுக்கு ஆக்ஷேபணையிராது என்பது தெரிந்தது. அந்தச் சந்தோஷத்தில் குமாரைப் பார்த்து, "நீ எப்பொழுது ஊருக்கு வரப் போகிறாய்! வந்த காரியம் முடிந்துவிட்டால் இன்றே என்னோடு புறப்படேன். எனக்கும் துணையாயிற்று!



சீதாகூட இங்கேதான் ஒருவாரமோ இரண்டுவாரமோ இருக்கப்போகிறாளாம்!" என்றார்.

குமார் முதலில் சிறிது தயங்கினான். முதல் நாள் சுசீலாவின் சீற்றம் அவன் ஞாபகத்துக்கு வந்தது அத்துடன் இங்குள்ள நிலைமையில் சீதாவைச் சந்திப்பதும் அவள் மனதைத் திருப்புவதும் அசாத்தியம் என்றே அவனுக்குப்பட்டது. அதைவிட சீதாவின் தந்தைக்குத் தன்மீது நல்ல அபிப்பிராயம் இருப்பதைப் பயன்படுத்திக்கொள்வது ஒருகால் பலன்தரக்கூடும்! தயங்குவானேன்: தவிப்பானேன்!

"நானும் இவருடன் போகட்டுமா, அப்பா?" என்று கேட்டான்.

பெரியவர்தான் எதையும் மறுக்கும் சுபாவமில்லாதவராயிற்றே! குமார் கிளம்பத் தயாராகிவிட்டான்.

ஆனால் சுவாமி, அண்ணாவின் கடிதப்படியோ மன்னியின் விருப்பப்படியோ எங்கும் கிளம்பத் தயாராய் இல்லை! அதன் காரணம் ஆண்டவனுக்குத்தான் தெரியும்: அவனுக்கேகூடத் தெரியாது.

"இனி என்ன? எல்லாம் முடிந்துவிட்டது! அபவாதம் அழியப்போவதில்லை. அவன் போனாலென்ன? இருந்தாலென்ன?" என்று சுசீலாவும் வற்புறுத்தவில்லை.

குமார் ரெயிலுக்குக் கிளம்புகையில் சீதாவும் தற்செயலாய் இருந்தாள். சுசீலா பூமாலை ஒன்று தொடுத்துக்கொண்டிருந்தாள். சுவாமியைப் பார்த்துக் குமார், "நீ என்ன செய்கிறாய் என்பது உனக்குத் தெரியவில்லை. உன் மன்னியும் உன்னைக் கண்டித்துச் சொல்லமுடியாமல் இருக்கிறாள் இதெல்லாம் பார்ப்பவர்களுக்கு விபரீதமாகத்தான் படும்! நீ இங்கு இருப்பதால் ஒன்றும் குறைந்துபோய் விடாது ஆனால் உன் அண்ணாவின் முகத்தில் இனி நீ விழிக்கப் போவதில்லையா?" என்றான். அவன் கூறியது என்னவோ சரியான அர்த்தத்தில்தான் சுவாமிக்கும் பட்டது. சீதா இங்கே இருக்கப் போகிறாள்! சுவாமி ஊருக்குப் போக மறுக்கிறான். இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் கொண்டவை என்ற கருத்தில்தான் குமார் கூறினான்.

சுவாமி இதைப் புரிந்துகொண்டு, "என் கல்யாணத்தை முன்னிட்டுத்தான் நான் போகவில்லை என்று என் அண்ணா நினைத்தால் அதைப்போல முட்டாள்தனம் வேறு ஒன்றுமில்லை நான் இன்றைக்குச் சொல்கிறேன். இதோ, யாரையும் கல்யாணம் செய்துகொள்ள எனக்குச் சிறிதும் விருப்பமில்லை. விருப்பம் இருப்பது என்னவோ உனக்குத்தான்! எனக்கு நிச்சயம் இதுவரையில் இல்லை!" என்றான். 'யாரையும்' என்ற வார்த்தையைச் சொல்லும்போது சீதாவைப் பார்த்துக்கொண்டே சிறிது அழுத்தமாகக் கூறினான்.

இந்த வார்த்தைகளினால் சீதாவுக்கு அவமானம் விளைந்ததா? சுசீலாவுக்கு விளைந்ததா?

நிச்சயம் சுசீலாவுக்குத்தான்!

பின்னே வேறு யாருக்காக, யாரை முன்னிட்டு அவன் ஊருக்குப் போக மறுக்கிறான்?

குமார் புறப்பட்டுச் சென்று வெகு நேரமாகியும் அவள் இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை. கையில் தொடுத்த பூமாலை கசங்கிப் போய்க் கிடந்தது



"பூம், பூம், பூம்..." ஐயா கட்டிருக்கிற வேட்டி வேணுமா...?"

"ஏம்பா மாடு தலையே ஆட்டமாட்டேங்குதே..."

"உங்க கிழிசவேட்டியை அது பார்த்துடுத்துங்க...!"

(தொடரும்)






## மேஷ ராசி

### (அசுவினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

மேஷ ராசிக்காரர்களுடைய விவகாரங்களிலெல்லாம் சென்ற மாதத்திலிருந்ததைக்காட்டிலும் இந்த மாதம் சற்று அபிவிருத்தி ஏற்படும். கைகூடாமல் நின்றுபோயிருந்த விஷயங்கள் தீர்க்கப்படும். பணமுடை வெகுவாகத் தளரும். எதிர்பார்த்தபடி குடும்பத்தில் சந்தோஷகரமாயிருக்க முடியாது செலவுமட்டும் முன்னையும்விட அதிகமாக அதிகரித்தவண்ணமிருக்கும். ஏற்கனவே செல்வ நிலைமை பலவீனமாயிருப்பவர்களானால் இந்த சமயத்தில் தற்காலிகமாக கைமாற்றுவாங்கும் அவசியம்கூட ஏற்படும் மற்றவர்களுடன் பண விஷயமாக ஏதாவது கோளாறு ஏற்படுமெனத் தோன்றுகிறது. இருமல், ஜலதோஷம் இவை காரணமாக ஆரோக்கிய நிலை பாதிக்கப்படும் கடிதப் போக்குவரத்து அல்லது பத்திரம் இவைபற்றி ஏதேனும் இம்மாதம் கவலைகளேற்படும். உத்தியோகத் துறையிலுள்ள விவகாரங்களைப்பற்றிய கவலைகள் இன்னும் கொஞ்சகாலத்துக்கு நீடிக்கும். வெகு காலமாக ஓய்வுபெற விரும்பி வருபவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் ராஜிப்பெற மனுச் செய்துகொள்ள நேரலாம். மனைவியின் தேகாரோக்கியம் திருப்திகரமாயிராது. வெளியிடப்படும் க்கங்கள் திருப்திகரமாயிருக்கும். ஊழியர்களுக்குக் கஷ்டங்களிருக்குமேயன்றி சொந்த முறையில் உள்ள முதலாளிகளுக்குச் சிரமமிராது. இம்மாதத்தில் ஒரு பிரயாணம் உத்தேசிக்கப்படலாம். பொதுவாகத் தொழிலைப்பற்றி மனநிம்மதியிராது வியாபாரிகளுக்குச் சென்ற மாதத்தைவிட அபிவிருத்திகரமானது. இருப்பினும் வியாபார நலனைப்பற்றி பொதுவாகத் திருப்தியிராது. இந்த இனத்தவர்களுக்குப் பரஸ்பர உதவி செய்து கொள்வது முக்கியாம்சமாக விருக்கும். புதிய முயற்சிகளைச் செய்யத் திட்டம் போடப்படலாம்; ஆனால் இதில் 'ஆரம்பத்திலேயே வெற்றிகிட்டி விடாது சிலர் நிலத்தின்மீது பணம் போடும்படி நேரும்.

ஜுன் 21, 23, 27, 28, ஜுலை 1, 2, 7, 11, 13, 15 தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்டமானவை. ஜுன் 24, ஜுலை 4, 10, 14 தேதிகள் சந்தோஷகரமானவையல்ல.

## விருஷப ராசி

### (கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

விருஷபராசிக்காரர்களுக்கு இம்மாதத்தில் அனுகூலமான கிரக நிலைமை ஏற்பட்டிருக்கிறது இதன்காரணமாக நேரக்கூடிய பயன்களில் பண அபிவிருத்தி பிரதான்யமான அம்சம். புதனும், சுக்கிரனும் பரிவர்த்தனை யோகத்திலிருப்பதால், எதிர்பாராது திடீரென்று ஏதேனும் பணம் கிடைப்பதற்கு இடமேற்படும். இது இல்லாமற்போனாலும் சென்ற மாதத்திலேற்பட்ட பணக்கஷ்டங்கள் விலகி வசதிகளாவது ஏற்படும் லக்னத்தில் செவ்வாய் இருப்பதால் செலவு அதிகமாகும். ஒருகால் ஒரு கல்யாணத்தை யொட்டியதாக இச்செலவேற்படலாம். குடும்பத்துறை சம்பந்தப்பட்டவரை இம்மாதம் சந்தோஷகரமென்று சொல்வதற்கில்லை. மிகவும் மும்முரமாகவிருக்கக்கூடிய மாதமிது. இம்மாதத்தில் ஏதாவது குடும்ப மாறுதல் ஏற்படலாம். மனைவி அல்லது கணவனின் தேகநிலை பாதிக்கப்படும் இம்மாதத்தில் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களுடைய சகவாசத்தைத் தவிர்ப்பது நலம். முதலாளிகளும், அதிகாரிகளும், தங்கள் சிப்பந்திகளிடம் குறை காண்பார்கள். இவர்களுக்கிடையே பரஸ்பரம் நல்லுணர்ச்சியிராது திடீரென்று கோபம் வருவதையும், கண்மூடித்தனமாக நடந்துகொள்வதையும் தடுத்துக்கொள்ள வேண்டும். ஏமாற்றங்களிருந்த போதிலும் உயர்ந்த அதிகாரிகள் நல்ல அந்தஸ்தையும், அதிகாரத்தையும் வகிப்பர். வியாபாரிகளுக்கு இம்மாதம் நல்ல முறையிலிருக்கும். இன்னும் கொஞ்சகாலத்துக்கு இவர்களுடைய சிப்பந்திச் செலவு உச்சத்திலிருந்துவரும். கூடிய விரைவில் கடிதப் போக்குவரத்தால் அனுகூலம் ஏற்படும். அயல் நாட்டு வியாபாரத்தை நன்கு கவனித்து நடத்தலாம்

1949-ம் ஆண்டு ஜுன் 15உ முதல் 1949-ம் ஆண்டு ஜுலை 15உ. வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்ள நட்சத்திரங்களும். பாதங்களும் கூடவே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நீண்ட பிரயாணம் ஒன்று நேரும். எதிர்கால வியாபாரத்தையொட்டி தூர இடத்திலிருந்து நல்ல சேதி வரும். மாணவர்களுக்கு இம்மாதம் அதிருஷ்டகரம். குதிரைப்பந்தயத்தில் ருசி உள்ளவர்களுக்கு வெற்றி கிட்டும்.

ஜூன் 17, 25, 26, ஜூலை 2, 4, 7, 9, 13, 15, தேதிகள் இவர்களுக்கு நலம்.

## மிதுன ராசி

### (மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.)

இம்மாதத்தில் மிதுனராசிக்காரர்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் கலந்து கட்டியாகவிருக்கும். புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளக்கூடும். செய்யும் தொழிலில் புதிய திட்டங்களைப்பற்றிச் சிந்தனை திரும்பியோடும். புதன், சுக்கிரன் இருவருடைய ஸ்தான விசேஷம் காரணமாகச் செலவைக் கட்டுப்படுத்த முடியாதெனக் காண்கிறது. ஏற்கனவேயே ஏழ்மை நிலையிலுள்ள இந்த ராசிக்காரர்களுக்கு மேற்கொண்டும் பண விவகாரங்களில் அசௌகரியங்கள் ஏற்படும். சொத்தை அடமானமாகக் கொண்டு பணம் புரட்ட நேரிடும். நில சம்பந்தமான நடவடிக்கைகளில் வெற்றி காணமுடியாது. சிலருக்குப் பிரயாணம் செய்யும்படியான சந்தர்ப்பமுண்டாகும். நண்பர்கள் இவர்களுடைய உதவியைக் கோருவார்கள். சொந்த எதிரிகளின் மூலம் ஏதாவது சங்கடங்கள் உண்டுபண்ணப்படுமேயன்றி அவற்றால் கெடுதி எதுவுமேற்படாது. பழைய கடிதப்போக்குவரத்தால் நிலைமேற்படும். பண விஷயமாகக் கிட்டிய பந்துவுடன் சச்சரவுகளேற்படாமல் கவனித்துக்கொள்ளவும். மனைவி அல்லது கணவனின் தேகநிலைமை பாதிக்கப்பட்டு கவலையை உண்டுபண்ணும். உத்தியோகத்தில் எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை. அப்படியே ஏதாவது நிகழுமென்றாலும் அது உத்தியோக மாற்றத்தைப்பற்றி உல்லது ஒரு வதந்தியாகவோ அல்லது செய்யும் வேலையில் ஏதேனும் மாறுதலைப்பற்றிய பேச்சாகவோ இருக்கும் அவ்வளவே. 10-வது வீட்டுக்குடைய குரு 8-ல் நீசமாயிருப்பதால் உத்தியோக விஷயங்களில் மனநிம்மதியேயிராது. உத்தியோகத்தில் மேலதிகாரியின் திருப்தியை நாடி எதைச் செய்தாலும் அவருக்குத் திருப்தி ஏற்படாது. ஜலதோஷம் காரணமாக ஆரோக்கிய நிலை பாதிக்கப்பட்டு சதாகாலமும் சுணங்கியே இருக்கநேரும். இது அடிக்கடி ஏற்படுவதாகும். வியாபாரிகளுக்கு இந்த மாதம் சாதகமானதல்ல. புதிய ஒப்பந்தங்கள் செய்வதை தவிர்த்துக்கொள்வது நலம். வியாபாரம் சுணக்கமடைந்து பண முடை அதிகரிக்கும். கூட்டு வியாபார முறை லாபந்தருவதாயிராது. கடைசிவாரம் சற்று அபிவிருத்திகரமெனலாம்.

ஜூன் 17, 23, 24, 27, ஜூலை 2, 7, 11, 15 தேதிகள் இவர்களுக்கு உயர்வானவை.

## கடக ராசி

### (புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

கடக ராசிக்காரர்களுக்கும் இம்மாதம் நல்ல கிரகங்களும் தீய கிரகங்களும் கலந்து கட்டியாகவேயிருக்கின்றன. தீய கிரகங்கள் ஓங்கி இருக்கின்றன. குடும்ப வட்டாரத்தில் அமைதியின்மையும், பரபரப்பும் இருந்துவரும். போகப் போக இந்த நிலை அபிவிருத்தியடையலாம். மனைவி அல்லது புருஷனின் தேக சுகம் பாதிக்கப்படுவதுடன் பண அசௌகரியங்களும் கூடச் சேரும். ஏற்கனவே கடன் பட்டவர்கள், கடன்காரர்களின் நெருக்கடியால் கஷ்டப்படுவார்கள். ஐவேஜுகளுடைய மதிப்புக்குறையும். கடன் கொடுப்பதோ வாங்குவதோ இம்மாதத்தில் நல்லமாதிரியில் முடியாத. செலவு உச்சம். கிட்டிய பந்துக்கள் அனுவசியமாகத் தொந்திரவு கொடுப்பார்கள். நில சம்பந்தமான பத்திரம் அல்லது ஒப்பந்த நடவடிக்கைகள் நிகழ்ந்துவரும். ஆனால் நில சம்பந்தமாகவுள்ள உரிமைகள், சட்ட ரீதியில் ஆட்சேபகரமாயிருக்கும். உத்தியோகத்தில் எவ்வித அனுகூலத்தையும் அடைய முடியாது. அனுபவத்தின் மூலம் ஏதாவது புதிய விஷயத்தை அறியும் சந்தர்ப்பம் மட்டும் ஏற்படும். மேலதிகாரி இந்த ராசிக்காரர்களுடைய ஊதிய உயர்வு, அபிவிருத்தி இவைகுறித்து அலட்சியமாகவேயிருப்பார். இம்மாதத்தில் ஒரு பிரயாணம் நேரலாம். பார்வையிலுள்ள கோளாறு காரணமாக, வயதுவந்தவர்கள் வேறு கண்ணாடி போட்டுக்கொள்ளும் அவசியமேற்படலாம். வியாபாரிகளுக்கு இம்மாதம் அதைரியத்தை மூட்டுவதாயிராது என்றாலும் அதிக லாபம் வருவதற்கிடமிராது. புதிய முயற்சிகள் வெற்றியைத் தராமல் போகும். எதிர்காலத்தில் வெற்றிகரமாக நடத்துவதற்காக வியாபார அமைப்பை அடியோடு மாற்றியமைக்கும் அவசியம் பிறக்கலாம்.

ஜூன் 17, 21, 24, 26, 28, ஜூலை 2, 7, 11, 13 15 தேதிகள் இவர்களுக்கு உத்தமம்.

## ஸிம்ம ராசி

### (மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.)

1949-ம் வருஷம் ஜூன் 15-ந் தேதி உள்ள கிரஹ நிலை

| | | | |
|---|---|---|---|
| ராகு | | புதன் செவ்வாய் | உரானஸ் சூரியன் சுக்கிரன் |
| | ராசி | | |
| குரு சந்திரன் | | | சனி |
| | | | கேது நெப்டியூன் |

பிரபல கிரகங்களான குருவும், சனியும் நல்ல இடத்தில் இல்லையென்றாலும் ஸிம்ம ராசிக்காரர்களுக்கு இதர கிரகச் சேர்க்கையால் அதாவது 10-வது இடத்திலும் 11-வது இடத்திலும் உள்ள கிரகங்கள் காரணமாக வாழ்க்கை பிரகாசமாயிருக்கும். நேரிடையாகவோ மறைமுகமாகவோ பணம் பெறுவதற்கான வகையிலும் கிரகங்களிருக்கின்றன. பத்திரங்கள், தஸ்தாவேஜுகள் மூலம் பணலாபம் வருவதற்கும் இடமுண்டு. நண்பர்கள் இம்மாதத்தில் முக்கியமாக விளங்குவார்கள். இதனால் பரஸ்பர நன்மை ஏற்படும். புதிய நண்பர்களும் ஏற்படுவார்கள். ஆனால் இதில் உஷாராயிருக்கவேண்டும். இல்லையேல் அதிருப்தியே இறுதியில் ஏற்படும். செவ்வாய்—சனி



இவர்களது பரஸ்பர பார்வை, மனைவி அல்லது கணவன் க்ஷேமத்துக்கு உகந்ததல்ல. இது உத்தியோகத்துறைக்கு உபயோகமாயிருக்கும். எதிர்பாராத ஊதிய உயர்வோ அல்லது மாற்றமோ ஏற்படலாம். 6-ல் குரு இருப்பது பொதுவாகக் குழந்தைகளைப்பற்றி கவலை ஏற்படுமென்பதைக் குறிப்பதாகும். வயோதிகர்களுக்கு நெடுநாளைய வியாதி தலைதூக்கும் கட்டம் இது. சிறு பிராயத்திலிருக்கும் ஸிம்ம ராசிக்காரர்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு நடத்தையிலோ, குணத்திலோ முன்னணிக்கு வரமாட்டார்கள். பண அபிவிருத்தியிருக்குமென்றாலும் அது தற்காலிகமானதே. கணக்கிலாகாவிலிருப்பவர்கள் தங்கள் மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்தமுடியாது. அன்றாடம் வழக்கமாகச் செய்யும் அலுவல்களிலேயே அவர்கள் தவறுக நடப்பர். சென்ற மாதத்தைவிட வியாபாரிகளுக்கு இம்மாதம் விசேஷம். சிப்பந்திகளிடம் இவர்கள் கடின சித்தத்தோடு நடந்துகொள்ளும்படியிருக்கும்.

ஜூன் 17, 22, 23, 24, 27, ஜூலை 2, 7, 9, 11, 15, தேதிகள் இவர்களுக்கு ஏற்றவை.

## கன்யா ராசி

### (உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம் சித்திரை 2-ம் பாதம் முடிய.)

கன்யாராசிக்காரர்களுக்கு இன்னும் நிலைமை திருப்திகரமாக வில்லையென்றாலும், சென்ற மாதத்தைப்போல கெடுதலாக இல்லை இம்மாதம். ராகுவினுடைய பிரவேசம் இவர்களுக்கு அனுகூலம் தரத்தக்கதன்று. மனைவிக்கோ அல்லது கணவனுக்கோ தேக அசௌகரியமேற்படும். முன்னேற்றப் பாதையில் அநேகம் தடைகளும் உண்டாகும். தம்மைவிடத் தாழ்ந்த ஜாதியாருடன் சகவாஸம் வைத்துக்கொள்ளக்கூடாது. இல்லையானால் அவர்களால் சங்கடமான நிலைமை ஏற்பட்டு விடும். தாழ்ந்தப்பட்ட வகுப்பினரின் போஷகராகவுள்ளவர்களானால் அவர்களுக்கெல்லாம், ராகு பெற்றுள்ள ஸ்தான விசேஷம் காரணமாக சாதகங்கள் கிட்டும். குடும்ப வாழ்வுக்கு இம்மாதத்தைச் சந்தோஷகரமானதென்று சொல்வதற்கில்லை. செலவு படு கடுமையாயிருக்கும். சிலருக்குக் கோர்ட்டில் வியாஜ்யம் போன்ற தொல்லைகளெல்லாம் கூட ஏற்பட நியாயமுண்டு. உத்தியோகத்துறையிலென்றாலோ மேலதிகாரிகளுடன் தகராறுகள்தான். இம்மாதத்தில் செய்யும் வேலையில் ஏதேனும் மாறுதலேற்படலாம். சகோதரர்களிடம் கொண்டுள்ள உறவு திருப்திகரமாயிராது. நிலம், சொத்துப்போன்ற இனங்களில் விற்பனை கொள் முதல் விவகாரங்களிருக்கும். ஆனால் இவற்றில் இதுவரை தெரியாமலிருந்த சில சிக்கல்கள் சட்டபூர்வமாகப் பின்னால்தான் தெரிய வரும். பண நிலை திருப்திகரமானதென்று சொல்லமுடியாதென்றாலும் மோசம் என்பதற்கில்லை. இந்த ராசிக்காரர்களுடைய முக்கியமான அபிலாஷைகளிலொன்றோ அல்லது திட்டங்களிலொன்றோ ஏமாற்றத்தில் முடியும். குழந்தைகளைப்பற்றிய கவலைகள் இன்னும் கொஞ்ச காலமிருந்துவரும். தற்காலிகமாகப் பணம் கைமாற்று வாங்க நேரும். அல்லது உத்தியோகத்தில் வேலைக்காரர்களால் உபத்திரவமேற்படும். ஊழியம் புரியும் இலாகாவில் புதிய தொரு விஷயத்தைப்பற்றி விவரம் தெரிந்து கொள்ளலாம். கண், பார்வைக்குச் சற்று சிகிச்சை செய்துகொள்ள நேரும். வியாபாரிகளுக்கு, நடை முதலில் தடைகளிருந்துவரும். வெற்றி கிட்டுவது தாமதமாகும். கோர்ட்டு தகராறுகளை விலக்க வேண்டும்.

ஜூன் 17, 24, 28, ஜூலை 2, 7, 9, 13, 15 தேதிகள் இவர்களுக்குச் சிரேஷ்டம்.

## துலா ராசி

### (சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.)

சென்ற மாதத்தைப்போல இது அனுகூலம் தரத்தக்கதாக விராது. செவ்வாய் 8-ல் இருப்பதால் பணத்தைப் பற்றியும் வெளியிடத்தைக் குறித்தும் மனநிம்மதி இராது. திடீரென்று செலவினங்கள் கட்டு மீறிப்போகும். தசா, புக்தியிலும் இடமிருக்குமானால், கோசாரரீதியில் இவர்களுக்கு விரோதமாக வியாஜ்யப் பூசல்களும் வந்து சேரும். குடும்ப சௌஜன்யம் பங்கமடையும். பணம் கொடுக்கல் வாங்கலைப் பொறுத்து நண்பரில் ஒருவரோ, உறவினரோ ஏமாற்று வேலைகளைச் செய்யலாம். மனைவி அல்லது புருஷனின் தேகசுகம் சிறிதுகாலம் பாதிக்கப்பட்டிருக்கும். கொஞ்சகாலம் தொண்டைக் கோளாறுமிருந்துவரும். வரவேண்டிய பழைய பாக்கி சுலபமாகக் கைக்கு வராது. பண விஷயமாகவே குடும்பத்தில் உறவினர் ஒருவருடன் ஏதேனும் தகராறு மூளலாம். நெடுநாளாக இருக்குமிடத்தை மாற்றவேண்டும் என்று மனதில் கொண்டிருந்த விருப்பம் இன்னும் நிறைவேறாமலிருந்துவரும். தூர இடத்துக்குப் போவதற்காக ஒரு பிரயாணத்தை மேற்கொள்ளலாம். உத்தியோகத்தில் பிரத்யேகமான அனுகூலம் எதுவுமிராது. குமாரர்களில் ஒருவருடைய வாழ்நிலைபற்றி நல்ல சேதியைக் கேள்விப்படலாம். ஜூன் இறுதியில் எதிர்பாராது பணம்வர இடமிருக்கிறது. மாத இரண்டாம் பகுதியில் சற்று அனுகூலம். கஷ்டகாலங்களில் நண்பர்கள் உதவி புரிவர். சுபகாரியங்கள் ஏதாவது நிகழுமென எதிர்பார்க்கலாம். வியாபாரிகளுக்குச் சுமாராயிருக்கும். புதிய ஒப்பந்தங்களில் இறங்கக்கூடாது.

ஜூன் 17, 24, 25, 27, ஜூலை 2, 7, 9, 13, 15 தேதிகள் இவர்களுக்குச் சிலாக்கியம்.

## விருச்சிக ராசி

### (விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

விருச்சிக ராசிக்காரர்களுக்கு போனமாதத்திலிருந்ததைப்போன்ற அனுகூலங்களெல்லாம் இம்மாதத்திலிருக்குமென்று சொல்வதற்கில்லை. சூழ் நிலைமை கண்டு திருப்திகொள்ள முடியாதிருக்கும். 7-வது இடத்தில் லக்னாதிபதியிருப்பது ஒன்று தனக்கே திருமணம் ஏற்படும்: அல்லது மற்றொருவர் கல்யாணத்தில் சிரத்தை கொள்ளும்படியிருக்கும் என்பதைக் குறிப்பதாகும். சென்ற மாதத்தைவிட பண விஷயத்தில் இம்மாதம் சற்று அபிவிருத்திகரமானதுதான். கெட்ட தசா, புக்தி நடப்பிலுள்ள சிலருக்கு தேக சுகம் திருப்திகரமாகவிராது. சாதாரணமாக இருமல், ஜலதோஷமிருந்துவரும். குடும்பத்தில் கிட்டிய பந்துவுடன் ஏதாவது அபிப்ராயபேதமேற்படலாம். கோர்ட்டுத் தகராறுகளை விலக்கவேண்டும். தூர தேசப் பயணமொன்றும் சாத்தியம். வெளியில் தெரியாத நோயினால் சிலர் வருந்தலாம். புதிய நண்பர்களேற்படுவர். ஆனால் இவர்களுடன் தகராறு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நின்றுபோன கோர்ட்டு நடவடிக்கைகளில் வெற்றி கிட்டாது. திடீரென்று திரவிய சகாயம் ஏற்படும். அல்லது நில சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்கள் நிகழும். சொல்லிலும், செயலிலும் அதிக உணர்ச்சிகொண்டு நடக்கலாகாது. இல்லையானால் இதற்காகப் பிறகு வருந்த நேரிடும். குழந்தைகளிலொருவரைப்பற்றி மன நிம்மதியற்றுப்போகும். புதிய வீடு பார்க்கும் முயற்சி தொடரும். உத்தியோகத்தில் மனக்கிலேசமிருக்கும். வேலைப் பளு அதிகமாகும். இதற்கேற்றபடி மேலதிகாரியின் பாராட்டிராது. மனைவியின் தேக நலன் பாதிக்கப்படும். எஜமானரின் அதிருப்திக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். கிட்டிய பந்துவுடன் தப்பு அபிப்

பிராயம் கொள்ள நேரும். கடிதப்போக்குவரத்து, பண சம்பந்தமான நடவடிக்கைகள் இவற்றில் உஷாராயிருக்க வேண்டும். வியாபாரிகளுக்கு இம்மாதம் நல்லது. கூட்டு முறை லாபம் தரும்.

ஜுன் 17, 23, 26, 28, ஜுலை 2, 7, 9, 11, 13 தேதிகள் இவர்களுக்கு விசேஷம்.

## தனுர் ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய.)

இந்த ராசிக்காரர்களுக்குச் சென்றதைப்போல வசதிகரமான மாதமில்லை இது 6, 8, இடங்களிலுள்ள கிரகங்கள் காரணமாக குழந்தைகள், ஆபீஸ் கவலைகள் இருந்துவரும் முன்னேற்றத்துக்கும் சில தடைகளிருக்கும். பகிரங்கமாக எதிரிகள் செய்யும் திரிசமன்களால் கோளாறோ, எரிச்சலோ உண்டாகி மன நிம்மதி பங்கமடையும். எது வேண்டுமானாலும் கிடைக்குமென்றாலும் பண விஷயத்தில் இதை அதிருஷ்டகரமான மாதமென்று சொல்வதற்கில்லை. உணர்ச்சி மேலிட்டோடு நடக்கும்படியிருக்கும். 'திடுதிப்' பென்று கோபம்வரும். இது சொல்லிலும் செயலிலும் பிரதிபலிக்கும். தம்பதியிலொருவரது தேகசுகம் திருப்திகரமாயிராது. எதிர்கால சுபிட்சத்தை நாடிச்செய்யும் முக்கிய முயற்சி விஷயில் ஏமாற்றமேற்படும். தூர இடத்து உறவினரிடமிருந்து சந்தோஷ சமாசாரம்வரும். உத்தியோகத்தில் அதிகமாக எதையும் பிரதிட்சிக்கும்படியிராது. எதிர்காலத்தைப் பற்றி ஏதேனும் நம்பிக்கை யிருந்துவந்தால் அதற்குத் திடீரென்று குந்தகமேற்படும். எனவே சீக்கிரம் அவ்வெண்ணம் ஈடேறுது காரியாலயத்தில் பிறருடன் சச்சரவேற்படாமல் கவனித்துக்கொள்ளவும். செலவு முன்னையும்விட அதிகம். பிரயாணம் ஒன்று நேரலாம். வியாபாரிகளுக்கு நல்லது லாபம் அதிகமாகும். இவர்கள் ஊழியர்களிடம் அனுதாபத்துடன் நடக்கமாட்டார்கள்.

ஜுன் 17, 21, 24, 28, ஜுலை 1, 2, 7, 9, 11, 13, 15 தேதிகள் இவர்களுக்கு உதவிகரம்.

## மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய.)

இந்த ராசிக்காரர்களின் 3-வது வீட்டுக்குடைய கிரகம் லக்னத்தில் நீசன். 5-வது இடத்தில் புதனும் செவ்வாயுமிருக்கின்றனர். 5-வது வீட்டுக்குடைய கிரகம் 8-வது வீட்டுக்குடைய கிரகத்தோடு 6-ல் இருக்கிறது இவையெல்லாம் மகர ராசிக்காரர்களுக்கு மன நிம்மதியிராதென்பதைக் குறிப்பிடுவதாகும். ஏதாவது ஒரு காரணத்தால் மனச் சுமைக்கமேற்படும் இவையெல்லாம் அல்ப கவலைகளாகவின்றி உருத்தெரியாமலிருந்துவரும். திட சித்தத்தோடிருந்தால் இத்தகைய நிலைமையெல்லாம் பறந்தோடிவிடும். பாக்கியாக நின்ற அலுவல்கள் முடிவடையும். குடும்பமிலே. உத்தியோக விவகாரம் இரண்டிலும் சந்தோஷமிராது பல முறை இருக்கும். இது இம்மாத இறுதியில் தீரும். குடும்ப வட்டாரத்தில் விசேஷமாக திட்டங்களும், ஏற்பாடுகளும், நிலையில்லாமல் நடந்தவண்ணமிருக்கும். விரும்பிய ஒரு இடத்துக்கோ அல்லது சொந்த ஊருக்கோ போகும்படி ஒரு பிரயாணம் சித்திக்கலாம் நிகழ்ச்சிகளை அதனதன் போக்கிலேயே விட்டுவைப்பது நலம் அப்போதுதான் சௌகர்யமாயிருக்கும். ஊழியம் புரியும் இலாகாவில் சிலர் சில விஷமம்செய்யலாம். இதை எதிர்க்கவேண்டியதில்லை. இல்லையானால் மோசமான தொல்லைகள் ஏற்படும். சகோதரன் அல்லது சகோதரிக்கு உதவநேரும். பக்கத்திலேயேயிருந்துவரும் நண்பருடன் தகராறு வைத்துக்கொள்ளாமல் பாதுகாத்துவரவேண்டும். வியாபாரிகளுக்குக் கஷ்டமான மாதமிது. ஷேர்ஷ்யங்கள் ஏமாற்றமாக முடியும். வியாபார நிலவரம் ஸ்தம்பித்து நிற்கும்.

ஜுன் 17, 24, 28, ஜுலை 3, 9, 13, 15 தேதிகள் இவர்களுக்குப் பயன்தரும்.

## கும்ப ராசி

(அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

கும்பராசிக்காரர்களுடைய கிரகங்கள் சாதகமான வீட்சண்யத்தோடு இம்மாதம் அமைந்துள்ளன. சென்ற மாதத்தைவிட இம்மாதம் அதிர்ஷ்டகரமாயிருக்கும். குடும்ப வட்டாரமும் சற்று அபிவிருத்திகரமாயிருக்கும். இரண்டாவது வீட்டுக்குடைய கிரகம் 12-லும், இரண்டாவது இடத்தில் ராகுவும் இருந்தபோதிலும் பண விஷயத்தில் கஷ்டமிராது சமயத்துக்கு உதவி கிட்டும். சில இனங்களில் இம்மாதம் விவாகம்கூட நடக்கும். வேலை தேடுபவர்களுக்கு ஏதாவது ஒரு உத்தியோகம் கிடைக்கும். 12-ல் குரு இருப்பது அபார செலவையும் வயோதிகரின் அதிருப்தியையும் குறிப்பதாகும். குடும்பத்துறையில் முக்கிய மாறுதல்களேற்படக்கூடும். நிலம், வீடு இவற்றிலொன்றின் மீது பணம் போடும்படி நேரும். குமாரர்களில் ஒருவர் ஆச்சர்யகரமாக முன்னுக்கு வரலாம் சிலருக்கு மத பூர்வமான சடங்குகளைச் செய்யும்படியிருக்கும். உத்தியோகத்தில் அனுகூலம் உண்டு. சில நாட்கள் வரை இவர்களுக்கு எதிராக போட்டியிடும் ஒரு நபரால் விசேஷக் கவலைகள் ஏற்படும். எதிரிகள் மறைமுகமாக தங்கள் கைவரிசையை (எதிர்ப்பை)க் காட்டுவர். ஆனால் இவற்றால் எவ்வித பாதகமும் நேரிடாது நிச்சயம். வியாபாரம் இரண்டிலும் வியாபாரிகளுக்குச் சாதக நிலைமையே சொந்தமாக நடத்தும் வியாபார ஸ்தாபனம் செழிப்புறும்.

ஜுன் 17, 23, 27, 28, ஜுலை 2, 3, 7, 9 11, 15 தேதிகள் இவர்களுக்கு அனுகூலமான தினங்கள்.

## மீன ராசி

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

இதுவரையில் இந்த ராசிக்காரர்களின், பொதுவான முன்னேற்றத்துக்கு இடையூறாக நின்றிருந்த தடைகளெல்லாம் இம்மாதம் விலகுவதை நன்கு உணருவார்கள். பண விஷயத்திலும் சுலபமான நிலைமை உண்டு. ஆனால் ஜனன காலத்தில் சந்திரனிலிருந்து சனியின் பார்வை கெடுதலாயிருப்பின் மேற்சொன்னபலன் விசேஷ உதவியைத் தருவதாயிராது இதற்குமாறாக அதிகமாகப் பணக் கவலைகளும், வேலைக்காரர்கள், விரோதிகள் இவர்களுடைய உபத்திரவங்களுமிருந்துவரும். அதாவது மீனத்திலிருந்து 2, 12, 8 இடங்களில் சனி இருப்பவர்களுக்கு உபத்திரவம்தான் ஜாஸ்தி. முதுகுவலிபோன்ற தொல்லைகள் இருக்கும். நண்பர்கள் விரோதியாவர். இவர்களை நம்பிறல் மன்குதிரையைநம்பி ஆற்றில் இறங்கியகதைதான்! மேல்ஜாதி நண்பர்களின் உதவி கிட்டலாம். குடும்ப வாழ்க்கையில் கடினமான. சுடுசொல்களால் ஏதாவது தொல்லைகள் முளைக்கும். லக்னத்தில் ராகு: 8, 12-வது இடங்களைச் சனி பார்ப்பது இவை காரணமாக இதுவரை உள்ளடங்கியிருந்து நோயை வெளியே தெரியும்படி செய்யும் எனவே ஒன்றுமே சிகிச்சை செய்யமுடியாது என்ற நிலைமை ஏற்படுமுன் பரிகாரம் தேடிக்கொள்வது நலம். உத்தியோகத்துக்கு ஏற்ற மாதம் ஊதியத்திற்கும் அப்படித்தான். மாறுதல்களுக்கும் விசேஷமே. வியாபாரிகளுக்கு இக்கட்டம் தரும்.

ஜுன் 17, 27, ஜுலை 2, 3, 7, 9, 11, 13 15 தேதிகள் இவர்களுக்கு மகிழ்ச்சிகரம்.

★

ஸ்ரீ பி. வி. ராவ்.
5, வாசுதேவபுரம், ஐஸ் ஹவுஸ் ரோடு,
திருவல்லிக்கேணி.



# வண்டிச்சக்கரம்

திருமுருகன்

1 உருண்டோடும் சக்கரமே உன்னைக் கேட்பேன்
உண்மைதனை ஒளிக்காமல் உரைத்தல் வேண்டும்
உருண்டோடும் தன்மையதே உலகம் என்ற
உண்மையினை உணர்த்திடவே உருள்கின்றயா?
மருண்டவிந்த வாழ்க்கையிலே இன்ப துன்பம்
மாறி மாறி வருமென்றே உருள்கின்றயா?
திரண்டபெருஞ் செல்வமெலாம் என்றும் நில்லா
திரும்பிவிடும் என்றுணர்த்த உருள்கின்றயா?

2 மன்னுத உலதயிர்கள் பிறக்கும் சாகும்
மறுபடியும் தோன்றுமென உருள்கின் றயா?
என்னைப்போற் சுழலுவதே காலம் என்ற
இயல்பதனைக் காட்டிடவே உருள்கின்றயா?
என்னாலே எந்திரங்கள் இயங்கும் என்றும்
என்னினத்தார் எங்கெங்கும் உள்ளார் என்றும்
மின்குலைத் தோற்றங்கள் எம்மால் என்றும்
மெய்மறந்து தலைகீழாய் உருள்கின் றயா?

3 எப்போதும் சக்கரமே உலகை ஆண்ட
தென்றபெரும் எக்களிப்பால் உருள்கின் றயா?
எனையெதிர்த்து நின்றவர்கள் எவருந்தப்பார்
இறந்திடுவர் என்றுசொல்லி உருள்கின்றயா?
எனைப்போலும் உருவமுடைக் கவிகள் உண்டே
என்றதனிப் பெருமையினைத் துருள்கின் றயா?
மனுச்சோழன் தனிமகனை, ஆவின் கன்றை
மடித்தபெருங் கொடுமை நினைந் துருள்கின்றயா?

4 ஐம்படையில் ஒன்றென்றே உருள்கின் றயா?
ஆழிப்பேர் உடையேன் என்றுருள்கின்றயா
நின்றநிலை நிற்பேனென் றுருள்கின் றயா?
நிகரிலையே எற்கென்றே உருள்கின்றயா?
சென்றெருபாற் கோடாத சான்றோர்க்குள்ள
செம்மைநிலை உடையேனென் றுருள்கின்றயா?
இந்தியரின் கொடிநடுவில் இருப்பேன் என்ற
இறுமாப்பாற் சுழன்றுசுழன் றுருள்கின்றயா?

5 மண்ணோக்கி வந்தக்கால் கற்கள் உன்றன்
மனநோகத் தாக்குவதால் மருள்கின்றயா?
விண்ணோக்கின் உறுகின்ற இன்பம் உன்னி
விண்ணுலகைப் பார்த்துப் பார்த் துருள்கின்றயா?
என்னுங்கால் எப்புறமும் சமமே என்றும்
ஈறுமுதல் இல்லாத இறைவன் தன்மை
உண்மையினால் ஓசையுடன் உருள்கின்றயா?
உரைத்திடுவாய் மற்றெதற்கு உருள்கின்றயோ?

அட்டைப்படம்

# ☆ மங்கையின் மனத்துயர் ☆

"தூய காதல் மிகுதியினால் ஏற்படுவது ஒருகால் துயரமே தானே! ஏன் நாம் இத்தகைய மனக் குழப்பத்தை விலைக்கு வாங்கிக் கொண்டோம். ஏதோ சிறிது காலத்துக்குள் அலுவல்களை முடித்துவிட்டு சடுதியில் வந்து விடுவதாகவல்லவா சொல்லிப்போனார்! ஆனால் அவர் வர வேண்டிய கெடு தாண்டி நாட்களும், மாதங்களும் நகர்ந்தோடி வருகின்றனவே! இந்த வேதனைக்கு என்ன செய்வது?" என்று நேர்மையான இல்லற வாழ்வை மேற்கொள்ள விரும்பித் துடி துடிக்கிறாள் ஒரு சிறந்த மடந்தை. இவளுக்கு ஒரு அத்யந்த தோழி உண்டு அவள் பெரிய கிண்டல்காரி. தன் தலைவியை ஓட ஓடவிட்டு உண்மையைப் பிடுங்குவதற்காக சோதனைகள் செய்ய முற்படுகிறாள். "ஆமாம். நீ இந்த மாதிரி உன் காதலனுடன் மறைவில் களவு ஒழுக்கத்தில் ஈடுபட்டு வந்திருக்கிறாயே, இதை எப்படி நம்புவது நானெக்கு இது உண்மையில்லையென்று ஏற்படுவதாக வைத்துக் கொள்வோம். நிரூபிப்பதற்கு என்ன ருசு இருக்கிறது? உன் காதலனே உன்னைப் பார்த்ததில்லை என்றும், நீ சொல்வது வெறும் பித்தலாட்டம் என்று விட்டால் என்ன செய்வாய்?" எனவும் தலைவிக்கு மனம் மிக்க உளைந்துவிடுகிறது அவள் தன் தோழியிடம் உண்மையை வெளியிட்டு தன்னுடைய நிக்கற்ற நிலைமையை எடுத்துரைக்கிறாள்.

"நாங்கள் இருவரும் தனித்ததொரு இடத்தில் கூடிக் குலாவினோம். இது எனக்குத் தெரியும்; தலைவருக்கும் தெரியும். அங்கு வேறு யாரும் இல்லை இதைப் பார்த்ததாக சாட்சியம் சொல்ல. ஆனால் அங்கு இதற்கு ஒரு சாட்சி உண்டு ஆனால் வாய் திறந்து பேசவல்லதன்று. அதாவது எங்களிருவருடைய களவொழுக்கமும் யாருக்குமே தெரியாது. நாங்கள் மனம் கலந்தபோது ஒரு கொக்கு அவ்விடத்தில் தெளிந்தோடிய ஓடையில் ஆரல் மீன்களைக் குறி பார்த்துக் கொத்தியுண்பதற்காக தவசியைப் போல தண்ணீர் மட்டத்திலேயே கண்ணை ஓட்டிக்கொண்டிருந்ததே. கொக்கை நான் பார்த்தேன். அது எங்களைப் பார்க்கவில்லை" என்று இயற்கை அழகையும் குழைத்துத் தீட்டி தன் நிலையை உணர்த்துகிறாள் தலைவி. இக்கருத்துக்கொண்ட குறுந்தொகை பாட்டு வருமாறு:—

"யாருமில்லைதானே கள்வன்
தானது பொய்ப்பின்
யானெவன் செய்கோ
தினைத்தாளன்ன சிறுபசுங்கால
ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகு முண்டுதான்
மணந்த ஞான்றே"

—கபிலர்






கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் ஜயந்தி விழா மே 12-ந் தேதி பாரிஸில் உள்ள நவீன, ப்ராசீன பாஷைப் பள்ளிக்கூடத்தில் கொண்டாடப்பட்டது. இவ்வைபவத்தில் தலைமை வகித்த இந்திய ஸ்தானிகர் டாக்டர் பி. பி. பிள்ளை பேசிக்கொண்டிருக்கிறார். தாகூர் படத்துக்குப் பின்புறத்தில் வீற்றிருப்பவர் இந்திய ஸ்தானிகராலய விளம்பர அதிகாரி டாக்டர் சந்திரா.



# கலாமண்டபம்

## சித்திரம் செய்யும் தொண்டு

☆

([illegible])

சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை யாவரும் சித்திரங்களை ரசிக்கிறோம். படங்கள் என்றால் பத்திரப்படுத்துகின்றோம். ஏதாவதொரு புத்தகத்தைத் திறந்தபோதிலும், முதலாவது என்னென்ன சித்திரங்கள் அங்குள்ளன என்பதைதான் ஆவலோடு பார்க்கிறோம். சித்திரங்கள் இயற்கையின் சிருஷ்டிகளை சித்தரித்துக் காட்டுகின்றன. வீடுகளிலோ, கோயில்களிலோ, மடங்களிலோ, பொது ஸ்தலங்களிலோ, பற்பலவிதமான வர்ணமிட்ட படங்களைப் பார்க்கிறோம். அவை சிறிய கருத்துகளையும் சரித்திர வரலாறுகளையும் குறிப்பதாகவும் இருக்கின்றன; அழகுக்காக இருப்பவைகளாகவும் தோன்றுகின்றன. கடவுளர்களின் சரித்திரத்தை விளக்கும் வகையில் சித்திரங்கள் தீட்டப்பட்டிருப்பதைக் கோவில்களில் காண்கின்றோம். நாம் அறிந்திராத நம் அறிவுக்கு எட்டாத பல விஷயங்களை புரியவைக்கும் வகையில் உள்ள சித்திரங்களை, பொது ஸ்தாபன ஸ்தலங்களில் பார்வையிடுகிறோம். நாடகங்கள், சினிமா, நாட்டியம் இவைகளின் மூலம், நிகழ்ச்சிகளை எப்படி உணர்த்தலாமோ, அம்மாதிரி சித்திரங்கள் மூலமாகவும் பலநிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டுவரலாம். அம்முறையையே இக்கால பத்திரிகைகள் பின்பற்றுகின்றன. பழங்காலத்தில் "பாவைக் கூத்து" எனும் ஓர் பொழுதுபோக்கு நிகழ்ச்சி இருந்துளது. இக்காலத்தில்கூட அவை, ஆங்காங்கே சில கிராமப் பகுதிகளில் கம்பளத்தார் எனும் மரபினரால் நடத்தப்பட்டு வருகின்றன. இராமாயண பகுதிகளே பெரும்பாலும் "பாவை கூத்துகள்" மூலம் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. அதாவது,

[ தொடர்ச்சி அடுத்த பக்கம் ]



இரண்டு கலைகள் பிரகாசிக்கும் ஒரு படம் இது. யேஹுடி மெனுஹின் உலகத்திலேயே பிடில் வாசிப்பதில் பிரசித்தி பெற்றவர். அவர் வில்லை இப்படிப் போட்டு இழுப்பதால்தான் சப்தத்தை மிகப் பெரிதாகப் பிடிலில் கிளப்ப முடிகிறதாம். இப்படத்தில் அவர் வில் பிடிக்கும் திறமையை நீங்கள் பார்ப்பதோடு இதை போட்டோ பிடித்தவரின் திறமையையும் பார்க்கிறீர்கள். போட்டோ கலை நிபுணர் வெளிச்சத்தை எப்படிப் படும்படி செய்தால் ஒரு போட்டோவின் முழு உட்கருத்துக்களை வெளியிட முடியும் என்பதற்கும் இப்படம் அத்தாட்சி. பிடில்காரரின் முகத்திலும் பிடில் வில்லின் மேலும் மட்டும் போட்டோக்காரர் வெளிச்சத்தைக் காட்டியிருப்பதைப் பாருங்கள்.

## சித்திரம் செய்யும் தொண்டு

[முன் பக்கத் தொடர்ச்சி]

பாத்திரங்களுக்குத் தகுந்த சித்திரங்களை எழுதி, வர்ணமிட்டு, திரை ஒன்று கூட்டி, உள் பக்கம் விளக்கு ஏற்படுத்தி, சித்திரங்களின் நிழலை வெளியிலுள்ளோருக்கு தோற்றுவித்து, பாத்திரங்களின் பாட்டு வசனங்களை சித்திரங்களுக்காக "பாவை அசைப்போர்" பேசிக்கொள்வது.

வியாபாரிகள் தங்கள் பொருட்களை விளம்பரப்படுத்த அதி அற்புதமான சித்திர விசித்திரங்களைக் கையாள்வதை யாவரும் அறிவோம். சிங்கத்தை நேரில் காணாவிட்டாலும், அதன் பயங்கர உருவத்தை சித்திரங்கள் மூலம் அறிந்துகொள்கிறோம். கடவுளைக் காணாவிட்டாலும், அவரின் சித்திர உருவத்தைப்பார்த்து பக்திகொண்டு விடுகிறோம். சித்திரம், கேலிச்சித்திரம், உயிர்சித்திரம் எனப்படும். உயிர் ஓவியம் வரைவதில்தான் ஓவியர்களின் உன்னத பெருமை உச்சநிலையடைகின்றது. அக்காலங்களில் ராஜகுமாரர்கள் பலரைப் படாத பாடு படுத்தி, பகுத்தறிவை இழக்கச்செய்து, மாறனின் கைம்பொம்மையாக்கிய பெருமை ஓவியர்களின் உயிர் ஓவியத்தையே சாரும். ஒரு பெண்ணின் நகத்தையோ, மயிரையோ வைத்துக்கொண்டு, அவைகளுக்குடைய பெண்ணின் ரூபம் இன்னவிதமாகத்தான் இருக்க வேண்டுமென யூகித்து வரையும் வல்லமைபெற்று விளங்கியிருந்திருக்கிறார்கள் அக்கால சைத்ரீகர்கள். அப்படி வரையப்பட்ட படங்களைப் பார்த்துதான் அக்கால அரசிளங்காளையங்கள் மூளை கெட்டு அலைந்துள்ளதாகக் கதைகள் கூறுகின்றன. பாருங்கள் இன்னும் ஓர் ராஜ ஓவியனின் கைத்திறனை. உதயண மகாராஜாவின் புத்திரன் நகர வீதி வழியாக குதிரையில் சென்றுகொண்டிருந்தபோது, அவன் மீது ஓர் பந்து விழுந்தது. பந்தின் மீது சந்தனம் பட்டிருந்தது. அதில் ரேகை பதிந்திருப்பதைக் கண்ணுற்ற அரசகுமாரன், அது ஓர் பெண்ணினது கை ரேகையே என அறிந்து, ரேகைக்குரிய விரல்கள், விரல்களுக்கேற்ற கைகள், கைகளுக்கேற்ற புஜங்கள், அதற்கேற்ற தோள் என்றவாறு யூகித்து ஓர் உருவமும் வரைய, ஓர் அழகிய அணங்கின் உருவம் அமைந்துவிட்டது. அதை நிகர்க்கும் பெண், அவ்வூரில் ஓர் செட்டியாரின் மகளே என விசாரித்தறிந்த ராஜகுமாரன் அவளை மணந்துகொண்டதாக கதை சொல்லிப்போகிறது. காத்தவராயன், தானும் ஆரிய மாலாவும் காட்டில் சந்தித்ததை சித்திரம் மூலம் அவளுக்கு அறிவித்து தான் அந்நகருக்கு வந்துவிட்டதாகத் தெரிவித்துக்கொண்டான் என்பதை சினிமாவில் பார்த்துள்ளோம்.

பொய்யோ, மெய்யோ, மனிதர் செய்யும் பாவ, புண்யங்களை பகுத்தெழுதிவைக்க, கூற்றுவனுக்கு ஒரு கணக்குப் பிள்ளை இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. அவர் பெயர் சித்ரபுத்ரன் எனக் கேள்வி. கணக்கெழுதி கைவலி யெடுத்துப்போன யமனுக்கு உதவியாக யாரும் இல்லை எனக்கண்ட சிவனார் சித்ரம் ஒன்று வரைந்து அதற்கு சீவன் தந்து கால தேவனிடம் அனுப்பியதாக அறியக்கிடக்கின்றது. பாருங்கள் சித்திரத்தின் மகிமையை. இம்மாதிரியாக சித்திரக்கலை செய்துவந்த தொண்டுகள் எண்ணிலடங்கா. இக்காலத்திலும் சித்திரக்கலையின் பேருபகாரத்தை மறந்துவிட முடியாத வகையில், அது தொண்டாற்றியே வருகின்றது. எளிதில் புரிந்துகொள்ள முடியாத விஷயத்தை சித்திரம் புலனுக்குகின்றது.

நம் தேசப்பிரமுகர்கள்பலரை பார்க்கும் பாக்கியம் நம்மில் பலருக்கு கிட்டாதிருக்கலாம். அவர்களும் அப்பிரமுகர்களைப் பார்த்துக்கொள்ளும்வகையில், நம் சைத்ரீகர்கள் தங்களின் கைத்திறல்களுக்குள் பிரமுகர்களைக் காட்சியளிக்க செய்துவிடுகிறார்கள். தேசத்தில் நிகழும் சம்பவங்களை, பத்திரிகைகள் அவ்வப்போது. அரசியல் கேலிச் சித்திரங்கள் மூலமாகவும், உலகியல் கேலிச்சித்திரங்கள் மூலமாகவும் மக்கள் மனதில் பதியவைக்கின்றன. பெரிய நதிகள், ஊர்கள், நந்தவனங்கள் ஆகியவற்றை நாடக சீன்களில் தோற்றுவித்து நம்மைப் பரவசப்படுத்தி விடுகின்றனர் சைத்ரீகர்கள்—நாம் சித்திரம் செய்த தொண்டுகளைப்பற்றி புகழ்வதெல்லாம் உண்மையில், அச்சித்திரங்களை வரைந்த ஓவியர்களையே அடிபணியும். ஆனால் அத்தகைய சைத்ரீகர்களின் நிலைமை பெரும்பாலும் பரிதாபகரமாகவே இருக்கின்றதை கவனிக்கிறோம். அவர்கள் பெறும் ஊதியம் அவர்களின் வாழ்க்கைதரத்துக்கு போதாததாக இருக்கின்றது. அவர்களில் பலர் அலைந்து திரிவதைப் பார்த்தால் தரித்திரத்தின் சின்னமாகவே தோன்றுகின்றது. சித்திரக்கலை பயின்ற அவர்களை செல்வநிலை அண்டாதது அவர்களின் துரதிர்ஷ்டமேயாகும். அதற்குக் காரணம், பொதுமக்கள் அவர்களின் திறமையை உணர்ந்து, சித்திரக்கலையின் உயர்வை அறிந்துகொள்ளாததேயாகும். "சித்திரத்தைப் பார்த்தோம், அழகாக இருக்கிறது. நம் பொழுதும் போய்விட்டது" என்பதோடு பொதுமக்களின் உணர்வு நின்றுவிடுகின்றது. அதை வரைய ஓவியர்கள் படும்பாட்டை உணர்கின்றாரில்லை.

இக்கலையைப் பயில்வதற்கு மனவூக்கமும், விடாமுயற்சியும், கலை ஆர்வமும் அவசியம் வேண்டும். வரைய வரையத்தான் சித்திரம் வாய்க்கும், "சித்திரமும் கைப்பழக்கம்" எனும் ஔவையாரின் கூற்று இதற்குச் சான்றாகும். எந்தகலையையும், கலை ஆர்வத்தோடு, அறிவு வளர்ச்சிக்காக என்று பயின்றால்தான் பயன் எய்தலாம். பிழைக்கும் வழிக்கென்று நினைத்து பயில்வது முறையாகாது. சித்திரக்கலையை அபிவிருத்திக்குக் கொண்டுவர, சித்ரக்கலாசாலைகள் ஏற்பட்டு, பரிசுமுறைகள் ஏற்பட்டுள்ளது நம் பாக்யமேயாகும். இத்தகைய மேம்பாடான கலையை ஆதரிப்பது நமது அரிய கடனாகும்.

---

# இந்தியப்படங்களில் 'ஸ்டன்ட்'

[கே. ச. நம்பி]

'பப்ளிக் ஸீரியல்' என்றழைக்கப்படும் சண்டைப்படங்களை அநேகமாக எல்லா சினிமா பிரியர்களுமே ரசிக்கிறார்கள். சண்டைப்படங்கள் ஆங்கிலத்தில் ஏராளமாக தயாரிக்கப்படுகின்றன. இந்தப்படங்கள் பெரும்பாலும் வெற்றியும் பெற்றுவிடுகின்றன. அமெரிக்காவில் தயாரிக்கப்படும் சண்டைப் படங்களே நல்ல வருவாயைப் பெறுகின்றது. இவர்கள், வருவாயைப்பற்றிக்கவலைப்படாமல் ஏராளம் பணங்களை வாரியிறைத்து படம் பிடிக்கிறார்கள். அது வீண்போகாமல் ஒன்றுக்குப் பத்தாக லாபத்தைக் கொடுக்கிறது.

மேற்கண்டவிதம் தயாரிக்கப்படும் படங்கள் அநேகமாய் உலகத்தின் எல்லா பாகங்களிலும் காட்டப்படுகிறது. ஒவ்வொரு தியேட்டர்களிலும் சில காட்சிகள் இப்படங்கள் நடைபெற்றாலும் வருமானத்தில் குறைவொன்றும் ஏற்படுவதில்லை.

சண்டைப்படங்கள் படிப்பறிவில்லாத கிராம மக்களும் ரசிக்கிறார்கள். சிறுவர்கள் மிகவும் விரும்பிப்பார்ப்பதும் சண்டைப் படங்களே. இதை அறிந்துதானோ என்னவோ நமது இந்தியப் படமுதலாளிகளும் சண்

[தொடர்ச்சி 26-ம் பக்கம்]





'நவஜீவன'த்தில் நாடகம் எழுதிப் பிழைக்கும் காந்தி பக்தர் நாகையா. இப்படத்தில் இவருடைய நடிப்பு அடக்கமாகவும் ஆனால் பிரமாதமாகவும் இருக்கிறது.

## இந்தியப் படங்களில் 'ஸ்டன்ட்'

[ 24-ம் பக்கத் தொடர்ச்சி ]

டைப் படங்கள் தயாரித்து வருகிறார்கள். இவர்கள் தயாரிக்கும் படங்களில் 100-க்கு 98-ம் பார்க்க சகிக்காத விதத்தில் இருக்கின்றன. சினிமா என்றால் என்னவென்றறியாத ஒரு தடியனையோ தடிச்சியையோ பிரதம நடி (நடிப்பென்பதை அறியாதவர்கள்!) யாக்கி, ஐந்தாறு முரடர்களையும் இரண்டு யானைகளையும் (ஒன்று நிஜயானை இன்னொன்று யானைபோன்ற ஹாஸ்ய நடிகர்!') பிடித்துப்போட்டு படம் தயாரித்து விடுகிறார்கள். இந்தப் படங்களில் தோன்றும் 'நடிகை'கள் 'முக்காலும் துறந்த மாதரசிகள்' ஆகத்தான் காட்சி அளிப்பார்கள். இது பாதி வருமானத்தை கொடுக்கும் என்பது அந்த படமுதலாளிகளின் எண்ணம். இந்தப்படங்களுக்கு பட்டினங்களிலுள்ள தியேட்டர்களில் இடம் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் முதல் நாளும் கடைசி நாளும் ஒரே தேதியில் அடங்கிவிடும்!

கிராமங்களிலுள்ள ஓலை (ஓட்டை)த் தியேட்டர்களை இந்தப் படங்கள் முற்றுகை இட்டுக்கொள்கின்றன. அதை கல்வியறிவில்லாத கிராம மக்கள் பார்த்து, காசை கரியாக்குவதோடு தங்கள் உடல் நலத்தையும் கெடுத்துக்கொள்கிறார்கள்.

இந்தப் படங்களில் தோன்றும் ஆபாசக் காட்சிகள், சண்டைப் படங்களை விரும்பிப்பார்க்கும், சிறுவர்களையும் பாதிக்கிறது. இப்படங்களிலுள்ள சண்டைக் காட்சிகள் சிறந்த முறையில் அமைவதில்லை. குத்து விழும் சப்தத்தை வெண்கலப்பானை வெளிப்படுத்தும்! படத்திற்கென்றே பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட 'கார்' (கார்மாதிரி) அடிக்கடி தோன்றி கண்ணோடு காது வலியையும் கொடுக்கும். படத்தில் வரும் நடிகர்களின், அசடு வழியும் வதனங்களைப் பார்ப்பதற்கு பரிதாபமாகத்தான் இருக்கிறது. இந்த மாதிரி சினிமா உலகத்தை மானங் கெடுக்கச் செய்யும் படங்களை தயாரித்து வெளியிட்டு விடுகிறார்கள்.

எனவே இந்திய 'ஸ்டன்ட்' பட முதலாளிகள் (தமிழ் பட முதலாளிகள் காரியம் வேறு!) கேவலமான சண்டைப் படங்களைத் தயாரிக்காமல் ஆங்கிலப் படங்களைபோல் சிறந்த முறையில் படம் எடுங்கள். இல்லாவிட்டால் தயவு செய்து பேசாமல் வீட்டில் உட்கார்ந்து வேறு விஷயத்தில் மூளையை (இருந்தால்) திருப்புங்கள்.

---

## தெய்வமும் சினிமாக்கலையும்

[கே. எஸ். ரங்காச்சாரி]

சினிமா உலகத்திற்கு சென்னை சர்க்கார் பல நூதன சட்டங்களை சிருஷ்டித்து கொடுத்திருக்கின்றனர். அவைகளுள் தெய்வங்களை திரையில் சித்தரிக்கக்கூடாது என்பதும் ஒன்று. இது 'ஒருக்கால் வதந்தியாக இருக்குமோ என்று எண்ணுகின்றேன். வதந்தியாகவே போய்விட வேண்டும் என்றுகூட ஆசைப்படுகிறேன்.

படங்களின் ஆபாஸ பாகங்களுக்குத் தடைசெய்ய தணிக்கை போர்டார் இருக்க சர்க்கார் இதில் தலையிட வேண்டிய காரணம் என்ன? அப்படி ஆபாஸ பாகங்களை வெளியிடும்படி அவ்வளவு மோசமானவர்களா தணிக்கை போர்டில் இருக்கிறார்கள். ஏன் அவர்கள் முழுப்படத்திற்கும் தடை உத்தரவு பிறப்பிக்கக்கூடாது? அவர்களிடம் அதிகாரம் இல்லையா: ஒருக்கால் தணிக்கைக்கு வரும்போது அவர்கள் முதல்நாள் இரவு சினிமா பார்த்த சிரமத்திற்காக தூங்குகின்றார்களா? படங்களில் தெய்வங்களை அறவே காட்டக்கூடாது என்றால் இம்மாதிரி ஆபாஸங்கள் நடக்காது என்ற எண்ணமா? தெய்வத்தைப் போல் மனிதர்களுக்கு வேஷம் போட்டு மேற்படி காரியங்களை நடத்த மாட்டார்களா? மேலும் "பக்தியால் பக்தர்கள் முக்தி பெறுவது" முதலிய புராணக் கதைகளை படம் எடுக்கும்போதே நாஸ்திகம் தலை எடுக்க ஆரம்பிக்கிறது. அப்படி அதுவும் திரையில் காட்டக்கூடாதென்றால், ஆஸ்திகத்தின் நாக்கில் தேளைத் தடவினதுபோலாகும். ஆஸ்திகத்தை அகற்ற முயலும் நாஸ்திக அறிஞர்களும் வெளியிலே நாஸ்திகமும் வீட்டினுள்ளே ஆஸ்திகமும் பேசும் பேச்சாளர்களும் இந்நாளில் நாஸ்திகத்தைப் பரப்ப சினிமாவை ஒரு சாதனமாகக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதைக்கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணம் கொண்டுள்ளனர் ஆகையால் தெய்வங்களை திரையில் சித்தரிக்கக்கூடாது என்பது நன்மையைத் தரத்தக்க சட்டம் அன்று.

பத்திரிகைகள் சவால்விடும் படங்களை படஉலகிற்கு அனுப்புகிறது தணிக்கைபோர்டு. தணிக்கை போர்டாரால் தடை செய்யப்படாமல் அரை நிர்வாண உடை உடுத்தி நடிகைகள் நடிக்கும் படங்களும் வெளிவந்துகொண்டுதான் இருக்கின்றன இந்த வெட்கங்கெட்ட விவகாரங்களை அகற்ற சர்க்காரும் தணிக்கை போர்டும் முயலவேண்டுமே யொழிய தெய்வங்களை அகற்ற முயலுவதில் அர்த்தமில்லை.

# சென்னையில் இந்திய சர்க்கார் உணவு மந்திரி

செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள பல ஏரிப்பாசன வசதிகளை இந்திய சர்க்கார் உணவு மந்திரி ஸ்ரீ ஜயராம்தாஸ் தௌலத்ராம் சென்ற வாரம் சென்னை வந்திருந்தபோது பார்வையிட்டார்.



செம்பரம் பாக்கம் ஏரியைப் பார்க்கிறார்.



செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள போரூர் ஏரியைப் பார்வையிடுகிறார்.



கோரட்டூர் அணைக்கட்டு: சென்னை சர்க்கார் நீர்ப்பாசன இலாகா எஞ்ஜினியர், அணைக்கட்டு சம்பந்தமான விவரங்களை இந்திய சர்க்கார் உணவு மந்திரிக்கு விவரித்துக் கூறுகிறார்.



அணைக்கட்டின் தோற்றம்.





# எழுதுவது எப்படி?

'தயவு செய்து கிருபை கூர்ந்து தங்கள் சிரமத்தைப் பாராட்டாது, எனக்கு இலக்கியம் எழுதும் வகையை மறு தபாலில் எழுதி அனுப்புங்கள். எனக்கு எழுத்துலகில் பிரவேசிக்க மிக மிக ஆசையாய் இருக்கிறது. என்னுடன் படித்த இரண்டொருவர் தற்சமயம் எழுதுகிறார்கள். என்னை விட பரீட்சையில் குறைந்த மார்க்கு வாங்கிய அவர்கள் எப்படி எழுதினார்கள்? நான்தான் வகுப்பிலே முதல் மார்க்கு வாங்குவது வழக்கம். மேலும்...............

எப்படி எப்படி எழுதி, பேரெடுக்கவும் புகழ் சம்பாதிக்கவும் முடியுமென்று எழுதினால், தங்கள் முன் யோசனையின் மூலம் என் பெயர் தமிழ் குடியேறியுள்ள நாடெங்கும் பரவும். உதவி புரியுங்கள்...............

இந்த ரீதியில் எனக்கு அறிமுகமில்லாத நண்பர் கடிதம் எழுதியிருந்தார். சயிலேறி தஞ்சாவூர் கோபுரம், திருவாரூர்த் தேர் பார்த்துவிட்டுத் திரும்புவதைப்போல மறு தபாலைக் கண்ட மாத்திரத்தில் இலக்கியப் பூங்காவிற்குள் சிறகடித்துப் பறக்கத் துடிதுடிக்கிறார் இச் சிட்டுக்குருவி. தேரையும், கோபுரத்தையும் எத்தனை ஆண்டுகளாக கட்டி முடித்திருப்பார்கள்? எவ்வளவு நபர்களுடைய மூளையின் வேலைப்பாடுகள் கலைத் திறமைகள் அதிலே ஒளிர்ந்திருக்கின்றன என்பனவற்றை ஊன்றி உணரமாட்டோம். கட்டிய கோபுரமும், ஜோடனை செய்த தேரும் பார்க்கும்போது வெகு எளிதாகத் தெரிகிறது. நாமும் இப்படி ஒரு கோபுரமும், ஒரு தேரும் செய்ய முடியாதா என்று திமிராக எண்ணுகிறோம்.

தஞ்சைக் கோபுரம் போலும், திருவாரூர்த் தேர் போலும் எத்தனை கலைப் பொக்கிஷங்கள் நம்மிடையே இருக்கின்றன. போட்டோ எடுத்துக் கொண்டுவந்து விடலாமே தவிர, அது போல சிருஷ்டி செய்ய முடியுமா? சிருஷ்டி வேறு; காப்பி எடுத்தல் வேறு.............

சுயமாகச் சிந்தனை செய்து எழுதுகிறவர்கள் ஒரு சாரார். பழக்கம் காரணமாக, போட்டோ எடுப்பது போல முன்னுள்ள நூல்களை, விஷயங்களையொட்டி வழி நூல் செய்பவர்கள் ஒரு கோஷ்டியார். வழி நூல் கோஷ்டியாராக மாறவேண்டுமானால் கூட, போட்டோத் தொழிலுக்கும் ஒரு சில நுணுக்கங்கள் இருப்பது போல அந்த நுணுக்கங்களைத் தானுகத் தெரிந்துகொள்ளவேண்டும். நிற்க.

எனக்கு ஒரு விஷயம் புலனாகிறது. பிறருக்குப் புரியும்படியாக எப்படி எழுத்தாளன் ஆவது என்ற ரகசியத்தை என்னுல் சொல்ல முடியாது. சொல்லும் திறமை எனக்கு இல்லை. கவிமணி அவர்களுக்கு "எப்படி ஐயா உயர்வான கவிதைகள் எழுதுவது? இந்த ரகசியத்தைத் தாங்கள் சொல்லிவைத்தால் பெரிதும் தமிழ்த்தொண்டு புரிந்தவர்கள் ஆவீர்கள். அடுத்த முறை ஆஸ்தான கவிஞரைத் தேர்ந்தெடுக்கும்போது, அடியேன் பெயரை சிபார்சு செய்யும்படி நான் எழுதும் கவிதைகள் இருக்கவேண்டும்! தயவு செய்து அடுத்த தபாலில் இந்தச் சூட்சமத்தை விளக்கிவிடுங்கள்" என்பதாக ஒரு கடிதம் எழுதுகிறேன் என வைத்துக்கொள்ளுங்கள். கவிமணி அவர்களும் கவிதை எழுதும் ரகசியத்தை விளக்கிவிடுவார்கள். நான் கவிதை எழுதிவிட முடியுமா?

முடியாது, முடியவே முடியாது. கவிதை எழுதுவதை இப்படி இப்படியாகிறது என்று சொல்லி வைத்துவிட்டால் போதுமா? செமெண்டு கட்டிடமா? பிளான்படி கவிதை கட்டுவதற்கு? செங்கல் கல் அல்ல வார்த்தைகள் அப்படி அப்படியே அடுக்கிச் சொல்வதற்கு. இலக்கணத்திற்கும், நிபுணத்துவ ஆராய்ச்சி அறிவுக்கும் அப்பாற்பட்ட கோபுரம் போன்றது கவிதை. வளைவுகள் நெளிவுகள் இருக்கும். உயரத்தில் கோபுர உச்சியும், ஆழத்தில் கடலின் ஆழமும் வார்த்தைகளுக்கு இருக்கின்றன. மொட்டை மொழுக்கட்டி என்று ஈனிக் கோபுரம்போல் எழுப்புவதா கலை? இல்லை கவிதை? அல்ல. ஐயா அல்ல. வார்த்தைகள் செங்கற்களைப் போன்றவை அல்ல. வைரம் போன்றவை; அம்மட்டுமா? வார்த்தைகள் மெல்லிய புஷ்பங்களைப் போன்றவை!

கட்டி மாலையாக கட்டுகிறானே புஷ்பக்காரன் அவன் தொட்டால், புஷ்பத்தின் அழகு சிதறுவதில்லை; இதழ் விரிந்து மணம் அதிகமாகிறது; பூவோடு பூ சேரும்போது அழகு அதிகரிக்கிறது. காம்பிலே வாடாமல் இதழிலே வாடாமல், எப்படியோ அதைக் கட்டி முடித்து மாலையாகவும் சாத்தி விடுகிறான். நாம் புஷ்பங்களின் வாசனையில் இறங்கி நிற்கிறோம்.

வார்த்தைப் புஷ்பங்களோ, என்றும் வாடாத மலர்கள். இன்று சரிவர அவை மாலையுடன் சேர்ந்துவிட்டால் தமிழின் நாகரிகத்தை வானளாந்து நிற்கும் தஞ்சை கோபுரம் போல, ஆயிரம் பதினாயிரம் ஆண்டுகள் நிற்கும்; வாடாமல் வதங்காமல், எப்போதும் புதிய புதிய மணங்களைப் பரப்பிக்கொண்டு நிற்கும்.

இப்படி வருஷக்கணக்காக என்றும் நிற்கும் சொல்லோவியத்தை கவிமணி நமக்குக் கடிதத்தில் சொல்லிவிட முடியுமா? முடிந்தாலும் நம்மால் அதை நிறைவேற்ற முடியாது. கவிதை என்பது அவ்வளவு அரிய உள்ளப் பண்பாடு நிறைந்த செல்வம். அதை அள்ளி அடுத்தவனுக்குக் கொடுக்கலாம். அடுத்தவன் அதிலிருந்து பயன் அடையலாமே தவிர, அதையே அடைய முடியாது. உதாரணமாக பணத்தின் பலனை, சௌக்கியத்தை சுகபோகங்களை நாம் சிருஷ்டித்துக் கொள்ளலாம். பணத்தையே சிருஷ்டித்துக்கொள்ளும் அதிகாரம், வரப்பிரசாதம் ஒரு சிலருக்குத்தான் உண்டு. அந்த எல்லைக்குள் போனால் அரசாங்கத்தார் விலங்கிட்டு விடுவார்கள். ஆனால் நாமும் கவிஞன் என்று சிருஷ்டி எல்லைக்குள் போனால், பலருடைய மூளைக்கும் விலங்கு போட்டு இம்சை செய்கிறோம். இப்படிச் செய்கிறவர்கள் நிறைய இருக்கிறார்கள்.

இப்படி விலங்குபோன்ற கவிஞர்கள் அந்நாளிலும் இருந்தனர். இந்நாளிலும் இருக்கின்றனர். சர்க்காரின் அனுமதி பெற்று சமஸ்தானாதிபதிகள் நாணயங்கள் அச்சிடுவது உண்டு; அந்த எல்லையோடு அந்நாணயச் செலாவணி உயிர் போய்விடும். சில கவிஞர்களுடைய கவிதை அவர்கள் ஆயுளோடு அதன் ஆயுளும் முடிவு பெறுகிறது. நின்று நிலைக்கும் பொருள்கொண்டு கவிதை எழுதுகிறவனே என்றும் உயிர் வாழும் செல்வத்தைத் தரமுடியும், தங்கத்தைப் போல. காலம் இழுக்கும் இழுப்பிற்கெல்லாம் நெளிந்து கொடுக்கும் தன்மை கவிதையில் இருக்கவேண்டும்.



கவிதையோ, சிறுகதையோ கட்டுரையோ நாவலோ இலக்கியத்தின் எந்த கிளையையும் பதியம் வைத்து உண்டாக்க முடியாது. குடாப்பில் போட்டு பழங்களை பழுக்க வைப்பது போல பழுக்க வைக்க முடியாது. எழுதும் உள்ளம் எழுத வேண்டுமென்ற அரிப்பு, எழுதிவிடலாம் என்ற நம்பிக்கை இருக்கிறவர்களால் எழுத முடியும். 'நாம் எழுதி என்னாகப் போகிறது? கம்பனைவிட, பாரதியைவிட நாம் என்ன சொல்லிவிடப் போகிறோம் என்று கவிமணியும், பாரதி தாஸனும் நினைத்திருந்தால்......? அந்த நினைப்புக்கு ஆளாகும். எவரும் பேனாப் பிடிக்க முடியாது. கவிதைக்குத்தான் இத்தகைய பண்பு, மற்றப்படி வசனத்திற்கு இப்படிச் சொல்லவேண்டியதில்லையெனச் சிலர் நினைக்கலாம். இது தவறு.

தமிழ் நாட்டுப் பிரபல எழுத்தாளர்கள், இலக்கியத்தைப் பள்ளிக்கூடத்தில் முறையுடன் படித்துவிட்டு, இலக்கணத்துறையைக் கற்று ஆராய்ந்தறிந்து பேனாப் பிடிக்கவில்லை. தமிழை முறையுடன் பாடங் கற்று, பேனாப் பிடித்த பிரபல தமிழாசிரியர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்கள் எழுதியதெல்லாம் மாணாக்கர் எழுதிய விடைத்தாள்போல இருக்குமே தவிர்த்து, சுயமாக எதுவுமே இருக்காது. சொந்தமான சிந்தனைக்கு அங்கே இடமில்லை. பழமையை சுருக்கியும் பெருக்கியும் வருத்தும் பகுத்தும் தருவார்கள்.

எழுதவேண்டுமென்ற துருதுருப்பும், நம்மிடம் பிறருக்குச் சொல்லக்கூடிய சில விஷயங்கள் இருக்கின்றன என்ற தெம்பும் படைத்தவர்களே எழுத ஆரம்பித்தார்கள்; எழுதிக்கொண்டும் வருகிறார்கள். பிறரிடம்



போய்ப் பாடங் கேட்டோ, சிக்ஷை பெற்றோ எழுத்தாளர்கள் ஆக முடியாது.

ஆனால், ஆங்கிலத்தில் எழுத்தாளர்களின் எண்ணிக்கையும், தேவையும் அதிகம். இதைப் பயன்படுத்தி நெல் விளைவிக்கும் குடியானவர்களைவிட நெல் விற்கும் கடைகள் பெருகிய கதையாக, எப்படி எழுதுவது எனப் பயிற்றுவிக்கும் நோக்கத்தோடு கலாசாலைகள், புஸ்தகங்கள் குவிகின்றன. விநோத விநோதமான தலைப்புகளில் எழுத்தாளன் ஆகும் வழியைக் காட்டுகிறார்கள். நமது தமிழ் நாட்டில், ரயில் கவிழ்ந்தாலும், பிரபல கொள்ளைக்காரன் தூக்கிலிடப்பட்டாலும் காலணாப் பாட்டுப் புஸ்தகம் ஈசல் போல புறப்படுவது மாதிரி, ஆங்கில இலக்கியத்தில் எழுத்தாளன் ஆகும் வழிகளை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட நூல்களை எழுதிப் பிழைக்கும் எழுத்தாளர் அல்லாத நூலாசிரியர்கள் இனிமேல்தான் கிளம்புவார்கள்.

'எப்படி எழுதுவது?' 'நாடகாசிரியர்களுக்கு ஓர் வழி' 'எழுத்தாளனாகப் பிரகாசிக்கப்படுவது எங்ஙனம்?' 'பத்திரிகைகளுக்கு என்ன வகையில் எழுதுவது?' 'ஒரே மாதத்தில் பேனாவில் ரூ. 1000 சம்பாதிப்பது சாத்தியம்' இப்படிப்பட்ட தலைப்புகளில் புஸ்தகங்கள் தலை நீட்டும். எல்லாவற்றையும் விட 'ஆயிரம் ரூபாய் பேனாவால் சம்பாதிக்கிறது?' என்ற புஸ்தகமே நிறைய விற்பனையாகும்.

பத்திரிகைக்கு யாரும் எழுதலாம்; பிரசுரம் ஆகவேண்டுமே! நாடகம் எழுதுவது கஷ்டமல்ல; அதை நடத்திக்காட்டும் தைர்யம் சிலருக்காவது வேண்டுமே. எழுத்தாளனாகப் பிரகாசிக்கலாம். அதனால் பணமும் அந்தஸ்தும் உயர முடியுமா? எல்லாவற்றையும் விட மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கும் எழுத்தாளனைக் கண்டு யாருமே பொறாமைப் படுவார்கள். ஆனால் மேற்படி புஸ்தகம் எழுத்தின் நுணுக்கங்களை விளக்கும் புஸ்தகமாக இராமல், கள்ளக் கையெழுத்தின் திறமையை விளக்கும் புஸ்தகமாகவே இருக்க வேண்டும்.

எழுத்தாளர்களாகவே பிழைப்பை நடத்தும் 'திறமை' வறுமை ஒரு சிலருக்குத்தான் இருக்கும். பொழுது போக்காக இலக்கிய சேவைக்கு யாரும் வரலாம். டாக்டர் எழுத்தாளனாக இருக்க முடியும்; வக்கீல் வர முடியும்; டிக்கெட் பரிசோதகன், ஹோட்டல் சர்வர், பஸ் கண்டெக்டர் அதாவது இந்தப் பூலோக வாசிகளில் எழுதப்படிக்கவும் பாஷாபிமானமும் இதயத் தத்துவமுள்ள எவரும் இலக்கிய சேவகனாக மாற முடியும். நிருபராக விளங்க ஆசைப்படுகிறவன் தன்னை மறைத்து பிறர் மூலம் பிரகாசிக்க வேண்டும்; இலக்கிய எழுத்தாளனோ, பிறரை மறந்து, தன்னையே வெளிக்காட்ட வேண்டும். இந்தச் சக்தியுள்ள எவரும் எழுத்தாளனாக வர முடியும். தனக்கென்ற தன்மையை இலக்கிய அரங்கத்திற்குள் 'தீர்வை' செய்துகொள்ளுகிறவனே உண்மையான எழுத்தாளன்.

எழுத ஆரம்பிக்கிறவர்களுக்குமே, இந்தப் பதவி சுலபத்தில் கிடைத்துவிடும் என்ற நோக்கத்தோடு பேனா பிடிக்கிறார்கள்; பேனாவைப் பிடித்து பத்திரிகை உலகத்திற்குள் நுழைந்த பின்புதான் அவர்களுடைய வண்டவாளம் தெரியவருகிறது.

நண்பர் எனது கடிதத்தைக் கண்டும் தாம் எழுத்தாளன் ஆகிவிடலாம் என்று நம்பிக்கை வைத்திருந்தால், குற்றாலம் அருவி போட்டோ படத்தில் குளித்து விடலாம் என்று தீர்மானிக்கலாம். எழுத்தின் ரகஸியம் கடவுளைப்போல் சிக்கலானது; அல்லது கடவுளைப்போல எளிமையானது என்றே படுகிறது.

இல்லாவிடில் சிருஷ்டித்தொழில் என்று இதற்குப் பெயர் கொடுப்பார்களா? சிதம்பர ரகஸியம் போன்று எழுத்துத் தொழிலில் எல்லாம் வெட்ட வெளிச்சம். வியாபார ரகஸியமாக மருந்துமுறைகளை மூடி வைப்பதுபோல எழுத்துத் தொழிலில் மூடி வைக்க எதுவுமே இல்லை. 'அணு குண்டு செய்வதை விஞ்ஞான ரீதியில் கணக்குப் போட்டுக் காட்டிவிட்டால் புரிந்து விடும். இலக்கியத்தில் கணக்குப்போட்டு பிறருக்கு நாலும் நாலும் எட்டென்று காட்ட ஒன்றும் இல்லை. தர்க்க ரீதியாகவோ கணித முறையிலோ இலக்கிய சிருஷ்டிக்குப் படிகள் இல்லை. அது, மனதிற்குள்ளாக நிகழ்கிற சித்து வேலை. இதனால் பிறர் புரியும் வகையில் விளக்கிவிட முடியாது. கட்டிய வீட்டுக்குக் குறை சொல்லலாம்; மனமாளிகை கட்டும் விதத்தைப் பிறருக்குச் சொல்ல இயலாது.

இதைத்தான் அந்த நண்பருக்கு எழுத வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் எழுதவில்லை. பாவம், அவர் மனசைக் கலைப்பானேன்?



# பூர்விகக் கலைச்செல்வம்

ராவி

## காவிரிப்பூம்பட்டினம்

## 12

## நகர வாழ்க்கை

★

ஒள் நாட்டு நகருக்கோர் எடுத்துக் காட்டாக' மதுரையைப்பற்றி முன் கட்டுரையில் விவரம்கண்டோம். கடற்கரையோரமாய் அமைந்தநகரங்களைப்பற்றிக் கூறக் காவிரிப்பூம்பட்டினத்தின் அக்கால நிலையைப்பற்றி இங்கு சில கூறுவோம்.

'தண்ணீரும் காவிரியே' என்று ஆன்றோரால் புகழப்படும் பெருமை வாய்ந்தது காவிரி. ஆதிக்காலந் தொட்டு இன்றுவரையில் அதன் ஓரங்களில் எழுந்த கிராமங்கள், நகரங்கள், நாடுகள், சாம்ராஜ்யங்கள் இவற்றை ஆராய்வோமானால் அது அளவிலடங்காத செயலாகிவிடும். காவிரி நீரின் நன்மையாலோ, அது பாயும் மண்ணின் மேன்மையாலோ அதற்கென்று தனித்த ஒரு சிறப்பு எக்காலத்திலும் ஏற்பட்டிருக்கிறது. 'சோறுடைத்து சோழநாடு' என்று பெருமைபடச் சோழநாடு உயர்ந்ததற்குக் காரணம் காவிரியே. சோழ நாட்டுக்குப் பொன்னிநாடு, காவிரி நாடு என்ற பெயர்களும் அவ்வாற்றாலேயே ஏற்பட்டன.

அந்தகைய காவிரி கடலொடு கலக்குமிடத்தில் காவிரிப்பூம்பட்டினம் என்ற நகரம் மிகப் பழங்காலந்தொட்டே இருந்து வந்தது. சங்க காலத்தில் தமிழகம் எல்லாத் துறைகளிலும் மேம்பட்டிருந்தது போல வாணிபத் துறையிலும் அது மேலோங்கியிருந்தது ஆகவே, ஒவ்வொரு தமிழரசனும் தனக்கென ஒன்றோ, பலவோ கடல்துறைப் பட்டினங்களைப்பெற்றிருந்தான். அத்தகைய பட்டினங்களுள் காவிரிப்பூம்பட்டினம் மற்றைத் துறைமுகப்பட்டினங்களுக்கெல்லாம் சிறப்பாக அக்காலத்தில் விளங்கிற்று. சோழமன்னர்களிற் சிலர் அதையே தம் இராஜதானியாகவும் கொண்டிருந்தனர். பின்னொரு காலத்தில் சோழ குடும்பமே இரண்டாகப் பிரிந்தபோது ஒரு குடும்பம் காவிரிப்பூம்பட்டினத்திலேயே தங்கி ஆளத் தொடங்கிற்று.

இதற்குப் புகார், சம்பாபதி என்ற வேறு பெயர்களும் உண்டு. புகார் என்பதற்கு ஆறு கடலொடு கலக்குமிடம் என்பது பொருள். சம்பாபதி என்பது சம்புத்தீயத் தெய்வத்தின் இயற்பெயர். அத்தெய்வமே இவ்வூருக்கும் அதிதேவதையாயிருந்தது ஆகவே இதற்குச் சம்பாபதி என்ற பெயருண்டாயிற்று உறையூர் உண்டாவதற்கு முன்பே இவ்வூர் இருந்ததனால், இது சோழர்களுடைய பழைய இராஜதானிகளுள் ஒன்றாயிருந்ததாலும் இதற்கு மூதூர் என்ற வேறொரு பெயரும் உண்டு இவ்வூரினையாண்ட காந்தமன் என்ற அரசனின் வேண்டுகோட்படியே அகத்தியர் காவிரியை உண்டாக்கினார்.

### பெயர்க்காரணம்

இந்நகர்க்குக் காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர் வந்த வரலாற்றை மணிமேகலை என்ற நூல் பின்வருமாறு அழகாகக் கூறுகின்றது:— காந்தமன் என்னும் சூரிய குலத்துச் சோழன் தன் நாட்டிற்குத் தண்ணீர் வசதி அளிக்க வேண்டி அகத்திய முனிவரைப் பிரார்த்தித்தான். அவரும் தம் கையிலிருந்த நீர்க் குண்டிகையைக் கவிழ்க்க அதனின்றும் காவிரியாறு கிழக்கு நோக்கி ஓடத் தொடங்கியது அதனைக் கண்டு சம்பாதித் தெய்வம் மனம் மகிழ்ந்து, "என் வேணவா தீர்த்த விளக்கே வா" என்று அதனை வரவேற்றாள். அப்பொழுது அகத்தியர், 'சம்பாபதியே! இவ் அருந்தவமுதியோளை வணங்குவாய்: இவன் சோழர்தம் குலக்கொடியாவாள்: இந்தண்தமிழ்ப் பாவை, நிரகங்கள் நிலை திரிந்துகொண்டாலும், தன் நிலை திரியாள்: இவளை நீ ஏற்றுக் கொள்" என்று கூறினார். உடனே சம்பாபதி மனம் மகிழ்ந்து அக்காவிரியைத் தன் மடிமேல் வைத்து. "அன்னையே, பிரமன் உலகத்தைப் படைத்த அந்நாள் முதல் இந்நகரம் என் பெயரால் வழங்கி வருகின்றது: இன்றுமுதல் இது உன் நகரமாகட்டும்: இதற்கு உன் பெயரைச் சூட்டினேன்" என்று கூறினாள். அன்றுமுதல் அதற்குக் காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயரே வழங்கலாயிற்று.

இவ்வூரிலிருந்து கொண்டு ஆட்சி ஆண்ட சோழ மன்னர்கள் மிகப்பலராவர். அவர்களுள் கரிகாலன் என்றவன் இதில் சரித்திரத் தொடக்கத்தில் ஆண்டு வந்தான். அவனுக்குப் பெருவளத்தான், திருமாவளத்தான் என்ற வேறு பெயர்களும் உண்டு. இவன் தமிழ்நாடு முழுமையும் தன்னடிப்படுத்தி ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை நிறுவினான். சுமார் முதல் இமாலயம் வரையில் அவன் தன் வெற்றிக் கொடியை உயர்த்தினான். காடாயிருந்த தொண்டை நாட்டை நாடாக்கினவனும் அவனே. சுழத்தை வென்று அங்குள்ள பகைவர்களைச் சிறைப்படுத்தியவனும் அவனே தான். காவிரிக்குக் கரைகட்டியவனும் அவன்.

காடுகொன்று நாடாக்கி,
குளந்தொட்டு வளம்பெருக்கி,
கோயிலொடு குடிநிறீஇ,
வாயிலொடு புழையமைத்து,
ஞாயிறொறும் புதைநிறீஇ.
—(பட்டினப்பாலை)

என்றபடி காடுகளை அழித்து, நாடாக்கி, குளங்களைத் தோண்டி, வளம்பெருக்கி, கோயில்களை எழுப்பி, குடிகளை நிறுவி, நகர்க்குப் பெரிய கோட்டை வாயில்களையும் சிறிய வாயில்களையும் அமைத்து, மதிலின் தலையில் ஞாயிறு சூட்டுக்கள்தோறும் அம்புக் கட்டுக்களையும் கட்டிவைத்து சோழநாட்டையும் காவிரிப்பூம்பட்டினத்தையும் மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தவன் கரிகாலன்.

காஞ்சிபுரத்திலே காமகோட்டத்திற்குக் காவலாய் சாத்தன் என்ற தெய்வம் கோயில்கொண்டிருந்தது. அத்தெய்வத்தைக் கரிகாலன் வழிபட அது அவனுக்குச் செண்டு என்ற ஆயு



தத்தை அளித்தது அதனைக்கொண்டு அவன் பகைவர்களையெல்லாம் ஒடுக்கி, வடநாடுகளையும் தன் அடிப்படுத்தி, இமாலயம் வரையில் வென்றுவிட்டான். அதனைக் கடக்க முடியவில்லை. ஆகவே தன் செண்டினால் அதனை அடித்து அதன்மேல் தன் புலிக்குறியையும் இட்டுத் திரும்பினான் என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன.

இவ்வாறு வடநாடு கடந்து திரும்பும்போது பல அரசர்கள் அவனுக்குத் தம்மிடமிருந்த அருமையான பொருள்களைக்கொடுத்து வழிபட்டனர். அவ்வாறு அவன் பெற்றவற்றைச் சிலப்பதிகாரம்,

மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த
கொற்றப் பந்தரும்;
மகதநன் னாட்டுவாள்வாய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த
பட்டி மண்டபமும்;
அவந்தி வேந்தன்
உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபின்
தோரண வாயிலும்;

கூறிறபடி வச்சிரநாட்டு மன்னன் முத்துப் பந்தரொன்றைக் கொடுத்தான் வச்சிரநாடு சோணையற்றங் கரையிலுள்ளது. மகத வேந்தன் வித்தியாமண்டபமொன்றை கொடுத்தான் வித்தியாமண்டபம் புத்தகசாலை போலும். அங்கே புலவர்கள் கூடி வாதமும் புரிவர். உஜ்ஜையினியிலிருந்து அவந்தி நாட்டையாண்ட அரசன் மிகவும் உயர்ந்த வேலைப்பாடுள்ள வாயில் தோரணத்தைக் கொடுத்தான். இவற்றையெல்லாம் கரிகாலம் பெற்றுத் தன் ஊரில் சித்திரமண்டபம் ஒன்றை இழைத்து அதனில் இவற்றை அமைத்தான். இச்சித்திரமண்டபத்தில் அவனும், அவன்பின்னே வந்தவர்களும் கொலுவிருப்பதும் வழக்கமாயிற்று.

இவ்வாறு பலவகைகளாலும் சிறப்படைந்த இந்த நகரம் புறச்சேரி, துறைமுகம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்ற பல பிரிவுகளையுடையதாயிருந்தது.

### புறச்சேரி

புறச்சேரிகளிலே பல தோப்புகளும் அவற்றையொட்டிப் பலபல உப்பங்கழிகளுமிருந்தன. அக்கழிகளிலே படகுகளில் உப்பைக் கொண்டுபோய் பிற ஊர்களில் விற்கிறவர்கள், அப்படகுகளை, குதிரைகளை இலாயத்திலே கட்டிவைப்பது போல் கட்டிவைத்திருப்பர். "சோம குண்டம், சூரியகுண்டம்' என்ற இரண்டு ஏரிகளும் அவற்றையொட்டிக் காமக்கோட்டம் என்ற மன்மதன் கோயிலும் அங்கே இருந்தன. அவற்றிற்கு அருகாமையிலே நகர்க்குப் புதிதாய் வருகிறவர்களுக்குச் சோறிடும் அறச்சாலைகளும், தருமத்திற்காக எருதுகளுக்குத் தண்ணீரும் வைக்கோலும் கொடுக்கும் 'தருமசாலைகளும், தவத்தினர் வாழும்பள்ளிகளும், இருடிகள் வேள்விசெய்யும் வேள்விச்சாலைகளுமிருந்தன. ஒரு புறத்தில் பரதவர் சேரி காணப்பட்டது. அச்சேரியில் பல தெருக்கள் இருந்தன. பரதவர் ஓடங்களைக் கொண்டு கடலிலே சென்றிருக்க, அவர்கள் தம் வீடுகளை அறிந்து திரும்பி வருவதற்காக வீடுகளின் மேல் மாடங்களில் இரவெல்லாம் விளக்குகள் வைத்து எரித்தார்கள்.

### துறைமுகம்

புகார்த் துறைமுகம் மிகப் பெயர் பெற்றது.

வேயா மாடமும்,
வியன்கல இருக்கையும்
மான்கண் காலதர்
மாளிகை இடங்களும்
கயவாய் மருங்கில்
காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா
யவனர் இருக்கையும்
—(சிலப்பதிகாரம்)

அது கொண்டிருந்தது மொட்டை மாடிகளையுடைய மாளிகைகளும், அவற்றில் மான் கண்போன்ற சாளரங்களும் பண்டசாலைகளும், கடலோரத்தில் யவனர் தெருக்களும் அங்கே இருந்தன யவனர் என்பவர் கிரேக்கர், அராபியர் துருக்கர் போன்ற மேலை நாட்டினர்க்கு இட்ட ஒரு பெயர். இவர்கள் தம் நாடுகளிலிருந்து சாராயம், மணிகள், குதிரைகள் இவற்றைக் கொண்டு வந்து இங்கே விற்று, இங்கிருந்து மிளகு, அகில், முத்து, துணி முதலியவற்றை வாங்கிச் செல்வர். இவர்களிற் பலர் அரச சேவையிற் புகுந்திருந்தார்கள். காவிரிப்பூம்பட்டினத்தில் யவனர் தெருவொன்றிருந்தது.

இத்துறைமுகத்தையொட்டிப் பல பண்டசாலைகள் இருந்தன. கப்பல்களில் ஏற்றவும், கப்பல்களிலிருந்து இறக்கி உள் நாடுகளுக்கு அனுப்பவும் பல பண்டங்கள் அங்கே நிறைந்து கிடந்தன. அவற்றிற்குச் சுங்கம் வாங்கும் பொருட்டு அரசனுடைய புலிப் பொறியை இட்டுக் காவலாளிகள் எப்போதும் காத்து நின்றார்கள். அக்காவலாளர்கள் 'எரிகின்ற சினத்தையுடைய சூரியனின் குதிரைகளைப்போல' ஒரு போதும் சோம்பியிருக்கமாட்டார்கள். அப்பண்டசாலைக்கட்டிடங்கள் உயர்ந்த சுற்றுத் திண்ணைகளையும், பல கட்டுக்களையும், சிறியனவும் பெரியனவுமான பல வாசல்களையும், பெரிய இடைகழிகளையும் பெற்றிருந்தன. கடலிலே பல கப்பல்கள் நின்றன. கடலில் வழி தெரியாமற்போகும் கப்பல்களைக் கரைக்கு அழைக்கக் கலங்கரை விளக்கம் இரவெல்லாம் எரிந்தது.

### மருவூர்ப்பாக்கம்

துறைமுகத்தை ஒட்டிய நகர்ப் பகுதிக்கு மருவூர்ப்பாக்கம் என்பது பெயர். அங்கே சிறிய தொழிலாளிகளும் வியாபாரிகளும் வாழ்ந்து வந்தார்கள். தொய்யிற் குழம்பு முதலான எழுது வண்ணங்கள், வாசனை பொடிகள், சந்தனக் குழம்பு, பூமாலைகள், புகையூட்டுவதற்காகப் பயன்படும் அகில் உறுப்புக்கள், வாசனை விதைகள், ஆகிய இவற்றை விற்பவர்கள் வாழும் வீதிகளும், பட்டு நூல், பருத்தி நூல் இவற்றால் ஊசிகொண்டு நுட்பமான நூல் வேலை செய்பவர்கள் வாழும் வீதிகளும், பட்டு, பவளம், சந்தனம், அகில், முத்து, மணிகள், பொன் இவற்றைக்கொண்டு தொழில்கள் செய்யும் பணியாளர்கள் வாழும் வீதிகளும், தானியக்கடைகளுள்ள வீதிகளும், பிட்டு, அப்பம், கள் விற்பவர்களும், மீன், வெற்றிலை, பஞ்சவாசனைப் பொருள்கள், ஆட்டிறைச்சி, எண்ணெய் ஆகிய பண்டங்களை விற்கும் வாணிபர்கள் வாழும் வீதிகளும், தச்சர், கொல்லர், சித்திரகாரி, சிற்பாசாரிகள், உருக்குத் தட்டார், இரத்தினப்பணித் தட்டார், தையற்காரர், தோல் தைப்பவர், துணி வெட்டி முதலியவற்றால் புஷ்பம், வாடாமாலை பொய்க்கொண்டை முதலியவற்றைச் செய்யும் வேலைக்காரர்கள், குழலர் பாணர் முதலிய இசைக்காரர்கள் ஆகிய பல தொழிற்காரர்கள் வசிக்கும் வீதிகளும் மருவூர்ப் பக்கத்திலேயிருந்தன.

### பட்டினப்பாக்கம்

பட்டினப்பாக்கம் என்றது பணக்காரர்கள் வசிக்கும் பகுதியாகும். இராசப்பெருந் தெரு, தேரோடும் வீதிகள், கடைத் தெரு, வணிகரது மாடமாளிகைத் தெரு, அநர் வீதிகள், வேளாளர் வீதிகள், முத்துக்கோப்பவர், சங்கறுப்பார், ஆகியோர் வாழும் தெருக்கள், சூதர், மாகதர், வேதாளிகர், நாழிகைக் கணக்கர், சாந்திக்கூத்தர், காவற் கணிகையர், ஆடற் கூத்தியர், பூவிலை மடந்தையர், ஏவலாளர், தோற்கருவி இசைப்பவர், உற்சவங்களுக்குக் கொட்டுபவர், யாழ் முதலிய வாத்தியங்கள் வாசிப்பவர் வாழும் வீதிகளும், நால்வகைப் படைத்தலைவர் குடியிருக்கும் வீதிகளும் இருந்தன.

### நாளங்காடி

இவ்விரு பகுதிகளுக்குமிடையிலே பெரிய அங்காடித்தெரு வொன்றிருந்தது. அது ஒரு சோலையிடம். மரங்களே தூண்களாகக்கொண்ட கடைகள் கணக்கற்று அங்கே யிருந்தன. அதைத் தவிர மாலை நேரத்திலே வியாபாரம் நடைபெறும்

அல்லங்காடித் தெருவொன்றும் அங்கே உண்டு.

## நாளங்காடிப் பூதம்

நாளங்காடியின் இடையிலே ஒரு பூதத்தின் கோயில் உண்டு. முசுகுந்தன் என்ற ஒரு சக்ரவர்த்தி தேவலோகத்திலிருந்து இப்பூதத்தைக் கொண்டு வந்திருந்தான். சித்திரா பௌர்ணமி அன்றைய தினம் மறக்குடிப் பெண்டிர்களும் ஆண்களும் இப்பூதத்திற்குப் பூசைபோட்டுக் கூத்தும் ஆடுவர். போர்க்களத்திலே தம் பக்கத்துக்குத் தோல்வி வரும்போலிருந்தால், வீரர்கள் தம் அரசனுக்கு வெற்றிகிடைக்குமானால், தம்மையே நாளங்காடிப் பூதத்துக்குப் பலி கொடுத்துக்கொள்வதாக வேண்டிக் கொள்வதுண்டு அவ்வாறு தம்மையே பலிகொடுத்துக் கொள்ளும் விரத்தை நாம் வேறெங்கும் காண்பதரிது.

இந்தப் பூதம் அருமையான ஆற்றல்களை உடையது. பொய்த்தவ வேடங்கொண்டு ஊரை ஏமாற்றுகிறவர்கள், கெட்ட நடத்தையையுடைய பெண்டிர், அரசனுக்குத் துரோகம் பண்ணும் அமைச்சர், பிறர்மனைவியை விரும் துர்ச்சனர், பொய்ச்சாட்சி கூறும் வஞ்சகர், நேரிற் புகழ்ந்துப் புறம்போய்ப் பழிக்கும் பாதகர் இவர்களுள் எவரேனும் அப்பூதமிருக்குமிடத்துக்கருகிற் சென்றால், அது பெரிய முழக்கம்செய்து, தன் கையிலுள்ள பாசத்தைச்சுழற்றி அவரைப் பிடித்துக் கொன்று தின்னும்.

## பிற மன்றங்கள்

இவற்றைத் தவிர காவிரிப்பூம் பட்டினத்தில் வேறு சில பொதுவிடங்களும் உண்டு. இலஞ்சி மன்றம் என்ற இடத்திலே ஒரு குளம் உண்டு. கூன், குறள், குஷ்டம் முதலிய குறைபாடுடையவர்கள் அக்குளத்தை வலம் வந்து அதனில் முழுகினால் அக்குறை நீங்கப் பெறுவர். நெடுங்கல் மன்றம் என்ற இடத்தில் ஒளி வீசும் ஒரு கல் நிற்கும். பித்தர், விஷமுண்டவர், பாம்பு கடித்தவர், பேய் பிடித்தவர் ஆகியோர் அக்கல்லைச் சூழ்ந்து வந்தால் அவை நீங்கப் பெறுவர். பாவை மன்றம் என்ற இடத்தில் ஒரு பாவை நிற்கும். அரசன் செங்கோல் தவறினாலும், நியாயாதிபதிகள் அதர்மம் சொன்னாலும் அப்பாவையானது கண்ணீர் வடிக்கும்,

## சோலைகள்

அந்நகரில் இடையிடையே பல சோலைகள் இருந்தன. அவற்றுள் சிறப்பானவற்றை இங்கே கவனிக்கலாம். இலவந்திகை என்பது ஒரு சோலை. 'நிறைக்குறின் நிறைத்துப் போக்குறிற் போக்கும் பொறிப்படை அமைந்த பொங்கு இலவந்திகை' என்று பெருங்கதையிற் கூறியபடி இயந்திரத்தால் தண்ணீரை நிரப்பவும் வடிக்கவும்கூடிய குளத்தைப்பெற்றது இலவந்திகைச் சோலையாகும். 'பன்மலர் அடுக்கிய நன்மாப் பந்தர்' என்றதால் இங்கே பூ மரங்கள் பல உண்டு. இங்கு அரச குடும்பத்தினரே போகலாம்; இதனைச் சூழ்ந்து உயர்ந்த மதிலுண்டு. உய்யானம் என்ற வனம் தேவர்களுக்கே உரியது. மானிடர் அங்குச் சென்றால் பூதம் பிடித்துக்கொன்றுமாம். திருவிழாக்காலத்தில் தேவர்கள் அங்கே வந்து தங்குவார்கள் என்பது நம்பிக்கை. சம்பாதிவனம், கவேரவனம் என்ற வேறு சோலைகளுமிருந்தன. உவவனம் என்பதுதான்யாவரும்செல்லக்கூடிய சோலை. இங்கே பல மலர் மரங்களுக்கிடையில் ஒரு பளிங்கு மண்டபமும், அம்மண்டபத்துள் புத்த பகவானுடைய திருவடித் தாமரைப் பீடிகையும் உண்டு. அந்தப் பீடிகையில் எந்தத் தெய்வத்தையாவது நினைத்து மலர்களை இட்டால் அவை அந்தத் தெய்வத்தினிடம் போய்ச் சேருமாம். இந்த உவவனத்தை ஒட்டி ஒரு சுடுகாடும் சக்கரவாளக் கோட்டம் என்ற கோயிலும் உண்டு. அக்கோயிலில் உலகத்திலுள்ள மலைகள் தீவுகள் ஆங்காங்கே வாழ்கின்றவர்கள் இவர்களையெல்லாம் உருவங்களில் அமைக்கப்பட்டிருந்தன.

## கோயில்கள்

'நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாகப் பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக' என்று மணிமேகலையிற் கூறியவாறு காவிரிப்பூம்பட்டினத்தில் சிவபிரான் முதல் நாளங்காடிப்பூதம் வரையிலுள்ள பல தெய்வங்களுக்கும் கோயில்கள் இருந்த செய்தி தெரியவருகிறது. இந்து சமயத்தின் பரந்த நோக்கம் இதனால் தெரியவருகிறது. பௌத்தம், ஜைனம் முதலானவைகளும் புறச்சமயங்களாகக் கருதப்பட்டு விலக்கப்படவில்லை. எல்லாத் தெய்வங்களுக்கும் சமமான கௌரவம் கொடுக்கப்பட்டது. இக்காலத்தில் காணப்படாத பல கோயில்கள் அக்காலத்திலிருந்தன. இந்திரன் ஐராவதம், வச்சிராயுதம் இவற்றிற்கும், பலதேவன், மன்மதன் ஆகியோர்க்கும் கோட்டங்களிருந்தன. இந்திரனுக்குரிய விழாவொன்று ஆண்டுதோறும் 28-நாட்களுக்கு மிக விமரிசையாய் நடக்கும். இதைத் தவிர ஒவ்வொரு தெய்வத்திற்கும் நித்தியவிழா, மாதவிழா, ஆண்டு விழா என்றவை தவறாமல் நடந்து வந்தன. வீதிகள் எப்போதும்

குழலொடு யாழ்முரல
முழவதிர முரசியம்ப

என்றபடி திருவிழாக்கள் நிறைந்த வண்ணமேயிருந்தன. ஆங்காங்கே, ஆசாரியர்களான சாரணர்கள் வந்து தங்கி உபதேசம் செய்வதற்காக சிலாதலங்கள் கட்டப்பட்டிருந்தன. இவ்வாறு தெய்வ வணக்கமுறை உச்ச நிலையை அடைந்திருந்தது.

இந்நகரத்தின் வியாபாரப் பெருமையைப்பற்றி மேலே படித்தோம். அக்காலத்தில் வியாபாரிகளும் பிறரும் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ளும் ஒருமுறையை இங்கே பார்ப்போம். கடைத்தெருவில் ஒவ்வொரு சரக்கையும் விளம்பரப்படுத்த ஒவ்வொரு விதக்கொடி பறக்கும். கடைத்தெருவிலோ,

நீரின் வந்த
  நிமிர்பரிப் புரவியும், 1
காலின் வந்த
  கருங்கறி 2 மூடையும்,
வடமலைப் பிறந்த
  மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த
  ஆரமும் 3 அகிலும்
தென்கடல் முத்தும்
  குணகடல் துகிரும் 4
கங்கை வாரியும், 5
  காழகத்து 6 ஆக்கமும்,
அரியவும் பெரியவும்
  நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கி
  (பட்டினப்பாலை)

கிடந்தன. வியாபாரிகள் தாங்கள் எந்தத் துறையில் சிறப்புற்றிருந்தார்கள் என்பதை அறிவிக்கக் கொடிகள் கட்டியிருப்பார்கள். இவ்வாறு கொடிகள் நிறைந்திருந்ததால் சூரியனுடைய கிரணங்கள் கடைத்தெருவினுள் நுழையா என்று ஆசிரியர் குறிக்கிறார்.

இவ்வளவு சிறப்புடன் வாழ்ந்து வந்த நகரம் மணிமேகலை உயிருடனிருந்த காலத்திலேயே கடலுக்கு இரையாகிவிட்டதென்று அறிய வருந்துகிறோம். கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகே தமிழகத்தை இருள் மூடிக்கொண்டது. ஆறாம் நூற்றாண்டு முதல் பல்லவர்கள் அதனை ஆளத் தொடங்கினார்கள். அக்காலத்தில் வாழ்ந்து வந்த திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்திற்கு ஒரு பதிகம் பாடியருளியிருக்கிறார்கள். அக்காலத்திலும் மாடவீதிகள், சோலைகள், பொய்கைகள், கடற்கரை முதலியன வளமாக இருந்த செய்தி அத்தேவாரத்தால் தெரியவருகிறது. என்றாலும் சங்ககாலப் பெருமை ஒன்றும் அதனிற் காணவில்லை. இன்று அது ஒரு சிறிய கிராமமாகவேயிருக்கிறது.

இவ்வாறு நம் தேசத்தில் மறைந்துபோன நகர்கள் எத்தனையோ உண்டு. பண்டைப் புதை பொருள்களை ஆராயும் வல்லமை பெற்றவர்கள் கலைமறைப்படி புகாரையும் ஆராய்வார்களானால் எவ்வளவோ புதிய செய்திகள் புலப்படலாம்.

1. குதிரை. 2 மிளகு 3. சந்தனம். 4. பவளம் 5 பொருள்கள் (யானை, மாணிக்கம் முத்து, பொருள் முதலியன) 6. கடாரம்.






## 30

## கருமத்தில் ஞானியின் மனோபாவம்

★

சாமானிய ஜனங்கள் கியாதிபெற்ற தலைவர் அல்லது பெரியோரின் அனுஷ்டானத்தையே பின்பற்றுகிறார்கள். அதனால் ஞானி தனக்கு ஆகவேண்டியது கருமத்தால் எதுவும் இல்லை என்றாலும் பிறருக்குக் கலக்கம் உண்டாகாமலிருக்கவாவது கருமங்களைச் செய்யவேண்டும். நோயாளிக்கு ருசியான உணவுகளைக் கைவிட்டுப் பத்தியம் இருப்பது கஷ்டமாக விருக்கும். பத்தியம் நோய் நிவாரணத்திற்கு அவசியம்தான் என்றாலும் ஆரோக்கியமுடைய ஒருவன் நோயாளியின் எதிரே போய் ருசியான பட்சணங்களைச் சாப்பிட்டுக்கொண்டேயிருந்தால் நோயாளிக்கு நாக்கில் ஜலம் ஊறுதா? நோயாளியின் மனத்தில் தின்பண்டத்தில் ஆசையைப் பெருக்கி நாளடைவில் அவன் பத்தியத்தையே கெடுத்துவிடாதா?

நற்கருமம் செய்வதில் ஏற்படும் சரீர உழைப்புக்குச் சோம்பி. ஞானமில்லாதவர்களில் சிலர் தாங்களாகவே கருமத்தை விடப் பார்ப்பார்கள். ஞானி கருமம் செய்வது அவர்களைக் கருமம் செய்யத் தூண்ட உதவியாக இருக்கும். ஞானி கருமம் செய்யாமலிருப்பது அவர்கள் கருமத்தைவிட்டுக் கெட்டுப்போவதற்குத் தூண்டுதலாயிருக்கும். பாமர ஜனங்களின் இத்தகைய சுபாவத்தை அறிந்த ஞானி பிறருக்காகப் பயன் எண்ணாமல் கருமம் செய்வான்.

ஆகத் தனக்காகக் கருமம் செய்யும் சாமானியர்; பிறருக்காகக் கருமம் செய்யும் ஞானி; எனக் கருமம் செய்வோரை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இவ்விருவராருக்கும் கருமம் செய்வதில் கொள்ளும் மனோபாவத்தால் மற்றொரு வேற்றுமையும் உண்டு என்பதைக் கண்ணன் வரும் பாடலால் தெரிவிக்கிறார்

மெய் கருமம் தன்குணத்தால்
  மேவிவரும்: வேறு அறியான்
'இக்கருமம் யான்செய்தேன்'
  என்றிருக்கும்:—அக்கருமத்து
ஏயகுணம் வேறு அறிவான்
  'இக்குணங்கள் தன்னில்தான்
ஆய' என உன்னும்
  நசை அற்று.

(இ-ள்) மெய்தன் குணத்தால்—பிரகிருதியி (உடலி)னது குணங்களால். கருமம் மேவிவரும்—கருமங்கள் தழுவிச் செய்யப்படும்; வேறு அறியான்—விவேகம் இல்லாதவன், இ கருமம் யான் செய்தேன் என்றிருக்கும்—இந்தக் கருமத்தை நானே செய்தேன் என அஹங்காரம் கொண்டிருப்பான், அ கருமத்து ஏய குணம் வேறு அறிவான்—அந்தக் கருமம் அதற்கு ஆதாரமான குணம் இவற்றின் விபாகத்தை (பிரிவை) உள்ளபடி அறிந்தவன், நசை அற்று—(கருமங்களில் அகங்காரத்திற்கிடமான) பற்றுதல் இல்லாதவனாய், 'இ குணங்கள் தன்னில்தான் ஆய' என— 'இக்குணங்களிலிருந்துதான் கருமங்கள் பிறக்கின்றன' என்று உன்னும்-நினைப்பான்.

ப்ரக்ருதே: க்ரியமாணாநி
3
குணை: கர்மாணி ஸர்வச:
4
அஹம்கார விமூடாத்மா
கர்(த்)தாஹம் இதி மந்யதே
3
தத்வ வித்து மஹா பாஹோ
3 4 3
குணகர்ம விபாகயோ:
3 3
குணாகுணேஷு வர்(த்)தந்தே
இதிமத்வா நஸஜ்ஜதே

(இ-ள்) அகம்கார விமூடாத்மா—அஹங்காரத்தால் ஸ்வரூபம் தெரியாத மூடன், ப்ருக்ருதே:—பிரகிருதியினது, குணை:— குணங்களால், க்ரியமாணாநி— செய்யப்படுகின்ற, ஸர்வச: கர்மாணி—எல்லாக் கருமங்களையும், அஹம்கர்த்தா இதி-'நானே செய்கிறேன்' என்று, மந்யதே—நினைக்கிறான்.

மஹாபாஹோ!—பெருந் தோள்களையுடையவனே! குண கர்ம விபாகயோ:—குணகர்மங்களுடைய பிரிவுகளின், தத்வ வித்து—உண்மை அறிந்தவனோ, குணா: குணேஷு வர்த்தந்தே—குணங்கள் கர்மங்களில் பிரவர்த்திக்கின்றன, இதி மத்வா—என்று நினைத்து, ந ஸஜ்ஜதே—(பற்று)அபிமானம் வைப்பதில்லை.

சரீரத்திற்கு மூல காரணமான பொருளை 'பிரகிருதி' என்று

வேதத்தை ஆதாரமாகக்கொண்டு வேதாந்திகள் விவகரிக்கிறார்கள். இது மூலப்பிரகிருதி என்றும் சொல்லப்படுகிறது. இதையே மாயை என்று சொல்வோரும் உண்டு. பிரகிருதி என்னும் சொல் சரீரத்தையும் குறிக்கும். சுலோகத்தில் 'ப்ரக்ருதே:' என்ற சொல் அதனால்தான் பாடலில் 'மெய்' என்று கொள்ளப்பட்டது.

ஸத்துவம், ராஜஸம், தாமஸம் ஆகிய குணங்கள் பிரகிருதியில் உண்டாகின்றன. குணங்களுக்கேற்பக் கருமங்கள் நிகழ்கின்றன. உடலுக்கும் அதிற் பிறக்கும் குணங்களுக்கும் அந்நியமான தன்னை (ஆத்மதத்துவத்தை) உணர்ந்த ஞானி 'மாயையின் குணங்களே செயலுக்குக் காரணம். தான் எதையும் செய்வதில்லை' என்று தெரிந்துகொள்ளுகிறான். அதனால் தன்னைச் செயலுக்குக் கர்த்தா என்று நினைத்து அகங்காரம் கொள்வதில்லை. குணம். கர்மம் இவற்றின் விபாகத்தை (பிரிவை) அறியாத அவிவேகியோ கருமத்தைத் தானே செய்வதாக நினைத்து, அகங்காரம் கொள்ளுகிறான்.

ரயில் ஓடுகிறது. அதில் குழந்தைகளும், பெரியோர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். ஓடும் செய்கை குழந்தை. முதியவர் ஆகிய இரு சாராரிடமும் இல்லை. ஆனால் அறிவு முற்றாத குழந்தை தான் ஓடுவதாக நினைப்பதுபோல் குண கர்ம விபாகம் அறியாத அஞ்ஞானிகள் கருமத்திற்குத் தங்களைக் கர்த்தாவாக நினைத்து அகங்காரப்படுகிறார்கள்.

'குண கர்ம விபாகமறிந்தவன்' என்பதற்கு உரையாசிரியர்கள் வெவ்வேறான பொருள் தருகிறார்கள்:— ஸ்ரீதரர்—'முக்குணங்கள் தனதல்ல; குணங்களால் பிறக்கும் கருமமும் தனதல்ல. ஆத்மாவாகிய தான் குணமும் அல்லன்; கருமமும் அல்லன்; கருமங்களைச் செய்பவனுமல்லன். குணங்கள் கருமங்கள் என்பவற்றிற்குத்தான் வேறானவன் என்று உணர்ந்தவனே குண கர்ம விபாகங்களைத் தெரிந்தவன்!

ராகவேந்திரர்:—'பகவானின் இச்சை ஸங்கல்பம் முதலிய குணங்களுக்கும், பிரகிருதியினது ஸத்வம், ராஜஸம், தாமஸம் ஆகிய குணங்களுக்குள்ள வேற்றுமை. பிரகிருதியின் விகாரமான தேகம், இந்திரியம், மனம், இவற்றிற்குள்ள பேதம்; பகவத் சிருஷ்டி முதலிய கருமங்களுக்கும், பகவானுக்கு அதீனமாகவேயிருக்கிற ஜீவகோடிகளால் செய்யப்படும் கருமங்களுக்கும் உள்ள பேதம்; இவற்றை உள்ளபடித் தெரிந்துகொண்டவனே, குண கர்ம விபாகம் அறிந்தவனாகிறான். அவ்வாறு அறிந்தவன், பகவத் இச்சாதி குணங்கள் ஜீவ சுபாவ கருமங்களிலும். இந்திரியங்கள் பகவத் இச்சானுசாரமாய் (பகவத் ஸங்கல்பத்தை அநுஸரித்து) சப்தாதி விஷயங்களிலும் பிரவர்த்திக்கின்றன என்பதை எல்லாச் செயல்களிலும் உணர்கிறான். அதனால் கர்மங்களில் அபிமானம் வைப்பதுமில்லை; தான் செய்வதாக அகங்காரம் கொள்வதுமில்லை!

உலகில் பலர் பிரகிருதியின் குணத்தால் பிரமித்தாயினும் கர்மம் செய்கின்றார்கள். அத்தகைய கர்மாதிகாரிகள் தேகத்தையும் குணத்தையும் தமதாக எண்ணுகிறார்கள் அதனால் கர்ம பலனில் ஆசை கொண்டு கருமத்தைச் செய்கிறார்கள். தாமே கருமம் செய்வதாக அகங்காரப்படுகிறார்கள் கருமம் செய்வதில் அவர்கள் கொண்டிருக்கும் மனோபாவம் தவறாக விருந்தாலும் நாளடைவில் அது மாறலாம். அவ்வாறின்றி அவர்கள் கருமத்தையே அடியோடு செய்யாமல் விட்டுவிட்டால் பெருங்கேட்டிற்கு ஆளாவார்கள்.

நன்றாய் அறிந்த அநுபவ ஞானி தன்னைப் பின்பற்றக்கூடிய அவர்களைக் கலங்கவைக்கக்கூடாது கேட்டிற்கு ஆளாகவிடக்கூடாது மந்தமதிகளின் நன்மைக்காகவாவது கருமங்களை விடாமல் செய்யவேண்டும் அர்ஜுனா! அத்தகைய ஞானியே பிறருக்காகக் கருமம் செய்ய வேண்டியிருக்கும்பொழுது நீ உரிய கர்மாவைச் செய்யாமலிருக்கலாமா? உன் சுயதர்மமான யுத்தத்தைச் செய். எந்தவித மனோபாவத்துடன் நீ செய்யவேண்டும் என்பதை மறுபடியும் சொல்கிறேன் கேள்.

என்னிடையே இக்கருமம்
எல்லாம் இனிது இருத்தி
நின்னிடையின் மிக்கமர்ந்த
நெஞ்சினால்—மன்னியபேர்
ஆசையுடன் நீமமதை
அற்றுஇங்கு அமர்முயல்வாய்
ஆசையுடன் உள்
வெதுப்பற்று ஆர்ந்து.

(இ-ள்) இ கருமம் எல்லாம்—இக்கருமங்கள் எல்லாவற்றையும், என்னிடையே இனிது இருத்தி—என்னிடத்தில் பூர்ணமாக ஒப்பித்து, நின் இடையின் மிக்கு அமர்ந்த நெஞ்சினால்—நின் ஆத்மாவிடமே நன்றாகப் பொருந்திய மனத்தோடு, மன்னிய பேர் ஆசையுடன் மமதை அற்று—பலனில் உண்டாகும் பேர் ஆசையும் எனது என்ற மமகாரமும் இல்லாமல், ஆசையுடன் உள் வெதுப்பு அற்று—'நான்' என்னும் அஹங்காரத்தோடு உள்ளத்தாபம் (வருத்தம்) இல்லாமல். நீ ஆர்ந்து இங்கு அமர்முயல்வாய்—நீ உற்சாகத்துடன் இங்கு போரை மேற்கொள்வாயாக.

மயி ஸர்வாணி கர்மாணி
ஸந்யஸ்ய அத்யாத்ம சேதஸா
நிராசீர் நிர்மமோ பூத்வா
யுத்யஸ்வ விகதஜ்வர:

(இ-ள்) ஸர்வாணி கர்மாணி—எல்லாக் கருமங்களையும், மயி ஸந்யஸ்ய—என்னிடத்தில் ஒப்பித்து (விட்டு) அத்யாத்ம சேதஸா—ஆத்மாவையே நாடிய மனதோடு, நிராசீ:—(பலத்தில்) ஆசையற்றவனாய். நிர்மம:—மமகாரமற்றவனாய், விகதஜ்வர: பூத்வா—தாபத்தை (துக்கத்தை) விட்டவனாய். யுத்யஸ்வ-யுத்தம்செய்.

'மயி ஸந்யஸ்ய' (என்னிடத்தில் ஒப்பித்து) என்னும் தொடருக்கு ராகவர் கூறும் உரை:—'பகவானே என் ஹிருதயத்தில் இருந்துகொண்டு செய்கின்றான் என்னும் எண்ணத்துடன் ஒப்பித்து.

ராமாநுஜர்:—நான் பரமாத்மாவின் சொற்காரனாய் எல்லாக் கருமங்களையும் செய்து பரமாத்மாவிடம் ஒப்பிக்கக் கடமைப்பட்டவன் என்னும் எண்ணத்துடன் ஒப்பித்து.

'கருமங்களைப் பயனெண்ணாமல் அகங்கார மமகாரமற்றவனாய் எல்லோரும் அவசியம் செய்யவேண்டும்' என்பதைக் கண்ணன் அர்ஜுனனுக்கு இதுவரைப் பல தடவைகள் பலவகையாகச் சொல்லியிருக்கிறார். யுத்தம் செய்யத் தயாராகிவந்த அர்ஜுனனுக்குச் சோக மோகத்தால் கலக்கம் உண்டானபொழுது கலக்கத்தைப் போக்கித் தெளிவைத் தரவல்ல ஆசார்ய ஸ்தானத்தில் கண்ணன் சமீபத்தில் இருந்தார். அதனால் சந்தேகம் ஏற்பட்டபோதெல்லாம் அர்ஜுனனுக்குக் கேள்வி கேட்டுத் தெளிவுபெற முடிந்தது. எல்லோருக்கும் இது சாத்தியமாகுமா? கேள்விகேட்டுத் தெளிந்துகொள்வதற்குரிய ஆசாரியர்கள் எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் கிடைப்பார்களா? கிடைக்கமாட்டார்கள் ஆதலால் உலகில் அனைவரும் உய்ய மற்றொரு மார்க்கத்தையும் கண்ணன் அடுத்தபடியாகக் காட்டுகிறார்.





# யோக க்ஷேமம்

## 3

'ஏது இவ்வளவு தூரம்? லீலாவைப் பாக்க வந்தாயா?' என்றாள் அங்குவந்த கல்யாணியைப்பார்த்து சேஷிப்பாட்டி.

'ஆமாம்பாட்டி. கதவு பூட்டப்பட்டிருக்கிறதே. லீலா எங்கே?' என்றாள் கல்யாணி.

'இன்றைக்கு என்ன கிழமை தெரியுமோ லியோ?'

'ஏன், ஞாயிற்றுக்கிழமை.'

'இந்த நேரத்துக்கு இன்று லீலாவை இங்கே பார்க்கமுடியுமா?'

'ஏன், பீச்சுக்குப் போயிருக்கிறாளா?' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் கல்யாணி.

'பீச்சுக்குப் போனால் பரவாயில்லையே. உடம்பாவது பிழைத்துப் போகுமே' என்றாள் சேஷிப் பாட்டி.

'தங்கையின் கலியாணத்துக்காக வரன் ஏதாவது பார்க்க அகமுடையானுடன் போயிருக்கிறாளா?'

'அது அவ்வளவு முக்கியமான விஷயமா?'

'கிடக்கட்டும் சொல்லுங்கள் பாட்டி. லீலா, எங்கே போயிருக்கிறாள்?'

'உனக்கும் எனக்கும் சம்ஸார விசாரம், பிறந்த நாளிலிருந்து, தலையில் சுமத்தப்பட்டு விட்டது. வீட்டை விட்டு நகரமுடியவில்லை. அவளுக்கென்னடி. சுகப்பிராணி. இந்த வேளைக்கு 'பிச்சல் பிடுங்கல்' ஒன்றுமில்லை. அகமுடையான் நாலு காசு சம்பாதிக்கிறான். ஜோராக உல்லாஸ வாழ்க்கை நடத்துகிறதுகள். எனக்கென்னமோ அதுகளைக்கண்டால் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. சண்டை சச்சரவு ஒன்றுமில்லாமல் இந்தவேளைக்கு மனமொத்து இருக்கிறதுகள். லீலாவின் வார்த்தைக்கு அவன் மறுத்துப் பேசுகிறதில்லை. அவன் வார்த்தைக்கும் அது மதிப்புக் கொடுக்காமலிருக்கிறதில்லை கிடரென்று நினைத்துக்கொண்டு 'இன்று சினிமாவுக்குப் போய்வரலாமா?' என்றாள். அதற்கென்ன, போய்வந்தால் போகிறது.' என்று சொல்லிவிட்டு, கடியாரத்தைப் பார்த்துவிட்டு, 'முதல் ஆட்டத்துக்கு நாழியாகிவிட்டது போலிருக்கிறதே. பரவாயில்லை. இருபதுநிமிஷம் இருக்கிறது. அப்படியானால் கிளம்பு சீக்கிரம், என்றான். மளமளவென்று மூஞ்சியை அலம்பி பவுடர் பூசிக்கொண்டு வேறு புடவை உடுத்திக்கொண்டு ஐந்து நிமிஷத்தில் தயாரானாள். கதவைப்பூட்டிக்கொண்டு இரண்டும் சினிமாவுக்குக் கிளம்பிவிட்டதுகள்' என்றாள் பாட்டி.

'அதென்னமோ இப்படிப்பட்ட சினிமா பைத்யம் அவளுக்கு. நான் அவளைப்பார்க்க வரும்போதெல்லாம் சினிமாவுக்குத்தான் போய்விடுகிறாள். அதென்ன சினிமாவோம்மா. அதில் அலுப்பு சலிப்புதான் இராதோ?'

'இப்பொழுது பரவாயில்லையே. ரொம்பவும் சிக்கனத்தில் இறங்கி இருப்பதாகப் பாவனை. முன்பெல்லாம் பார்த்தாலல்லவோ தெரியும். வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று தரம்கூடப் போய் வருவார்கள்.

'அப்படிப் போவதற்கு அதில் என்ன இருக்கிறது பாட்டி?'

'சரிதான். நான் தான் இதைச் சொல்லி அசட்டுப் பட்டம் கட்டிக்



"........சிறிது நேரம் யோசனை செய்து விட்டு........"

கொள்கிறேன். நீ வேறு சொல்ல ஆரம்பித்து விட்டாயா? அதென்னடியம்மா இவ்வளவு சின்ன வயசில் அவ்வளவு விரக்தி ஏற்பட்டுவிட்டது உனக்கு?'

'அதென்னமோ பாட்டி, வர வர இந்தத் தமிழ்ப்படங்களைக் கண்டாலே எனக்கு வெறுப்பாக இருக்கிறது. ஒரு விஷயத்தைப் படிப்பதற்கும், கேட்பதற்கும், நேரில் பார்ப்பதற்கும் எவ்வளவோ வித்தியாஸமிருக்கிறது படத்தில் நாம் விஷயங்களை நேரில் பார்க்கிறோம். கூடியவரையில் அன்றாட வாழ்க்கையில் நடைபெறக்கூடிய சம்பவங்களை வாழ்க்கைக்கு ஒத்துவரக்கூடிய தன்மையில் சித்தரிப்பதாக இருந்தால் தேவலை. அநேகமாக நம் தமிழ்ப் படங்களில் இந்த அம்சம் கவனிக்கப் படுவதாகத் தெரியவில்லையே.'

'பரவாயில்லையே. என்னுடைய அபிப்ராயத்துக்கும் உன்னுடைய அபிப்ராயத்துக்கும் ரொம்ப ஒற்றுமை இருக்கிறது, என்றாள் இத்தனை நேரமும் மௌனமாய் உட்கார்ந்திருந்த கோகிலா.

'அதென்னடியம்மா உனக்கும் அதில் அவ்வளவு ஆத்திரம்?' என்றாள் பாட்டி.

'ஆத்திரமா? நேற்று நான் ஒரு படம் பார்க்கப்போயிருந்தேன், ஆரம்பம் முதல் கடைசிவரையில் ஒரே சோகரஸந்தான், சோகரஸமாவது எப்படி? கொட்டகையில் இருந்த ஒவ்வொருவர் கண்களிலும் ஜலம் ததும்பிக் கொண்டிருந்தது. அநேக கட்டங்களில் பார்ப்பதற்கே சகிக்காமல் கண்களை மூடிக்கொண்டு விட்டார்கள். நான் அழுதே விட்டேன் போங்களேன். என் பக்கத்திலிருந்த ஒருத்தி முகத்தை வேறு பக்கமே திருப்பிக்கொண்டுவிட்டாள். ரொம்பவும் தெய்வபக்தி உள்ளவராம். குழந்தை என்று கூடத் தெரியாமல் பக்தி மேலீட்டினால் குழந்தையை காலால் சட்னியாகத் துவைத்துவிட்டார். மனைவி வந்து பார்த்துவிட்டு கொஞ்சமும் மனதில் விகற்பமில்லாமல் முன்னிலும் பத்துமடங்கு அதிகமாக பதிபக்தி கொண்டாடுகிறாள். தொழில் திறமையைப்பற்றியவரையில் மிகவும் வெற்றிகரமான படந்தான். ஆனால் இன்றைய வாழ்க்கைக்குத் துளியாவது ஒத்துவரக்கூடிய விஷயமா? இன்றைய உலகத்தில், உண்மையில் சொல்கிறேன். ஒருவன் கடவுள் பக்தன் என்று சொல்லிக்கொண்டு பக்தி மேலீட்டினால் தன் குழந்தையை மிதித்துத் துவைத்துவிடட்டும். அப்பொழுது அவனுடைய 'ஸஹதர்மிணியின் பதிபக்தி' எந்த அளவில் இருக்கிறது என்று பார்த்துவிடலாம்' என்றாள் கோகிலா.

'பார்த்துவிடுவதென்ன. அந்தப் பித்துக்குளியுடன் மேற்கொண்டு ஒரு நிமிஷம்கூட 'ஸம்ஸாரம் செய்ய மாட்டாள்' என்றாள் கல்யாணி.

'அப்படியானால் நம் புராணக்கதைகளைப் படம்பிடித்துக் காட்டக்கூடாதென்கிறாயா?' என்றாள் இதையெல்லாம் கேட்டுக்கொண்டு அங்கே வந்த எச்சுமுப்பாட்டி.

'புராணக் கதைகளைத் தப்பு என்று 'நாஸ்திக வாதம்' செய்யவில்லை பாட்டி. இந்தக்காலத்தில் அல்ப விஷயத்துக்கு தீர்க்கமான ஒரு வைராக்யம் சரிப்பட்டுவராதென்றுதான் சொல்கிறேன். அதெல்லாம் ஒரு துருவன், ஒரு பிரகலாதன், போன்றவர்களால்தான் முடியும். இவர்களெல்லாம் எத்தனையோ ஆயிரம் வருஷங்களுக்கு ஒரு முறை தோன்றுவார்கள். இதேமாதிரி எல்லாருமே நடந்துகொண்டுவிட முடியுமா இந்தக்காலத்தில்? ஒன்றுமில்லை. சமீபத்தில் எங்கள் பக்கத்தகத்தில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன் கேளுங்கள். எங்கள் பக்கத்தகத்தில் ராமனாதன் என்று ஒரு பையன். அதற்கும் அதன் அகமுடையாளுக்கும் அற்ப விஷயத்தில் மனஸ்தாபம் வந்துவிட்டது. அகமுடையாளின் பிறந்தகம் பக்கத்துத் தெருவில்தான். அந்தப் பெண்ணும் அசட்டுத்தனமாகக் கோபித்துக்கொண்டு பிறந்தகம் போய்விட்டது. ராமனாதனும் ஒழிந்தது சனியன். இனி அதன் முகத்திலேயே விழிக்கிறதில்லை. பேசாமல் எங்காவது தேச ஸஞ்சாரம் கிளம்பிவிடுகிறேன் என்று சொன்னானாம். மறுநாள் சமையல் செய்ய உட்கார்ந்தானாம் ராமனாதன். என் சகோதரன் கோபாலனும் அவனும் கூட்டாளிகள். அப்பொழுது கோபாலன் அங்கே போயிருந்தானாம். ராமனாதன் காய்கறிகளை நறுக்குவதற்காக முதலில் வெண்டைக்காயை எடுத்தானாம். சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு அதை வைத்துவிட்டானாம். பிறகு கத்தரிக்காயை எடுத்தானாம். சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு அதையும் வைத்துவிட்டானாம். பிறகு கொஞ்சநாழி நிக்கிரமை பிடித்தமாதிரி ஒன்றும் செய்யத் தோன்றாமல் உட்கார்ந்துகொண்டிருந்தானாம். ஏன்? என்ன யோசனை? என்று கேட்டானாம் கோபாலன்.



"........இருபது நிமிஷம் இருக்கு ஸெம்பு........"



'இந்த வெண்டைக்காயை கற்பகம் (ராமனாதன் அகமுடையாள்) வதக்கல் செய்யவேண்டும். சாப்பிடவேண்டும். இந்தக் கத்தரிக்காயை கற்பகம் கூட்டு செய்யவேண்டும். சாப்பிட வேண்டும். வதக்கல் என்றால் அவளுக்கு ரொம்ப இஷ்டம்'. என்று சொல்லி வெண்டைக்காயையும், கத்தரிக்காயையும் அவைகள் இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு, ரஸம், சாதம் செய்து சாப்பிட்டானாம். அவள் இல்லாமல் சாப்பிட மனது இடம் கொடுக்கவில்லை. கற்பகமும் மறுநாள் கணவன் வீடு வந்துசேர்ந்துவிட்டாள். முதல் நாள் இருந்த இருப்பென்ன. இப்பொழுது நடந்ததென்ன? குடும்பத்தில் இதெல்லாம் சகஜம். தலைபோகிறமாதிரி சண்டை போட்டுக்கொள்வார்கள். அடுத்த நாளே கூடிக்கொள்வார்கள். இது மனித சுபாவம். இதற்காக தீர்க்க துவேஷம் பாராட்டி வீட்டை விட்டு ஓடிவிடுவதென்றால் உலகத்தில் அப்புறம் என்ன இருக்கிறது? இதனால்தான் நம் முன்னோர்கள் விவாகரத்துக்கு இடம் கொடுக்கவில்லை' என்றாள் கோகிலம்.

'பரவாயில்லையே. கோகிலம் பெரிய பிரசங்கம் செய்துவிட்டாள், என்றாள் சேஷிப்பாட்டி.

'அதென்னமோ, இன்றைய வாழ்க்கையை மனதில் வைத்துக்கொண்டு அதற்கனுகுணமாக படங்களைப் பிடித்துபார்க்க வருகிறவர்களின் மனதில் நிம்மதியையும் சந்தோஷத்தையும் உண்டுபண்ணக்கூடிய வகையில் படங்கள் வெளிவரவேண்டும்? என்னைக்கேட்டால் நான் அதைத்தான் சொல்வேன் என்றாள் கோகிலம்.

'நானும் அதைத்தான் சொல்ல வந்தேன் நிம்மதியாகச் சிறிது நேரம் பொழுதைப் போக்கிவிட்டுவரலாம் என்ற எண்ணத்துடன் படம்பார்க்கப் போகிறோம். அதற்கனுகுணமாகப் படம் இருந்தால்தான் மனதுக்கு நிம்மதி ஏற்படும். ஒரு துருவன் வைராக்யசாலியாக இருந்தானென்றால் வாழ்க்கையில் அதேமாதிரியே எல்லோருமே இருந்துவிட முடியுமா?' என்றாள் கல்யாணி.

'அப்படியானால் இந்தக் கதைகளையே படம் பிடிக்கக்கூடாதென்கிறீர்கள்?' என்றாள் எச்சுமுப்பாட்டி.

'அப்படி யார் சொன்னது? நமது தமிழ்ப்பட உலகில் ஒரு வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஒருவர் ஒரு புராணப்படம் பிடித்தால் எல்லோரும் புராணப் படம் பிடிப்பதிலேயே முனைந்துவிடுகிறார்கள். ஒருவர் ஒரு



'அல்ஸேஷியன்' என்ற இனத்தைச் சேர்ந்த நாய்கள் பிரிட்டிஷ் விமானப்படைக்குப் பெருந்துணை. இவை நன்கு காவல் புரிகின்றன. படத்தில் அத்தகைய நாயொன்று இருவர் குனிந்து நிற்பதற்கு மேலாகத் தாண்டுகிறது.

விதமான சமூகப்படம் பிடித்தால் எல்லோரும் அதையே காப்பியடிக்க வேண்டியது இந்த மனோபாவம் மாறவேண்டும். வாழ்க்கையை ஜனங்கள் சந்தோஷமாக அனுபவிக்கச் சொல்லிக்கொடுக்கிற மாதிரியில் படங்கள் வெளிவர வேண்டும்,' என்றாள் கோகிலம்.

'நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம், இப்படி இருந்தால் தேவலை. அப்படி இருந்தால் தேவலை என்று. இதை யார் காதில் வாங்கிக்கொள்கிறார்கள்? எந்தமாதிரியான படம் வந்தாலும் கொட்டகை வாசல்களில் 'க்யூ'வின் நீளம் குறையவில்லை' என்றாள் சேஷிப்பாட்டி.

'நாழியாகிறது. நான் போய்வருகிறேன் பாட்டி. 'அவர்' ஆபீஸிலிருந்து வருகிற நாழியாகிவிட்டது' என்று சொல்லி கல்யாணி விடைபெற்றுக் கொண்டாள்.



K. S. E. . . .

கொள்ளேகாலம்
பட்டுச் சேலைகள்

☆

உங்கள் கலியாண வைபவங்களுக்கு
பிரத்யேகமான சோபையளிக்கும்
இதற்கு நாங்கள் உத்தரவாதம்.

☆

பல புதிய ரகங்கள் வந்துள்ளன. இன்றே வந்து பாருங்கள்.

☆

காத்தாயி ஸில்க் எம்போரியம்,
கிழக்கு மாட வீதி - மைலாப்பூர் - மதராஸ்.



"விஜய ரக்ஷிணி"
(மூலகா யந்திர தாயத்து)

இந்த கவசத்தை அணிவதால் கிரஹ சாராதி தோஷம் நீங்கும். ஆரோக்யம், குடும்ப க்ஷேமம், கலியாணம், வியாபார லாபம், பகை, சமாதானம், உத்யோக உயர்வு, அதிகாரி விஸ்வாஸம், வியாஜ்ய வெற்றி, பண நிலைமையில் சௌகரியம், மற்றும் ஸகல வழியிலும் மேன்மையுண்டாகும். மாணவர்களுக்குப் பரீக்ஷை பாஸாகும். குழந்தைகளுக்கு பாலகிரஹ தோஷம் நீங்கி, ஆயுராரோக்யமுண்டாகும். ஜனன விவரம் அல்லது பெயர், சுமார் வயது, விலாஸம் குறிப்பிட்டு எழுதினால் கவசம் தயார் செய்தனுப்பப்படும்.

விஜய ரக்ஷிணி கவசம் 1-க்கு ரூ. 7—8—0
விஜய ரக்ஷிணி பிரத்யேக ரக்ஷை 1-க்கு ரூ 72-8-0
தபால் செலவு தனி.

ஆரூடம் - ஜாதக பலன்

பண நிலைமை, தொழில் மாறுதல், லாப நஷ்டம் சேதல், கலியாணம், குடும்பம், ஆரோக்யம், படிப்பு, அதிருஷ்ட நாள், எண், நிறம், மற்றும் முக்யவிஷயங்களும் எழுதியனுப்பப்படும். ஜனன கால விவரம் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் தேவை. ஒன்று முதல் 5 எதிர்கால கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருஷத்திய மாதவாரி பலன் ரூ. 6. குழந்தைக்கு ஜாதகம் கணித்து ஆயுள், படிப்பு, முக்ய யோக்யாம்சம் சுருக்கமாக எழுத ரூ. 5. நடக்கும் தசைக்கு புக்திவாரி பலன் ரூ. 10. வி. பி. செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஹனுமந்துபாளி, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பிரசுரமான கிருதிகள்

☆

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்

காயகசிகாமணி அரியக்குடி
ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால்
ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனை தான் இருக்கும்.

தபால் செலவு ப்ரத்யேகம்.

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை.





# மெய் விளங்கிய அன்பர்கள்

## பெரியபுராணப் பூங்காவில்

பி. ஸ்ரீ.

## 56
## திருவாவடுதுறையில் சிதம்பரம்

★

ஒருவன் நூறு வயது இருக்கிறான். பாதி உறங்கிப் போகிறது. குழந்தைக் கல்வியாளர் சொல்லுகிறபடி பதினாறு அல்லது பதினைந்து ஆண்டுகள் வரை அறிவு-வளர்ச்சி அடையாமலே இருந்துவிடுகிறான். எழுபது வயதிற்கு மேல் முப்பது ஆண்டுகளும் மூப்பிலே கழிந்து போகின்றன: எஞ்சியுள்ள இருபத்தேழரை ஆண்டுகளிலும் அறியாமையால் விளைந்த பிணியால் படுத்த காலம் பதினைந்து வருஷம். போகட்டும்: பன்னிரண்டரை வருஷமாவது துன்பம் இல்லாமல், கவலையில்லாமல் கழிவதுண்டா? இத்தகைய மனிதன் 'வேதநூல்-பிராயமாகிய நூறு ஆண்டுகளும் இருந்தேனே' என்று, இந்த உலகத்திலிருந்து விடைகொள்ளும்போது, உண்மையாகச் சொல்லிக்கொள்ள முடியுமா? 'இருந்தேன் இவ்வுடம்பில் ஒரு நூறு வருஷம்' என்று சொல்லக்கூடுமா? 'ஏதோ மரம்போலே இருந்தேன்' என்றாலும், 'மனிதனாக வாழ்ந்தேன்' என்று சொல்லமுடியுமா?

வேறொரு மனிதன் அதே நூறு வயதோ, குறைவாகவோ வாழ்கிறான். ஆம், உள்ளபடியே வாழ்கிறான். ஆம், ஆம்; திருமூலர் சொல்வதுபோல், உடம்பை வளர்த்து 'உயிர் வளர்த்தேனே' என்ற முறையில் நல்வாழ்வு வாழ்கிறான். பதினைந்து ஆண்டு இளமையும் 'வளமை'யாக அறிவிலே வளர்கிறது: அன்பிலே அரும்புகிறது. அறத்திலே மலர்ச்சி பெறுகிறது. இதன் இன்பக் கனியாகிறது பிற்காலப் பெருவாழ்வு. வயது முதிர முதிர, அறிவிலே வயிரம் பாய்கிறது; அன்பிலே பக்தி ஆவேசிக்கிறது. உள்ளொளி மேலும் மேலும் உண்மை காண, பக்தி பணிவாகிறது. பணியாகிறது. இந்த மனிதன் நூறாண்டு வாழ்பவன் தானே? இவனது ஒவ்வோர் ஆண்டும் ஒரு யுகமல்லவா? 'ஒப்பில்லாத நூறு யுகம் இருந்தனே!' என்று இந்த

உண்மை அறிஞன் சொன்னால், அது பொய்யாகுமா?

எங்கும் திருமேனி;
எங்கும் சிவசக்தி;
எங்கும் சிதம்பரம்;
எங்கும் திருநட்டம்,

[சத்தி-சக்தி. நட்டம்-நடனம்.]

என்று யோகக் காட்சி கண்ட திருமூலர் வாழ்ந்த காலம் வருஷக் கணக்கில் அடைபடுமோ? பஞ்சாங்கப் பார்வையில் பிடிபடுமோ?

இந்தச் சிவயோகியார் திருமந்திரம் அருளிச் செய்வதற்குமுன்,

அற்புதக் கூத்தாடுகின்ற
அம்பலஞ்சூழ் திருவீதிப்
பொற்பதியாம் பெரும்பற்றப்
புலியூரில் வந்தணைந்தார்

[பெரும்பற்றப் புலியூர்- சிதம்பரம்.]

என்கிறார் பெரிய புராண ஆசிரியர். சிதம்பரத்தைப் பொற்பதி என்றும், அற்புதக் கூத்தென்றும், ஆனந்தக் கூத்தென்றும், எடுத்து ஆடிய திருவடியை உலகம் உய்ய எடுத்தருளிய சேவடியென்றும் குறிப்பிடுகிறார். இத்தகைய கூத்தைத் தரிசித்த வண்ணம் சிதம்பரப் பொற்பதியில் திருமூலர் சில தினங்களே தங்கினார்: ஆனால் சிதம்பரம் இவருள்ளத்தில் எப்போதும் தங்கிவிட்டது!

சிதம்பரத்தை விட்டுத் திருவாவடுதுறைக்கு வந்துவிட்டாலும், சிதம்பரம் தம்மைத் தொடர்ந்து வந்து விட்டதாகவே கருதினார் சிவயோகியார். நந்தனார் சிதம்பரம் சென்று சேர்ந்தாரென்றால், திருமூல யோகியாருக்குச் சிதம்பரம் வந்துசேர்ந்தது எனலாம். தில்லை வெளியிலே கலந்துவிட்டார் நந்தனார் என்றால், தில்லை வெளி கலந்துவிட்டது திருமூலருள்ளத்திலே!

தில்லை வெளியிலே
கலந்துவிட்டால் அவர்
திரும்பியும் வருவாரோ?

என்று கேட்டாராம் நந்தனார் (தமது 'சரித்திரக் கீர்த்தனை'யில்தான்.) தில்லை வெளியைத் தம் உள்ளத்திலேயே கண்டு கலந்த திருமூலர், தாம் வழிக்கொண்ட பொதியமலை யாத்திரையை மறந்ததுடன் கயிலாயமலைக்கும் விரைவில் திரும்பி வந்தாரில்லை. தில்லைவெளிதான் எங்கும் எவ்வுலகுமாய், கயிலை பொதியமலை எல்லாமாகிப் பரந்துகிடக்கிறதே, எங்கேயிருந்து எங்கே திரும்புவது, எங்கே போவது?

ஆம், அந்த நடனம் இல்லாத இடம் எது? அந்தச் 'சிவசக்தி'யும் 'திருமேனி'யும் தானே உலகத்தை, உலகமாக்கி வைத்திருக்கின்றன!—வெளியை ஒளியாக்கி உயிராக்கி அழகாக்கி ஆனந்தமாக்கியிருக்கின்றன! எங்கும் சிதம்பரம்; எல்லாம் சிதம்பரம்தான்,-நடராஜாவே உலகு உயிர்கள் எல்லாவற்றிலும் அங்கங்கே ஆடி ஆடி இயக்கிக் கொண்டிருப்பதால். எனவே,

அண்டங்கள் ஏழேழும்
அம்பொற் பதியாக

[அண்டம்—உலக உருண்டை. அம்பொற்பதி—அழகான பொன்னம்பலம் என்ற சிதம்பரம்.]

ஆடுகிறான் சிவபெருமானென்றும்,

அண்டம் நடம்செயும்
ஆலயம் தானே

என்றும்,

அம்பல மாவ(து)
அகில சராசரம்

என்றும் சொல்லுகிறார் திருமூலர்.

அந்த நடனத்தைத் திருமூலர் எப்படிக் கண்டார், எவ்வளவு தெளிவாகக் கண்டார், தெரியுமா?

ஆடிய காலும்,
அதில் சிலம் போசையும்,

பாடிய பாட்டும்.
பலவான நட்டமும்
கண்டுகொண்டேன் என்கிறார்.

எங்கே கண்டார் தெரியவேண்டாமா? இருந்த இடத்தில் இருந்துகொண்டே கண்டாராம். 'இருதய கமலம்' என்று புராணம் வருணிக்கும் அந்த அகச் சிற்றம்பலத்திலே. நம் தமிழகத்தின் மிகப் பழைய தலங்களில் ஒன்றுகிய தில்லை மூதூர் புறச் சிற்றம்பலம் (புற உலகத்திலுள்ள சிதம்பரம் என்பர்,

இறைவன் உள்ளும் புறமுமாக ஆடுகிறன். அண்டத்தில் ஆடுவது போல் பிண்டத்திலும் (உடம்பிலும்) ஆடுகிறன். இவ சிதம்பரம் உண்மையில் அண்ட பிண்ட சிதம்பரமாகும். இதன் அறிகுறிதான் சிதம்பரத் தலம். ஒரு காலத்தில் சிதம்பரம், திருமூலர் போன்ற சிவயோகிகளும் சிவஞானிகளும் வருவதும் போவதுமாயிருந்ததால், உண்மையாகவே ஒரு ஞானப் பல்கலைக் கழகமாய்த் திகழ்ந்திருக்கக்கூடும்.

## சிதம்பர உண்மை

சிதம்பர உண்மைகளைச் சிதம்பரத்தில் கண்டதை விட அதிக அளவில் திருமூலனர் திருவாவடுதுறை அரச மரத்தின் கீழ் யோகக்காட்சியாகக் கண்டு அனுபவித்தாரென்று ஊகிக்கலாம். எங்கும் தாருக ஆடும் ஞானக் கூத்தை ஞானக்கண்கொண்டு பார்ப்பதுதானே உண்மையான சிதம்பர தரிசனம்?



அவன் ஆடப் பூதங்கள் ஆடும், புவனங்கள் ஆடும் என்றும், அவன் ஆட உயிர் அவயவங்களோடு களிக்கும் என்றும் அறிந்துகொள்வது தெய்வத் திருக்கூத்தை ஞானக்கண் கொண்டு பார்ப்பதாகும்.

பரமாண்டத் தூடே
பரன் நடம் ஆடுமே

[பரமாண்டம்—சிறப்பான அண்டம்.]

என்று எங்கும் நிறைந்த பரமேசுவரனது நடனம் பார்ப்பதும் முழுப் பார்வையாகாது.

ஒவ்வாத மன்றுள்
உமைகாண ஆடும்
செவ்வானில் செய்ய
செழுஞ்சுடர் மாணிக்கம்

[மன்று-சபை. உமை-உமாதேவி. செய்ய-செவ்வையான; நடு நிலையான.]

என்று அண்டங்களையெல்லாம் கடந்தவனுக வருணிக்கப் பெறும் நிலையிலும் நடராஜனை நோக்கும்போது, ஞானப் பார்வை முழுப்பார்வையாகும் என்பது திருமூலர் குறிப்பு.

இம்முழுப்பார்வையும் பெற்றுத் திருவாவடுதுறை அரசின்கீழ் ஞான அரசு புரிந்த திருமூலர்,

யாவையும் ஆடும்
எம்இறை ஆடலே

[இறை-கடவுள்.]

—அதாவது, அவனன்றி அணுவும் அசையாது—என்ற உண்மை 'ஒட்டை உடைசல் இல்லாத' முழு உண்மையாகப் புலப்படக் கண்டு தெளிந்தார் என்று கருதலாம்.

எங்கும் நிறைந்த நிலை, எல்லாவற்றையும் கடந்த நிலை என்ற இந்த இரட்டை நிலையிலும் சிவநடனம் கண்ட திருமூலநாயனுர், ஆவடுதுறையில் சிதம்பரம் கண்டதும் அதிசயமோ? இந்த யோகியார் தமது மெய்யுணர்ச்சிக் கடிகாரத்தால் தமது சிவயோக வாழ்வை அளந்து பார்த்து,

இருந்தேன் இக் காயத்தில்
எண்ணிலி கோடி!

என்றும்,

ஒப்பிலி கோடி
யுகம்இருந் தேனே!

என்றும் சொல்லியிருப்பதுதான் அதிசயமாகுமா?

இப்படித் தெளிவாகச் சொல்லியிருக்கும் அகச் சான்றினை மறுக்கத் துணியும் மனச்சான்று, யோக உண்மை தெரியாத நாஸ்திக மனப்பான்மைதான்.



# பாலும் பயனும்

பெண் மிருகங்கள் அவற்றின் குஞ்சு குட்டிகளின் போஷணைக்காகத் தங்கள் உடம்பிலிருந்து ஒருவித விநோதமான இயக்கத்தால் தயாரித்து ஒரு விசித்திர இடத்தில் சேர்த்துவைத்துக்கொள்கிற திரவ வஸ்துவுக்குப் பால் என்று பெயர்.

இந்தப்பொருள் சாமான்னியமாய் வெண்மை நிறமானது. இதில் இனிப்புத்தரும் ஒருவித சர்க்கரை (லாக்டோஸ் அல்லது மில்க் ஷுகர்—பால் சர்க்கரை), ப்ரோடீட்ஸ் என்ற புரதங்கள், நீரிற் கரையுந்தன்மையனவான சில உப்பு சத்துகள், கொழுப்பு போன்ற தைல சத்து இவை யாவும் இருக்கின்றன. என்றுலும் இந்த தைல சத்து—வெண்ணெய்—கரையுந் தன்மையதல்ல. சிறு அணுக்கூட்டங்களாக இவை திரவப் பொருளில் நுட்பமாக மிதக்கிறது.

எண்ணெயும் நீரும் சேர்த்து புட்டியில் குலுக்கிக் கலந்தோமானுல், இவை ஒரு மாதிரி சேர்ந்து நிற்பது போல் காணப்பட்டாலும், சிறிது நேரம் அப்படியே விட்டுவைத்தால், நீர் வேறு, தைலம் வேருகப் பிரிந்து போகும். இதன்றி நீரில் சிறிது உப்பைப் போட்டுக் குலுக்கினுல், உப்பு முழுதும் மறைந்து கரைந்துபோம் நீர் வெயிலினுலாவது நெருப்பிட்டாவது சுவர்ந்துபோகாதவரை இவ்விதம் கரைந்தே இருக்கும் கூட்டுப் பொருளாக இருக்கையில் தைல சத்துக் கரைந்திராமல் சிறு துணுக்குகளாகச் சிதறிப்போய்க்கிடக்கும்.

மேற் சொல்லப்பட்ட பலவகை பொருட்களின் அளவு, பிராணிகள் உட்கொள்ளும் உணவையும் அவை கொடுக்கிற பாலின் மொத்த எடை அல்லது அளவையுமே பிரதானமாகக்கொண்டது.

சாமானியமாகக் கருதப்படவேண்டிய ஒரு எடையைவிட மிகவும் அதிகமான பால் யாதொரு பசுவோ எருமையோ கொடுப்பதாக இருந்தால் அந்தப் பாலின் வெண்ணெய் குறைந்தே இருக்கும்.

அதிக ஈரம் கோர்த்த உணவுப் பொருட்களைத் தின்ற பிராணிகளின் பாலும் சத்தற்றதாகவே இருக்கும்.

மற்றும் பால் கறக்க ஆரம்பிக்கையில் கிடைத்த பாலில் உள்ள வெண்ணெய் சத்தைவிட, இறுதியில் கறக்கப்படுகிற பால் அதிகப் பசையுள்ளதாகவும் இருக்கும்.

சாமானியமாக இந்தியாவில் பால்கொடுக்கிற பிராணிகள் மூன்று. பசு, எருமை, வெள்ளாடு. இவற்றின் பாலில் இருக்கும் வஸ்துக்களின்,

இரசாயன பாகுபாடு. (நூற்றில்)

| | எருமைப் பால் | பசுவின் பால் | வெள்ளாட்டுப்பால் |
|---|---|---|---|
| நீர் | 81-86 | 85-88· | 86· |
| வெண்ணெய் சத்து (கொழுப்பு) | 4·6-9·2 | 3·6·25· | 4·7-5·5· |
| சர்க்கரை | 5 | 5 | 3·9 |
| லோக பதார்த்தங்கள் | ·8 | ·7 | ·6-·9· |
| சக்கை | 3·5-4·0 | 2·5-3·5 | 3·4· |

எனவே, நூறு ராத்தல் பசுவின் பாலில், 13–14 ராத்தல் சர்க்கரை, புரதம், கொழுப்பு, சக்கைகளாலான கூட்டுக்கலப்பு கன பதார்த்தம் இருக்கும். இதில் 4, ராத்தல்-வெண்ணெய் சத்து இருக்கலாம். எருமைப்பால் இதைப்போல் இரண்டத்தனையாவது சற்றுக் குறைந்தாவது வெண்ணெய் உடையதாகும் அதனாலேயே பசுவின் பாலை விட எருமைப்பால் திடமானதாகிறதினால் வெண்ணெய் நெய் செய்ய பெரிதும் உபயோகப்படுகிறது.

பால் தருகிற பெண் பிராணி இனத்தைப்பற்றின விசாரணையில் அவற்றை உண்டாக்குகிற ஆண் பிராணிகளைப்பற்றின விவரமும் கூடவே கவனிக்கத்தக்கதாகும். இவ்விரு இனங்களும் சேர்ந்து, "கால் நடை" எனப் பெயரிட்டு வழங்கப்படுவது சகஜம்.

## தென்னிந்திய கால் நடைகள்

தலைமுறை தலைமுறையாக இச் சென்னை இராஜதானிக்கால்நடைகள் மிகவும் சிலாக்கியமானவை என்று கருதப்பட்டு வருகிறது.

கால்நடைகளில் அநேகவர்க்கங்கள் உண்டு. நம்முள் ஒருவனை "சோழதேசத்தான்" "சேலத்தான்" என்றும் "முருகநாடு" என்றும் வழங்கப்படுவதுபோல் இவற்றுள்ளும் இவ்வித இனங்கள் அல்லது குலங்கள் உண்டு. இப்பிரதேசங்களில் காணப்படும் அநேக வர்க்கங்களில் "மைசூர்" என்றும் "ஓங்கோல்" என்றும் "காங்கயம்" என்றும் "பார்லகிமிடி" எருமை என்றும் சொல்லப்படுகிற ஜாதிகள் சிரேஷ்டமானவை.

"மைசூர்" வர்க்கமானது நல்ல ஸந்தானங்களை உற்பத்தி செய்வதில் (Prepotent) சிலாக்கியமானதாகக் கருதப்படுகிறது. மாட்டுத்தாவணிகளில் மாட்டுவர்த்தகர்கள் தரகர்கள் இந்த ஜாதியின்மேல் எவ்வளவு பிரியமாக இருக்கிறார்கள் என்பதும் இவைகள் எவ்வளவு கம்பீரமாகத் தோன்றப்படுகின்றன என்பதும் அவ்வப்பொழுது நடைபெறும் முக்கிய மாட்டுச்சந்தைகளில் பார்த்தால் தெரியவரும்.

இவ்விதம் திருநெல்வேலி முதல் பல்லாரி அனந்தபுரம் வரையும், தென் கன்னடம் முதல் கோதாவரி வரையும் காணப்படலாம்.

திருநெல்வேலியில் முத்தலாபுரம், திருச்செந்தூர், கழுகுமலை, சிவலப்பேரியிலும், மதுரையில், மதுரை, பழனி, ஆத்தூரிலும், திருச்சியில் சமயவரத்திலும், தென் ஆற்காட்டில் மைலஞ் சந்தையிலும், பல்லாரியில் மைலார், குருவத்தியிலும், கோதாவரியில் திராக்ஷாராமா விலும், தெற்கே பொள்ளாச்சி சந்தை, புளியம்பட்டி, பெருந்துறை, இன்னும் முக்கியமான திருவிழாச் சந்தைகளிலும், மைசூர் வர்க்கம், ஓங்கோல் மாடுகள், காங்கயம் கால் நடைகள், மேன்மையானவையென்று பெயர் பெற்றிருக்கின்றன.

"ஓங்கோல்" ஜாதி மாடுகள் பார்வைக்கு லக்ஷணமாக இருப்பதுடன் விசேஷமான காரியங்களுக்குநேர்ந்தவையாக இருக்கின்றன.

அருமை மைசூர் வர்க்கத்திற்கும் ஓங்கோல் ஜாதிக்கும் ஒவ்வொரு விசேஷத்திலும் வித்தியாசம் உண்டு.

"ஓங்கோல்" மாடுகள் பருமனாகவும் பழுத்த பாரங்களை இழுப்பதற்கேற்றவையாகவும் இருக்கின்றன.

"மைசூர்" மாடுகளோ மிகவும் விரைவாக ஓடத்தக்கவையாக, சுறுசுறுப்புள்ளவையாக இருப்பதுடன் உரப்பான கெட்டிக் குளம்புகளும் கால்களும் உடையன—ஆகவே ரஸ்தா சவாரி வேலைகளுக்குப் பொருத்தமானவை.

ஜில்லாதோறும் மாடுகள் பருமன், தோற்றம், அங்க லக்ஷணம், கொம்பு வளர்ச்சி, முதலியவற்றில்

சீதோஷ்ண மாறுபாடுகள், பூசார விசேஷணங்கள், புல், பூண்டு ஆகாராதிகள் இவைகளுக்கேற்ப வேறுபாடுகள் உள்ளவைகளாயிருக்கின்றன.

## ஒரு மந்தையில் பாதி ஒரு பொலிகாளை.

மாடுகளின் பருமன், தோற்றம், குணம், சீலம் முதலியவைகளை தாமே அலைந்து திரிந்து பொறுக்கித் தின்கிற புல் பூண்டு பச்சைகள், மனிதரால் சேகரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகிற புல், வைக்கோல், பசும் பயிர் வகைகளான ஆகாராதிகள் இவற்றை அனுசரித்தே இருக்கின்றன.

நமது மாடுகள் கிராமங்கள், நகரங்கள் இவைகளுக்கு வெளியே பிரதிதினமும் காலையில் திறந்து விடப்படுகின்றனவென்பது எல்லாருக்கும் தெரியும்.

மழைகள் பெய்து நாடு செழித்துக் காடுகள், மலையடிவாரங்கள், கிராம நத்தங்கள், கழனி யோரங்கள், ஆற்றுப் படுகை மரங்கள், மற்றுமுள்ள புறம்போக்கு பூமிகள் எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேல் என்று பச்சை நிற கம்பளம் விரித்தாற்போன்று கண்ணுக்கு ரம்மியமாக இருக்கும் பொழுது மாடுகள் வயிராறப் புல் மேய்ந்து வாய்க்கால்கள், ஓடைகள், ஏரிகள், குளங்கள், குட்டைகள் முதலியவற்றில் தங்கி நிற்கிற கருப்பஞ்சாறு போன்ற இனிய நீரைப் பருகி மிகவும் நன்முகக் காடுசென்று வீட்டை நோக்கி சூரியன் மேற்குக் கடலையடைந்து மறையுமுன்னர் துள்ளிக் குதித்து வால்களை மேலே தூக்கிய வண்ணம் ஓடியாடிக் குதித்துத் திரிந்தும் இளங்காளைகள் உறுமிக்கொண்டும் ரஸ்தா ஓரங்களில் குவித்திருக்கும் செம்மண்ணில் கொம்புகளை நாட்டிக்கொண்டு குத்திக் கொதறி, பசுமாடுகளைத் தேடி ஓடுவதை பலர் அறிவர்.

கொடிய கோடை காலங்களில் நமது மாடுகளைப்பற்றி நாம் ஏதாவது சிரத்தை எடுக்கிறோமா? இல்லை. முன்போலவே சூரியன் உதிக்கையில் திறந்து முடுக்கப்பட்ட மாடுகள் நெடுகச் சென்று மேலும் கீழும் பார்த்துப் புல் என்ற பேரே காணமல் பூமியிலிருக்கும் புழுதியை நக்கி சாயுங் நேரத்தில் வீடு நோக்கி வெளியே சென்றவண்ணமே திரும்பி வந்து சேருகின்றன. இங்கே வந்ததும் ஏதோ 'ஒருவாய்க்கடி' என்று சொல்லுமாறு வைக்கோலோ, சோளத்தட்டையோ ராகிப்புல்லோ, சணப்புக்கீரையோ ஏதோ ஜீவனை மட்டும், காப்பாற்றும்வண்ணம் கிடைக்கப் பெறுகின்றன—

இதிலும் 'வாயுள்ளபிள்ளை பிழைக்கும்' என்றபடி கொஞ்சம் தைரியமுள்ளதும் நீண்ட கொம்புகளைக் கொண்டு மற்றவைகளை விரட்டத் திறமுள்ளவைகளும் கிடைத்ததைப் பொறுக்கித் தின்றுவிட்டு மற்ற அற்பப் பிராணிகளைப் பரிதாபப்படும்படி தள்ளிவிடுகின்றன—இவ்வித சம்பவங்கள் நமக்குத் தெரியாதவைகளல்லவே.

நமது இராஜதானி நல்ல மாடுகள் வளரத்தகுந்த இடம் தான். ஆனால் சிறிய கலப்பு நாட்டு மாடுகள் (Village or mongrel cattle) எங்கே பார்த்தாலும் மந்தையாகக் காணப்படுகின்றன—

'கன்றுக்குட்டி உழவுக்கெட்டுமா' என்பதுமுதுமொழி—நமது மாடுகளில் அநேகம் பல்முளைத்து வாய்க்கூடி கடைத்தேறின பின்பும் கன்றுக்குட்டிகளைப் போலவே கூனிக்குறுகி, கறளை பாய்ந்து போயிருப்பதாலும் இலேசான ஏர்களைக் கட்டியுழுவதற்கும் சற்றும் பிரயோஜனமற்றிருப்பதால் விருதா தண்டப்பிராணிகளாகவே இருக்கின்றன.

நல்ல மாடுகளின் தீவனத்திற்கும் தாயாதி பாகம் போட்டுக்கொண்டு தாங்களும் அரை வயிற்றோடு போவதன்றி, அவைகளின் தீவனத்தையும் கெடுத்துப் போடத்தகுந்த வயதுவந்த மைனர்களாயிருக்கின்றன—

ஆகச்சே, இவைகளை என்ன செய்யலாம்? மேனுட்டாராவது கொன்று கறி செய்து தின்பதற்கென்று கொழுத்த தஞ்சாவூர் சிவன் கோவில் நந்திபோன்ற ரிஷபங்களை வளர்த்துத் தங்கள் வயிறுகளுக்கு ஊட்டிக் கொள்ளுகிறார்கள். நம்மவருக்கோ, இது விஷயம் கேட்கவே கொடிய நாராசம்போலிருக்கிறது.

இவைகளைக் கொல்வதே மிகவும் பாவம் என்று நினைக்கிற நமக்கு இவற்றின் ஊனைத் தின்பதென்பது எவ்வளவு அசாத்தியமான காரியம்? நாம் மாமிசத்தை விரலாலுந் தொடாதும் அப்படிச் செய்பவர்களைக் கண்டாலும் கேட்டாலுமே தீமையென்று நினைக்கும் சுபாவமுள்ளவர்கள்.

ஆனால் என் பக்கத்தில் நிற்கும் "ஸயண்டிஸ்ட்" என்ற என் தம்பி "அண்ணா, நீர் சாப்பிடும் பால் என்ன?" என்று சிரித்தவண்ணம் என்னை வினயமாய்க் கேட்டுப் பரிகசிக்கிறான். நான் என் அகட விகட சாமர்த்தியத்தையும் பிரயோகித்து அவனுக்குப் பதில் சொன்னபோதிலும் பூச்சாண்டிபோன்ற பெரிய வார்த்தைகளையும், "செல்ஸ்", "க்ளாப்யூல்ஸ்" "ஆர்கனிஸம்ஸ்" என்ற துருக்குபோன்ற பாஷைச் சொற்களையும் சொல்லி, 'கனகு' தட்டிப் பயமுறுத்துவதுபோல் மிரட்டுகிறான்.

"இது கலியுக, ஸம்பிரதாயமும் மேனுட்டு நாகரிக பலனும் வித்தியாமமதையும்" என்று எனது வயது முதிர்ந்த தாத்தா என்னை என் தம்பி போய்விட்டானே என்று அங்குமிங்கும் பார்த்துவிட்டுச் சமாதானப் படுத்தினர்.

ஆனால், இந்த அற்புதமான ஜீவாதாரப் பொருளான பால் என்ற விஷயத்தைப்பற்றி விஸ்தாரமாய்ப் பிறகு கவனிப்போம்.







# ஆளப்பிறந்தவன்

சென்னை-600 008. 44098

மாளவ தேசத்தில் மருதன் என்ற ஒரு குடியானவனிருந்தான் அவனுக்கு பல நாட்கள் வரை குழந்தையில்லாமலிருந்து கடைசியில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது; அந்தக் குழந்தையைப் பார்த்தவர்கள் "இந்தக் குழந்தை அரண்மனையில் பிறக்க வேண்டியது. தவறிப் போய் குடிசையில் பிறந்திருக்கிறது இந்தக் குழந்தை இந்நாட்டையே ஆளப் போகிறது." என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் மருதனுக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. உடனே ஒரு ஜோஸ்யரை அழைத்து வந்து குழந்தையைக் காட்டினான். ஜோஸ்யனும் குழந்தையைப் பார்த்து, இந்தக் குழந்தை இந்நாட்டு அரச குமாரியை மணந்து கொண்டு இந்நாட்டையே ஆளப் போகிறான். ஆனால் இந்தக் குழந்தைக்கு எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்படும்" என்று சொன்னான்.

அது முதல் மருதனும் அவன் மனைவியும குழந்தையை மிக ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வந்தார்கள்.

மருதன் வீட்டிற்கு வந்த ஜோஸ்யன் அந்நாட்டு அரசனிடம் சென்றான் 'அரசே, மருதன் என்ற குடியானவனுக்கு ஒரு பிள்ளை பிறந்திருக்கிறது. அந்தக் குழந்தை சகல லக்ஷணங்களும் பொருந்தியிருக்கிறது. பிற்காலத்தில் இந்த நாட்டுக்கே அரசனாக வந்தாலும் வரலாம் என்று தோன்றுகிறது" என்று சொன்னான்.

இதைக் கேட்ட அரசனுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. ஒரு குடியானப் பையன் அரசனாவதா? என்ன அக்கிரமம். இப்பொழுதே அந்தக் குழந்தையைக் கொலை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நிச்சயம் செய்துகொண்டான்.

மறுநாள் மாறுவேடமணிந்து அந்தக் குடியானவன் வீட்டிற்கு சென்றான் அரசன். அங்கு அந்தக் குழந்தையைப் பார்த்தவுடனே அரசனுக்குத் தூக்கி வாரிப் போட்டது குழந்தையின் முகத்தில் விரகளை ஜொலித்தது.

"நான் ஒரு பெரிய வியாபாரி, எனக்கு எல்லையில்லாத பணமிருக்கிறது ஆனால் குழந்தையே கிடையாது. இந்தக் குழந்தையை எனக்குக் கொடுத்தால் பத்தாயிரம் பவுன் உனக்குத் தருகிறேன்" என்று மாறுவேடம் பூண்டு வந்த அரசன் மருதனிடம் கூறினான்.

மருதன் "ஐயா! எனக்கும் இதுநாள் வரை குழந்தையில்லாமலிருந்து இப்பொழுதுதான் பிறந்திருக்கிறது. பத்தாயிரம் பவுன் எனக்குவேண்டாம். நான் குழந்தையை உங்களுக்குத் தரமுடியாது. குழந்தையை விலைக்கு விற்கும் மனிதனும் உலகில் உண்டா? உமக்கு எப்படி விலைக்குக் குழந்தையைக்கேட்க மனம் துணிந்தது? நீர் உடனே யே சென்றுவிடும்" என்று துக்கத்தோடு கூறினான் மருதன்.

வியாபாரி வேடம் பூண்டு வந்த அரசனுக்கு ஆத்திரம் மூண்டது ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு அரண்மனைக்கு வந்தான் இரண்டு கொலையாளிகளைக் கூப்பிட்டு "மருதன் வீட்டிலிருக்கும குழந்தையை எடுத்து வந்து காட்டுப்பக்கம் கொண்டு போய் கொன்றுவிடுங்கள்" என்று கட்டளையிட்டான்

அன்று இரவு கொலையாளிகள் மருதனுக்குத் தெரியாமல குழந்தையைத் தூக்கிக்கொண்டு காட்டிற்குச் சென்றார்கள். ஆனால் அந்தக் குழந்தையின் முகத்தைப் பார்த்ததும் கொலையாளிகளுக்கே கொல்ல மனம் வரவில்லை. அப்படியே ஒரு மரத்தடியில் தழைகளை ஒடித்துப் போட்டு மெள்ள அதில் குழந்தையை விட்டுவிட்டுச் சென்றார்கள் அரசனிடம் குழந்தையைக் கொன்றுவிட்டதாகக் கூறினார்கள் அரசன் தொலைந்தது சனியன் என்று சந்தோஷப்பட்டான்.

விடிந்ததும் குழந்தையைக் காணாத மருதன் தவித்தான். 'ஹோ, என்று கதறினான். அழுதுகொண்டே அரசனிடம்









சென்று முறையிட்டான் அரசனும் திருட்டைக் கண்டுபிடிப்பதாகக்கூறி பாசாங்கு செய்தான்.

காட்டில் தனியே விடப்பட்ட குழந்தையை காட்டினருகில் வசிக்கும் மற்றொரு குடியானவன் எடுத்து அன்புடன் வளர்த்து வந்தான். குழந்தை வளர வளர அதன் வீரமும் வளர்ந்துகொண்டே வந்தது. வில் வித்தை முதலியவற்றில் தேர்ச்சிபெற்றான் அச்சிறுவன்

ஒருநாள் அரசன் காட்டிற்கு வேட்டையாட வந்தான். வேட்டையாடி களைத்துப் போன அரசன் அருகிலிருக்கும் குடியானவன் வீட்டிற்குச் சென்றான் அங்கு அரசகுமாரன் போன்ற ஒரு பையன் அரசனை வரவேற்றான். அந்தப் பையனைக் கண்டதும் அரசனுக்குப் பழைய ஞாபகம் வந்தது. மருதன் வீட்டில் இருந்த குழந்தை தான் இது. கொலையாளிகள் குழந்தையைக் கொன்றுவிட்டதாக நம்மை ஏமாற்றிவிட்டார்கள் எப்படியாவது இந்தப் பையனைக் கொலை ஏற்பாடு செய்யவேண்டும் என்று நிச்சயம் செய்து கொண்டான்.

உடனே குடியானவனை அழைத்து இந்தப் பையன் யார்? உண்மையைச் சொல்லிவிடு" என்று அதட்டினான். குடியானவன் நடுங்கிக்கொண்டு குழந்தை காட்டின் ஒருமரத்தடியில் கிடந்தது அதை எடுத்து நான் வளர்த்து வருகிறேன்" என்றான்

உடனே அரசன் குடியானவனைத் தனியாக அழைத்து, "நீ வளர்க்கும் பையன் பெரிய அறிவாளி, சிறந்த வீரன். அவனை என் சேனாதிபதியாக நியமிக்கிறேன். உனக்கும் அரண்மனையில் நல்ல வேலை தருகிறேன்" என்று ஆசைகாட்டினான். குடியானவனும் சம்மதித்தான்.

அரசன் ஒரு கடிதத்தை எழுதி அந்தப் பையனிடம் கொடுத்து "இந்தக் கடிதத்தை அரண்மனையில் ராணியிடம் கொடு" என்று பையனிடம் கொடுத்தான். பையன் மிகவும் நல்லவனானதால் கடிதத்தைப் பிரித்துப் பார்க்கவில்லை. கடிதத்தை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குக் கிளம்பினான் அந்தப்பையன். போகும் வழியில் அஸ்தமித்துவிட்டது. இரவு அருகிலிருந்த ஒரு சாவடியில் படுத்துத் தூங்கினான். பன்னிரண்டு மணியிருக்கும். அசந்து தூங்கிக்கொண்டிருந்தான் அந்த சமயத்தில் திருடர்கள் பலர் அங்கு வந்தனர். அந்தப் பையனிடம் திருடுவதற்கு ஒரு சாமானும் கிடையாது. பக்கத்தில் ஒரு கடிதம் மட்டும் கிடந்தது. அதை எடுத்துப் படித்தார்கள்.

"இந்தக் கடிதம் கொண்டு வரும் பையனை உடனே கொலை செய்ய ஏற்பாடு செய்யவும். இவன் நமக்கு ஜன்ம விரோதி" என்று எழுதப்பட்டிருந்தது. இந்தப் பையனைப் பார்த்ததும் திருடர்களுக்குக்கூட மனமிரங்கிவிட்டது. அந்தக் கடிதத்தை எடுத்துக் கிழித்துவிட்டு அதற்குப் பதிலாக, "இந்தக் கடிதம் கொண்டுவரும் பையனுக்கு நம் இளவரசியைக் கல்யாணம் செய்து கொடுக்கவும், தாமதம் வேண்டாம்" என்று எழுதி அதை அவனருகில் போட்டுவிட்டு திருடர்கள் சென்றுவிட்டார்கள்.

பொழுது விடிந்தது. பையன் கடிதத்தை எடுத்துக்கொண்டு அரண்மனை வந்து சேர்ந்தான். கடிதம் ராணியிடம் சேர்ப்பிக்கப்பட்டது உடனே ராணி மந்திரி முதலானவர்கள் ஓடோடியும் வந்து கடிதம் கொண்டுவந்த பையனை வரவேற்றார்கள். அன்றே கல்யாணத்திற்கான ஏற்பாடுகள் நடந்தன. நகரமெங்கும் அலங்கரிக்கப்பட்டது. மேள வாத்தியம் முழங்கியது. குதூகலமாக கல்யாணம் நடைபெற்றது.



வேட்டைக்குச் சென்றிருந்த அரசன், "இனி கவலையில்லை. தொலைந்தான் அந்தப் பயல்" என்ற எண்ணத்துடன் நகரத்திற்குள் நுழைந்தான் நகரமெங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தது ஜனங்கள் அவசர அவசரமாக அரண்மனையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். இவைகளையெல்லாம் பார்த்ததும் அரசன் அப்படியே அசந்துவிட்டான்!

அரண்மனைக்குச் சென்று பார்த்தால் கடிதம் கொண்டு வந்த பையனுக்கும் இளவரசிக்கும் கல்யாணம் நடந்துகொண்டிருந்தது ராணியை அழைத்து விசாரித்தான். ராணி அந்தப் பையன் கொண்டுவந்த கடிதத்தைக் காட்டினாள் அரசன் பேந்தப்பேந்த விழித்தான்!

உடனே அந்தப் பையனை வரவழைத்து, 'நான் என்குமாரியை சிறந்த வீரனுக்குக் கலியாணம் செய்துகொடுக்க நிச்சயித்திருந்தேன் இங்கிருந்து வெகு தூரத்திலிருக்கும் குகையில் ஒரு ராக்ஷஸன் இருக்கிறான். அவன் தலையிலிருந்து மூன்று தங்க ரோமத்தைக் கொண்டுவந்தால் இளவரசியை மணம் செய்து கொடுப்பேன். இல்லாவிட்டால் பேசாமல் ஓடிப்போய்விடு" என்றான்.

உடனே கிளம்பினான் அந்தப் பையன். வெகுதூரஞ் சென்று ஒரு ராஜ்யத்தின் கோட்டை வாயிலை அடைந்தான். கோட்டையைக் காவல் காத்துவந்த சேவகன் "நீ யார்? உனக்கு என்ன தெரியும்?" என்று கேட்டான்.

**பையன்:**— "எனக்கு எல்லாம் தெரியும்"

சேவகன்:—அப்படியானால் சரி உன்னைத்தான் எங்கள் அரசர் தேடிக்கொண்டிருக்கிறார். எங்கள் நகரின் நடுவேயுள்ள ஊற்றுக் குழாயில இதுவரை வந்துகொண்டிருந்த தண்ணீர் திடீரென்று நின்றுவிட்டது. அதன் காரணத்தைத் தெரிவித்தால் அரசன் சன்மானமளிப்பார்.

**பையன்:**—நான் அவசரமாய் போகிறேன். நான் திரும்பிவரும் போது காரணத்தைக் கூறுகிறேன்.

அவனிடம் விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான். வெகுதூரஞ் சென்று மற்றொரு நகரத்தின் கோட்டை வாயிலை அடைந்தான். அங்கிருந்த காவல்காரன், "நீ யார் உனக்கு என்ன தெரியும்" என்று கேட்டான்

முன்போலவே "எனக்கு எல்லாந் தெரியும்" என்றான் பையனும்.

"இந்த நகரத்தில் தங்க மாம்பழம் காய்க்கும் மரம் ஒன்றிருக்கிறது இதுவரை அது தங்க மாம்பழம் காய்த்தது. திடீரென்று நின்றுவிட்டது அதன் காரணமென்ன" என்று கேட்டான் காவல்காரன்.

திரும்பிவரும்போது சொல்லுவதாகக் கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான். போகும் வழியில் பெரிய காட்டாறு இருந்தது. படகின் வழியாகத்தான் அதைத் தாண்டமுடியும். படகில் ஏறி அமர்ந்தான் பையன். படகோட்டி, 'உமக்கு என்ன தெரியும்" என்று காவல்காரர்களைப் போய் கேட்டான்.

எல்லாம் தெரியும் என்று முன்போலவே கூறினான். நான் இந்தத்துடுப்பைக் கையில் எடுத்தது முதல் என்கையிலேயே ஒட்டிக்கொண்டிருக்கிறது. என்ன காரணம்? என்று கேட்டான் படகோட்டி.

பையனும், முன்போலவே திரும்பி வரும்பொழுது சொல்லுவதாகக் கூறினான்.









கஷ்டப்பட்டு அரசன் சொன்ன ராக்ஷஸன் வசிக்கும் குகையை வந்தடைந்தான். அந்த சமயம் ஒரு கிழவிமட்டும்தான் அங்கிருந்தாள். ராக்ஷஸன் எங்கோ சென்றிருந்தான். பையனைப் பார்த்துக் கிழவி, "நீ எங்கு வந்தாய்? சீக்கிரம் இங்கிருந்து ஓடிவிடு, என்மகன் வந்தால் உன்னை அப்படியே முழுங்கி விடுவான்" என்றாள்.

பையன் கிழவியை வணங்கி தான் வந்த காரியத்தைக் கூறினான். வரும் வழியில் காவல்காரர்களும் படகோட்டியும் கேட்ட 'கேள்விகளுக்குப்' பதிலும் கூறும்படி வேண்டினான்.

உடனே கிழவி பையனை ஒரு எறும்பாகமாற்றினாள். நான் என் மகன் வந்தவுடன் சில கேள்விகளைக் கேட்பதுபோல் அவன் தலையிலிருந்து மூன்று ரோமங்களைப் பிய்த்துத் தருகிறேன். கேள்விகளுக்கு அவன் சொல்லும் பதிலை கவனமாய் கேட்டுக்கொள்" என்றாள்.

அஸ்தமித்ததும் ராக்ஷஸன் குகைக்கு வந்தான். சாப்பிட்டு விட்டுத் தூங்க ஆரம்பித்தான். உடனே கிழவி அவன் தலையிலிருந்து ஒரு ரோமத்தைப் பிடித்து இழுத்தாள். ராக்ஷஸன் [illegible]ன்று கதறிக்கொண்டு "எதற்கு என் தலையின் ரோமத்தைப் பிடித்து இழுத்தாய்" என்று அதட்டினான். முதல் காவல்காரன் கேட்ட கேள்வியைக்கூறி நான் இம்மாதிரி சொப்பனங்கள் கண்டேன். அதற்கு என்னவழி" என்று கேட்டாள். அதற்குப் பதிலகூறிவிட்டு தூங்க ஆரம்பித்தான் ராக்ஷஸன். இம்மாதிரி மூன்று தடவை அவன் தலையிலுள்ள ரோமத்தைப் பியித்துஎடுத்து, மூன்று கேள்விகளையும் கேட்டாள் கிழவி. மூன்று கேள்விகளுக்கும் பதில் கூறிவிட்டு இனி என்னை எழுப்பினால் கொன்றுவிடுவேன்" என்று தூங்கிவிட்டான்.

ராக்ஷஸன் அயர்ந்து தூங்கியதும் எறும்பாக இருந்த பையனை எழுப்பிவிட்டாள் கிழவி. மூன்று ரோமங்களையும் கொடுதது கேள்விகளுக்கு விடை தெரிந்துகொண்டாயா? என்று கேடடாள்.

எல்லாம் தெரிந்துகொண்டேன்...என்றுகிழவியைவணங்கி விட்டுக் கிளம்பினான் பையன். படகோட்டியை வழியில் சந்தித்து உன் கையில் இருக்கும் துடுப்பை யாரிடமாவது கொடு. அது அப்பொழுது உன் கையிலிருந்து விலகிவிடும்" என்று சொன்னான். பிறகு தங்கமாம்பழம் காய்த்த நாட்டிற்கு வந்து அரசனிடம் "மகாராஜா, அந்த மரத்தின் அடிவேரில் ஒரு எலி இருக்கிறது. அதுதான் வேரைக் கடித்துக் கொண்டிருக்கிறது. அதைக் கொன்றுவிட்டால் பழையபடி தங்கமாம்பழம் காய்க்கும்" என்றான்.

அரசன் பையனுக்கு ஏராளமான பொருளைக் கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண்டு அடுதத நாட்டிற்குச் சென்றான். அங்குதான் நீர் ஊற்றிலிருந்து தண்ணீர் வரவில்லை. அந்நாட்டு அரசனிடம்சென்று. 'நீர் ஊற்றின் முகத்துவாரத்தில் ஒரு தேரை அடைத்துக்கொண்டிருக்கிறது. அதைக்கொன்றுவிட்டால் முன்போல் தண்ணீர் வரும்" என்றான். அவன் சொன்னபடியே தேரை அடைத்துக் கொண்டிருந்தது. அதை எடுத்தவுடன் நீர் தாரைதாரையாய் ஓடி வந்தது. அரசன் மகிழ்ச்சியடைந்து ஏராளமான திரவியங்களைக் கொடுத்தான் அதையும் பெற்றுக்கொண்டு தங்க ரோமம் கொண்டுவரச்சொன்ன அரசனிடம் சென்றான். மூன்று ரோமங்களையும் கொடுத்தவுடன் அரசனுக்கு ஒன்றும் புரியவில்லை. வாய்திறக்காமல் தன் பெண்ணையும் நாட்டையும் அவனிடம் ஒப்படைத்தான். அன்று முதல் குடியானப்பையன் சிறந்த முறையில் நாட்டை அரசாட்சி செய்துவந்தான்.

—::—

144098

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,
கும்பகோணம்.
(பிராஞ்ச் : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்
கோகுல் கூந்தல் தைலம்
கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.
வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

லோகல் ஏஜெண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்.
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
245, Vysyal St.,
COIMBATORE.

Estd: 1920
சேலம்
மூன்று தாமரை
பீடிகளை உபயோகித்து,,
சந்தோஷமடையுங்கள்
S.A.H
Rgd. No. 2221.
Prop: S. [illegible],
கோட்டை, சேலம் S.I.R.

ஜாதகம்! ✫ ஆருடம்!!
இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விபரம்:- 1 முதல் 3 கேள்விகளுக்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் விவரமாக எழுத ரூ. 35.
குறிப்பு:-வெளிநாடுகளுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்கு திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.
✫
மானேஜர்,
விமல் அஸ்ட்ரோலாஜிகல் ப்யூரோ,
[illegible] P. O. (தென் இந்தியா)

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press. Victory House Mount Road, Madras Editor: C. R. Srinivasan B. A.



ஸ்தாபிதம் : 1895. போன் : 2250.

# ஸுராஜ்மல்ஸ்

வைரங்கள் & நவரத்ன வியாபாரிகள்

313, எஸ்பிளனேட் - மதருஸ்.




# சிறு விளம்பரங்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 5 JUL 1949 MADRAS


## சக்தி ஆருடம்!

தபால், தந்தி இலாகா ஆபிசர் Sri K. S. சுப்பய்யா B. A., 23—5—48ல் எழுதுகிறார்:—"தாங்கள் கூறியபடியே நான் பிரமோஷனுடன் கெஜட் பதவி உத்தியோகம் பெற்றேன."

3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ 5 ஜாதகம் கணிக்க ரூ 2 சக்தி கவசம் ரூ 7—8—0 வி பி பி தனி ஜாதகம் அல்லதுகடிதம் எழுதும் நேரம் தேவை N. B:—வெளி நாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம் P. O. (S. I.)

---

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரியாரின்
## ஆனந்த பற்பொடி (Reg)
(40 வருஷங்களாகப் புகழ்பெற்றது)



சரீரத்துக்கு வாசப்படியான வாய், பற்கள் இவைகளில் தங்கியிருக்கும் பயங்கரமான பற்பல விஷக் கிருமிகளை நாசம் செய்வதுடன், பற்களின் வேர்களை பலப்படுத்தி ஒழுங்காயும், அழகாயும் ரக்ஷிப்பதில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்குமகிடைக்கும் கேட்டாக்கிறும்

ஆனந்த பற்பொடி ஒர்க்ஸ்,
வைத்திய வித்தாச்ரமம் மதராஸ் 4.

---

ஆபீஸ்: ஸ்தாபிதம் 1924.
## பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். 1வருஷ பலன் மாதவாரி எழுத ரூபா 5 ஆருடம் மூன்று கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்
ம ஸ்ரீநிவாஸாச்சாரியார்,
"தபோ நிதி," தியாகராய நகர்,
மதராஸ் 17. தபால பெட்டி 1417.

---

## மனைவாழ்க்கையின் மர்மங்கள்

தம்பதிகளின் வாழ்க்கையைச் சீர்படுத்தும் அருமையான நூல். சு. பி. மதிப்புரையைக் கவனியுங்கள்.

"இந்நாலில் ஒழுக்கத்திற்குகேடு விளைவிக்கக்கூடியனவோ, வெறும் காம உணர்ச்சியைத் தூண்டுவனவோ யாதொன்றும் இல்லை. ஆகவே இந்நூலை வயதுவந்த இளைஞர்கள் அனைவரும் தாராளமாகப் படித்துப் பயனடையலாம். திருமணத்தின்போது இந்நூலைப் பரிசாகவும் வழங்கலாம." மலிவு பதிப்பு ரூ. 3/12/0. த. செலவு 9 அணா. பரிசுபபதிப்பு ரூ. 5/8/0, த-செ. 11அணா.

ஜொஹூஹாஸ் புக் டெப்போ,
460, திருவல்லிக்கேணி ஹைரோடு.
சென்னை 5.

---




---

## இப் பக்கத்தில் விளம்பரம் செய்யுங்கள்.

☆

2"X2" அளவுக்கு கட்டணம் ரூபாய் பத்தே தான்.

---




---



## ஜீவனத பிரகிருதி

1050000 ஜென்ம குண்டலிகள் இருக்கும் பிருகு சம்ஹிதை என்றபுறம்பிரந்தங்களிலிருந்துங்கள ஜென்மகுண்டலியைத் தேடி உங்கள் ஆயுள், வித்தை, தனம் தொழில், உயர்வு, இடமாறுதல், உத்யோகம், பரீக்ஷை முடிவு, வியாபாரம், விவாஹம், சந்தானம், பிரயாணம், லாட்டரி, ரேஸ், ராஜிய வியவகாரம், கடன், ரோக நிவர்த்தி, லாபநஷ்டம், தொழிலில் அனுபவத்தில் நடக்கும் விஷயத்தை தெரியப்படுத்த ரூ. 25. 1வருஷ பலன் மாதவாரியாக எழுத ரூ. 5. ஜனன விவரம்அல்லது எழுதும் நேரம் தேவை.

ஓ அஸ்ட்ராலஜிகல் பீரோ, (Benares)
முகாம். ஸ்ரீ கங்கா பரமேஸ்வரி தேவஸ்தானம், நகரத்துபேட்டை பெங்களூர் 2.

---

| | | | |
|---|---|---|---|
| A. B. C., Talks. | 1 | 4 | 0 |
| ராமானுஜதர்சனம் | 1 | 0 | 0 |
| தீன தயாளு | 0 | 12 | 0 |
| பாலகங்காதர திலக் | 0 | 8 | 0 |
| ஸ்வராஜ்யம் | 0 | 8 | 0 |
| சங்கராச்சாரியார் | 0 | 5 | 0 |
| ஸ்ரீராம ஜனனம் | 0 | 4 | 0 |

தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்:
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.

# சுதேசமித்திரன்

## வாரப்பதிப்பு

## ✡பொருளடக்கம்✡


| | | பக்கம் |
|---|---|---|
| ஒரு சொல் | விந்தியா | 5 |
| தீர்த்தட்டு வார்த்தை | வாரன் | 9 |
| களங்கம் | ஜி எஸ் மணி | 11 |
| யோக க்ஷேமம் | குங்குமம் | 16 |
| காட்டிலே கண்ட காதலி | ப. ராதாகிருஷ்ணன் | 19 |
| கலா மண்டபம் | | 23 |
| களவும் நனவும் | தங்கம்மாள் பாரதி | 27 |
| மூன்று சிநேக மணிகள் | லட்சுமி அம்மாள் | 30 |
| பூர்விகக் கலைச் செல்வம் | 'ரவி' | 32 |
| சொப்பன வாழ்க்கை (தொடர்கதை) | 'ஆர்வி' | 35 |
| பெரிய புராணம் | பி. ஸ்ரீ. | 40 |
| பாலும் பயனும் | | 42 |
| பணம் இருந்தால் பெரியவனா? | ஸ்ரீமதி பி வி பார்வதி | 46 |


"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும், பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.


OFFICE OF ... OF BOOKS
1949
MADRAS


# சுதேசமித்திரன்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

## வாரப்பதிப்பு


Vol. XX] விரோதி௵ ஆனிமீ 6உ ★ 1949-௵ ஜூன்மீ 19உ No. 20


# பிரஞ்சு மிரட்டல்

பிரஞ்சு தில்லுமல்லுகளுக்கு ஒரு வரையறையே இல்லை. பிரஞ்சு இந்திய மக்களின் இயற்கையான அபிலாஷை நிறைவேறுவதற்கு எவ்வாறாவது முட்டுக்கட்டை போட்டே தீர்வதென்று அவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டுவிட்டனர். சந்திரநாகூரின் எதிர்காலத்தை நிர்ணயிக்க இன்னும் சிலதினங்களில் அங்கு சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறவிருக்கிறது அங்குள்ள நகரசபையைதங்கள் கையாட்களைக்கொண்டு நிரப்ப பிரஞ்சு சர்க்கார் படாதபாடுபட்டனர். அந்த சபையை தங்கள் கருவியாகக்கொண்டு சர்வஜன வாக்கெடுப்பை ஒரு மோசடியாக்குவதே அவர்கள் கருத்து ஆனால் அது ஈடேறவில்லை. தங்கள் கையாட்களைக் கிளப்பிவிட்டு மக்கள் மனத்தைக் குழப்ப அவர்கள் நடத்திவந்திருக்கும் புரட்டுப் பிரசாரம் கொஞ்சமல்ல. சந்திரநாகூர் பிரஞ்சு யூனியனுடன் சேர்ந்திருந்தால், இதுவரை அந்த ஸ்தலத்துக்கில்லாத பல வசதிகளையும் செய்து கொடுத்து அதை ஸ்வர்க்கலோகமாக மாற்றி விடப்போவதாகவும் அவர்கள் வெளிச்சம் போட்டார்கள். சந்திரநாகூர் இந்திய யூனியனோடு ஐக்கியமாவதை ஆதரிப்பவர்களுக்குப்போதியபிரசார வசதி மறுக்கவும் அவர்கள் தயங்கவில்லை. சர்வஜன வாக்கெடுப்புக்கான பிரச்னையைத் தொகுப்பதிலும், வோட் செய்யும் முறையிலும் மக்கள் மனத்தைக் கூடியவரை குழப்ப பிரஞ்சு அதிகாரிகள் தங்களுக்குத் தெரிந்த வித்தைகளையெல்லாம் கையாண்டனர் இதோடு சர்வஜன வாக்கெடுப்பின்போது தங்கள் இஷ்டம்போல பித்தலாட்டம் செய்வதை மறைக்கும் பொருட்டு தங்களுக்கு இஷ்டமான "பார்வையாளர்"களை அமர்த்திக் கொள்ளவும் அவர்கள் வெட்கப்படவில்லை. இவ்வளவுக்குப் பிறகும் சந்திரநாகூர் மக்களின் இயற்கையான தீர்ப்பைக் கவிழ்த்துவிட முடியுமென்ற நிச்சயம் பிரஞ்சு அதிகாரிகளுக்கு ஏற்படவில்லை எனவே இப்போது அவர்கள் இன்னொரு தகிடுதத்தத்தில் இறங்கியிருக்கின்றனர்

அதாவது, சந்திரநாகூர் வாக்கெடுப்பை எப்படியாவது ஒத்திவைத்து விடுவதில் பிரஞ்சு அதிகாரிகளின் கவனம் முழுதும் இப்போது திரும்பியிருக்கிறது. இந்த வாக்கெடுப்புத் தேதியை நிர்ணயிக்கும் உரிமை, ஏற்கெனவே பிரஞ்சு அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளபடி. நகர சபையைச் சேர்ந்தது ஜூன் 19-ந் தேதி வாக்கெடுப்பு நடத்துவதென்று அச்சபை முன்பே திட்டமாகத் தீர்மானித்திருக்கிறது எனினும் பிரஞ்சு அதிகாரிகள் அம்முடிவைக் குலைக்க இப்போது பகிரங்கமாக வேலைசெய்கின்றனர். உண்மையில் பிரஞ்சு குடியரசுத் தலைவரே ஒத்திவைப்புக்கு இணங்கும்படி சந்திரநாகூர் நகரசபைக்கு சமீபத்தில் ஒரு செய்தி அனுப்பியது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும். பிரஞ்சு அதிகாரிகளின் அந்தரங்கக் கருத்தை ஊகிப்பது கஷ்டமன்று. வாக்கெடுப்பை இன்னும் சில மாதங்கள் ஒத்திவைத்தால் அதற்குள் மேலும் தங்கள் கையாட்களைக் கிளப்பிவிட்டு சந்திரநாகூரை நிரந்தரமாகத் தங்கள் அடிமையாக்கிக்கொள்ள வழி தேடிவிடலாமென்பதே அவர்கள் நினைப்பாயிருக்க முடியும் மேலும் இப்போது சந்திரநாகூர் இந்திய யூனியனுடன் ஐக்கியமாகவிடுவிட்டால் அடுத்தபடியாக மற்ற பிரஞ்சு இந்திய ஸ்தலங்களும் அவ்வழியைப் பின்பற்றக்கூடும் என்ற பிரஞ்சு பீதியும் இதற்குக் காரணமாயிருக்கக்கூடும். ஆனால் சந்திரநாகூர் நகரசபையினர் பிரஞ்சு பித்தலாட்டத்துக்கு வழிவிடுவதாயில்லை. அவர்களைப் பயமுறுத்த தற்போது பல அருவருக்கத்தக்க முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. ஆனால் பிரஞ்சு மிரட்டல்களுக்கு அந்த நகரசபையினரோ, அங்குள்ள மக்களோ பணிந்துவிடப்போவதில்லையென்பது திண்ணம் இங்குள்ள மற்ற பிரஞ்சு இந்திய ஸ்தலங்களைப்போல் சந்திரநாகூரும் இந்திய சமுதாய உடலின் ஒரு பகுதியே அது ஒரு அந்நிய உடலில் ஒட்டிக்கொண்டு உயிர்வாழ்வதென்பது அபத்தமாகும். எனவே வாக்கெடுப்பில் பிரஞ்சு அதிகாரிகள் பெருவாரியான மோசடி முறைகளைக் கையாண்டாலன்றி, அதன் இறுதியான முடிவு இந்திய யூனியனுக்குச் சாதகமாகவே இருக்குமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.



இரவில் விமானத்திலிருந்து நகரங்களை "ப்ளாஷ்" பல்பு உதவி கொண்டு படமெடுக்கும் அற்புதத்தைச் சமீபத்தில் அதாவது சென்ற 6-ந் தேதி யார்க் ஷயரில் செய்து காட்டினர். குறிப்பிட்ட காலத்தில் ஒளி பரப்பும் பல்புகள் விமானத்திலிருந்து குண்டுகளைப் போலப் போட்டு படமெடுக்கப்பட்டது. இந்தப் பல்புகள் 5 கோடி 'காண்டில்' பவர் உள்ளவை. ப்ருக்லினிலிருந்து எடுத்த படம்.



எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தின் பகுதியிலிருந்து எடுத்த படம்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 JUL 1949
MADRAS




"ஒம்! என்னமோ, எல்லாத்துக்கும் நல்ல விபி வேணும். என்னை மாமியார் இல்லாத இடமாகப் பார்த்துக்கொடுத்தும், ஆயில்யத்திலே பிறந்தும், சுகமில்லே. இங்கே, ஒரு பக்கம் ரிடையராகி நிர்விசாரமாய் இருக்கிற மாமனார். இன்னொருபக்கம் அலக்கழிக்கிற குழந்தைகள். அதுகளுக்குப் பள்ளிக்கூடத்துக்குச் சமையல் பண்ணி சிங்காரித்து அனுப்புகிறதற்குள்ளே தாவு தீர்ந்துவிடுகிறது! நீங்கள் என்னமோ என்னை 'அம்மாமி'ன்னு எண்ணிக்கொண்டு, என் கஷ்டம் அறிகிறதே இல்லே! ஏதோ சின்னஞ்சிறு குடித்தனம் அழகாகச் செய்தோம் என்ற ஆசைக்கே வழியில்லே!"

"பத்மா! குழந்தைகளைமட்டும் தாக்கிப்பேசாதே. எனக்குப் பொறுக்காது! என் அம்மா வியாதியாக்கிடந்தது முதற்கொண்டு நான் அவர்களை வளர்த்துக்கொண்டு வந்து இருக்கிறேன். அவள் போனப்புறமும் ஒரு வருஷம் வளர்த்தேன் என் கைகளாலே—இப்போ உத்தியோகம் பார்க்கவேண்டியிருக்கிறது. அதனால் தான் அவர்களைக் கவனிக்க எனக்கு நேரமில்லே?"

"உம், சொல்லமாட்டீர்களா? அப்படித்தானேயிருக்கும் என்னைப் பெற்று வளர்த்தவர்களுக்கும்!"

"இதை முதலிலேயே சோதித்துப் பார்த்துப் பெண்ணைக்கொடுக்க உன் அப்பா, அம்மாவுக்குப் புத்தியில்லேயோ?"

"உம், கடைசிவரை நான் உங்கள் மனுஷாளைத் தாங்கணும்! நீங்கள் என் அப்பா, அம்மாவைத் தாக்கி எறிந்துபேசணும்! உலகத்து நியாயம் இருக்கே........"

பத்மாவின் பேச்சு முடியவில்லை "கத்திக்கொண்டிரு! எனக்கென்ன!" என்று கூறும் பாவனையில், அவள் கணவன் ராஜு, சைக்கிளை ஒருதள்ளு தள்ளிக்கொண்டு விடுவிடுவென ஆபீசுக்குப் புறப்பட்டு விட்டான்.

கூடத்தில் இருந்த ஏழெட்டு எச்சில் இடங்களையும் சுத்தம் செய்துகொண்டிருந்த பத்மாவுக்கு, கணவனின் அலட்சியம் சாட்டைகொண்டு தன்னை விறுவதுபோல இருந்தது.

இதுபோன்ற காரசாரமான விவாதம் அதற்குமுன் நிகழ்ந்ததில்லை அவ்விருவரிடையே. பத்மாவும் நல்ல பெண்தான். அவனும் நல்லவன் தான். ஆனால் என்ன காரணமோ, கொஞ்ச நாட்களாக அவர்கள் இருவருக்கும் சிறு சிறு புரைசல் எண்ணங்கள் தோன்றி வந்தன. சிறு சிறு விவாதங்கள் நடந்துவந்தன. இன்றோ பேச்சின் தொனியும் காரசாரமாக இருந்தது. விவாதம் வலுத்து இருந்தது.

பக்கத்துவீட்டிலே ராஜமும் அவள் கணவனும் செய்கிற இன்பக் குடித்தனம்போல, தன் குடித்தனம் இல்லையே என்ற குறை பத்மாவுக்கு. அத்தகைய குறை அவளுக்கு ஏற்பட நியாயம் உண்டு என்ற நினைப்பு அவனுக்கு உண்டு. அதனால் அவன் பத்மாவைக் கோபிப்பதில்லை. ஆனால், நடக்க முடியாததைக் குறித்து வாய்க்கு வாய்ச்சொல்லிக் கொண்டு ஆங்காரப்படுவதிலே என்ன பயன்? இந்த அறிவு அவளுக்கு இருக்க வேண்டாமா என்றுதான் அவனுக்கு அன்று கோபம் வந்தது.

தன்னுடைய அன்னை இறந்து போனதால், நாதியற்றிருக்கும் தன் தந்தைக்கும் தம்பி தங்கையருக்கும் செய்யவேண்டியவள் தன் மனைவி தானே? அதை அவள் உணர வேண்டாமா? மறக்கலாமா? தான் செய்துகொண்டிருக்கவில்லையா தன்னுலியன்ற பணிகளை, அதுநாள் வரையில்? தான் உத்தியோகம் மேற்கொண்டதால், தனக்கு முன்பு இருந்த பொறுப்பை மனைவி ஏற்று நிர்வகிக்க வேண்டியதுதானே நியாயம்? ஏன் பத்மாவுக்கு இது தெரியாமற்போய்விட்டது? புக்ககம் வந்த ஆறேழு மாதங்களுள் இவ்வளவு வெறுத்துக்கொள்கிறாளே? இது அழகா? இப்படித்தான் அவன் எண்ணினான்.

அவள் கூண்டுப் புலி—சர்க்கஸ் புலி. அவனோ, வேண்டுமென்றே, அவளைச் சீண்டுகிறான், வெருட்டுகிறான், அடக்குகிறான். அவள் நினைத்தாள் இப்படி!

* * * * *

கணவனின் அலட்சியத்தைக் கொஞ்சநேரம்வரை மறக்க முடியவில்லை பத்மாவுக்கு. ஆனால், அப்புறம் அதை மறக்கடித்துவிட்டது, அவளுடைய சிநேகிதி சீதாவின் வருகை.

இருவரும் பலவிஷயங்கள் பற்றிப் பேசிவரும்போது, "ஏன், சீதா, உன் உடம்பு இவ்வளவு இளைத்திருக்கிறது?' என்று பத்மா அவளைக் கேட்டாள்.

"என் உடம்புக்கென்ன, பத்மா?—அவருக்குத்தான் உடம்பே சரியில்லே. ஆஸ்பத்திரியிலே இரண்டு மாதம்

சேர்த்துப்பார்த்தோம். எத்தனை நாள் அங்கே இருக்கமுடியும்? வீட்டுக்கு அழைத்து வந்தோம், அப்புறமும் அவருக்குக் குணமில்லை. எனக்கு மனசு கவலைதான். அவருக்கு வேண்டியவற்றை நானே செய்தால்தான் எனக்குக் கொஞ்சமாவது ஆறுதலாய் இருக்கிறது. இரவோ, பகலோ, மனசுக்குக்கஷ்டம் தெரிகிறதில்லை, உடம்பை அலட்டிக்கொண்டாலும், அதனால் ஏதோ கொஞ்சம் இளைத்திருக்கும் போலிருக்கு உடம்பு!'

இப்படிச் சொன்னாள் சீதா.

சீதாவின் இந்தப்பதில் 'பத்மாவின் மனதிலே பதிந்தது. அவளுடைய உருகின உருவமும், உருக்கமான சொற்களும் பத்மாவின் கவனத்தை விட்டு அகலவேயில்லை. அன்று முழுதும், சீதாவின் அந்த விடை, பத்மாவின் செயலிலும் பேச்சிலும் நயத்தைப் புகுத்தியவண்ணம் இருந்தது—அன்று மாலை விடுமீண்ட கணவனிடம் பத்மா கடுமைகொள்ள இயலவில்லை.

இந்த விரும்பத்தக்கநிலைமை முறியு முன்பே வேறொரு விவேகப் பேச்சின் ஆட்சியிலே ஈடுபட்டாள் பத்மா.

"பத்மா! பார்த்தாயா என்பெண் எழுதியிருக்கும் கடிதத்தை! இந்தா, படி!" என்று கூறியவண்ணம் அம்மாளு மாமி வந்தாள் இரண்டுநாள் கழித்து.

பத்மா கடிதத்தை வாங்கிப் படித்தாள். நாள் முழுக்கக் காரியம் சரியாயிருக்கிறது—வீட்டிலே மாமியாருக்கு உடம்பு சேர்இல்லை, நாத்தனார்கள் எல்லோரும், பொறுப்போ, நல் எண்ணமோ தமக்கு அவசியமில்லையென்று எண்ணுபவர்கள் எங்கும் எவரிடமும் அதேபோல இருப்பவர்கள் என்னிடம் எப்படி இருப்பார்கள் என்பதைச் சொல்ல வேண்டாம். வேலைக்காரர் கிடையாது வீட்டிலே. இரண்டு வேளைச் சமையல், வேலைக்காரிக் காரியம், வீட்டுக் காரியம், அனைத்தும் நான்தான் செய்கிறேன். ஆனால் என் மனம் திருப்தியாய் இருக்கிறது. எத்தனை பேர் இருந்தாலும். எனக்கு என்று ஏற்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பை உணர்ந்து நான் பெருமை கொள்கிறேன். ஊக்கமுடன் சுற்றி வருகிறேன். நீ கவலைப் பட வேண்டாம்."

இந்தப் பகுதிதான் பத்மாவின் உள்ளத்திலே ஊன்றியது. "பாவம், ரொம்பக் கஷ்டப்படுகிறாள், மாமி!" என்றாள் பத்மா, அங்கலாய்ப்புடன்.

"கஷ்டம்தான்: ஆனால் இந்தமட்டும் குழந்தை விவேகியாயிருக்காளே அதற்கு நான் சந்தோஷப்படணும்! சம்சாரத்துலே புகுந்தியாச்சு: நான் இப்போ வேறே என்ன நினைக்க முடியும்? நினைக்கிறதும் நியாயமன்று!"

இவ்வாறு சொன்னாள் அம்மாளு மாமி. சலனமற்றவளாய், கடிதத்துடன் போய்விட்டாள்.

பத்மாவின் உள்ளத்திலே இரண்டு நாள்வரை, அம்மாளு மாமியும்,



அவள் பெண் சரசுவும் ஆட்சி செய்யலானார்கள்.

நான்கைந்து தினங்கள் சென்றன. தன் அன்னைக்குக் கடிதம் எழுதி நாளாயிற்றே என்று நினைத்துக் கொண்ட பத்மாவுக்கு, எழுதலாமா வேண்டாமா என்ற யோசனை எழுந்தது. எழுத வேண்டியதுதான் என்று அமர்ந்தாள் மேஜையருகே. ஆனால் பேனாவைப் பிடித்தபின் எழுது ஓடவில்லை. "என்ன எழுதுவது?"—இந்தக் கேள்வி விழித்துப் பார்த்தது அவளை. தனக்கு ஏற்பட்டிருந்த அலுப்பு சலிப்பு யாவற்றையும் தன் அம்மாவுக்கு எழுதி தீர்ப்பது என்று போன வாரம் தீவிரமாகக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்த அவள், இன்று என்ன எழுதுவது என்ற யோசனையில் ஆழ்ந்தாள்! மோட்டுவளையைப் பார்த்தாள். ஆம், அவள் மனம் குழம்பி இருந்தாள்.

கடைசியில், அன்னைக்குக் கடிதம் எழுத வேண்டாம் என்று நிச்சயித்தாள். பொழுது போக்குக்காகவும், பேனா காகிதம் எடுத்துவிட்ட தோஷத்திற்காகவும், திருச்சியிலிருக்கும் தன் சிநேகிதி லட்சுமிக்குக்கடிதம் எழுதினாள் அவள்.

அந்தக் கடிதத்திற்கு லட்சுமி பதில் எழுதினாள். பத்மா எழுதின பத்து நாட்களில் வந்துவிட்டது விடைக் கடிதம்.

"என் மாமியார் தங்கமானவர். காலையில் சமையல் செய்துவிடுவார்—எல்லோருக்கும் பரிமாறி விடுவார். காலைச்சமையலை என்னிடம் ஒப்புவிக்கும் வழக்கமேயில்லை—எல்லோரும் சொல்வதுபோல நான் அதிருஷ்டசாலிதான். கணவரும் மாமியாரும் என்பால் அந்தரங்கமான அன்பு கொண்டவர்கள்.

ஆனால் என் மனதிலுள்ள ஓர் குறையைச் சொல்லிவிட விரும்புகிறேன். என் நாத்திகள் இருவரும் கொஞ்சம் புஸ்— புஸ். அவர்களுக்குக் குளிக்க நீர் இறைத்து வைத்து, உடுக்கவேண்டிய ஆடைகளை எடுத்துவைத்து, பழைய துணிகளைத் தோய்த்து உலர்த்தி மடித்து எடுத்து உள்ளே வைத்து, இன்னும் அவர்களுடைய குழந்தைகளைக் குளிப்பாட்டி அலங்கரித்து, மற்ற குற்றேவல்பல செய்து என் காலைப்பொழுதையும் மற்ற பொறுப்பான வேலைகளையும் விணாக்குகிறேன்—ஆம், வீணாக்குகிறேன் பொழுதை. இவர்களுக்கெல்லாம் சிசுருஷைகள் செய்யவேண்டியிருப்பதால், என் மாமியாருக்கு நான்செய்யும் ஒத்தாசை, குறைவு. குற்றேவல்கள் செய்வதிலேயே என் பொழுது சரியாகிவிடுவதை அறியாத அக்கம் பக்கத்தார், "அந்தப் பெண்ணுக்கு



என்ன அதிர்ஷ்டம்! மாமியார் காலையிலே சமைத்துப் பரிமாறி சகலமும் செய்துவிடுகிறாள். எளிதான இரவுச்சமையல்தான் நாட்டுப்பெண்ணுக்கு!" என்கிறார்கள். அதைக் கேட்கையிலேதான் என் மனசிலே சுருக்கென்றது.

நாத்திமார்க்கான சிசுருஷைகளையும் மற்ற பொது அலுவல்களையும் இரவுச் சமையலையும் செய்வதிலே அன்றாடப்பொழுது கழிந்து போவதால், உயிருக்குயிராய் மதித்த வீணையைத்தொடவும் முடியாமலும், புஸ்தகம்வாசிப்போம், பாட்டுப் பாடுவோம் என்ற ஆசைகளுக்கு வழியில்லாமலும் போய்விட்டது என்றால், மாமியாருக்குக் கூட மாட இருந்து சமையலுக்கு அரைத்துத் திரித்தாவது ஒத்தாசைசெய்யமுடியக் கூடாதா? வயதானவருக்குச் செய்யாமல் யார் யாருக்கோ செய்கிறோமே என்ற என்மனக்குறை வெளியாருக்குத் தெரிகிறதா? என் மாமியார்தான் அறிவார். "எத்தனை என்று நீயே செய்யமுடியும் அம்மா?" என்று கூறும் என் மாமியார்தான் என்னை நன்கு அறிவார். என் கணவரோ உத்தமர், விவேகி."

லட்சுமியின் இந்தக்கடிதம் படிக்கும்போது, பத்மாவுக்கு மனதை என்னமோ செய்தது. கண்களில் நீர் துளித்தது. கடிதத்தை உள்ளே வைத்துவிட்டு யோசனை செய்தாள்.

அவளுடைய சிந்தனை சீறிற்று அவள் மனம் சீரிய வழியிலே செல்லத் தொடங்கிற்று.

மாலையில் வீடு வந்தான் ராஜு. அன்று காலையிலும் அவர்களிடையே ஒரு சிறு புரைசல் எழுந்திருந்தது. அதனால் அவனுடன் முகங்கொடுத்துப் பேசவெருவிய பத்மா, ஒரு காகிதத்தை அவனிடம் கொடுத்தாள். நகைப்புக் குறிப்புக் கண்களிலே தெறிக்க ராஜு அதைப் படிக்கப் புகுந்தான். அவன் படிக்கத்தொடங்கினதும் கூச்சமுடன் இப்பால் வந்துவிட்டாள் பத்மா

கடிதம் திடீரென்று இப்படி ஆரம்பமாயிற்று. அது பத்மாவின் எழுத்துத்தான்—அவள் பேச்சுத்தான்.

"புருஷனுக்காக மட்டும் இரவு பகல் உழைத்து உடலும் உள்ளமும் உருகிப்போகிறாள் ஒரு சிநேகிதி. அவள் சீதா.

"உண்மையான அதிகாரமும் சலுகையும் செல்வாக்கும் ஒரு சிலர்பால் இருக்க, உழைப்புப் பொறுப்பை மட்டும்தான் ஏற்று, நானே ராணி" என்ற பெருமிதங்



கொண்டு உடலை வாட்டிக்கொள்கிறாள் மற்றொருவள். அவள் சரசு.

"ஊரார் கண்களுக்கெல்லாம் அதிர்ஷ்டசாலியாகவிளங்கும் லட்சுமி, அந்தோ, குடத்தில் விளக்கென இருக்கிறாள். அவள் கஷ்டமும், அவள் பெருமையும், யாரும் அறியார்.

"நான்? ஊரார் கண் முன்னே, வீட்டு யஜமானியாய்த் திகழ்கிறேன். "பாவம், சிறிசு. வீட்டுப் பொறுப்பெல்லாம் அவளுக்கு" என்ற புகழ்மாலை எனக்கு. சுதந்திரமாய். இந்த இல்லத்திலே ஆட்சி செலுத்தும் எனக்கு, அவர்கள் மூவரும் படும் கஷ்டத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு இல்லை.

என்னை மன்னிக்கவேணும். தங்களுக்கு ஏற்றவள் நான் இல்லை, "ராஜாத்தி" இல்லை நான், என்று நீங்கள் நினைக்கத்தொடங்கி விட்டீர்களோ என அஞ்சுகிறேன். என்னை மன்னிப்பீர்களா?"

கடிதத்தைப் படித்து முடித்த ராஜு புன்னகை பூத்தான். பத்மாவைத் தேடிக்கொண்டு வந்தான், சமையலறைக்கு.

"நீ ராஜாத்தியில்லை என்று யார் மறுக்கமுடியும் பத்மா? நான் ராஜு இல்லையோ?" என்றான் சிரிப்புடன்.

"அப்படியும் சொல்லாதவள் தானோ?" என்றாள் அவள், தலை நிமிராமலே.

"இல்லை: நல்லவளுந்தான். நல்ல பசுவுக்கு ஒரு சூடு, நல்ல பெண்ணுக்கு ஒருசொல். நீதான் இவ்வளவு சீக்கிரத்திலே உன்னை திருத்திக் கொண்டுவிட்டாயே!" என்று கூறி புன்சிரிப்புச் சிரித்தான், ராஜாத்தியின் புருஷனான ராஜு.

"நல்ல பசுவுக்கு ஒரு சூடு—ஆனால் எனக்கு மூன்று சூடு வேண்டியிருந்தது! ஆயிரம் சொல் வேண்டியிருந்தது!" என்று பதிலளித்தாள் பத்மா. அந்த வார்த்தைகளின் உட்கருத்து ராஜுவுக்கு விளங்கவில்லை. எனினும் சிரித்து வைத்தான்.

"ஒருசொல்லா?" என்று நினைத்துப் பார்த்தவாறே, வெட்கமுற்றவளாய் சிரித்தாள் பத்மா. அந்தச் சிரிப்பின் அர்த்தமும் அவனுக்கு வேற்று எண்ணம் தோற்றுவித்தது! அப்போதும் ஒரு சிரிப்புச் சிரித்து வைத்தான்!



சென்ற வாரம் டேராடூனில் நில, கடல் விமானப் படைகளுக்கு உத்தியோகஸ்தர்களைப் பயிற்சி செய்வதற்கான ராணுவக் கழகத்தை இந்தியாவின் உதவி பிரதம மந்திரி சர்தார் படேல் திறந்து வைத்தார். அவருக்கு முன்பு ராணுவம் அணிவகுத்துச் சென்று வணக்கம் செய்வதை இப்படம் காட்டுகிறது.



டெர்பியில் 'நிம்ப்ஸ்' என்ற குதிரை முதல் பரிசு பெற்றது. எதிர்பாராத விதமாக "நிம்ப்ஸ்" மேற்படி பந்தயத்தில் ஜெயித்தது அனைவருக்கும் ஆச்சரியத்தை உண்டாக்கியது.






31

## விச்வாஸத்தாலும் உய்யலாம்

★

நதிக்கரையில் யோகி ஒருவர் எப்பொழுதும் நிஷ்டையில் இருந்து கொண்டிருந்தார். அவ்வழியாக அடிக்கடி பால் தயிர் விற்கச் சென்று கொண்டிருந்த பெண் அவரைக் கவனித்தாள். யோகிக்கு ஆகாரம் கொடுப்பாரில்லையே என்று மனமிரங்கிப் பிரதிதினமும் பாலை ஒரு மண் பாத்திரத்தில் வைத்துச் சென்றாள். இப்படிப் பல மாதங்கள் கழிந்த பிறகு நதியில் வெள்ளம் பெருக ஆரம்பித்தது. பாலை வழக்கம் போல் யோகிக்கு நேரத்தில்கொண்டு சேர்க்க முடியாமல் பெண் ஒரு நாள் தாமதித்து வந்தாள். யோகி அவளை 'ஏன் இத்தனை தாமதம்?' என்று சினந்து கேட்டார். 'நான் இருந்த கரைக்கு ஓடம் வந்து சேரத் தாமதமாய்விட்டது? இந்த வெள்ளத்தில் நான் எப்படி இறங்கி வரமுடியும்?' என்று பெண் சாந்தமாகப் பதில் சொன்னாள். யோகி 'ராம நாமத்தைச் சொல்லிக்கொண்டு இறங்கினால் தண்ணீர் தானே விலகிவிடுகிறது. ஓடம் செய்யும் உதவி நாமம் செய்யாதா?' என்று மறுபடியும் பரிக்கோபத்தில் சொல்லி வைத்தார். பெண் 'அப்படியே ஆகட்டும்' என்று நமஸ்கரித்துப் போய்விட்டாள்.

மறுநாள் யோகிக்கு நேரத்தில் பால் வந்து சேர்ந்தது. வழக்கமாக வந்த பெண்ணை 'இன்று ஓடக்காரன் தாமதம் செய்யவில்லையா?' என்று கேட்டார். 'தாங்கள் நேற்று உபதேசித்த நாமத்தைச் சொல்லிக்கொண்டு வெள்ளத்தில் இறங்கினேன். சொன்னபடி ஜலம் விலகிவிட்டது. ஓடக்காரனுக்காக நான் காக்கவில்லை' என்று பெண் பதில் சொன்னாள். யோகிக்கு ஆச்சரியமுண்டாயிற்று. ஆனால் அவள் சொன்னதை நம்பமுடியாமல் நாமத்தைச் சொல்லிக்கொண்டு அவளை முன்னே இறங்கச்சொல்லித் தான் பின்னே சென்றார். அவள் 'ராம' என்று சொல்லிக்கொண்டே தைரியமாக வெள்ளத்தில் இறங்கி வேகமாக நடந்துகொண்டே போக ஜலம் விலகிற்று அவளும் அக்கரை போய் விட்டாள். யோகி நாமத்தைச் சொல்லிக்கொண்டே இறங்கினாலும் பயத்தால் வஸ்திரம் நனைந்துவிடுமோ என்று அதை மேலே இழுத்துக் கொண்டே சிறிது சிறிதாக ஆழத்தில் இறங்கினார். ஜலம் மாரளவு கழுத்தளவாகக் கடைசியில் வெள்ளமே அவரை அடித்துக் கொண்டு போவதை மறு கரையில் சேர்ந்திருந்த பெண் பார்த்து 'ஐயோ எனக்கு உபதேசம் செய்த குருவை வெள்ளம் கொண்டுபோகிறதே' என்று அலறினாள். யோகி 'என் உபதேசத்தில் நீ விச்வாஸம் கொண்டாய். அதனால் உய்ந்தாய். உபதேசித்தும் அதில் எனக்குப் பூரண விச்வாஸம்வராமல் அவநம்பிக்கையே கலந்துவந்தது. அதனால் நான் அமிழ்ந்தேன்' என்றாராம்.

இது ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறிய நீதிக் கதைகளில் ஒன்று. அழியக்கூடிய தேகத்திற்கு வந்த நோய்க்குப் பரிகாரம் வேண்டி வைத்தியரிடம் செல்கிறோம். அவர் தன் மருந்திலும் சிகிச்சையிலும் பரிபூர்ண நம்பிக்கைவைக்காமல் மனம் உளைந்து கொண்டிருந்தால் நோய் குணமாகாது என்று சொல்லிவிடுகிறார். உடல் நோயைத் தீர்க்கும் வைத்தியரிடம் அவ்வளவு நம்பிக்கை கொள்ள வேண்டியது அவசியமானால் ஆத்ம நோயைத் தீர்க்கும் ஆசார்யன் உபதேசத்தில் நம்பிக்கை இன்னும் தீவிரமாகவே இருக்கவேண்டும் என்பதை இந்துமதமும் அடுத்தடுத்துச் சொல்லுகிறது. ஏசுகிருஸ்துவும் இதையே வற்புறுத்தினார் என்பது பைபிளால் நன்கு தெரிகிறது.

ஆழ்வார்களுள் ஒருவர் தன் நெஞ்சை (மனதை) நோக்கி 'எவ்வளவு பாவம் செய்தாலும் கருணாமூர்த்தி அதைக் குணமாகக்கொண்டு காப்பான். தேர்த்தட்டிலிருந்து கூறிய கீதோபதேசத்தையே நம்பி இரு' என்று உபதேசிக்கிறார்.

**குன்றனைய குற்றம் செய்யினும்**
**குணம்கொள்ளும்**
**இன்றுமுதல் ஆதலால்**
**நெஞ்சே!—என்றும்**
**புறன் உரையே ஆயினும்**
**பொன்ஆழிக் கையான்**
**திறன் உரையே சிந்தித்து இரு.**

[குன்று—சிறுமலை, பொன் ஆழிக் கையான்—கண்ணன், திறன் உரை—கீதை.]

பந்தத்தை உண்டாக்குவது ஆசை. ஆசையில் பிறக்கும் அகங்கார மமகாரங்களால் ஆத்மஸ்வரூபம் மறைக்கப்படுகிறது. ஆசையை அகற்றவும் ஆத்மாவாகிய தன் ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளவும் அதுவே மோட்சமாகிற பலனைப் பெறவும் நிஷ்காம கருமமே ஏற்ற உபாயம். அதைப்போல் சிறந்தது வேறெதுவுமில்லை என்று அடிக்கடி நான் சொல்லிவந்த உண்மையை வாதம் செய்து உணர்ந்துகொள்வது என்பது எல்லோருக்கும் ஸாத்யமாகாது. நிஷ்காம கருமத்தைச் செய்பவர்களைப் போலவே அதை விச்வாஸத்தோடு நம்புகின்றவர்களும் விடுதலை அடைவார்கள் என்று கண்ணன் சொல்லுகிறார்.

**ஏவர் விருப்போடு இழவின்றி**
**என் மதத்தை**
**மேவி முயல்வார் விடப்படுவார்—**

(இ-ள்) ஏவர்—எவர்கள், விருப்போடு—பிரியத்தோடு, இழவு இன்றி—(வருத்தம்) அசிரத்தை இல்லாதவர்களாய், என் மதத்தை—எனது இந்த ஸித்தாந்தத்தை, மேவி முயல்வார்—நம்பிக்கையோடு தழுவி அனுஷ்டிக்க முயல்பவர்களும், விடப்படுவார்— (பந்தத்தினின்றும்) விடுதலை பெறுவார்கள்.

3
**யே மேமதம் இதம் நித்யம்**
2
**அநுதிஷ்டந்தி மாநவா:**
3 4
**ச்ரத்தாவந்தோ நஸூயந்தோ**
4
**முச்யந்தே தேபி கர்மபி:**

(இ-ள்) யே—எந்த, மாநவா:—மனிதர்கள், இதம்-இந்த, மே மதம்—என் ஸித்தாந்தத்தை. நித்யம்—எப்போதும், அநுதிஷ்— —அனுஷ்டிக்கிறார்களோ, (யேச)—பின்னும் எவர்கள், ச்ரத்தா வந்த:—விச்வாஸமுடையவர்களோ, (யேச)— பின்னும் எவர்கள், அநஸூயந்த:—(இதில்) த்வேஷமற்றவர்களோ, தே அபி—அவர்களும், கர்ம பி:—கருமங்களால், முச்யந்தே-விடுபடுகிறார்கள்.

'பலனில் இச்சைகொள்ளாமல் சகல கருமங்களையும் பரமாத்மாவிடம் ஒப்புவித்து அகங்காரம் மமகாரம் இரண்டும் இன்றிச் செய்வது' எனது மதம் என்று குறிக்கப்படுகிறது. (1) இம் மதத்தை அப்படியே அனுஷ்டிப்பது. (2) அது இயலாதவர் சித்தாந்தத்தில் பூரண விச்வாஸம் கொண்டு அனுஷ்டிக்க முயல்வது. (3) சித்தாந்தத்தில் நம்பிக்கை பிறக்காதவர் அதில் துவேஷ புத்தியாவது கொள்ளாதிருப்பது. இம் மூன்றில் முந்தியதைக் கைக்கொண்டவர்கள் பந்த நிவர்த்தியடைவார்கள் என்று முன்னேயே பல இடங்களில் சொல்லப்பட்டது. அவர்களைப் போலவே பிந்திய இரண்டைக் கைக்கொண்டவர்களும் பந்தத்தினின்றும் விடுபடுவார்கள்.

தமிழ்ப் பாடலில் 'என் மதத்தை மேவி முயல்வார்' என்று வரும் தொடரில் இம் மூன்று வகுப்பாரும் அடங்கியிருப்பது உய்த்து உணரத் தக்கது. உதாரணமாக மஹாத்மாவின் அஹிம்ஸைக் கொள்கையை அரசியலில் செயலில் கடைப்பிடித்தவர்கள் ஒரு சிலர். அவ்வாறு அனுஷ்டானத்தில் மேற்கொள்ள முடியாதபோதிலும் அதையே விடுதலைக்கு ஏற்ற உபாயம் என்று பரிபூரணமாய் நம்பி இருந்தவர் சிலர். அதுவும் இல்லாதவர் 'அறிவும் அநுபவமும் நிறைந்த மஹான் சொல்வதைத் தப்பு என்று சொல்வதற்கு அற்பர்களாகிற நாமா தகுதியுடையவர்கள்' என்று துவேஷமோ அஸூயையோ கொள்ளாமல் இருந்தோர் சிலர். இம் மூன்று சாராரும் காயிகமாகவோ (அனுஷ்டானத்தாலோ) வாசிகமாகவோ, மானசீகமாகவோ அஹிம்ஸா ஸித்தாந்தத்தைத்தழுவியவர்களாகிறார்கள். இம் மூன்று சாராரும் மஹாத்மா விரும்பிய பலன் கிட்டுவதற்கு ஏதோ ஒரு அளவில் உதவி செய்தவர்களாகிறார்கள். அவ்வாறே கண்ணன் கீதையில் கூறிய கர்மயோக ஸித்தாந்தத்தை அனுஷ்டானத்தில் கொண்டவர்களைப் போலவே வாசிகமாகவோ மானஸிகமாகவோ தழுவியவர்களும் உலக ஜனங்கள் நல்வழிப்பட ஒரு அளவில் உதவுவதால் அவர்களும் பந்த நிவர்த்தி பெறுவார்கள் என்று சொன்னார்.

பின் பந்த நிவர்த்திபெற்று உய்ய மாட்டாதவரும் உண்டு என்பதை அடுத்த பாடலில் தெரிவிக்கிறார்.

**.................................பாவத்தால்**
**ஆங்கவர்கள் அல்லார்**
**அறிவழிந்து மூடராய்த்**
**தீங்குமார்வர் என்றே தெரி.**

(இ-ள்) அவர்கள் அல்லார்—(எனது ஸித்தாந்தத்தை) எந்தவிதத்திலும் தழுவாதவர், பாவத்தால் அறிவு அழிந்து-(தமது) பாவச் செய்கையால் அறிவு கெட்டு, மூடராய்-மூடர்களாகி, தீங்கு அமர்வார்-அனர்த்தத்திற்கு ஆளாவார்கள், என்று தெரி-என்பதைத் தெரிந்துகொள்.

3 4
**யே த்வேதநப்ஸூயயந்தோ**
2
**நாநுதிஷ்டந்தி மேமதம்**
4
**ஸர்வஜ்ஞாந விமூடாம்ஸ்தாந்**
3 4
**வித்தி நஷ்டா நசேதஸ:**

(இ-ள்) யே மாநவா:—எந்த மனிதர்கள், இதம் மே மதம்-இந்த எனது சித்தாந்தத்தை, ந அநுதிஷ்டந்தி-அனுஷ்டிப்பதில்லையோ, யேச-பின்னும் எவர்கள், அப்யஸூயந்த: (இதில்) அஸூயை கொண்டவர்களாய், வர்த்தந்தே-இருக்கிறார்களோ, தாந்-அந்த, ஸர்வஜ்ஞான விமூடாந்-ஞானமேயில்லாத மூடர்களை. நஷ்டாந்-ஸத்தை இழந்த, அசேதஸ:—(சடப் பொருளுக்கு ஒப்பாகக்) கெட்டுப் போனவர்களாக, வித்தி-அறி.

சித்தாந்தத்தை அனுஷ்டிக்கவும் செய்யாமல் அதை துவேஷித்தும் பழித்தும் வாழ்பவர் 'அவர்கள் அல்லார்' என்ற தொடரால் குறிக்கப்பட்டனர். சுதந்திரப் போராட்டம் நம் தேசத்தில் நடந்துகொண்டிருந்த போது அதில் நேரடியாக ஈடுபடுவதைத் தவிர விவேகிகளுக்கு வேறு மார்க்கம் இல்லை என அறிவாளிகள் எடுத்துக் காட்டினர். சிலர் போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டனர். பலர் அவர்களின் கொள்கைகளை ஒப்புக்கொண்டு அநுதாபம் காட்டினர்.

அவ்வாறும் செய்யாமல் சிலர் இயக்கத்தையே பழித்தனர். இயக்கத்தில் சேர்ந்தோரிடமும் அவர்கள் வகுத்த கொள்கைகளிலும் துவேஷம் பூண்டு, பலன்கிட்ட வொட்டாது எவ்வளவோ விதமான இடையூறுகளைச் செய்தனர். அதன் பலன் என்ன வாகிறது? உயர்ந்த லட்சியமாகிய சுதந்திரம் வரத் தடை செய்தவராகிறார்கள். அல்லது சுதந்திரம் வரத் தாமதம் செய்தவராகிறார்கள் அதனால் தாமும் தம் பின் சந்ததியாருக்கும் பெருங்கேட்டை விளைவித்தவராகிறார்கள்.

அவ்வாறே ஆஸுரப் பிரகிருதிகள் தாமஸ ராஜஸகுணங்களுக்கு அடிமையாகி சாமானிய பலன்களைப் பெறுவதில் ஆசை கொண்டு பந்த நிவர்த்தியைத் தெரிவிக்கும் வேதத்தினுடைய உத்தர (வேதாந்த) பாகத்தை நம்புவதில்லை. உத்தரபாகத்தையும் அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும் மஹான்களையும் பழிக்கிறார்கள். ஹிரண்யன், ராவணன் முதலாயினோர் இவ்வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அத்தகையவர்கள் ஏற்கனவே தமக்கிருக்கக் கூடிய அறிவையும் மழுங்கச் செய்து நாளடைவில் தாமும் பெருங்கேட்டிற்கு ஆளாகிறார்கள்

'கீதையில் சொல்லப்படும் கர்மயோக சித்தாந்தத்தில் விச்வாஸமுடையவனாய் உய்ந்துபோதல் அல்லது அதுவும் இல்லாதவனாய் நசித்துப்போதல்; இவ்விரண்டைத் தவிர வேறு நடுவழி அல்லது குறுக்கு வழி இல்லை' என்பது இவ்விரண்டு சுலோகங்களால் உறுதியாகத் தெளிவாகச் சொல்லப்பட்டது

---



# கனகம்!

## சி. எஸ். மணி

கிராமத்தின் ஆழ்ந்த அமைதியிலே அந்தி வேளை மயங்கி நின்றது மேல் வானத்தின் தகதகப்பான செந்நிறம் கொஞ்சம் கொஞ்சமாக கருநீலமாக மாறத் தொடங்கியது கூடடைந்த பட்சிகளின் கோலாகலத்தின் கடைசி ஒலியும் காற்றில் கலந்தது.

கட்டிலில் படுத்திருந்தவன் மெதுவாக எழுந்து தள்ளாடிக்கொண்டே போய் சற்று தூரத்தில் இருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டேன். பெரியதொரு மலையை நகர்த்திவிட்டவனைப்போலே களைப்பு மேலிட்டது. உடம்பு சற்று குணமடைந்திருந்தும் தலைக்கனம்மட்டும் குறையவேயில்லை.

சிரமம் மேலிட்டவனாய் 'அம்மாடீ' என்று அயர்ச்சியுடன் முணுமுணுத்தேன்.

"இப்போது உங்களுக்கு உடம்பு எப்படியிருக்கு மாமா? கஞ்சி கொண்டுவரட்டுமா?" என்று மதுரமான குரல் ஒலியுடன் ஜானகி என் எதிரே வந்து நின்றாள்.

அவளைப்பார்த்துப் புன்முறுவல் செய்தேன்.

"ஏன் ஜானகி? இன்னும் முகம்கூட கழுவிக்கொள்ளாமல் இருக்கே? தலையையும் இப்பொதான் வாரிப் பின்னிக்கொண்டாயோ" என்றேன்.

"ஆமாம்: கஞ்சியில் என்னெய் வழிகிறதாக்கும்? அதுக்குக்கூட நேரமில்லாமல் அப்படி விழுந்து விழுந்து காரியம்பண்ணறேன்!" என்று சிரித்தாள்.

"ஐயோ பாவம்!"

"அரைமணியில் ஆகக்கூடிய வேலை அசட்டிற்கு ஒன்றரை மணியில் முடியும்: நான் அசடுதானே?"

"ஜானகி! நீயா அசடு? பெருமைக்காகச் சொல்லிக்கொள்கிறாயாக்கும்!"

"பெருமை போறுது. பெருமை! வீட்டிலே ஐம்பது பேர்கள் இருந்தாலும் எங்கம்மா ஐந்து நிமிஷத்திலே பெரிய ஸமாராதனைச் சமையல் மாதிரி, ஒண்டியாகவே, ஜமாய்த்து விடுவாள். வீட்டு வேலை பூராவையும் பத்து நிமிஷத்துலே 'பரபர'வென்று பண்ணி முடித்துவிட்டு ராமாயணத்தையோ—பெரிய புராணத்தையோ—கையில் வைச்சுண்டு உட்கார்ந்துவிடுவாள். இப்போது ஆத்திலே நாம் இரண்டே பேர்தான் இருக்கோம் அப்பவே பிடித்து உங்களுக்குத்தான் இத்தனை நாழி கஞ்சிவைத்துக்கொண்டிருந்தேன் கஞ்சி அலம்பிக்கொள்ள இன்னும் பொழுது காணவில்லை" என்றாள்.

நான் வாய்விட்டுச் சிரித்தேன் "மற்றபேர் கஞ்சிவைத்தால் வியாதிக்காரன் குடிக்கும் கஞ்சிமாதிரியே இருக்கும்; நீ வைக்கிறாயல்லவா! எனக்கென்று, 'ஸ்பெஷ'லாக, நாக்கிற்கு ருசியாக, 'கம—கம' வென்று மணத்துடன் இருக்கவேண்டுமென்று சிரத்தையுடன் வைத்திருப்பாய்! பாவம்! அது தான் நேரமாகிவிட்டது: என்றால் தான் உனக்கு இத்தனை சிரமம்!" என்றேன்.

ஜானகி முக மலர்ச்சியுடன், "உங்களுடன் பேசி என்றால் ஜெயிக்க முடியுமா என்ன?" என்றாள்.

"உன் மாதிரி அழகாய் பேச என்னால் முடியுமா ஜானகி?"

அப்படியென்ன அழகு சொட்டி வழிகிறது என்னிடம்?"

"அப்படி யென்ன சாதுர்யம் பொங்கித் ததும்புகிறது என்னிடம்?"

"போங்கோ மாமா!"

"போடி ஜானகி!"

'களுக்' கென்று சிரித்துக்கொண்டே அவள் 'சரட்'டென்று உள்ளே ஓடினாள்.

அந்தக் கிராமத்துப்பள்ளிக்கூட உபாத்தியாயராக நான் வந்து இரண்டு மூன்று வருஷங்கள் ஆகின்றன. வந்த புதிதிலேயே எனக்குத் தங்கள் வீட்டில் குடியிருக்க இடவசதி செய்து கொடுத்தவர்கள் ஜானகியின் பெற்றோர்தான். மிகவும் பெருந்தன்மை படைத்தவர்கள்: குணத்தில் தங்கக் கம்பிகள்; அளவற்ற தயாள சித்தம் அவர்கள் எல்லோரிடமுமே உண்டு. முதலில் நான் மட்டுமே தனியாகத்தான் வந்தேன்: ஜாகை கிடைத்ததும் என் மனைவியையும் அழைத்துக்கொண்டேன் ஜானகியின் பெற்றோர் தெய்வப் பிறவிகளாகவே இருந்தனர்: அவர்கள் எங்களை அன்னியர்களாக பாவிக்கவேயில்லை; அந்தக் குடும்பத்துடன் ஒன்றாகவே பழகி வந்தோம்.

இப்போது என் மனைவியும் ஊரில் இல்லை: பிறந்தகம் போய்விட்டாள். ஜானகியின் பெற்றோரும் ஒரு வார காலமாக கிராமத்தில் இல்லை. ஏதோ அவசர காரியமாகப் புறப்பட்டுப் போனவர்கள் இன்னம் திரும்பவில்லை. ஜானகி தினந்தோறும் அவர்களை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்துபோகிறாள்.

நானும், ஜானகியும் மட்டும் ஒருவருக்கொருவர் துணையாக இருந்து வந்தோம்

அவள் பெற்றோருக்கு ஒரே பெண்; நல்ல புத்திசாலி: படிப்பில்-பேச்சில் வீட்டுவேலைகளில்—எல்லாவற்றிலுமே வெகுதுடி. அவள் சாதுர்யத்தைக்கண்டு நான் ஆரம்பமுதலே வியந்து வந்தேன்; கிராமாந்திரத்தின் புராதனமான பழக்க வழக்கங்களும், பட்டணவாசத்தின் நாகரீகச் சின்னங்களும் அவளிடம் கலந்தே காணப்பட்டன பழமைக்கும், புதுமைக்கும் இடையே இரண்டையும் இணைக்

கும் சங்கிலியெனத் திகழ்ந்தாள் ஜானகி. எல்லாவற்றிற்கும் மேலாக அதிரூப ஸௌந்தர்யம் படைத்தவள். பதினெட்டு வயதேயானபோதிலும் செழிப்புடன் வளரும் காட்டுக்கொடி போல் 'தளதள'வென்று வளர்ந்திருந்தாள்.

நாலைந்து நாட்களாக எனக்கு நல்ல ஜுரம் காய்ந்தது: இப்போது தேவலை; ஜானகியின் அன்புமிகுந்த சிசுருஷைகள்தான் என் உடம்பை குணமாக்கியதாகச் சொல்ல வேண்டும்: அத்தனை அன்பு—அவ்வளவு கனிவு காட்டினள் என் மனைவியே பக்கத்தில் இருந்து கவனித்திருந்தால் கூட அவ்வளவு பிரியமும், சிரத்தையும் காட்டுவாளோ என்றுகூட சந்தேகப்பட்டேன்.

'அதற்குள் என்ன ஆழ்ந்தயோசனை ஸார்?' "என்று சொல்லிக்கொண்டே ஜானகி வந்தாள். இனிமை மிகுந்த அவள் குரல் என்னைக் குதூகலத்தில் ஆழ்த்தியது.

நிமிர்ந்து நோக்கினேன்: கையில் கஞ்சிப் பாத்திரத்தைப் பிடித்துக் கொண்டு நின்றாள் நன்றாக முகம் கழுவி, நெற்றியின் நடுவிலே அழகாகத் திலகம் வைத்துக் கொண்டிருந்தாள். அந்தப் பங்கஜ வதனத்திலே பௌடரையும் வெகு லேசாகப் பரப்பியிருந்தாள்.

என்னைப் பார்த்துப் புன்சிரிப்புக் கொண்டாள்: "இப்போது எப்படியிருக்கேள், பாருங்கள், மாமா! நான் வழ—வழா—கொழ—கொழா என்றிருந்தால் நான் வைத்த கஞ்சியும் 'அப்படித்தானிருக்கு' என்பீர்களோ என்று பயந்துகொண்டு முகம் அலம்பி பொட்டு வைத்துக்கொண்டு வந்தேன்: வாஸனையாக் இருக்கோன்னோ?" என்று கேட்டாள்.

"கஞ்சிக்கும் கொஞ்சம் ஸோப்புப் போட்டாயோ—இல்லையோ?" என்றேன்.

"அதற்கு இனிமேல் இந்த வாத்யாரிடம் தான் கற்றுக்கொள்ளவேண்டும்; குருவுக்கு மிஞ்சின சிஷ்யை ஆகிவிடலாமோ?"

என்னை அறியாமலேயே 'கல கல' வென்று சிரித்தேன்.

"அடியம்மாடியோ! பலே போடு போடுகிறாயே? உம்! நாளைக்கு உன்னைக் கட்டிக் கொள்கிறவனை நீ என்ன பாடு படுத்திவைக்கப் போகிறாயோ! 'அவன் உன்னையும் மிஞ்சினவனாக இருந்தால்தான் பிழைத்துப் போய் சொல்லுவான்" என்றேன்

"இருந்தாலும் உங்கள் மாதிரி அவ்வளவு மோசமாய் இருக்கமாட்டேன் நான்; உங்கள் மாமி லேசுவாயிருக்கிறாள் என்பதற்காக நீங்கள் மாமியைப் படுத்திவைக்கும் பாடு யார் சொல்லுவதோ?" என்று கேட்டாள்.






உள்ளூற திடுக்கிட்டேன். வெளிக்கு—"நடப்பதற்கு நேர் விரோதமாகச் சொல்லுகிறாயே?" என்றேன்.

"நடக்கும் விதம் எனக்கு நன்றாகத் தெரியுமே!" என்றாள்.

"என்ன தெரியும்? சொல்லேன்!"

"அந்த மாமி உங்களிடம் அகப்பட்டுக்கொண்டு முழிக்கிறாள்—என்று தெரியும்!"

"என்ன செய்கிறேன் அப்படி?"

"எதற்காக உங்கள் மாமியை இப்ப மாசக்கணக்கில் பிறந்தகத்திலேயே விட்டுவைத்திருக்கிறீர்களாம்? என்ன கோபம்?"

"கோபம் ஒன்றும் இல்லையே! அங்கே போய் இருக்க ஆசைப்பட்டாள்: விட்டு வைத்திருக்கிறேன்: ஆசைதீர இருந்துட்டு வரட்டுமே? என்ன அவசரமாம் இப்போ?"

"வருகிற பேச்சையேதான காணுமே என்று கேட்கிறேன்? பிறந்தாத்து ஆசை இப்படித் தீரவே தீராத ஆசையா என்ன உங்க மாமிக்கு? போய் எத்தனை மாஸமாச்சு?"

"நீயேதான் சொல்லேன்?"

"கிட்டத்தட்ட ஒன்பது மாசம் ஆகிறது. ஒன்பது மாஸமாகியும் பிறந்தகத்து ஆசை இன்னும் தீரவில்லை யென்றால் விசித்திரமாகத்தான் இருக்கிறது: நீங்கள் சொல்லுகிறது?" என்றாள் நிஷ்டூரமாக.

"நீயேதான் சொல்லேன்!"

"நீங்கள் ஒன்றுமே சொல்லாமல் கொள்ளாமல்நானே என்னத்தைச்சொல்லுவது? ஆருடமா!"

"அதைத்தான் சொல்லேன்!"

"போங்கோ மாமா; உங்கள் பேச்சே எப்போதும் இப்படித்தான்!" என்றாள் நிஷ்டூரமாகவே.

எப்படியோ ஆரம்பித்த பேச்சு என்னிதத்திலோ, எனக்கு முற்றிலும் விரோதமான பாதையில் செல்லுவதை உணர்ந்தேன். வேறு வழியின்றி எதிர்க்கத் துணிந்துவிட்டேன்

"என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய் ஜானகி? தானாகப் பழுக்காத பழத்தை தடிகொண்டு அடித்தா பழுக்கவைப்பது?' முடியுமா? தானாக வராதவளைப் போய் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வரச் சொல்லுகிறாயா என்னை?" என்றேன்.

"அப்படியென்றால் உங்க மாமி தானாகவேயா பிறந்தகம் போனாள், இப்போது, தானாகவே திரும்பிவர?"

"பின்னே நான்தான் அவளைத் துரத்தினேன் என்கிறாயா!"

"எனக்கு ஒன்றுமே தெரியாதென்று நினைத்து விட்டீர்களா பின்னே?" என்றாள் என்னை அலட்சியமாகப் பார்த்தபடியே.

மறுபடியும் தோல்வி எனக்குத் தான், நெஞ்சு அடித்துக்கொள்ளத் தொடங்கியது.

"என்ன தெரியும் உனக்கு?" என்று கேட்டேன் அசட்டுச் சிரிப்புடனே.

"உங்க மாமி ஊருக்குப் போவதற்கு முதல் நாள்தான் உங்களுக்குள் ஏக இரைச்சலும், சண்டையும்—அழுகையும்—கோபமுமாய் அமர்க்களப்பட்டதே? மறந்துவிட்டேளா?" என்றாள் விஷமச் சிரிப்புடனே

வாஸ்தவத்தில் மறந்துதான் விட்டேன். மேலும் வளர்த்த இஷ்டமில்லை எனக்கு.

"பின்னே அவள் மட்டும் அப்படிச் சொல்லலாமோ?" என்று கேட்டேன் நிஷ்டூரமாக.

"இவ்வளவு பிரமாதமாக நினைக்கும்படி என்ன சொல்லிவிட்டாளாம்?"

"என்னமோ சொல்லி இகழ்ச்சியாக ஏசினாள் அதையெல்லாம் டைரியிலா குறித்துவைத்துக்கொண்டிருக்கிறேன்?"

அந்த மட்டில்தான் எனக்கே அப்போது ஞாபகம் இருந்தது. நானே என் மனைவியை மன்னித்துவிட்டேன். ஆயினும் அசட்டு வைராக்யம் அவளை அழைத்துவர முடியாமல் குறுக்கே விழுந்து தடைசெய்து அற்ப விஷயத்தை அனுவசியமாக வளரச் செய்துவிட்டது.

"இத்தனைக்கும் அடிப்படைக் காரணம் நீங்களாய்தான் இருப்பீர்கள்!" என்று தீர்மானமாய் சொல்லி முடித்துவிட்டாள் ஜானகி

"பெண்ணுக்குப் பெண் அல்லவா? பரிந்துதான் பேசுவாய்" என்றேன்.



"ஆண்கள் தம் அதிகாரத்தை ஸ்தாபித்துக்கொள்வதிலேயேதான் எப்போதும் கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள்!"

"ஸரி: அப்படியேதான் வைத்துக் கொள்: நான் சொன்னேன். அவளும் பதிலுக்குச் சொன்னாள்; நானே துரத்தினேன் அவள் போனாள் போனாளே— அவளாகத்தான் என்னிடம் திரும்பிவந்தால் கௌரவம் குறைந்துபோய் விடுமாமோ? அத்தனை அகம்பாவம்!" என்று கத்தினேன்.

"வரச்சொல்லி நீங்கள் ஒருவரிகூட எழுதாமல் எப்படி வருவது மாமா?"

"அவள் எழுதினால்தானே நான் எழுதுவதற்கு?"

"போனதே பிடித்து உங்க மாமி உங்களுக்கு எழுதவேயில்லை என்பதை நான் நம்பத் தயாராயில்லை! எந்தப் பொம்மனாட்டியானாலும் ஸரிதான் —புருஷனுக்கு எழுதாமல் இருக்கமுடியாது!", என்று ஒரே போடாய் போட்டாள் ஜானகி

"அடி போக்கிரி!" என்று ஆச்சர்யம் தாங்க முடியாமல் கூவி விட்டேன் என்னையும் அறியாமலேயே ஸந்தோஷம் கிளம்பி, 'பளிச்' சென்று அவள் முதுகிலே ஒரு அன்பான 'ஷொட்டு' வைத்துக்கொண்டே......" இந்த சங்கதியெல்லாம் உனக்கு எப்படித் தெரியும் ஜானகி? பலே கைகாரியாக இருக்கிறாயே? உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறவன் பெரிய அதிர்ஷ்டக்காரப் பயலாய்தான் இருக்க வேணும்!" என்றேன்

அவள் மனதைக் கொள்ளை கொள்ளும் வகையில் கன்னங்குழியச் சிரித்தாள்.— போங்க, மாமா; அந்த மாமி உங்களுக்கு வாழ்க்கைப் பட்டதில் நீங்கள்தான் பாக்கியவான்: நானாக இருந்தால்......?....." என்று மேலும் ஏதோ சொல்ல ஆரம்பித்தவள் சட்டென்று உதட்டைக் கடித்துக்கொண்டு நாணினாள்: உடனே உள்ளே போகக் கிளம்பினாள்.

"அதுக்குள்ளே எங்கே கிளம்பிவிட்டாய்? உட்காரேன்-போகலாம்" என்றபடியே அவள் கையைப் பற்றி இழுத்து நிறுத்தினேன்.

அவள் கையை விடுத்துக்கொண்டாள்.

"உங்களுடன் ஸரிக்குச் சரியாக உட்கார்ந்துகொண்டு வம்படிக்க என்றால் ஆகாது மாமா: காரியம் இருக்கிறதே!"

இத்தனை நாழி நீ பேசியதெல்லாம் வம்பில்லாமல் வேறென்னவோ?" என்றேன்

"ஆமாம்: உங்களுக்கென்ன வேலை! என்னோடு கட்சியாடமட்டும் உங்கள் உடம்பில் தெம்பு இருக்கிறதாக்கும்? பாவம்: உங்க மாமிக்கு 'உடம்பு ஸரியாக இல்லை' என்று ஒரு வரி எழுதிப்போடாமல் என்னோடு பேச்சுப் பேசுகிறேளே-பேச்சு, உங்க மாமிக்குத் தெரிந்தால் என்ன வேதனைப்படுவாள் தெரியுமா?"

"உன்னோடு நான் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தாலோ!" என்று கேட்டேன்.

"ஆமாம்: இந்த இடக்குப் பேச்சைத்தான் கண்டது! உங்களுக்கு உடம்பு ஸரியில்லாத இந்த ஸமயத்தில் உங்க மாமிபக்கத்தில் இருந்தால் எவ்வளவு ஆறுதலாயும், ஆதரவாயும் இருக்கும். தெரியுமா? ஏனிந்த வைராக்கியம் உங்களுக்கு மாமா?"

"உன்னைவிட ஆதரவாக அவள் இருந்து விடுவாள் என்று நான் நினைக்கவேயில்லை. ஜானகி!"

"ஆச்சு! ஆரம்பித்துவிட்டீர்களா! நான் போகிறேன்!"

போகும்போது அவள் சும்மாப் போகவில்லை: வெகு ஒய்யாரமாக என்மீது ஒரு பார்வையை விசிவிட்டு ஒயிலுடன் நடந்துபோனாள்.

மேலும் இரண்டு நாளில் என் உடம்பு முற்றிலும் தேறிவிட்டது.

கூடத்தில் சாய்வு நாற்காலியைப் போட்டுக்கொண்டு அமர்ந்திருந்தேன்.

மாலை நான்கு மணியாகி இருந்தது.

கையில் புஸ்தகத்தைப் பிரித்தபடி வைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் அதில் கவனமே இல்லை. மனதிலே குறுக்கும் நெடுக்குமாக என்னென்னவோ பின்னல்கள், ஏதேதோ உருவமற்ற கனவுகள். எதைப்பற்றியோ உள்ளம் அலைபாய்ந்து கொண்டிருந்தது.

கூடத்தின் வேறொரு மூலையிலே ஜானகி உட்கார்ந்துகொண்டு குனிந்த தலை நிமிராமல் கையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். கொஞ்ச நேரத்தில் அதையும் முடித்து விட்டாள்.

இருந்த இடத்தை விட்டு எழுந்திராமல் அப்படியே சிறிது நேரம் மௌனமாக அமர்ந்திருந்தாள்.

"அம்மாவும் அப்பாவும் இன்னும் வரக்காணோமே!" என்ற சொற்கள் அவள் வாயிலிருந்து புறப்பட்டன, எங்கேயோ பார்த்தபடிதான் மெதுவாகப் பேசிக்கொண்டாள்.

நான் ஒன்றும்பேசவில்லை. அவள் என்னிடம் அதைச் சொல்லவுமில்லை.

சரேலென்று எழுந்து சமையல் அறையில் நுழைந்தாள். பாத்திரங்கள் சிலவற்றை உருட்டினாள், மறுபடியும் கூடத்திற்கு வந்தாள், சற்று இப்படியும் அப்படியுமாக நின்று பார்த்தாள். அவளுக்கும் பொழுது போகவில்லைபோலிருக்கிறது.

அங்கேயே ஒரு பக்கமாய் உட்கார்ந்து, கற்களை வைத்துக்கொண்டு 'அம்மானை' ஆடத்தொடங்கினாள்.

காய்கள் 'சலக்—சலக்' கென்று சப்தித்தன. அவற்றை ஒன்றிரண்டாகவும், பற்பலவாகவும், சேர்த்தும், தனித்தனியாகவும் உயர வீசி வீசி வெகு லாகவமாகக் கையில் ஏந்தும் அழகைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருந்தேன். க்ஷணத்தில் விசைப் பிடிக்கும் கைச் சுருக்கைக் கண்டு வியந்தேன்.

சிறிது நேரத்தில் அதுவும் அலுத்து விட்டதுபோலிருக்கிறது: நிறுத்தி விட்டாள்.

"ஜானகி! உனக்கு 'ஸ்கிப்பிங்' விளையாடத் தெரியுமோ?" என்று கேட்டு அங்கே நிலவியிருந்த நிசப்தத்தைக் கலைத்தேன்.

புன்சிரிப்புடன் அவள் தலையைத் தாள், என்னை நோக்கி அந்தக் கரிய—பெரிய விழிகள் என் உள்ளத்தை சுழட்டியடித்தன. "எங்கே? அதையும் பார்க்கலாம்!" என்றேன்.

"போங்கோ, மாமா! சின்னஞ்சிறு பெண்ணா நான், கயிறு விளையாட!" என்று சொல்லி வெட்கத்தினால் தலை குனிந்துகொண்டாள்.

"அப்போ நீ கிழவியா?"

"போங்கோ, மாமா—நான் மாட்டேன்!"

பிகு ஸம்மதத்தின் அடையாளம் என்பதை நன்றாய் அறிவேன்.

"பரவாயில்லை, ஆடு. நான் மட்டும் பார்க்கிறேன். வேறு யாரிடமும் நீ ஆடினதாகச் சொல்லவே மாட்டேன்" என்று 'தாஜா'ப்பண்ணினேன்.

அவளுக்கும் விளையாட்டிலே மனசு பாய்ந்துவிட்டது போலிருக்கிறது. எழுந்து போய் கயிற்றைக்கொண்டு வந்து 'ஸ்கிப்பிங்' ஆடத் தொடங்கினாள்.

மேலும் கீழுமாக, அவளைச் சுற்றி, கயிறு அதிவேகமாகச் சுழலத் தொடங்கியது: ஆகாசத்திற்கும், பூமிக்குமாகச் சுழன்று சுழன்று பறந்தது; 'சடீர்—சடீ'ரென்று தரையைச் சாட்டை வாங்கியது. அதன் நடுவே ஜானகியும் சுழன்றாள். பிரமிக்கத்தக்க விதத்தில், ஒரே மூச்சிலே, பற்பல விதமாக ஆடிக்காட்டினாள்.

ஸ்வாரஸ்யமான கட்டத்தில் 'டக்' கென்று நிறுத்திவிட்டாள். அவளுக்கு மூச்சு வாங்கியது: நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின.

"ஏன்?" என்றேன்.

"போதும், மாமா: என்னால் முடியவில்லை; முகம் கழுவிக் கொள்ளப் போகவேண்டாமா? நாழியாச்சே!" என்று சொல்லியபடி நிற்காமல் போய்விட்டாள்.

சிறிது நேரத்தில் மீண்டும் திரும்பினாள்.

"ஆயிற்று அல்லவா?" என்று கேட்டேன்.

'ஆயிற்று' என்கிற பாவனையில், பரதநாட்டியக்காரியைப் போலே, தலையைக் கிறுகிறென்று ஆட்டினாள்.

"பரத நாட்டியம்கூடத் தெரியும் போலிருக்கே?"



"போங்கோ— மாமா! நல்ல வம்பு!"

"தலைச்சிங்காரம் கூட முடிந்துவிட்டதுபோலிருக்கிறதே!"

"இனிமேல் முகச்சிங்காரம்தான் பாக்கி!" என்று சொல்லி அதற்கும் ஆரம்பித்தாள்.

முகத்தில் ஸ்னோவைப்பூசினாள்: அதன்மேல் பௌடரை லேசாகத் தடவிக்கொண்டாள்; நெற்றியிலே வளைந்து நீண்டிருந்த இரு புருவங்களுக்கும் நடுவிலே ஒரு தம்படி அளவிற்கு சாந்துப்பொட்டு இட்டுக் கொண்டாள்: ஒரு சிறிய ஈர்க்குச்சியின் நுனியிலே அஞ்சனத்தை எடுத்து. வெகு லாவண்யத்துடன் மலர் விழிகளுக்கு அடியில், கீழ் இமையிலே, கீற்றுப்போல் வெகு ஸன்னமாக இழுத்துவிட்டாள்: இரு புருவங்களிலும் இழுத்து மேலும் அழகுபெறச்செய்தாள். முன் நெற்றி மயிரை மீண்டும் ஸரிப்படுத்திக் கொண்டாள்.

ஆயிற்று; கண்ணாடியை வைத்துக் கொண்டு அதில் தன் முகத்தை இப்படியும் அப்படியுமாகத் திருப்பித் தானே அழகுப்பார்த்துக் கொண்டாள்.

கண் இமைக்காமல் நானும் அவளைக் கவனித்துக் கொண்டேயிருந்தேன். அவள் அழகு என் உள்ளத்திலே ஏதோ கிளர்ச்சியை உண்டாக்கிவிட்டது.

"ஜானகி!" என்றேன் பரவச மிகுதியால்.

அவள் என்பக்கம் திரும்பி, பல் வரிசை வெளியில் தெரியும்படி சிரித்துக்கொண்டே "எப்படி?" என்று கேட்டாள்; அவள் கன்னக் கதுப்புகளில் விழுந்த குழி என்னைக் கிறுக்கனாக்கிவிட்டது.

"ஜானகி! என்னைக் கல்யாணம் செய்துகொண்டு விட்டேன்!"

"போங்கோ மாமா!" என்று நாணினாள்; மீண்டும் ஏதோ நினைத்துக் கொண்டவளைப் போலே, என்னைப் பார்த்துச் சிரித்து, "உங்களை பண்ணிக் கொண்டால் — என்னையும் பிறந்த வீட்டுக்குத் துரத்தி விடுவீர்கள்!" என்றாள்.

"என் பிறந்த வீடு இதுதானே? நீ வேறு எங்கே போவாயாம்! நான் இங்கேயே இருக்கும்வரையில் நீ என்னை விரட்டாமல் இருந்தால் போறுதா, ஜானகி!" என்றேன்.

அவள் பதில் சொல்லவில்லை.

வாசலில் யாரோ ஒருத்தி புஷ்பம் விற்றுக்கொண்டு போனாள்.

"பூ ஒன்றுதான் பாக்கி, ஜானகி!" என்றேன் அவளைப் பார்த்து.

"வாங்கிக் கொடுத்தால் மாட்டேனென்றா சொல்லப் போகிறேன்?" என்றாள் மோகனச் சிரிப்புடனே.

இரண்டணாவுக்கு கதம்பம் வாங்கி அவள் கையில் கொடுத்தேன். மறு நிமிஷம் அது அவள் கூந்தலின் நடுவில் அமர்ந்துகொண்டு அழகுக்கு அழகு கொடுத்தது கதம்பம்.

"அந்த ரதியும், ரம்பையும் இப்போது உன்னைக் கண்டால் உன்னிடம் அடங்காத காதல் கொண்டு விடுவார்கள். ஜானகி!" என்று பரவச உணர்ச்சி மிகுந்து சொல்லியபடியே அவள் இரு கரங்களையும் பற்றிக்கொண்டேன்.

'வெடுக்'கென்று கைகளை என் பிடியிலிருந்து உதறிக்கொண்டு 'விருட்'டென்று அவள் உள்ளே ஓடிவிட்டாள்.

திகைத்துப்போய் அப்படியே நின்றுவிட்டேன்.

மறுபடியும் அவள் வருவாளென்று எதிர்பார்த்தேன்.

அவள் வரவில்லை. அறைக்குள்ளிருந்து அவள் விசும்பும் ஒலி தெளிவாகக்கேட்டது.

பதறிப்போய் உள்ளே ஓடினேன்.

முந்தானையில் முகத்தை மறைத்துக்கொண்டு ஜானகி அழுதுகொண்டிருந்தாள்.

"ஏன் ஜானகி? இதென்ன திடீரென்று இப்படி......?" என்று கொண்டே அவள் ஸமீபம் நெருங்கினேன்.

நல்ல பாம்பு படமெடுப்பதைப் போலே அவள் தலைநிமிர்ந்து என்னை நோக்கினாள்: அந்த முகத்திலே சொல்லமுடியாத அவமானம்—கோபம்—வெட்கம் முதலிய பல உணர்ச்சிகளும் பொங்கிப் பொங்கி வழிந்தன.

"வேண்டாம், மாமா: போய்விடுங்கள்: இனிமேல் நெருங்கிப் பழகாமல் இருப்பது நல்லது..." என்று 'பளிச்'சென்று சொல்லிவிட்டாள்.

பேயறைந்ததுபோலே உணர்ந்து பேச்சின்றி நின்றுவிட்டேன் வெலவெலத்துப் போய் அந்த அறையை விட்டு வெளிப்பட்டு என் இடத்திற்கு வந்து 'தொப்'பென்று சாய்ந்துவிட்டேன்.

பிள்ளைகளின் நல்வழிக்காகப் பாடம் சொல்லிக் கொடுக்கும் எனக்கு நல்ல பாடங் கற்பித்தாள் ஜானகி.

அற்ப புத்தியைக் காட்டிவிட்ட பின்னர் அவளிடம் மறுபடியும் மனம் விட்டு எவ்வாறு பழகுவேன்? சபல சித்தத்தை வைத்துக்கொண்டு அவளுக்குச் சமானம் ஆவேனா?

அவளிடம் மன்னிப்பு கேட்கக்கூட எனக்கு வார்த்தைகள் அகப்படவில்லை; மனமிடிந்து போய் உட்கார்ந்திருந்தேன்.

இரவின் அமைதி சகிக்க முடியாமல் இருந்தது. விளக்கேற்றி வைக்கக் கூடத் தோன்றாமல் இருட்டிலேயே உட்கார்ந்திருந்தேன்.

சிறிய பெட்ரூம் விளக்கைக் கையில் வைத்துக்கொண்டு ஜானகி வந்தாள்.

"இந்த இருட்டிலா உட்கார்ந்திருக்கிறீர்கள், மாமா! என்ன செய்கிறீர்கள் இங்கே?" என்று அவள் வியப்புடன் வினவினாள்.

தலை குனிந்தபடி—"ஒன்றுமில்லை; சும்மாத்தான்" என்று முனகினேன். அவளை நிமிர்ந்து நோக்கவும் தைர்யமில்லை எனக்கு.

"சாப்பிட வாருங்கள்: நேரமாயிற்றே!" என்று அழைத்தாள்.

"எனக்குப் பசியில்லை—ஜானகி; நீ போய் சாப்பிடு."

'ஏன் மாமா? என்மேல் கோபமா?' என்று கபடமற்றுக் கேட்டாள் ஜானகி.

வெகுக் கஷ்டப்பட்டு அவளை நிமிர்ந்து பார்த்தேன். "நீ என்மேல் கோபித்துக்கொள்ளாமல் இருந்தால் போதும் ஜானகி" என்றேன்.

"வாருங்கள் மாமா; கொல்லைப் புறம் தனியே போக எனக்குப் பயமாயிருக்கு" என்று குழைவுடன் கெஞ்சி என்னைத் துணைக்கு அழைத்தாள்.

பெருமூச்சுடன் எழுந்தேன்; கையுடன் பேனாவையும், எழுதுவதற்கு ஒரு பேப்பரையும் எடுத்துக்கொண்டேன்.

"பேனாவும் பேப்பரும் எதுக்கு? கதை எழுதப்போறேளா?" என்று சிரித்தபடி கேட்டாள் ஜானகி.

"எங்காத்து மாமிக்குக் கடிதம் எழுதப்போறேன்!" என்றேன்.

அவள் வியப்புடன் என்னைப் பார்த்தாள். "வரச்சொல்லி எழுதப் போறேளா?" என்று கேட்ட அவள் குரலிலே அளவற்ற ஆவலும் குதி போட்டதை உணர்ந்தேன்.

"கடிதம் கண்டவுடனே புறப்பட்டு வரச்சொல்லி எழுதப்போகிறேன்" என்றேன் அமைதியுடனே.

ஜானகியின் மலர்ந்த வதனத்திலே புன்னகை பூத்தது: "நல்லகாலம்!" என்று மெதுவாகச் சொன்னாள்.

யாருக்கு?



# யோக க்ஷேமம்

துங்குமம்

## 4

'வழி தெரிந்ததாடியம்மா. வா, உட்கார். ஊரில் இருக்கிருயோ?' என்ருள் அங்கு வந்த இந்திராவைப்பார்த்து சேஷிப்பாட்டி.

'ஊரிலில்லாமல் எங்கே, பாட்டி போய்விடுவேன்? அப்படித்தான் போனாலும் சொல்லாமல் போய்விடுவேனு?' என்ருள் இந்திரா.

'ருக்கு, விமலா, கமலா, எல்லோரும் அமெரிக்காவுக்குப் போகலாமாவென்று யோசித்துக்கொண்டிருக்கிருர்கள். ஒருவேளை நீயுந்தான் அங்கே போய்விட்டாயோ என்று யோசித்தேன்' என்று சிரித்துக்கொண்டே சொன்னுள்சேஷிப்பாட்டி.

'எல்லாங்கிடக்க நிடுநிப்பென்று அமெரிக்காவில் என்னவேலை பாட்டி நமக்கு ஏதாவது ஸ்தானீகர்பதவியா? அல்லது ஏதாவது பெரிய தொழிற்சாலை இருந்து தொழில் நுணுக்கத்தைத் தெரிந்துகொண்டு வரப்போகிருேமா? அல்லது பணம்தான் ஏதாவது கொட்டிக்கிடக்கிறது பொழுதுபோக்காக உலகம் சுற்றிவிட்டு வரலாம் என்பதற்கு? நமக்கு என்ன வேலை பாட்டி அமெரிக்காவில்?'

'அதென்னமோ. பேப்பரில் போட்டிருந்ததாம் அமெரிக்காவில் ஒருவர் பெரிய வீடு ஒன்று கட்டப் போகிருராம் அதில் மொத்தம் நானூற்று நாற்பது மாடிகள் இருக்குமாம். நாலு லட்சம் பேர் வசிக்கலாமாம். சுமார் ஆயிரம் கடைகள் அதற்குள்ளேயே இருக்குமாம். அதுமின் மாத்திரமில்லை கோவில். ஆஸ்பத்திரி எல்லாம் இருக்குமாம் அதிலேயே. நமக்கு வேண்டியதெல்லாம் அதிலேயே கிடைக்குமாம் பட்டணத்தில் இப்படி வீட்டுக்குக் கஷ்டப்படுகிறேமே. அங்காவது குடி போய்விடலாமா என்று யோசிக்கிருர்கள் அவர்கள். ஒருவேளை நீயுந்தான் அந்த யோசனையில் இறங்கிவிட்டாயோ என்று பார்த்தேன்.'

'அதற்கு அமெரிக்காவுக்குப் போக வேண்டுமா என்ன பாட்டி அந்த மாதிரி வீடுகள் 'பென்னேபட்டினத்தில் இல்லையா என்ன? அதைத்தான் நானும் சொல்ல வந்தேன் . நீங்களே பிரஸ்தாபித்துவிட்டீர்கள் நாங்கள் குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரர் எங்களைக் காலிசெய்யும்படி நோட்டீஸ் கொடுத்துவிட்டார். மூன்று மாதமாக 'இவருக்கு' (கணவர்) ஓய்ச்சலொழிவில்லைபாவம். காலையில் தூங்கிஎழுந்திருக்கவேண்டியது. ஒன்பது மணி வரையில் போர்ஷன் தேடவேண்டியது அதற்குமேல் வீட்டுக்கு வரவேண்டியது. அவசர அவசரமாய் ஸ்நானம் செய்துவிட்டு, உட்கார்ந்தது தெரியாமல் சாப்பிட்டுவிட்டு ஆபீஸுக்கு ஓடவேண்டியது, சாயங்காலம் திரும்பி வரும்போது இன்னும் சில இடங்களைப் பார்த்துக்கொண்டு ராத்திரி ஒன்பது மணிக்கு வரவேண்டியது, சாப்பிடவேண்டியது. படுத்துக்கொள்ளவேண்டியது. மறுநாளும் இதேதான் அதுமாத்திரமா? ஒருவர் வருவார். மாம்பலத்தில் சரோஜினித் தெருவில் ஒரு இடம் காலியிருக்கிறது அவர்கள் கொஞ்சம் பணத்தாசை பிடித்தவர்கள். நீ வாடகை எதுவாக இருந்தாலும் பரவாயில்லை என்கிருய் அட்வான்சும் கொடுப்பதாகச் சொல்கிருய் அந்த இடம் உனக்குக் கட்டாயம் கிடைக்கும் ஆனல் உடனே போய் முடித்துக்கொண்டு விடுவது நல்லது. அதற்கு ரொம்ப போட்டி இருப்பதாகக் கேள்வி என்று சொல்லிவிட்டு வீட்டின் நம்பரையும் சொல்லுவார். 'உடனே இவர் 'கடுமையான ஜுரம்' என்று ஆபீசுக்கு லீவ் லெட்டர் எழுதி அனுப்பிவிட்டு மாம்பலம் கிளம்பிவிடுவார் திரும்பி வந்ததும் கேட்டால், 'அங்கே இருப்பவர்கள் இன்றே, நாளைக்கோ காலி செய்வதாகச் சொல்லிக்கொண்டிருந்தார்களாம். ஆனல் அவர்களுக்கு வேறு இடம் அகப்படவில்லையாம். அவர்களுக்கு வேறு இடம் அகப்பட்டால்தான் காலி செய்யப் போகிருர்களாம். ஆகையால் நம்முடைய அவசரத்துக்கு அது உபயோகப்படாது' என்பார். இதேமாதிரிதான் கிடைக்கும் தகவலையெல்லாம் வீண் செய்யாமல் ஓடினபடி இருக்கிருர். நானும் எனக்குத் தெரிந்தவர்களையெல்லாம் விசாரித்துக்கொண்டிருக்கிறேன். அதனுல்தான் வர ஒழியவில்லை பாட்டி.' என்ருள் இந்திரா.

'ஏன், எதற்காக வீட்டுக்காரர் உங்களைக் காலி செய்யச் சொல்கிருர்?' என்ருள் பாட்டி.

'இது தெரியாதா பாட்டி? எவனுவது அதிக அட்வான்சும் அதிக வாடகையும் கொடுப்பதாகச்சொல்லியிருப்பான். அவ்வளவுதான் இதுகூடவா தெரியாது? ஆனுல் காரணம் அது என்று சொல்லவில்லை வீட்டை ரிப்பேர் செய்யவேண்டும் அல்லது தன் சொந்த உபயோகத்துக்கே வேண்டும் என்று ஏதோ சாக்குப் போக்குச் சொல்லுகிருர்.

'ஏன்! இருக்கிற இடத்திலேயே எதையாவது தடுத்தோ, மூடைந்தோ, வந்தவர்களுக்குக் கொடுக்க முடியவில்லையோ?'

'நீங்கள் அமெரிக்காவைப்பற்றிப் பிரஸ்தாபித்தவுடனே நான் சொல்ல வந்த விஷயம் இதுதான். அதை விட்டுவிட்டு எதையோ சொல்லிக்கொண்டிருக்கிறேன். அமெரிக்கா வரையில் போவானேன். பட்டணத்தில் ஒவ்வொரு வீட்டிலும் இப்பொழுது எத்தனை குடித்தனங்கள் இருக்கின்றன தெரியுமா? ஐந்து வருஷத்துக்கு முன்னுல் மூன்று குடித்தனங்கள் இருந்த வீட்டில் இப்பொழுது பதினைந்து குடித்தனங்களுக்குக் குறையாமல் இருக்கின்றன. வீடு என்னமோ அதே வீடுதான். அதே அளவுதான். ஆனுல் ஒவ்வொரு அறையும் ஐந்து அறைகளாகத் தடுக்கப்பட்டிருக்கும். அறைகள் வேண்டுமானுல் அதிகமாகி விடுமேயொழிய அந்த ஒரே கிணறு, ஒரே குழாய், ஒரே கக்கூஸ்தான் இருக்கும்.''

'இதில் இத்தனை ஜீவன்களும் புழுங்கியாகவேண்டும்? பதினைந்து குடித்தனமென்றுல் குடித்தனத்துக்கு சராசரி ஆறுபேர் என்று வைத்துக்கொண்டால்கூட மொத்தம் தொண்ணூறு பேராகிறது இத்தனை ஜீவன்களும் அதிலேயே புழுங்கியாக வேண்டும்! இல்லையா?

'புழுங்குவதா? புழுங்கியாகவேண்டும். அல்லது அவிந்தாகவேண்டுமென்று சொல்லுங்கள் பாட்டி. நரகம் என்று வேறு ஏதாவது இருக்குமென்று நினைக்கிறீர்களா என்ன? எனக்குத் தோன்றவில்லை இதுகூட அவ்வளவு ஆச்சரியமில்லை. நேற்று ஒருவர் ஒரு போர்ஷன் காலி என்று தகவல் சொல்லி அனுப்பினுர். அதைப் பார்ப்பதற்காகப் போயிருந்தோம். மாடியில் ஒரு அறையும் கீழே ஒரு அறையும் இருப்பதாகச் சொன்னுர்கள். வீட்டுக்காரர் உள்ளே அழைத்துச் சென்றுர் மாடிப்படியண்டை வந்து நின்றுர். இதுதான் சமையல் அறை என்றுர், அப்படி, இப்படி திரும்பிப் பார்த்துவிட்டு, எது சமையல் அறை என்று கேட்டார் எங்ககத்துக்காரர். இதுதான் என்றுர் அவர். சுற்றிச் சுற்றிப் பார்த்தோம் ஒன்றுமே ஏற்படவில்லை. 'என்ன இப்படிப் பார்க்கிறீர்களே? இதுதான் ஸ்வாமி' என்று அந்த இடத்தைக் காண்பித்தார்: நாங்கள் அப்படியே அசந்துவிட்டோம். எனக்கு மாத்திரம் கூடவே சிரிப்பும் வந்துவிட்டது. நல்லவேளையாக ரொம்ப கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிக்கொண்டேன். மெத்தைப் படிக்கட்டின் கீழ் ஓர் வளைவு இருக்கிறதே அதைக் காண்பித்தார். 'ஒருவர் படுக்கலாம். இருவர் உட்காரலாம்: மூவர் நிற்கலாம்' என்று எங்கோ ஆழ்வார் பாடினுராமே அந்த மாதிரி ஒருவர் உட்காரலாம் அதன்கீழே. அதுவும் தாராளமாக முடியாது எழுந்தால் மேலே சுவர் தலையில்இடிக்கும். ஜாக்கிரதையாகத்தான் எழுந்திருக்கவேண்டும். 'இங்கேஎப்படி சமையல் செய்கிறது?' என்று கேட்டார் 'எங்களவர். 'கரி அடுப்பு ஒன்றை வைத்துக்கொண்டு சமையல் செய்கிறது இதற்கு முன்பு இருந்தவர்கள் செய்துகொண்டிருந்ததுதானே. சமையலை மாத்திரம் இங்கே செய்துவிட்டு மாடியில் சாப்பிட்டு வந்தார்கள்,' என்றுர். நல்லவேளை. அந்தமட்டிலும் அங்கேயே நின்றுகொண்டு ஒரு தட்டில் சாப்பிட வேண்டும் என்று சொல்லாமல் விட்டாரே. அந்தமட்டிலும் பரவாயில்லை என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்,' என்ருள் இந்திரா.

'நின்றுகொண்டு சாப்பிடச் சொன்னுலும் அதில் ஒன்றும் ஆச்சரியமில்லையடி அம்மா. ரயில்வே ஜங்ஷன்களில் சிற்றுண்டிச்சாலைகளில் வாங்கிச் சாப்பிடவில்லையோ? எல்லோருக்கும் அங்கே மேஜையும் நாற்காலியுமா போட்டிருக்கிருர்கள்? பணத்தைக் கொடுத்து வாங்க வேண்டியது நின்றபடியே இரண்டு 'வாயாகப் போட்டுக்கொள்ள வேண்டியது. வண்டிக்கு ஓடவேண்டியது இது அன்றடம் நாம் பார்த்துக்



"...சரோஜினி தெருவை உடனே முடித்துவிடவேண்டும் என்று......"



"......படிக்கட்டின் கீழ் காண்பித்து......"

கொண்டிருக்கிற விஷயம்தானே? நம்மவர்கள்தான் எல்லாத்திற்கும் பழக்கப்பட்டுவிட்டார்களே! இனி உலகில் எது நடந்தாலும் ஆச்சரியமில்லை ஆமாம் அதற்கு வாடகை எவ்வளவாம்?' என்றாள் பாட்டி.

'வாடகை முப்பத்தைந்து ரூபாயாம் அட்வான்ஸ் முன்னூற்று ஐம்பது ரூபாயாம். எப்படியிருக்கிறது வீட்டுக்குச் சொந்தக்காரர்களின் ஆசை பார்த்தீர்களா?' என்றாள் இந்திரா.

கலியாணப் பேச்சில் சீர்வரிசையோடு வரதக்ஷிணைப் பேச்சு இருக்கிற மாதிரி போர்ஷன் பேச்சில் அட்வான்ஸ் என்று ஒன்று புறப்பட்டிருக்கிறது. அப்படியானால் மாடியில் உள்ள அறை பெரியதாய் இருக்குமே'

'ஒரு காலத்தில் பெரியதாகத்தான் இருந்திருக்க வேண்டும். இப்பொழுது அது மூன்று அறைகளாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது தாராளமாக மூன்று பேர் படுத்துக்கொள்ளலாம்'

'சே. ஆனாலும் ஆகாத்தியக்காரி நீ' என்று சிரித்தாள் பாட்டி.

'உண்மையாகச் சொல்கிறேன் பாட்டி. இதில் கொஞ்சம்கூடப் பொய்யே இல்லை. நான் இன்று சொல்கிறேன். நீங்கள் வேண்டுமானால் பார்த்துக்கொண்டிருங்கள். இப்பொழுதே பல வீடுகளில் அநேகமாக அது அநுஷ்டானத்துக்கு வந்துவிட்டது இன்னும் கொஞ்ச நாளானால் சென்னைப்பட்டினத்தில் ஒரு வீட்டிலாவது தோட்டம், முற்றம், தெருத் திண்ணை என்று திறந்த வெளி ஒரு அங்குலம்கூட இராது. பாருங்களேன். ஒவ்வொரு வீடும் காட்டு மிருகங்கள் வசிக்கும் குகைகள் மாதிரிதான் ஆகிவிடப் போகிறது' என்றாள் இந்திரா.

'ஜனங்களை நேரும் நொடியும் பிடுங்கித் தின்கிறதென்றால் இப்படி வீடுகள் இருந்தால் ஏன் பிடுங்கித் தின்னாது? ஆமாம். அவர்கள்தான் அப்படிப் பேராசை பிடித்துக் கேட்கிறதாகவே வைத்துக்கொள்வோம். ஜனங்கள் ஏன் அந்த இடத்துக்குப் போட்டியின்மேல் போட்டியாய்ப் போகவேண்டும்?' என்றாள் சேஷிப்பாட்டி.

'வயிற்றுப் பிழைப்பு பாட்டி, பாழும் வயிற்றுப்பிழைப்பு. என்ன செய்து தொலைக்கிறது!' என்றாள் இந்திரா.

'மதுவிலக்கு போன்ற எத்தனையோ சட்டம் கொண்டுவந்துள்ள சர்க்கார் இவ்வளவு விஸ்தீரணமுள்ள வீட்டில் இத்தனை பேருக்குமேல் இருக்கக் கூடாதென்ற ஒரு சட்டம் கொண்டு வரக்கூடாதோ!' என்றாள் பாட்டி.

'நீங்கள் சொல்லுகிற யோசனை சரிதான். உரக்கச் சொல்லாதீர்கள். நம்ம மாகாண சர்க்கார் சட்டங்கள் கொண்டுவருவதிலும் அவ்வப்பொழுது உத்தரவுகள் பிறப்பிப்பதிலும் கொஞ்சமும் சளைக்கிறவர்களில்லை. சொன்னால் போதும். உடனே அதை ரத்து செய்யவும் பின் வாங்குகிறதில்லை. நீங்கள் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டு உடனே சட்டம் கொண்டுவந்துவிடப் போகிறார்கள். எல்லோருக்கும் இடத்துக்கு ஏதாவது பரிகாரம் தேடிவிட்டு அந்த மாதிரி சட்டத்தைக் கொண்டுவந்தால் ரொம்ப நன்றாக இருக்கும். இல்லாவிட்டால் ஜனங்கள் திண்டாடிப் போய்விடுவார்கள்,' என்றாள் இந்திரா.

'அதாவது மதுவிலக்குச் சட்டத்தினால் கள் இறக்கும் தொழிலாளர்கள் படுகிற கஷ்டம் மாதிரி' என்று பாட்டி சொல்லிக்கொண்டிருக்கையில் பாட்டியின் பேரன் ஆபீஸிலிருந்து வந்து சேர்ந்தார்.

'நான் போய் வருகிறேன் பாட்டி. நாளைக்கு ஸாவகாசமாய் வருகிறேன்' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குச் சென்றாள் இந்திரா.



"......நின்றுகொண்டே......"

—::—






நடுப்பகலிலும் கூடக் காரிருள் சூழ்ந்திருக்கும் கானகம். சுற்றுமுற்றும் உள்ள புதர்களினிடையிலிருந்து முயல்கள் ஓடும் 'பலபல' சப்தமே என் நெஞ்சைக் கலக்கியது. பொழுது சாயச் சாய மற்றும் பல துஷ்ட மிருகங்களின் உறுமல்களும் என் செவியில் விழுந்து என் கால்களின் போக்கைத் தடை செய்தன. எந்த நிமிஷத்திலும் பிராணபயத்தை எதிர்நோக்கி நடந்து வந்தேன். எப்படியாவது என் நண்பர்களைச் சேர்ந்துவிட வேண்டுமென்னும் ஆவல் என்னை உந்தித் தள்ளியது. ஆனால் அதே சமயத்தில் 'அது உயிருடன் முடியுமோ' என்ற ஐயம் ஒருபுறம் பின்னுக்கிழுத்தது. கையில் துப்பாக்கியேந்தி உல்லாசமாக வேட்டைக்குக் கிளம்பியிருந்த என் கதியா இப்படியாகி விட்டது? காட்டில் வழி தவறி என்னுடன் வந்த நண்பர்களைப் பிரிந்து நெடுந்தூரம் வந்து விட்டேன். இனி நான் மிருகங்களை வேட்டையாடுவது போக அவையல்லவா என்னை வேட்டையாடக் கூடிய நிலைமை வந்து விட்டது! அபாயம் எதுவும் நெருங்குமுன் எப்படியாவது என் நண்பர்களைக் கண்டுபிடித்தால்தான் நல்லது. ஆனால் என் தலைவிதியோ என்னை அந்தக் காட்டின் இன்னும் மர்மமான பாகங்களுக்குத்தான் இழுத்துச்சென்றது.

சூரியன் மலைவாயில் விழுந்து கொண்டிருந்தான் நான் இன்னும் அலைந்து திரிந்துகொண்டிருந்தேன். பாரதியாரின் 'திக்குத் தெரியாத காட்டில்' என்ற கீதம் நினைவிற்கு வந்தது ஆனால் இயற்கை வளங்கண்டு மகிழவோ அல்லது இலக்கியச் சுவையை அநுபவிக்கவோ என் நிலைமை இடந்தரவில்லை. முன்னால் ஒரு அடி தூரம் கூடப் பார்வை ஊடுருவிச் செல்ல முடியாத இருட்டு கண் தெரியாமல் நேரே நடந்து புலி சிங்கங்களின் வாயில் போய் விழ எந்த மனிதனும் விரும்பமாட்டான். நானும் விரும்பவில்லை இரவைக் கழிக்கும் எண்ணத்துடன் ஓங்கி வளர்ந்திருந்த ஒரு விருட்சத்தின் மீதேறி மரக்கிளையொன்றில் கண் கொட்டாமல் உட்கார்ந்திருந்தேன்.

பர்மாவில் அரக்கான் மலையை யடுத்துள்ள காடு அது. பொதுவாகவே பர்மியப் பிரஜைகளுக்கு அன்னிய நாட்டினரிடம் நம்பிக்கையோ அன்போ கிடையாது இந்தியப் பிரஜைகள் என்ற முறையில் நாங்கள் வேட்டையாடக் கிளம்பினதே தவறு. அதிலும் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம் வலுத்திருந்த இந்தக் காட்டில் வந்து மாட்டிக்கொண்டுவிட்டோம். நண்பர்களாகிய நாங்களெல்லாம் ஒன்று கூடியிருக்கும்வரையில் சற்றுத் தைரியத்துடனேயே இருந்தோம். எங்களில் சற்று வயதில் மூத்தவரும் வேட்டையில் மிக்கத் திறமையும் அநுபவமும் வாய்ந்த துரைராஜ்தான் எங்களுக்குத் தைரியமூட்டி அழைத்து வந்தவர் "ஏன் பயப்படுகிறீர்கள்? கம்யூனிஸ்டுகளுக்கு அவர்களது அரசாங்கம் தானே எதிரி? கேவலம் வயிற்றுப் பிழைப்பைத் தேடி இங்கு வந்திருக்கும் ஏழை இந்தியர்களாகிய நாம் அவர்களுக்கு என்ன தீமை செய்தோம்? நம்மை அவர்கள் ஒன்றும் செய்யமாட்டார்கள் அச்சம் வேண்டாம்'' என்று அவர் பன்முறை வற்புறுத்திய பின்னரே நாங்கள் கிளம்பினோம்.

ஆனால் நண்பர் துரைராஜ் ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துவிட்டார். பர்மிய கம்யூனிஸ்டுகளுக்கு வேண்டியதெல்லாம் பணமும் ஆயுதமும்தான் எங்களை அடித்துப் பிடுங்குவதற்கு எங்களிடம் பணம் அதிகமில்லை. ஆனால் ஆயுதங்கள்...? ஒவ்வொருவரிடமும் ஒரு பெரிய துப்பாக்கி, கைத்துப்பாக்கி, இவற்றிற்கான தோட்டாக்கள் எல்லாம் இருந்தன இவற்றைப் பெறுவதற்காக இந்தக் கம்யூனிஸ்டுகள் எவ்வளவு கொடிய, கேவலமான செய்கையையும் செய்யத் தயங்கமாட்டார்களென்பது காட்டிற்குள் வந்த பிறகு தான் எங்களுக்குத் தோன்றியது.

இப்போதும் துரைராஜின் உறுதி எங்களுக்கு ஊக்கமளித்தது. "இதற்காகவா இப்படி யோசனை செய்கிறீர்கள்? ஏன்? நாமும் வீர இந்தியப் பிரஜைகள் என்பதை மறந்துவிட்டீர்களா? அந்த அற்ப வஸ்துக்களின் பொருட்டு அவர்கள் மனிதத் தன்மையை இழப்பதாயிருந்தால், இவற்றினாலேயே அவர்களுக்கு ஒரு பாடம் கற்பித்தபின் நாமும் மடிவோம் நம்மைக் கொன்று அவர்களுக்குத் துப்பாக்கிகள் கிடைத்தாலும் அவை வெற்றுத் துப்பாக்கிகளாகவே இருக்க வேண்டும். நம்மிடமிருக்கும் கடைசித் தோட்டா வரை உபயோகித்து அவர்களுக்குச் சேதம் விளைவிக்க வேண்டும்'' என்று ஆவேசத்துடன் கூறினார் அவர். கூடியவரையில் மிருக வேட்டை. தவிர்க்க முடியாது போனால் மனித வேட்டையும் கூட நடக்க வேண்டியிருக்கும் என்ற தீர்மானத்துடன் நாங்கள் வேட்டையைத் தொடங்கினோம்

எல்லோரும் அவரவர் திறமைக்கும் தைரியத்துக்கும் தக்க பிராணிகளைத் தேடித் திரிந்தனர் துரைராஜ் புலி சிறுத்தைகளிருக்குமிடம் தேடிச் சென்றார் மற்றொரு நண்பர் மான்களை விரட்டப்போனார். இன்னொருவர் குரங்குகளைத் துரத்தினார், உயிரோடு ஒன்றைப் பிடித்துவரும் நோக்கத்தோடு. நானும் எனக்கேற்ற பிராணி எதுவென்று யோசித்துக்கொண்டிருக்கும்போதுதான் ஒரு பாழும்முயல் தன் புதருக்குள்ளிருந்து வெளிவந்தது. நான் என் வேட்டையைக் காலாகாலத்தில் ஆரம்பித்து வைத்தேன்..

அந்த முயல் புதரருகில் உட்கார்ந்து தன் காதுகளை நிமிர்த்திக்கொண்டு ஒரு நிமிஷ காலம் என்னை சந்தேகத்துடன் பார்த்தது. "இவன்தானா என்னைப் பிடிக்கப்போகும் பிரகஸ்பதி" என்று அது எண்ணிக்கொண்டதோ என்னவோ? நான் லேசாகக் காலை நகர்த்தினதுதான் தாமதம், ஒரு குதி குதித்துவிட்டு நாற்கால் பாய்ச்சலில் கிளம்பியது. என் வாழ்வில் முதல் தடவையாக எனக்கு ஒருவித மனத்திருப்தியேற்பட்டது. "ஆஹா! இன்றுவது ஒரு முயல் என்னைக் கண்டு பயந்து ஓடியதே" என்று. அது அப்படி ஓடியிருக்காவிட்டால் நான் அதைத் துரத்தத் துணிந்திருப்பேனா என்பது எனக்கே சந்தேகம்தான்!

அப்புறம் அது ஓட, நான் துரத்த, சற்றுநேரம்வரையில் நான் வேட்டையில் என்னையே மறந்துவிட்டேன் அந்தப் பொல்லாத முயல் கடைசியாக என் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு எங்கோ மறைந்துவிட்டது நானும் நடுக்காட்டிற்குள் வெகு தூரம் வரையில் பிரவேசித்திருந்தேன். என் நண்பர்களிருக்குமிடம் கண்டு செல்ல வழி தெரியாமல் திரிந்தேன். முடிவில்தான் அந்த மரத்தின்மேலேறி உட்கார்ந்தேன். காலையில் (பிழைத்துக்கிடந்தால்) மறுபடி அலையத் தொடங்கலாமென்று. நினைக்கக்கூடியபடி நான் ஒன்றும் அவ்வளவு முழுக் கோழையல்ல இதற்கு முன்பு நாங்கள் வங்காளத்திலிருந்தபோது என் நண்பர்களுடன் போய் எத்தனையோ பெயர்பெற்ற வங்காளப்புலிகளைச் சுட்டிருக்கிறேன். அதாவது புலிகள் சாகும் வரை என் நண்பர்கள் சுடுவார்கள் அதற்குப் பிறகு நான் சுடுவேன். ஆனால் இது அந்நிய தேசம் அதிலும் கம்யூனிஸ்டுகள் சூழ்ந்த இடம். கொடிய காட்டு மிருகங்களைவிட இவர்களை நினைக்கும்போதுதான் என் மனம் 'பக்பக்' கென்று அடித்துக்கொண்டது நெஞ்சில் தைரியமில்லாதவனுக்குக் கையில் ஆயுதமிருந்துதான் என்ன பயன்?

நள்ளிரவு. பசியும் களைப்பும் என் கண்களை மயக்கிக்கொண்டிருந்தன. ஆனால் தூக்கக் கலக்கத்தில் சற்றே பிடி தளர்ந்தாலும் அந்த மரக்கிளையினின்றும் தவறி 'சுமார் முப்பதடி தூரத்திலிருந்த தரையை எட்ட வேண்டியதுதான். அந்த ராத்திரியில் அவ்வளவு நீண்ட பிரயாணத்தை அதிலும் ககன மார்க்கமாகச் செய்ய நான் விரும்பவில்லை! இந்நிலையில் நான் அமர்ந்திருந்தபோதுதான் சற்றுத் தொலைவில் ஒரு திவட்டியின் வெளிச்சம் தெரிந்தது.

ஒரு கண நேரத்திற்கு நான் சிறிது உற்சாகமுற்றேன் என் நண்பர்கள் யாரேனும் தேடி வருகிறார்களோ வென்று எண்ணியவனுக்கு மறுகணம் அவ்வுற்சாகம் மறைந்தது. அது என் நண்பர்களாயிருக்க முடியாது அவர்கள் ஒவ்வொருவரிடமும் மிகச் சக்தி வாய்ந்த மின்சார டார்ச் விளக்கு இருந்தது வெளிச்சந் தருவதற்காக இந்தத் திவட்டிபோன்ற புராதனமான வழியை அவர்கள் கைக்கொண்டிருக்கத் தேவையில்லை. இது வேறு யாராவது வனவாசியாயிருக்கவேண்டும். அல்லது கலகக்காரர்களில் ஒருவனாக இருக்கவேண்டும். யாராயிருந்தாலும் அவர்களை நம்பி என்னுடைய நிலைமையை விஸ்தரித்து உதவி கேட்கலாமா என்று எண்ணினேன். ஆனால் என்ன காரணத்தினாலோ அந்த மரத்தை விட்டுக் கீழே இறங்க மட்டும் துணிவேற்படவில்லை! அங்கேயே அமர்ந்துகொண்டு திவட்டியின் போக்கைக் கவனிக்கத் தொடங்கினேன்.

திவட்டி நானிருந்த பக்கமாகத்தான் வந்துகொண்டிருந்தது என் மனதில் ஒரு பெரும் போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்தது. "இருப்பதா இறப்பதா? என்ற பிரச்னைக்குச் சற்றும் குறைந்து போகாமல் "இருப்பதா இறங்குவதா?" என்ற பிரச்னை வெகு மும்மரமாக சர்ச்சையில் இருந்தது.

திவட்டி நெருங்கிவிட்டது. அதைச் சுமந்து வந்த உருவத்தின் அங்க அடையாளங்கள் புலப்படத் தொடங்கின. அது ஒரு பர்மியப் பெண்! இக்கருங்கானகத்தில் நள்ளிரவு நேரத்தில் ஒரு திவட்டியே துணையாகத் தனிமையில் வரும் பெண்ணைக் கண்டு திகைக்காமல் என்ன செய்வது? பர்மியப் பெண்களின் சாமர்த்தியம் ஆண்களினும் குறைந்ததல்லவென்று நான் கேள்விப்பட்டிருந்தது உண்மைதான் போலும்!

நேரே என் மரத்தினடியில்தான் வந்து நின்றாள்! அவள் மரத்தில் ஏறுமுன் நான் அதனடியில் கழற்றி வைத்திருந்த என் பூட்ஸ்களும், பளபளவென்ற துப்பாக்கியின் முனையும் தான் அவளது கவனத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். மேலே அண்ணாந்து பார்த்தபடி "ஹே" என்றொரு குரல் கொடுத்தாள்.

ஒரு நிமிஷம் யோசனை செய்தபின் நான் "ஹோ" என்று பதிலுக்குக் குரல் கொடுத்தேன். அதை தொடர்ந்து சரசரவென்று மரத்தினின்றும் இறங்கத் தொடங்கினேன் எனக்கும் பூமிக்குமிடையிலிருந்த அந்த முப்பதடி தூரத்தையும் சுமார் முப்பது—வினாடிகளில் கடந்து நான் தரையில் காலை வைக்கும் வரையில் பொறுமையுடன் நின்றுகொண்டிருந்தாள் அவள் அவளது இதழ்க்கடையில் ஒரு புன்முறுவல் தவழ்ந்தது அவளது அழகைக் கண்டு பிரமித்த எனக்கு என் முழங்கால்களிலும் கைகளிலும் மரப்பட்டை சிராய்த்து கசிந்தம் வந்துகொண்டிருந்தது கூடத் தெரியவில்லை.

"மரத்தின்மேல் மனிதக் குரங்கு உட்கார்ந்திருக்கிறதாக்கும் என்று நினைத்துவிட்டேன்" என்று பர்மிய பாஷையில் கூறினாள் அவ்வழகி. இது கேலியென்று நான் புரிந்து கொண்டேன்.





"இந்த நாட்டுக் காடுகளில் கூட மனிதக் குரங்குகள் உண்டா?" என்றேன் நான், பேச்சைத் தொடரும் நோக்கத்தோடு.

"இல்லை. ஆனாலும் சில சமயங்களில் வெளிநாடுகளிலிருந்து அவை இங்கே வருவதுண்டு" என்று பதிலளித்தாள் அவள். இந்தப் பதிலும் எனக்கு ஒரு மாதிரியாகத்தானிருந்தது ஆனால் அவளது அழகு என் அதிருப்தியைச் சமனப்படுத்தியது காட்டுக்கொடிபோல் வளர்ந்து இயற்கையெழிலுடன் விளங்கிய அவளுக்கு என் மனம் முன்பேயே அடிமையாகி விட்டிருந்தது சற்று முன் பர்மியப் பெண்களைப்பற்றி நான் கொண்டிருந்த 'தவறுான' அபிப்பிராயம் கூட மறையத் தொடங்கியது.

என் நிலைமையை விவரித்ததும் அவள் மனம் இறங்கியது. என்னைக் காப்பாற்றி என் நண்பர்களிடம் சேர்க்கவேண்டிய உதவி செய்வதாக அவள் உறுதி கூறினாள். அவள் கையிலிருந்த திவட்டியின் ஒளி என் நெஞ்சில் ஒரு புதிய உற்சாகத்தையும் தைரியத்தையும் ஏற்படுத்தியது அந்தத் திவட்டியை என் கைக்கு மாற்றிவிட்டு அவள் வெகு லாவகத்துடன் என் பூட்ஸ்களைத் தன் கால்களில் மாட்டிக்கொண்டாள் பின் என் துப்பாக்கியை எடுத்துத் தோளில் சார்த்திக்கொண்டு கையை வீசிக்கொண்டு கம்பீரமாக முன்னே நடந்தாள் இந்த வேடிக்கையைக் கண்டு அழுவதா, சிரிப்பதா என்று தெரியாமல், திவட்டி யேந்தி அவளை நான் பின் தொடர்ந்தேன்.

நடுக்காட்டிலமைந்திருந்த ஒரு சிறு குடிசைக்கு வந்து சேர்ந்தோம். அங்கு மாடத்தில் ஒரு ஒற்றை விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. அதைத் தாண்டிவிட்ட பின் என்னை உட்காரச் சொன்னாள் அந்த அழகி. எனக்கிருந்த களைப்பில் அவள் சொல்லியிராவிட்டாலும் கூட நான் உட்கார்ந்துதானிருப்பேன் உள்ளே சென்ற அவள் சற்று நேரத்திற்கெல்லாம் சில பழங்களும் உணவு வகைகளும் தட்டிலேந்திக்கொண்டு வந்தாள். நான் சாப்பிட்டுக்கொண்டே அவளிடம் பேச்சுக் கொடுத்தேன். அவளுக்குத் தாயில்லையென்றும், அவள் தகப்பன் கலகக்காரர்களில் ஒரு பகுதியினருக்குத் தலைவன் என்றும், இரவெல்லாம் தன் கூட்டத்தாருடன் சுற்றிவிட்டுப் பொழுது விடிந்தபின் தான் வீடு திரும்புவானென்றும் அறிந்துகொண்டேன்.

"ஆனால் நீ என்னிடம் இரக்கம் காட்டுவதுபோல் உன் தகப்பன் காட்டாவிட்டால்...?" என்று என் அச்சத்தைத் தெரிவித்தேன். மீண்டும் தன் முத்துப்போன்ற பற்களைக் காட்டிக் குறுநகை புரிந்தவண்ணம் கூறினாள் அவள் "அதுபற்றி நீ அஞ்சத் தேவையில்லை என் விருப்பத்துக்கு மீறி எதுவும் செய்யமாட்டார் என் தகப்பனார்" என் பயம் தெளிந்தது.

மறு நிமிஷம் தூக்கம் என் கண்களைச் சுழற்றியது அவள் அநுமதியின்றி அங்கே எப்படிக் காலை நீட்டிப் படுப்பது என்று நான் யோசித்துக்கொண்டிருந்தேன் அவளோ இந்நடுநிசியில் விளக்கினருகிலமர்ந்து மான் தோலாடை ஒன்றைச் செப்பனிட்டுக்கொண்டிருந்தாள். வந்தது வரட்டும் என்று நான் படுத்தபோதுதான் "ஹூம்" என்ற ஒரு உறுமல் சப்தம் கேட்டது தூக்கி வாரிப் போட்டுக் கொண்டெழுந்தேன்.

புலியினது உறுமலையும் சிம்மத்தின் கர்ஜனையையும் ஒத்திருந்த அந்த சப்தம் வந்தது ஒரு மனிதனின் தொண்டையிலிருந்துதான் நான் கண் விழித்து நோக்கியபோது யமன் போன்ற ஆகிருதி படைத்த ஒரு பர்மிய யுவன் என்னெதிரில் நின்றான் தன் சிவந்த கண்களை உருட்டி என்னை ஒரு முறை விழித்துப் பார்த்துவிட்டுத் தன் இடுப்பில் செருகியிருந்த கத்தியை உருவினான் அவன் அக்கணமே என் உயிர் பிரிந்திருக்க வேண்டியது.

தன் வேலையிலேயே ஆழ்ந்து தலை நிமிராமலிருந்துவிட்ட அந்தப் பெண் திடீரெனத் தலை நிமிர்ந்தாள் "ஏ யூடின்! அடே துரோகா! வேண்டாம். நிறுத்து" என்று கூவியவண்ணம் அவன்மீது பாய்ந்தாள் கத்தியேந்திய அந்த இரும்புக் கையை புஷ்பம்போல் மெல்லிய அவள் கரங்கள் இறுகப் பற்றிக்கொண்டுவிட்டன நான் மரணத்தின் வாயினின்றும் மீண்டேன்.

"யூடின். உன் கொலைகாரத்தனமை உன்னை விட்டு ஒருகாலும் நீங்காதா!" என்று கடுமையான குரலில் கேட்டாள் அவள் அந்தத் தொனியின்முன் சற்றுப் பின்வாங்கி நின்றான் அவ்விளைஞன்.

"பாபு! கோபித்துக்கொள்ளாதே. உனக்கு முன்பின் பரிச்சயமில்லாத இந்த அந்நியனை நீ இங்கே வைத்துக்கொண்டது தவறு உன் தகப்பனார் இதை அறிந்தால் அவரும் இப்படித்தான் என்னுவார். இவனைத் தன் கண்ணால் பார்த்தும்விட்டால் இந்நேரம் கொன்றே போட்டிருப்பார் ... நீ சிறு பெண் உனக்கு உலகம் தெரியாது அதனால்தான் நான் பயப்பட்டேன்......" என்றான் யூடின். சற்றுத் தெளிந்திருந்த பிராண பயம் மீண்டும் என்னைக் கௌவிக் கொண்டது இந்தயிளைஞன் அவளது காதலனாக இருக்கக்கூடுமோ என்று நான் எண்ணினேன் இவள் தன் நய வார்த்தைகளால் அவனது மனதை



மாற்றி என்னைக் கொலைசெய்வதற்கு உடன்படச்செய்துவிட்டால்......?

"யூடின் நீ மிகுந்த உலக அனுபவம் படைத்த புத்திசாலிதான் நான் இல்லையென்று சொல்லவில்லை இந்த அந்நியன் என்னிடம் அடைக்கலம் புகுந்திருக்கிறான் இவன் எப்படிப்பட்டவனானாலும் காப்பது என் கடமையல்லவா?" என்றாள்.

"ஒருகால் இவன் நம் சர்க்காரால் அமர்த்தப்பட்ட ஒற்றனாக இருந்தால்? நம் கம்யூனிஸ்ட் இயக்கத்தைக் காட்டிக்கொடுக்கும் துரோகியாக இருந்தால்கூட அவனுக்கு உயிர்ப்பிச்சை தருவாயா? இவனால் உன் தகப்பனாருக்கும். அவரது தலைமையின் கீழ்ப்போராட்டம் நிகழ்த்தும் எங்களுக்கும் ஆபத்து வருமுன்பே இவனைக் கொன்றுவிடுவதுதான் சரி." என்றான் யூடின் என் குலை நடுங்கியது

சற்று யோசித்தாள் அந்தப்பெண் அவளது மௌனத்தில் என் உயிர் ஊசலாடியது. பின் அவனை நோக்கிக் கூறினாள். "யூடின் நான் சொல்லவேண்டாமென்று எண்ணிக் கொண்டிருந்த சில விஷயங்களைச் சொல்லத்தூண்டுகிறது உன் பேச்சு நீ எவ்வளவு கபட நெஞ்சுள்ளவனென்பதை நான் நன்கறிவேன். தேச நலனையும் சமூக நலனையும் கருதி நீ இப்போராட்டத்தில் ஈடுபடவில்லை பொதுநலம், தியாகம் என்ற வார்த்தைகள் உன் அகராதியிலேயே கிடையாது உன் நடிப்பெல்லாம் கேவலம் சுயநலம்காரணமாகத்தான். உன்னை நம்பி என் தந்தை ஏமாறுகிறார் அவரிடம் நான் இந்தப்பேச்சை இதுவரை எடுக்காததினால் தான் நீ உயிருடன் நடமாடுகிறாய். ஞாபகமிருக்கட்டும்" என்றாள் மாபூ.

அவனது முகம் வெளிறிப்போயிருந்தது அந்தப் பெண் சொல்வது உண்மையே என்று நான் அறிவிருந்தே ஊகித்துக்கொண்டேன்.

சற்றுச் சமாளித்துக்கொண்ட அவ்வாலிபன் "மாபூ! என்ன இது? உன் வாயிலிருந்தா இந்த வார்த்தைகள் வருகின்றன?.........சரி இருக்கட்டும். முதலில் நான் எந்த விதத்தில் துரோகியென்பதை நிரூபி பார்க்கலாம். உன் சாமர்த்தியம் எதுவரையில் போகிறதென்று நான் பார்க்கிறேன்" என்றான்.

பெண்ணின் சினம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்து வந்தது நாகப்பாம்பைப்போல் சீறி விழுந்தாள் அவள் "யூடின் உனக்கு வெட்கமாயில்லை? அன்று மாலை காட்டின் நடுவே ஒரு மரத்தடியில் நீ உன் நண்பனுடன் பேசிக்கொண்டிருந்ததை நான் அறியேனென்று எண்ணிக்கொண்டிருக்கிறாயா? எந்தப் பெண்ணின் வாழ்வைப் பாழாக்க எண்ணி நீ சதி செய்துகொண்டிருந்தாயோ அதே பெண் உன் வாயிலிருந்து புறப்பட்ட நஞ்சு தோய்ந்த மொழிகளையெல்லாம் அம்மரத்தின் பின்னாலேயே நின்று ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்தாள் கேட்டு உன் பேதமையை எண்ணி உள்ளுக்குள் நகைத்துக்கொண்டாள் உன் நல்லகாலமாக அவள் கையில் அப்போது ஆயுதமொன்றுமில்லை இருந்திருந்தால் உன் சதியை நிறைவேற்ற நீ அந்த இடத்தினின்றும் எழுந்திருக்கக் கூட முடிந்திராது நான்தான் அந்தப் பெண்" என்று அவள் கோஷமிட்ட சப்தம் குடிசையின் கூரையைப் பிளந்துவிடும்போலிருந்தது சற்றுமுன் அழகின் உருவமாயிருந்த அப்பெண் இப்போது நெருப்பைக் கக்கும் பயங்கரத் தோற்றமளித்தாள்.

தந்திரத்தில் குள்ளநரியாகத் தோன்றிய அம்மனிதன் தன் உணர்ச்சிகளொன்றையும் வெளிக்காட்டவில்லை இலேசான முறுவல் அவனது இதழ்களில் தவழ்ந்தது அவளைச் சாந்தமாகக் கையமர்த்திவிட்டு வெகு நயமாகப் பேசத் தொடங்கினான்.



[ அடுத்த இதழில் முடியும் ]



# கலா மண்டபம்

## படக்கலையில் வாழ்க்கையின் லக்ஷியமும் போக்கும்

ஒரு குறிப்பிட்ட சமயத்தில் மனிதன் என்ன செய்ய வேண்டும், என்னென்ன மாதிரி நடந்துகொள்ள வேண்டும் என்று வகுப்பது ஒரு விதம் கிரியாம்சையில் எவ்விதம் நடந்துகொள்ளுகிறான் என்பது மற்றொன்று. தெருவழியே போகும்பொழுது. ஒரு பேனாவைக் கண்டெடுக்க நேரிடுகிறது. அதில் பேனாவின் சொந்தக்காரனுடைய பெயரும் விலாசமும் பொறிக்கப்பட்டிருக்கிறது.

அதைச்சொந்தக்காரனிடம் சேர்ப்பிக்கவேண்டும் என்று மனதை உறுத்துகிறது இலக்ஷியம் அதாவது மனச்சாட்சி ஆனால், மனப்போக்கு 'ஏன் நாமே வைத்துக் கொள்ளக்கூடாது?' என்று எண்ணும்படித் தூண்டுகிறது ஒவ்வொரு விஷயத்திலும் இம்மாதிரி கீழ்த்தர உணர்ச்சிகளை அகற்றி. உயர்ந்த இலக்ஷிய மார்க்கத்தைக் கைக்கொள்பவன் உலகத்தோரால் கொண்டாடப்படுகிறான் உலக நாகரீகத்திற்குத் தக்கவாறு பதம் பெறாத சுபாவமான உணர்ச்சிகளும், ஒரு கட்டுப்பாட்டினால் திட்டப்பட்டு உரம் பெறவேண்டும். பின் காலம் செல்லச்செல்ல மனித சமூகம் வாழ்க்கையின் ஒவ்வொரு வழியிலும் இலக்ஷிய பாதையில் முன்னேறிக்கொண்டே போகிறது கவிதைகளும், இலக்கியங்களும் இம்முன்னேற்றத்தை இன்னும் அதிகமான வேகத்தில் தள்ளச் செய்ய அரும்பாடு படுகின்றன.



புராணங்களில். நியாயத்திற்கு இம்மியளவும் மாறுபடாத வகையில், காட்சிகள் மக்களை இலக்ஷிய பாதையைப் பின்பற்றி நடக்கும்படி உற்சாகப்படுத்துகின்றன தசரதர், தான் கொடுத்த இரண்டு வரங்களுக்காகத் தன்னருமை மகன் இராமனையும் தன்னுயிரையும் இழக்கின்றார். ஹரிச்சந்திரன் சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகத் தன் நாடு, நகரம், மனைவி, மகன் முதலியவைகளை இழக்கின்றான் இதுபோலவே முன்னாட்களில் மக்கள் உயர்ந்த நோக்கங்களுக்காகவும், இலக்ஷியங்களுக்காகவும், எத்தகைய துன்பங்களையும், தியாகங்களையும் ஏற்றுக்கொண்டவர் ஜனங்கள் நியாயம், தர்மம் என்ற வரம்பை எவ்வாறு மீறாமலிருந்தார்கள் என்பதைக் காட்டுகின்றன போதும் முன்னாட்களில் 'பழிக்குப்பழி' வாங்குவது ஒரு சிறந்த தருமமாகவே கருதப்பட்டது. ஆனால் இக்காலத்திலோ பகையை அன்பினால் வெல்ல வேண்டியதையே தருமமாகக் கருதப்படுகிறது ஆகவே நவீன கவிதைகளும், இலக்கியங்களும், ஆங்கிலத்தில் கூறப்படுவதைப்போல் 'ஒரு நீதியைக் குறிப்பிடுவதாயும் அதைக் கடைப் பிடிப்பதாயிருக்க வேண்டும்' என்பது போன்ற கதைகளையே படக்கலையில் அலங்கரிக்க வேண்டும் இம்மாதிரிக் கதைகளே படக்காட்சிக்கு மிகவும் ஏற்றதாக இருக்கும்.

வின்சென்ட்ப்ளாஸ்கோ இப்னேஸ் எழுதிய "இரத்தமும் மணலும்" என்ற கதையில்வரும் மாட்டுச் சண்டை வீரன் திடுக்கிடும் செயல்கள்பல செய்து, தன் காதலியை அடைவதைக்காட்டிலும், சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய 'இருநகரக்கதை'களில் வரும் ஸிட்னிகார்டன் தன் காதலி மற்றொருவனைக் காதலிக்கிறாள் என்று தெரிந்ததும், அவளுடைய நன்மையைக் கருதி, முடிவில் அவளுடைய கணவனுக்காகத் தன்னுயிரையே தியாகம் செய்யும் கதைதான் நம் மனதை மிகவும் அதிகமாகக் கவருகிறது. சாதாரணமாக ஒரு வாலிபன், ஒரு யுவதியைக்

[ தொடர்ச்சி அடுத்த பக்கம் ]



'டாக் பங்களா' வாசியின் இந்த விகாரத்தை வெகு சீக்கிரம் சென்னை 'ஸ்டாரி'யில் பார்க்கலாம்.

# படக்கலையில் வாழ்க்கையின் இலக்ஷியமும் போக்கும்

[ முன் பக்கத் தொடர்ச்சி ]

காதலிக்கின்றன் என்றால் அவளைத் தனக்கே உரிமையாக்கிக்கொள்ள வேண்டும் என்ற இச்சையே அவனுக்கிருக்கும். ஆனால் தன் காதலி வேறொருவனைக் காதலிக்கிறாள் என்று தனக்குள் தெரிந்தும், அவள்மேல் அன்பு கொண்டாடுவது வெகு கடி. னம் எவ்வகையிலும் தனக்குப் போட்டியாக வருபவரிடம்பொறுமை கொள்வதுதான் மனித சுபாவம். வாழ்க்கையின் மனப் போக்குங் கூட இதுபோலவே "காற்றோடு போயிற்று" என்ற கதையில் ரெட் பட்லருக்காக ஆஷ்லி வில்கி தன்னுடைய காதலைத் தியாகம் செய்கிறான். இம்மாதிரி ஒரு உயர்ந்த இலக்ஷியத்தையும் மனப்போக்கையும் கொண்ட சம்பவங்களை, நாம் வெள்ளித் திரையில் பார்க்கும்பொழுது நம்முடைய மனதில் உயர்ந்த எண்ணங்களும் கருத்துக்களும், உணர்ச்சிகளும் எழுகின்றன

முரட்டு சுபாவம் வாய்க்கப்பெற்ற ஒரு திருடன், ஒரு பாதிரியின் அன்பினால் சீர்திருந்துவதை விக்டர் ஹ்யூகோ எழுதிய 'லே மிஸரபிலே' என்ற கதையில் காணலாம். மேலும் மகாத்மா காந்தியடிகள் கூறும் அஹிம்சையின் தத்துவத்தையும் இதில் காண்கிறோம். பலக்குறைவினால் எல்லோரிடத்திலும் பணிவாக நடந்துகொள்வதல்ல அஹிம்சை. தனக்குத் தீங்கிழைக்கும் ஒருவருக்குப் பிரதியாக தண்டனை கொடுக்கும் சக்தி தன்னிடம் இருந்தும், தீங்கிழைப்பவரின் நன்மையையே கருதி, அன்பின் வசப்பட்ட செயல்களினால் அவருடைய மனதை வசியப்படுத்துவதுதான் அஹிம்சை. கதையில் வரும் பாதிரியின் அன்பு, திருடனின் வாழ்க்கையையே மாற்றி அமைத்து விடுகின்றது

அஹிம்சையின் தத்துவத்திற்கு மற்றுமோர் உதாரணம் கொடுக்கிறேன் சமீபத்தில்தான் ஸ்ரீசாந்தாராம் டைரக்ட் செய்த 'ஆப்கி' என்ற படத்தைப் பார்க்க நேரிட்டது. மோதி என்ற முரட்டு சுபாவம் வாய்க்கப்பெற்ற போலீஸ் சேவகன் இராத்திரி வேளையில் தன் வேலையைக் கவனித்துக்கொண்டிருக்கையில் கேசர் என்ற அபலையான ஒரு பெண்ணை, அவள் தாசிப் பெண்களுடன் நட்பு வைத்துக்கொண்டிருக்கிறாள் என்பதற்காகத் தன்னுடைய கையிலிருக்கும் தாட்டையினால் அவளை அடிக்கிறான் அடி பொறுக்காமல், அவள் கீழே கிடக்கும் ஒரு கட்டையை எடுத்து மோதியை அடிக்க ஓங்குகிறாள் ஆனால் அடிக்க மனம் வராது, அக்கட்டையைக் கீழே போட்டுவிட்டு ஓடிவிடுகிறாள் இந்தச் செயல் அவன் மனதில் ஒரு பெரும் புரட்சியை மூட்டிவிடுகிறது. தன் கையிலிருக்கும் தாட்டையால் தன்னையே அடித்துக்கொள்ளுகிறான். "இம்மாதிரிதானே அந்தப் பெண்ணுக்கும் வலித்திருக்கும்" என்று எண்ணுகிறான். தான் செய்த காரியத்துக்கு பச்சாத்தாபம் படுகிறான். கேசர் திருப்பி அவனை அடித்திருந்தால். இந்த எண்ணங்களெல்லாம் மோதிக்கு உண்டாகுமா? பச்சாதாபத்திற்குப் பதில் ஆத்திரமும், கோபமும் பொங்கி, அவளை இன்னும் நன்கு அடிகள் அடித்திருப்பான். ஆனால் கேசரின் அஹிம்சா சக்தி அம்முரட்டு போலீஸ்காரனின் வாழ்க்கை முறைகளையுமே மாற்றிவிடுகிறது இம்மாதிரி சம்பவங்களை நாம் திரையில் பார்க்கும்பொழுது. படக்காட்சி என்பதையே மறந்து, வாழ்க்கையில் ஒரு உயர்ந்த இலக்ஷியத்திற்காகப் போராடுவதையே காண்கிறோம்.

இத்தகைய காட்சிகளை வெள்ளித் திரையில் பார்க்கும்பொழுது நம்முடைய மனதின்கண், உயரிய பரந்த நோக்கங்களையும், உன்னத இலக்ஷியங்களையும், தியாக சக்தியையும் நம் முள்ளத்தில் தட்டியெழுப்புகின்றன. நம்முடைய தமிழ்ப் படங்கள் இம்மாதிரி உயர்ந்த இலக்ஷியங்களுடனும் போக்குடனும் வெளிவரும் நாள் எந்நாள் என்று ஒரு கணம் யோசிக்கும்பொழுது நம்முடைய பரிதாபகரமான நிலைமையை குறித்து வருந்தாமலிருக்க முடியவில்லை.





ஹாலிவுட்டின் சிறந்த குழந்தை நடிகை மார்கரெட் ஓபிரியன். சென்ற 6-வருஷ காலமாக படங்களில் நடித்து வருகிறாள்.

# தமிழ் சினிமாவும் முன்னேற்றமும்

[ பி. எஸ். [illegible] ]

தமிழ்ப்பட உலகில் நாம் இன்னமும் முன்னேறவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். ஹிந்திப் படங்களை எடுத்துக்கொண்டால், அவை பெரும்பாலும் சாதாரண ரகத்தைச் சேர்ந்தவைகளாயிருந்தாலும், சில படங்கள் மிக உயர்ந்த படங்களாக விளங்குகின்றன. 'டெக்னிக்' என்று சொல்லப்படும் ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு, 'செட்டிங்' எனும் சீன் ஜோடனை, முதலிய துறைகளில் நாம் பொதுவாக, தேர்ச்சியடைந்து விட்டோமென்றாலும், மொத்தத்தில் பிரமாதம்! அற்புதம்! என்று சொல்லக்கூடிய படங்களை தமிழில் இல்லை என்று சொல்லலாம்

சினிமா என்பது ஒரு நவீன கலையாகிவிட்டது. ஆதலால் படமெடுப்பவர்களுக்கு இந்தக்கலையில் சிரத்தையும் ஞானமும் இருப்பது அவசியமாகிறது. ஆனால் தமிழ்ப்பட முதலாளிகள் பெரும்பாலும் இப்படிப்பட்ட நோக்கத்தை உடையவர்களாயிருப்பதில்லை. சினிமாவை, பணத்தை முதலாகப்போட்டு வியாபாரம் செய்து லாபம் சம்பாதிக்கும் ஒரு தொழிலாகவே அவர்கள் கருதுகிறார்கள். இவர்களுக்கு, படத்தின் தரத்தைப் பற்றிய கவலையே இல்லை. மற்ற பழைய சினிமா முதலாளிகளும், சில புகழ்பெற்ற நடிகர்களைப்பொறுக்கி, ஏதாவது, ஒரு அபத்தமான கதையைத் தேர்ந்தெடுத்து, நல்ல பாடகிகளை பின்னணி சங்கீதம் பாடச்செய்து, இங்கு ஒரு நடனம், அங்கு ஒரு (சம்பந்தமற்ற) பாரதிபாட்டு, அர்த்தமில்லா சித்தர ஹாஸ்யம். இவை எல்லாவற்றையும் புகுத்தி, காமா சோமா என்று ஏதோ படம் எடுத்து விடுகிறார்கள். அநேகமாக பெண்களின் மாயவலையில் விழுந்து கரையேறின பக்தர்களின் கதைதான்! அதிலும் அப்பெண்களைப்பற்றிய சிங்கார ரச கட்டங்களுக்குத்தான் பிரதான்யம் கொடுக்கப்படுகிறது!

ஐயோ, காதல், காமம் இவைகளை அடிப்படையாகக்கொண்ட கதைகளைத் தவிர, இவர்களுக்கு வேறொன்றுமே கிடைக்கவில்லையா? தாய், தந்தை, மகன், சகோதர சகோதரி இவர்களின் உறவைப் பற்றிய கதைகளே இல்லையா? சரத்சந்திரர், டாகூர், இன்றும் தமிழிலேயே வெளிவரும் பல உயர்ந்த ஆசிரியர்களின் நாவல்களிலே எவ்வளவோ கதை கிடைக்குமே! நம்முடைய சரித்திரம் பூராவும் அன்னிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடின சுதந்திர வீரர்களின் கதை அல்லவா! மனுநீதி வழங்கி அரசு செலுத்திய மன்னர்களின் வாழ்க்கையிலே இவர்களுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லையா? தினசரி வாழ்க்கையைப் பற்றிய பிரச்னைகளையெல்லாம் ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது?

நமது தேசத்தில் பெரும்பான்மையோர் கிராமவாசிகள் அறியாமையிலும் தரித்திரத்திலும் மூழ்கியிருக்கும் இவர்களை புது மனிதர்களாகச் செய்வது நம் கடமை. இதற்குரிய பல சாதனங்களில் சினிமாவும் ஒன்று. பொழுதுப் போக்குக்காக அவர்கள் சினிமா பார்க்கும்பொழுது, 'அவர்களுக்கு திரைமூலமாக அறிவை ஊட்டலாம் நகரங்களில் வேலை செய்யும் பாட்டாளி மக்களுக்கும் இது பயன்படும் மற்ற சமூகத்தாரும் இதனால் லாபமடைவார்கள் சுகாதார வாழ்க்கை நவீன விவசாயத் தொழில் முறைகள். தொழில் வளர்ச்சி. தொழிலாளிகளின் பிரச்னை. சமூக ஒற்றுமை. தேசத்தின் முன்னேற்றம் இவற்றையெல்லாம் அடிப்படையாகக்கொண்டு. மிகவும் சாமர்த்தியமான முறையில் படங்கள் தயாரிக்கப்படவேண்டும் ஆனால் ஒரு குறிப்பிட்ட பிரசாரம் நடக்கிறது என்று தோன்றச் செய்யாமல் கதையிலே விஷயங்களை நாசூக்காகச் சேர்த்தல் மிகவும் அவசியம்.

மேற்கூறினவைகளிலிருந்து, இப்படிப்பட்டச் சிறந்த சாதனம், தேர்ந்த திறமைசாலிகளின் கையில் இருப்பது மிக அவசியம் என்பது புலனாகிறது. மத்திய, மாகாண சர்க்கார்களின் விளம்பர இலாக்காக்கள் இவ்விஷயத்தில் மிகவும் சிரத்தை காட்டவேண்டும் இது சம்பந்தமாக கீழ்க்கண்ட விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும்.

1. சினிமாப்பட முதலாளிகள் ஒரு சங்கம் ஏற்படுத்தி, தேச முன்னேற்றத்தைத் தங்கள் இலட்சியமாகக்கொண்டு நல்ல படங்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

2. கதைகளில் வரும் சம்பாஷணைகள் மிகவும் அரிய கருத்துக்கள் அடங்கியும் சுலபமான நடையிலும் இருக்கவேண்டும்.

3 பாட்டுக்கள், நடனங்கள், முதலியவற்றை அனுவசியமாகவும் அதிகமாகவும் படங்களில் கொண்டு வரக்கூடாது இதனால் கதைகளின் போக்குத் தடைப்படும். வேண்டுமென்றால், நடனம், சங்கீதம் நிறைந்த சில படங்களை தனியாகவே தயாரிக்கலாம் ஆனால் நம் லட்சியத்தை ஒருபொழுதும் மறந்துவிடக்கூடாது.

4. படங்கள் சாதாரணமாக சுமார் 2 அல்லது 3-மணி நேரத்திற்குமேல் ஓடக்கூடாது நல்ல உயர்தரப்படங்கள் அநேகமாக இவ்வளவு நேரம்தான் ஓடுகின்றன.

5. படம் திரையிடப்படும் தியேட்டர்கள் சுகாதார வசதிகள் நிறைந்ததாக இருக்கவேண்டும் முக்கியமாக கீழ்வகுப்புகள் கவனிக்கப்படவேண்டும்.

தேச நிர்மாண திட்டத்திற்கு உதவியாக இருக்கும் இந்தச் சிறந்த சாதனத்தை நாம் சரியாகப் பயன்படுத்திக்கொள்வது நமது கடமை.






உலக வாழ்க்கையை சொப்பன வாழ்க்கை என்று கூறுகிறார்கள். சற்று வேதாந்த மனப்பான்மை கொண்டவர்கள் அதில் மயங்கிப் போகாதே என்றும் நம்மை எச்சரிக்கிறார்கள் ஆனால், எனக்கு சொப்பன வாழ்வு மனத்திற்கு மிகவும் உவகையைக் கொடுக்கிறது சொப்பனங்கள் சுவை மிகுந்து ஒரு உற்சாகத்தை அளிக்கின்றன சொப்பனத்தில் உருவானதே கிறிஸ்து புராணம் இயேசு கிறிஸ்து அவதரித்து நாட்டினர்க்கு நல்ல வழிகளை காட்டினார் சங்கரர் ராமானுஜர் முதலியவர்களும் அவதரித்து சாதி மத சமய சச்சரவுகளைத் தீர்த்து மாந்தர்களை உய்வித்தார்கள். எல்லா மதங்களும் ஒரே விஷயங்களைத்தான் சொல்லுகின்றன 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' 'நன்றே கருதுவீர் நானிலத்தோரே'' என்றுதான் மதங்கள் நல்லுபதேசங்கள் செய்கின்றன இதிஹாஸங்களும், புராணங்களும் இதையேதான் எடுத்துச்சொல்லுகின்றன நமது புராணக் கதைகளில் அற்புதமான கற்பனைகள் காணப்படுவதைப்போலவே கிறிஸ்தவ மத கிரந்தங்களிலும் கதைகள் கற்பனைகள் நிறைந்துள்ளன நம்மில் அநேகர் கிறிஸ்தவப் பள்ளிகளில் படித்தவர்கள் படித்து அறிந்தவர் இருக்கிறார்கள். ஆனால் மதாபிமானம் என்ற குருட்டுப் பேய் நமது கண்ணை இறுக மூடி விடுவதால் பிற மதத்திலுள்ள அதிசயங்களையும், அற்புதங்களையும்கூட நாம் கவனிக்கமுடியாதபடி ஆகிவிடுகிறது. நமது கிருஷ்ணனும் சங்கரனும் எப்படி அற்புதமாகப் பிறந்து வளர்ந்தனரோ அதே போல் ஏசுநாதரும் அவதரித்து உலகத்தவருக்கு ஞான உபதேசம் செய்தருளினார்.

"கன்னி மேரி கருப்பம் தரித்தாள் கடவுளருளால் ஏற்கெனவே கல்யாணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது கணவனாகநிச்சயிக்கப்பட்டிருந்த யோசேப்பு மிக நேர்மையானவன். ஆயினும், மேரி விஷயத்தில் சிறிது தயக்கம் ஏற்பட்டது ஆனால் கடவுள் அவனை அவ்விதம் வெகுநாள் கலக்கமுறப் பண்ணவில்லை. ஒருநாள் யோசேப்பு கனவு ஒன்று கண்டான் தேவ தூதன் ஒருவன் வானிலிருந்து இறங்கினான். "உன் மனைவி உலக ரட்சகனைப் பெறுவாள். இது ஆண்டவனின் அருள் உன் மனத்தை வீண் சஞ்சலத்தில் உழலவிடாதே! "தூதன் மறைந்தான் யோசேப்பு கண்ணை விழித்தான். கடவுள் அருளை வியந்தான். கலவரமும் திகைப்பும் அவன் மனத்தை விட்டு அகன்றன. குமாரனின் வரவை எதிர்பார்த்து நின்றான் மனைவியை மகிழ்வுடன் ஆதரித்தான் யோசேப்பு போன்ற புருஷ உத்தமனைப் பார்க்கமுடியாது குமாரனும், உரிய காலத்தில் உதித்தான் தந்தை யோசேப்பு அகமகிழ்வுடன் இயேசு' என்று பேர் வைத்தான் இந்த தெய்வக் குழந்தை இயேசு யூதேயாவில் பெதல்கேமில் பிறந்தான்.

நாட்டிலுள்ள நல்லோர், அறிஞர், சாஸ்திரிகள் யாவரையும் அவர் பிறப்பு உணர்ச்சி கொள்ளச் செய்தது. நாட்டில் நல் நிமித்தங்கள் பல தோன்றின காந்த சக்தியைப்போல் அவர்பிறப்பு பலரைத்தம்பால் இழுத்தது. அவர்களில் முக்கியமானவர்களும். பிரபலஸ்தர்களும், விரைந்து எருசலேம் நாட்டிற்குச் சென்றார்கள். அங்கு அரசு செலுத்தி வந்த ஏரோது மன்னனைக் கண்டு வணங்கி தங்கள் உள்ளத்தில் எழுந்த யோசனைகளைச் சொன்னார்கள்.

"யூதருக்கு அரசன் பிறந்துவிட்டான் வானில் தோன்றிய புது நட்சத்திரம் அதை எங்களுக்கு அறிவித்து விட்டது அந்த விண்மீனைக் கிழக்குத் திசையில் கண்டோம். அந்த தேவனை அடிபணிய ஆவல் கொண்டு வந்தோம். அந்த நற்செய்தியை தங்களிடம் சொல்ல ஆவலினால் வந்தோம் என்று ஆனந்தம் பொங்க அவர்கள் கூறினார்கள்.

ஏரோது மன்னனுக்கு இந்தச் செய்தி வேப்பங்காயைப்போல் கசந்தது. மனம் திடுக்கிட்டு, உடல் அயர்ந்து காணப்பட்டான் உடனே பிரதம குருவை அழைத்து வர ஆட்கள் விரைந்தனர் கிறிஸ்து எங்கே பிறந்திருப்பார் என்று ஜோஸ்யம் பார்க்கச்சொன்னான். பிரதம குருவும் சாஸ்திரிமாரும் அறிவு மண்டலத்திலே சுற்றிப் பார்த்து, அறிந்து பின் வருமாறு சொன்னார்கள்:

ஏரோது மன்னனே! இயேசு யூதேயா தேசத்தில் பெதல்கேமிலே பிறப்பார். ஞானகுரு பிறப்பதற்கு

அந்த ஊரே பாக்யம் செய்திருக்கிறது

இதைக் கேட்ட ஏரோது மன்னன் முதலில் தனக்குச் செய்தியறிவித்த சாஸ்திரியாரை அழைத்து "அறிவிற் சிறந்தவர்களே நட்சத்திரம் உதித்ததைக் கொண்டு. பிள்ளை பிறந்ததை அறிந்தீர்கள் நீங்கள் உங்கள் கண்ணுர அந்தக் குழந்தையையும் பார்த்து வந்தால் நல்லது நானும் அந்தக் குழந்தையை தரிசித்து இன்புற வேண்டும் அதனுல் நீங்கள் எல்லாரும் முதலில் பெத்லகேமுக்குச் செல்லுங்கள்" என்று அவர்களை அனுப்பிவைத்தான் ஆனுல் வஞ்சனையும் சினமும் அவனைப் பிடிக்கத் தொடங்கியது "நம்மைக் கொல்லப் பிறந்த பிள்ளையே இயேசு" என்று உள்ளங் குமுறினுன். இவன் இப்படிப் பொருமையை புகைக்குள் அமுங்கிக் கிடந்தான்.

சாஸ்திரிமாரோ, "எங்குள்ளான் இறைவன்" தம்மை வினவிக் கொண்டார்கள் வானை நோக்கினுர்கள் அதிசயம்! அவர்கள் தங்கள் ஊரிலே கண்ட நட்சத்திரம் அவர்கள் தலைக்கு மேலாக நகர்ந்து போவதைப் பார்த்தார்கள் நக்ஷத்ரம் காட்டிய வழியிலே நடந்தார்கள் குழந்தைஇயேசு அவதரித்துள்ள வீட்டுக்குமேல் வந்ததும் நக்ஷத்ரம் அப்படியே நின்றுவிட்டது சாஸ்திரிகள் சந்தோஷத்திலுல் ஆரவாரித்தார்கள் உள்ளே சென்றுர்கள் தாயையும் சேயையும் கண்டு பரவசமானுர்கள் பரம்பொருளைப் பாலகனுகக் கண்டு மகிழ்ந்து காணிக்கையாகப் பொன்னையும் மலரையும் வைத்தார்கள் ஏரோது மன்னனின் நகரத்திற்கு அவர்கள் திரும்பவில்லை ஏனெனில் அவர்கள் கனவில் தேவதூதன் தோன்றி "வஞ்சகனை நம்பாதீர்கள்" என்று எச்சரிக்கப்பட்டுவிட்டதனுல் அவர்கள் தங்கள் நகருக்குச் சென்றுவிட்டார்கள்.



யோசேப்பும். தேவனின் எச்சரிக்கைப்படி குழந்தை இயேசுவையும் தாய் மேரியையும் அழைத்துக் கொண்டு எகிப்தில் சென்று வசித்தான் இவ்விதம் மறைந்தே வளர வேண்டி வந்தது இறைவனுக்கு.

பிள்ளைப் பிறப்பின் உண்மையை அறிய ஆவல்கொண்டிருந்த ஏரோது மன்னன் ஏமாற்றமடைந்தான், கோபத் தீ கனல்விட்டெரிந்தது பெத்லகேமிலும் மற்றும் அதையடுத்த பிரதேசங்களிலும் உள்ள ஆண் குழந்தைகளையெல்லாம் கொல்வதற்கு ஆட்களை ஏவினுன் கொடுங்கோலரசனின் செய்கையினுல் நாடெங்கும் அழுகைக் குரல் எழுந்தது மக்களை இழந்த தாய்மார் மனம் கொதித்தனர் கடைசியாக நாடாளும் ஆசையினுலே ஏரோது இறந்தான்

மறுபடியும் யோசேப்புக்கு தேவன் குரல் கேட்டது. "மாளாத விரோதி மறைந்தான் இஸ்ரவேல் நாட்டுக்குச்செல்" என்று

யோசேப்பு மகனையும், மனைவியையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான் அந்த சமயம் ஏரோதுவின் மகன் அர்கெலாயு அரசாட்சி நடத்தலைத்தை கண்டாலே தூர விலகி நிற்கும் குணமுள்ள யோசேப்பு. "நாசரேத்து" என்னும் ஊரில் வந்து வசித்தான்.





ஜப்பானியரின் சேஷமாயிலிருந்த நிலையத்தின் தோற்றமே இந்தப் படம். ஆற்றில் போகும் படகுகளிலேயே குடிவாழும் ஜப்பானியர்களுக்கு உதவியாக அமைக்கப்பட்டுள்ள இவ்விடுதியில் வைத்தியமும் மற்ற சமூக வசதிகளும் அளிக்கப்படும். பிரஸவ விடுதியும், ஸ்நான அறைகளும், இதிலுண்டு. இது தெப்பம் போல ஜல மட்டத்தில் மிதந்துகொண்டிருக்கும்.


Estd: 1920

சேலம்
மூன்று தாமரை
பீடிகளை உபயோகித்து
சந்தோஷமடையுங்கள்

S.A.H

Regd. No. 2221

Prop: S. அஹமத் உசேன்,
கோட்டை, சேலம் S.I.R.



## பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி.
ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:

1. அருணுசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால்
ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும்.

தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.

"சுதேசமித்திரன்" புத்தகசாலை,

மவுண்ட் ரோடு. சென்னை.

# மூன்று சிநேக மணிகள்

ஸ்ரீமதி லட்சுமியம்மாள்

## வள்ளி திருமணம்

### ஒரு பழைய புதிய காலட்சேபம்

'இது என்ன, ஒரு விநோதத் திருமண அழைப்பு? பார்த்தீர்களா?' என்று சொல்லிக்கொண்டே வந்து சேர்ந்தாள் ஸ்ரீமதி விஜய சுந்தரி சங்கர். அந்த அழைப்பு ஆங்கிலத்தில் 'டைப்' செய்திருந்தது. மொழிபெயர்ப்பு வருமாறு:—

*முருகதாசர் முத்தமிழ் நேசர் முத்து விரப்பக் கவிராயர், புவிராயர் போற்றும் காலட்சேப கதைச் சக்ரவர்த்தி,*

**ஸ்ரீமான் வி. என். ஜே. சங்கரையும் ஸ்ரீமதி விஜயசுந்தரி சங்கரையும் சௌபாக்கியவதி வள்ளியம்மையைச் சைவத்திருவாளர் சுப்பிரமணியர்**

மணந்துகொள்ளும் திருமண வைபவம் 1949-ம் வருஷம், ஜூன் மாதம் 6-ந்தேதி திங்கட்கிழமை ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் நடைபெறுவதால், அதை முன்னிட்டு மாலை 5-மணிக்கு சென்னையில் …………இடத்தில் விஜயம் செய்யுமாறு வேண்டுகின்றார்.

இந்த அழைப்பைப் பார்த்ததும் மங்களம் சிரிப்பை அடக்கமுடியாமல் அடக்கிக்கொண்டாள். குப்பம்மாளோ சிரிக்காமல், புன்னகையும் புரியாமல், 'அவசியம் வந்து தம்பதிகளால் ஆசிர்வதிக்கப் பெறவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன் நானும்' என்றாள் விஜயசுந்தரிக்கும் விஷயம் புரிந்துவிட்டது.

ஒரு காலத்தில் தமிழ்நாட்டிலே பிரசித்தமாயிருந்த 'வள்ளியம்மை நாடகத்'தைக் கதா காலட்சேபமாகக் கவிராயர் நடத்தப் போகிறார். ஆனால் அந்தக் கர்நாடக காலட்சேபத்திற்கு இந்த நவநாகரிகப் பெண்மணியை அழைப்பானேன்? இப்படி வேடிக்கையாக அழைத்ததற்குக் காரணம் என்ன? இதுவும் ஒருவாறு புரிந்துவிட்டது விஜயசுந்தரியாளுக்கு, தன்னுள் தானே ஆலோசித்துப் பார்த்தபோது.

குப்புசாமி முதலியார் தம் பொருட்செலவிலே ஏற்படுத்திய காலட்சேபம்தான் இது. குப்பம்மாளிடம் கவிராயர், 'அம்மையவர்கள் தங்கள் சிநேகிதிகளுடன் விஜயம் செய்ய வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார் 'விஜயம்' என்றதும் விஜய சுந்தரியின் ஞாபகமே முதல் முதல் வந்துவிட்டது குப்பம்மாளுக்கு. அவளுடைய நவநாகரிக மனப்பான்மையைக் குப்பம்மாள் குறிப்பிட்டு, 'அவளை எப்படி அழைப்பது?' என்றாள். கவிராயர் நகைச்சுவையுள்ளவர். 'நான் அழைக்க உயர் திருவாளர் முருகனாரும் திருமதி வள்ளியம்மையும் ஸ்ரீலஸ்ரீ நாரதர் பண்டாரமும் நம்பிராஜா பகதூரும் வந்துவிடுவார்களே! தங்கள் நாகரிகத் தோழியாரை வரவழைப்பதா பெரிய காரியம்? என்று சொல்லிவிட்டு, மடமடவென்று ஓர் ஆங்கில அழைப்புப் பத்திரிகையும் நகைச்சுவையுடன் எழுதி வாசித்தார். குப்புசாமி முதலியார் சிரித்துக்கொண்டே அதற்குப் பொருள் சொன்னதும் குப்பம்மாள், 'இவ்வளவு நகைச்சுவையுள்ள கவிராயரின் காலட்சேபத்தை விஜயசுந்தரி கேட்டாவது கொஞ்சம் ஆஸ்திகபுத்தி கொள்ளலாகாதா?' என்று எண்ணி அந்த அழைப்பை அனுப்பவேண்டியதுதான் என்று ஒப்புக்கொண்டாள். அது அப்படியே குப்புசாமி முதலியார் ஆபீசில் 'டைப்' செய்யப் பெற்று அனுப்பப்பட்டது.

* * * * *

வேடஸ்ரீ நம்பிராஜா பகதூர், 'அமைச்சர்காள்! நமது நாடு (காட்டைத்தான்) செழிப்புற்றிருக்கிறதா? என்று கேட்டுக்கொண்டே சபைக்கு வருகிறான். அதற்கு முதல் மந்திரி, 'புலி, கரடி, மரம், மட்டை உள்பட எல்லா ஜீவராசிகளும் க்ஷேமம்தான். முருகக் கடவுளின் திருவருளால் தங்கள் அருமைப் புதல்வி தோன்றிய நாள்தொட்டு நமக்கும் உண்டோ குறை?' என்று பதில் சொல்லுகிறான்.

இதற்குள் சில குறத்திகள் வந்து மலைவளமும் காட்டுவளமும் பாடிய வண்ணம் கூத்தாடுகிறார்கள். நம்பிராஜாவின் பட்டமகிஷியான நங்கை மோகினியும் வேடர்பிரானுடன் தச் சிங்காசனத்திலே அமர்கின்றாள். விரைவில் வள்ளியம்மையும்,

மாதே வனக்குயிலே;
  மரகதமே மாமயிலே,
ஜோதிவயி ரமணியே,
சொர்ணக் களஞ்சியமே!

என்றும்

தேனே, திரவியமே,
  தெள்ளமுதே, ஓவியமே,
மானே, எம் கண்மணியே
  மகிழ்ந்துவர வேணும் அம்மா!

என்றும், இளந்தோழியர் பாராட்டிச் சீராட்டி அழைத்துவர, வந்து சேர்ந்து, அன்னைக்கு அருகே ஓர் ஆசனத்தில் உட்கார்ந்துகொள்கிறாள், ஒரு குட்டி ராணிபோலே.

இந்த ராஜ சபையின் நோக்கமே வள்ளியம்மையைத் தினைப்புனக்காவலுக்கு நியமிப்பது குறித்து ஆலோசிக்கத்தான். கூட்டம் முடிந்ததும்,

பாடகச்சிலம்பு சிலம்ப,-கலகலவென
  பாதசரங்கள் குலுங்க,

குறவள்ளி பாங்கியரோடு தினைப்புனம்போய்ப் பரண்மீது ஏறிக் காவல்செய்ய அமர்கின்றாள்

இங்கும் ஒரு குட்டிராணிபோலவே வீற்றிருக்கின்றாள். கவண் எறியக் கற்குவியலுடன் அப்போது திரிலோக சஞ்சாரியான பண்டாரத் திருவாளர் நாரதரும் விருத்தனுடன் சிவநாமாவளி இசைத்தவண்ணம் அந்த வழியாகப் போகிறார். 'பொன்னோ, மின்னோ? மேனகையோ, இந்திராணியோ?' என்று பிரமித்த வண்ணம் வள்ளியம்மையைப் பார்த்துக்கொண்டே போகிறார். போகும்போதே,

வேளுண்டு: விளையில்லைதானே;
மேவிக்கொள் குறவள்ளித் தேனே!

என்று வள்ளிநாயகி காதில் விழும்படி பாடுகிறார்.

இப்படிக் காட்சிகள் குறநம்பி ராஜாவின் அரண்மனையிலும், தினைப் புனத்திலும், பிறகு கழுகுமலைக்





இராணிப்புரத்திலுள்ள வால்ப் ஆங்ஜே என்ற பகுதியில் மாரி லேராடா பிரபு தொழிலாளர் குழந்தைகளுக்கு படிக்கவும், விளையாடவும் வசதி செய்துள்ளார்! அந்தக் காலனி குழந்தைகளை ஒழுக்க முறையில் பயிற்சியளித்து, சுத்தமாக வாழ நல்ல பழக்குகிறார்.

கந்தசாமி கோயிலிலும் மாறி மாறி வருகின்றன.

விண்ணுலகும் மண்ணுலகும்
  பார்த்து வந்தேன்,
வெகுகோடித் தலங்களெல்லாம்
  சுற்றி வந்தேன்
கண்ணிறைந்த சித்திரம்போல்
  கண்டதில்லை.

என்று சொல்லிக்கொண்டே கந்தஸ்வாமியின் திருக்கரத்திலே வள்ளியம்மையைத் தாம் கண்டபடியே எழுதிவைத்திருந்த ஒரு சித்திரத் திரைக் கொடுத்தார்.

வள்ளியம்மையின் பக்தியை உள்ளபடி உணர்ந்துகொண்ட முருகப்பெருமான் ஒரு வேட வாலிபன் போல் மாறுவேடம் பூண்டு,

அன்னமே, கிளிகளே! ஆலோலம்
கன்னங்கரும் காகமே! ஆலோலம்
காடை கவுதாரிகளே! ஆலோலம்

என்றெல்லாம் புன்னகவராளியில் பாடித் தினைப்பயிரைப் பட்சிகள் பட்சிக்காமல் தரத்த முயன்றுகொண்டிருக்கும் வள்ளியம்மை முன் வந்து சேர்கிறார். 'அம்மா, இப்படிப் பாடும்போது, எப்படி எங்கே போய் விடும் இந்தப்பறவைகள்?' என்று கேட்கிறார்.

புதியவேடருக்கும் வள்ளியம்மைக்கும் தர்க்கம் நடக்கிறது. அண்ணன்மார் வள்ளியைப் பார்க்க வந்ததும், புதிய வேடர் மறைந்து வேங்கை மரமாக நிற்கிறார். அவர்கள் புதிய மரத்தைக்கண்டு ஆச்சரியப்படுவதும் இந்த மரத்தை ஏதாவது செய்துவிடக்கூடாதே என்று வள்ளியம்மை கவலைப்படுவதும், உறவினர் போனபின் மரம் மறுபடியும் வேடராகிக் காதல் தெரிவிப்பதும், கடைசியாக முருகக்கடவுள் பண்டாரக் கிழவராய் வந்து வள்ளியுடன் தர்க்கம் செய்வதும், யானைமுகக் கடவுள் யானையாக

வருவதும். பயந்த வள்ளிக்கு தெய்வக் கிழவர் அருள்புரிவதும், வள்ளியம்மை திருமணம் மங்களமாக நடைபெறுவதும், ஏதோ புராண கதைபோல நடைபெறாமல், கண்முன் நிகழும் நிகழ்ச்சிகளாகவே வந்து போகின்றன.

* * * * *

காதா காலட்சேபம் முடிந்ததும் 'வள்ளியம்மையின் பக்தி எப்படி? முருகனின் அன்பு எப்படி?' என்று குப்பம்மாள் விஜயசுந்தரியைக் கேட்டாள். அதற்கு இவள், 'காதல் வெறியைத்தான் பக்தி என்கிறீர்களா?' என்று ஒரு பதில் கேள்வி போட்டாள். 'தீவிர பக்தியைத் தான் காதலாகக் காட்டுகிறது இந்தக் கதை. வள்ளியம்மை திருமணம் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்புதான் — விளங்கவில்லையா?' என்றாள் குப்பம்மாள்.

விஜயசுந்தரியோ கவிராயரின் இசைத்திறன், நடிப்புத்திறன், ஹாஸ்யத்திறன் முதலியவற்றைப் பெரிதும் பாராட்டி, 'இந்த நாகரிக யுகத்திலும் இந்தக் கல்யாணம் ரசிக்கத்தக்கது தான்' என்று ஒப்புக்கொண்டாள்.

# பூர்விகக் கலைச் செல்வம்

ராவி

## 13

## கைத்தொழில்

☆

நமது நாட்டுக்கு அமைந்த பல பெயர்களுள் கருமபூமி என்பது ஒன்று. அச்சொற்றொடர்க்கு "தொழில்களைச் செய்வதற்கு தகுந்த இடம்" என்பது பொருள். கைத்தொழில்கள் பெருகுவதற்கு நல்ல தாதுப் பொருள்கள் கிடைப்பதும், மக்கள் அறிவும் உழைப்பும் பெற்றிருப்பதும், வாணிகத்துக்கு வேண்டிய வசதிகள் அமைந்திருப்பதும் இன்றியமையாதவை. தொழிலின் வளர்ச்சியும் நுட்பமும் நாகரிக உயர்வின் அறிகுறிகள்.

நம் தமிழகம் சங்ககாலத்தில் மிகுந்த தொழிற் சிறப்பு வாய்ந்திருந்தது என்பதை ஒருவாறு முன் கட்டுரைகளிற் கண்டிருக்கிறோம். மதுரை, காவிரிப்பூம்பட்டினம் ஆகிய நகரங்களின் வாழ்க்கையைச் சுட்டிய போது அங்குள்ள கைத்தொழில்கள் எவ்வளவு கலைத் திறமைகளுடன் விளங்கிவந்தன என்பதையும் கண்டிருக்கிறோம்.

### உழவு

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை உணவு, ஆடை, குடியிருப்பு என்ற மூன்றுமேயாகும் தமிழர் எண்வகைக் கூலங்கள், பதினாறு வகைக் கூலங்கள் என்று கூறப்பட்ட தானிய வகைகளை நிரம்பப் பயிரிட்டு வந்தார்களென்றும், காவிரி நாடு வேலி ஆயிரம் கலம் நெல் விளைவித்தது என்றும், வேளாளர்கள் தமிழ்க் குடிகளில் மிக மேன்மைபெற்று வந்தனரென்றும் முன்னேயே கூறியிருக்கிறோம் 'இரவலர் சுற்றமும் புரவலர் கொற்றமும் உழவிடை விளைப்போர்' என்று உழவரைப் பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இவ்வாறு, உழவின் பெருமைகளை முன்பே ஒருவாறு கூறியிருக்கிறோமாகையால் அடுத்ததான ஆடை நெய்தலைப்பற்றி இங்கே காண்போம்!

### நூல் நூற்றல்

நூல் என்ற சொல்லுக்குப் பஞ்சு நூல், படிப்பு நூல் என்ற இரு பொருள்களிருப்பதை நாமறிவோம். இவ்விரு பொருள்களையும் பிணைத்துப் பவணந்தி முனிவர் என்ற ஆசிரியர் அழகாகப் பாடியிருக்கிற ஒரு பாடலை நன்னூலிற் காண்கிறோம். அதன்படி பஞ்சே சொல்; பஞ்சால் இழைக்கப்படும் இழையே சொற்களால் அமைக்கப்படும் தொடை; நூல் நூற்கும் பெண்ணே புலவன்; அவளுடைய கை, புலவனுடைய வாய்; கதிர் அவனுடைய அறிவு; இவ்வாறு பஞ்சி நூலும் படிப்பு நூலும் நூற்கப்படுகின்றன.

இச்செய்யுளில் நூல் நூற்கும் தொழில் பெண்களுடையது என்று காட்டிய கருத்து கவனிக்கத்தக்கது. பருத்தி தினைப்புனத்திலும் பிற கொல்லைகளிலும் விதைக்கப்பட்டு வந்தது அக்கொல்லைகளில் குருவி வந்து அவற்றைக் கவராமல் ஓட்டும் தொழில் பெண்களுடையதே 'பரிகி வித்திய எனல். குரீஇ ஓப்புவாள்' என்பது குறுந்தொகை. (72) 'பருவி விச்சி மலைச்சாரல் பட்டைகொண்டு பகடாடிக் குருவி யோப்பிக் கிளி கடிவார்" என்பது சுந்தரர் தேவாரம் (திருவையாறு) நூல் நூற்கும் வேலையிலும் பெண்டிர்களே அமர்ந்திருந்தனர் என்பதை 'நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளால் கைவன் மகடூஉ, தன் செயற்கை நலம் தோன்ற ஒரிழைப்படுத்தலாம் உலகத்து நூல் நூற்றல்' என்ற இறையனார் அகப்பொருள் உரையிற் காணலாம். இவ்வாறு நூல் நூற்கும் பெண்டிர்களுக்குப் பருத்திப்பெண்டிர் என்ற ஒரு பெயரும் ஏற்பட்டது. 'பருத்திப் பெண்டின் பனுவலன்ன' என்பது புறநானூறு (125) பொதுவாகப் பெண்டிர் எவரும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்றும், கைம்பெண்கள் இதனைத் தமக்குரிய தொழிலாகக் கொண்டிருந்தனர் என்று நூல்களிலிருந்து அறிகிறோம் 'ஆளிற் பெண்டிர் தாளிற் செய்த நுணங்கு நுண் பனுவல் போல' என்பது நற்றிணை (353.) 'ஆளில் பெண்டிர்—பொருள்தேடி வந்து பாதுகாக்கும் கணவனை இழந்த கைம்மை மகளிர்' என்று இதற்குப் பொருள் எழுதப் பெற்றிருக்கிறது. இவ்வாறு பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டுப் பெண்டிர்களால் இழைக்கப் பெற்ற நூலிழைகளையும் அவற்றால் செய்யப்பட்ட ஆடைகளையும் வடநாட்டினரான கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் மிகவும் பாராட்டிக் கூறியிருக்கிறது

### ஆடை நெய்தல்

நெசவுத் தொழிலைக் காருகவினை என்று நூல்கள் கூறுகின்றன. 'பருத்திநூல் பட்டுநூல் அமைந்து ஆடையாக்கலும், சிறத்தலும் பிறவும் காருக வினைத்தொழில்' என்பது திவாகர நிகண்டு. துணி நெய்வோருக்குக் காருகர் என்ற பெயர் உண்டாயிற்று. இவர்கள் பருத்திநூற் காருகர், பட்டுநூற் காருகர் என இருவகையினர்களாயிருந்தார்கள் எலிமயிர் என்ற ஒருவகை மயிராலும் ஆடை நெய்யும் வழக்கம் தமிழகத்திலிருந்தது. காவிரிப்பூம் பட்டினத்திலும், மதுரையிலும் காருகர் வீதிகள் தனியேயிருந்தன 'பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும், கட்டு நுண்வினைக் காருகரிருக்கையும்' என்பது சிலப்பதிகாரம் இவர்களுக்கு அச்சக்கட்டிகள் என்ற ஒரு பெயரும் உண்டு. மணிமேகலையில் காருக மடந்தை ஒருத்தியின் கதை கூறப்படுகிறது.



### எலிமயிர் ஆடை

ஆடைகளைப்பற்றிப் பொதுவாகப் பார்ப்பதற்கு முன் எலிமயிர் ஆடை என்பது யாது என்று காண்போம். சீவக சிந்தாமணி என்ற நூலில் பல இடங்களில் எலி மயிரினால் செய்யப்பட்ட போர்வைகளைப்பற்றிய பிரஸ்தாபம் வந்திருக்கிறது பனிப்பருவத்தில் அப்போர்வை பெரிதும் பயன்பட்டது. 'மாதரார், பங்கயப் பகைப் பருவம் வந்தென, எங்கும் இல்லன எலிமயிர்த் தொழில், பொங்கு பூம் புகைப் போர்வை மேயினார்" என்பது அந்நூலின் பாட்டொன்றின் பகுதி. அவ்வெலி நெருப்பைத் தின்னுமென்றும், அக்காரணத்தால் அதன் மயிரால் செய்யப்பட்ட கம்பளம் நெருப்பைப்போல் கதகதப்பாய் இருந்ததென்றும்மற்றொருபாடல்கூறுகிறது காட்டுப் பூனையைவிட அவ்வெலி பெரியதாயிருக்குமென்றும், அதன் மயிர் பவழத்தைப்போன்ற நிறமுடையதாயிருக்குமென்றும் கூறப்படுகிறது 'இந்திரகோப நிறத்தன் மயிர்ப பேரெலி' என்று சூளாமணி கூறுகிறது இந்த எலி மயிரைப் பற்றித் தமிழ் நூல்கள் பலவற்றிலும் கூறப்பட்டிருப்பதால் இப்படிப்பட்ட ஒரு பிராணி இங்கு இருந்து வந்து பின்பு அழிந்துவிட்டது என்று நாம் கொள்ளலாம் அமெரிக்காவில் கஸ்தூரி எலி என்ற ஒருவகை எலியின் உரோமத்தைக்கொண்டு உயர்ந்த ஆடைகள், கம்பளங்கள் முதலியவற்றைச்செய்கிறார்களென்று வாழ்க்கையின் கலைகள் என்ற நூலிலிருந்து தெரிந்துகொள்கிறோம். இவ்வெலி மயிராடைகளுக்கு விலை அதிகமுண்டு.

இவ்வாடைகளுக்குப் பலவகை நிறங்கள் ஊட்டி வந்தனர். வண்ணக்கலிங்கம், வெண் துகில், நீல நிருடை என்ற வாக்குகள் அடிக்கடி நூல்களில் வருகின்றமையால் பலவகை நிறங்களில் இவ்வாடைகள் செய்யப்பட்டிருந்தன என்று அறிகிறோம் வெண்மை நிறம் மங்கல நிறமாக நினைக்கப் பட்டதால் வெண் துகிலை மங்களத்துகில் என்றார்கள். துறவிகள் துவராடை அணிந்து வந்தார்கள்.

### ஆடை வகைகள்

பண்டை காலத்தில் நம் நாட்டில் பலவகை ஆடைகள் வழங்கி வந்தன என்பதைச் சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையால் அறிகிறோம். கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண் துகில், சுண்ணம், வடகம், விடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக் காசு, வேதங்கம், புங்கர்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல் யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி என்ற வகைகள் அங்கு கூறப்பட்டிருக்கின்றன.

பெருங்கதை என்னும் நூலில் பின்வருமாறு ஆடைவகைகள் ஓரிடத்தில் கூறப்பட்டிருக்கின்றன. அவை:- பாதிரிப்பூவின் உட்புறத்தை விரித்தது போலத் தோன்றும் கோசிகம் என்னும் பட்டாடை; வங்கதேசத்திலிருந்து வந்த சாதரென்னும் உடை; (நீல நிறம் விளங்கும் பூத்தொழிலையுடைய நீலச்சாதர் என்று சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டிருப்பது இதுவே) கோங்கம் பூவைப்போன்ற பசுமை நிறத்தையுடைய கலிங்கம்; பட்டாடை; நீல ஆடை; சிவப்பு ஆடை; வெள்ளை ஆடை; நூலாலும், பட்டாலும், நாராலும் செய்யப்பட்ட பல்வேறு ஆடைகள்.

துகில், கலிங்கம் என்பன ஆடைகளுள் சிறந்தவையாகக் கருதப்பட்டன. அறுவை, துணி என்பன நீண்ட நெசவிலிருந்து சிறிய அளவில் கிழிக்கப்பட்டவற்றைக் குறிக்கும் சொற்கள். இவ்வாடைகள் மிக நுட்பமாகவும் மென்மையாகவும் அழகாகவும் நெய்யப்பட்டிருந்தன. இழை போனவழி இன்னதென்று சொல்ல முடியாதபடி அவ்வளவு நெருக்கமாய் அவை நெய்யப்பட்டிருந்தன. 'அரவுரியன்ன அறுவை" காம்பு சொலித்தன்ன அறுவை, 'ஆவியன்ன அவிர் நூல் கலிங்கம்' 'பாம்புரித்தன்ன வான் பூங் கலிங்கம்' 'நூண் நூற் கலிங்கம்' 'பால் நிலாக் கதிரன அம்மென் பூந்துகில்' 'கழைபடு சொலியின் இழையணி வாரா ஒண்பூங் கலிங்கம்' என்ற தொடர்களால் நம் பண்டை நாட்டு நெசவாளர்கள் மிகநுட்பமான ஆடைகளை நெய்து வந்தார்களென்பது தெரியவருகிறது. பாம்புச் சட்டையைப் போலவும், மூங்கிலின் உள் ஆடையைப்போலவும், பாலின் ஆவியைப்போலவும், நிலாவைப் போலவும் அவை இருந்தன என்பது மேலே காட்டியவற்றின் பொருளாம். அரசருடைய எண் பேராயத்தார் என்ற அதிகாரிகளுள் ஆடைகளைக் கவனிப்பவரும் ஒருவர் இருந்தாரென்று 'சாந்துபூ கச்சாடை பாக்கிலை கஞ்சுகம் நெய் ஆய்ந்த இவரெண்மராயத்தார்' என்ற பாடல் காட்டுவதால் ஆடைத் தொழிலை வளர்க்கவும் காக்கவும் அரசாட்சியில் ஒரு தனிப்பகுதி இருந்து வந்த செய்தியையும் நாம் அறிகிறோம். வடமொழியிலுள்ள அர்த்த சாஸ்திரம் என்னும் நூலில் நெசவுத் தொழிலை மேற்பார்வையிடத் தனியதிகாரிகள் இருந்தார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆடைநூல் என்ற ஒரு நூல் இருந்த செய்தியையும் நாம் யாப்பருங்கல விருத்தியென்ற நூலின் உரையிற் காண்கிறோம். இப்படிக் கலை முறைப் படி மிக மேன்மையடைந்திருந்த



கணவன்— "எவ்வளவு நாளா இந்த பனியனைப் பின்றுவே! எப்போதான் முடிக்கிறதா உத்தேசம்?"
மனைவி— அநேகமாக முடிந்து போயிடுச்சு. கழுத்திலே சுருக்குப் போடறதா, பிடிச்சாப்பிலே போடறதான்னு யோசனை!
கணவன்:— "முடிவா, ஏதாவது ஒன்றை சீக்கிரமா செய்துடு!"

இத்தொழிலை நாம் நாளடைவில் கைவிட்டமையால் அந்நியர்க்கு அடிமையானோம் என்று சொல்வது மிகையாகாது.

## உடை வகை

மக்கள் குறிஞ்சி நாட்டிலே வாழ்ந்தபோது இலைகளாலும் தளிர்களாலும் உடைகளாக்கி அவற்றை மகளிர்க்குக் கொடுத்துவந்தார்கள் என்று பழைய நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் நாகரிகம் முதிர்ந்த பிறகு இத் தழைஉடைகள் மறைந்துவிட்டன. அவற்றிற்குப் பதிலாக பஞ்சாடைகளும், நாராடைகளும், பட்டாடைகளும் ஏற்பட்டன. துன்னகாரர் என்ற தையற்காரர்களும் உண்டானார்கள். ஆகவே தைக்கப்பட்ட ஆடைகளும் வழக்கில் வந்தன. எப்படியெல்லாம் ஆடைகள் அமைக்கப்பட்டன என்ற முழுச் செய்தியும் நமக்குத் தெரியாவிட்டாலும் சிற்சில உடை முறைகளைப் பற்றி நாம் நூல்களிற் கண்டவற்றை உரைக்க முயல்வோம்

வட்டுடை என்பது முழந்தாளளவில் உடுக்கும் ஒருவகை உடையாகும். பேடிக்கோலம் ஆடுபவர் வட்டுடை தரிப்பர் என்று மணிமேகலை கூறும். பெருங்கதை என்ற நூலில் வாசவதத்தை என்ற மணமகள் மேலே ஏக உத்தரியமும், அரையில் வட்டுடையும் தரித்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இவ்வுடை இளமகளிர் அணியக்கூடியதாகக் கருதப்படலாம். 'வட்டுடை பொலிந்த தானை' என்றதால் போர் வீரர்களும் வட்டுடை தரித்தார்கள் என்று தெரிய வருகிறது.

கஞ்சுகம் என்பது உத்தியோகஸ்தர்கள் அணிந்துகொள்ளும் ஒருவகைச் சட்டை. தூதர், பிரதானிகள் முதலியோர் இச்சட்டை அணிவது வழக்கம். அரசவைக்குச் செல்லும் சிறிய தொழிலாளிகள்கூட ஏதேனும் ஒருவகை உடல் போர்வை அணிந்திருந்தார்கள் போலும். கோவலனைக் கொல்வித்த தட்டான் 'மெய்ப்பைபுக்கு...கைக்கோற் கொல்லன்' என்று கூறப்படுகிறான். மெய்ப்பை என்பது சட்டை. ஒரு போர்த்தலைவன் தன் பாடி வீட்டிலிருந்தபோது அவனைச் சூழ்ந்து 'படம்புகு மிலேச்சர்' பலர் இருந்தனர் என்று முல்லைப்பாட்டு என்ற நூல் கூறுகிறது. படம் என்ற சொல்லுக்கும் சட்டை என்பதே பொருள். ஆகவே, போர் வீரர்களும் ஒருவகைச் சட்டை அணிந்திருந்த செய்தியை அறிகிறோம். அந்ய நாட்டினரான யவனருடைய உடை வகையையும் தோற்றத்தையும் பத்துப்பாட்டு பின்வருமாறுகூறுகிறது:- "மத்திகை வளை இய மறிந்து வீங்கு செறிவுடை, மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து. வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்". இதன் பொருள்:—

ஓரம் மடித்துப் புடைத்திருக்கின்ற உடைச் சுற்றுக்குள்ளே குதிரைச் சம்மட்டியைச் செருகிக்கொண்டிருந்தார்கள். சட்டையிட்டு அச்சமுண்டாக்கும் தோற்றத்தையும், இயல்பான உடல் வலிமையையும், வீரத்தையும் அவர்கள் பெற்றிருந்தார்கள்" என்பது அரசருடைய மெய்காப்பாளர்கள் தலைப்பாகையையும் தரித்திருந்தார்கள்.

பெரிய மனிதர்கள் 'பூந்துகில் தானை பற்றி' நடந்தார்கள் என்று கூறிய பகுதியால் ஆடையைக் கச்சங்கட்டுதலும், அதன் தொங்கும் தலைப்பைத் தூக்கிப்பிடித்து நடத்தலும் உண்டு என்பது தெரியவருகிறது. தானைஎன்பது தலைப்பு. அவர்கள் ஆடை தரையில் புரளும்படியாகக் கட்டிக்கொள்வரென்றும் அறிகிறோம். புடைவை என்ற சொல் ஆண்பாலருடைய உடைக்கும் சங்க காலத்தில் வழங்கிவந்தது புடைவைகளை மடித்துக் கடைகளிலே வைத்திருப்பதன் தோற்றம் தெளிந்த அலைகளினிடையே விளங்குகின்ற மணல் பரப்பைப்போல இருக்குமாம்.

பெண்டிர்களும் தம் உடைகளை நீண்டும் தாழ்ந்தும் அணிந்திருந்தனர் என்று தெரிய வருகிறது இதற்குக் கொய்சகம், தோக்கை என்ற பெயர்கள் அமைந்திருந்தன. 'தூசு லாம் நெடும் தோகையின் நல்லவர்' என்ற சிந்தாமணி அடிக்கு 'ஆடையிலே அசைகின்ற கொய்சகத்தையுடைய மகளிர்' என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது. 'நீள் தாழ்பு தோக்கை' என்ற பரி பாடற் பகுதிக்கு 'நீண்டு தாழ்ந்த தொங்கல்' என்று பரிமேலழகர் உரை கூறுகின்றார். மாதர் தம் இடையில் ஆடைக்குள் மேகலை என்ற இடையாபரணத்தையும் குறங்குசெறி என்ற துடையாபரணத்தையும் அணிந்திருந்தார்கள்.

இவ்வாறு பல வழிகளிலும் சிறப்புப் பெற்ற 'நம் துணிகள் அந்நிய நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு அவர்களால் மிகவும் கொண்டாடப்பட்டன. ஏறக்குறைய 2,000 ஆண்டுகட்கு முன்னே தமிழ் நாட்டுக்கும் உரோம ராஜ்யத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. இன்றைக்கு 2400 ஆண்டுகட்கு முன்னிருந்த ஹெரடோடஸ் என்ற கிரேக்க ஆசிரியர் நம் நாட்டுப் பஞ்சைப்பற்றி "அங்கே மரங்களில் உரோமம் வளர்கிறது" அதனால் செய்யப்படும் துணிகள் ஆட்டு ரோமங்களில் உண்டாகும் கம்பளங்களைவிடச் சிறந்தது' என்று கூறியிருக்கிறார் இவ்வாறு உலகம் போற்றும் நிலையிலிருந்த நாம் இன்றிருக்கும் நிலையை நோக்கி ஒருபுறம் மனச் சோர்வையும் மற்றொருபுறம் மன ஊக்கத்தையும் பெறலாம். சோர்வடைவது அறிஞர்களுக்கு அழகன்று. பெருமையுணர்ச்சியோடு ஊக்கங் கொள்வதே அவர் கடமை.



# சொப்பன வாழ்க்கை

ஆர்வி

தமிழ்நாடு ... 144098 ... 600 008.

## 39

சுசீலாவின் மென்மை பொருந்திய இருதய மலர் வாடி வதங்கிப் போய்விட்டது. அன்பை மறந்துவிட்ட கணவனின் நடத்தையும், அன்பின் வரம்பு தெரியாமல் நடந்துகொள்ளும் மைத்துனனின் அசட்டு நடத்தையும் அவளை அடித்து வீழ்த்திவிட்டன.

அவள் தோற்றுப்போனாள்! பரந்த உலகத்தில் கணவன் குற்றவாளியாய் இருந்தாலும், அவளுக்குத் துரோகம் செய்தவனாகவே இருந்தாலும், அவனுடைய காலடியைத் தவிர அவளுக்கு வேறு புகலிடமில்லை. நல்ல பெயரும் மன அமைதியும் வேண்டுமென்றால் எல்லா நிந்தைகளையும் தீரமாய் எதிர்த்து நிற்கும் சுபாவமும், மனத் தெம்பும் இருந்து சிறிதும் பிரயோசனமில்லை என்பதை அவள் அநுபவம் கூறிற்று. அழகும் அறிவும், தீரமும் தெம்பும், நேர்மையும் நெறியும் பெண்கள் சம்பந்தப்பட்டவரையில் பலனற்றவை என்றே அவள் உணர்ந்தாள். இதில் ஆச்சரியமான விஷயம் இவ்வளவுக்குப் பிறகும் கணவனை அடியோடு மறக்கும் அளவுக்கு அவனிடம் அவளுக்கு வெறுப்பு ஏற்படாததுதான். இதுவே ஒரு தோல்வி என்று அவள் மனம் கருதியது.

சொப்பனத்தில்தான் இறந்துவிட்டதுபோலவும் தன்னைச் சுற்றி அழுபவர்களுக்குத் தானே ஆறுதல் கூறுவது போலவும் ஒருவனுக்குத் தோன்றுகிறமாதிரி அவளுக்கு நடந்தவை யாவும் தோன்றின. இதை மனசில் நினைத்துக்கொண்டுதான் சுவாமியை இரண்டு நாள் கழித்து ஊருக்குப்போகச் சொல்வோம் என்று சுசீலா முதலில் நினைத்தாள். நடந்ததையெல்லாம் ஒளிவு மறைவின்றித் தன் மாமனார் மாமியாரிடம் பக்குவமாய்க் கூறி நடந்துபோனவைகளுக்குப் பரிகாரம் தேட வேண்டும் என்பதே அவள் நோக்கம். நிரயோசியாமல், நிதானம் இல்லாமல் கணவன் தனக்குத் துரோகம் செய்யத் துணிந்து விட்டான் என்ற அதிர்ச்சியில் தவறுதலாக நடந்துகொண்டு விட்டாள். அந்தத் தவறு அவளையறியாமல் இப்படி ஒரு சிக்கலில் கொண்டு அவளைப் பிணைத்துவிட்டது. கணவன் முகத்தில் விழிப்பதில்லை என்ற உணர்ச்சி வேகத்தில் எதிர்காலத்தின் எல்லையற்ற பரப்பு அவளுக்குப் புலப்படவில்லை போகிறவரை போவது என்ற அரைகுறைத் தீர்மானத்துடன் கிளம்பி வந்துவிட்டாள். முதலிலேயே சங்கடம் முளைத்துவிட்டது. அதாவது அண்ணாவின் வீட்டில் அவளால் ஒரு மாதத்துக்குமேல் இருக்கமுடியவில்லை அடுத்தபடியாக இங்கே அப்பாவிடம் கிராமத்துக்கு வந்தும் நிலைமை சீராகவில்லை. சுவாமியின் குருட்டுப்பக்தியும் ஊராருடைய சந்தேகப் பார்வையும் வளர்ந்துகொண்டே போய்க்கொண்டிருந்தன நடுவில் தெய்வமாகச் செய்த சதி வேறு—அவள் கர்ப்பவதி என்பது! முகத்தில் தோன்றியுள்ள மாறுதல் வேறு ஒன்றுமில்லை: அவள் தோல்வியின் சின்னம்தான் அது!

கடைசியாக குமார் ஊருக்குச் சென்றபோது அவள் முகத்தைப்பார்க்கவெட்கியோ, வெறுத்தோ, "போய்விட்டு வருகிறேன் சுசீலா!" என்று சுவரைப் பார்த்துக்கொண்டு சொல்லிவிட்டுப் போனது அவளது நினைவுக் கிழியில் அழியாத ஓவியம்போலப் பதிந்திருந்தது. அந்தக் காட்சியின் அருவருப்பு அவள் மனசைவிட்டு அகலவேயில்லை.

எல்லாம் வழக்கம்போல நடந்துகொண்டிருந்தன. சுசீலா யாரிடமும் சரியாகப் பேசவேயில்லை. தன்னுடைய கடமையை நிறைவேற்றுகிறவள் மாதிரி சீதா ஒருநாள் கூட வரத் தவறுவதில்லை. ஆனால், சுசீலாவைப்போலவே அவள் மனசிலும் ஒரு மாறுதல் ஏற்பட்டு வந்தது. இளமையின் துடிப்பும், உற்சாகத்தின் குறும்புத்தனமும் அவளிடம் தென்படவில்லை. சுசீலாவின் மனத்துக்குள் புயல் குமுறிக்கொண்டிருப்பதை அவள் அறிந்து கொண்டாள். அந்தச் சூறாவளி என்றைக்குச் சீறிக்கொண்டு வெளிப்படுமோ என்று எல்லோருக்குமே திகிலாய் இருந்தது. சுசீலாவுக்குச் சாப்பாடுகூடச் சரியாகச் செல்லவில்லை. சாப்பிட உட்கார்ந்தால் குமட்டலும் வாந்தியும் ஏற்பட்டுவிடும். மசக்கையின் சின்னம் அவள் கர்ப்பிணி என்பதை ஊர்ஜிதம் செய்துவிட்டன.

ஒரு வாரம் கழித்து ஒரு நாள் சாயங்காலம் வாசலில் கண்ணுச்சாமி—அஞ்சலையின் புருஷன்—சுப்பண்ணாவிடம் இரைந்து பேசிக்கொண்டிருந்தான். அஞ்சலையை அழைத்துப்போக அவளுடைய தாயும் தாய் மாமனும் ஊரிலிருந்து வந்திருந்தார்கள். கண்ணுச்சாமிக்கு அவளை அனுப்பச் சிறிதும் சம்மதமில்லை இரண்டு நாட்களாக வாக்குவாதமும் சச்சரவும் நடந்தபின்னர் ஒரு முடிவும் ஏற்படாமல் சுப்பண்ணாவின் மத்தியஸ்தத்துக்கு வந்துவிட்டது விஷயம். தன் கட்சியிலுள்ள நியாயத்தை கண்ணுச்சாமி உரத்த குரலில் கூறிக்கொண்டிருந்தான். வாசலை ஒட்டிய ஜன்னலில் உட்கார்ந்து இதைக் கவனித்துக்கொண்டிருந்தாள் சுசீலா. அப்பொழுது சீதாவும் இருந்தாள் அங்கே.

"வாசலில் என்ன சண்டை, மன்னி?" என்று கேட்டாள் சீதா.

சுசீலா வெறுப்புக்கலந்த புன்சிரிப்புடன், "உலகத்தில் இரண்டுவிதமான பெண்கள்தான் உண்டு. ஆதரவுள்ள பெண்கள்; ஆதரவற்ற பெண்கள்—என்று இப்படி இரண்டே விதம்தான் உண்டு. அதில் இது இரண்டாவது விதத்தைச் சேர்ந்த சண்டை" என்றாள்.

படித்திருந்திருந்தாலும் பணம் படைத்திருந்தாலும் அழகிருந்தாலும் ஆற்றலிருந்தாலும் ஒரு பெண் தனியாக சுதந்தரத்துடன் இருந்துவிட முடியாது அவள் பற்றுக்கோலாக ஒருவனைச் சார்ந்திருந்தே ஆகவேண்டும் என்பதே சுசீலாவின் முடிவு. ஆனால் சீதாவுக்கு இது அவ்வளவாகப் புரியவில்லை. அவள் யதார்த்தமாகச் சிரித்துக்



கொண்டே, "நானும் நீயும் எந்த விதத்தைச் சேர்ந்தவர்கள்?" என்று கேட்டாள்.

இதற்குள் வாசலில் எதிர்த்தாப்பு வாதம் ஆரம்பமாகிவிட்டது. அஞ்சலையைப் போலவே கிட்டத்தட்ட முகஜாடையுள்ள அவள் தாய் சுபாவத்துக்குநேர் மாறான குரலில் இரைந்து மாப்பிள்ளையின் யோசனையற்ற பேச்சையும் மூர்க்கத்தனத்தையும், முன்யோசனையின்றி செய்யும் காரியங்களையும் பற்றி விளாசிக்கொண்டிருந்தாள். முதலில் இப்படிச் சொல்லிச் சொல்லித்தான் மூன்று முறையும் பலனற்றுப் போனதாயும் இந்தத்தடவை அவளை இப்போதே அனுப்பாவிட்டால் பலனற்றுப் போவதுடன் கூட ஆபத்தாகவும் வந்து முடியலாமென்றும் அவள் வர்ஷமாரியாய் கூவிக்கொண்டிருந்தாள். நடுவில் திண்ணையோரமாய் நின்ற அஞ்சலை எவ்வளவோ அவளை அடக்கப் பார்த்தும் பிரயோசனப்படவில்லை.

"சீ! நீ சும்மா இரு! நீ எக்கேடு கெட்டுப்போயேன்; எனக்கென்ன வந்தது? நல்லதைத்தான் சொல்வாங்க! புருஷனுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியதுதான். ஆனால் எந்தக் காரியத்திலே கட்டுப்படறதுன்னு கேக்கறேன்! ஒம்புருஷனுக்குக் கோபம்வந்தா உன்விட்டேறிடட்டும். எனக்கென்ன வந்தது! பிடிச்சகாட்டிலேபோய் விட்டுட்டுத்தான் நான் போவேன்! பயமா!" என்று அஞ்சலையை அதட்டி அடக்கிவிட்டு அவள் மீண்டும் இரைய ஆரம்பித்தாள்.

"தா—மரியாதை தப்பிப் பேசவேணும்!" என்று கண்ணுச்சாமி நடுவில் உறுமிக்கொண்டிருந்தான்.

"சும்மாயிருங்க தம்பி—" என்று தாய் மாமன் அவனைச் சமாதானப்படுத்தினான்.

"ஆயிரம் சொல்லுங்க! நான் அனுப்பமாட்டேன். ஒங்க வீட்டுப் பொண்ணு வந்தாக்கூட்டிக்கிட்டுப்போங்க, வேணுங்கலே!" என்று தீர்மானமாய்ச் சொன்னான் கண்ணுச்சாமி.

"அதெப்படி அந்தப் பொண்ணு நீ இப்படி சொல்லக் கொள்ள கிளம்பி வந்துடும்? நீ ஏன் அனுப்பமாட்டே?" என்றாள் அஞ்சலையின் தாய் சுப்பண்ணாவின் முகத்தைப் பார்த்துக்கொண்டே.

"மாட்டேன்!"

"அதான். ஏன்?"

"ஓம் பொண்ணுவந்தாக் கூட்டிக்கிட்டுபோறதானே!"

அஞ்சலை எதுவும் பேசாமல் தரையை நகத்தால் கீறிக் கொண்டிருந்தாள் அவளுக்குப் போகவேண்டும் போலவும் போகவேண்டாம் போலவும் இருந்தது இங்கே தனியாக இருப்பது ஒருவிதத்தில் இன்பமாயும் அங்கே போய் ஒரு வேலையும் செய்யாமல் இருப்பது ஒரு விதத்தில் ஆனந்தமாயும் இருக்கும்போலிருந்தது

அஞ்சலையின் தாய், "நீ என்ன சொல்றே?" என்று கேட்டபோது, "என்னை என்ன சொல்லச் சொல்றே? அதான் நீ கேக்கறயே—அது போதாதா? பிடிச்சா பிடில்ல அதுக்கு. நான் என்ன செய்யறது?" என்றாள் அவள்

"இந்தப் பாரு! ஏய், உன்னைத்தானே! அப்புறம் இந்தப் பேச்சு வேணும் தாராளமாய் போயிக்க! வேணுங்கில்லே அப்புறம் நான் வரலே. போகலேன்னு மட்டும் சொல்லவேணும்!" என்றான்.

பார்க்கப்போனால் முதல் நாள் இரவே அவர்களுக்குள் போவதா, வேண்டாமா என்று முடிவு ஏற்பட்டுவிட்டது போல இருந்தது. அதற்கிணங்க அவன் பேசுவது போலவும் இருந்தது: அஞ்சலை "எல்லாம் ஐயா சொல்லட்டும் நீ ஏன் கிடந்து கூவறே!" என்றாள்.

ஆயிரம் செய்தாலும் இந்தப் பெண்கள் புருஷனிடம் ஒட்டிக்கொண்டு பெற்ற தாயைக்கூட கைவிடுவது அஞ்சலையின் தாய்க்குத் துரோகம் செய்வதுபோல இருந்தது. அவள் சத்தம்போட்டு ஓய்ந்துவிட்டாள். சத்தம் போடச் சக்தியில்லாமல் பேச்சு அழுகையாக வெளிப்பட ஆரம்பித்தது.

"அருமையா ஒரு பொண்ணை வச்சிருக்கிறேன். அல்லாத்தையும் குழியிலே கொண்டு வச்சுப்புட்டு இதையும் ஆகவிட்டாமே அடிக்கிறாங்களோ அல்லாருமாச் சேர்ந்து கிட்டு! எனக்கென்ன வந்ததுன்னு போவலாம்னு பாழும் பெத்த வயிறு கேக்குதா?..."



"தா! அழுது இழுது செய்யாதே...ஐயாதான் சொல்லட்டுமே" என்றாள் அஞ்சலை

உள்ளே சீதாவும் சுசீலாவும் இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தார்கள். அவர்கள் மனசிலே ஒரு முகமாக கண்ணுச்சாமியின் மூர்க்கத்தனமும் அஞ்சலையின் சாகஸமும் ஒரு வெறுப்பை உண்டாக்கிவிட்டன. அவர்களுடைய அநுதாபமெல்லாம் அஞ்சலையின் தாயின் பக்கமேதான் இருந்தது.

சுப்பண்ணா தம் தீர்ப்பைக் கூறினார்:

"இன்னும் மூன்று மாதம் அஞ்சலை இங்கே இருக்க வேண்டியது. சரியாக ஆறுவது மாதம் வந்து அவள் தாய் அழைத்துக்கொண்டு போய்ப் பிரசவம் வரையில் வைத்துக் கொள்ள வேண்டியது!"

ஐயா சொன்னுங்களே, "அது சரி!" என்றான் கண்ணுச்சாமி.

அஞ்சலைக்கும் அது திருப்தியாகப்பட்டது. தாய் மாமன் அதை ஒப்புக்கொண்டான். ஆனால் அஞ்சலையின் தாய்க்குமட்டும் இந்த முடிவு சரியாகப்படவில்லை. வேறு வழியும் புலப்படவில்லை.

"அப்புறம் என்ன குறை?" என்றாள் அஞ்சலை.

"ஒம் முகரக் கட்டை இருக்குது பாரு, அது! நீ ஒரு பொண்ணு கணக்கா? நாளை ஒனக்கும் ஒண்ணு பொறந்து பட்டான்னு தெரியுது!" என்றாள் அவள் தாய்.

ஜன்னலில் உட்கார்ந்திருக்கும் சுசீலாவைக் கவனிக்காமல் அஞ்சலையிடம் கண்ணுச்சாமி வந்து ரகசியமான குரலில், "நீ ராத்திரி சொன்னது என்ன, இப்பப் பேசறது என்ன? பொட்டச்சிங்கறது சரியாப் போயிடுச்சு! 'நான் இப்போ வரல்லே'ன்னு ஒரே பேச்சா சொல்லிறேன்டியாதுதானே! மூளியைப் பாரு! மான்குட்டி, முளிக்கிறுப்பலே" என்று முடிவு ஏற்பட்டுவிட்ட மகிழ்ச்சியில் செல்லமாகக் கடிந்து கொண்டான்.

"சரி, சரி! போ, எட்டி! பாக்கறவங்க சிரிக்கப்போறாங்க!" என்றாள் அஞ்சலை, அதே ரகசியமான குரலில்.

சீதா இதைக் கேட்டதும் சுசீலாவின் காலைப் பிடித்துக்கிள்ளினாள். சுசீலாவின் முகம் சுண்டிப்போயிருந்தது.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு சுசீலா சிறிது கலகலப்பாக இருக்க ஆரம்பித்தாள். சீதாவுக்கு இது நேர் எதிரிடையாகப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் சுவாமியையும் சீதாவையும் சந்திக்கும்படி செய்தாள் சுசீலா. ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்தச் சந்திப்புப் பயனற்றதாகவே முடிந்தது. சீதாவின் மனதில் இருந்த அன்பு, சுத்தமான பால் துளி சுண்ணும்பு பட்டதும் திரிந்துபோவதைப்போல அன்றொரு நாள் சுவாமி, குமாரிடம் கூறியதற்குப் பின்பு திரிந்துபோய்விட்டது. இதைச் சரிப்படுத்தத்தான் சுசீலா முயன்றுகொண்டிருந்தாள். அந்த முயற்சியில் தன் கவலைகளை மறக்கலானாள். சுவாமியைச் சமயம் பார்த்து ஊருக்கு அனுப்ப அந்த முயற்சியின் நடுவே சிந்திக்க அவள் தவறவில்லை.

உடலில் சோர்வும் பலஹீனமும் அதிகரித்து வந்தன. சீதாவை ஒரு கணமும் விட்டுப் பிரியாமல் இருக்கும்படி கேட்டுக்கொண்டாள். ஆனால் அந்தச் சீதாவோ முன் போல இல்லை. திடீரென்று அவளுக்கு என்ன வந்துவிட்டது? 'அவள் தந்தை வீட்டுச்சென்ற பதினைந்து தினங்களுக்குள் அவ்வளவு தூரம் மாறிப்போக அவளுக்கு என்ன நேர்ந்துவிட்டது? பதினைந்து நாட்களுக்குள் பத்து வருஷத்து அனுபவம் ஏற்பட்டவள்போல இருக்கிறாளே!

## 40

சேர்ந்தாற்போல சீதா மூன்று நாட்கள் சுசீலாவைப் பார்க்க வரவில்லை சுசீலாவுக்கு இருப்பேகொள்ளவில்லை. கிராமத்தில் பொழுது போவதே அரிதாய் இருந்தது அவள் வெளியில் வந்து அண்டை அயலாரிடம் பேச்சுக்கொடுக்காமல் ஒதுங்கியே இருந்துவந்தாள். அஞ்சலையிடம் சிறுவயதில் எவ்வளவு ஆசையுடன் பழகினாளோ அவ்வளவுக்கு இப்போது அவள் வந்தால்கூட ஒதுங்கியே சென்று வந்தாள் வீட்டில் வேறு யாருடன் பேசுவது? சுவாமி வீட்டிலேயே இருப்பதில்லை வீட்டெதிரிலுள்ள அந்தோணிசாமியின் வெயிட்டிங் ரூமில் உட்கார்ந்து பழைய நாவல்களையும், துப்பறியும் நவீனங்களையும் படித்துப் பொழுது போக்கிக்கொண்டிருந்ததாகத் தெரிந்தது யோசித்துப் பார்த்தும் அவள் தஞ்சாவூருக்குப் போகாத காரணம் அவளுக்கு விளங்கவில்லை அவனுடைய தந்தைமட்டும், "சௌகரியம்போல வேலைக் கழித்துவிட்டு ஒரு வாரத்துக்கு முந்தியே வந்துவிடு" என்று ஒரு சமயம் எழுதி



யிருந்தார் ஆனால் அவனோ அந்தப் பிரஸ்தாபத்தையே எடுக்காமல் இருந்துவந்தான். 'இங்கே என்ன இருக்கிறது அவனுக்கு? எப்படி இருந்தாலும் அவனை உடனே வலுவிலாவது ஊருக்குப் போகச் சொல்லவேண்டும். அவன் என்ன நினைத்துக்கொண்டாலும் சரிதான்; படிக்கிற படிப்பு என்ன ஆவது! பெங்களூருக்குப் போக அவனுக்கு விருப்பமில்லாவிட்டால் திருச்சிராப்பள்ளி காலேஜில் போய்ச்சேரட்டுமே' என்று எண்ணினாள் சுசீலா.

காலை எட்டுமணி இருக்கும். சுசீலாவாசலில் வந்து சுவாமியைப் பார்த்து, "ஸ்டேஷன் பக்கம் தினம் போகிறாயே, சீதாவை எங்கே காணோம்?" என்று கேட்டாள்.

"தெரியாது; நான் பார்க்கவில்லை மன்னி," என்றான் அவன்.

"அது சரி; காலேஜ் திறக்கப்போகிறார்களே. நீ ஊருக்குப் போகவேண்டாமா?"

"எந்த ஊருக்கு?"

வேண்டுமென்றே சுசீலா, "பெங்களூருக்குத்தான்!" என்றாள்.

"நான் அங்கே போகப் போவதில்லை."

"சரி, வேண்டாம்; தஞ்சாவூருக்குப்போக வேண்டாமா? அப்பா, அம்மாவைப் பார்த்துவிட்டு வேறு ஏதாவது ஒரு காலேஜில் சேரவேண்டாமா?" என்றாள்.

"நீ போகச் சொன்னால் போகவேண்டியதுதான்; வேறு வழியில்லை" என்றான் சுவாமி. சுசீலாவுக்கு இந்த வார்த்தைகள் அவமானத்தை உண்டாக்கின. "நான் எதற்குச் சொல்லவேண்டும். எனக்கும் உனக்கும் என்ன? நானா உன்னைக் காப்பாற்றுகிறேன்?" என்றாள்.

சுவாமி சிலைபோல உட்கார்ந்திருந்தான். பிறகு சுசீலாவின் முகத்தைப் பார்த்துக்கொண்டே, "நான் இனிமேல் படிக்கப்போவதில்லை. ஊருக்குப் போகப் போவதில்லை. இங்கேயும் உன்னையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கப் போவதில்லை நான் வேறு எங்கேயோ போகத்தான் போகிறேன் இன்றைக்கே கிளம்பிவிடுகிறேன். திருப்திதானே?" என்றான்.

சுசீலாவும் பொறுமையை இழந்தாள். "உன் அசட்டுத்தனத்துக்கு ஓர் எல்லையே கிடையாதா? சொந்த மனிதர்களுக்கு எதிரில்கூடத் தலை நிமிர்ந்து நடக்கமுடியாமல் என்னைச் செய்துவிட்டாய் அண்ணன் மனைவியிடம் எவ்வளவுதூரம் உரிமைகொண்டாட உலகம் இடங்கொடுக்கும் என்பதைப் புரிந்துகொள்ள உனக்கு மூளையில்லை. என்னைத் திராதபழிக்கு ஆளாக்கிவிட்டு நீ எங்கே போனால்தான் எனக்கு என்ன? இப்படியே பேசத் தெரியாமல் பேசி அந்தப் பெண் சீதாவின் மனசையும் நொந்துபோகும்படி செய்துவிட்டாய். அதெல்லாம் இருக்கட்டும்; நான்தான் கேட்கிறேன், அவள் உனக்கு எந்தவிதத்தில் குறைந்துபோய்விட்டாள்? நீ எதில் அவளைவிடச் சிறந்தவன் என்று நினைத்துக்கொண்டு அன்று அவள் எதிரில் அப்படிப் பேசினாய்? அவளுக்காக நீ இங்கே இல்லாவிட்டால் வேறு யாருக்காக, யாருடைய ஆசையைப் பூர்த்திசெய்ய இங்கே இருக்கிறாய்?" என்று படபடவென்று பேசினாள். விடாமல் பேசியதால் மூச்சுத் திணறியது அவளுக்கு.

சுவாமி அதற்குப் பிறகு அங்கே உட்கார்ந்திருக்கவில்லை போகும்போது, "மன்னி, நான் செய்ததெல்லாம் தப்புத்தான். கொஞ்சம் பொறுத்துக்கொள் இன்று இரவே ஊருக்குக் கிளம்பிவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு விர்ரென்று வாசலில் இறங்கி நடந்தான்.

வெகு நேரம் வரையில் சுசீலா அசையாமல் சிலைபோல அவன் போகும் திக்கையே பார்த்துக்கொண்டு நின்றாள். பக்ஷியைச் சுட்டுத் தள்ளியபின் அது உயிருடன் துடித்துக் கொண்டிருப்பதைப்பார்த்துக்கொண்டிருப்பவனைப் போல அவள் மனசும் துடித்தது. ஆத்திரத்தில் அவன் வேறு ஏதாவது செய்துகொண்டுவிட்டால் என்ன செய்வது என்ற யோசனை உதித்தது. உள்ளுக்கும் வாசலுக்கும் அமைதியின்றி நடை போட்டாள். வீட்டிலே பாட்டியும் சுப்பன்னாவும் கொல்லைத் தோட்டத்தில் மிளகாய் பறித்துக் கொண்





டிருந்தனர்.

கடைசியாக, சுசீலா பாட்டியைக் கூப்பிட்டு, "பாட்டி-வாசல் கதவு திறந்து கிடக்கிறது. பார்த்துக்கொள். நான் சீதாவைப் போய்ப் பார்த்துவிட்டு இதோ ஓடிவந்துவிடுகிறேன்" என்றாள்.

பதிலுக்குக் கூடக் காத்திராமல் அவள் தெருவில் இறங்கி பெரு நடையும் சிறு நடையுமாகச் சென்றாள். சிறுவர்களும் இளமங்கைகளும் எங்கேயோ ஒரு வீட்டில் விளையாட்டில் சிரித்துக்கொண்டிருந்தனர். சுசீலா தன்னைக்கண்டு கேலி செய்வதாக எண்ணிக்கொண்டாள். ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்துகிற நிலையைக் கடந்துவிட்டது அவள் உள்ளம். சரியாக எட்டரைக்கெல்லாம் ஷட்டில் ஒன்று அந்த ஊருக்கு வருகிறது. அந்த ஷட்டிலுக்கென்று கைகாட்டி இறங்கியிருப்பதுகூட அவளுக்குத் தெரிந்தது. என்ன காரணத்தாலோ அந்த வண்டி யார் மேலேயோ உருண்டு ஓடி வருவதைப் போலவும் அடியில் சுவாமியின் உடல் உருத்தெரியாமல் சிதறிப் போவதுபோலவும் அவள் கண்முன் ஒரு காட்சி விரிந்தது தெருவைக் கடந்ததும் இறைக்க இறைக்க அவள் ஓட ஆரம்பித்தாள்.

ஆற்றங்கரைக்குச் சமீபம் வந்ததும் பாதை ஸ்டேஷனுக்கு வளைந்து செல்கிறது அந்த இடத்தில் நொச்சி மரங்களும் கத்தாழைப் புதர்களும் அடர்ந்திருந்தன. அந்த இடத்தில் திரும்பியதும் சீதா எதிர்ப்பட்டு வருவதைக்கண்டு திகைத்து நின்றாள் சுசீலா. அவளுக்கு உடனே பேச்சு எழும்பவில்லை.

"என்ன மன்னி? எங்கே இந்தக் கோலத்தில் ஓடி வருகிறாய்?" என்று கேட்டாள் சீதா திகிலுடன்.

"எங்கேயா? உன்னைப் பார்க்கத்தானடி வந்துகொண்டேயிருக்கிறேன்! எங்கே, உன்னை மூன்று நாளாகக் கண்ணிலேயே பார்க்க முடியவில்லை? அது சரி; எதிர்த்தாற்போல சுவாமி போனானோ? நீ பார்த்தாயோ?" என்று மூச்சுத்திணறக் கேட்டாள் சுசீலா.

சீதாவுக்கு ஏற்பட்ட வியப்பில் என்ன பதில் சொல்வது என்று உடனே புரியவில்லை சுவாமியை அவள் சந்தித்தது என்னவோ உண்மை. ஆனால் இவள் யாருக்காக இப்படி ஓடிவருகிறாள்! சுவாமியைத் தேடிக்கொண்டா? என்னைத் தேடிக்கொண்டா? என்னைத் தேடிக்கொண்டு வருபவள் இப்படி ஓடி வருவாளேன்?

"சீதா, பார்த்தாயா இல்லையா, சொல்லேன்!"

"குளத்துப் பக்கம் போனார். பார்த்தேன்!" என்றாள் சீதா அமைதியுடன்.

சுசீலா ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்.

"குளத்துக்கா?"

திடீரென்று சுசீலா, "சரி அவன் போகட்டும். வா, திரும்பிப் போகலாம்!" என்றாள் மனத் திடத்துடன்.

சீதா அவளை மேலே நடக்கவிடாமல் வழியை மறித்துக்கொண்டு, "உண்மையைச் சொல்லு, நீ யாரைத் தேடிக்கொண்டு வந்தாய்? என்ன நடந்தது வீட்டில்?" என்று கேட்டாள்

"சரி, வாயேன் பேசிக்கொண்டே போவோம்" என்று சுசீலா நடக்கலாரம்பித்தாள்.

சுசீலாவினால் தன் மனசை ஒளித்துப்பேச முடியவில்லை. நடந்ததை ஒன்றுவிடாமல் அவளிடம் கூறிக்கொண்டு வந்தாள்.

சீதா சட்டென்று நின்று, "இதோ பார், இந்தக் கடிதத்தை!" என்று தன் மடியில் வைத்துக்கொண்டிருந்ததை எடுத்து அவளிடம் கொடுத்தாள்.

"சீதாவுக்கு, நான் தெரியாமல் உன் மனசை நோகச் செய்திருக்கலாம். என் மன்னியின் மனசையும் நோகச் செய்திருக்கலாம் நான் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள மனப்பூர்வமாகச் சம்மதிக்கிறேன். இதனால் என் மன்னியை உன்னால் மகிழ்விக்கமுடியுமானால் அதுவே நீ எனக்குச் செய்யக்கூடிய பெரிய உதவி சுவாமி."

இந்த உணர்ச்சியற்ற கடிதத்தைச் சுசீலா உணர்ச்சி ஏதுமின்றி படித்துமுடித்தாள் சீதா சிரித்துக்கொண்டே, "எங்கள் வீட்டுக்கு வந்து என்னிடமே பேபர், பென்சில் கேட்டு வாங்கி எழுதிக் கொடுத்துவிட்டுக் குளிக்கப் போகிறார் உன் அழகான மைத்துனர்! போதுமா?" என்றாள்.

"பதில் எழுதப் போகிறாயா?" என்று கேட்டாள் சுசீலா.

"எழுதத்தான் போகிறேன், நான் மனப்பூர்வமாய்ச் சம்மதிக்கமாட்டேன் என்று!"

"சீ! பைத்தியம் போலப் பேசாதே. நீ அவனைத்தான் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும். அவனுடைய நல்ல சுபாவம் உலகத்துக்கு இயற்கையாய் இல்லாவிட்டால் அதற்கு அவன் என்ன செய்வான், பாவம்!' என்றாள்

"விளையாட்டுக்குச் சொல்கிறேன், மன்னி! நான்தான் கல்யாணமே செய்துகொள்ளப் போகிறதில்லையே!" என்றாள் சீதா.

அன்று சாயங்காலமே சுவாமி தன்னுடைய சாமான்களையெல்லாம் எடுத்துக் கட்டி வைத்துக்கொண்டிருந்தான். காலையில் அவன் ஏதையாவது செய்துவிடப் போகிறானே என்று காரணமில்லாமல் பயந்து, வெட்கத்தைவிட்டு ஓடியதை எண்ணிக் கூசினாள் சுசீலா. சீதா உட்கார்ந்துகொண்டு ஏதோ பத்திரிகையில் புருஷன் பெட்டி படுக்கையுடன் ஊருக்குக் கிளம்பும் படம் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தாள். தற்செயலாய் கண்ணில் பட்ட படம் இந்தச் சமயத்துக்கு எவ்வளவு ஒற்றுமையாய் இருந்தது!

சுவாமி, எல்லாரிடமும் விடை பெற்றுக்கொண்டு கிளம்பியதும் வாசலில் தந்திச்சேவகன் ஒருவன் வந்து நின்றதும் சரியாக இருந்தன தந்தி என்றதும் எல்லாரும் திடுக்கிட்டுப் போனார்கள்

சுசீலா அதைப்பிரித்தாள் சென்னையிலிருந்து கிருஷ்ணசாமி கொடுத்திருந்தான். சற்றுமுன்தான் பெங்களூரிலிருந்து தந்திகிடைத்ததாகவும், விசுவம் தொழிற்சாலை விபத்தில் காயம்பட்டுப் போனதாகவும், ஆனால் உயிருக்கு ஆபத்தில்லை என்று டாக்டர்கள் கூறுவதாகத் தெரிகிறது என்றும், கொஞ்சம் காசு செலவழிவதைப் பார்க்காமலே தந்தி அடித்திருந்தான் கிருஷ்ணன்

அவளிடமிருந்து தந்தியை சுவாமியும், சீதாவும் சுப்பன்னாவும் வாங்கிப் பார்த்தனர். ஒருவராவது ஒன்றும் அபிப்பிராயம் சொல்லவில்லை. பாட்டி ஏதோ ஆரம்பிக்கப்போகிறாள் என்பது அவள் உறுமலிலிருந்து தெரிந்தது.

"நான் போய்விட்டு வருகிறேன், மன்னி!" என்றான் சுவாமி.

"நேரே பெங்களூருக்கே போய்விடேன்" என்றாள் சுசீலா.

"இல்லை; தஞ்சாவூருக்குத்தான் போகவேண்டும்! நீ போகப் போகிறாயா?" என்று கேட்டான் சுவாமி

"இல்லை!" என்றாள் சுசீலா.

"அதுதான் ஆபத்து ஒன்றும் இல்லையாமே!" என்று சாதாரணமாகக் கூறிவிட்டு சுவாமி பெட்டி, படுக்கையை எடுத்து வண்டியில் வைத்தான். வண்டி ஸ்டேஷனை நோக்கி ஓடியது

சீதாவின் நெஞ்சு ஏதனாலோ பாறையாக உறைந்து கிடந்தது தெருவில் அவரவர்கள் வீட்டிலிருந்து எல்லாரும் இதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

(தொடரும்)




57

## திருமூலர் கண்ட திருநடனம்

★

சிவ நடனம்தான் உலகங்களை ஆக்குகிறது, அளிக்கிறது. அழிக்கிறது, அழித்தலை வியாஜமாகக் கொண்டு விடுதலையருளுகிறது என்பது சிவநேசர் கண்ட உண்மை. ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல் அருளுதல் என்ற ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன சிவ நடனத்திலே என்பர். இத்தொழில்களெல்லாம் உயிர்களுக்காகவே நடைபெறுகின்றன. ஆகவே சிவநடனம் ஓயாத அருள் நடனம்.

இந்தத்திரு நடனத்திலே சாந்தம், பயங்கரம் என்ற இரண்டு நிலைகளையும் பார்க்கிறோம். சாந்த நிலையில் ஆக்கவேலை நடைபெறுகிறது. 'உன்மத்தம்கொண்டு ஆடுகிறான்!' என்று அஞ்சும் நிலையில் அழிவு வேலை நடைபெறுகிறது. இரண்டிலும் நாதம் உண்டு, தாளம் உண்டு—அதாவது இசையின் இசைவுபோன்ற ஒழுங்கு உண்டு.

ஆதி பரன் ஆட,
அங்கைக் கனல் ஆட,
ஓதும் சடையாட,
உன்மத்தம் உற்றாடப்
பாதி மதியாடப்
பாரண்டம் மீதாட,
நாதமோ(டு) ஆடினான்
நாதாந்த நட்டமே

[அங்கை—உள்ளங்கை. உன் மத்தம்—வெறி. பைத்தியம். மதி—சந்திரன். பார்—பரப்பு.]

நாதத்தில் ஆடும் ஈசுவரனை ஞானத்தில் ஆடி உலகமெங்கும் ஆடுகிறான் என்று கூறும் திருமூலர் இப்பிரானைத் 'தீதற்ற தேவாதிதேவர் பிரான்' என்று போற்றுகிறார்.

'கருத்தில் விரித்தாடி............முடிவில்லா ஞானத்துள் ஆடி, முடித்தான் என் நாதனே' என்று கருதுகிறவர் இந்த நாதனை 'மெய்ஞ்ஞானச் சோதி' யென்றும், 'ஞானம் கடந்து நடஞ்செய்யும் நம்பி' யென்றும் போற்றுகிறார். இத்தகைய நடராஜ ஞானத்தை ஒருவாறு உணர்ந்து கொள்வதற்கும், இந்திய தத்துவ ஆராய்ச்சியும் இந்தியச் சிற்ப சாஸ்திர ஞான ஸாரமும் இந்திய சரித்திர ஞானமும் அவசியமாகும்.

சிவபெருமான் மூவரோடு ஆடுவதால் மும்மூர்த்திகளும் தத்தம் கடமைகளைச் செய்கிறார்களாம். தேவரோடு ஆடுவதால் தேவர்கள் தத்தம் உத்தியோகங்களை—அதாவது இறைவனுடைய தொழில்களை அவனுடைய கருவிகளாயிருந்து—கவனித்து வருகிறார்களாம். பூலோகத்திலும் மற்ற லோகங்களிலும், அண்டத்திற்கு அப்பாலும் இப்பாலுமிருந்து இறைவன் முனிவர்களோடு ஆடுவதால் முனிவர்கள் சமய உண்மைகளைக் கண்டு வெளியிடுகிறார்களாம். நாதத்தில் ஆடும் ஈசன் பாட்டிலும் ஆடுவதால் பக்தர்களும் கவிஞர்களும் பாடுகிறார்களாம்.

'நாதத்தில் ஆடும் ஈசன் ஞானத்தில் ஆடியதால் போதம் பரந்தது பிறவாத வேதம் பிறந்தது, ஆகமம் பிறந்தது; கீதம் தோன்றியது. நடனம் முதலான கலைகள் தோன்றின, உலகம் அறிவு-வழியில், கலை-வழியில் இயங்கலாயிற்று.

வேதங்கள் ஆட,
மிகுஆ கமம் ஆடக்,
கீதங்கள் ஆடக்,
கிளர் அண்டம் ஏழாடப்
பூதங்கள் ஆடப்
புவனம் முழுதாட,
நாதம்கொண்(டு) ஆடினான்
ஞானானந் தக்கூத்தே,

[கிளர்—விளங்குகிற.]

உலகங்களெல்லாம் ஆடிக்கொண்டிருந்தபோதிலும், வேதாகமங்களின் ஆட்டமும் கீதம் முதலான கலைகளின் ஆட்டமும் இல்லையென்றால், ஆடும் கடவுளை யார் அடையப் போகிறார்? அவனுடைய அருளாசை யார் அறியப் போகிறார்? உலகம் உலகாயத உணர்ச்சி (ஜடப்பொருள்களுக்கு மேலான பொருள் கிடையாதென்ற உணர்ச்சி)யோடு நின்றுவிடும் என்பது குறிப்பு.

அவனருளால் உலகாயத உணர்ச்சியைக் கடந்து தெய்வநாட்டம்பெற்றவர்க்கே நடராஜாவின் உண்மையை ஒருவாறு உணர்ந்துகொள்ளலாம். மற்றப்படி, மண்ணையும் விண்ணையும் எண்ணங்களையும் ஒருங்கே கடவுத்தால் அளந்தவனை அளந்து பார்த்தவர்கள் இந்த உலகத்திலுமில்லை, வேறு எந்த உலகத்திலுமில்லை யென்கிறார். அவனை எண்ணத்தாலும் அளக்கமுடியாதென்கிறார். அறிவு ஆராய்ச்சி செய்யமுடியாதென்கிறார். எங்கும் கடந்து எல்லாவற்றையும் கண்டு நிற்பவனைக் கற்பனைக் கண்ணாலும் காணமுடியாதென்கிறார். எனினும் மாயை, மகாமாயை என்ற சமுத்திரத்தைக் கடந்தவர்கள் அந்த நடனத்தையும் காண்கிறார்களாம். இப்படிப்பட்ட தவப்பெருஞ்சித்தர் கூட்டத்தில் திருமூலரும் ஒருவரென்று சைவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். 'அந்த ஆட்டத்தை நானும் அறிந்தேன்!' என்று திருமூலரே சொல்லியிருக்கிறார்.

ஒரு காலை ஊன்றி மற்றொரு காலைத் தூக்கி ஆடுகிறானல்லவா? ஊன்றிய காலால் உயிர்களின் அகங்காரத்தை மிதித்து அடக்குகிறான் என்பதும், தூக்கிய காலால் பணிவுடன் கூடிய பக்தியை மதித்து அருள் செய்கிறான் என்பதும் சிவ நடனத்தின் உட்பொருள் என்பர். நடராஜாவின் புன்னகை ஒவ்வொருவரையும் யோகக்ஷேமம் விசாரித்து இந்த இப்பிறவியிலேயே ஆனந்தம் அளித்து அருள் செய்யும் என்பதற்கு அறிகுறி என்பர். திருமூலரும், அடங்காத தம் அகத்தை அடக்கி, அங்கும், இங்கும் எங்கும் அடிவைத்து ஆடித் தம்மை ஆனந்தத்திற்கே தூக்கிவிட்டது. அம்மையப்பர் உருவம்கொண்ட அந்த அருள் என்கிறார்.

தாம் அறிந்துகொண்ட அந்த அருளையும், ஆனந்தத்தையும் பிறரும் அறிந்து இன்புறவேண்டுமே என்று இரங்கி,

சேயினும் நல்லன்
அணியன், நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன்,
தாழ்சடை யோனே

[சேய்—குழந்தை. அணியன்—நெருங்கினவன்.]

என்று உபதேசம் செய்கிறார். நடராஜாவின் நடனம் உயிர்களுக்கெல்லாம் பொதுவாக நடைபெறுகிறதல்லவா? இந்த ஆனந்தக் கூத்தன் நல்ல அன்பர்களுக்குத் தாயைக் காட்டிலும் நல்லவன்; நம்பினவர்களுக்குக் குழந்தையைக் காட்டிலும் நல்லவன், நெருங்கினவன் என்று சொல்லுகிறவர், 'ஆயினும் ஈசன் அருள் அறிவாரில்லை' என்று கவலைப்படுகிறார் பிறருக்காக.

### ஆனந்தக் கூத்தும் அன்பு நெறியும்

அல்லும் பகலும் அருள் செய்து கொண்டேயிருக்கிறான்; எனினும் யாவர்க்கும் இன்பம் அருளும் பெருமானை யார் அறிகின்றார்? புத்திக்குள்ளே புகுந்து ஆடுகிறான் ஞானக் கூத்தன் தன் ஞானக் கூத்தை. எனினும் அறிவு அறிகிறதில்லை எனவே அறிவு போகாத அந்த இடத்தில் அன்பைச் செலுத்திப் பாருங்கள் என்கிறார். இத்துறையிலே தம்முடைய அனுபவத்தைப் பிறரும் பயன் படுத்திக்கொள்ளும்படி வெளியிடுகிறார்.

இன்புறு நாடி என்
அன்பில் வளைத் தேனே

என்றும்,

ஆடியும் பாடியும்
அழுதும் அரற்றியும்,
தேடியும் கண்டேன்
சிவன்பெருந் தன்மையை

[அரற்றி-(இங்கே) பலவும் சொல்லித் தன் குறை கூறி.]

என்றும் கூறுவதைக் கேளுங்கள் இதனால் கிடைக்கும் பாக்கியம் என்ன தெரியுமா? 'என்ன பாக்கியம்!' என்றுதான் சொல்லமுடியுமா?

தெய்வ நாட்டமே இன்பம்தான் தெரியும் இன்பம், குறியும் இன்பம் தமக்குக் கிடைத்த பாக்கியத்தை,

அளித்தான் திருமன்றுள்
ஆடும் திருத்தாள்

[மன்று-சபை. தாள்-அடி.]

என்கிறார்:

அளித்தான் உலகெங்கும்
தானான உண்மை

என்கிறார். ஆடும் திருவடியை வணங்கப் பெறுவதே பேறு. உலகெங்கும் அதுதான் அவன்தான் என்று உணரப்பெறும் பாக்கியத்தை என்னென்பது!

—— x ——





இந்தப் படத்தில் அமெரிக்காவில் உள்ள இந்தியா லீகின் தலைவரான ஸ்ரீ ஜே. ஜே. ஸிங்கும் காந்திஜியின் கடைசி குமாரரான ஸ்ரீ தேவதாஸ் காந்தியும் காணப்படுகிறார்கள். ஐக்ய நாடுகளின் பத்திரிகை சுதந்திரக் கமிட்டிக் கூட்டம் இப்போது லேக்ஸக்ஸஸில் நடந்து வருகிறது. இந்தியா சார்பில் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகத்தான் ஸ்ரீ தேவதாஸ் சென்றார். மேற்படி படம் மே 30-ந் தேதி நியூயார்க் விமான நிலையத்தில் பிடிக்கப்பட்டது.



இந்த இனம் பிராணிகள் இரு வகையில் உபயோகமானவை என கருதப்படுகின்றன. சென்னைக்கு வடக்கேயுள்ள ஜில்லாக்களில் காளை மாடுகள் கிருஷி வேலைக்கும், ரஸ்தா வண்டிப் பாரம் இழுக்கவும், இச்சாதி பசுக்கள் சென்னை நகரப் பால் சப்ளைக்கு முக்கிய ஆதாரமாகவும் இருக்கின்றன. வளர்ப்பு ஸ்தானங்களிலிருந்து பிரதி வருஷமும் சுமார் 2500 பசுக்கள் சென்னை நகருக்குள் வருவதாகவும், பால் வற்றின மாடுகளிற் பகுதி மேய்ச்சலுக்காக காட்டிற்கு அனுப்பப்படுவதாகவும், மற்ற பகுதி அடிமாட்டுக்காக விற்றுவிடப்படுகின்றனவென்றும் விசாரணையால் அறியக் கிடக்கிறது. சென்னையில் ஒரு ஈற்றில் ஒரு பசு சுமார் 2500 ராத்தல் கொடுப்பதாகத் தெரிகிறது.

ஓங்கோல் ஜாதிக் கால்நடை அபிவிருத்தி பண்ணை 1918-ல் ஸ்தாபிக்கப்பட்டது. சுத்த ஜாதி மாடுகள் சரிவர கன்றுகள் போட்டு, நேர்மையான வம்ச விருத்திக்கான காளைக் கன்றுகளையும், அதிகப் பால் கொடுக்கக்கூடிய கறவைப் பசுக்கள் கிடைக்கவும் செய்வதே இப்பண்ணையின் முக்கிய நோக்கங்கள். வளர்ப்புப் பிரதேசத்திலிருந்து பிரதமத்தில் 48 பசுக்கள் வாங்கப்பட்டன. பல காரணங்களைக்கொண்டு அவற்றிற் சில முன்னும் பின்னுமாக விற்கப்பட்டபின் நின்றது 25. பத்து ஆண்டுகளில் கிடைத்த புள்ளி விபரஜாப்தா கீழே கொடுக்கப்படுகிறது. இது மூலதனமான பசுக்களினவையும் அவற்றின் சந்தானங்களுடையதுமான விபரங்கள்.

# ஓங்கோல் ஜாதிக் கால் நடைகள்

★

**சராசரி பால் கிடைத்த விவரம்**

| | வருஷத்தில் ராத்தல் | ரா. |
|---|---|---|
| (1) மூலாதாரப் பசு இனம் | 2674.1 | |
| தினசரி—சராசரி | | 9·8 ,, |
| (2) தாயோடு வாங்கின கன்றுகள் பசுவாகிக் கறக்கையில் | 2731.7 | |
| தினசரி—சராசரி | | 9.1 |
| (3) பண்ணை வளர்ப்புப் பசுக்கள் (உ-ஈற்றுக்காளானவை) | 3526.4 | |
| தினசரி—சராசரி | | 11.5 |

**ஒரு ஈற்றில் அதிகப் பால் கொடுத்த தனிப் பசுவின் விபரங்கள்**

முறையே தினசரி-சராசரி—14.1 ரா
12.5 ,,
26.6 ,,

கிடாரி சராசரி 3-வருஷம் 3-மாத காலத்தில் கன்று போட்டதாகவும் தெரிகிறது.

சராசரியில் கன்று போட்டவுடன் எடை.

காளைக் கன்றுகள் 65½ ரா
கிடாரிக் கன்றுகள் 60 ,,

மூன்றும் ஈற்றின்மேல்தான் நல்ல பால் கொடுப்பதாகவும் தெரிய வருகிறது.

சராசரி, 16-மாதங்களுக்கொரு முறை பசுக்கள் ஈனுகின்றன வென்பதும் அறியப்பட்டது.

நெல்லூர் ஜில்லா கால் நடை வளர்ப்புஸ்தானங்களில் வளர்ப்பாளர்கள் சாமான்யமாகப் பெண் இன பிராணிகளுடைய ஸம்ரக்ஷணை பராமரிப்பு தீவன திட்டத்தைப் பற்றி அவ்வளவாக சிரத்தை எடுப்பதில்லை. ஒரு குடியானவன் தன் பயிர்த் தொழில் வகைக்கான காளை மாடுகளின் ரக்ஷணையைப்பற்றித் தனி கவனம் செலுத்துகிறான். இதற்கடுத்தபடியாக, தான் வளர்க்கிற காளைக் கன்றுகளே அவனுடைய இலட்சியம். மூன்றாவதாக, காளைக் கன்றுகளை ஈன்று ஊட்டுகிற பசுக்கள்; கடைசியாகவே பால் கொடுப்பதை நிறுத்தின வறட்டுப் பசுக்களும் கிடாரிகளும்.

இது இப்படியாக, வம்சவிருத்தி வியவகார ரீதியில் முக்கியாம்சமான பசுக்கள் மேன்மையற்றனவாக இருந்தால் அவற்றைக்கொண்டு ஏற்படக்கூடும் ஸந்தான மேம்பாடும் அவ்வளவினதேயாகும்.

பால் கறவை வகைக்காகிற கிடாரிகளின் வளர்ப்பு, பராமரிப்பு முதலிய பிரச்னைகளைப் பூர்த்திசெய்யும் முக்கியமான வேலை எளிய ஆசாமிகளான 'மால' ஜாதியாருடையது; இவர்கள் சாமான்யமாக வயல் வெளி விவசாய வேலை செய்தும் நெசவு தொழிலில் ஈடுபட்டும் உழைப்பவர்கள் குடியானவனுடைய மந்தையிலிருந்து சிரேஷ்டமானதென்று தனக்குத் தோன்றுகிற ஒன்றிரண்டு கிடாரிக்கன்றுகளைப் பொறுக்கி பால் குடி மறந்த இரண்டு மூன்று மாத காலம் அதாவது சுமார் ஒரு வயது குட்டியை விலைக்கு உடனடியாகப் பணம் முழுதும் செலுத்தியோ அல்லது நிர்மாணித்த மதிப்புக் கிரயத்தின்மேல் இலாபத்தில் ஒரு பகுதியோ கொடுத்துவிடுகிற திட்டத்திலாவது அல்லது குடியானவனுடைய பயிர் செய்காலத்தில் அக்குடும்பம் பூராபயிர்த் தொழில் வேலையில் பெரும்பாகம் செய்து கொடுப்பது என்ற ஒப்பந்தத்திலும் ஆகிறது. இவ்விதம் அடைந்த கன்றை ஜாக்கிரதையாக அக்குடும்பத்தார் அனைவரும் பராமரித்துப் போஷித்து வருவது ஸகஜம்; ஒரு குடும்பத்தில் உள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே ஆரும் அவர்கள் வளர்க்கும் கிடாரிகளின் எண்ணமும். அக்குடும்பத்துப் பெண்கள் ஓழிந்த நேரத்தில் புல் செதுக்கிச் சேகரித்தாவது அல்லது தாங்கள் செய்த வேலையின் தன்கூலியின் ஒரு பகுதிக்கு ஈடாகிற அளவு புல்லைக் குடியானவனிடமிருந்து பெற்றுவது போதுமான அளவு அறுவடை காலத்தில் வேலை செய்த குடியானவர்களிடமிருந்து சிறுகச்சிறுக சேர்த்துப் போர் போட்டுக்கொள்வார்கள் இத்துடன் நாடோறும் சேகரிக்கும் பச்சைப் புல்லையும் சேர்த்து கன்றுகளுக்குப் போடுவார்கள். தான்ய வகைப் பொட்டுகளுடன் கழுநீர் கொஞ்சமும் தினம் அவற்றிற்குக் கிடைக்கும் சரியான வகையில் போஷித்துப் பராமரிக்கப்பட்டு வளர்கிற கிடாரிகள் 2½ வயது முதல் பலப்படலாயக்காகிக் காளைக்காக கத்த ஆரம்பிக்கும் வளர்ச்சி தோற்றம், ஆரோக்கியம், குணம், குலவிசேஷம் ஒருங்கே அமையப் பெற்ற சிலாக்கியமான உருப்படிகள், பல கைகள் மாறி பிரதி யொருவனும் சொற்பலாபம் வைத்து மற்றவனுக்கு விற்று வருவதும் உண்டு. இவ்விதம் கிரயஞ்செய்து கிடைத்த பணத்தைக் கொண்டு வேறொரு பிராணியை அந்த 'மால' வாங்குகிறான். நல்ல கிடாரி கிடைக்க வெகு தூரம் கால் நடையாகச் சுற்றி அலைவதும் உண்டு. இவ்விதம் வளர்க்கப்பட்டு சினை முற்றி ஈனுந்தருவாயிலுள்ள சினை மாடுகளை வியாபாரிகள் விலை பேசி முடித்து வாங்கி, போதுமான எண்ணம் கிடைத்தவுடன் சென்னை நகருக்குப் பால் கறவை மாடுகளாக அனுப்பி வைக்கிறார்கள். இவை பால் கொடுத்துவந்து, பிறகு வற்றிப்போகையில் மறுபடி இச்சில்லாவுக்கு அனுப்பப்பட்டு மறு கன்று ஈனும் வரை மேற்சொன்னவாறு பராமரிக்கப்படுகின்றன. சிறிது காலத்திற்கு முன்பு இவற்றின் சம்ரக்ஷணைக்கூலி, நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 8-முதல் 10-வரைக்கும், இத்துடன், மாடு ஈன்று பசுவும் கன்றும் அனுப்புஞ்சமயத்தில் அந்த வளர்ப்பு மாலாவுக்கு ஒரு வேஷ்டியோ, முண்டாசுக்கான தலைத்துணியோ கொடுக்கப்பட்டு வந்தது.

மொத்தத்தில் ஓங்கோல் ஜாதிக் கால்நடைகளின் கொம்புகள் அவ்வளவாக நேர்த்தியானவை அல்ல. மற்றும் 'காங்கயம்' 'அலம்பாடி' இனங்களுக்கிருப்பதுபோன்ற தனிப்பட்ட ருபலக்ஷணங்களும் இவைகளுக்கில்லை. இவை வளர்கிற சுதேசப் பிராந்தியத்திலேயே பலவித உருவங்களும் சிறிது பெரிதானவையுமான கொம்புள்ள பிராணிகளை காணப்படும். காளை மாட்டின் கொம்பு அடித்துக் குறுகினதாக இருப்பதுமன்றி சற்றே ஆட்டங்கொடுக்கத்தக்க வண்ணம் தளர்வாகவும் இருப்பதும் உண்டு. இதற்குக் காரணம் யாதென்று சொல்லப் பலகால அனுபவத்தாருக்கும் ஆகவில்லை. இந்திய சாம்ராஜ்ஜிய பால்பண்ணை நிபுணராகவிருந்த ஸமித் துரை சொன்னார் "கட்டிப்படாத ஆட்டங்கொடுக்கிற கொம்புகளே "ஹரியன்னா" "சிருஞ்னுபள்ளத்தாக்கு" வர்க்கக் கால் நடைகளுக்கு உண்டு. இவை இரண்டும் "ஓங்கோல்" ஜாதி மாடுகளை அநேகமாக ஒத்தவை என்றும் நீண்டகால வளர்ப்பு வயணங்களால் ஏற்பட்டது."

இதைப்போலவே, "ஸாஹிவால்" வர்க்கக்கால்நடைகளின் கொம்புகளும் -இதரவகையில் பசு சிலாக்கியமானதாக இருந்து, ஸகாலத்தில் தவறாது ஈன்று, சராசரி நல்ல பாலும் கொடுக்கக் கூடியதாகவிருந்தால் இந்தக் கொம்பு ஆட்டப்பிரச்னை அவ்வளவாகப் பெரிதல்ல என்பதே. ஸ்மித் பெரியார், சென்னைமாகாணக் கால் நடை நிபுணராக இருந்த லிட்டில்வுட் துரை, இவர்களுடைய அபிப்





ஓங்கோல் பசு 107. தினசரி சராசரி 13-5 பவுண்டு பால் தருவது.



சிந்தலதேவி கால் நடை ஆராய்ச்சி பண்ணையிலுள்ள இளம் ஓங்கோல் காளைகளின் தோற்றம்.



ஜே. 3. ஓங்கோல் பசு.



ஓங்கோல் பசு 96, பால் தருவதில் சிறந்தது.



கறுப்பும் வெள்ளையும் கலந்த வர்ணங்களுள்ள இந்தக்காளை வெவ்வேறு ஜாதியின் சேர்க்கையால் பிறந்தது.

புள்ள பொலி காளைகளை உரப்பான கொம்புள்ள பசுக்களைப் பலப்படுத்தப்பட்ட காலை சில கன்றுகள் உறப்புள்ள கொம்புகளுள்ளனவாக இருக்க வேறு சில. தளதளப்பான ரோஸ் கொம்புகளுள்ளனவாக இருந்தனவென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. பிரதமத்தில் ஆடு கொம்புகளுடனிருந்த சில ஓங்கோல் கிடாரிகள், 3, 3½ வயதாகையில் இவை கட்டியாகி உரப்பான ஆடாத கொம்புகளுடையனவானதாக ஹோர்குர்பன்னை அனுபவமும் தெரியவருகிறது

அரசாங்க ரசாயன சாஸ்திரி, ஆடு கொம்புள்ள காளை மாடுகளுக்குச் சிறிது கந்தகம் கொடுக்கச் சொல்லி சிபார்சு செய்தார். இது செய்து பார்த்ததில் குணம் என்றும் தெரியவில்லை. கொம்பு வளர்ச்சி பிரச்னையில்லை; கொம்பினுள் இருக்கிற எலும்பு உள் கூடு வளர்வதில்லையாகையால் வெளிக் கூடு சற்று கலகலத்துப்போய் ஆட்டம் கொடுக்கிறது.

பிராயம். மேல்நாடுகளில் கால்நடைச் சந்தைகளிலும் கண்காட்சிகளிலும், பிராணி நயப்பரிசோதனை நிஷ்கரிப்பில், கொம்புகளைப்பற்றி யாதொரு கவனமும் எடுக்கப்படுவதில்லை மொத்த மதிப்பெண் ஒரு 100-ல் கொம்புகளுக்கு ஒன்று ஏற்பட்ட எண்! (ஒன்று); கெட்டிக் கொம்

படம் 1 சிந்தலதேவி கால் நடை ஆராய்ச்சிப் பண்ணையில்—ஓங்கோல் காளைக் கன்றுகள்.

படம் 2. ஓங்கோல் பசு 95.

| | | |
|---|---|---|
| முதல் | ஈற்றில். | 4260 ராத்தல். |
| இரண்டாம் | „ | 5510 „ |
| மூன்றும் | „ | 6224 „ |

தினசரி பால் கறவை.

| | | ராத்தல் | படி |
|---|---|---|---|
| முதல் | ஈற்று | 12·5 „ | 3-1/8 „ |
| இரண்டாம் | „ | 17·6 „ | 4-3/8 „ |
| மூன்றும் | „ | 25·6 „ | 6-3/8 „ |

படம் 3 ஓங்கோல் பசு 107.

| | | மொத்தம் | நாள் 1க்கு |
|---|---|---|---|
| முதல் | ஈற்று | 4965 ரா. | 13·5 ரா. |
| இரண்டாம் | „ | 5926 „ | 17·4 ரா. |

நல்ல தீனி, மேலான பராமரிப்பு, உத்கிருஷ்டமான காளை சேர்ப்பு முதலியவற்றால் வர்க்க மேம்பாடும் பால் கறவை அதிகரிப்பும் அடையலாம்.

கால்நடை டிபுடி டைரக்டர் விட்டில் வுட் துரையின் வியாசத்தைத் தழுவி எழுதப்பட்டது.





IN

Gowo

Sandal Soap.

rapturously alluring & MYSTIC

It will delight you

GANGA WORKS ADYAR, INDIA

கங்கா ஒர்க்ஸ்,

அடையாறு, மதராஸ் 20.

☆

"ஸோப் பெர்பியூமரி & காஸ்மெடிக் ரெவ்யூ"

—லண்டன் கூறுகிறது.

"காவோ சந்தன சோப் மிகச்சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது எல்லா வகையிலும் இங்கிலாந்தில் தயாராகும் சிறந்தவாசனை சோப்புகளுக்கு ஈடாக விளங்குகிறது. நாங்கள் இது வரை ரஸித்திருக்கும் சந்தன வாசனைகளுக்குள் சிறந்தவைகளில் காவோ ஸோப்பின் இனிய சந்தன வாசனையும் ஒன்று."

☆




# பள்ளித் திறப்பு!

[புருஷோத்தமர்]

☆

## தனவான் வீட்டில்

1

மகன்

பள்ளிக்கூடம் திறந்தாச்சு
பாடம் எல்லாம் மறந்தாச்சு
நள்ளிர வதிலும் கண் விழிச்சு
நன்றாய் சினிமா பார்த்தாச்சு
உள்ள மெல்லாம் பயமாச்சு
உதைப்பார்; திட்டுவார் வாத்தியாரே!
கள்ளத்தனமும் பலிக்காதே
கலங்குதென்றன் உள்ளமதே.

தந்தை

விடியா மூஞ்சி எழுந்திரடா
வீட்டுக் கணக்கும் போட்டிடடா
நொடியா பாடம் படியேன்டா
சமர்த்தாய்ப் 'பாசும்' செய்யேன்டா
அடியா நாளும் விடியாதே
அய்யோ எத்தனைப் பண நஷ்டம்
விடியாதோ உன் மூளை இருள்
எத்தனை வாத்தியார் வைத்தாலும்

## ஏழை வீட்டில்

2

மகன்

அப்பா! பள்ளி திறப்பார்கள்
ஆனந்தமாகச் செல்வேனே
தப்பாது பாடம் படிப்பேனே
சன்மானங்களும் பெறுவேனே
எப்போ வாங்கித் தருவீர்கள்
ஏட்டுச் சுவடி இவையெல்லாம்
ஒப்பா ரின்றிக் கற்றிடவே
உள்ளம் விரும்புது என் தந்தாய்

தந்தை

அய்யோ மகனே! காசில்லை.
அரை வயிற்றுக்கும் கஞ்சியில்லை.
கையில் ஒன்றும் இல்லாமல
மேலும் கற்றல் எங்கேடா?
கையில் நிறைய பணங்கொண்டோர்
படிக்கலாம். ஆனால் ஏழைக்கோ
உய்ய வழியொன் றில்லையடா
உழவு செய்ய எழுந்திரடா!




ஒரு ஊரில் ஒரு சித்திரக்காரன் இருந்தான். அவன் ஒரு பெரிய நிபுணனாக இருந்தும், அவனுடைய கலையை மெச்சி, அதற்கேற்ற மரியாதை செய்யவும், அவனுக்கு வெகுமதி அளிக்கவும் அந்த ஊரில் யாரும் இல்லை. தன் கலையை ஒருவரும் சிறிதும் மதிக்காமல் போகவே, சித்திரக்காரனுக்கு வெகு வருத்தமாக இருந்தது.

அவன் இருந்த அதே ஊரில் மிகவும் தனவந்தரான ஒருவர் இருந்தார். எவ்வளவு பணக்காரர் ஆனாலும் அவர் ஏழைகளுக்கு உதவியே செய்யமாட்டார். மிகவும் கஞ்சனான அவருக்கு ஒரு அணா செலவு செய்தால்கூட தன் உயிரே போய் விட்டதுபோல தோன்றும். இப்படிப்பட்ட அவர் இந்த சித்திரக்காரனிடம் ஒரு நாள் வந்து தன் படத்தை வரைந்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார். அத்துடன் அவனுக்கு கூலியாக எண்பது ரூபாய் கொடுப்பதாகவும் வாக்களித்து விட்டுப்போனார். அவர் குணத்தை அறியாத சித்திரக்காரனும், இதுதான் தன் கைத்திறனைக் காட்ட தக்க தருணம் என்று கருதி, மிக சிரத்தையுடன் அந்தப் பணக்காரரின் படத்தை எழுத முற்பட்டான். தான் முன்பு எழுதிய ஒரு படமாவது வியாபாரம் ஆகாததால் அவன் கையில் சிறிதும் பணம் இல்லை. ஆகவே ஒரு நாள் சாப்பாட்டிற்குக்கூட வழியில்லாமல் வருந்திக்கொண்டிருந்தான். தனவந்தரின் படம் வரையும் கிராக்கி அவனுக்குக் கிடைத்ததால, தன் பசியையும் மறந்து மிக ஊக்கத்துடன் அதை வரைந்தான். வெகு கஷ்டப்பட்டு நான்கு மாதங்களில் அதை வெகு அழகாக தத்ரூபமாக வரைந்து முடித்துவிட்டான். தன் மனதுக்கு திருப்தியானதும் தனவந்தரிடம் அதை எடுத்துச் சென்று அவர் கூறியிருக்கும் கூலியைத் தரும்படி கேட்டான்.

படத்தைப் பார்த்த தனவந்தருக்கு வெகு ஆச்சரியமாக இருந்தது. இப்படி ஒரே அழுக்குப் பிடித்து, தரித்திர நாராயணனாகத் தோற்றமளிக்கும் ஒரு ஏழை இவ்வளவு நன்றாக படம் வரைகிறானே என்று அதிசயித்தார். ஆனால் உடனேயே அவருடைய கெட்ட மனது தன் குணத்தைக் காட்ட ஆரம்பித்துவிட்டது

"நான் இப்பொழுது எப்படி இருக்கிறேனோ அப்படி அல்லவா உன்னிடம் படம் எழுதச் சொன்னேன்? நீயானால் நான் இருபது வருஷம் கழித்து எப்படி இருப்பேனோ அப்படி ஒரே கிழமாய் அடித்துவிட்டிருக்கிறாய் இருபது வருஷம் கழித்து என் பால்யத்தை நினைவுறுத்திக் கொள்ளவேண்டி இந்தப் படம் எழுதச் சொன்னேன். அது வந்து இப்படி......உம்..." என்று மெள்ள அவர் அந்தப் படத்தை மட்டம் தட்டிப் பேச ஆரம்பித்தார்.

சித்திரக்காரனுக்கு தூக்கி வாரிப்போட்டது. "என்ன ஸ்வாமி இப்படி ஒரேயடியாகச் சொல்லிவிட்டீர்களே! யாரை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள், இது உங்களுடைய இப்பொழுதைய இளம் தோற்றமாகத்தான் இருக்கிறது என்பார்கள். நான் நான்கு மாதங்களாக ஒவ்வொரு சிறு அம்சத்தையும் வெகு சிரத்தையோடு கவனித்து இதை எழுதியிருக்கிறேன், நீங்கள் இப்படிச்சொல்வது சரியில்லை!" என்றான் பய பக்தியுடன்

சித்திரக்காரனின் எளிய உருவத்தைக்கண்டு தனவான் அவனை நன்றாக ஏமாற்றலாம் என்று எண்ணிவிட்டார்.

"சரி, இதற்கு என்ன கூலி கேட்கிறாய்?" என்றார்.

"ஸ்வாமி, நீங்கள் முன்பு சொன்னபடியே எண்பது ரூபாய்தான்." என்றான் சித்திரக்காரன்.

"என்ன! இந்தக் கிழட்டுப் படத்திற்கு எண்பது ரூபாயா? பத்து சல்லிகூடப் பெறாதே படம்!" என்று நெற்றியைச் சுளித்தார் தனவந்தர்.

"என்ன ஸ்வாமி இது? படம் வரைவதற்கு முன்பே இதன் விலையை நீங்கள் நிர்ணயித்துவிட்டீர்கள் இப்பொழுது மட்டும் அதை குறைக்கலாமா?"

"என்னவோ அசட்டுத்தனம் செய்துவிட்டேன். என்று ஒப்புக்கொள்கிறேன். ஆனால் படம் இப்படி இருக்கும் என்று அப்பொழுது கண்டேனா? பத்து ரூபாய் கொடுக்கிறேன் வேண்டுமானால் வாங்கிக்கொண்டு போ.



இல்லாவிட்டால் வேறு யாரிடமாவது பேரம் பேசி, அதன் நிஜவிலை பத்து ரூபாய்தான் என்று தெரிந்து நன்றாகத் அப்புறம் கொண்டு வந்து, சொற்பமாக வாங்கிக் கொண்டு போ!" என்றார் தனவந்தர்.

அப்பொழுது பார்க்க வேண்டுமே, சித்திரக்காரனுக்கு வந்த கோபத்தை!

"யஜமான், அதன் விலையான எண்பது ரூபாயை இப்பொழுதே கொடுப்பதானால் கொடுங்கள். அனாவசியமாக உங்கள் படத்தை வேறு யாரும் வாங்குவார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை அதனால் கொஞ்ச நாளில் நீங்களே இதை என்னிடமிருந்து எண்பது ரூபாய்க்கு வாங்கும்படி செய்கிறேன் பாருங்கள்!" என்று கூறி படத்தைத் தூக்கிக் கொண்டு விடுவிடு என்று நடந்தான். பாதி தூரம் சென்றவனை தனவந்தர் வழிமறித்து, "இன்னும் இரண்டு நாளில் நீயே என்னிடம் வந்து, கிடைத்தது லாபம் என்று பத்து ரூபாயை தெய்வமே என்று வாங்கிக் கொண்டு போகப்போகிறாய் பார்" என்று குதூகலிக்க ஆரம்பித்தார்.

"அப்படி ஒன்றும் நான் செய்துவிடமாட்டேன். இன்னும் கொஞ்ச நாளில் நீங்கள் தான் என்னிடம் வந்து எண்பது ரூபாயைக் கொடுத்து படத்தை வாங்கிக்கொண்டு போகப்போகிறீர்கள்! என்ன பந்தயம்?" என்றான் சித்திரக்காரன்.

"நீ சொல்வதுபோல நடந்தால் இன்னும் 20 ரூபாய் சேர்த்துப்போட்டு உனக்கு நூறு ரூபாயாகக் கொடுக்கிறேன். ஆனால் அது ஒரு போதும் அது நடக்காது. நான் திடசித்தம் உள்ளவன். அதனால் நான் சொன்னதுதான் நடக்கும்; அப்படி நடந்தால், எனக்கு என் குழந்தையின் படத்தையும், மனைவியின் படத்தையும் பணம் இல்லாமல் எழுதிக் கொடுக்க வேண்டும்!" என்று ஒரு பந்தயத்தைக் கட்டிவிட்டு வீட்டிற்குப் போனார் தனவான்

தன் சிறு வீட்டிற்குச் சென்ற சித்திரக்காரன், 'நான்கு மாதம் பசியைப் பொறுத்தோம். இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக் கொண்டால் குடி முழுகிப் போய்விடாது" என்று எண்ணிக் கொண்டான். தனவான் தன் எளிய உருவத்தைக் கண்டும் தன்மேல் இரக்கம் கொள்ளாததால் அவனுக்கு வருத்தமாக இருந்ததோடு பொல்லாத கோபமும் வந்தது. அதனால்தான் யோசித்து வைத்திருந்த யுக்திப்படியே தனவந்தரின் அந்தப் படத்தின் கீழ் இந்த ஊரில் மிகவும் பணக்காரரான ஒருவருடைய படம் இது. பணம் இருந்தாலும் பசுவ இரக்கம் இல்லாதவர் இவர். ஏழைகளை துன்புறுத்துவதில் கெட்டிக்காரர். 'பணம் இருந்தால் அவன் பெரியவனாவானோ!' என்று கொட்டை எழுத்தில் எழுதி, எல்லோர் கண்ணிலும் படும்படியாக ஒரு இடத்தில் வைத்தான்.

அன்றையிலிருந்து போவோர் வருவோரில் ஒருவராவது அதைப் பார்க்காதவர் இல்லை. தனவந்தர் எவ்வளவோ ஏழைகளை இதேபோல கஷ்டப்படுத்தியிருக்கிறார் - ஆகையால் அந்த ஏழைகள் எப்படியாவது அவருக்கு நல்ல புத்தி கற்பிக்க வேண்டும் என்று வெகு நாட்களாக ஆவல் கொண்டிருந்தார்கள். ஆகவே சித்திரக்காரனுடைய இந்த தைரியமான 'செயலை மெச்சி அவனுக்கு ஆதரவு தேடினார்கள்; அவனைக் காப்பாற்றவும் சித்தமாக இருந்தார்கள். அந்தப் படத்தைப் பார்த்தவரெல்லாம் கேலிசெய்து நகைத்தார்கள். ஒருவருக்காவது அதில் சந்தேகம் இல்லை. யாரும் தனவந்தர் கட்சியிலும் இல்லை. ஊரில் யார் வாயிலும் அவருடைய படத்தைப்பற்றியும் அதன் கீழ் எழுதியிருக்கும் வார்த்தைகளைப்பற்றியும்தான் பேச்சு. வெகு சீக்கிரமே இந்த செய்தி தனவான் காதிலும் விழுந்தது. இரண்டு மூன்று தரம் அவரே படத்தை நேரில் பார்க்கவும் செய்தார் அவருக்கு அவமானம் பிடுங்கித் தின்றது. கோபப்பட்டுக்கொண்டு சித்திரக்காரனைத் தண்டிப்பது சொப்பனத்திலும் முடியாத காரியம். ஊரே அவன் பக்கம் பரிந்து நிற்கும்போது, தான் எப்படி அவனை தண்டிப்





பதா? கோர்ட்டில் மான நஷ்டத்திற்காக வழக்குத் தொடுப்பது அதைவிட அசாத்தியம். சித்திரக்காரன்தான் நியாயமாகக் கேட்ட பணத்தை அவர் கொடுக்கவில்லை என்று நிரூபித்துக் காட்டிவிடுவான். தனக்குப்பின்னும் அவமானம்தான் ஏற்படும் இதை எல்லாம் பார்த்தபோது தனவந்தருக்கு அவமானத்தாலும் கோபத்தாலும் கவலையாலும் இரவுத் தூக்கமே போய் விட்டது. எப்படியாவது அந்தப் படத்தை சித்திரக்காரனிடமிருந்து வாங்கிவிட்டால்தான் அந்த ஊர் ஜனங்களின் வாய் அடைபடும் என்று அவருக்குத் தோன்றியது. ஆனால் தன் தோல்வியை ஒப்புக்கொள்ள யாருக்குத்தான் மனம் வரும்? அவருக்கோ நிலைமை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் ஆகிவிட்டது. படத்தை அப்படியே விட்டுவைத்து ஊர் ஜனங்களின் பரிகாசத்தை ஏற்பதா? இல்லை, சித்திரக்காரனிடம் தன் தோல்வியை ஒப்புக்கொள்வதா? இதே யோசனை இராப்பகலாக அவர் மூளையைக் குழப்பிவிட்டு விட்டது.

கடைசியில் ஒரு தீர்மானத்திற்கு வந்தவராக ஒருநாள் அவர் நன்கு இருட்டியபின் யார் கண்ணிலும் படாமல் சித்திரக்காரன் வீட்டிற்கு வந்து, "அப்பா, நீதான் ஜயித்தாய்! பந்தயம் ஜயித்தது மட்டும் அல்லாமல் எனக்கு நல்ல புத்தியும் கற்பித்துவிட்டாய். அதனால் நான் முன்பு சொன்னதுபோல படத்தின் விலையான ஐம்பது ரூபாயையும், பந்தயப்பணமான இருபதையும், எனக்குப் புத்தி கற்பித்ததற்கு இனாமாக ஐம்பது ரூபாய் ஆக நூற்றைம்பது ரூபாய் உனக்குக் கொடுக்கிறேன். தயவு செய்து என்னை அவமானப்படுத்தும்படி இனி ஒன்றும் செய்துவிடாதே. இதுவே ஏழேழு ஜன்மத்துக்கும் போதும்." என்று கூறி அவனுக்குப் பணத்தைக் கொடுத்து தன் படத்தை வாங்கிக்கொண்டு போய்விட்டார். அவமானப் பட்டுக்கொண்டு அவரே படத்தை அதிக விலை கொடுத்து வாங்கினார் என்று அறிந்தால் ஜனங்கள் இன்னும் நகைப்பார்கள் என்று அவருக்குத் தோன்றியது. அதனால் சித்திரக்காரனிடம் இதை ரகசியமாக வைத்துக்கொள்ளச் செ... அவனும் நினைத்ததற்கு பணம் கிடைத்த ஆனந்... அப்படியே செய்ய (... கொண்டான்.



அறையிலிருந்து அந்த ச... னை தனவந்தர் ஏழைகளுக்கு வேண்டிய உதவி செய்ய ஆ... பித்தார் சித்திரக்காரன் செ... செய்கையினால் தான் அவர் ... படி மாறி இருக்கிறார் என்... அறிந்துகொண்ட ஜனங்கள் அவனிடம் தங்கள் படங்களை யும் வரையச் சொல்லி, நல்ல கூலியும் அவனுக்குக் கொடுத்... உதவினார்கள். இப்பொழுது அவன் ஒரு பிரபல கலைஞனாய் தனவந்தருடைய தாராள... கையையும் இப்பொழுது எ... லோரும் மெச்சத்தான் செய்... கிறார்கள்.





## அட்டைப் படம்

14-வயதுள்ள ஜெரால்டு ஸெலிவான் என்ற சிறுவன் (ராக்ஸ்பரி) போலீஸ் ஸ்டேஷன் அறையில் 10 வருஷ காலம் அடைத்து வைக்கப்பட்டிருந்தான். இவனைப் போன மார்ச்சு மாதம்தான் விடுவித்தார்கள். வெளியே வந்ததும் அவன் மிக்க அபிமானத்துடன் தன் வளர்ப்பு பூனையைத் தட்டிக் கொடுத்துக் கொஞ்சினான்.

19-6-...

சுதேசமித்திரன்

...49 THE SWADESAMITRAN WEEKLY விலை அணா 4.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 JUL 1949
MADRAS

144098

...600 008.
144098






இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

**WOODWARD'S GRIPE WATER**

W. WOODWARD LTD. LONDON. ENGLAND




OFFICE OF ... OF BOOKS
5 JUL 1949
MADRAS




# K. S. E. . . . .

## கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள்

★

உங்கள் கல்யாண வைபவங்களுக்கு
பிரத்யேகமான சோபையளிக்கும்
இதற்கு நாங்கள் உத்தரவாதம்.

★

பல புதிய ரகங்கள் வந்துள்ளன. இன்றே வந்து பாருங்கள்.

★

## காத்தாயி ஸில்க் எம்போரியம்,

கிழக்கு மாடவீதி - மைலாப்பூர் - மதராஸ்.

## பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

சங்கீதகலாசிகாமணி அரியக்குடி.
ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால்
ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ருஹ்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும்.

தபால் செலவு ப்ரத்யேகம்.

மானேஜர்,
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை.

## "விஜய ரக்ஷணி"

(மூலிகா யந்திர தாயத்து)



இந்த கவசத்தை அணிவதால் சகல சாராதி தோஷம் நீங்கும். ஆரோக்யம், குடும்ப க்ஷேமம், கல்யாணம், வியாபார லாபம், பகை, சமாதானம், உத்யோக உயர்வு, அதிகாரி விஸ்வாஸம், வியாஜ்ய வெற்றி, பண விஷயத்தில் செளகர்யம், மற்றும் சகல விதமான மேன்மையுண்டாகும். மாணவர்களுக்குப் பரீக்ஷை பாஸாகும். குழந்தைகளுக்கு பாலாரிஷ்ட தோஷம் நீங்கி, ஆயுராரோக்யமுண்டாகும். ஜனன விபரம் அல்லது பெயர், சுமார் வயது, விலாஸம் குறிப்பிட்டு எழுதினால் கவசம் தயார் செய்தனுப்பப்படும்.

விஜய ரக்ஷணி கவசம் 1-க்கு ரூ. 7—8—0
விஜய ரக்ஷணி பிரத்யேக ரக்ஷை 1-க்கு ரூ. 72-8-0
தபால் செலவு தனி.

## ஆரூடம் - ஜாதக பலன்

பண நிலைமை, தொழில் மாறுதல், லாப நஷ்டம், காதல், கல்யாணம், குடும்பம், ஆரோக்யம், படிப்பு, அதிர்ஷ்ட நாள், எண், நிறம், மற்றும் முக்யவிஷயங்களும் எழுதியனுப்பப்படும். ஜனன கால விபரம் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, சொந்தம் தொழில் குறித்து எழுதும் நேரம் தேவை. ஒன்று முதல் 5 எதிர்கால கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூ. 6. குழந்தைக்கு ஜாதகம் கணித்து ஆயுள், படிப்பு, முக்ய யோக்யாம்சம் கணக்காக எழுத ரூ. 5. உடக்கும் ஒரு ஜாதகத்துக்கு புத்திவாரி பலன் ரூ. 10. வி. பி. செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஜோஸ்யர், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# சுதேசமித்திரன்
## வாரப்பதிப்பு

### பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| மன மாற்றம் | "எல்லார்வி" | 5 |
| குருட்டு அதிர்ஷ்டம் | ஆதாமன் | 9 |
| சொப்பன வாழ்க்கை (தொடர்கதை) | 'ஆர்வி' | 11 |
| தேர்த்தட்டு வார்த்தை | வாரன் | 17 |
| யோக க்ஷேமம் | குங்குமம் | 19 |
| கலா மண்டபம் | | 23 |
| பெரிய புராணம் | பி. ஸ்ரீ. | 27 |
| தனயோகம் | "பி வி. ராவ் | 29 |
| காட்டிலே கண்ட காதலி | ப. ராதாகிருஷ்ணன் | 31 |
| தங்கமே தங்கம் | 'வேம்பு' | 35 |
| பூர்விகக் கலைச் செல்வம் | 'ராவி' | 39 |
| பாலும் பயனும் | | 43 |
| ரேடியம் கண்டுபிடித்தவர் யார்? (சிறுவர் கதை) | லட்சுமி அம்மாள் | 47 |


"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும், பெயர்கள், சம்பவங்கள், அனைத்தும் முற்றிலும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.




# சுதேசமித்திரன்
## வாரப்பதிப்பு

Vol. XX] விரோதி௵ ஆனி௴ 13உ ★ 1949-௵ ஜூன்௴ 26உ No. 21


# பிரமை தெளியுமா?

பிரஞ்சு அதிகாரிகள் சந்திரநாகூரையும் அதைப் போன்றுள்ள மற்றும் சில இடங்களையும் தங்கள் ஆதிக்கத்திலிருத்திக் கொள்ளச் செய்து வந்த சாகஸங்கள் ஒன்றிரண்டல்ல. அந்தக் கும்பல் செய்துவந்த பித்தலாட்டங்கள், அனைவரும் அறிந்ததே. இத்தகைய மாய வலையைச் சென்ற வாரம் சந்திரநாகூர் வாக்காளர்கள் சுக்கு நூறுகப் பிய்த்தெறிந்துவிட்டு தங்கள் உள்ளக் கிடக்கையைச் சந்தேகத்துக்குச் சிறிதும் இடமில்லாதபடி செய்துவிட்டார்கள். பிரஞ்சு ஏகாதிபத்திய வெறியர்களுக்கு இந்த சர்வஜன வாக்கின் முடிவு ஒரு பேரிடி. பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டுமென்ற வேட்கையை சர்வஜன வாக்கெடுப்பின்போது மகாஜனங்கள் தெளிவுபடுத்திவிட்டார்கள். பிரஞ்சு ஆதிக்கம் மேலும் நீடிப்பதா, வேண்டாமா என்பது இந்த வாக்கெடுப்பில் முக்கியக் கேள்வி. வேண்டும் என்ற கட்சியை ஆதரிக்கத் துணிந்தவர்கள் சுமார் ஒரு நூறு பேர்வழிகளே. வேண்டாம் என்று முழங்கிய வாக்காளர்களோ ஏழாயிரத்துக்கதிகம்.

உண்மையில் பிரஞ்சுக்காரர் தங்கள் கட்சி வெல்ல வழியில்லையென்பது ஏற்கெனவே உணர்ந்ததுதான். ஆனாலும் இவ்வளவு கொடுந் தோல்வி ஏற்படுமென்று அவர்கள் எதிர்பார்த்திருக்க முடியாது. தங்கள் சூழ்ச்சிகள் பலவும் வாக்காளர் மனத்தைக் குட்டைக் குழப்பி விடுமென்றே அவர்கள் ஆசையுடன் எண்ணியிருக்கக்கூடும். உண்மையில் இந்த சர்வஜன வாக்கெடுப்பை தற்போது நடத்த அவர்கள் சிறிதும் விரும்பவில்லை. இந்தியாவுடன் ஐக்கியமாவதென்று முன்னதாக சந்திரநாகூர் பகிரங்கமாக முடிவு செய்துவிட்டால் புதுச்சேரி, காரைக்கால், மாஹி, யானம் ஆகிய ஸ்தலங்களும் அதைப்பின்பற்ற ஊக்கம் பெறக்கூடுமென்று பிரஞ்சு அதிகாரிகள் அஞ்சினர். எனவே சந்திரநாகூர் வாக்கெடுப்பை ஒத்திவைக்க அவர்கள் படாதபாடெல்லாம் பட்டார்கள். இதற்கு அவர்கள் கையாளாத உபாயங்கள் பாக்கியில்லை. எனினும் அவர்கள் யுக்திகள் அனைத்தும் குடை சாய்ந்தன. வாக்கெடுப்பு நடந்து, சந்திரநாகூர் மக்களின் மனோபாவம் என்னவென்பது இப்போது திட்டமாகத் தெரிந்துவிட்டது. இனியாவது பிரஞ்சு அதிகாரிகள் பிரமை தெளியுமா?

இப்போது சந்திரநாகூரிலிருந்து வெளியான முடிவு பிரஞ்சு இந்தியாவின் குரலே. இந்திய யூனியனில் ஐக்கியமாக சந்திரநாகூருக்குப் பொருந்தக்கூடிய காரணங்கள் அனைத்தும், மற்ற பிரஞ்சு இந்திய ஸ்தலங்களான புதுச்சேரி, காரைக்கால், மாஹி யானம் இவை விஷயத்திலும் பூர்ணமாகப் பொருந்தும். இவையனைத்தும் பூகோளம், கலாசாரம், பொருளாதாரம் முதலிய எந்த ரீதியில் பார்த்தாலும் இந்திய உடலின் கூறுகளே. எனினும் சந்திரநாகூர் எவ்வழி சென்றபோதிலும், மற்ற நான்கு ஸ்தலங்கள் மட்டும் பிரஞ்சு யூனியனுக்குள் நீடிப்பது நிலைமையென்ற முறையில் பிரஞ்சு அதிகாரிகள் பகிரங்கமாகப் பிரசாரம் செய்துவருகின்றனர். இதைக் கேட்க அங்குள்ள மக்களின் நெஞ்சு கொதிக்கும். அவர்கள் தேசத் துரோகிகளாக, ஒரு அந்நிய ஏகாதிபத்திய தாஸர்களாக நடக்க ஒருப்படுவர் என்பதுதான் பிரஞ்சு விஷமப் பேச்சின் கருத்து. மற்ற நான்கு ஸ்தலங்களிலும் சர்வஜன வாக்கெடுப்பு நாணயமாக நடந்தேறுமாயின் சந்திரநாகூரில் ஏற்பட்ட முடிவே அங்கும் ஏற்படும் என்பது வெட்டவெளிச்சம். எனினும் அதற்கு மாறான ஒரு முடிவை எதிர்பார்ப்பதாக பிரஞ்சு அதிகாரிகள் பேசுவது, புரட்டு வழியைக் கைவிட அவர்கள் தயாராயில்லை எப்படியாவது மற்ற பிரஞ்சு இந்திய ஸ்தலங்களிலுள்ள மக்களின் கருத்தைக் கவிழ்த்துவிடலாம் என்று அந்த அதிகாரிகள் மனப்பால் குடிப்பதையே குறிக்கிறது. இதற்கு அந்த ஸ்தல மக்களும் வழிவிடப்போவதில்லை; இந்திய சர்க்காரும் இடந்தரமாட்டார்கள் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

# ஸ்ரீ சங்கரராவ் தேவ் பேசுகிறார்



( மேல் )

சென்றவாரம் மவுண்ட் ரோட 'ராஜாஜி ஹாலி'ல் நடந்த பொதுக் கூட்டத்தில் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி ஸ்ரீ சங்கர ராவ் தேவ் பேசினார்.

( கீழ் )

ஸ்வீடிஷ் மன்னரின் பிறந்ததின விழா சம்பந்தமாக சென்ற 16-ந் தேதி புது டில்லியில் ஸ்வீடிஷ் தூதர் நடத்திய விருந்தில் நேரு கலந்துகொண்டார். இருவரும் கைகுலுக்குகிறார்கள்

# நேருவும் ஸ்வீடிஷ் தூதரும்





OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 JUL 1949
MADRAS



# மனமாற்றம்

"எல்லார்வி"

"பாலு!......பாலு......" என்று பரபரப்புடன் கூப்பிட்டுக் கொண்டே முன் வராண்டாவுக்கு வந்தாள் என் சித்தி.

உள்ளேயிருந்து எந்த நிமிஷம் என்ன சேதி வருமோ என்று கவலையுடன் வராண்டாவிலே உலவிக்கொண்டிருந்த நான் திடுக்கிட்டு, 'என் சித்தி' என்ன வேண்டும்? என்றேன்.

"பிரசவ ஜாட்யந்தான் சுருக்கப் போய் ஒரு டாக்ஸியோ, ஜட்காவோ கொண்டு வா. உம் உம். சீக்கிரம்!" என்றாள் சித்தி

அருகிலுள்ள டாக்ஸி கம்பெனியை நோக்கி ஓட்டமாக ஓடினேன் சில நிமிஷங்களில் டாக்ஸியுடன் திரும்பி வந்தேன் அதற்குள் இங்கே நிலைமை மிகவும் நெருக்கடியாகிவிட்டது சித்தியும், குடியிருக்கிற இன்னொரு ஸ்திரியும் நீலாவைத் தாங்கி நடத்திக் கொண்டு வந்து காரில் ஏற்றினர். சித்தியும் ஏறிக்கொண்டாள் நானும் ஏறப்போனேன் அதற்குள் கண்ணன் விழித்துக்கொண்டு அழ ஆரம்பித்தான் இந்த சமயத்திலே அவன் விழித்துக்கொள்ளாதிருக்க வேண்டுமே என்று நான் பயந்துகொண்டே தானிருந்தேன். அவனைச் சமாதானப்படுத்தி மறுபடித் தூங்கவைத்துவிட்டுப்போக அப்போது அவகாசமில்லை காரிலே அந்த அகாலத்திலே அழைத்துக்கொண்டுபோவதும் உசிதமாகப் படவில்லை. எனவே என் தங்கை—சித்தி பெண்—வசம் அவனை ஒப்புவித்துவிட்டு நிர்தாட்சண்யமாகக் காரில் ஏறினேன். அவளும் எவ்வளவோ பாடுபட்டாள் அவனைச் சமாதானப்படுத்த ஆனால் அவன் பிடிபடாமல் அழுதான் வீட்டிலுள் அவன் போடும் 'வீல்' என்ற சத்தம் அந்த அர்த்த ராத்திரி வேளையில் அந்தத் தெருப் பூராவையும் கிடுகிடுக்கச் செய்தது அந்தச் சத்தம் நீலாவின் சரீர வேதனையையும் ஊடுருவிக் கொண்டு மன வேதனையை உண்டு பண்ணிற்றுபோலும்! சோர்ந்து சீட்டில் சாய்ந்துகொண்டிருந்தவள் மெல்லத் தலையைத் தூக்கி உட்புறம் நோக்கினாள். கண்களில் நீர் நிறைந்தது. உதடுகள் துடித்தன. இதற்குள் வண்டி நகர்ந்தது.

"அவனை இங்கே கொண்டு வரச் சொல்லுங்கோளேன்" என்றாள் நீலா பரிதாபமாக.

"எதுக்கு நீலா! வேண்டாம் காரி வளர்த்தப்படாது" என்று கண்டித்து கூறினாள் சித்தி.

"கடைசியாக ஒரு தடவை பார்த்து..."

வார்த்தை பூர்த்தி பெறவில்லை தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள் நீலா.

"சீ! அசடே! என்ன வார்த்தை பேசறே?" என்று கோபித்தாள் சித்தி "சரசுவதி!" என்று வண்டியிலிருந்தபடியே ஒரு சத்தம் போட்டேன் நான் சரசுவதி—என் சித்தி பெண்—கண்ணனை எடுத்துக்கொண்டு வந்து காரின் அருகில் நின்றாள். ஒரே தாவலாகத் தாவினான் கண்ணன். நான் கைகளை நீட்டி அவனை வாங்கினேன் அவன் என்னிடமிருந்து நீலாவிடம் தாவி அவளைக் கட்டிக் கொண்டான் அழுகை சற்று நின்றது நீலாவும் அழுத கண்ணும் சிந்தின மூக்குமாக அவனை அணைத்து கொண்டு விசித்தாள். உடல் நோவு ஒரு புறம், குழந்தையைப் பிரிந்து போகிறோமே என்கிற துக்கம் ஒரு புறம் நீலா அவதிப்பட்டாள் நேரம் சென்றுகொண்டிருந்தது சித்தி துரிதப்படுத்தினாள். எனக்கு ஏதோ ஜாடை செய்தாள். சரியாகப் புரியாத நிலையிலேயே கண்ணனை வாங்கி சரசுவதியிடம் கொடுத்துவிட்டு, "உம் போடிரைவர்" என்றேன். கண்ணன் கதறினான். வண்டி புறப்பட்டுவிட்டது தெருமுனையில் வண்டி திரும்பியபோது கண்ணனின் அம்மா அம்மா! என்ற அலறல் எங்கள் செவிகளைத் துளைத்தது நீண்ட பெருமூச்சு விட்டு மனதை அடக்கிக்கொள்ள முயன்றோம். ஆனால் வழி நெடுக, 'அம்மா! அம்மா!' என்ற சத்தம். ஒலித்துக்கொண்டேதான் இருந்தது



கல்யாணி ஆஸ்பத்திரி காம்பவுண்டுக்குள் நுழைந்த கார் கட்டடத்தின் முன் சென்று நின்றதும் உள்ளேயிருந்து மருத்துவப் பணிப் பெண்களில் இருவர் வந்து நீலாவை ஒரு தள்ளு வண்டியில் வைத்து உள்ளே கொண்டு சென்றனர்.

சித்தியும் தொடர்ந்து உள்ளே போய்விட்டாள் நான் ஏகாங்கியாக வெளியே நின்றிருந்தேன். ஒவ்வொரு விநாடியும் என் முன் ஒவ்வொரு யுகமாக உருக்கொண்டது நிலை கொள்ளாமல் தவியாய்த் தவித்தேன்.

சுமார் பத்து நிமிஷங்களுக்குப் பின் உள்ளேயிருந்து ஒரு பணிப் பெண் வந்தாள். "நீங்கள் அநாவசியமாக இங்கே காத்துக் கிடக்கவேண்டாம் போய்விட்டு விடியற்காலம் வாருங்கள்" என்றாள். உயிரின் ஒரு பகுதி நீலாவிடமும் மற்றொரு பகுதி வீட்டில் விட்டுவந்த கண்ணனிடமுமாகத் தத்தளித்துக்கொண்டிருந்த என்னால் அங்கேயும் இருக்க முடியவில்லை கண்ணன் கதறுகிறானே என்கிற கவலையால். நீலா இருக்குமிடத்தை விட்டுப் பிரிந்து செல்லவும் மனமில்லை என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்கிற பீதியால். இப்படி இருதலைக்கொள்ளி எறும்புபோல எவ்வளவு நேரம் தான் தவிப்பது? பணிப்பெண் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டு உள்ளே போய்விட்டாள் டாக்ஸிக்காரன் ஒருபுறம் நேரமாகிறதென்று நச்சரித்தான். ஆஸ்பத்திரி வாட்சுமேன் கேட்டைப் பூட்டவேண்டுமென்று முணுமுணுத்தான். 'சரி. நாம் இங்கே ஏகாங்கியாக நின்று ஆகப் போவதென்ன? வீட்டிற்குப் போனால் குழந்தைக் காவது ஓர் ஆறுதலாக இருக்கும் என்று ஓர் எண்ணம் ஏற்படவும் கண்ணனின் பரிதாபகரமான முகம் என் மனக் கண்முன் தோற்றமளித்தது உடனே டாக்ஸியில் ஏறி வீட்டை அடைந்தேன்.

இதற்குள் கண்ணன் அழுவென்டியதெல்லாம் அழுது எல்லோரையும் படாத பாடும் படுத்தி விட்டிருந்த பிஸ்கோத்து பப்பர்மெட்டு முதல் சர்க்கரைவரையில் முடிந்த வரையில் தீர்த்துக் கட்டிவிட்டு ஒருவாறு ஓய்ந்திருந்தான். என்னைக் கண்டதும் ஓட்டமாக ஓடிவந்து கட்டிக்கொண்டு, "அம்மா எங்கே அப்பா?" என்றான். நான் என்னத்தைப் பதில் சொல்வது? எங்கே? என்கிற கேள்விக்கு நேரிடையாகப் பதில் சொல்ல முடியாமல் திணறி விட்டு முடிவில் "வருவாள்" என்றேன். அதில் அவனுக்குச் சமாதானம் ஏற்படவில்லை.

'தம்பிப்பாப்பா பொறந்தாச்சா?" என்று கேட்டான் இதற்குள் யாரோ இப்படி ஒரு விஷயத்தை அவனிடம் சொல்லிவைத்திருக்கின்றனர். அவனுக்கு நான் பதில் கூறி முடிப்பதற்குள் வீட்டிலுள்ளவர்கள் சூழ்ந்துகொண்டு ஆஸ்பத்திரியில் இருக்கிற நிலையைப்பற்றிக் கேட்க வாரம்பித்தனர் அவர்களுக்கு நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இடையிடையே கண்ணனும் ஏதாவது கேட்டுக்கொண்டேயிருந்தான். கடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஒன்றாகியிருந்தது. இன்னும் சில மணிநேரத்தை எப்படிக் கழிப்பது என்பது புரியாத நிலையில் என் அறையில் நுழைந்தேன். அரை வேஷ்டியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டே கண்ணனும் அறைக்குள் வந்தான்

"உனக்குத் தூக்கம்வல்லையாடா?"

"இல்லே அப்பா"

"அத்தைகிட்டே போய்ப் படுத்துண்டு தூங்கு போ"

"ஊஹூம். உன்கிட்டேதான்"

"நான்" இப்போ படுத்துக்கப் போறதில்லே"

"ஏன் அப்பா?"

"கொஞ்சம் வேலை இருக்கு"

"அம்மாகிட்டே போப்போறயா?"

"இல்லையில்லே. வேறே காரியம் இருக்கு"

"அம்மா எப்போ அப்பா வருவா?"

"நாளைக்கு வருவா"



"தம்பிப் பாப்பாவை எடுத்துண்டு பூம் பூம்னு காரிலே வருவ இல்லே?......ஆமாவோ?"

"ஆமாம் ஆமாம். படுத்துண்டு தூங்கு போ"

"நீயும் படுத்துக்கோ அப்பா. உன் கிட்டேயே நானும் படுத்துக்கறேன்"

"காலேச்சுற்றினபாம்பு கடிக்காமல் விடாது" என்பதுபோல நான் எட்டென்றாலும் நான் படுக்காத வரையில்அவன் படுக்கமாட்டான் என்பது எனக்குத் தெரிந்தவிஷயமாகையால் படுக்கையை எடுத்து விரித்தேன். அதில் எனக்காக இடம்விட்டு ஒதுங்கிப் படுத்துக்கொண்டான் கண்ணன்.

மனம் ஆஸ்பத்திரியில்வட்ட மிடச் சரீரத்தைக் கண்ணன் பக்கத்திலே படுக்கையில் கிடத்தினேன். மனதில் ஏதேதோ எண்ண அலைகள் தோன்றி ஒன்றோடொன்று மோதிச் சிதறி ஆயிரக்கணக்கான சிந்தனைச் சிதர்களைச் சிருஷ்டி செய்து அழித்துக் கொண்டிருந்தன. எங்கோ யாரோ அவள் பிறந்தகத்திலே ஒரு ஜோஸ்யன் சொன்னானாம்: அவளுக்கு இரண்டாவது பிரசவம் அபாயகரமானது, என்று. அன்று முதல் சதா காலமும் அதே சிந்தனையாக இருந்தாள் அவள். அப்போதெல்லாம் நானவளைப் பரிகசிப்பதும் கண்டிப்பதுமாயிருந்தேன். ஆனால் இப்போது?

உள்ளத்தில் என்னென்னவோ குழப்பங்கள் பயங்கரமான பல நினைவுகள் இதனிடையே கண்ணனின் அர்த்தமற்ற கேள்விகள் வேறு. எல்லாம் சேர்ந்து என்னைப் பைத்தியக் காரனாக்கிவிட்டன ஏதேதோ கேள்விகளைக் கேட்டுக்கொண்டே வந்த கண்ணன் குழந்தைப் போக்கில் அசம்பாவிதமாக ஏதோ ஒரு வார்த்தையை உளறினான் அது ஏற்கெனவே கிலி பிடித்திருந்த என் மனதிற்குச் சுரீர் என்று படவும் குழந்தைமேல் சீள்ளென்று விழுந்தேன். பாவம். நடுநடுங்கிப்போய்விட்டான் கண்ணன் அவ்வளவுதான். அதன் பிறகு வாய் திறக்கவேயில்லை.

விளக்கொளியில் பயங்கர ரேகைகள் நிறைந்திருந்த என் முகத்தையே கூர்ந்து நோக்கியவண்ணம் மௌனமாகப் படுத்திருந்தவன் அப்படியே தூங்கிப்போய்விட்டான் தூக்கத்திலே நிர்மலமாகக் காட்சி தந்த செந்தாமரை போன்ற அவன் முகத்தைப் பார்த்ததும் எனக்கு ரொம்பவும் பரிதாபமாக இருந்தது. என்ன மிருகத்தனம்! அநியாயமாகக் குழந்தை மேல் சீறி விழுந்தாயே! என்று என்னை நானே நொந்துகொண்டேன் பச்சாதாபத்தால் குழந்தையைத் தடவிக் கொடுத்துச் சேர்த்து அணைத்துக்கொண்டேன்.

கண்ணனுக்கு அப்போது வயது மூன்று. நல்ல அழகு புத்திசாலித்தனமுள்ளவன். பெற்றோரிடம் அபார அன்பு என்றாலும் தாயினிடம் அவனுக்குள்ள பாசத்தை அளவிடவே முடியாது. பிறந்தது முதல் அதுவரை ஒரு நாளாவது தாயைப் பிரிந்தவனல்ல ஒரு சில நிமிஷம் அவளைக் காணாவிடில் துடித்துப் போய்விடுவான். நீலா கருவுற்றதும் யாரோ விளையாட்டாக "தம்பிப்பாப்பா பொறக்கப் போறது: அப்புறம் அம்மா உன்னைத் தூக்கிக்கமாட்டாள் தம்பிப் பாப்பாவைத்தான் தூக்கிக்குவாள்" என்று சொன்னபோது அவன் முகத்திலே தோன்றிய உணர்ச்சிகளுக்கும் வந்த கோபத்திற்கும் எல்லையே இல்லை. "தம்பிப் பாப்பாவை இந்தக் கழியாலேயே அடிச்சிக் கொன்னுடுவேன்" என்று கையிலிருந்த கழியை ஆட்டினான். தன் தாயின் அன்பைப் பிறர் பங்கு கொள்வதிலே அத்தனை ஆத்திரம் அவனுக்கு. அது முதல் அது போன்ற வார்த்தைகளையே யாரும் அவனிடம் பிரஸ்தாபிப்பதில்லை அப்படிப்பட்ட தாயைப் பிரிந்து தனிமையிலிருக்கிறது குழந்தை பிரசவிக்கத்தான் போயிருக்கிறாள். தம்பிப் பாப்பாதான் பிறக்கப் போகிறது என்று அவனுடைய சின்னஞ்சிறு உள்ளத்திலே ஒரு நிர்மானம் ஏற்பட்டுவிட்டது. நீலா கார் ஏறிச்சென்ற கோலத்தைக் கண்டதிலிருந்தும் வீட்டிலுள்ளவர்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டதிலிருந்தும், தாயைப் பிரிந்த ஏக்கம், தம்பி பிறக்கப் போகிற வருத்தம், அதனால் தனக்குத் தாயாரிடம் அதுவரை உள்ள ஏகபோக பாத்தியதைக்கு ஹானி ஏற்படப்போகிற துக்கம் இந்தனையோடும் குழந்தை 'சரி தகப்பனாவது அநுசரணையாக இருப்பான் என்று எதிர்பார்த்து ஏதோ தன் மனதில் தோன்றியவைகளைப் பேசினதற்குத் தந்தையிடமிருந்து ஒரு சீறலைப் பதிலாகப் பெற்றால் ஒரு சின்னஞ்சிறு குழந்தையின் மெல்லிய உள்ளம் என்ன பாடு தான் படாது!

நான் கண்ணனைப்பற்றி இப்படி ஏதேதோ எண்ணமிட்டுக்கொண்டிருந்தேனே தவிர அவன் லேசாகக்



குறட்டை இழுக்க ஆரம்பித்தான். இடையிடையே புரளும்போது, ஏதேதோ முணுமுணுத்தான் தூக்கத்திலும் பல சிந்தனை!

மணி நாலடித்தது. மெல்ல எழுந்து ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்றேன் ஆண்டவன் எனக்கு அருளே செய்தான் ஆஸ்பத்திரியில் எனக்கு நல்ல சேதி காத்திருந்தது சுகப் பிரசவம், ஆண் குழந்தை குதூகலத்துடன் வீடு திரும்பினேன் பொழுது விடிந்ததும் இந்த நற்செய்தியைக் கேட்டுப் பலரும் எனது சந்தோஷத்தில் பங்கு கொண்டனர் எல்லோரும் சந்தோஷப்படுவதைக் கண்டு கண்ணனும் சந்தோஷப்பட்டான்

விளையாட்டுக் குழந்தைகளின் போக்கே விசித்திரமானதுதான் பிறந்தது முதல் கணமும் பிரிந்தறியாத தாயை முதல் முதல் பிரிய நேர்ந்தபோது ரகளை செய்து ஓவென்று கதறிய கண்ணன் வர வர அந்த நினைவே அற்றவனாகிவிட்டது எங்களுக்கெல்லாம் பெரிதும் ஆச்சரியத்தை விளைவித்தது நாங்களாக நீலாவைப்பற்றி ஏதாவது அவனிடம் பிரஸ்தாபித்தால்தான் உண்டு அவனாக ஏதும் பேசுவதே இல்லை பிரசவமான மறுநாள் காலை முதல் காலை, மத்தியானம், சாயங்காலம் இப்படி வேளை தவறாமல் யாராவது ஆஸ்பத்திரிக்கு வீட்டிலிருந்து போவதும் வருவதுமாய் இருந்தார்கள். ஒரு பிள்ளை நானும் அம்மாவைப் பார்க்க வருகிறேன் என்று சொல்லாதோ? ஊஹூம் கிடையாது. அந்தப் பேச்சே கிடையாது அவன் மனதில் என்ன எண்ணமோ? யார் கண்டது? ஆஸ்பத்திரிக்குப் போய் வந்தவர்கள் மற்றவர்களிடம் குழந்தையைப்பற்றியும் நீலாவைப்பற்றியும் ஏதாவது பேசிக்கொண்டிருந்தால் தூர இருந்து பேசுபவர்களைக் கண் கொட்டாமல் பார்த்து விஷயங்களை காதுகொடுத்து கேட்பான். அவ்வளவுதான், பேச்சு முடிந்ததும் அப்பால் போய்விடுவான் இதேதவிர அவன்—மூச்சுக்கு மூந்நூறு வார்த்தைகளை உதிர்ப்பவன்—வாய் திறக்கமாட்டான் இது எங்களுக்கெல்லாம் ரொம்பவும் அதிசயமாகத்தானிருந்தது எல்லோரும் சொன்னார்கள் கண்ணனை ஒரு நாள் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று குழந்தையையும் நீலாவையும் காட்டி அழைத்துவரவேண்டுமென்று ஆனால் எனக்கிஷ்டமில்லை. ஏதோ தெய்வ வரப்பிரசாதம் போல் அவன் தாயை மறந்திருக்கிறான் அவ்வாறின்றி ஓயாமல் நச நசவென்று அழுதால் எல்லோருக்கும் உபத்திரவந்தான். இந்நிலையில் அவனை அழைத்துப் போய்த் தாயின் நினைவை நாமாக உண்டு பண்ணுவானேன்? அதிலிருந்து பிடித்துக்கொண்டால்?— இதுவே என் யோசனை. ஆகவே, ஆயிற்று இன்னும் சில தினங்கள், மறந்தது மறந்த வாக்கில் இருக்கட்டும் என்றிருந்தேன். ஆனால் நீலா பிடிவாதம் செய்தாள். கண்ணனைப் பார்க்க வேண்டும்போலிருக்கிறது என்றாள். வினுந் தெரியாத 'சின்னக் குழந்தை'களின் பிடிவாதத்திற்குப் பல வகை மருந்துண்டு. வயது வந்த 'பெரிய குழந்தை'களின் பிடிவாதத்திற்கு ஒரே ஒரு மருந்தைத் தவிர மாற்றுக்கிடையாது அவர்கள் பிடித்த பிடியை நிறைவேற்றிவைப்பதுதான்

குழந்தை கண்ணனை அலங்கரித்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டு போய் நீலா முன் விட்டோம். தன்னைக் காணாமல் குழந்தை துரும்பாய் இளைத்துப்போயிருக்கும் என்று எதிர்பார்த்த நீலா ஏமாற்றமடைந்தாள் அடுத்தபடியாகத் தன்னைக் கண்டதும் தாவிக்கொண்டு ஓடி வருவான் என்றெதிர் பார்த்தாள். கலகலவென்று வழக்கம்போல வார்த்தைகளைப் பொரிந்து தள்ளுவான் என்றெதிர்பார்த்தாள். அனைத்திலும் அவளுக்கு ஏமாற்றமே.

குழந்தை கொழுகொழுவென்றிருந்தான். அவளைப்பார்த்ததும் முன் வைத்த காலை அவள் பக்கத்திலே உறங்கிக்கொண்டிருந்த சிசுவைக் கண்டதும் பின்னுக்கு இழுத்துக் கொண்டான் ஏதோ பேச எண்ணித் திறந்த வாயைக் கெட்டியாக மூடிக் கொண்டான் உள்ளத்திலே கொந்தளிக்கும் பலவித எண்ணச் சாயல்களை முகம் பளிங்குபோல் எங்களுக்கு எடுத்துக்காட்டிற்று ஆனால் தளதளவென்று உடல் செழுமைபெற்றிருந்தாலும் அந்தப் பார்வையிலே இதயத்தின் ஆழத்திலே அடக்கமுடியாத ஓர் ஏக்கம் படிந்து நிலைத்துப்போயிருப்பதுமட்டும் நன்கு தெரிந்தது. கண்ணே வாடா. முத்தே வாடா என்று ஏதேதோ கொஞ்சினாள் நீலா. கண்ணன் அவளிடம் ஒன்றுமே பேசவில்லை "ஆத்துக்கு வா அப்பா" என்று என் வேஷ்டியைப் பிடித்து இழுத்தான் நாங்கள் சிரித்தோம். எங்கள் சிரிப்பு அவன் வேதனையைக் குத்திக்கிளறுவதாயிருந்ததுபோலும் சிணுங்கத் தொடங்கினான் முடிவில் பயங்கரமான ஏதோ ஒன்றைப் பார்ப்பதுபோல நீலா படுத்திருந்த கட்டிலை விநோதமாகப் பார்த்தவண்ணம் அழத் தொடங்கினான்

வீட்டிற்கு வரும்போதோ வந்த பின்போ தாயைப்பற்றியோ, தம்பியைப்பற்றியோ ஒரு வார்த்தையும் பேசவில்லை அவன் நீலா நல்லபடியாக வீடுவந்து சேர்ந்த பின்பும் கண்ணன் அவளை நெருங்கவில்லை. அவன் மனதிலே சகஜபாவம் ஏற்பட வெகு நாள் பிடித்தது. எனினும் பழைய பாசம் அந்த சகஜபாவத்தில் இல்லை. தனது ஏகபோக உரிமையை இழந்ததால் ஏற்பட்ட அவனது மனமாற்றத்திற்கு இனி பரிகாரம் இல்லை என்பதே அவன் தீர்மானம் போலும்!

—◆—






வேதவல்லியின் கோபத்திற்கு சக்தியிருந்திருக்குமாயின் அப்போது அவள் தன் புருஷன் ராமலிங்கத்தைப் பார்த்த பார்வையிலேயே அவர் தவிடுபொடியாயிருப்பார்.

மூஞ்சியைச் சிணுங்கிக்கொண்டு "இந்தத் தகரடப்பாவை எந்த சீமையிலிருந்து கொண்டு வந்தீர்களாம்?

ராமலிங்கம் மிகப் பணிந்த குரலில் "இதோ பார் வேதம் இந்த பேபி காரின் அசல் விலை என்னான்னு தெரிஞ்சா இப்படிக் கோபிக்கமாட்டாய். தவிட்டுக்கு வாங்கினாற்போல் வாங்கிவந்துட்டேன், என்றார்.

"சரி, சரி. இதைக் கொண்டு போய்ப் பழய இரும்பு தகரசாமான் கடையிலே போட்டுட்டு வாங்கோ, லாபம்கூட கிடைச்சால் கிடைக்கும்" என்று ஏளனம் செய்தாள்.

இந்தக் காருடைய மகிமை உனக்கு என்னடி தெரியும்? இந்தப் பத்து வருஷத்தில் அஞ்சு கைமாறியிருக்கிறது. 40,000 மைல் சவாரி செய்திருக்கிறது. ஏழு தடவை ரிப்பேர் செய்யப்பட்டுப் புது புது சாமான்கள் இழைத்திருக்கிறது இதற்கு; அடடா, எவ்வளவு அநுபவம் இந்தக் காருக்கு; 'நான் கொடுத்ததெல்லாம் 740 ரூபாதானே" என்று காரையும் தன்னையும் புகழ்ந்துகொண்டே போனார் ராமலிங்கம்.

"உங்கள் காரின் பெருமையையும் உங்கள் சாமர்த்தியத்தையும் நீங்களே டமாரம் அடித்துக் கொள்ளுங்கள். சம்சாரத்தைச் சிக்கனமாய் நடத்திசுக்கான் பிடிக்க பாஞ்சாலி கலியாணத்திற்கென்று இந்த நாலு வருஷமாய் சுமார் எட்டாயிரம் சேர்த்து வச்சிருக்கேன். நீங்கள் வீண் டம்பத்துக்கு ஆசைப்பட்டு தாம்தூமென்று செலவழிச்சுக் குடித்தனத்தைக் குட்டிச்சுவர் அடியுங்கள்" என்று சொல்லி, முகவாய்க்கட்டையை இடது தோளில் ஒரு இடி இடித்துச் சரேலென்று சமயலறையை நோக்கி நடந்தாள் வேதவல்லி.

என் உத்யோகம் உயர்ந்து சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆனதிலிருந்து இந்த ஒருவருஷமாய் எனக்கென்று சொந்த மோட்டார் வைத்துக்கொண்டு நானே ஓட்ட வேண்டுமென்று மிகவும் ஆசைப்பட்டு, இந்தக் காரை லகுவாய் வாங்கினேன். விட்டுக்கவலை, பாஞ்சாலி கல்யாணக்கவலை இவளுக்குமட்டுந்தான் இருக்கிறதா! எனக்கில்லையா! மாதா மாதம் சம்பளத்தை அப்படியே இவளிடம் கொடுத்துவிடுகிறேன். மேல் வரும் படியைக்கொண்டு என் செலவுகளைப் பார்த்துக்கொள்ளுகிறேன்; இந்தக் காரையும் அதைக் கொண்டுதானே வாங்கினேன் இவளுக்கென்ன மனக்கசப்பு? இந்த மேல்வரும்படியிலிருந்து ரகசியமாய் எவ்வளவு நாள் சேர்த்து வைத்திருக்கிறேனென்று இவளுக்கு என்ன தெரியும்! ஜம் என்று காரில் உட்கார்ந்து இவளையும் பாஞ்சாலியையும் ஏற்றிக்கொண்டு உல்லாசமாய் பவனி வந்துகொண்டிருப்பேனானால் ஜனங்களுக்கு என்மீது எவ்வளவு மதிப்பு ஏற்படும்; மேல் வரும்படி எவ்வளவு ஏறும்; கல்யாண மார்க்கெட்டில் பாஞ்சாலியின் மதிப்பு எவ்வளவு உயரும்!

நான் இதையெல்லாம் மனக்கோட்டைக்கட்டி சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கையில் இந்த மூடம் எறிஞ்சு விழுகிறதே! கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோல் இருக்கிறதே! இன்ஸ்பெக்டர் ராமலிங்கம் என்றால் இந்த ஜில்லாவே நடுங்குகிறதே, பெண்ஜாதியின் மிரட்டலுக்கா பயந்துவிடுவேன்? என்றெல்லாம் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு காரைத் தானே ஓட்டும் முயற்சியில் முனைந்தார் ராமலிங்கம். ஒரு மாதம் செய்த மும்முரமான முயற்சியில் சுமாராக ஓட்டவும் கற்றுக்கொண்டார் இன்ஸ்பெக்டர் ராமலிங்கம் பரீட்சை செய்யப்படாமலே கார் ஓட்டும் லைசென்சும் பெற்றார்.

இரண்டுதடவை மதராசுக்குக்கூட தானே காரை ஓட்டிக்கொண்டுபோய் வந்துவிட்டார். ஆனாலும் அடிக்கடி கார் நின்றுபோய் வழியில் அவர் பட்ட கஷ்டம் அவர் பொறுமையையே பரிசோதித்தது. பஸ்களும், கார்களும், சைகிள்களும் பலப் பலவாக சஞ்சரித்துக்கொண்டிருக்கும் மதராஸ் வீதிகளில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டே ஓட்டுவார் ராமலிங்கம். இடது புறமே ஓட்ட எவ்வளவு பிரயத்னம் செய்தாலும் கார் கேட்காது வலதுபுறம் திரும்பும். முன்னும் பின்னும் வரும் கார், பஸ் ஓட்டிகள் ராமலிங்கத்தின் போலீஸ் உடைக்குப் பயந்து முணுமுணுத்துத் திட்டிக்கொண்டுபோவது ராமலிங்கத்துக்குத் தெரியாமலில்லை. ஒரு முறைப்பு முறைத்துவிட்டு மேலே போக முயல்வார். மூன்றாவது தடவை மதராஸ் போய் திரும்புகையில் இருட்டிவிட்டது. மகன் பாஞ்

சாலிக்காக வயிர அட்டிகை வாங்கப் போன சமயம் அது தங்கசாலைத் தெருவிலிருந்து சைனபஜார் திரும்பு கையில் கார் டக்கர் செய்தது. பத்து நிமிஷங்கள் அத்துடன் மாரடித்துக் கொண்ட பிறகு கொஞ்சம் நகர ஆரம்பித்தது. பத்தடி போனதும் கார் இடதுபக்கம் போக மறுத்து வலதுபுறம் பாய்ந்தது. இதே சமயம் கனவேகமாக எதிர்ப்புறத்திலிருந்து ஓடிவந்த ஜீப் இந்தக்காருடன் மோதி ராமலிங்கத்தைத் தூக்கி வெளியில் எறிந்தது. அவருடைய பேபி கார் அடையாளம் தெரியாமல் நொறுங்கியது ஜீப்புக்கும் நல்ல அடி, அதுவும் நின்றுவிட்டது. ராமலிங்கம் மெள்ள சமாளித்துக்கொண்டு எழுந்து நின்றதுமே ஜீப் ஆசாமிகள் மூன்று பேரும் இவரைத் தாக்கினார்கள். வேண்டுமென்றே இவர் அந்த ஜீப்பைத் தடுத்தார் என்பது அவர்களுடைய எண்ணம். குற்றமுள்ள நெஞ்சங்கள் அல்லவா? ராமலிங்கமும் எதிர்த்து இரண்டு குத்து விட்டார். ஆனால் அம்மூவரில் ஒருவன் பின்புறம் வந்து துப்பாக்கியின் பின் மட்டையால் ஓங்கி மண்டையில் அடிக்கவே பிரக்ஞை இழந்து ராமலிங்கம் விழுந்தார். இந்தச் சமயம் ஜீப்பைத் துரத்திக்கொண்டு ஓடிவந்த ஒரு கூட்டமும் போலீஸ்காரர்களும் ஜீப் ஆசாமிகளைப் பிடித்துவிட்டார்கள் சில உயர்ந்த நகைகளை அப்போதுதான் சௌகார் ரங்கமல் கடையிலிருந்து திருடிக்கொண்டு ஓட்டம் எடுத்தவர்கள் அந்த ஜீப் பேர்வழிகள் ஒரு வருஷமாகப் பல திருட்டுக் கேஸ் சம்பந்தமாகப் போலீஸாரால் வலை போட்டு தேடப்பட்டவர்கள் இவர்கள். சென்னை போலீஸாரால் முடியாத காரியத்தை செங்கல்பட்டு சர்க்கில் இன்ஸ்பெக்டர் ராமலிங்கம் அல்லவா சாதித்தார்!

இரண்டு தினங்களுக்குப் பிறகு ராமலிங்கத்துக்குக் கொஞ்சம் நினைவு வந்தது. தலையில் பெரிய கட்டு கட்டப்பட்டு, ஜெனரல் ஆஸ்பத்திரியில் படுத்திருந்ததை உணர்ந்தார். பக்கத்தில் டாக்டரும் நர்சுகளும் தவிர சென்னை போலீஸ் கமிஷனரும் ஐ. ஜியும் நின்று பரிவுடன் விசாரிப்பதை அறிந்தார். ராமலிங்கத்திற்கு திக்பிரமையாயிருந்தது முதலில் விஷயம் புரியவில்லை. "நம் மாகாணத்துக்குப் பெரிய கௌரவம் இவரால்" என்று ஐ. ஜி கமிஷனரைப் பார்த்துச் சொன்னார் "அதற்கென்ன சந்தேகம், அவரை சென்னைக்கே மாற்றிவிட வேண்டும்" என்றார் கமிஷனர். அடிக்கடி வந்து விசாரித்துக் கொண்டிருந்த சௌகார் ரங்கமல் அப்போது அங்கு தோன்றி "இந்த இன்ஸ்பெக்டர் அவ்வளவு லாகவமாகக் காரை ஓட்டி அந்த ஜீப்பைத் தடுக்காமலிருந்தால் அந்தப் பக்கா கொள்ளைக்காரர்கள் அகப்பட்டே இருக்கமாட்டார்கள், சார்" என்றார். போலீஸ் ஆசாமியல்லவா, ராமலிங்கம்! அவருக்கு விஷயம் இப்போது பூராவாக விளங்கிவிட்டது. தான் கார் ஓட்டிய விதத்தையும், காரின் லட்சணத்தையுமா காட்டிக் கொள்வார்? ஒரு பெரிய துணிகரச் செயலை வெகு சாமர்த்தியமாக நடத்தியவர்போல் கம்பீரமாகப் புன்னகை புரிந்தார் ராமலிங்கம்.



சுமார் நான்கு லட்சம் ரூபாய் நகைகள் திருடு போய் மறுபடி கிடைக்கப் பெற்ற ரங்கமல் சும்மாயிருப்பாரா? காரில் நேராகச் செங்கல்பட்டுக்குப் போய் இன்ஸ்பெக்டர் ராமலிங்கமவர்களின் சாகசச் செயல்களைச் சாங்கோபாங்கமாக வேதவல்லியம்மாளுடன் ஒரு கதைபோல் சொல்லி 15,000 பெறுமான வயிர அட்டிகையை அரும் செல்வி பாஞ்சாலிக்கு அளித்ததன்றியும் அவர்கள் இருவரையும் தன் காரில் ஏற்றிக் கொண்டு ராமலிங்கத்தின் முன் நிறுத்தினார் 'வேதவல்லிக்கு இப்போது கணவன்மேல் எவ்வளவு கனிவு எவ்வளவு அன்பு!

இது நடந்த மூன்று மாதங்களுக்கெல்லாம் ராமலிங்கம் மதராஸ் டெபுடி கமிஷனர் ஆனார். அந்த வருஷத்தில் நிகழ்ந்த பாஞ்சாலிக்கும் ராமசாமி ஐ. ஸி. எஸ். ஸுக்கும் கல்யாணம் எவ்வளவு தடபுடல்! எத்தனை சௌகார்களின் காணிக்கைகள்! எவ்வளவு பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் விஜயம் செய்தார்கள்!

---





விசுவத்தின் தந்தை பலராமன் என்றைத்தினம் தஞ்சாவூரிலிருந்து பங்களூருக்குப் புறப்பட்டுச் சென்றாரோ அதே தினம்தான் சுவாமி தன் மனைவியிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டதும். ஆனால் அன்று இரவு அவன் தஞ்சாவூர் போகும் வண்டி வந்து நின்றதும் பெட்டி, படுக்கைகளுடன் இந்தப் பக்கமாய் ஏறி வண்டி புறப்படுமுன்பாக அடுத்த பக்கத்தில் பெட்டி படுக்கைகளுடன் இறங்கிவிட்டான். இரவு நேரமானபடியால் இந்த விநோத பிரயாணியை ஸ்டேஷனில் யாரும் கவனிக்கவில்லை

அவன் மனதில் சொல்லத்தெரியாத திகிலும் காரணம் இல்லாத குழப்பமும் நிரம்பிக் கிடந்தன. எல்லாம் நிறைந்திருந்த உலகத்திலிருந்து ஏகாங்கியாய் துன்பமும் துயரும் மலிந்த இடத்துக்குப் பிரயாணமாவது போன்ற ஒரு கிலி அவனைப் பிடித்துக்கொண்டுவிட்டது. அந்த அதிர்ச்சியில் அவன் முக்கியமான ஒரு காரியத்தைச்செய்யத் தவறிவிட்டதாகத் தோன்றியது தன்னை வெறுத்தாலும் விலக்கி ஒதுக்கினாலும் சுசீலா மனைவியைத் தனியே விட்டுச்செல்ல அவன் மனம் மிரண்டது. மறுதரம் தன் மனைவியின் முகம் மத்தையெல்லாம் அறிந்தவர்களுக்கு ஒருகால் இந்த விசித்திரப் போக்குக்காரணம் தெரிந்திருக்கலாம். எதனாலோ கலவியும் நனவிலும் சுசீலா வை இனிமேல்தான் பார்க்கமுடியாமல் போய்விடும் என்ற எண்ணம் அவன் மனதைக் கப்பிக்கொண்டிருந்தது தன்னை விலக்கும் சுசீலாவினுடைய ஒவ்வொரு முயற்சியும் அவன் எண்ணத்தை வலுப்படுத்திக் கொண்டே வந்தது. அவளுடைய நிஷ்டுரம் கலந்த பேச்சும், எதிலும் உற்சாகமில்லாத ஒரு போக்கும், யாரிடமும் மனம் விட்டுப்பேசி ஒன்றிப் பழகாத நடத்தையும் அந்த எண்ணத்தை ஊர்ஜிதம் செய்தன. இப்படி அவள் அவனுடன் இருந்த காலத்தில் ஒருநாளும் இருந்ததில்லை. ஆகவே ஏதோ யாராலும் ஊகிக்க முடியாத ஒரு முடிவுடன்தான் அவள் புறப்பட்டிருக்க வேண்டும். அந்த முடிவை மாற்றிக்கொள்ளும்படி இங்கே எதுவும் நடந்துவிடவில்லை நிஷ்காமியாய் நியாயம் சொல்லக்கூடிய அவள் தந்தைகூட அவளுக்கு ஆறுதல்சொல்ல முன்வரவில்லை. இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் அவன் கடமை என்ன!...........

மேலும் சுசீலாவிடம்தான் அவனுக்கு எத்தனை அன்பு! சொந்தத் தாயிடம் ஏற்படும் அன்புக்கும் சகோதரியிடம் இருக்கும்ஒரு அன்புக்கும் சமமில்லையிருந்தது அவனுடைய அன்பு! சுசீலா பிரியமாகச் சொல்வதைவிட, கடிந்து கொண்டு உத்திரவிடுவது அவனுக்கு ஆனந்தமாய் இருந்து பெங்களூரில் இருக்கும்வரையில் அவள் முகஜாடையைப் பார்த்து அவள் நோக்கத்தைத் தெரிந்து கொண்டு நடந்துகொள்வதில் அவனுக்கே ஒரு பிரியமிருந்தது.

"சுவாமி, இன்றைக்குச்





சனிக்கிழமைபோலிருக்கிறதே!'' என்பாள் சுசீலா. வேறொன்றும் சொல்லவேண்டியதில்லை.

''ஆமாம், மன்னி! என்னைத் தேய்த்துக்கொள்கிறேன்'' என்று உடனே பதிலளிப்பான் அவன்.

''அத்தை, இன்றைக்கு ரஸம் ரொம்ப ஜோர்'' என்று அவள் சாப்பிடும்போது கூறுவாள். உடனே சுவாமி கப்பை எடுத்து ரஸம் வாங்கி வைத்துக்கொள்வான். இந்த அன்பிலே இருக்கும் ஒரு புதுமைக்கு உலகத்தில் சரி ஏதாவது உண்டா? 'இந்த மன்னி ஒரு தடவை என்னைக் கோபித்துக்கொண்டால் எனக்கு எவ்வளவு ஆனந்தமாய் இருக்கும்!' என்று அவன் எண்ணமிடுவதுண்டு. அவளுக்குப் பிரியமானதைச் செய்வதில், அவளுக்குத் தலைவணங்கிச் செல்வதில் அவன் எவ்வளவு உயர்ந்துவிடுகிறான்! எவ்வளவு அருகில் வந்துவிடுகிறான்! அத்தகைய ஒரு நெருக்கம், அத்தகைய ஒரு பாக்கியம் காலையில் அவனுக்கு வாய்த்ததே—அப்போது...?

அதில் அவள் எங்கே அவனைக் கோபித்துக்கொண்டாள்! தன்னையே அல்லவா நொந்துகொண்டாள்! 'சீச்சீ! எப்படிப்பார்த்தாலும் உடனே இறங்கி விடியற்காலை வண்டியிலாவது போகவேண்டியதுதான்' என்ற ஒரே நினைப்புடன் இறங்கிவிட்டான்.

கிருஷ்ணபக்ஷத்து இருளை மழை மேகங்கள் வேறு கவிந்துகொண்டு வந்தன. வானத்திலும் வையகத்திலும் கருமை படர்ந்து, மெல்லிய நாலிரையில் ஒளி வீசிய ஒன்றிரண்டு நக்ஷத்திரங்களைக்கூட மறைத்து அந்தகார ஆட்சி செலுத்தியது. அந்தக் கொடிய இருளிலே கர்ப்பத்தில் இருக்கும் சிசுப்போல கண்ணிருந்தும் பார்க்க முடியாதவனாய், அண்டத்தின் கருவாய், பயமற்று விகாரமற்று நின்றான் சுவாமி. திறந்த வெளியிலும் இருக்கும் கம்மென்று புழுங்கியது. ஸ்டேஷனுக்குப் பின்புறம், ஆலமரத்துக்கு மேலே, கிராமம் இருந்த திசையில் பளீரென்று ஒரு மின்னல் கண்ணையே கிழிப்பதுபோல் மின்னி நெளிந்து விரிந்து ஓடிற்று. ஒரு கணந்தான்! அப்பா! நினைவு வந்தது சுவாமிக்கு. பெட்டி, படுக்கையைத் தூக்கிக்கொண்டு அந்தோணிசாமியின் அந்தப்புரமாய் விளங்கிய வெயிட்டிங் ரூமை நோக்கி நடந்தான்.

அந்தோணிசாமிக்குப் பகல் டியூட்டி: அன்று இரவு அது காலியாகத்தான் கிடக்கும் என்பது சுவாமிக்குத் தெரியும் அது வரையில் நல்லதாயிற்று: ஆனால் ஒருவர் கண்ணிலும் படாமல் இருக்கவேண்டுமே! அவனுடைய நல்லகாலந்தானோ என்னவோ சீதாராமனுக்கும் பகல் டியூட்டி! உதவி ஸ்டேஷன் மாஸ்டர் ரகுநாதன்தான் இருப்பான். அவனுக்கும் சுவாமிக்கும் அவ்வளவு பரிசயமில்லை பார்த்தால் ஒரு கும்பிடு: அத்துடன் சரி; சீதாராமனைப்போல இல்லை. அவரைப் பார்த்தாலும் அவமானம்: மாட்டிக்கொண்டாலும் ஆபத்து: சுவாமி வென்று காதைத் துளைத்து மடித்து அவரைப்போல அவனையும் உலகவாழ்க்கையை வெறுக்கும்படி செய்துவிடுவார்......

சுவாமி ரெயில்வே லயனை மெதுவாகத் தாண்டி வெகு நிதானமாய் வெயிட்டிங் ரூமைத் திறந்து, அடிமேல் அடிவைத்து, பெட்டி, படுக்கையை ஓர் ஓரமாய் வைத்தான். அங்கும் இருள்: இறுக்கம்: சாளரத்தில் அடிக்கும் ஒரு துர்நாற்றமும் கலந்து புழுக்கத்தைச் சகிக்கமுடியாததாக்கியது. ஸ்டேஷன்மாஸ்டர் தன் அறையைப் பூட்டிக்கொண்டு சாப்பாட்டுக்குப் போயிருந்தார். சுவாமி விடுவிடென்று ரெயில்வே லயன் ஓரமாயுள்ள ஒற்றையடிப் பாதையை நிதானத்தில் கொண்டு நடக்க ஆரம்பித்தான். பாயிண்ட் அடிக்கும் கைவிளக்கு வெளிச்சம்கூட இல்லாமலே இறங்கினால் சரியான பாதைக்குப் போய்விடலாம். அதற்குள் 'விர்' என்ற சத்தத்துடன் பொடி மணலை வாரியடித்துக்கொண்டு காற்று வீசியது. சர்ரென்று காற்று சுற்று நேரத்துக்குள் சுழற்றி சுழற்றி அடித்தது. கண்களைப் பொத்திக்கொண்டே அவன் நடந்தான். பாதையில் இருந்த கட்டையில் கால் இடித்துக்கொண்டு 'அப்பாடா', என்று உட்கார வேண்டியதாயிற்று. அவன் சிறிதும் கலங்கவில்லை: கவலைப்படவுமில்லை. அடிப்பட்ட இடம் விண் விண்ணென்று தெறிக்க அவன் அடிவைத்து நடந்து சென்றான். குளிர்ந்த வாடையுடன் காற்று வீச ஆரம்பித்தது. மின்னல் கண்ணைப் பறித்துக்கொண்டு போயிற்று. வானம் உறுமியது: கர்ஜித்தது: இடியாக இடித்துக் கன்றிற்று. சாரல், மின்னல், தூறல்! ரெயில்வே லயனைவிட்டு இறங்கி பாதைக்கு வருவதற்குள் மழை பிடித்துக்கொண்டுவிட்டது. சுவாமி ஒண்டுவதற்கு இடமில்லாமல், ஸ்டேஷ



னுக்கே திரும்பிவிட மனமில்லாமல் ஓடலானான் விதியின் வசப்பட்ட அநாதைபோல ஓடினான். விதியின் கொடுமையைப்போல வானம் சீற்றம்கொண்டு அவனைத் துரத்தியது இடியும், மின்னலும், மழையும். காற்றும் கோர நர்த்தனம் புரிந்தன. அண்டமே பிளந்து அலைகடலில் சரிவதைப்போன்ற பேரிரைச்சலுடன் இயற்கை சீறிக்கொண்டிருந்தது. ஆயினும் அவன் ஒரே வேகத்துடன், ஒரே எண்ணத்துடன் ஓடி கிராமத்தின் தெருக்கோடியை மிதித்துவிட்டான்.

சாதாரணமாகத் தஞ்சாவூர் வண்டி வருவதற்குள்ளாகவே அடங்கித் துயில் புரியத் தொடங்கும் அந்தத் தெரு இன்று இருக்குமிடம் தெரியாமல் இருப்பதற்குக் கேட்பானேன்? வெகு நேரத்துக்கு முன்னமேயே அவர்கள் மழை வருமென்று எதிர்பார்த்து, முன் ஜாக்கிரதையுடன் மாடுகளையெல்லாம் கொட்டிலில் கட்டி, பந்தோபஸ்தாகக் கதவுகளைச் சாத்திக்கொண்டு, மழையையும் இடியையும் பொருட்படுத்தாத கர்மயோகிகளைப்போல உறங்கிக்கொண்டிருந்தனர் சுவாமி நடையைத்தளர்த்தி நிர்ப்பயமாய் வீட்டை நெருங்கினான், தொப்பமாய் ஆடைகள் நனைந்து சொட்டிக்கொண்டிருந்தன. அதற்குமேல்தான் அவனுக்கு நடையும் எழும்பவில்லை; யோசனையும் உதிக்கவில்லை.

அவன் எதற்காகத் திரும்பி வந்தான்?—

வந்தவனைக் கூப்பிட்டு ஆதரவாக ஒரு வார்த்தை கேட்க அந்த வீட்டில் யார் இருக்கிறார்கள்? மனதில் என்ன இருந்ததோ அவன் எதிரில் யாரும் இதுவரையில் முகத்தைச் சுளித்துக்கொண்டதில்லை என்பதை அவன் உணர்வான். ஆனால், இன்று—இப்போது இந்த நிலையில் அவனுக்கு என்ன மரியாதை கிடைக்கும்? அவன் செய்கைக்கு என்ன அர்த்தம் செய்து கொள்ளப்படும்? இதையெல்லாம் சிறிதும் யோசித்துப் பார்க்காமல் அவன் ஏன் திரும்பிவந்தான்?—

மழை முன்னிலும் வேகமாய்ப் பொழிந்துகொண்டிருந்தது மின்னல் முன்னிலும் அதிகமாய் மின்னிக்கொண்டிருந்தது வாசற்படியில், மழையில், ஆணியடித்தது போல அவன் சிலையாய் நின்றுகொண்டிருந்தான்.

எவ்வளவு நேரந்தான் நின்றுகொண்டிருந்தானோ! கறுக்கென்று, கைதாங்கியை விலக்கி கதவை யாரோ திறக்கும்போதுதான் அவன் நெஞ்சம் துணுக்குற்றது: இருதயமே படீரென்று வெடித்துவிடும்போலிருந்தது. ஆனால் அடுத்த கணமே—

''சுவாமியா அது! சுவாமி!'' என்று மெல்லிய, உறுதியான குரலில் அலறினாள் சுசீலா.

'இனி கவலையில்லை: அவன் காலடியிலேயே விழுந்து செத்தாலும் சாகலாம். அதனால் சிறிதும் அவமானமேயில்லை!'

''மன்னி—'' என்று அடித் தொண்டையில் கதறிக்கொண்டே தடாலென்று கீழே சாய்ந்து அவளது மெல்லிய பாதங்களை நடுங்கும் கரங்களால் பற்றிக்கொண்டான் அவன்.

மனிதனின் கட்டுப்பாடு, மனச்சாக்ஷியின் தர்மாதர்மம், மெய்யுபிவுக்குள்ள பாப-புண்ணியம் யாவும் அந்த உணர்ச்சிப் பெருங்கடலிலே, உள்ளத் துடிப்பின் சுழலிலே சிக்குண்டு, சிதறுண்டு சின்னபின்னமாயின.

சுசீலா அவனைக் கையைப் பிடித்துத் தூக்கிப் பக்கத்துத் திண்ணையிலே உட்காரச் செய்தாள்.

''மன்னி, மன்னி'' என்று அவன் இருதயம் குமுறிக்கொண்டிருந்தது. என்ன நடந்துவிட்டது, என்ன செய்துகொண்டிருக்கிறோம்—என்ற ஸ்மரணையில்லாமல் அவன் சிறு குழந்தையைப்போலத் தேம்பி அழலானான்.

கைப்பிடியை எடுக்கத் தோன்றாமல் சுசீலை தன்னை மறந்த உணர்ச்சி வெறியின் ஆழத்தில் மூழ்கி நின்றாள். மின்னல் சிரித்தது: இடி நகைத்தது: கபடமே இல்லா நெஞ்சமும் கருணையே நிறைந்த நெஞ்சமும் உறவை மறந்து, உலகத்தை மறந்து ஒன்றுக்கொன்று ஆதாரமாய் நின்றன.

கணநேரந்தான்!

நடுங்கும் குரலில், ''மன்னி! என்னை மன்னித்துவிடு'



மன்னி!" என்றான் சுவாமி.

"இதெல்லாம் என்ன? இதென்ன பேச்சு? இதென்ன காரியம்?" என்று உளறினாள் சுசீலா.

வெகு நேரமாய் வாசலை ஒட்டிய அவள் அறையின் ஜன்னல் வழியாக அவன் நிற்பதைப் பார்த்துக்கொண்டே தான் இருந்தாள் சுசீலா. அவளுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. ஜன்னலருகில் கட்டிலை இழுத்துப் போட்டுக்கொண்டு இயற்கையின் குமுறலுடன் தன் இதயக் குமுறலை ஐக்கியப்படுத்திக்கொள்ள முயன்றுகொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் சுவாமி ஊருக்குப் போனவன் திரும்பிவந்து நின்றது அவளைத் திடுக்கிட வைத்தது. ஒரு சமயம் தன் மனப்பிரமையின் கோளாறோ என்றுகூட அவள் எண்ணினாள். உண்மையை உணர எவ்வளவு நேரம் பிடிக்கும்! நிச்சயம், கொட்டு மழையில் வந்து நிற்பது சுவாமிதான் என்று தெரிந்ததும் அவள். கோபம் எல்லை கடந்துபோயிற்று. தன்னை முன்னிட்டு வருவரைத் தவிர அவனுக்கு வேறு என்ன முகாந்தரம் இருக்க முடியும்?

கதவுக் கொக்கியைத் திறக்கும் வரையில் அவள் வெளியில் வந்து அவனை என்ன செய்யப்போகிறாள் என்பது அவளுக்கே தெரியாது. ஆனால் நெடுஞ்சாண் கிடையாய் சுவாமி அவள் காலடியில் விழுந்த க்ஷணமே மின்சார அதிர்ச்சி அவளைத் தாக்கி விழ்த்திவிட்டது. சப்த நாடியும் ஒடுங்கி இருதயத்திலிருந்து கருணைமயமான ஓர் உணர்ச்சி பீறிட்டுக்கொண்டுவர ஆரம்பித்தது

"போய்விடு......சுவாமி......போய்விடு!"

"மன்னி, ஒரு வார்த்தை: எங்கே, என் கையிலடித்துச் சத்தியம் செய்து கொடு...நான் ஓடியே போய்விடுகிறேன்—என்ன நேர்ந்தாலும் என் ஒரே ஆத்மாவைத் திருப்தி செய்வதற்காக நீ உயிரைவிடத் துணியமாட்டாய் என்று சத்தியம் அடித்துக்கொடு—இதோ, —இப்பவே நான் திரும்பிவிடுகிறேன்!" என்று ஆவேசம் வந்தவன் மாதிரி அவளது மெல்லிய வெப்பம் உணர்த்தும் கையை எடுத்துத் தன் உள்ளங் கையில் வைத்துக்கொண்டான். சுசீலாவுக்குக் கர்ப்பமே கலங்கியது!

சற்று முன்பு அவள் தனக்கு எந்த முடிவு இறுதியான, நிரந்தரமான சாந்தியை அளிக்கும் என்று நிர்மானித்தாளோ அந்த முடிவைப்பற்றி அல்லவா அவன் சத்தியம் செய்து தரக்கேட்கிறான்!

ரௌத்திராகாரமான கோபம் மூண்டெழுந்தது அவள் உள்ளத்தில். "சீ! என் கையை எடு! அண்ணாவைப் போலவே நீயும் ஓர் அயோக்கியன்! உயிரோடு இருந்து நானும் என் பிள்ளையும் அவமானத்தால் சந்தி சிரிப்பதைப் பார்ப்பதில் உங்களுக்கு ஆனந்தம்.........எந்தப் பாபியின் ரத்தம் என் உடலில் உயிராகத் துடிக்கிறதோ அந்தச் சுமையைச்சுமக்கிறேன்என்ற எண்ணமேஎன்னைக் கொன்றுவிடுமே. அதற்கு யார் என்ன செய்ய முடியும்? ஓடி வந்தானாம்! சத்தியம் செய்யவேண்டுமாம்! யோசித்துப் பாரேன், உன்னாலேயே நான்..........."

சுவாமி குறுக்கிட்டு அவள் வாயைப் பொத்திவிட்டான். "மன்னி, இல்லாததைச் சொல்லாதே. என்னைப் போகவேண்டாம் என்று சொன்னவள் நீ. எல்லாருக்கும் எதிர்த்தாற்போல வேண்டுமென்றே ஆதரவு காட்டினவள் நீ. எனக்கு வரன் தேர்ந்தெடுத்தவள் நீ, அன்பு காட்டினவள் நீ.........எனக்கு நன்றியிருந்தால், நான் என்ன செய்யவேண்டும் என்பதைச் சொல்லிவிடு நீயே. என் ஸ்தானத்தில் நீ இருந்தால் என்ன செய்வாய், சொல்லிவிடு நீயே.................. என்னை பெங்களூருக்குப் போகும்படி வற்புறுத்திச் சொல்ல உனக்கு ஏன் நாவு துணியவில்லை? சொல்லேன்-நீயும் போகாமல் இருக்கிறாயே ஏன்? காலையில் நான் என்ன செய்துகொண்டு விடப்போகிறேனோ என்று பின்னாலேயே ஓட்டமாய் ஓடி வந்தாயே, ஏன்?"

"சொல்லு...இதெல்லாம் எனக்கு வேண்டியதுதான், சொல்லு! இந்தத் தண்டனையை நான் வரவேற்கிறேன். நிறுத்தாமல் என் தவறுகளைச் சொல்லிக்கொண்டே போ!" என்றாள் சுசீலா. கண்களால் வடிந்த நீர் மின்னலொளியின் வைரக் கோடுகள்போல ஜொலித்தன.

கடைசியாக அவள் கையை மெதுவாக எடுத்து, "இதோ பார்! சத்தியம் செய்து சொல்கிறேன். நான் விபரீதமாக எதுவும் செய்துகொள்வதில்லை.........திருப்தி தானே?" என்றாள் சுசீலா...

"நான் வருகிறேன், மன்னி!" என்று கையை உதறிக் கொண்டு கிளம்பினான் சுவாமி.

"அவசியம் போய்விடு! எப்பொழுதாவது நினைத்தால் உன் மன்னி கெட்டவள் என்றுமட்டும் நினைக்காதே... இதோ பார்...சுவாமி...உண்மையில் உன் மனசு இன்றைக்குத்தான் எனக்குப் புரிந்தது...உண்மையாக நீதான் என்கூடப் பிறந்தவன்!" என்றாள் சுசீலா.

ஆனால் சுவாமி அதற்குள் மழையில் மீண்டும் இறங்கி விட்டான். சிவன் கோயிலைத் தாண்டி தெருத் திரும்பும் போது மழை அவ்வளவாக இல்லை சிறிது நேரத்தில் கப்பென்று நின்றுவிட்டது. பாதி தூரம் போகையிலேயே புயல் எல்லாம் அடங்கி வானம் வெளிவாங்கிவிட்டது. ஸ்டேஷனை அடைந்தபோது விளக்கு வெளிச்சத்தில் சீதாவின் மன்னி பர்வதம் ஸ்டேஷனிலிருந்து அவள் வீட்டுக்குச் செல்வதைப் பார்த்தான் அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது ஸ்டேஷனில் உதவி ஸ்டேஷன்மாஸ்டர் ராதாகிருஷ்ணன் மட்டும் தன் அறையில் உட்கார்ந்து, விளக்கையே பார்த்துக்கொண்டு, "முருகா! என்னப்பா!" என்று பலமாகக் கொட்டாவி விட்டுக்கொண்டிருந்தார் வெயிட்டிங் ரூமைக் திறந்து தைரியத்துடனேயே நுழைந்தான் சுவாமி. முதலில் இருந்த அவ்வளவு திகில் இல்லை அவனுக்கு! அந்த அறையினுள்ளும் முன்னிருந்த அந்தத் துர்நாற்றம்



அடியோடு இல்லை. அதற்குப் பதில் ஜாதி முல்லையின் வாசனை கம்மென்று பரவியிருந்தது படுக்கையை எடுக்கப் போகும்போது ஜாதி முல்லைச் சரம் ஒன்று அவன் காலில் இடறியது அவனை யாரும் பார்க்கவில்லை ஆனால் அவனோ எல்லாவற்றையும் தன் அகக்கண்ணால் பார்த்தபடி அந்த இரவைத் தூக்கமின்றிக் கழித்தான் இரண்டு விதப் பெண்கள் அவன் கண்முன் தோன்றினார்கள். அவர்களில் யார் பரிசுத்தமும் தூய்மையுமே உருவெடுத்தவளோ அவள் துயரமே வடிவாக துன்பத்தைச் சகித்துக் கொண்டிருந்தாள்! மற்றவள் உல்லாசமாகத்தான் காணப்பட்டாள்: அவள் முகத்தில் துன்பத்தின் சாயை கூடத் தென்படவில்லை.

காலையில் தலையை மறைத்துக்கொண்டு தஞ்சாவூருக்கு அவன்தான் முதலில் டிக்கட் வாங்கினான்!

## 42

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. சுவாமி ஊருக்குச் சென்று இரண்டு வாரம் கழிந்து ஒருநாள் காலையில் சுப்பண்ணா ஓடி வந்து, "சுசீ! சம்பந்தி பலராமன் வருகிறார்" என்றார். சுசீலா கையிலிருந்த தட்டைக் கீழே வைத்துவிட்டு, "அவர் மட்டுந்தானா, அப்பா!" என்று கேட்டாள்.

"நான் மட்டுந்தான்" என்று கூறிக்கொண்டே சிரித்த முகத்துடன் பலராமன் உள்ளே நுழைந்தார். அவர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டதும் சுசீலா தரையை நடந்துவந்து அவருக்கு நமஸ்காரம் செய்தாள்.

"தீர்க்காயுஸாக இரு அம்மா!" என்று மனமாற ஆசீர்வதித்து வாழ்த்தினார் அவர்.

சுப்பண்ணா தம் சித்தியைக் கூப்பிட்டு அவருடைய ஆகாரத்துக்கு ஏற்பாடு செய்தார். சுப்பண்ணாவுக்கு வின் உபசாரமெல்லாம் செய்யத் தெரியாது என்பதை பலராமன் அறிவார். அவர் முகத்திலிருந்தும் செய்கிற காரியத்திலிருந்துந்தான் அவர் அன்பை ஓரளவு தெரிந்து கொள்ள முடியும்.

"அண்ணா! உடம்பு ரொம்ப இளைப்பாக இருக்கிறதே' என்று ஆரம்பித்துக் கலகலப்பாகப் பேசவாரம்பித்தார் பலராமன். சுசீலா அடக்கமாகத் தூண் மறைவில் நின்றுகொண்டிருந்தாள். சுவாமி தந்தி கிடைத்த அன்று தான் ஊருக்குப்போனான் என்பதைக் கேட்டதும், "ஆமாம்: தந்தி கிடைத்ததும் நீ வருவதற்கென்ன?" என்று சுசீலாவைக் கேட்டார் அவர். பதில் வராததைக் கண்டு, "எனக்கு எல்லாம் தெரியும்! ஆனால் இப்படியே இருந்து விட முடியுமா? வந்திருந்தால் அவள் மனசுக்கு எவ்வளவு ஆறுதலாய் இருந்திருக்கும்!" என்றார்.

இதற்கும் சுசீலா மௌனமாய் இருந்தாள் அவர் தமக்குத் தாமே பேசிக்கொள்வதைப்போல, "அது என்னமோ நியாயந்தான்! சாதாரணமாய் இருந்தால் சரி; இந்த உடம்போடு அவ்வளவு தூரம் தனியாக எப்படிப் போகமுடியும்? எப்படி வரமுடியும்? என்னமோ தெய்வ சங்கல்பத்தினால் இந்தக் கண்டத்திலிருந்து அவள் பிழைத்தான் வயிற்றில் இருக்கிறதினுடைய அதிர்ஷ்டந்தான்!" என்றார்.

'இவருக்கும் தெரியுமா?' என்றுதான் தோன்றியது சுசீலாவுக்கு. உடனேயே சென்றுபோன நினைவுகளும், மாமனார், மாமியார் இருக்கும்போது கணவனுடன் தான் நடத்திய வாழ்க்கையும் அவள் ஞாபகத்துக்கு வந்தன. கண்கடையில் துளித்த நீரை ஒருவருக்கும் தெரியாமல் துடைத்துக்கொண்டு, "அம்மாவைப் பார்க்கவேண்டும் போல இருக்கிறது. பெங்களூரிலிருந்து நேராக நான் அங்கே வராதது என் குற்றம். அந்தக் குற்றத்துக்குப் பயந்துகொண்டு குற்றத்துக்கு மேல் குற்றமாக ஒரு கடிதம்கூட எழுத எனக்குத் தைரியமில்லை" என்றாள்.

பலராமனுக்கு இந்த விஷயத்தில் அவளிடம் முதலில் மனத்தாங்கல்தான் ஆனால் விசுவத்தையும் பானுமதியையும் நேரில் பார்த்த பிறகு அந்தத் தாங்கல் அவ்வளவாக உறைக்கவில்லை. அவருடைய மனநிலையில் அநுதாபம் வந்தது. அதற்கு முக்கிய காரணம் சுசீலா கர்ப்பமாய் இருக்கிறாள் என்ற செய்திதான். இவ்வளவு முக்கியமான விஷயத்தை வெட்கப்பட்டுக்கொண்டு தெரிவிக்காமல் இருந்திருந்தாலும் செய்தி என்னவோ மகிழ்ச்சிகரமானது எல்லாவற்றையும் கடந்த இன்பத்தைத் தரக் கூடியது. அதனால் விசுவத்தின் தாயே சுசீலாவின் குற்றத்தைப் பாராட்டாதபோது அவருக்கும் என்ன வந்தது?

"உன்னை அவளிடம் அழைத்துக்கொண்டு போகத் தானே நான் புறப்பட்டு வந்திருக்கிறேன்" என்றார்.

"ஆயிரமிருந்தாலும் அது தாயில்லாப் பொண்ணு! உங்க பிள்ளையாண்டான் செய்தது ஒருத்தருக்காவது சரியாகப்படல்லே. நம்ப குடும்பத்துக்கும்..." என்று டிபன் கொண்டு வந்து வைத்த பொன்னுப்பாட்டி ஏதோ சொல்லவாரம்பித்தாள்

"சரி, சரி" என்று ஒரு வார்த்தையில் அவளை அடக்கி விட்டாள் சுசீலா. பலராமனுக்குத் தம் பிள்ளையின் நடத்தையால் அந்த இடத்தில் தலை குனியத்தான் வேண்டியிருந்தது

"என்னமோ...எல்லாம் நானே போய் எல்லாவற்றையும் சரிபண்ணிவிட்டு வந்திருக்கிறேன்......இனிமேல் என்னமோ அப்படி. ஒன்றும்..."என்று பலராமன் எல்லாரையும் திருப்திப்படுத்த முயன்றார்.

முன்பு பார்த்ததைவிடத் தம் மாட்டுப் பெண்ணுக்கு ஒரு புதிய சோபையும் அத்துடன் ஒருவித அமைதி நிறைந்த அடக்கமும் திகழ்வதைக் கண்டு பலராமன் பூரித்துப்போனார். என்ன பேசுவது என்று புரியாமல், "அதோ அங்கே முன்னே வந்திருந்தபோது ஒரு மூங்கில் கொத்து இருந்ததே, வெட்டியாயிற்றோ?" என்றார். அந்த இடத்தில் இப்போது வாழைத்தோட்டம் இருந்தது. வைக்கோல் போர் இருந்த இடத்தில் இப்பொழுது மிளகாய்த் தோட்டம் இருந்தது கொல்லையில் இருந்த கிணற்றுக்கு சிமெண்ட் போட்டு பக்கத்தில் தொட்டியும் கல்லும் வைத்துப் பதித்திருந்தது. இவற்றையெல்லாம் மிகுந்த ஞாபக சக்தியுடன் விசாரித்துத் தெரிந்துகொண்டார் அவர்.

மாமனார் வந்திருக்கிறதனாலோ என்னவோ சுசீலா பாட்டிக்கு ஒத்தாசையாகச் சமையல் செய்யப் போனாள். அவள் உள்ளமே காற்றில் மிதந்துகொண்டிருந்தது. கணவனைப் பற்றிய ஞாபகம் கருத்தில் தோன்றிக்கொண்டேயிருந்தது ஒருநாள்கூட, எவ்வளவு வேலையிருந்தாலும் அவளது மேற்பார்வை இல்லாமல் சமையல் நடைபெறாது. அவனுக்குத் தன் கையால் சாப்பாடு எடுத்துப் போட்டு அனுப்பாவிட்டால் அவளுக்குச் சாப்பாடே இறங்காது. ருசிக்காது. அவனுக்கு உப்பு கொஞ்சம் உறைத்திருக்கவேண்டும் எதிலும். அரைக் கல் தாக்கலாகவே இருந்தாலும் பாதகமில்லை "ஒருநாளைக்கு இந்த உப்புக் கொஞ்சம் குறைந்து போய்விட்டால்தான் என்ன?" என்று கேட்டுக்கொண்டே அவள் அவன் தட்டிலிருந்து ஒரு வாய் எடுத்துப் போட்டுக்கொண்டு ருசி பார்ப்பாள். "அப்பா நாக்கு, எவ்வளவு நீளம்!" என்று சிரித்துக்கொண்டே உப்புப் பொடியைக் கலந்துவைப்பாள். அவன் வீட்டில் சுவாமியைத் தவிர எல்லோருக்குமே அப்படித்தான்—அவன் வீட்டில் ஒருத்தியாகிவிட்ட இவளும் அதில் சேர்ந்துவிட்டாள்.........

சுப்பண்ணா ருசியைக் கவனிக்காமல் எப்படியிருந்தாலும் சாப்பிடக்கூடியவர். பலராமன் ஆர அமர உட்கார்ந்து ருசித்துச் சாப்பிடக்கூடியவர். இந்த மாதிரி சாப்பாட்டைச் சாப்பிட்டு வெகு நாட்களாகிவிட்டன. விசுவத்தின் தாயார் அவ்வளவு பொறுமையாக இருந்து செய்யமுடியாதவள். சாதத்தை இலையில் வைப்பதற்குள் தள்ளாமை வந்துவிடும் அவளுக்கு. பாதி சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே சுருண்டு படுத்துக்கொண்டு விடுவாள். இந்த ஞாபகம் வந்ததும், "அம்மாவுக்கு இப்போது தள்ளாமை எப்படியிருக்கிறதோ—நல்ல வேளை. சுவாமியைப் பார்த்ததும் அந்தத் தள்ளாமை இருந்தால்கூடத் தோன்றாது" என்றாள் சுசீலா.

"சுவாமிக்கு உங்கள் மாட்டுப்பெண் ஒரு பெண்ணைப் பார்த்து வைத்திருக்கிறாளே?" என்று கூறினாள் பொன்னுப்பாட்டி.

"அப்படியா, தெரியாதே!"

"முந்தாநாள்தான் அந்தப்பெண் சென்னைக்குப் போனாள். இவ்வளவு நாளும் இங்கேதான் அவள் அண்ணா வீட்டில் தங்கியிருந்தாள். மயிலாப்பூரில் நம் வீட்டுக்கு எதிர்வீட்டில்தான் அவர்கள் இருக்கிறார்கள். பொருத்தமான ஜோடி!" என்று கூறினார் சுப்பண்ணா.

"சுவாமி பார்த்தாரோ அந்தப் பெண்ணை?"

"கிட்டத்தட்ட ஒரு மாதம்போல அவள் இருக்கிற வரையில் அவளும் இருந்திருக்கிறாளே. இங்கேதானே எப்போதும் அவள் இருப்பாள்?" என்றாள் சுசீலா.

"அப்படியா? என்னமோ, பிராப்தம் எப்படியோ!" என்று சொல்லிக்கொண்டு எழுந்தார் பலராமன்.

வளைகாப்பு, சீமந்தம் எல்லாம் தஞ்சாவூரிலேயே வைத்துக்கொள்ளலாம் என்றும் வேண்டுமானால் அதற்குப் பிறகு கொண்டுவந்து விட்டுவிடுவதாகவும் பலராமன் கூறினார். சுசீலா அதற்கு ஆக்ஷேபிக்கவில்லை எப்படியாவது இந்தக் கிராமத்தை விட்டுப் போனால் தேவலை போலிருந்தது தன்னுடைய நிலைமை தன் கணவனுக்குத் தெரியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினாள் அவள் வெறுப்புக் கலந்த அந்த ஆவலை அவளால் அடக்க முடியவில்லை அவன் அவளை அலக்ஷியமாய்க் கருதினாலும் அந்த உறவை அவளால் ஒதுக்கிவிட முடியாது. அவமானத்தின் சின்னம்போல அவள் அந்தச் சுமையை வகித்தே ஆகவேண்டும். பத்து மாதத்தில் நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஆறு மாதம்! பெண்களுக்குச் சமூகத்தில் போராட்டம் செய்யாமலே எல்லா உரிமைகளும் கிடைத்துவிடலாம் ஆனால் இப்படிப்பட்ட சமயங்களில் அவள் பெறுக்கும் இந்தத் தாய்மையின் உரிமையை அவளால் யுகயுகாந்தரமாகப் போராடினாலும் மாற்றிக் கொடுத்துவிட முடியுமா?

ஊருக்குப் போகும்போது அவள் எல்லாவற்றையும் மறந்து அந்த நாட்பட்ட தெருவில் உள்ள ஒவ்வொருவரிடமும் சென்று விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டாள்.

(தொடரும்)






## 32

## மரணம் வரினும் சுயதர்மமே சிரேஷ்டம்

★

'பலனில் இச்சை கொள்ளாமல் பகவதர்ப்பணம் செய்து கர்மங்களை விடாமல் செய்யவேண்டும்' என்பதே என் சித்தாந்தம். இதை எந்த விதத்திலாயினும் தழுவினவர்கள் அனைவரும் உய்யலாம். என்று கண்ணன் முன்னே சொன்னானல்லவா?

அக் கருமங்கள், ஸ்வதர்மம் என்றும் பரதர்மம் என்றும் ஒவ்வொருவருக்கும் இரண்டு விதமாயிருக்கும். பெற்றோரைப் பரிபாலிப்பது எல்லோருக்கும் ஸ்வதர்மம். கௌசிகன் அதைக் கைவிட்டுத் தனக்குப் பரதர்மமாகிய தவத்தை மேற்கொண்டான். தவம் செய்யும்போது தான் தன் தலையில் எச்சமிட்ட கொக்கை எரிக்கும் பலனை எட்டியது. தனக்குச் சுவதர்மமாகிய பதியின் பணிவிடையில் ஈடுபட்டிருந்த பதிவிரதையிடம் அவன் தவம் செல்லவில்லை. பெற்றோர்பரிபாலனத்தையும் வருணத்தை யொட்டிச் செய்ய வேண்டிவந்த சுவதர்மமாகிய காப்புத் தொழிலையும் விடாமல் நடத்தி வந்த தர்மவியாதனிடமே ஞானம் பெற்றான் என்பது லோகப் பிரசித்தமான வரலாறு.

ஒருவனுக்குப் பிறப்பினால், தனது முன்னோர்கள் பரம்பரையாகச் செய்து வந்த சில கர்மங்களையும் அவசியம் செய்ய வேண்டி வருகிறது. அக் கருமங்களும் சுவதர்மத்திலே சேரும். [illegible] அவசியம் நேர்ந்த போது [illegible] தர்மத்தைப்போல [illegible] பிறரைக் களைப் பரிபாலிப்பதும் பிறப்பினால் வருணத்தை யொட்டிவந்த சுயதர்மமாகும். அவ்வாறே பிறப்பினால் வருணம் அல்லது பரம்பரையை யொட்டி வரும் சுயதர்மங்கள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாயிருக்கும். வேறுசில காரணம் இல்லாமல் இல்லை அதனால் வரும் [illegible] கண்ணன் தெரிவிக்கிறார்.

தன் இயல்புக் கேற்பத்
தான் இயலும் பேரறிவு
மன்னியவன் ஞானவானும்;
மற்றெவையும்—அந்நிலையே
தன்னெய்தி ஆதலால்
தான் விலக்க நல்லுரைப்பது
என்னெய்தும் இசைந்து.

(இ-ள்) பேர் அறிவு மன்னியவன் ஞானவானும்—மிக்க ஞானம் படைத்தவனாயினும் தன் இயல்புக்கு ஈடாக—தனது (பழைய) பிரகிருதி வாசனைக்குத் தக்கபடி. தான் இயலும்—தான் (கருமத்தில்) பிரவர்த்திக்கிறான். மற்று எவையும்—(தேவர் மனிதர் முதலிய) பிற பூத சரீரங்கள் எல்லாம் அந்நிலையே—அவ்வாறே தன் [illegible] ஆதலால்—தனது கருமங்களில் (பிரவேசம்) ஆக வருவதால் தான் இசைந்து விலக்க—ஒருவன் (வலிமையால் அதனை) விரும்பி விலக்கிக்கொள்ள, நால் உரைப்பது என் செய்வதாகும்?—சாஸ்திரம் சொல்லும் நிர்ப்பந்தம் என்ன (உதவி) செய்ய முடியும்? (முடியாது என்றபடி.)

ஸத்ருஶம் சேஷ்டதே ஸ்வஸ்யா:
ப்ரக்ருதேர் ஜ்ஞானவானபி
ப்ரக்ருதிம் யாந்தி பூதானி
நிக்ரஹ: கிம் கரிஷ்யதி

(இ-ள்) ஜ்ஞானவான் அபி—ஞானவான் ஆனபோதிலும்கூட, ஸ்வஸ்யா:—தனது ப்ரக்ருதே:—(பழைய) பிரகிருதி வாஸனைக்கு, ஸத்ருஶம்—தக்கபடி, சேஷ்டதே—(கருமங்களில்) பிரவர்த்திக்கிறான். பூதானி—(அவ்வாறே) தேவர் அசுரர், மனிதர் முதலிய எல்லாப் பிராணிகளும், யாந்தி... (பழைய பிரகிருதி வாஸனையையே) அனுஸரித்து நடக்கிறார்கள், நிக்ரஹ:—(சாஸ்திரத்தால் பண்ணப்படும்) நிர்ப்பந்தம் கிம் கரிஷ்யதி?—என்ன செய்ய முடியும்?

மனம் இந்திரியங்கள் இவற்றிற்கிடமான தேகம் பிரகிருதியையே மூலாதாரமாகக் கொண்டுள்ளது. தேகத்தை பிரக்ருதி என்ற சொல்லாலும் குறிப்பிடலாம். குணத்திற்கும் குண வேறுபாட்டிற்கும் காரணமாகவிருப்பதும் இச்சரீரமே.

மனித சரீரங்கள் எல்லாம் கால் கை, கண் வாய், மூக்கு, தலை முதலிய அவயவங்களால் ஒத்தேயிருந்த போதிலும் மற்றொன்று காணப்பட்டாலும் அவைகளுக்குள் வேற்றுமையும் இருக்கிறது. நிறத்திலும் பரிமாணத்

திலும் இருப்பதுபோலவே வளர்ச்சியிலும் வேற்றுமை இருக்கிறது மாம்பழங்கள் எல்லாம் உருவத்தில் ஒன்ருகவிருந்தாலும் ஒரு ஜாதிப் பழம் புளிப்பாகவும் மற்ருெரு ஜாதிப் பழம் தித்திப்பாகவும் ருசியில் வேற்றுமைப் படுகிறது அதுபோலவே சரீரத்திற்குத் தகுந்தபடி மனிதனின் குணம், பிரியம். அறிவு வளர்ச்சி கருமம் (தொழில்) முதலியன வேறுபடுகின்றன.

பிறவியலேயே சரீரக் காரணமாக மனித வர்க்கத்திலும் மிருக வர்க்கத்திலும் அமைந்திருக்கும் வேறுபாட்டை உலகில் எல்லா அறிவாளிகளும் ஒப்புக்கொள்ளவே செய்கிருர்கள் அதற்குக் காரணம் சொல்வதில் பாரம்பர்ய அளவோடு மேல் நாட்டினர் நின்றுவிடுகின்றனர் தகப்பன் பாட்டன் செய்துவந்த தொழிலை ஒருவன் வருந்தமின்றிச் சுலபமாகத் தெரிந்துகொள்கிருன் அந்தப் பரம்பரையில் தோன்ருத மற்றவனைவிடத் திறமையாகவும் செம்மையாகவும் தொழிலைச் செய்கிருன். மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டுமா? குலத்தளவே ஆகும் குணம்' என்னும் முதுமொழி இந்த உண்மையையே உணர்த்துகிறது. குலத்திற்குத் தகுந்த குணத்தைப் பெற்றிருக்கும் தேகம் குணத்திற்குத் தகுந்த கருமங்களில் தேஹியை (தேகம் பெற்றிருப்பவனை) பிரவேசிக்கச் செய்யும்.

ஹிந்து பௌத்த ஜைன மதங்களில், தேஹியை (ஜீவாத்மாவை) முந்தின பிறப்புக்களிலே செய்த கருமங்களும் தொடருகின்றன. பூர்வகர்ம வாஸனைக்கேற்ற தேகமும், அத்தேகம் அமைவதற்கு ஏற்ற பாரம்பரியமும் ஒருவனுக்கு அமைகின்றன. அத்தேகத்திற்கேற்பவே கருமங்களில் ஒருவன் பிரவேசிக்கிருன்' என்று சொல்லப்படுகின்றன. இது நம்ப முடியாதபடி மேல் நாட்டினருக்கு விநோதமாயிருக்கும் என்று கொள்வதற்கில்லை தத்துவ ஆராய்ச்சியில் இறங்கிய அநேகம் மேல் நாட்டுக் கிறிஸ்தவர்கள் உயிருக்கு பல பிறப்புகளை உண்டு என்று நம்பாதபோனுல் இப்பொழுது இருந்துவரும் பேதங்களுக்குச் சரியான காரணம் சொல்லவேமுடியாது என்கின்றனர்.காலஞ்சென்ற டாக்டர் அனிபெஸண்ட் அவர்கள் 'தொடர்ச்சியான பல பிறப்புக்கள் உயிர்களுக்குண்டு' என்ற உண்மையை உலகிற்கே பிரசாரம் செய்தார். ஆகையால் முற்பிறப்பு, பிற்பிறப்பு, பூர்வகர்மவாஸனை என்று கதையில் வருபவைகளை. கேவலம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட கீழ்நாட்டுக் கொள்கை என்று யாருமே புறக்கணிப்பதற்கில்லை.

பிறப்பிலேயே பாரம்பரியத்தால் ஏற்படும் பேதத்தையொட்டி ஒவ்வொருவருக்கும் ஸ்வதர்மம் என்றும் பரதர்மம் (அந்நியதர்மம்) என்றும் வெவ்வேருக அமைந்திருக்கின்றன க்ஷத்திரிய பரம்பரையில் தோன்றியவனுக்குப் போர் செய்வதும் நாடு காத்தலும் பிறப்பினுல் வந்த சுய கர்மமும் விசேஷ தர்மமுமாகும் பாரம்பரியமும் பூர்வ கர்மசேஷமும் க்ஷத்திரியனுக்கு ஏற்பட்ட சுய தர்மத்தில் பிரவேசிக்கவே துணையாகவிருக்கும். அவன் தேகமும் பிரஜா பரிபாலனம், போர் முதலிய கர்மாக்களிலே செல்லவே அநுகூலமாயிருக்கும்.

அவ்வாறிருக்கும்பொழுது க்ஷத்திரியன் ஒருவன் தனக்குரியதல்லாத ஸந்யாஸ தர்மத்தை மேற்கொள்ளுகிருன் ஞானமார்க்கத்தில் செல்வதற்காக இந்திரியங்களையும் தன் மனதையும் சாஸ்திரத்தில் சொல்லிய முறைகளைப்பின்பற்றி, அடக்கி ஒரு நிலைப்படுத்தப் பார்க்கிருன். என்ருலும் சரீரம் பூர்வ கரும வாஸனைக்கு ஏற்ற கர்மாவில்தான் இவனை இழுக்கும் ஒருவன் தன்னைப் பூர்வ கருமவாஸனைக்கேற்ற கர்மாவிலிருந்து விலக்கிக்கொள்ள சாஸ்திர நிர்பந்தம் துணைசெய்யமாட்டாது ஆகையால் ஒவ்வொருவனும் ஸ்வதர்மத்தைச் செய்வதே இயற்கையும் சுலபமுமான மார்க்கம் என்று கண்ணன் இச் சுலோகத்தின் மூலம் சொன்ருர்.

மூலத்திலவந்த 'நிக்ரஹ:' என்னும் பதத்திற்குச் சங்கரர் 'சாஸ்திர நிஷேதத்தால்' (விலக்கால்) என்று உரை செய்துள்ளார். பாடலில் 'நால் உரைப்பது' என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது

இந்திரியங்கள் விஷயத்தோடு சேரும்போது உண்டாகும் காமம் கோபமாகிய சத்துருக்களுக்கு வசமாகாமல் அறிவாளி தன்னைக் காத்துக் கொள்ளவேண்டும். உரிய கர்மங்களைச் செய்யாமல் விடுவது இதற்கு எந்த விதத்திலும் துணை செய்யாது பங்கத்தையே விளைவிக்கும். மோகம் காரணமாக ஸ்வதர்மத்தைவிடப் பரதர்மமே சிரேஷ்டமாகச் சிலருக்குத் தோன்றலாம். அவ்வாறு நினைத்துப் பரதர்மத்தைப் பற்றக்கூடாது என்பதை அடுத்துவரும் சுலோகத்தால் தெரிவிக்கிருர்.

குறைந்திடினும் தன் கருமம்
குற்றமாம் பேலாம்
நிறைந்தியலும் மற்றையதில்
நேரே—மறைந்து இறந்து
தன் கருமத்தைச் செயினும்
தான் நன்று; வேறுன
வன் கருத்து அச்சம் வரும்.

(இ-ள்) குற்றமாம் தன் கருமம் குறைந்திடினும்-குணமில்லாத தனது தர்மம் (அங்கங்கள்) குறைந்து இருந்தாலும். நேரே நிறைந்து இயலும் மற்றையதில் மேலாம்— செவ்வையாகச் செய்யப்படும் (அங்க) நிறைவுடைய பிறரது தர்மத்தைவிடச் சிரேஷ்டமாகும். தான் மறைந்து இறந்து-ஒருவன் கெட்டு இறந்து தன் கருமத்தைச் செய்யினும்—தன் தர்மத்தைச் செய்தாலும். நன்று—சிறந்தது. வேறுனவன் கருமத்து—பிறரின் தர்மத்தைச் செய்வதில், அச்சம் வரும்—(நரக) பயம் உண்டாகும்

ச்ரேயாந் ஸ்வதர்மோ விகுண:
பரதர்மாத் ஸ்வனுஷ்டிதாத்
ஸ்வதர்மே நிதனம் ச்ரேய:
பரதர்மோ பயாவஹ:

(இ-ள்) ஸ்வதர்ம:—தன் கருமமான சுயதர்மம் விகுண: அபி—அங்கம் குறைந்திருந்தாலும் ஸ்வனுஷ்டிதாத் பரதர்மாத்—நன்ருக அனுஷ்டிக்கப்படும் பிறரின் தருமத்தைக் காட்டிலும், ச்ரேயாந்-சிரேஷ்டமானது. ஸ்வதர்மே நிதனம்—சுயதர்மத்தில் மரணம் வரினும் ச்ரேய:—சிறந்தது. பரதர்ம:—பிறரின் தருமமோ, பயாவஹ:—பயத்தை உண்டாக்கக் கூடியது.

குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதிப்பதும் சிறைவாசம் கொடுப்பதும் நீதிபதிக்குக் கடமையும் தர்மமுமாகும். அக்கடமையைச் செலுத்துவது மன வேதனையைத் தந்து குறைவான தொழில்போல் தோன்றினுலும் நீதிபதி அதைச் செய்யாமல் பிறிதொன்றைப் பற்றக் கூடாது. தனது கடமையைச் செய்வதே மேல், பிறிதொன்றைச் செய்வது ஆபத்தையே விளைவிக்கும்

வேம்பு கசப்பாயிருந்தாலும் அதில் தோன்றிய புழு பிறிதொன்றை உண்ணுமல் அதையே உண்டு ஜீவிக்கும் அவ்வாறே ஸ்வதர்மம் குறைவாகத் தோன்றினுலும் அதைச் செய்வதே மேலாகும். மோகம் காரணமாகப் பரதர்மம் மேலானதாகத் தோன்றினுலும் அதைப் பற்றக் கூடாது பற்றினுல் ஆபத்தையே தரும் ஸ்வதர்மத்தைச் செய்வதில் மரணம் வருவதாயிருந்தாலும் அதை விடாமல் செய்வதே சிரேஷ்டம். முடிவில் செய்தவனுக்கும் செய்பவனின் ஸமூகத்துக்கும் அதுவே நன்மை தரவல்லது






## 5

'எல்லாம் கேள்விப்பட்டேன். எல்லாவற்றையும் கமலா இப்பொழுது தான் ஒன்று விடாமல் சொல்லி விட்டுப் போனுள். என்னமோ ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதமான கஷ்டத்தை வைத்துவிட்டு ஈச்வரன் வேடிக்கைப் பார்க்கிருன்', என்ருள் அங்கு வந்த சரோஜாவைப் பார்த்து சேஷிப்பாட்டி.

'நிஜமாகவே சொல்கிறேன் பாட்டி எங்கள் ரகு (குழந்தை) போனதற்குக்கூட நான் அவ்வளவு அழவில்லை. அப்படி அழுதேன் போங்களேன். அதென்ன, மனுஷ்ய ஜன்மங்களா அதுகள்?' என்ருள் சரோஜா.

'இல்லாவிட்டால் எங்கள் ஜெயாவைப் பண்ணிக் கொள்வதற்கு ஒற்றைக்காலில் நின்ருர்கள் என்னமோ நிறைய சொத்து இருக்கிறது பையன் நல்லவனுக இருக்கிருன்.' கொடுத்துவிடலாம் என்ற யோசனைதான் எனக்கு. ஆனுல் அவர் (கணவர்) கூடவே கூடாது என்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டார்.

ஜெயா பாவம், கள்ளம் கபடம் ஒன்றுமே தெரியாது. ரொம்ப ஸாது. அதைக்கொண்டு அந்த லங்கா பட்டணத்திலே தள்ளிவிட்டு இன்னைக்கே அது கண்ணைப் பிசைந்து கொண்டு வந்து நின்றதானுல் யார் அதற்கெல்லாம் சமாதானம் சொல்லிக்கொண்டிருக்கிறது? அதெல்லாம் முடியவே முடியாது என்று ஒரே முடிவாய்ச் சொல்லிவிட்டார் அதுகளை மூன்று தலை முறைகளாய்த் தெரியும் எங்களுக்கு. அதுகள் கூட்டமே. துஷ்டக் கூட்டம்' என்ருள் பாட்டி.

'எங்கள் அம்மாவுக்குக்கூட இதுகள் குணத்தை உத்தேசித்து இங்கே என்னைக் கொடுப்பதில் இஷ்டமே இல்லைதான்' எவ்வளவு துஷ்டர்களாக இருந்தால் என்ன? அதெல்லாம் நாம் நடந்துகொள்ளும் மாதிரியில் இருக்கிறது அத்துடன் பையன் நல்லவனுக இருக்கிருன். உத்யோக மானுல் ஊனைக்கே தனியாகப் போய் விட்டாலும் போய்விடுவான் அப்புறம் எப்பொழுதோ வருஷத்தில் ஒருதரமோ, இரண்டுதரமோ பக்கத்துக்கு வந்தாலும் போயிற்று. இல்லாவிட்டால் அதுவும் இல்லை. அதெல்லாம் சரோஜா கெட்டிக்காரி. மனுஷ்யாளுக்குத் தகுந்த மாதிரி நடந்துகொள்வாள் அவள், என்று அப்பா சொல்லி, எப்படியோ பாழுங் கிணற்றில் கொண்டு தள்ளுகிற மாதிரி தள்ளிவிட்டார்கள் என்னை இங்கே. என்ருள் சரோஜா.



'...பிட்ருப் போட்டு அப்படியோ...'

'உங்கள் அப்பா சொன்னதென்னவோ வாஸ்தவந்தான். எல்லாம் நாம் நடந்துகொள்ளும் மாதிரியில் தான் இருக்கிறது ஆனுல் இதுகள் ஒரு வழிக்கும் வராத துஷ்டக் கூட்டமாயிற்றே. 'பாம்பென்றும் மிதிப்பதற்கில்லை பழுதையென்றும் தள்ளுவதற்கில்லை' என்று சொல்லுவார்களே அந்த ரகத்தைச் சேர்ந்ததல்லவோ இதுகள்?' என்ருள் பாட்டி.

'ஆனுல் சரோஜாவின் புருஷர் நல்லவர். அந்தமட்டிலாவது மனதுக்குக் கொஞ்சம் திருப்தி' என்ருள் லீலா.

'என்னடி திருப்தி? இந்தமாதிரி அசட்டு நல்லதனத்தைவிடப் பொல்லாதவராகவே இருந்துவிடலாம் போலிருக்கிறது அவர்கள் வார்த்தையையும் மீற முடியாமல், நம்மையும் திருப்திசெய்ய வேண்டுமென்ற எண்ணமும் கொண்டு இரண்டுபேரிடமும் 'பொல்லாப்பு' க்கேட்டுக் கொள்வதைவிட ஏதாவது திடமாயாக ஒரு பக்கத்துக்கு ஆதரவாக இருந்துவிட்டாலே போதும் போலிருக்கிறது. அம்மா சொன்ஞல் அதையும் கேட்க வேண்டும், அக்கா சொன்ஞல் அதையும் கேட்கவேண்டும், நான் சொல்வதையும் கேட்கவேண்டும் எல்லோருக்கும் நல்லவராக இருந்துவிட வேண்டும். இது நடக்கக்கூடிய விஷயமா? என்ருள் சரோஜா

'அதுரொம்ப கஷ்டம். கஷ்டம்மாத்திரமில்லை இதனுல்தான் குடும்பத்திலேயே தகராறுகள் அதிகம் ஏற்படுகிறது. இந்த விஷயத்தில் படித்த பசங்கள். படிக்காத பசங்கள் எல்லாம் ஒன்ருகத்தான் இருக்கிறதுகள். இன்னும் சொல்லப்போனுல் படிக்காத பசங்களைவிட படித்த பசங்களே இதுவிஷயத்தில் மோசமாக நடந்து கொள்ளுகிறதுகள்' என்ருள் பாட்டி.

'இந்தக்காலத்துப் படிப்பு ஒரு படிப்பா பாட்டி? சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகள் மாதிரி புத்தகத்திலிருப்பதை நெட்டுரு போட்டு பரீட்சையில் அப்படியே ஒப்பிக்கிறதுகள். அது தவிர இந்த உலகத்தைப்பற்றி அதுகளுக்கு என்னதெரியும்? இதுகளுடைய படிப்புக்கும், குடும்பத்துக்கும் சம்பந்தமே இல்லை. அவ்வளவென்ன. எங்கள் பெரியப்பாபிள்ளை ராமு ஆனர்ஸ் பரீட்சையில் முதல் வகுப்பில் தேறினான். எத்தனையோ மெடல்கள் வாங்கியிருக்கிறான். வெளியில் எவ்வளவோ பிரஸித்தி அவனுக்கு. நல்ல உத்யோகம். என்ன பிரயோஜனம்? கனகா (ராமுவின் மனைவி) இல்லையென்றால் அந்தக் குடும்பம் அதோ கதிதான். குடும்பவிவகாரமே இன்னதென்று தெரியாதுபாவம் அவனுக்கு. ஆகையால் படிப்பு வேறு. குடும்பத்தை நடத்திக்கொண்டு போகிற சாமர்த்தியம் வேறு' என்றாள் சரோஜா.

'ஆமாம். நகராறுக்கு என்ன காரணம்?' என்றாள் லீலா.

'வேண்டாத பெண்டாட்டி கை பட்டால் குற்றம், கால்பட்டால் குற்றம்' என்கிறமாதிரி இதுகளுக்கெல்லாம் காரணம் என்று ஒன்று வேண்டுமா என்ன? எடுத்ததற்கெல்லாம் குற்றம்தான். நாத்தனார்காரி ஒருதரம் பிறந்தகம் வந்துவிட்டுப் போனாளென்றால் ஒரு கலியாணத்துக்குச் செய்தனுப்பும் வரிசைமாதிரி பண்டமாகவும், பணமாகவும் இவ்வளவுதான் அளவு என்று இல்லாமல் கூடவே போய்ச் சேருகிறது. 'என்னமோ அவர்களுக்கில்லாத அக்கரை நமக்கு மாத்திரமென்ன வந்தது? கஷ்டப்படுகிற குடித்தனம் பிழைத்துப் போகட்டும்' என்றுநான் வாயைக் 'கை'த் திறக்கிறது கிடையாது. எதிர் வீட்டுப் பாட்டியும், பக்கத்து வீட்டு மாமியும் சண்டை மூட்டி வேடிக்கை பார்க்கிறதற்காக இல்லாத கலகமெல்லாம் செய்வார்கள் என்னிடம் ரொம்ப' ஆதரவு கொண்டிருப்பவர்கள்மாதிரி 'நான் ஒன்றையும் காதில் போட்டுக்கொள்வது கிடையாது. அப்படியிருக்கும் போதே அவர்கள் மாமியாரிடமும், நாத்தனாரிடமும் 'ஒன்று' கிடக்க ஒன்று சொல்லி கலகமூட்டி வேடிக்கைப்பார்க்கிறார்கள். ஆறு மாசமாக 'இவரிடம்' (கணவர்) சொல்லி கொண்டிருக்கிறேன் வத்ஸலாவுக்கு (சரோஜாவின் குழந்தை) ஒரு 'தொங்கட்டம்' வாங்கிப்போடும்படி. அதைக்கூட நான் கேட்கமாட்டேன். எனக்கு கலியாணம் ஆகி வருஷம் ஆறாகப் போகிறது. இதுவரை ஒரு புடவையோ ஒரு ரவிக்கையோ புக்ககத்தில் வாங்கிக் கொடுத்தது கிடையாது. எல்லாம் பிறந்தகத்தில்தான் வாங்கி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நாலைந்து வருஷமாக காலாகாலத்தில் மழையில்லாமல் எங்கும் ஒரே க்ஷாமம் ஏற்பட்டுவிட்டது. சரியான விளைச்சல் கிடையாது. நகரங்களில் இருப்பவர்களுக்கு மாதம் பிறந்தால் சம்பளம் வந்துவிடுகிறது உத்தியோகத்தில் இல்லாதவர்களாக இருந்தால் காண்டிராக்டு, வர்த்தகம் வியாபாரம் எத்தனையோ வழிகளில் கள்ள மார்க்கெட், 'அது இது' என்று ஒன்றுக்குப் பத்து மடங்காக லாபம் சம்பாதித்துப் பணத்தைக் குவியலாகக் குவித்துத் தள்ளுகிறார்கள். ஒன்றுமில்லையென்றால், 'வரன் தேடிக் கொடுக்கிறேன், குடியிருக்க போர்ஷன் பார்த்துக் கொடுக்கிறேன்' என்று சொல்லிக் கொண்டு புரோகர் வேலையில் பணம் சம்பாதிக்கிறார்கள். நாட்டுப்புறத்தில் இதெல்லாம் ஏது பாட்டி? கழனி விளைந்தால் தான் நாலு காசைக் கண்ணால் பார்க்க முடியும். அதையும் கொள்முதல் அதிகாரிகள் அடைத்துக்கொண்டு போய் விடுகிறார்கள். சாப்பாட்டிற்கே மிஞ்சுவது கஷ்டமாகப் போய் விட்டது. இந்த ஸ்திதியில் அவர்களிடமிருந்து நாம் எப்படி எதிர் பார்க்க முடியும்? மழை, 'கிழை' பெய்து சுபிக்ஷமான காலமாக இருந்தால் நாமும் கேட்கலாம், அவர்களும் சந்தோஷமாக வாங்கிக்கொடுப்பார்கள். இந்த ஸ்திதியிலும் போனமாசம் சின்ன அண்ணா ஒரு புடவை வாங்கிக் கொடுத்து விட்டுப்போனான். இந்த நிலைமையில் குழந்தைக்கு ஒரு தொங்கட்டமும் வாங்கிக் கொடு என்று கேட்டால் நன்றாக இருக்குமா? எதிரகத்து மைத்ரேயி போட்டுக் கொண்டிருக்கிறாளாம். தனக்கும் வேண்டுமென்றுகேட்கிறதுகுழந்தை. அதனால்தான் இவரைக் கேட்டேன். வாங்கிக் கொடுப்பதைப் பற்றி ஆட்சேபனையில்லை. வீட்டில் அம்மாவுடன், ஏதாவது சொல்லுங்கள். அதற்காகத்தான் யோசிக்கிறேன், என்றார் எங்களவர். என்றாள் சரோஜா.

'அன்னியரா, அயலாரா? தன் சொந்தக் குழந்தைக்குத்தானே வாங்கிக்கொடுக்கிறார் இதற்கு அவர்கள் சொல்ல என்ன இருக்கிறது? என்றாள் லீலா.

அதுதானேவேடிக்கை நானும், அந்தக்குழந்தைக்கும் அந்தவீட்டுச்சொத்துக்கும் சம்பந்தம் இருப்பதாகவே அவர்கள் நினைத்தால்தானே! எனக்கும் அங்கு ஒருவிதமான அதிகாரமும் இருப்பதாகவே அவர்கள் நினைக்கவில்லை. ஏதோ வேலைக்காரி. போட்ட சோற்றைச் சாப்பிட்டுவிட்டு வீட்டு வேலையைச் செய்ய வந்திருப்பதாகத் தான் அவர்கள் எண்ணம். தாயும் (மாமியார்) தன் பெண்ணும் (நாத்தனார்) தான் அந்த வீட்டுச்சொத்தை அநுபவிக்கப் பிறந்ததாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நான் எங்களவரிடம் சொன்னேன் 'நீங்கள் வாங்கிக்கொண்டுவாருங்கள், எங்கள் பிறந்தகத்தில் வாங்கிக்கொடுத்ததாக அவர்களிடம் சொல்லிவிடுகிறேன், என்றேன். அதன்படியே அவரும் வாங்கிக்கொண்டு வந்தார். இவர் வாங்கியது எப்படியோ அவர்களுக்குத் தெரிந்துவிட்டது.........' என்று சரோஜா சொல்லி முடிப்பதற்குள், 'தெரியட்டுமே. தெரிந்துவிட்டால் என்ன பிரமாதமாம். ஏதாவது



"........நனக்கும் வேணுமென்று குழந்தை........"



செய்யக்கூடாத காரியமா?' என்றாள் லீலா.

'இதில்தானே வந்தது தகராறெல்லாம்' இப்படிப் பிரித்துப் பிரித்து வைத்துத்தானே குடும்பத்தைக் குட்டிச்சுவராக்க வந்திருக்கிறாள் அவள் என்றார் மாமியார். 'நம்ம ரங்குவுக்கு இப்படி புத்திக் கெட்டுப் போய்விடும் என்று நான் சொப்பனத்தில்கூட நினைக்கவில்லையடியம்மா, என்னமோ நீ இருக்கிறவரையில் வந்து போய்க்கொண்டாவது இருக்கிறேன். அப்புறம் அதுவும் வேண்டாமென்று சொன்னாலும் சொல்லிவிடுவான். என்னமோ அவளாவது நன்றாக இருக்கட்டும்,' என்றாள் நாத்தனார் அவன் சொல்லாவிட்டாலும் அவள் நிச்சயமாகச் சொல்லுவாள், உன்னை மாத்திரமா சொல்லப் போகிறாள்? என்னையும் நடுத்தெருவில் நிண்டாட விடப்போகிறாள். பிரதிதினமும் அவனுக்குத் தலையணை மந்திரம் இதுதானே? எல்லாம் கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். என்னென்ன படவேண்டுமென்று தலையில் எழுதியிருக்கிறதோ எல்லாவற்றையும் பட்டுத்தானே ஆகவேண்டும்?' என்று மூக்கைச் சிந்திப்போட்டாள் மாமியார். 'உனக்கு இன்னும் அப்படிப்பட்ட கதி வந்துவிடவில்லை நான் மூச்சுடன் இருக்கிறவரையில் கஞ்சியோ, கூழோ நான் சாப்பிடுவதில் உனக்கும் கொடுப்பேன், அது மட்டும் நிச்சயம்' என்றார் நாத்தனார். 'பின்னை நீ எனக்கு எதற்கடியம்மா பெண்ணாய்ப் பிறந்திருக்கிறாய்? பிறந்தகத்துச் சொத்து சுதந்திரத்தை அனுபவிக்கக் கொடுத்து வைக்காவிட்டாலும், இதற்காவது கொடுத்துவைத்திருக்கிறாயோ இல்லையோ! அதுவே போதும் எனக்கு' என்றார் மாமியார். இதையெல்லாம் கேட்க எனக்கு மனசு தாளவில்லை. எதற்கு இப்படி நீங்களாகவே இல்லாததையெல்லாம் கற்பனை செய்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? நான் ஒருத்தி இருப்பது உங்களுக்கு கஷ்டமாக இருந்தால் நான் வேண்டுமானால் இந்த வீட்டில் இல்லை.' என்றேன்.



"........சதிர் வைத்து விட்டீர்களோ இல்லையோ?........"

இந்த சமயத்தில் எங்களவர் ஆபிஸிலிருந்து வந்தார். 'சதிர் வைத்து விட்டீர்களோ இல்லையோ?' என்றார். 'உனக்கு இதெல்லாம் சதிராகத்தான் இருக்குமடா அப்பா. உண்மை உனக்கு என்ன தெரியப்போகிறது? அவள் எதையோ சொல்லப்போகிறாள் அதைக் கேட்டுக்கொண்டு போகாமல் போய்விடப்போகிறாய்' என்றார் மாமியார். 'அம்மா இதோ பார், என் மானம் போகிறது. இதோ இப்பொழுதே நான் வீட்டை விட்டுக் கிளம்பி எங்காவது தொலைந்து போகிறேன் என்றார்.

'இதே மாதிரி ஒவ்வொருவரும், கிளம்புவதாகச் சொல்லியிருப்பீர்கள் என்றாள் லீலா.

'சொல்வதோடுமாத்திரமா, நாத்தனார் கிளம்பியே போய்விட்டார்' என்றாள் சரோஜா.

'தெரியாமலா போயிருக்கிறான்? உன் அகமுடையான் சுபாவம் அவனுக்கு நன்றாகத் தெரியும். உடனே ஓடிப்போய் கெஞ்சி அழைத்து வந்து ஒன்றுக்கு நாலு பங்காகச் செய்து அனுப்புவான் என்பது அவளுக்குத் தெரியும் அதனால்தான் கோபித்துக் கொண்டு போய்விட்டாள் என்றாள் பாட்டி.

'இப்படி இருந்தால் அந்த வீட்டில் எப்படி பாட்டி குடித்தனம் பண்ணுகிறது? என்றாள் சரோஜா.

'குடும்பம் என்பது இதுதானடியம்மா! நல்ல விசால புத்தியில்லாத நாத்தனாரும், தர்ம சங்கடமான நிலையிலுள்ள அகமுடையானும் உள்ள குடும்பத்தில் இதைத் தவிர வேறொன்றையும் எதிர் பார்க்கமுடியாது' என்று பாட்டி சொல்லிக்கொண்டிருக்கையில் லீலாவின் கணவன் ஆபிஸிலிருந்து வந்தான்.

"நான் வருகிறேன் பாட்டி" என்று சொல்லிக்கொண்டே சரோஜா வீட்டுக்குச் சென்றாள்.

# சிறு விளம்பரங்கள்

ஆபீஸ்: ஸ்தாபிதம் 1924.

## பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். 1வருஷ பலன் மாதவாரி எழுத ரூபா 5 ஆருடம மூன்று கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித சாஸ்திரி,
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோ நிதி," தியாகராய நகர்,
மதராஸ் 17. தபால் பெட்டி 1417.

## ஜீவ வசிய பரம ரஹஸ்யம்

ஹிப்னடிஸம், மெஸ்மெரிஸம் முதலிய கலைகளைக் கற்றுத் தேர்ச்சிபெற விரும்புவோருக்கும், பல அற்புதானந்த ரஹஸ்யங்களை அறிந்துகொள்ள விரும்புவோருக்கும் இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும். ஹிப்னடிஸ தத்துவங்களைமட்டும் கூறும் நூலன்று. அந்த மெஸ்மெரிஸ வித்தையை எப்படிக் கற்றுக்கொள்வதென்பதை சவிஸ்தாரமாக விளக்கும் அருமையான நூல் இதுவரை தமிழில் யாரும் வெளியிடவில்லை. விலை ரூ. 4-8-0. தபால் செலவு 9 அணா.

ஜெனரல் புக் டெப்போ,
460. திருவல்லிக்கேணி ஹைரோட்.
சென்னை 5.

திரிகாலவேதி ஜோதிஷ சக்ரவர்த்தி

## புரொபஸர் K. ஆந்ரி

(ஜோதிஷ-ரோக நிபுணர்.)
750, திருவல்லிக்கேணி ஹைரோட்,
சென்னை 5
ஆருடம் எழு கேள்விக்கு ரூ. 3.
வருஷ பலன் ரூ. 3. & 5.

## பாரா குடோம், மதராஸ் 17.

ரசைஷ: ஸெதி வசியம் ரூ. 10. நவோரா (பணந்திறக்க) ரூ. 10. ஸத்ருநோசவரி ரூ. 10. விந்யாதுயா ரூ. 10. விஜயாபேரி ரூ. 10. புத்திரபாசா ரூ. 10. சம்மோஹனா ரூ. 10. விருத்திமாயம் ரூ 10. மஹா பாசையா (ராஜா,பிரஜா,ஸ்திரீ வசியம்) ரூ. 110.

உயர்ந்த ஜவுளிகள்
கிடைக்குமிடம்

## V. N. சுப்ரமணிய அய்யர்

## ஜவுளிக்கடை

ராஜ வீதி : கோயமுத்தூர்

H. O. பெரிய தெரு,
கும்பகோணம்.

## குறைந்த கட்டணத்தில் உயர்தர ஜோதிடம்!

இந்த அரிய சந்தர்ப்பத்தை உடனே பயன்படுத்திக்கொள்ளுங்கள்!

ஆயுள் பூராவும் எல்லாத்துறைகளிலும் பலன்கள் அறிய ரூ 5.

உங்கள் அற்புத வாழ்க்கைச் சித்திரம் ரூ 2.

கேள்வி 3-க்கு ரூ. 1—1—0.

ஜாதகம அல்லது எழுதும நேரம்தேவை.

ஸாயி ஆஸ்ட்ரல் ஸ்டுடியோஸ்,
உறையூர் — திருச்சி.

## இப் பக்கத்தில் விளம்பரம் செய்யுங்கள்.

★

2"X2" அளவுக்கு
கட்டணம் ரூபாய்
பத்தே தான்.











# 10000 அடி போதும்!

என். நடராஜன்

படத்தின் நீளம் 13 500 அடிக்கு மேல் இருக்கக்கூடாதென்றும், அது மூன்று மணிக்குமேல் ஓடக்கூடாதென்றும் ஒரு அறிக்கை நம் சர்க்கார் விடுத்துள்ளது பற்றி பற்பல கேள்விகளும், சர்ச்சைகளும் எழுகின்றன. இத்தகைய ஒரு நியமத்துக்கு காரணம் கேட்கிறார்கள் சிலர் இது வெறும் அபத்தம் என்று சொல்பவர் பலர். படத்தின் பூர்ணப்பொலிவை, அதன் நீளத்தைக்கொண்டு தான் அளவிட முடியும். அதை (நீளத்தை) இம்மாதிரி, நிர்தாக்ஷண்யமாக வெட்டிச் சுருக்குதல், கலையையே ஒரு குறுகிய எல்லைக்குள் அடக்குவது போலல்லவோ ஆகிறது? என்றெல்லாம் அங்கலாய்க்கிறார்கள் சில முதலாளிகள்.

படத்தின் நீளத்தைச் சுருக்கும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர சர்க்கார் தீர்மானம் செய்து விட்டபடியால், இனிகேள்வி கேட்கவும் பதிலுக்கு மன்றாடவும் தேவையில்லை—தெரிந்தும் பிரயோஜனமில்லை ஆகலால், வீண் பொழுது போக்காமல், இத்தகைய திட்டம் அமுலுக்கு வருவதால் சினிமாத் தொழில் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறதென்பதை ஆராய்வோம்.

படக் கம்பெனிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டுதான்போகிறது கணக்கிட்டுப்பார்த்தால், இனியும் ஐந்து வருடத்திற்குள் இந்தியாவுக்கு 25000000 சதுர அடி கச்சா பிலிம் படப்பிடிப்புக்கு மாத்திரம் வேண்டி வரும் என்று தெரியவருகிறது படப்பிடிப்புக்கு வேண்டிய கச்சா பிலிம் நம் இந்தியாவில் உற்பத்தியாகிறதா? இல்லை. அந்நிய நாட்டிலிருந்துதான் தருவிக்கப்படுகிறது இன்று இருக்கும் படக் கம்பெனிகளுக்குப் போதுமான பிலிம் கிடைக்கிறதா? அதுவுமில்லை எவ்வளவோ கம்பெனிகள் பிலிம் கிடைக்காமல் படப்பிடிப்பை நிறுத்தி தூங்குகின்றன பணம் படைத்த சில முதலாளிகள் கிடைக்கும் அத்தனை பிலிமையும் அதிக விலை கொடுத்தும், கள்ளத்தனமாக வாங்கியும். ஒரே படத்துக்கு விநியோகம் செய்து விடுகின்றனர் இதனால் சிறிய அளவில் படம் பிடிக்கும் கம்பெனிகள் பலதும் தொழிலில்லாமல் திக்கு முக்காடுகின்றன. ஆதலின் இத்தகைய ஒரு நியமத்தை அமுலுக்குக் கொண்டு வருவது இச்சிறு கம்பெனிகளுக்கு உயிர்ப்பிச்சை கொடுப்பது போலாகும். கள்ள மார்க்கெட்டை ஒழிக்க இதுவும் ஒரு வழியாகும். மேற்சொன்னது, இப்போதிருக்கும் பிலிம் பஞ்சத்தைப் போக்கக் கையாளும் முறையை சம்பந்தப்பட்டவரையில், ஒருபதிலாகும்

படப்பிடிப்புக்குக் கையாளும் கதைகளில் அநேகம் பெருங் கதைகளே கதை, பெரியது என்றால், அதிலுள்ள சம்பவங்களின் எண்ணிக்கை அதிகம் என்று அர்த்தம். அதாவது கதையிலுள்ள பாத்திரங்களுக்கு நடிப்பு நீக்கம் உண்டாகிறது இதனால், "முக்கிய" சினிமா நடிகர் ஒருவருக்கு ஒரு வருடத்தில், இரண்டு அல்லது மூன்று படங்களுக்குமேல், ஒப்பந்தம் செய்துகொள்ள இயல்வதில்லை. ஒரு படத்தில் நடிக்க அன்னார் கேட்கும் தொகை, நம்மை பிரமிக்கச் செய்யும் காரணமும் இதுவே. கதையைச் சுருக்குவதில், சம்பவங்கள் குறைகின்றன என்று மட்டுமல்ல. அது அர்த்தபுஷ்டியோடும் பரிணமிக்கிறது பாத்திரங்களின் நடிப்புத் நீக்கமும் குறைகிறது. நடிகர்களுக்கும் அநேக படங்களில் நடிக்க சந்தர்ப்பமும் கிடைக்கிறது

மேலும், நடிப்புக்கு எதிர்பார்க்கப்படும் பிரதிபலனை, நடிகர்கள் சிறிது குறைத்துக்கொள்ளும்படியும் எதிர்பார்க்கலாம். படத்தின் நீளம் குறைவதால், படப்பிடிப்பின் கால அளவு ஸ்டுடியோ வாடகை, காமிராமேன் முதலியவர்களின் ஊதியம் போன்றவை குறைகிறது. இதனால், படப் பிடிப்பும் லாபகரமாக முடிகிறது.

[ தொடர்ச்சி அடுத்த பக்கம் ]



தவக்கோலம் காட்டி தனது 'சிவயோகி' யை வசப்படுத்த முயலும் 'பாமா'வாக நடிக்கும் சுமதி. தண்டபாணி தேசிகரின் அருமையான பாடல்களை இப்படத்தில் கேட்கப் போகிறீர்கள். இப்படத்தை வெகு சீக்கிரம் வெள்ளித்திரைக்குக் கொண்டு வர ஏற்பாடுகள் துரிதமாக நடக்கின்றன.

# 10000 அடி போதும்

[ முன் பக்கத் தொடர்ச்சி ]

கதையின் நீளம் குறைவதன் மூலம், கதையில் வரும் சம்பவங்கள் குறைகின்றன வென்று சொன்னேனல்லவா? அப்படி சம்பவங்கள் குறையும் போது, பாத்திரங்களின் எண்ணிக்கையும் அநேகமாகக் குறைகிறது. இதுவும் பட முதலாளிக்கு ஆதாயம் தரக்கூடிய விஷயமே. அநேகப் படங்களில், கதைக்கு சம்பந்தப்படாத. ஹாஸ்ய பாகங்களும், காட்சியங்களும் புகுத்தப்படுவதை நாம் காண்கிறோம். கதையை சிறியதாக்க இவைகளையும் அப்புறப்படுத்துவது நலம். ஹாஸ்ய நடிகர்களுக்கும், காட்டிய மணிகளுக்கும் வேலையே இல்லாது போய்விடுமே என்று கவலைப்படுகிறீர்களா? பட முதலாளிக்கு படப்பிடிப்புச் செலவு குறையும்போது, "தனி ஹாஸ்யப் படங்கள்", "காட்டியப் படங்கள்" என்றெல்லாம் ஹாலிவுட் மாதிரி, எடுத்துத் தள்ளலாமே! வருடத்தில், ஒன்று அல்லது இரண்டு படங்கள் பிடிக்க பகீரதப் பிரயத்தனம் செய்யும் பட முதலாளிகளுக்கு, இவ்வகையில் நாலு அல்லது ஐந்து படங்களை சுலபமாகப் பிடிக்க இயலுமே!

படத்தின் நீளம் குறைந்தால், படம் ஓடும் கால அளவும் குறைகிறது. இந்த தியேட்டர் முதலாளியின் கவனத்தைக் கவரும் ஓர் விஷயமாகும். படம் ஓடும் நேரம் குறையும் போது திரையிடும் செலவு ஒருமடங்குக் குறைகிறது என்பது விளங்கும். தியேட்டர்களின் கால அட்டவணைகளை தத்தம் திருப்திக்கேற்றவாறு திருத்தி அமைக்க முயலுகிறது. காட்சியாலே முதலாளிகளுக்குப் பண சம்பந்தமான அதாவது படத்தின் வசூல் படப்பிடிப்புச் செலவு முதலியவைகளைக் குறித்து நம் கவனம் இவ்வளவு தூரம் சென்றுவிட்டது. இனி இத்திட்டம் Technical அம்சங்களை எவ்வளவு பாதிக்கிறது என்பதை ஆராய்வோம்.

ஒரு படத்திற்கு சூரம். அழகு கிடைப்பதே ஒளிப்பதிவினால்தான். மனிதனுக்கு தன் உடல் எவ்வளவு சொந்தமோ - அவ்வளவு. சினிமாவிற்கு இந்த ஒளி (பதிவு) அவசியம். ஒளிப்பதிவின் சுத்தம் அதிகமாக ஆக, படத்தின் அழகு பின் மேலும் கூடுகிறது.

இந்த ஒளி. ஒலிப்பதிவுகள் விஷயத்தில் நம் இந்தியப் படங்கள் அமெரிக்கப் படங்களோடு ஒப்பிடப்பட முடியாத அளவு மோசமான நிலையில் தான் இந்நாள் வரையிலும் இருக்கின்றன. இதற்குக் காரணங்கள் இல்லாமலுமில்லை. நம் பட முதலாளிகள் படப்பிடிப்புக்கு வேண்டிய பணம் முழுவதும் சேர்த்து வைத்துக்கொண்டு படம் பிடிக்க முயலுவதாகத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்தவரையில் படத்தின் பெயரை நேயப்பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப் போதுமான பணத்தை வைத்துக்கொண்டுதான் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது! கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தைத் திரட்டி.—வட்டிக்குப் பணம் கடன் எடுத்தோ, விநியோக உரிமைகளை விற்றோ, நாலு 'பணப்பைகளை' சினிமாத் துறைக்கு இழுத்துவந்தோ அவர் படத்தை ஒரு நிலையில் பிடித்து முடிப்பார். முழு படப் பிடிப்புக்குத் தேவையான பணமில்லாமையால், எவ்வளவோ படங்கள் முடியும் தருவாயிலிருந்தும், இன்றும் வெளிவராமலிருப்பது நேயர்களுக்கு நான் சொல்லாமலே தெரிந்த விஷயமே.

படப் பிடிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படும் கதை முழுப்படத்தின் வசனத்தையும் ... துண்டு துண்டாக வெட்டப்படுகிறது. இந்த ஒவ்வொரு துண்டும் Shot என்று

[ தொடர்ச்சி அடுத்த பக்கம் ]



# 10000 அடி போதும்!

[ முன் பக்கத் தொடர்ச்சி ]

கூறப்படும். ஒவ்வொரு Shot ஆகத்தான் காமராவில் ஒலிப்பதிவு செய்யப்படுகிறது. அதாவது கதை, துண்டு துண்டாகப் பிடிக்கப்பட்டு, இறுதியில் கதையின் ஒழுங்குக்கேற்ப பிணைக்கப்படுகின்றன.

ஷாட்டுகளை சௌகரியத்துக்கேற்றவாறு Out-door shot என்றும் In-door shot என்றும் பிரிக்கலாம். இறுதியில் கூறிய ஷாட்டுக்கு மின்சார விளக்கு வசதிகள் அவசியம். படத்தின் ஜோடனைகட்கு வேண்டிய அளவு வெளிச்சம் இம்மின்சார விளக்குகள் தருகிறது. இப்படிப் படமெடுக்கும்போது வெளிச்சத்தின் ஏற்றக் குறைவை அனுசரித்து படம் இருண்டோ மங்கலாகவோ போவதுண்டு. இக்குறைகளைப் போக்க படமுதலாளி ஒரே ஜோடனையை இரண்டு அல்லது மூன்று முறை எடுக்க அனுமதிக்கிறார். ஒளிப்பதிவு முடிந்ததும் சுத்தமாகப் பதிவு செய்த ஒவ்வொரு ஷாட்டும் கதையை அனுசரித்து ஒட்டப்படுகிறது. அப்போது தான் படத்தின் ஒளிப்பதிவு சுத்தமாகத் தோன்றும். இது அமெரிக்காவில் கையாளும் முறை. அமெரிக்காவில் இந்தியாவில் உபயோகப்படுத்தும் காமிராக்களைவிட பன்மடங்கு சுத்தமாக இருக்கும் காமிராக்களும் கை தேர்ந்த காமிராமேன்களும் இருப்பதால் ரீடேக்குகளின் அவசியம் அதிகமிருப்பதில்லை.

நிற்க. படமுதலாளி ஒரு ஷாட்டுக்கு எத்தனை ரீடேக் எடுக்கிறாரோ, அத்தனை மடங்கு அப்படத்தின் செலவு அதிகரிக்கிறது. நம் படமுதலாளியின் பண வசதி முன் கூறியபடியிருக்க அவரால் எங்கே இப்படி படம் பிடிக்க முடியும்.

இந்தியாவில் கையாளப்படும் காமிராக்களையும் காமிராமேன்களின் திறனையும் கணக்கிடும்போது மேல் விவரித்தது போல் திரும்பவும் எடுத்துத்தான் ஒளிப்பதிவு செய்ய வேண்டும். இதை சினிமா பாஷையில் 'ரீடேக்' என்று சொல்வார்கள். படமுதலாளிகளின் பண வசதி ஒருபுறமிருக்க, படத்தின் கதையும் முன் சொன்னதுபோல் பெருங் கதையாயிருந்தால் ஷாட்டுகளின் எண்ணிக்கையும் அதிகமாகும். இந்த ஷாட்டுகளுக்கெல்லாம் ஒன்று அல்லது இரண்டு ரீடேக் விதம் எடுப்பதாயின், அது நடக்கக்கூடியதாகப் படவில்லை. ஆனால் மேற்கூறிய திட்டம் அமுலுக்கு வருவதால், படத்தின் நீளம் குறைகிறது. நீளம் குறையும்போது ஷாட்டுகளின் எண்ணிக்கையும் கூடவே குறைகிறது. இதனால் நம் பட முதலாளிக்கு மோசமாகப் பதிவு செய்யப்பட்ட ஷாட்டுகளுக்கு ஒரு ரீடேக்காவது எடுக்க இயலும்.

இப்படிப் பார்க்கப்போனால், இந்த 13,500 அடித் திட்டம் ஒரு வகையில் படத்துக்கு நன்மை செய்கிறது — என் அபிப்பிராயத்தில் 10000 அடி போதும்.



'டானிகே'—ஹாலிவுட்டின் சிறந்த ஹாஸ்ய நடிகர். இவர் படத்தைப் பார்த்துச் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகாத பேர்வழிகளே கிடையாது.

144093



அமெரிக்க ரோமாந்திரங்களில் இந்நாமரி சோலே நாட்டியங்கள் நடைபெறுகின்றன.

# கதைகளுக்குப் பஞ்சமா?

(ரங்கன்)

கதைகளுக்குப் பஞ்சமா? இல்லவே இல்லை ஆசிரியர் சாண்டில்யன் சொல்வதுபோல், அறிவுத் திறனும், சிறந்த கற்பனா சக்தியும், எழுத்து வன்மையும் மிகுந்த கதாசிரியர்கள் தமிழ் நாட்டில் அநேகம் பேர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களைத் தகுந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள பட முதலாளிகள்தான் பின் வாங்குகிறார்கள்.

பட முதலாளிகள் அத்தகைய கதாசிரியர்களை நம்பி, தகுந்த முன் யோசனையுடன் நடந்துகொண்டால், சிறந்த தமிழ்படங்கள் பலவற்றை எடுத்து ஜனங்களுக்கு அதிக மகிழ்ச்சி யூட்டலாம்.

கதைகளில் பழைமையும், புதுமையும் வேண்டியதுதான். புராணப் படங்களுடன் சமூகப்படங்களும், சரித்திரப் படங்களும் தமிழ்நாட்டிற்கு மிகமிக அத்தியாவசியமே. ஆனால் ஒரே கதையில் பல படங்கள் வேண்டியதில்லை அதுவும் ஒரே தமிழ் மொழியில்.

சினிமா அபிமானிகள் புதுப்புதுக் கதைகளை விரும்புகிறார்கள் தாங்கள் கழிக்கும் உல்லாஸ வேளையில், தங்கள் காசுடன், காலமும் வீணாகப் போவதை அவர்கள் விரும்பவில்லை இதனால்தான் பல படங்கள் படு தோல்வியடைந்துபோயிருக்கின்றன.

ஒரே மாதிரி கதையில், இரண்டு மூன்று படங்கள் தமிழ் மொழியிலேயே எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அம்மாதிரியான எல்லாப்படங்களும் வெற்றியடைந்ததை என்று சொல்வதிற்கில்லை. ஒன்றிரண்டு படங்கள் நல்ல வெற்றியை அடைந்திருக்கின்றன. மற்றவைகளோ இரண்டு மூன்று வாரங்களே ஓடாமல் மறைந்து போயிருக்கின்றன. இது யாவரும் அறிந்த உண்மையே.

இனியாகிலும் பட முதலாளிகள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். இத்தகைய இரட்டிப்புப்படங்கள் வெளிவராமலிருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

இதற்கு ஒரு யோசனை: தமிழ் நாட்டில் உள்ள எல்லாப் பட முதலாளிகளும் ஒரு கதையைப் படம் பிடிக்க ஆரம்பிப்பதற்கு முன் கூடி ஆலோசித்தல் நல்லது ஒரு கதையை ஒருவர் படம் பிடிக்க உத்தேசித்திருந்தால் மற்றவருக்கும் அதே கதையைப் படமாக்க விருப்பிருந்தால், முன்னவருக்காக மற்றவர் தன்னுடைய ஏற்பாட்டை ரத்து செய்துவிட்டு, தனக்காக வேறு கதையை நியமித்துக்கொள்ளலாம்.

ஒரு கதை ஒருதரம் படமாக்கப்பட்டு, படுதோல்வியடைந்திருக்கலாம். இந்த ஒரு காரணத்திற்காக இன்னொருவர் அதே கதையை வேறு நடிகர்களைக்கொண்டு மற்றொருதரம் படம் பிடிக்க முன் வருவதும் நல்லதல்ல என்கிறேன். தமிழ் நாட்டில் இனியாகிலும் ஒரே கதையில் ஒரே மொழியில் இரட்டிப்புப் படங்கள் வேண்டியதேயில்லை.

பட முதலாளிகள் ஒன்று கூடி கலந்தாலோசித்து, பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்கும் பான்மை ஏற்பட்டால், தமிழ் நாட்டில் அரிய கதைகளை (புராணக் கதையானாலும் சரி, சமூகக் கதையானாலும் சரி.) படமாக்கி நல்ல வெற்றியடையலாம் இதற்கு ஆற்றல் மிகுந்த கதாசிரியர்களைத் தகுந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுவதுதான் சிறந்த வழி.





# மெய் விளங்கிய அன்பர்கள்

பெரியபுராணப் பூங்காவில்

பி. ஸ்ரீ.

## 58

## ஆனந்தம் கண்டவர்

☆

ஒரே உண்மை கருணைமாமுகிலாகி உபயகாவேரி நடுவே துயில்கிற தென்றும், பொன்னம்பலத்திலே ஆனந்தக் கூத்தாடுகிற தென்றும், சமரச சன்மார்க்க ஞானிகள் கூறுவர். ஆனந்தக் கூத்தாடும் உண்மையை—சிதம்பர ரகசியத்தை—திருவாவடுதுறையிலேயே கண்டுகொண்ட திருமூலர்,

ஆனந்தம் ஆடரங்(கு),
ஆனந்தம் பாடல்கள்,
ஆனந்தம் பல்லியம்,
ஆனந்த வாச்சியம்,
ஆனந்த மாக
அகில சராசரம்
ஆனந்தம், ஆனந்தக்
கூத்துகந் தானுக்கே

[ஆடரங்கு — ஆடுகின்ற சபை. பல்லியம்—பல வகை வாத்தியங்கள். உகந்தானுக்கே-விரும்பினவனுக்கே.]

இப்படி ஆனந்தக்கூத்தை அறிகிறவர்கள், பயம், கவலை, துன்பம் முதலியவற்றைத் தள்ளி ஆனந்தமயிருப்பார்களாம் ஆனந்தமான அரங்கத்திலே ஆனந்தமான கீத வாத்திய விநோதங்களோடு அகில லோகமும் ஆனந்தமடையும் வண்ணம், ஆனந்த நடராஜன் ஆடுகின்றான் என்ற உண்மையை உணர்ந்தொழுகும் உத்தமர்கள்-இந்த ஆடும் திருவடியை எங்கும் கண்டு ஆடிப்பாடி வாழ்த்தி வணங்குகிறவர்கள்.— தாம் கண்ட ஆனந்தத்தைப் பிறரும் கண்டு அநுபவிக்கவேண்டுமென்று எல்லா உயிருக்கும் அன்பு செய்வார்கள் ஆடும் திருவடியை அருளுக்கு அறிகுறியாகக் கண்டு, ஆனந்த ஜோதியே 'அருட்ஜோதி'யாய் 'நீதி'யாய் விளங்குவதாய்க் காண்போர் தங்கள் வாழ்க்கையையும் நீதியென்ற நியதிக்கு உட்படுத்தி ஒழுங்கான அருள் நெறியிலே செலுத்துவதுடன், பிறருக்கும் அருள் பொழிந்த வண்ணமாயிருப்பர்.

ஆனந்தக் கூத்தே சுந்தரக் கூத்துமாகும் ஆம், உண்மையே அழகு; உண்மையே ஆனந்தம். ஆனந்தம் சுந்தரக் கூத்தாடும்போது உலகம் சௌந்தர்யம் பெறுகிறது இந்தச் சுந்தரக் கூத்தே அற்புதக் கூத்துமாகும் ஏனென்றால், இந்தக் கூத்தை எவ்வளவு வருணித்த போதிலும் சொல்ல முடியாது எவ்வளவு அறிந்தவர்களும் அறிய முடியாது

திருமூலர் காலத்திற்கு முன்னும் பின்னும் இந்தச் சிதம்பர ரகசியத்தை அறிந்து வெளியிட முயன்றவர்கள் உண்டு. திருமூலரும் திருமந்திரத்திலே வெளியிட்டுப் பார்க்கிறார்: பரிபாஷையென்ற திரையிட்டும் காட்டுகிறார். எனினும் சிதம்பர ரகசியம் இன்னும் சிதம்பர ரகசியம் தான்!

நெய்யே தெரியாதவர்களுக்கு நெய்யின் சுவையைச் சொல்லிக் காட்ட முடியுமா? பாடித்தான் காட்ட முடியுமா? அநுபவிக்கலாம். அநுபவித்துக் காட்டலாம். இந்த ஆனந்த அநுபவம் கண்ட காலத்தை நினைத்துக்கொண்டுதான் திருமூலர்,

ஒப்பில் எழுகோடி
யுகம்இருந் தேனே!

என்கிறார்.

உண்மையை உணர்ந்து உணர்ந்து அநுபவித்துக் காணாமல் எழுத்தளவில் நின்று வாதமிடும் எழுத்தறிவித்தகரால் உட்பொருள் சேரம் போய்விடுமோ என்று எண்ணி, 'எழுகோடியை எழுகோடி யென்றே நினைத்து விடாதே' என்று எச்சரிப்பதுபோல்,

ஊனமில் ஒன்பது
கோடி யுகந்தனுள்
ஞானப்பால் ஆட்டி
நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன்
நற்போதி யின்கீழே!

[ஊனமில்—குற்றமில்லாத. போதி அரசமரம்.]

என்று கூறியுள்ளார். 'பல ஊழி கண்டேனே' என்கிறார் மறுபடியும்,

இருந்தேன் இக்காயத்தே
எண்ணிலி கோடி!

[காயம்—உடம்பு.]

திருமூலரின் ஞான சித்திக்குக் காய சித்தியும் இன்றியமையாதது சிவயோகமும் சிவஞானமும் சிவபோகமும் நிறைந்த வாழ்க்கையை யுகம் யுகமாய்க் கண்டு அதாவது நிறைந்த வாழ்வாய்ச் சிறந்த வாழ்வாய்க் கண்டு களித்தவர்

உடம்பினை முன்னம்
இழுக்கென்(று) இருந்தேன்;
உடம்பினுக்(கு) உள்ளே
உறுபொருள் கண்டேன்;
உடம்புளே உத்தமன்
கோயில்கொண் டான்என்(று)
உடம்பினை யான்இருந்து
ஓம்புகின் றேனே

[இழுக்கு—இழிவு. ஓம்புகிறேன்• பேணுகிறேன்.]

என்று காய சித்தியின் அவசியத்தையும் வற்புறுத்துகிறார்

ஞானவர் என்று பலரைத் தாழ்த்திவைத்தவர்கள், சமுதாயத்தின் பாதியாகிய பெண்மையையும் சிறுமையாக்கியவர்கள், உடம்பையும் சிறுச்சாடியில் தள்ளிவிடுகிறார்கள்! இது போலி வேதாந்தம் என்பதை இந்தச் சித்தர் கண்டுகொண்டார். உடம்பு சிறுமை என்று வெறுப்பது சிறந்த ஞானம் என்று தெரிந்துகொண்டார் ஒருகாலத்தில் தாமும் இந்தச் சிறந்த ஞானத்தில் இருந்ததாக ஒப்புக்கொள்கிறார் ஆனால் 'என் உடம்பு' என்ற அபிமானம்

போய் 'உத்தமன் கோயில்' என்ற அன்பு பிறந்ததும், அந்த மெய்யன்பே உடலை உறுதி செய்யும் காய சித்தியின் அவசியத்தையும் வற்புறுத்திவிடுகிறதாம்.

'ஞானப்பால் ஆட்டி நாதனை அர்ச்சித்து' வந்தவர், சிஷ்யர்களான லத்புத்திரர்களையும் அந்த ஞானப்பால் உண்டு தளருமாறு விட்டிருப்பார். இவர் சீடர்களை நோக்கி ஞானசித்தியின் அவசியத்துடன் - காயசித்தியின் அவசியத்தையும் உபதேசித்திருப்பார் என்று ஊகிக்கலாம். உடம்பு நிலையாது, இளமைநிலையாது என்று உபதேசித்தபோதிலும், இந்த உடம்பில் இருந்துகொண்டே நிலைத்த உண்மையை, மெய்யன்பை, ஆண்டவனைத் தேடவேண்டும் ஞானம் வளர்க்கவேண்டும், உயிர் வளர்க்க வேண்டும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

உடம்பார் அழியில்
உயிரார் அழிவர்!
திடம்பட மெய்ஞ்ஞானம்
சேரவும் மாட்டார்;
'உடம்பை வளர்க்கும்
உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன்
உயிர்வளர்த் தேனே!

என்பது திருமூலர் திருவாக்கு.

'தேசமும் நாடும்தேடித் திரிந்தேன் எங்கள் செல்வனை; முடிவில் இந்த உடம்பிலேயே கண்டு கொண்டேன்' என்கிறார். பிறகு வழி தவறிப்போனவர்களுக்காக இரங்கி 'மனம் என்ற நெடுந்தேர் ஏறிப் போன நாடும் தெரியாமல் புலம்பிக்கொண்டிருக்கிறார்களே!' என்று வருந்துகிறார்.

தேயத்து ளேஎங்கும்
தேடித் திரிவர்கள்,
காயத்துள் நின்ற
கருத்தறி யாரே!

[தேயம்-தேசம். காயம்-உடம்பு]



திருமூலர்
குருகுலம்

இப்படியெல்லாம் ஞானப் பாலால் ஈசுவரனுக்கு அபிஷேகம் செய்துகொண்டே சீடர்களையும் அந்தப் பாலூட்டிச் சீராட்டித் திருமந்திரப் பாடல்களால் தாலாட்டி வளர விட்டார் திருமூலர் என்று ஊகிப்பது தவறாகாது. இப்படித் தாம் இருந்த அரசமரத்தடியைக் குருகுலமாக்கி விட்டார் என்று கருதலாம்.

இக் குருகுலத்திலே காயசித்தி உபதேசத்தை இவர் எப்படி உபதேசித்திருப்பார் என்பதைப் பாவனா சக்தியால் ஒருவாறு அறிந்து கொள்ளலாம். உபதேச உபன்னியாசத்தின் ஒரு சிறு பகுதியை, உட்செவியால் கேட்டுப் பார்க்கலாம்

'ஏன்? உடம்பு என்றால் சாமானியமா? ஆ. மனித உடம்பு அற்புதமானது! உலகம்போல் அற்புதமானது உலகம் அண்டம் என்றால் சரீரம் பிண்டம் "அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் உண்டு" உலகத்தை அண்டலிங்கமாகத் தரிசிப்போர் உடம்பைப் 'பிண்டலிங்க'மாகப் பார்க்கிறார்கள்......'

'என்ன, இவ்வளவு சாமானியத் தமிழ்தானா திருமூலனார் திருவாக்கு என்பது?' என்று தோன்றுகிறதா? திருமூலரும் இப்படித்தான் பேசியிருக்கக்கூடும். இவர் பாட்டே எவ்வளவு சுலபமாயிருக்கிறது!

உள்ளம் பெருங்கோயில்
ஊனுடம்(பு) ஆலயம்.
வள்ளற் பிரானுக்கு
வாய்கோ புரவாசல்.
தெள்ளத் தெளிந்தார்க்குச்
சீவன் சிவலிங்கம்

என்ற பாட்டைத்தான் பாருங்கள். என்ன தெளிவு, என்ன அழகு எளிமை! எளிதில் விளங்காத பரிபாஷையும் திருமந்திரத்தில் அதிகமாய்க் காணப்படுகிறது

உடலுறுதியையும் மன உறுதியையும் ஒருங்கே வற்புறுத்துகிறார் தெளிவாகத் திருமூலர் அருள் தழுவிய ஞான வீரத்திற்கு அவசியமானவை என்று ஆறுல்.

இருந்தேன் இராப்பகல்
அற்ற இடத்தே!

என்றபடி இவர் அநுபவித்த யோகானுபவத்தை வருஷக்கணக்கில் அடக்கமுடியாததுபோல் வார்த்தைக் கணக்கிலும் அடக்கமுடியாது தான் ஆகவேதான் பரிபாஷைப் பிரவாகம் சொல்லாலும் இருப்பு முடியவில்லையே—அனந்த வெள்ளமல்லவா?

* * * * *

இப்படி ஆனந்தம் கண்ட திருமூலரும் காரைக்காலம்மையார் கல்லாடர் முதலானவர்களைப்போல் 'ஆகவும் கெடவும் பாடவல்ல முனிவர்களில் ஒருவர்' என்பது நம் முன்னோர் அபிப்பிராயம்.



# தன யோகம்

பி.வி. ராவ்

இதற்கு முன் இரண்டு இதழ்களில் அநுபவ தன யோகத்தைப் பற்றி விவரிக்கப்பட்டுளது. இதில் ஸாதாரண தனயோகங்களில் சில விவரிக்கப்படுகின்றன.

ஜாதகத்தில் 2-ம் 11-ம் வீடுகளிலுள்ள முக்கியமான கிரஹங்கள் மூலமும் அந்த ராசிகளின் அதிபதிகளினாலும் பொதுவாக தன லாபங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. முதலில் இவ்விரண்டு ராசிகளின் தன்மை, சுக்ரன் அல்லது குருவின் கேந்திரஸ்தானம், சந்திர சூரியரின் திரிகோணஸ்தானம், குரு சுக்ரர்களுக்கு அவர்களால் ஏற்படும் சுப பார்வை முதலியவற்றை நிர்மாணிக்கவேண்டும். ஒரு ஜாதகத்தின் தனலாபம் குறித்து விரிவாகவும் நிச்சயமாகவும் நிர்ணயிக்கப் பரந்த அநுபவமும், விசேஷமான நிர்ணய சக்தியும் அவசியம்; ஆனால் ஜாதகத்தில் செல்வத்தைப்பற்றிய பொதுவான விஷயங்களைச் சுலபமாகத் நிர்மாணித்து விடலாம். தனயோகம் இரண்டு வகைப்படும். முதலாவதாக,

1 இரண்டு பதினொன்று வீடுகளுக்கோ அதன் அதிபர்களுக்கோ ஏற்பட்டிருக்கும் கிரகஸ்திதிகளால் உண்டாகும் யோகம்.

2 இரண்டாவதாக சாஸ்திரங்களில் பிரத்யேகமாகச் சொல்லப்பட்டிருக்கும் பற்பல யோகங்களால் ஏற்படும் நிலைமை.

முதல் கூறப்பட்ட தனயோகம் பின் வருமாறு:—

2, 11. வீடுகளில் சுப கிரகங்கள் இருப்பதும், அவற்றின் அதிபதிகள் பலமுள்ள ஸ்தானங்களில் இடம் பெற்றிருப்பதும் ஒருவரின் சிறந்த சம்பாத்தியத் திறமையை அறிவிப்பதாகும்

இரண்டுக் குடையவன் முதல் வீடாகிய லக்னத்திலும், லக்னாதிபதி இரண்டாம் வீட்டிலுமாக இருக்கும் பரிவர்த்தனை காரணமாக விசேஷமான செல்வத்தைச் சம்பாதிக்கும் திறமை ஏற்படுகிறது.

இரண்டுக்குடையவன்லக்னத்திலும் லக்னாதிபதி 11-ம் வீட்டிலும், 11-க்குடையவன் லக்னத்திலும் இருப்பது மகோன்னதமான செல்வத்தைக் குறிக்கும். விசேஷமான கிரகச் சேர்க்கை ஆகும். இந்த யோகத்திற்கு பகுத்ரவ்யார்ஜன யோகம் என்று பெயர்.

கீழே தரப்பட்ட கிரகச் சேர்க்கைகள் பிராபல்யமான சம்பாத்தியத்தைக் குறிப்பவையாகும்:—

(1) மேஷ லக்னத்திற்கு 5-ம் வீட்டில் சூரியனும், 11-ல் குருவும் சந்திரனும் இருப்பது.

(2) கும்ப, ரிஷப லக்னங்களுக்கு 5-ம் வீட்டில் புதனும், 11-ல் சந்திரனும் குஜனும் இருத்தல்.

(3) கன்னி துலா லக்னங்களுக்கு 5-ல் சனியும், 11-ல் புதனும் குஜனும் இருப்பது

(4) விருச்சிக சிம்ம லக்னங்களுக்கு 5-ல் குருவும். 11-ல் சந்திரனும் குஜனும் இருத்தல் ஆகிய இவ்வித கிரக அமைப்புகள் எல்லாம் விசேஷ தன சம்பாதயத்தைக் குறிப்பவையாகும்.

இரண்டாம் வீட்டில் அநேக கிரகங்களும் இரண்டுக்குடையவனும், தனகாரகனான குருவும் ஸ்வக்ஷேத்ரமாகவோ உச்சமாகவோ இருத்தல் ஜீவிய காலம் முழுவதும் அதிக பணத்தைச் சம்பாதிக்கவும் அநுபவிக்கவும் வசதி அளிக்கிறது.

இரண்டாவதாக குறிப்பிடப்பட்ட சிறந்த தனயோகத்தைத் தரும் கிரகச் சேர்க்கைகளைப்பற்றிக் கீழே கவனிக்கலாம்:—

1 ஸுனபா யோகம்:—அதாவது சந்திரனிலிருந்து இரண்டாம் வீட்டில் ஒரு கிரகம் இருப்பது.

2. துர்தரா யோகம்:—பக்கத்தில் தரப்பட்டுள்ள (1) ஜாதகத்திலுள்ளதுபோல் சந்திரனின் இரண்டு பக்கங்களிலும் கிரகங்கள் இருத்தல்.

3. அதியோகம்:—சந்திரனுக்கு 6, 7, 8-ம் வீடுகளில் சுபக்ரகங்கள் இருத்தல்.

4. வஸுமதியோகம்:—லக்னத்திலிருந்தாவது சந்திரனிலிருந்தாவது 3, 6, 10, 11-ம் வீடுகளில் சுபர்கள் இருத்தல்.

5. உபயசாரி யோகம்:—பக்கத்தில் உள்ள ஜாதகம் (1) படி சூரியனின் இரண்டு பக்கங்களிலும் கிரகங்கள் இருத்தல்.

6. லக்ஷ்மி யோகம்:—லக்னாதிபதி பலம் பெற்று ஒன்பதுக்குடையவன் ஸ்வக்ஷேத்ரமாகவோ உச்சமாகவோ கேந்திரத்ரிகோண ஸ்தானத்தில் இருத்தல்.

7. சர்பயோகம் :— லக்னாதிபன் உச்சமாக இருந்து 4-ம் 10-ம் வீடுகளின் அதிபர்கள் பரிவர்த்தனையாய் இருத்தல்.

8. தனமாலிகாயோகம்:—இரண்டாம் வீட்டிலிருந்து வரிசையாக 7 வீடுகளிலும் 7 கிரகங்கள் அமைந்திருத்தல்.

த்ரிலோசனயோகம் :—கீழே தரப்பட்டுள்ள ஜாதகம் 2-ல் கண்டுள்ளபடி சூரியன், சந்திரன். குஜன் ஒன்றுக்கொன்று கோணஸ்தானத்திலிருப்பது.

10. சக்ரயோகம்:—எல்லா கிரகங்களும் 1, 3, 5, 7, 9, 11-ம் வீடுகளில் இருத்தல்.

தன பாவத்தைநிர்ணயிக்கும்போது கணக்கிடப்படும் பிரபலமான 10 தன யோகங்கள் மேலே தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| ல | ராகு | குரு | சந்தி |
| | I | | சுக்ரன் |
| | | | ரவி |
| சனி | | கேது | குஜன் புதன் |

| | | | |
|---|---|---|---|
| சனி | சுக்ரன் | புதன் கேது | ல ரவி |
| சந்திர | II | | |
| குரு | | | |
| | ராகு | குஜன் | |



பாரிஸ் நகரிலிருந்து 30-மைல் தூரத்திலுள்ள சரித்திரப் பிரசித்திபெற்ற பான்டெயின்புளோ மாளிகையில் "யூனிபோர்ஸை"ச் சேர்ந்த அதிகாரிகளும் சிப்பந்திகளும் ஒரு தலைமைக் காரியாலயம் அமைப்பதற்கான அலுவல்களில் ஈடுபட்டுள்ளனர். இப் பகுதியில்தான் மான்ட்கோமரியின் புது வாசஸ்தலமும் இருக்கிறது. பிரிட்டிஷ் அதிகாரிகள் தலைமைக் காரியாலயப் பகுதியில் உணவருந்துகையில் எடுத்த படம்.


Estd: 1920

சேலம்
மூன்று தாமரை
பீடிகளை உபயோகித்து,
சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd. No. 2221.

Prop: S. அஹமத் உசேன்,
கோட்டை, சேலம் S.I.R.



ஜாதகம்! ☆ ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விபரம்:- 1 முதல் 3 உடமது எதிர்காலகேள்விகட்கு ரூ. 2. 3-க்குமேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:-வெளிநாடுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்கு திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

☆

மானேஜர்,
வீனஸ் அஸ்ட்ரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)






# காட்டிலே கண்ட காதலி

ப. ராதாகிருஷ்ணன்

[ சென்றவாரத் தொடர்ச்சி ]

"மாபூ! வனராணியே! உனக்குப் பைத்தியம் ஏதாவது பிடித்து விட்டதோ என்று எனக்குப் பயமாயிருக்கிறது. எங்கே சற்று நேரம் உட்கார் பார்ப்போம் வேண்டுமானால் என்மேல் சாய்ந்து கொள். முதலில் உன் கோபம் தணியட்டும். அப்புறம் தானாக விழிக்கு வந்துவிடுவாய். இப்படியெல்லாம் பிதற்றமாட்டாய்" என்றான். ஆனால் இந்த ஏமாற்று வித்தைகளுக்கெல்லாம் அவள் மசியவில்லை. தங்களது பூவினடியில் நான் ஒருவன்கூட விருப்பதையே இவர்கள் மறந்துவிட்டனர் போலும்!

"சீ வஞ்சகப் பேயே! என்னைத் தொடுவதற்குக்கூட உனக்குத் தைரியம் உண்டா? என் தந்தை உயிருடனுள்ளவரை அது நடவாத காரியம் என்றறிந்ததுதானே. அன்று நீ அவரைக் கொல்லச் சதி செய்துகொண்டிருந்தாய். உன்னை நம்பிப் படுகுழியில் விழுந்துவதற்காகத்தானே நீ அவருக்குத் தாசானுதாசனாக நடிக்கிறாய்? அவரது உயிரைப்போக்கி நீ அவருக்குப் பதில் தலைவனாகும் ஆசையோயன்றி இந்த மாபூவை உயிருடன் உன் வசமாக்கிக்கொள்ள முடியாது. தெரியுமா? நீ என்னை நெருங்கு முன்பே இந்த வாள் உன்னைத் தீர்த்துவிடும்" என்று உறுமியவாறே தன் இடையிலிருந்த கொடுவாளை உருவிக் காட்டினாள் அவள். அம்மங்கின விளக்கொளியிலேயே அவ்வாளின் பளபளப்பு கண்களைப் பறித்தது. அம்மூர்க்கனின் உடலில்கூட மின்சாரம்போன்ற ஒரு அதிர்ச்சி பாய்ந்து அவன் நடுங்கினான்.

இனி உண்மையை மறைப்பதில் பயனில்லையென்று அவன் கண்டுகொண்டான். வேறு விதமாய் அவளைச் சாந்தப்படுத்த முற்பட்டான்.

"பெண்ணே நீ கூறியவையெல்லாம் சரியென்று நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இந்தச் சதியைச் செய்ய என்னைத் தூண்டியது யார் தெரியுமா?"

"யார்? உன் வஞ்சக நெஞ்சம்தான், அதிகார ஆசைதான். மிருக வெறிதான்" என்று அடுக்கினாள் அவள்.

"அல்ல அல்ல. இதற்கெல்லாம் காரணம் நீதான்" என்றான் யூடின்.

"நானா? என்ன உளறுகிறாய்?" என்று கத்தியை ஓங்கினாள் அவள். அதை அவன் தடுக்க முயற்சிக்கவில்லை.

"ஆம். நீதான். உன்மேல் நான் கொண்டிருந்த கரை கடந்த காதல்தான். முன்பு நான் உன்னிடம் என் விருப்பத்தை வெளியிட்டபோது நீ மூஞ்சியிலடித்தாற்போல மறுத்துவிட்டாய். நயத்தினாலும் அன்பினாலும் பெறமுடியாத உன்னைப் பலாத்காரத்தால் பெற எண்ணினேன். அதற்குக் குறுக்கே நின்றவர் உன் தகப்பனார் ஆகவே அவரைத் தொலைத்துவிட......" என்று அவ்வாலிபன் முடிக்குமுன்பே சீறினாள் அவள் "சீ துரோகி! என் முன்னின்று கொண்டே வெட்கமில்லாமல் உன் கோரமுகத்தனமான எண்ணங்களை விஸ்தரிக்கிறாயே. உனக்கு மானமில்லையா......போ தட்சணமே இங்கிருந்து வெளியேறு"

வாலிபனது உணர்ச்சி எல்லை மீறிவிட்டன. பற்களை நெற நெற வென்று கடித்தான் அவன் அவளைப் பெண்ணென்றும் பார்க்கவில்லை. அவளது சீற்றம் என்னைக் கொல்லுவதற்காக ஓங்கிய தன் நீண்ட வாளை மீண்டும் உயர்த்திக்கொண்டு அவளை நோக்கிப் பாய்ந்தான் அவர்களிருவரது வாள்களும் பளபளவென மின்னின. மறுகணம் இருவரும் இரத்த வெள்ளத்தில் புரண்டிருப்பார்கள் ஆனால் என் வாழ்க்கையிலேயே முதல் முறையாக என் மனதில் ஒருபுது தைரியம் தோன்றியது. எனக்கு அபயமளித்து உயிர் காத்த அப்பெண்மணியை இப்போது காப்பது என் கடமையென்பதை உணர்ந்து கொண்டேன் நானும் அம்மிருக மனிதனை நோக்கிப் பாய்ந்தேன்

"ஐயோ! இதுஎன்ன?" என்று அலறிக்கொண்டே மாபூ ஓடிவந்தாள். அவள் என் கரங்களைப் பற்றியது எனக்கு வந்தவம் தெளிந்ததுதான் என்று முதலில் எண்ணினேன். பின்புதான் உண்மை விளங்கியது. அந்தப் பாவியனின் கத்தி என் புஜங்களில் தேறியதால் ஏற்பட்ட காயத்திலிருந்து ரத்தம் ஆறாக வழிந்தோடிக் கொண்டிருந்தது. போரின் சின்னமாக இக் காயத்தைப் பெற்றிருந்தேன் நான். ஒரு அபலையைக் காக்கும்பொருட்டு என் ரத்தத்தைக்கூட அல்லவா சிந்தியிருக்கிறேன். ஆஹா! நர்முதைய வனப் பிரவேசத்தில் இவ்வளவு வீர பராக்ரமச் செயல்கள் புரியப்போகிறேனென்று முன்பு நான் சொப்பனம்கூடக் காணவில்லையே!

அன்பும் ஆதரவும் நன்றியும் ததும்பும் கண்களால் என்னை ஒருமுறை ஏறிட்டு நோக்கினாள் மாபூ அந்த ஒரு பார்வைக்கு உலகமே ஈடாகாது என்று எனக்குத் தோன்றியது. அவள் என் காயத்தைக் கழுவிச் சுத்தமான துணி ஒன்றைக் கட்டி முடியும்வரை தரையிலேயே உருண்டு கொண்டிருந்த யூடின் இப்போது மெதுவாக எழுந்து நின்றுகொண்டான் அவமானமும் ஏமாற்றமும் கலந்த அவ்வழகியின் பார்வையை அவனாலேயே பொறுக்க முடியவில்லை.

"ஓஹோ! நீ இன்னும் உயிருடன்தான் இருக்கிறாயா? இந்த இந்தியன் உன்னை உதைத்த உதையில் யமலோகத்தையே எட்டிப் பார்த்து விட்டு வந்துவிட்டாய்போலிருக்கிறது என்று ஏளனமாகக் கூறினாள் மாபூ. அவமானத்தால் [illegible]மடைந்த யூடின் ஒரு நிமிஷநேரம் என்னையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தான் ஆனால் அவனால் கையைக்கூட தூக்க முடியாததினால் அவன் கோபத்தையெல்லாம் வாய் வழியாகக் கொட்டினான்

"மாபூ. நான் இன்னும் சாகவில்லை. ஏன் தெரியுமா? சாகுமுன் எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது முதலில் உன்னையும் இந்த இந்தியனையும் யமலோகத்திற்கனுப்பிவிட்டு நான் மெதுவாக அங்கே வருகிறேன் ஜாக்ரதை" என்று கர்ஜித்தான் அவன் கலகலவென நகைத்துவிட்டாள் மாபூ

"யூடின் பட்ட அடியில் உன் மூளை கலங்கிப்போயிருக்கிறது என் தகப்பனார் இன்னும் உயிருடன்தானிருக்



கிழவரென்பது நினைவிருக்கட்டும். என்னையோ இவனையோ நீ தொட முயற்சித்தாலும் போதும் அவர் உன்னைச் சித்ரவதை செய்துவிடுவார். அதற்குமுன்பே உன்னைத் தீர்த்துக்கட்டுவது எனக்குப் பிரமாதமான காரியமல்ல. இந்த ஆசாமிக்கு நான் கண் ஜாடை காட்டினாலும் போதும். ஆனால் எனது பெண் மனம் இளகியதாகையால் உன்னை நான் கொல்ல விரும்பவில்லை. என் மனது மாறுவதற்கு முன்பே மரியாதையாக இவ்விடத்தை விட்டு வெளியேறிவிடு. உம்......போ. இங்கு நடந்ததெல்லாம் என் தந்தைக்குத் தெரிய வருமுன் இக் காட்டையே விட்டு ஓடினால் பிழைத்தாய். இல்லேல்........."

மறு நிமிஷம் பூடின் அங்கு காணப்படவில்லை. அவன் பைத்தியக்காரனல்ல. அந்தப் பெண் கூறுவது முற்றிலும் உண்மையென்று அவன் அறிந்ததனால்தான் வாய் திறவாமல் வெளியேறிவிட்டான். அக் காரிருளில் அவன் மறைந்த வழியே தெரியவில்லை.

மீண்டும் நானும் அவளும் தனியானோம். மறுமுறை அவளது பெரிய கண்கள் தன் அன்பு பொங்கும் பார்வையை என் மீது செலுத்தின. நடந்த சம்பவங்களெல்லாம் கேவலம் சொப்பனம்போலவே எனக்குத் தோன்றின. ஆனால் இந்த சொப்பனத்தின் நடுவே உண்மையான விஷயம் ஒன்றே ஒன்றிருந்தது. வெவ்வேறு நாடு, மதம், ஆசாரம், வாழ்க்கை நிலை இவற்றைச் சேர்ந்த எங்களிருவருக்கு மிடையில் இவ்வித்தியாசங்களையெல்லாம் கடந்த உணர்ச்சி ஒன்று நிலவியது. என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு இவ்வனராணியை அடைக்கலம் புகுந்திருந்த நான் அவளையே என் வாழ்க்கை முழுவதிற்கும் வழிகாட்டியாக அடைய விரும்பினேன். அவளும் தன் ஒப்புயர்வற்ற அன்பை எனக்களித்தாள். வாய் திறந்து எங்கள் உள்ளங்களை வெளியிட்டுக்கொள்ளாவிடினும் எங்கள் உள்ளங்கள் ஒன்றுபட்டு விட்டன என்பதை நன்கு அறிந்துகொண்டோம்.

இந்நிலையில் இரவு கழிந்து பொழுது புலர்ந்தது. பூடினின் வஞ்சநெஞ்சத்தையொத்த காரிருள் விலகியது. ஆனால் காலைக் கதிரவனின் கிரணங்கள் புறவிருளைப் போக்கினவேயன்றி அக்கொடிய பாபியனது அகவிருளைப் போக்கவில்லையென்பது அன்று நடக்கவிருந்த சம்பவங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

* * * * *

அன்று பகலில் நான் குடிசையை விட்டு வெளியே உலவப் புறப்பட்டேன். மாபூ வீட்டில் சமையல் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

இம்முறை நான் காட்டில் அலைந்துகொண்டிருந்தது பிரிந்த நண்பர்களைத் தேடியல்ல. மாபூவின் நட்பைப் பெற்றபின் நண்பர்கள் என் மனத்திரையினின்றும் மறையத் தொடங்கிவிட்டனர். "அவளது தந்தையும் எங்கள் உறவிற்குச் சம்மதம் அளித்துவிடுவாரேயானால், பின் என் நண்பர்களே என்னை வலுவில் தேடி வந்து அழைத்தால்கூட நான் அவர்களுடன் செல்ல விரும்பியிருக்கமாட்டேன். தற்சமயத்திற்கு அவளிருக்கும் அவ்வனமே எனக்குப் பூலோக சுவர்க்கம் போன்றிருந்தது.

அந்தி மயங்கும் நேரம். மாபூவின் குடிசைக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தேன். யாரோ முனகுவது போன்ற ஒரு ஓசை என் செவியில் விழுந்தது. பயப்படும் காலத்திலிருந்தே என் மனம் பல அதிர்ச்சிகளையும் தாங்கிச் சமாளித்துப் பழகிவிட்டது. எனவே நடுக் காட்டில் காற்றில் மிதந்து வரும் இக்குழலோசை எனக்குப் பிரமையளிக்கவில்லை. மெல்ல சத்தம் வந்த திசையை நோக்கி நடந்தேன்.

ஒரு ஆள் உயரமுள்ள பாம்புப் புற்றுகள் என் கண்ணுக்குத் தென்பட்டன. ஒரு புற்றினருகில் எனக்கு முதுகைக் காட்டிக்கொண்டு ஒரு மனிதன் உட்கார்ந்திருந்தான். அவனெதிரில் ஒரு பெரிய பயங்கரமான கரு நாகம் படமெடுத்தாடிக்கொண்டிருந்தது. தன்னிடமுள்ள மகுடியால் ஊதி அதை வெறி கொள்ளச் செய்துகொண்டிருந்தான். அம்மனிதன் நேரம் செல்லச் செல்ல அவன் ஊதல் பலமாயிற்று. பாம்பின் வெறியும் ஏறிக்கொண்டிருந்தது. அதை உயிருடன் பிடிப்பதற்குத்தான் இவ்வளவு முயற்சியெடுத்துக்கொள்கிறானென அறிந்துகொண்டேன். நடுவனத்தில் வந்து பாம்பைப் பிடிக்க வேண்டிய அவசியம் இவனுக்கு என்ன என்று அதிசயிக்கத் தொடங்கினேன்.

சட்டென்று பாம்பைப் பற்றிக்கொண்டான் அவன். ஆனால் மற்ற பாம்பாட்டிகளைப்போல உடனேயே அதன் நச்சுப் பல்லைப் பிடுங்கவில்லை. ஜாக்கிரதையாக அதை ஒரு துணிப்பையில் போட்டுப் பையின் வாயை இறுகக் கட்டினான்.

இவனது நோக்கம் ஏதோ மர்மமானதென்று எனக்குப் புரிந்தது. ஆனால் அது என்னவாயிருக்கக்கூடும் என்றுதான் புரியவில்லை. "நமக்கும் இவனுக்கும் என்ன சம்பந்தம்? பேசாமல் வீடு திரும்பிப் போய்விடலாம்." என்றெழுந்து புறப்படலானேன். ஆனால் அடுத்த கணம் [illegible] அவ்வெண்ணத்தை மாற்றிக்கொண்டுவிட்டேன். ஏன்?



அம்மனிதன் எழுந்து ஒரு முறை நாற்புறமும் திரும்பி நோக்கினான். இலேசாக எழுந்திருந்த மூன்றாம் பிறையின் ஒளியில் அவனை நான் அடையாளங் கண்டுகொண்டேன். அவன்தான் பூடின்!

அவன் என்னைத் தாண்டிச் செல்லும் வரையில் ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்துகொண்டேன்.

* * * * *

அவன் சென்றதும் மாபூவின் குடிசையை நோக்கித்தான். அந்தி கழிந்து இரவாகியிருந்தது. குடிசையினருகில் ஒரு பெரிய மரத்தினடியில் அவன் மறைந்துகொண்டான். அம்மரம் குடிசையின் ஒரு ஜன்னலை எதிர்நோக்கியிருந்தது. அந்த ஜன்னலுக்கு நேர் எதிரில் மற்றொரு ஜன்னல். அதனருகில் மறைந்தபடி நான் அவனைக் கண்காணித்துக் கொண்டிருந்தேன். வாயிற் கதவு திறந்திருந்தது. குடிசையினுள் எங்கும் மாபூவைக் காணவில்லை.

அவன் என்னைத் தேடித்தான் காட்டினுள் போயிருக்க வேண்டுமென யூகித்துக்கொண்டான். வேறெங்கேயும் அவள் போயிருக்கக் காரணமில்லை. இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் திரும்பி வந்துவிடுவாள். நேரம் செல்லட்டும் என்றுதான் பூடின் அம்மரத்தடியில் காத்துக்கொண்டிருக்கவேண்டும். அவன் செய்ய எண்ணியிருந்ததென்ன என்பது எனக்குத் தெரிந்துவிட்டது. அவள் வீடு திரும்பி நித்திரை செய்யும் சமயத்தில் நச்சுப்பல் பிடுங்கப்படாத அந்த நாகஸர்ப்பத்தை அவள் மீது வீசிப் பழிதீர்த்துக்கொள்ளத் திட்டமிட்டிருந்தான் அப்பாதகன். நான் உடனிருக்கும் வரை அவளுக்கு வேறெவ்விதமாகவும் தீங்கிழைக்க முடியாதென்று அவன் அறிவான். மேலும் உண்மையில் இது கொலை என்று அவள் தந்தை அறிந்துகொண்டு விட்டாரானால், பின் குற்றவாளியைக் கண்டுபிடிக்க நெடுநேரமாகாது அவருக்கு. அவர் கையில் அகப்பட்டால் பிறகு தன் கதி யாதாகுமோ என்ற அச்சம் ஒருபுறம் அவனை இந்தச் சூழ்ச்சியைச் செய்யத் தூண்டியிருந்தது. காட்டில் யதேச்சையாய்த் திரியும் பாம்பொன்று கடித்ததனால் மரணம் கிட்டியது என்று அவர் நினைத்துக் கொள்ளட்டுமென்பதுதான் அவனது யோசனை. இம்மலை மனிதனிடம் இந்தளை தந்திரம் இருப்பதைக் கண்டு வியந்தேன்.

ஆனால் அவனைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொல்ல வேண்டுமென்பது என் விருப்பம். என் பிஸ்டலில் ஆறு குண்டுகளிருந்தன. இந்தக் கேவலமான, கோழைத்தனமான செயலை அவன் செய்யப்போகும் தருவாயில் மேற்படி குண்டுகளை அவனுடலில் ஏற்றி விடவேண்டும். எதிர்பாராத முறையில் தன் உயிர் காக்கப்பட்டதை அறிந்தால் மாபூ எவ்வளவு வியப்படைவாள்! என் பால் அவள் காதல் எவ்வளவு அதிகரிக்கும் என்றெல்லாம் எண்ணி இறுமாந்து நின்றேன். கிட்டத்தட்ட நடுநிசியாய் விட்டது. இன்றும் அவளும் வீடுதிரும்பவில்லை, அவள் தந்தையையும் காணோம்.

தூரத்தில் ஒரு தீவட்டியின் ஒளி தெரிந்தது. அது அவள்தானென்று கண்டுகொண்டேன். சீக்கிரத்திலேயே தீவட்டி குடிசையினருகிலும் வந்துவிட்டது. ஆம் அவளேதான். அவள் முகத்தில் காணப்பட்ட ஏமாற்றத்தையும் ஏக்கத்தையும் நன்கு கவனித்தேன். அது என்னைக் காணாததனால் ஏற்பட்டதாய்த்தான் இருக்கவேண்டும். அந்த நிமிஷமே ஓடிச்சென்று அவளை ஆலிங்கனம் செய்துகொள்ளலாமா என்றுகூட எண்ணினேன். ஆனால் நிலைமையின் கடுமை என் நினைவுக்கு வந்ததும் இன்னும் உஷாராகிவிட்டேன்.



தாம்பத்யப் படகு இன்பமாகச் செல்லக் கேட்பானேன்? ஜிலு ஜிலு வென்று விசும் கடற்காற்றின் ஸ்பரிசம் பட அந்தப்புது வீட்டில் கொட்டு கொட்டென்று இரவு ஒன்பது வரையில் தனியே உட்கார்ந்திருப்பாள் முதல் ஒரு மாதம் அம்மா இருந்தாள் எப்படியோ பொழுது போய் விடும்

"அடி பொன்னே. எப்போதும் உன் அகமுடையானை இப்படி பத்து பதினொன்று என்று வரச் சொல்லாதே......வேளா வேளையிலே தூங்கினு தான் உடம்பு நன்னயிருக்கும்" என்று அம்மா சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

அந்தஸான்தோம் கடற்கரையோரமாக உலாவ வேண்டும் என்ற நீண்ட ஆசை கருநாகம் படமெடுப்பது போல் இதயத்தில் சீறிச் சீறி எழும்பியது. ஒரு நாளாவது ஹும்....

அந்த ஞாயிறும் அவள் மூன்று மணிக்கே வந்து விடுவாள். கையிலே தோல் பாக்...மெல்லிய வாயில் புடவை. 'மிஸ்டர் சுந்தரம்' மிஸ்டர் சுந்தரம்' என்று அந்த பல்லின் வெண்மை தெரிய அவள் பேசுவது தங்கத்தின் உள்ளத்தில் பொருமைத் தியை வளர்த்தது.

"ஒரு நாளாவது சீக்கிரம் வரக் கூடாதா? ஆபிஸை சாத்திப் பூட்டிண்டு தான் வரணுமா?" என்று ஒரு நாள் அடக்கிவைத்த ஆத்திரம் தீரக் கேட்டுவிட்டாள்.

ஆனால் சாந்தமாக சுந்தரம் "இல்லே தங்கம்...இப்ப கஷ்டப்பட்டாதானே நாளை சுகப்படலாம். ஆபிஸ் மானேஜர் போரவரையிருந்து, ஒத்தாசையாக சில 'பைல்' களைப் பார்க்க வேண்டியிருக்கும் இன்றைய இந்த உழைப்பு நாளை என்னை அஸிஸ்டண்ட் மானேஜராக உயர்த்திவிட்டால்....... இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி அஸிஸ்டண்ட் மானேஜர் நான்; நீ மிஸஸ். கார்—ரேடியோ வாங்கலாம். எலக்ட்ரிக்லைட்டில் கூட நீ ஜம்னு...." என்று கூறுவான்.

"அப்போ எனக்கென்ன இருக்கு..." என்று வெறுப்பையே காட்டுவாள் தங்கம்.

அன்றைய நாயிறு எப்படியாவது இரண்டுமணிக்கே அந்த ரமா வராததற்கு முன்னமேயே வெளியே கிளம்பி விட ஏற்பாடு செய்வதென்று முடிவு செய்திருந்தாள் தங்கம். பகலில் ஒரு சிறு தூக்கம் தூங்கிமுடித்த போது டங் என்று மணியொன்றடித்தது. கூடத்தில் ரமாவும், சுந்தரமும் பேசிக் கொண்டிருந்தார்கள். மெள்ள எழுந்து பைப்படிக்குப் போனாள் தங்கம்.






"என்ன மிஸ்டர் சுந்தரம். உங்கள் மிஸஸையும் கச்சேரிக்கு வந்து விடச் சொல்லுங்கள்." "என்றாள் இவ்வார்த்தை தங்கத்துக்கு ஸல்பியூரிக் அமிலத்தை ஊற்றியதுபோலிருந்தது

சுந்தரமூர்த்தி, ரமா இன்னும் சிலர் போர்டு மெம்பர்களாக உள்ள சங்கீத சபாவில் அன்று கச்சேரி. மாதம் ஒரு கச்சேரி தவருது நடக்கும். அதற்கு ஆளைப்பிடிக்க மீதி ஞாயிற்றுக்கிழமைகளில் இவர்கள் இருவரும் சுற்றுவார்கள். சுந்தரமூர்த்திக்கு இந்தச் சேவையில் வாராந்திர கஷ்ட உழைப்புக்கு நிம்மதி கிடைத்தது.



அப்படியே சுட்டெரிந்து விடுபவன்போல் பார்த்தான்.

விடுக்கென்று சென்று விட்டான். இந்த நிலையை தங்கம் எதிர்பார்க்கவில்லை. கணவன் தன்னிடம் வந்து கெஞ்சிக் கெஞ்சிக் கூப்பிடுவான் என எண்ணினுள்.

ஆனால் நேர்மாருன இச் சம்பவம் அவள் ஆத்திரத்தையும், பிடிவாதத்தையும் அதிகம் வளர்த்தது கணவனின் போக்கு தன்மீது பிடித்தமில்லாத நிலைக்குப் போகிறதென எண்ணினுள்.

அன்றைய கச்சேரிக்குத் தன் நண்பர்கள் அனைவரும் தம்பதி சமேதராய் வருவதைக் காணும்போது சுந்தரமூர்த்திக்கு உள்ளத்தில் கோபத் தீ புகைந்தது.

கச்சேரிக்குக் கிளம்பும் போது சுந்தரமூர்த்தி தங்கத்தைப் பார்த்து 'மூன்றரைமணிக்கு இந்தப்பக்கம் காரில் வருவேன். தயாரா டிரஸ் பண்ணிண்டு இரு. டிலே பண்ணதே' என்று கூறிவிட்டுக் கிளம்பினுன்.

'நான் எதற்காம் கச்சேரிக்கு எல்லாம்....அவள் போதாதா? மூன்றரை மணிக்குத் தயாராக இருக்க வேண்டுமாம்!... இப்பவே கூட அழைத்துச் சென்ருல் என்னவாம்?' என்று எண்ணியது மனம். அந்த எண்ணம் கோபத்தை வளர்த்தது.

மூன்றுமணிக்கு டக்கென்று சுந்தரமூர்த்தி வந்தான். அப்பொழுது தான் அடுப்பைச் சாணித்தால் மெழுகிக் கொண்டிருந்தாள் தங்கம்.

"என்ன நீ இன்னுமா தயாராகவில்லை" என்று பரபரப்புடன் உள்ளே நுழைந்தான். தங்கம் பதிலே பேசவில்லை.

"நீ வரப் போவதில்லையா?" என்றான் கொஞ்சம் உரத்த குரலில் சுந்தரம்.

"எனக்கெதுக்கு கச்சேரி..." என்றாள் மெல்லிய குரலில். ஆனால் ஆத்திரமும் தொனிக்க,

"ஏன்... உனக்கு எதுக்கு கச்சேரின்னு எனக்கொன்றும் புரியவில்லையே... இப்ப வரப் போறியா இல்லையா..."

"நான் வரவில்லை. நீங்கள் போங்கள்."

"அப்பொழுதே ரமா சொன்னாள். உங்க மிஸஸுக்கு இதிலெல்லாம் பிரியமில்லென்று. 'ச்சே... அவளுக்கா பிரியமில்லை அவள் பாடி. இன்னிக்கெல்லாம் கேட்கலாமே' என்றேன். அவள் சொன்னது சரிதான்..."

"அவள் சொல்லி விட்டாளோ இல்லையோ...அதுதான் வேதவாக்கு ...அவள்தான் கச்சேரிக்கு வந்திருக்கிருளே...நான் எதற்கு," என்று அர்த்தமற்றுப் பேசினுள் தங்கம்.

என்ன திமிர் அவளுக்கு என்று உதடுகள் முணுமுணுத்தன.

விளக்குகூட ஏற்றவில்லை. தெருவில் தண்ணீர் கூட தெளிக்கவில்லை.

இரவு ஒன்பது மணிக்கு சுந்தரம் கச்சேரி முடிந்து விடு வந்தடைந்தான். இருண்ட விடு அவள் எதிர்பார்த்தது தான் பதிலே பேசவில்லை. ஆத்திரத்தையும் பசியையும் அடக்கிக்கொண்டு பேசாமல் படுத்தான். தங்கத்தால் பசி பொறுக்க முடியவில்லை. சாப்பிட்டு விட்டு வந்து படுத்துவிட்டாள். சுந்தரத்தின் ஆத்திரம் இன்னும் வளர்ந்தது

மறு நாள் காலை எல்லாம் அலுவல்களும் இயந்திரம்போல் மௌனமாக நடந்தன. மேஜையின்மீது காப்பி வைக்கப்பட்டது. ஆனால் 'ஆறிப் போகிறது சாப்பிடுங்களேன்'' என்ற நல்லக் குரல் காணும்.

'வெள்ளி எடுத்து வைத்திருக்கிறதே' என்ற இன்குரல் இல்லை.

மறு நாள் சமையலுக்கு காய் கறிகாய் ஒன்றுமில்லை.

சுந்தரம் ஏதோ பெரிதும் பழக்க முள்ளவன்போல் மௌனமாகவே எல்லாம் செய்யலானான். வழக்கமாக ரமாவும் வருவாள். அவன் மௌனம் பறந்து போய்விடும். அவள் போன வுடன் மீண்டும் பழைய நிலைதான்.

தங்கத்துக்கு அழுகையே வந்து விடும்போலிருந்தது. ஆத்திர மிகுதியால் அம்மாவுக்கு ஒருகடிதம்எழுதிப் போட்டுவிட்டாள். உடனே வந்து அழைத்துச் செல்லும்படி எழுதியிருந்தாள். கடிதத்தை மேஜைமீதிருந்தபோது அசைப்பில் சுந்தரம் பார்த்துவிட்டான். 'இங்கு எனக்கொன்றும் பிடிக்கவில்லை. உன்னைப் பார்த்து எவ்வளவு நாட்களாகின்றன. வந்துவிடுகிறேன்' என்றிருந்த வரிகள் அவனையறியாமல் சிரிப்பை வரவழைத்தன. இருந்தாலும் அடக்கிக் கொண்டான்.

தங்கம் இப்படி மாறுவாளா என்பது என்று அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவளுடைய பிடிவாதம் அதிகரிக்க அதிகரிக்க, இவனுடைய கோபமும் அதிகமாகியது.

அம்மா வருவதாகக் கடிதம்வந்தது. "நான் ஊருக்குப் போகப் போகிறேன்" என்றாள். இப்படிச் சொன்னவுடன், அவர் 'எதுக்குப் போகிறாய் இப்போ' என்று கோபத்தை மறந்து விடுவார் என்று எண்ணினாள்.

அதற்குப் பதிலாக "பேஷாகப் போய்விட்டு வா. நிம்மதியாக இரு" என்றான்.

தங்கம் பல்லைக் கடித்துக்கொண்டாள். ஆத்திரம் பொங்கிவந்தது. "ஆமாம்.........இன்னும் அவனுக்கு ஸ்ரீமதி ரமாதேவிக்கு ரொம்பச் சௌகரியமாச்சு... வீட்டுக்கே வந்து விடுவாள்" என்றாள்.

"சீ வாயை மூடு......போனால் போகிறதென்று இவ்வளவு காலம் பார்த்தேன்......இனி......"

"உம்...நன்னா சொல்வீர்கள் உள்ளத்தைச் சொல்லிவிட்டால் நோப்பாளம்தான். நானும் கையில் 'ஹாண்ட் பாக்'குடன் மைக் கண் மினுக்க பல்லை இளித்து வந்தால், என்னைச் சுற்றிச் சுற்றி வட்டமிடுவேள்......"

"போதுமே... உன் அபத்தத்தை நிறுத்தமாட்டையா...உன் அம்மா வந்து போகிறதை இப்பவே தொலை. பொறுமை இருக்கறவரை உருப்படப் போறதில்லை..." என்றான் சுந்தரம். அவனுக்குக் கோபம் அவ்வளவாக வரவில்லையென்றாலும், தங்கத்தின் ஆத்திரத்தையெண்ணி அதை அடக்க விரும்பிடது.

தங்கத்துக்கு அழுகை வந்துவிட்டது. ஆத்திரமும் அழுகையும் கலந்த குரலில், "போறேன்...போய் தொலையறேன்...திரும்பி வந்தால் கேளுங்களேன்...ரமாவுடன் குடித்தனம் நடத்துங்களேன் கெஞ்சிக் கூப்பிட்டாலும் திரும்புவதில்லை" என்றாள். குரல் உச்சஸ்தாயியிலேயே இருந்தது. சுந்தரம் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டான்.

அவள் மாமியார் வந்தாள். தங்கத்தை அழைத்துச் சென்றாள். சுந்தரம் பதிலே பேசவில்லை. ஸ்டேஷனுக்குக்கூட வரவில்லை.

ஆறு மாதம் ஓடி மறைந்து குழந்தை பிறந்த செய்தியை எழுதிப் போட்டும் சுந்தரத்திடமிருந்து பதில் வரவில்லை. தங்கத்தின் வைராக்யம் குலைந்தது. சுந்தரத்தின் மனது மாறி, தன்னை வந்து பார்க்கக் கூடாதா என்று எண்ணி உருகும் நிலைக்கு வந்துவிட்டாள்.

வெள்ளிப்பட்டி வாழ்வு அவளுக்கு அலுத்துவிட்டது. துணிந்து கணவருக்கு அவள் ஒரு கடிதம் எழுதிப் போட்டாள் நாலே வரிகள்தாம். ஆனால் நான்காம் நாள் 'விலாசதார் அந்த இடத்திலில்லை,' என்று கடிதம் திரும்பிவிட்டது! இது தங்கத்தைப் பெரிதும் கலக்கிவிட்டது வேண்டுமென்று தான் அவர் கடிதத்தைத் திருப்பியிருக்கவேண்டும் என்றுஎண்ணினாள்.

ஆனால், இரண்டு நாள் கழித்து சுந்தரத்திடமிருந்து ஒரு கடிதம் வந்தது. 'கோயமுத்தூர் முத்திரை போடப்பட்டிருந்தது.

இருபத்தைந்து தடவையாவது அதைப் படித்திருப்பாள்.

சென்னையிலிருந்து பிராஞ்சு மானேஜராக கோயமுத்தூர் வந்துவிட்டேன். என்னதான் வைராக்யமாக இருந்தாலும் நான் இதை எழுதுகிறேன் குழந்தை சௌக்யமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். இங்கே முழு வீடு பார்த்திருக்கிறேன். வீட்டிலே ஒளியில்லை கொட்டு கொட்டென்று சாயங்காலம் ஆனதும் உட்கார்ந்திருக்கிறேன்........"

என்பனபோன்ற வரிகளைப் படித்தாள். அம்மாவிடம் ஓடோடிப் போனாள் 'என்னதான் இருந்தாலும் அவர் மனசுமனசுதான்...இன்னிக்கே கோயமுத்தூர் கிளம்பலாம்' என்றாள். அவள் கண்களில் நீர் ததும்பியது.

எதிர்வீட்டுப் பையன், 'கண்ணன் மன நிலையைத் தங்கமே தங்கம், கண்டு வரவேண்டுமடி. தங்கமே தங்கமே' என்று உரத்தக் குரலில் பாடிக்கொண்டிருந்தான்.

வேதனையளித்த அந்தப் பாட்டு அவளுக்கிப்போ இன்பமளித்தது.

'கண்ணன் மன நிலையைக்கண்டு விட்டாள் தங்கம்' என்று அவள் உதடு முணுமுணுத்தது புது உலகம் அவள் எதிரே தோன்றுவது போலிருந்தது.



# பூர்விகக் கலைச்செல்வம்

ராஜி

## 14

## கட்டிடக்கலை

### நகர நிர்மாணக் கலை வளர்ச்சி

★

மதுரை, காவிரிப்பூம்பட்டினம் என்ற நகரங்களைப்பற்றிய கட்டுரைகளில் நகரங்கள் அமைந்திருந்த விதங்களைப்பற்றிச் சில படித்தோம். சங்க காலத்திலேயே நகர நிர்மாணமும் கிராம நிர்மாணமும் ஒரு கலையாகப் பரிணமித்திருந்தன. அக்கலைக்குரிய நூல்களையும் அறிஞர்கள் எழுதியிருந்தார்கள். அந்நூல்களில் வல்லவர்களின் உதவியைக் கொண்டே நகர்களும், பட்டணங்களும் அமைக்கப்பட்டன. மதுரைக் காஞ்சியில் 'நூலறிந்து செறிந்த நூல் வழிப் பிழையா நுண் தேர்ச்சி ஊர்' என்ற பகுதிக்கு நச்சினார்க்கினியர், 'நூலிற் சொன்னபடி அமைந்த ஊர்' என்று உரை கூறியிருப்பது இவ் உண்மையைப் புலப்படுத்தும்.

நகரைச் சுற்றிச் சோலைகள், புறச்சேரிகள், அறச்சாலைகள், அகழி, மதில், வீதிகள், கடைத்தெருக்கள், மன்றங்கள், கோயில்கள், அரண்மனைகள், வனங்கள், பொய்கைகள் முதலியன அமைந்து நகருக்கு அழகையும் பெருமையையும் அளித்துவந்தன.

நகரமைப்புக்கு ஏற்ற இடங்களை ஆற்றோரம், கடலோரம், மலையருகு என்று பொறுக்கி எடுத்தார்கள். மன்னரின் இயல்பு சுக வாழ்வுக்குத் தக்கதாக இருக்கிறதா என்று ஆராயப்பட்டது. தெருக்களெல்லாம் விசாலமாகவும் போக்குவரவுக்குத் தக்கவைகளாகவும் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு தொழிலாளரும், ஒவ்வொரு தெருவிலும் வசித்துவந்தபடியாலும், அவர்களின் அந்தஸ்தும் வாழ்க்கை நிலையும் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருந்ததாலும் ஒரு தெருவிலுள்ள வீடுகள் அநேகமாக ஒரே மாதிரியாக இருந்தன. பணக்காரர்கள் மிக மேன்மையான வீடுகளில் குடியிருந்தார்கள். நாடக மடந்தையர்கள் ஒப்புயர்வற்ற இல்லங்களில் வாழ்ந்துவந்தார்கள். அரண்மனைகளின் அமைப்பு கண் கொள்ளாக் காட்சியாய் இருந்தது. தெய்வலோக வாழ்க்கை இப்படி இப்படி இருந்ததென்று நூல்களில் வருணித்திருந்ததால், அத் தெய்வலோக வாழ்க்கையைப் பூமிக்குக் கொண்டுவர வேண்டுமென்ற அவாவும், முயற்சியும் மக்களிடையே அதிகமாக இருந்தன. மயன் என்றவன் ஒரு தெய்வத் தச்சன். அவன் பெயரால் கட்டிடக் கலை நூல்கள் எழுந்தன. மிக அழகான கட்டிடங்களை மயனே வந்து கட்டினான் என்று அவர்கள் சொல்லத் தொடங்கினார்கள். தச்சர்களும், கொத்தர்களும், சித்திரக்காரர்களும், சிற்பக் கணிதம், சோதிடம் முதலிய பல கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். அக்காலத்தில் அரசியல் மிக உன்னத நிலையையடைந்திருந்ததால், தமிழகம் பல அன்னிய நாடுகளோடு உறவு கொண்டிருந்தது. அந்த அந்த நாட்டுக் கலைஞர்களும் இங்கே வந்து தங்கள் கலையறிவைத் தமிழர்களுக்கு ஊட்டினார்கள்.

மகத வினைஞரும்,
மராட்டக் கம்மரும்,
அவந்திக் கொல்லரும்,
யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர்
தம்மொடு கூடி.

என்று மணிமேகலையிற் கூறியபடி பல வேற்று நாட்டுக்கலைஞர்களும் தமிழகத்திற் புகுந்து தத்தம் திறமைகளைத் தமிழர்க்குக் கற்பித்து வந்தார்கள்.

யவனத் தச்சரும்,
அவந்திக் கொல்லரும்,
மகதத்துப் பிறந்த
மணிவினைக் காரரும்,
பாடலிப் பிறந்த
பசும்பொன் வினைஞரும்,
கோசலத் தியன்ற
ஓவியத் தொழிலரும்,
வத்த நாட்டு
வண்ணக் கம்மரும்

என்று பெருங்கதை மேலே குறித்த செய்தியை விளக்கிச் சொல்கிறது. குச்சரக் குடிகை என்ற ஒரு கோயில் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்தது என்று கூறப்படுகிறது. இது கூர்ச்சர தேசத்துப் பணியமைந்த ஒரு சிறிய கோயில். கூர்ச்சரதேசம் சிற்பத்திற் பேர்பெற்றிருந்தது. இப்படிப் பல நாட்டுக் கலைகளின் கலப்பு மிக நன்கு அமைந்திருந்ததால் அக்காலத்துத் தமிழ் நாட்டுக் கட்டிடங்கள் மிக மேன்மையுற்றிருந்தன.

### கட்டடங்கள்

கட்டடங்கள் பெரும்பாலும் சுட்ட செங்கல்லாலும் சுண்ணாம்பாலும் கட்டப்பட்டிருந்தன. உத்தரங்கள், கதவுகள் போன்றவை வயிரமேறிய மரங்களால் ஆக்கப்பட்டிருந்தன. இரும்புத் தாழ்ப்பாள்களும், பொன், வெள்ளி, இவற்றால் செய்த ஆணிகளும், செம்பினால் அமைந்த சுவர்களும் கட்டப்பட்ட செய்தியை ஆங்காங்கே நூல்களில் கேட்கிறோம். செல்வவான்களின் வீடுகளில் பல வகை இரத்தினங்களமைந்த சுவர்ப் பத்திகளும், தூண்தலைகளும் அமைக்கப்பட்டன. சுவர்களில் வெள்ளைச் சுண்ணாம்பு பூசப்பட்டு, அதன்மேல் சித்திரங்கள் எழுதுவதும் உண்டு.

## வீடுகள்

குறுந்தொடை நெடும்படிக்கால்,
கொடுந்திண்ணை, பல்தகைப்பின்,
புழை வாயில், போகு இடைகழி,
மழைதோயும் உயர் மாடத்து

என்று பட்டினப்பாலையில் கூறிய படி பெரிய வீடுகளில் வீதியிலிருந்து வீட்டினுள் ஏறுவதற்குப் பல குறுகிய படிகளும், வளைந்த திண்ணைகளும், பல கட்டுக்களும், சிறிய வாசலும், பெரிய வாசலும், பெரிய இடைகழிகளும் (ரேழி) மிக உயர்ந்த மாடங்களும் இருந்தன.

## மாடம்

பெரும்பாலும் மாடங்களையே உடைய வீதிக்கு மாடவீதி என்பது பெயர். 'கோடு மழை கிழியும் மதியம்போல, மாட வீதியில் மணித்தேர் கடைஇ' என்பது மணிமேகலை. இங்கு மாடங்களுக்கு மழையும், தேருக்கு மதியும் உவமையாயின. 'மலைத் தோகையன்ன மாடவீதி' என்பது பெருங்கதை. மதுரைக்கு மாட மதுரை என்ற ஒரு பெயர் உண்டு. அங்குச் சிறப்பாக நான்கு மாடங்கள் முன் காலத்தில் இருந்ததனால் அதற்கு நான் மாடக்கூடல் என்ற ஒரு பெயரும் உண்டாயிற்று. மாடம் என்பது பல மாடிகளையுடைய மாளிகைக்குப் பெயராகும்.

## ஏழு மாடி வீடுகள்

சிலப்பதிகாரத்தில் கோவலனை விட்டுப் பிரிந்த மாதவி 'நெடுநிலை மாடத்து இடைநிலத்து ஆங்கோர் படையமை சேக்கைப் பள்ளியுள் போந்தும்' என்ற தொடர்க்கு அடியார்க்கு நல்லார், உயர்ந்த ஏழு நிலத்தையுடைய மாடத்து நாலாம் நிலத்து ஒரு படுக்கையமைந்த சேக்கையிடத்தே மாதவி மயங்கியிருந்தாள்'' என்று பொருள் கூறுகின்றார். நெடு நிலை—ஏழு நிலை; இடை நிலம்—நாலாம் நிலம். நகரங்களில் ஏழு மாடிகளையுடைய மாளிகைகள் பல இருந்தன என்பதைப் பிற நூல்களிலிருந்தும் அறிகிறோம்.

இவ்வாறு ஏழுமாடிகளை அமைப்பதன் பயன் என்ன? நெடுநல் வாடை என்ற நூலில் கூதிர்க்காலத்தில் மக்கள் தேவருரைத் திண்டும்படி உயர்ந்த மேலாம் நிலத்திலே, வேனிற் காலத்தில் துயிலும் படுக்கைக்குத் தென்றற் காற்றைத் தரும் நிலத்திலிருந்துகொண்டு ஜன்னலுக்கு நேரே நின்று உலவாமல். எல்லாக் கதவுகளையும் மூடிக்கொண்டு தங்கும் (நிலத்திலே) தங்கினர்கள்'' என்று கூறப்பட்டிருக்கிறது. அல்லாமலும், சிலப்பதிகாரத்திலே கோவலனும்கண்ணகியும் நாலாம் நிலத்தில் இருந்து கொண்டு. சாளரங்களின் வழியாக தென்றல் காற்றை நுகர்ந்து, பின் அவ்விடத்தை விட்டு மேல் மாடிகளிற் சென்று ஏழாம் நிலமான நிலா முற்றத்தை அடைந்தார்களென்றும் கூறப்பட்டிருக்கிறது இவற்றிலிருந்து நாலாம் மாடி இளவேனிற்கு உரியது என்பதையும், ஏழாம் மாடி திறந்த நிலா முற்றம் என்பதையும், குளிர் காலத்தில் காற்று வீசாதபடி கட்டப்பட்ட ஒரு மாடி உபயோகிக்கப்பட்டது என்பதையும் அறிகிறோம்.

நிலா முற்றம் என்பதற்கு, நிலவின் பயனைக் கொள்ளுதற்குரித்தாய் மேலே வேயாத மேல்தளம் என்று பொருள் கூறுவர். இதற்குச் சந்திர சாலை என்ற பெயருமுண்டு வேனிற் கால நிலாவெளிச்சத்தில் இளம் பெண்டிர் இம்முற்றத்தில் நின்று கொண்டு பந்தாடுவதையும் இளந் தம்பதிகள் இங்கே உறங்குவதுமான செய்திகள் மிக அழகாக நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றன.

மேலே கூறிய விளக்கங்களால் இந்த மாடிகள் பருவகாலங்களில் தங்குவதற்கேற்றபடி அமைந்திருந்தன என்று கொள்ளலாகும் என்று தோன்றுகிறது.

## சாளரங்கள்

மாடிகளில் காற்றுப் புகுவதற்கும், மகளிர் அங்கிருந்து தெருக்களிலே நடப்பனவற்றைக் காண்பதற்கும், குறுகிய சாளரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. 'கிளி மருண்ட மென் சாயலோர். வளி நுழையும் வாய் பொருந்தி'' என்று பட்டினப் பாலையில் கூறப்பட்டிருக்கிறது. இச்சாளரங்கள் மான் கண்போல அமைந்திருந்ததால் இவற்றிற்கு மான் கண் காலதர் என்ற ஒரு பெயரும் உண்டாயிற்று.

மேலேகூறிய சித்திரமாடங்களிற் சில விலங்குகளின் வடிவில் அமைந்திருந்தன. சில மாடங்களின் முகப்புக்களில் விலங்குகளின் உருவங்கள் அமைத்து வைத்திருந்ததும் உண்டு. பரிபாடலில் சுவையுள்ள ஒரு கதை கூறப்படுகிறது.

''நீராவிழாவைக் கொண்டாடுவதற்காக மதுரையிலுள்ள ஆடவர்கள் களிறுகளின் மீதும், பெண்டிர் பிடிகளின் மீதும் ஏறி வையைக் கரைக்குச் சென்றார்கள் ஒரு களிறு தன் பக்கத்திலிருந்த பிடியைக்கண்டு காமமுற்று, மேலேயிருந்த இளைஞர் நடத்த நடவாமல் மாடங்களின் ஓரத்திற் சென்று நின்றுவிட்டது. பிடியும் காமவசத்தால் தானும் மேலே நடக்க மனமில்லாமல் மெதுவாகக் களிறு நின்றவிடத்தை நோக்கிச் சென்றது. அங்கே புலிமுகமாடமொன்றிருக்க. அதனை அப்பிடிகண்டு 'இவ்வேங்கை நம்மீது பாயும் என்றெண்ணி ஓட்டமெடுத்தது. மேலேயிருந்த பெண்கள் நடுநடுங்கிப் போய் விட்டார்கள். களிறுமேலிருந்த ஆண் மக்கள் அக்களிற்றை மெதுவாக அவ்விடத்தைவிட்டு நீக்கிப் பிடியின் அருகில் கொண்டுவந்து சேர்க்கப் பிடியும் அச்சம் நீங்கி நின்றது. மகளிரும் பயம் ஒழிந்தனர்'' அப்பாடல் பகுதியையும் கீழே தருவோம்:—

அணிநிலை மாடத்து
அணிநின்ற பாங்கர
மடப்பிடி கண்டு
வயக்களிறு மாறு ஏற்று,
நடந்து நடவாது
நிற்ப, மடப்பிடி
அன்னம் அனையாரோடு
ஆயா நடைக் களிறு மேல்
செல்வோன் பாகு அயர்,
சென்று எழில் மாடத்துக்
கைபுனை வினை வேங்கை
காணிய வெருவுற்று
மைபுரை மடப்பிடி
மடநல்லார் இரிப்புறச்
செய்தொழில் கொள்ளாது
மதிசெத்துச் சிதைதரக்
கூர்ங்கை மதமாக்,
கொடுந் தோட்டி கைந்நீவி
நீங்கும் பதத்தால்
உருமுப் போல் அதிர்ந்து
ஓங்கி முயங்கி
வயப்பிடி கால்கோத்துச்
சிறந்தார் நடுக்கம்
சிறந்தார் களைய

(பரிபாடல் 10-)

## சிற்பியர்

இத்தகைய சிறப்பு வாய்ந்த கட்டடங்களை அமைக்கும் சிற்பியர் புலவர்கள் சிறந்த குலத்தில் பிறந்தும் நற்குணம் நிரம்பப் பெற்றும், பொறுமை போன்ற நற்குணங்களை அகற்றியும், ஐந்துவிதமான கைவினைகளையும் கற்று. அடக்கமும், சரீர சுத்தமும் பெற்றும் இருத்தல் வேண்டுமெனக் கூறப்பட்டிருக்கிறது.



## கலை

கட்டடம்கட்டுவதற்குமுன் ஆராய வேண்டியவை பலவிருந்தன நெடுநல்வாடை என்ற நூலில் பாண்டியனின் அரண்மனை வகுக்கப்பட்ட வரலாறு கூறப்பட்டிருக்கிறது. அதனை வசன நடையில் கீழே தருவோம்.

''சித்திரை மாதத்தில் 10-தேதி முதல் 20 தேதிக்குள் சூரியன் (நம் நாட்டில்) உச்சிக்காலத்தில் தலைக்கு நேராகச் செல்வான் இரண்டு இடங்களில் இரண்டு கோல்களை நாட்டி, அவற்றின் நிழல் தரைபோக ஒடுகின்ற நிழலைத் தப்பாமல் குறித்துக் கொண்டு வருவார்கள். அந்த நிழல் ஒரு பக்கத்திலும் ஓடாமல் உச்சிக் காலத்தில் தன்றுள்ளேயே அடக்கிக் கொள்ளும் வேளையைப் பார்த்து. அப்படிப்பட்ட பதினைந்து நாழிகையிலே அங்குரார்ப்பணம் செய்வார்கள் பிறகு சிற்ப நூலிற் சொன்னபடி நூலைப்பிடித்து எல்லைகட்டுவார்கள். அந்த அந்த எல்லைக்கும் உரிய தெய்வத்திற்குப்பூஜைபோடுவார்கள். பிறகு அரசருடைய பெருமைக்குத் தக்கபடி மனைகள், வாயில்கள், மண்டபங்கள் இவை அமையவேண்டிய இடங்களைக் கூறுபடுத்து வார்கள் இவற்றைச் சுற்று மதில் எழுப்புவார்கள்.

## அரண்மனை வாயில்

பிறகு கட்டடம் எழும். வாசலில் நிலைவைத்து அந்த நிலையின் உத்தரக் கற்கவி என்ற தலைப்பக்க மரத்தின் நடுவே லக்ஷ்மியும். இரண்டு புறத்தும் இரண்டு செங்கழுநீர்ப்பூவும் இரண்டு பிடிகளுமாகச் செதுக்குவார்கள். கதவுகள் வலிய இரும்பாணிகளாலும், பட்டங்களாலும் வலுவாக இறுக்கப்படும். கதவுகள் இரட்டைக் கதவுகளாகச் செய்யப்படும். அவற்றிற்கு வலிய தாழ்ப்பாள்கள் இருக்கும் அக்கதவுகள் மிக வலிமையாகச் செய்யப்படும் அந்த நிலையின் உயரம் வெற்றிக்கொடிகளோடு யானைகள் புகுந்தக்கதாயிருக்கும். நிலையின்மேல் வெண் சிறு கடுகையும் நெய்யையும் அப்புவார்கள்.

## அரண்மனைப் பகுதிகள்

இவ்வாறு நான்கு திசைகளுக்கும் நான்கு வாயில்கள் உண்டு இந்த வாயில்கள் கோபுர வடிவாகக்கட்டப்படும். வாயிலைத் தாண்டியவுடன் ஒரு முன் கடையும் மிக அகலமான முற்றமும் இருக்கும். முற்றத்தில் மணல் பரப்பியிருப்பார்கள். அங்கே மான்களும் அன்னப்பறவைகளும் துள்ளித் திரிந்துகொண்டிருக்கும் முன்கடை. திருமகள் நிலைபெற்ற குற்றமற்ற இடம் எனச் சொல்லப்பட்டிருக்கிறது அரசரைக் காண வந்த சிற்றரசர்களும், பிரபுக்களும் கையுறைகளுடன் காத்திருக்கும் இடம் இதுவாகலாம். அன்றியும் அரசர்க்கு அளக்க வேண்டிய திறைப் பணங்களையும் செலுத்த வேண்டிய இடம் இதுவே போலும். ஆகவே திருமகள் வீற்றிருந்த இடம் என்று கூறப்பட்டிருக்கிறது

முற்றத்தைத் தாண்டிய பிறகு குதிரைகள் கட்டப்படும் லாயங்கள் இருக்கும். இக்குதிரைகள் அரசர்க்கு உபயோகப்படுவன. அக்குதிரை லாயங்களை ஒட்டி, மேல் மாளிகைகளிலிருந்து மழைக் காலத்தில் மாடிகளிலும், கூரைகளிலும் பெய்யும் மழை நீரை கீழே கொண்டு கொட்டும் பெரிய ஜலதாரைக் குழாய்கள் கட்டப்பட்டிருக்கும். இவையாவும் அரண்மனையின் முன் புறங்களாகும் (''நெடுநல்வாடை'')

அரண்மனை பல கட்டுகளை உடையது. அவை ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டிருக்கலாம் மலைகள்போல பல வகை மாடங்கள் அங்கே கட்டப்பட்டிருக்கும்: கூரையின்மேலே கொடிகள் கட்டப்பட்டிருக்கும் 'இந்திர உலகமோ' இது என்று கண்டவர்கள் வியக்கும்படியாக அவற்றின் காட்சி இருக்கும். மலை, காடு, கடல். வயல் என்று சொல்லப்பட்ட நால்வகை நிலங்களின், காட்சிகளையும் அங்கே காணலாம். இவை அரசர்கள் தம் உரிமைச் சுற்றங்களுடன் விளையாடுவதற்காக அமைந்த இடங்கள்.

## ஓர் அரண்மனை

ஓர் அரண்மனையின் வருணனையை கீழே காண்போம்:— வட்டமான அரண்மனை அதனைச் சூழ்ந்து பெரிய மதில்: வாயில் மாடம். உள்ளே பொய்யாக அமைக்கப்பட்ட பொய் பூமி: இது காவலாளிகள் பதுங்கியிருக்கும் இடம் போலும்: எந்திர வாவியும் அதனைச் சூழ்ந்த சோலையும்; இளமரச்சோலை; அந்தப்புரம், படைக்கலக்கொட்டில்; இதற்கு அருமையான காவலுண்டு. அதனருகே தானியக் களஞ்சியங்கள்: பெருவாயில்கள்; சிறு வாயில்கள்; சபாமண்டபம்: பல மாடங்கள்; தெய்வத்தானங்கள், குதிரைப் பந்தி; யானைக் கொட்டில்; படைவீரர் இருக்கும் இடங்கள், மயில் விளையாடும் சுண்ணாம்பால் கட்டப்பெற்ற செய்குன்றுகள்; இருட்டறை: முதலியன.

## அந்தப்புரம்

அந்தப்புரம் கருப்பக்கிரகம் என்றும் சொல்லப்படும் 'கருவொடு பெயரிய காண்பு இன் நல் இல்' என்று இதனைப் பத்துப்பாட்டு கூறுகின்றது இதனுள் ஆண் மக்கள் நுழைய முடியாதபடி அரிய காவல்கள் அமைந்திருக்கும்: பல அறைகளிலிருந்தும், அங்கெல்லாம் இருளே சூழ்ந்திருக்குமாதலால் இரவும் பகலும் சோலைகளிலக்குகள் எரிந்த வண்ணமாகவே இருக்கும் கட்டிடங்கள் மலைகள்போல உயர்ந்து நிற்கும். சுவர்கள் வெள்ளி போன்ற சாந்தால் பூசப்பட்டும், தூண்கள் நீலமணியால் செய்யப்பட்டவைபோல கருத்தும் திரண்டும் நிற்கும். சுவர்களிலே பல சித்திரங்களும் கொடிகளும் எழுதப் பெற்றிருக்கும்.

## கன்னியாமாடம்

கன்னிப் பெண்கள் இருக்குமிடத்தைக் கன்னியாமாடம் என்பர். சந்திரகாந்தக் கல்லாற் செய்த நிலமும், பொன்னாலமைந்த சுவரும், இரத்தினங்களால் தூண்களும், பசும்பொன் வெள்ளி பளிங்கு பவளம் இவற்றால் வேண்டிய இடங்களிற் பதித்துக் கட்டப்பட்ட கன்னியா மாடமொன்று சீவகசிந்தாமணியிற் குறிக்கப்படுகின்றது

இந்த மாடம் வெள்ளிக்கிழமையும், திருதியையும் உத்திரட்டாதி நட்சத்திரமும், சிங்க லக்னமும் கூடிய முகூர்த்தத்தில் தொடங்கப்பெற்றது. பதினாயிரம் பேர்கள் இதனைக் கட்டமுடித்தார்கள். அவர்கள் நூல்களிற் கூறியபடி தலம் அமைத்து முடிவில் பொன் தகடுகளைப் போட்டார்கள். தூண்கள் பொற்குடங்களைக் கோத்தாற்போலச் செய்யப்பட்டன. தூணுக்கும் உத்தரத்துக்கும் நடுவேயுள்ள இடம் போதிகை என்று சொல்லப்படும். இதுவும் குடவடிவாய்ப் பண்ணப்பட்டது. பவள உத்தரமும், பளிங்குக் கைமரமும், வெள்ளிக் கூரையும், பொன் சுவர்களும் அமைக்கப்பட்டன



பார்மோஸாவின் தலைநகரான 'தாய்வான்' என்ற இடத்தின் தோற்றமே இந்தப்படம். சீனாவின் தேசீயவாதிகள் இங்குதான் தங்கள் தலைமைக் காரியாலயத்தை வைத்துக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாவை பாவை யிருக்குமிடம்
பளிங்குச் சுவரியற்றி,
கோவைகுளிர் முத்தினியல்
கோதையொடு கொழும்பொன்
மாலையொடு பாலைதலை
மணந்துவா நாற்றி
ஆலையாமி தோவியர்கட்
கெள்ளவணி யமைத்தார்

என்றபடி. கன்னிப்பெண் இருக்குமிடம் பளிங்குச் சுவர்களையுடையதாகி, முத்துக்கோவைகளும், பூமாலைகளும், ஜரிகை மாலைகளும், தலைபொதுத் தொங்கப்பெற்று பல சித்திரங்களும் அமைந்து விளங்கிற்று. மண்டபங்களில் தொங்கும் பொன்னால் செய்த தூக்கு மாலைகள் காற்றடித்து ஒதுங்கும்போது மின்னல்போல் வீசின. முத்துக்கள் மணல்போலத் தரையிலே பரப்பப்பட்டிருந்தன. மண்டபத்தின் நடுவிலே ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. சுவர்களில் எழுதப்பட்டிருந்த பறவைச் சித்திரங்கள் சித்திரக்காரிகளுக்கே வியப்பைத் தரும்; அவற்றின் பகைப் பறவைகள் அவற்றைக் கண்டு அஞ்சி 'இவை நம்மை விழுங்கிவிடும்' என்றெண்ணி ஓடிவிடும். அம்மாடத்தின் மேல் கொடி ஆடுவது தனக்கு நிகரில்லை யென்று அது உலகுக்கு அறிவிப்பது போல விருக்கும். (ஜீவகசிந்தாமணி)

## சுதை வேலை

சுண்ணாம்பாலேயே உருவங்களும், கண்களைக் கவரும்படியாய்ச் சமைக்கப்பட்டு வீட்டு முன்புறங்களில் வைக்கப்பட்டிருந்த செய்தி மணிமேகலையிலிருந்து தெரிய வருகிறது. புகார் வீதிகளில் செங்கற்களால் கட்டப்பட்ட உயர்ந்த வீடுகள் தோறும், தேவர் முதலாக எல்லாவகைப்பட்ட உயிர்களுக்கும் உவமம் காட்டி சுண்ணச் சாந்தால் சிற்பாசாரிகள் உருவங்களை இயற்றியிருந்தார்கள் என்று மணிமேகலை நூலில் பலர் வளம்புக்க காதை கூறுகிறது. அந்நூலுக்கு வெகுகாலம் முன்னமே தோன்றிய மதுரைக் காஞ்சியிலும் இச்செய்தி கூறப்படுகிறது.

பிற்காலத்துப் பாட லொன்றில் சுண் சுதைக் கூட்டும் செய்தி,

"அரைத்த சுண்ணாம்பை வெல்லச்சாறு விட்டு நன்முயக் குழைத்துச் செங்கலும் அடுக்காய்ப் பரப்பிக் கடுக்காயொடு ஆமலகம் அரிய தான்றிக்காய் உழுந்து ஒருக்கால் இடித்து நன்னீரினில் ஊறிய கடும்சாறும் விட்டு ஊழிகாலங்களிலும் அசையாத வச்சிரக் காரையிட்டு" என்றிவ்வாறு காணப்படுகிறது. (மதுரைத் திருப்பணி மாலை)

## கலைச் சிறப்பு

இவ்வாறு உயர்ந்தோர் வாழும் மனைகளைக் கலைமுறைப்படியும் அழகு ததும்பவும், செல்வத்தை அளவில்லாதபடி செலவிட்டும் அமைத்திருந்தார்கள். கோயில்கள், குளங்கள், கிணறுகள் இவைகளை அமைப்பதற்கும் சாஸ்திரங்கள் இருந்தன. சிறிய குடியிருப்பு வீடு முதல் மிகப் பெரிய அரண்மனை வரையில் சாஸ்திர முறைப்படியே அமைந்திருந்தன. காவியங்களிற் கண்ட வருணனைகள் உண்மையின் வரம்பைக் கடந்திருக்கக் கூடுமாயினும், அவை முற்றிலும் கற்பனைகளல்ல. "கஞ்சகாரர், செம்பு செய்குநர், மரங்கொல் தச்சர் கருங்கைக் கொல்லர், கண்ணுள் வினைஞர் (சித்திரகாரி) மண்ணீட்டாளர் (சுதை வேலைக்காரர்) பொன் செய் கொல்லர், நன்கலம் தருநர், துன்னகாரர், தோலின் துன்னர் (செம்மார்)" முதலிய கலைஞர்களும் பிறரும் தத்தம் தொழில்களில் சிறப்படைந்திருந்ததோடு சம்பந்தப்பட்ட பிற கலைகளிலும் வல்லவர்களால் மனமொத்து உழைத்து அருமையான கட்டடங்களைக் கட்டி வைத்தார்கள். இருபதாம் நூற்றாண்டாகிய இன்று மக்கள் அனுபவித்து வரும் இன்பங்களுக்குக் குறையாத இன்பத்தை அக்கால நம் முதாதைகள் தர்ம வழியிலே பெற்றுச் சுக வாழ்வை அடைந்து வந்தார்கள்.






# ஓங்கோல் மாடுகளின் வளர்ப்பு ஸ்தலங்கள்

ஒரு நாட்டின் விவசாய முன்னேற்றத்திற்கு அடிப்படை, பூமி வளமும் கால்நடை விருத்தியுமே ஆகும். கால்நடைகள் நல்லவைகளாக இருக்க மேய்ச்சல்தரை வசதியும் குடிதண்ணீர் ஏராளமாக இருப்பதும் முக்கியம். இவ்விரண்டு தேவைகளும் நன்கமைந்திருப்பதே விசேஷமான ஜாதியாகிற ஓங்கோல் கால்நடைகள் உற்பத்திக்கு ஆதாரம். நிலம், நீர் வசதிகளின் அமைப்பும் அவற்றின் பயனும் இக்கட்டுரையில் சுருக்கமாக விவரிக்கப்படும்.

பெயர்பெற்ற ஓங்கோல் கால்நடைகள் உண்டாகிற பிராந்தியத்து முக்கிய பூமிகள் கருப்பு நிறமுள்ள களிமண் தரைகளும் காட்டாறுகள் வெள்ளப் பெருக்கில் அடித்து வந்து ஒதுக்கின மணல் நிலங்களும் ஆகின்றன. இக்காட்டாறுகள் வளைந்து வளைந்து போகையில் கட்டுக்கரைத் தண்ணீரில் நிறைந்து மூழ்கியும், தண்ணீர் குடித்தும் கால்நடைகள் கன்று வரை பயன்படுகின்ற பெரும் பரவலான தரைகளில் நல்ல புல் வளர்ந்து மேய்ச்சலுக்குப் பெரிதும் உதவுகிறது. ஏராளமான நல்ல புல் வளரும் மேய்ச்சல் தரையும் நல்ல குடிதண்ணீர் வசதியும் அமைந்திருப்பதே உயர்ந்த ஜாதி கால்நடைகள் இங்கே உண்டாவதற்கு முக்கிய காரணம்.

மேலே சொல்லப்பட்ட காட்டாறுகளின் இரு பக்கத்திலும் அநேக கிராமங்கள் உண்டாகி, கால்நடை அபிவிருத்தி வேலை மேற்பட்டிருக்கிறது. கண்டமுடி, சப்பிலிபாடு, கோடிபாடு, வேலூரு, சந்தேபாடு என்பன இப்படிப்பட்டவற்றுற் சில.

மாடு வளர்ப்பாளர் தனித்தொழிலாயில்லை-பயிர் விளைக்குடியானவர்களே கால்நடைகளையும் விருத்தி செய்கிறார்கள். தங்களுடைய விளைச்சல் பூமிகளை உழுது பண்படுத்துவதற்காகவும், பிற பிராந்தியங்களில் விற்பனைக்காகவும் கால்நடைகளை வளர்த்துப் பராமரிக்கிறார்கள். முக்கியமாக வெல்நாடு என்று சொல்லப்படுகிற பல்லாரி, அனந்தபுரம், கடப்பை, கர்நூல் ஜில்லாக்களில் இந்த வர்க்கத்திற்கு கிராக்கி அதிகம்.

மானை என்ற வகை ஜாதிமக்களும் மாடு வளர்ப்புத் தொழிலைக் கையாளுகிறார்கள். குடியானவர்களிடமிருந்து ரண்டு மூன்று கன்றுகளை விலைக்கு வாங்கி வளர்த்துப் பால்கறவை மாடாக சென்னை வியாபாரிக்கும் பின்னும் விற்றுப்போடுவான். தனிப்பட்ட ஒன்றிரண்டே யாகிற இவை வீட்டில் கட்டிப்போட்டு வளர்க்கப்படும். ஏராளமான உருப்படிகள் வைத்திருக்கும் பெரிய குடித்தனக்காரன், மேய்ச்சல் காடுகளிலேயே அவற்றை மேயவிட்டு வைப்பான். பசு மாடுகள், கிடாரிகள், காளைக் கன்றுகள் மாத்திரம் மேய்ச்சல் தரைகளில் மேயவிடப்படும். வேலைசெய்கிற காளை மாடுகள் வீட்டிலேயே கட்டுத்தரையில் கட்டப்பட்டு தீனி கொடுத்துப் போஷிக்கப்படும்.

பயிர் விளை காலங்களில் இக்கால்நடைகள் கிராமங்களுக்கு ஓட்டப்பட்டுக் கொட்டாய்களில் அடைக்கப்படும். பகலில் வைக்கோல், சோளத்தட்டுப் போர்களின் சமீபத்தில் இருக்கும் கூரைக் கொட்டகையில் இவை விடப்பட்டிருக்கும். இரவில், பூமிகளில் நிறுத்தி எருச் செய்கை வகையில் பயன்படுத்துவார்கள்.

இவற்றின் முக்கிய தீவனம், சோளத்தட்டும், கொள்ளுச் சக்கையுமே. முன் மழைகளின் உதவியால் விசாரிக்கப்படுகிற சோளப்பயிர் பூக்கும் சமயத்தில் அறுத்துக் காயவைத்துப் போர் போடப்படும்.

பில்லிபெஸரா என்ற பயறும் பயிரும் ஆங்காங்கே விளைக்கப்பட்டுப் பச்சையாக அறுத்து இவ்விதம் பருவகாலத்திற்கேற்ப, 4, 5 தடவைகள் அறுத்துப் பச்சைத் தீவனமாகக் கால்நடைகளுக்கு உபயோகிப்பார்கள்.

தலைமுறை தலைமுறையாய் அநுபவமுள்ள வம்ச விருத்தி வேலையில் நிபுணத்துவம் அடைந்தவர்கள் கால்நடை வளர்ப்பாளர். எருதை மாட்டுக்கு வேண்டிய நுட்பமான குறிகளும், பாரம் இழுக்கவேண்டிய காளை மாடுகளுக்குகந்த இலக்கணங்களும், பால்மாடுகளும் நன்கறிந்து அதன்படி கலப்புமுறைச் செயல்கள் நிகழ்த்தவும் சக்தியுள்ளவர்கள். இவர்கள். இயற்கையிலேயே இவ்வித நுட்ப ஞானம் படைத்து அநுபவத்தால் விருத்தியடைந்தவர்கள் இவர்கள்.

நீண்ட வருண்ட உடலும், நேரான மேல்பாகமும், அகன்ற சப்பையும், உயர்ந்து அமைந்த வாலும், குட்டையான தூண்போன்ற கால்களும், உரப்பான பாதமும், வளைவில்லாத செம்முதுகும், தொங்காத ஜங்குழி வந்தானமும், கருமையில் கீழ் முகமுடைய காளை மாட்டை பொலிகாளையாவதற்கு ஏற்ற ஜந்து என்பது இவர்களுடைய முடிவான உத்தேசம்.

வம்சாவளி விசேஷமும், சந்தான விருத்தி சக்தியும் மிகவும் முக்கியமானவை என்பது இவர்களுக்கு நன்கு தெரியும். அவர்கள் சாமான்யமாய் வழங்குகிற

'ஆவு பதுகு' (பசுவின் குலகோத்ரம்)

'எத்து ஸார' (பொலிகாளையின் ஏறுசக்தி)

என்கிற பழமொழி இதைக்குறித்ததே

பசுமாட்டைப் பொறுக்கையில், அதன் வம்ச விவரங்களே முக்கியமாகக் கருதப்படுவது—காளை மாட்டைப் பொறுக்கும்போது முக்கியமான விவரங்கள், சந்தான விருத்தி சக்தியும் வம்சாவளி மேன்மையும் சேர்ந்தே கவனிக்கப்படுவது—அதி மேன்மையான காளையைப் பொறுக்கியெடுக்க, பல கிராமத்து அனுபவமுதிர்ந்த நோட்டக்காரர் கூட்டமொன்று கூடி வெகு ஜாக்கிரதையுடன் ஒன்றொன்றாகத் தனி தனி, லக்ஷணக் குறிகளையும் கவனித்தும், அக்காளையின் தாய் தகப்பன், பாட்டன், பாட்டி முதலிய பிராணிகளைப் பற்றின விருத்தாந்தங்களை நன்கறிந்த மனிதரையும் சேர்த்த இந்தச் சபையோருடைய வாக்கே உறுதியானது.

த்ரோவகுண்ட, ஏடு குண்டலபாடு வெங்கடராஜு பாளையம், தொட்டவரபாடு, காராவடி முதலிய கிராமங்களில் இச்சாதி கால் நடைகள் ஏராளமாகக் காணப்படலாம். முதல் நான்கில், மாலா ஜாதியாரும் ஏழைக் குடியானவர்களும், ஒன்றிரண்டு கிடாரிக்கன்றுகளை வாங்கி வளர்த்து முன் சொன்னபடி கன்று ஈன்றபின் சென்னைப் பால் வியாபாரிக்கு விற்று போடுவார்கள். கடைசி கிராமத்தில், ஏராளமான உருப்படிகள் தக்க முறைகளில் வளர்க்கப்பட்டு விருத்தி செய்யப்படுவதால் நல்ல உயர்ந்த ரக பிராணிகள் இங்கே கிடைக்கலாம்.

வடக்கே குண்ட்லகம்மா ஆறும், தெற்கே மூசி ஆறுமாகிற இடைவெளிநாட்டில் நல்ல வண்ணம் புல் வளர்ச்சியும், குடிதண்ணீர் கிடைப்பதும் ஓங்கோல் பிரதேசத்தைத் தனிப்படுத்தும் விசேஷ விவரம் இவ்விடத்து மண் கருமண் மிச்ரமும் வண்டலும் இது பூராவும் மானவாரிப் பிரதேசம். முன் மழை காலப்பயிர்கள் சோளம், கம்பு முன்னதுமாட்டுத் தீவனப் பயிராகவும், பின்னது தான்யப் பயிராகவும், கருதப்படத்தக்கவை. பின் மாரி காலப்பயிராக மக்காச்சோளம் விளைக்கப்படும்

நல்ல பயிர் மாற்றுமுறை பின்வருமாறு:—

| | |
|---|---|
| மிளகாய் | — 2 வருஷங்கள் |
| புகையிலை | — 1 வருஷம். |
| மக்காச்சோளம் | — 1 „ |
| மாட்டுத் தீவனச் சோளப்பயிர் | — 1 „ |

சில சமயங்களில் கடைசியான தீவனச் சோளப்பயிருக்குப் பதில் பாதி விஸ்தீரணத்தில் அவுரி விதைக்கப்படுவதும் உண்டு.

முதல் வருஷம் மிளகாய்ப் பயிருக்கு மாத்திரம் எரு விடுவார்கள்.

பஞ்சையான கிழ்தர கரிசல் பூமிகளில், கொத்துக்கடலையும், கொத்துமல்லியும் சோளப்பயிருக்குப் பின் விதைத்தும் பயிராக்கப்படுவதும் உண்டு.

இவ்விடத்துப் பயிர் செய் கருவிகள் நாட்டுக்கலப்பை, விதைக்கலப்பை, களை வெட்டுப்பலுவுகள் என்பனவே.

மலிவானவையும் எளிதில் செய்துகொள்ளக்கூடினவையுமான இக்கருவிகளைக்கொண்டு தங்களுடைய சொந்த வளர்ப்புக் காளைகளினுதவியால் பூமி திருத்திப் பயிர் செய்து தானுண்டு தனக்குச் சகாயஞ்செய்த கால்நடைகளையும் நன்கு பராமரித்து வந்து நாட்டுக் கிருஷித் தொழிலை நடத்திவைக்கிற பாட்டாளியான ஏழைக்குடியானவன் வாழ்த்துக்குரியவன்.

—






# மூன்று சிநேக மணிகள்

ஸ்ரீமதி லட்சுமியம்மாள்

ஸ்ரீத்துவீரக் கவிராயரின் இரண்டாவது கதா காலட்சேபத்திலும் மூன்று சிநேகமணிகளும் பிரசன்னமாயிருந்தனர். இந்தக் காலட்சேப விளம்பரம் பின்வருமாறு அச்சிடப் பெற்றிருந்தது :

விருத்துக் குமரையன் துணை.

## சென்னை விநோத சபை விளம்பரம்

வித்வஜனர் பாடும் மெய்யா! விநோதசபைக்கு அருளும் ஐயா! சரணம், சரணம், சரணம்.

இதுவரை யாவருக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்: இதற்கு முன் பல வித்வஜனங்கள் பாடி விரும்பாதுபோல் இல்லாமல் எதோ எமது புல்லறிவினிடையே தெரிய பாஷையில் ஜொலித்தெழுந்த இந்த நவீன நள விலாசத்தை என்றுமே கேட்டிராத மலிந்த நூதன மெட்டு இராக தாள அமைப்புடன் காலட்சேபம் செய்ய முந்து வீரப்ப கவிராஜு சிங்காரிய நாம் உத்தேசித்திருப்பதால், வித்தையும் புத்தியும் சக்தியும் வாய்ந்த அறிவாளிகள் திரண்டு வந்து அறிவோடு காசும் மறவாது தந்து போவர் என்று நம்புகிறோம். மற்றவர்களும் காசு தந்துபோகலாம். மூடரும் வாழ்க; மூடமே வீழ்க!

இப்படிக்கு,
முருகதாஸ முத்துவீர மகாகவி.

• • •

காலட்சேப கதையில்: ஜாவளிகள், கீர்த்திகள், தருக்கள், இருசொல் அலங்காரங்கள் முதலியன புதுமை புதுமைகளாயிருந்ததுபோல், கதையும் '1949-மாடல்' என்று சொல்லும் அவ்வளவு புதுமையாக அமைந்திருந்தது

கதையின் ஒரு பகுதி வருமாறு :

### நவீன சாமுத்திரி காலட்சணம்

தமயந்தியின் அந்தப்புரத்திலே குறத்தி வருகிறாள். குறிசொல்ல வரவில்லை, நவீன சாமுத்திரிகா லட்சணவாதி என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறாள். "அந்த ஆசாமியைப் பார்த்திருக்கிறேன்' என்று குறத்தி சொன்னதும், "கண்கள் எப்படி?" என்று தமயந்தி கேட்கிறாள். கண்களின் வெண்ணிறப் பகுதியில் இயற்கையாகச் செந்நிறம் இல்லையென்றும், 'ஷாம்பேன்' அருந்திய பின்புதான் செந்நிறம் வருகிறதென்றும் குறத்தி குறிப்பிட்டதும், தமயந்திக்கு வருத்தமாவது அருவருப்பாவது ஏற்படவில்லை. "மது அருந்தாமலே கண்களில் வெள்ளையோடு சிவப்பும் இயற்கையாகக் காணப்பட்டால், ஆசாமி கோபக்காரனாகவும் சந்தேகப் பிராணியாகவும் இருக்கக்கூடும்" என்று தெரிந்திருக்கிறது தமயந்தியாளுக்கு.

பிறகு குறத்தியை நோக்கித் தமயந்தி, "கண்ணிமைகள் சோர்ந்து தொங்குவதுபோல் காணப்படுகின்றனவா?" என்று கேட்கிறாள்.

'இல்லை தாயே! எங்கள் குறவள்ளி ஆணை!'

'அப்படியானால் அவர் கவியுமில்லை, சங்கீதம் தெரிந்தவருமில்லையே போகட்டும், வேறு எந்தக் கலைதான் வருமோ?'

'சமையல் — கலையில் நிபுணர் அம்மா!'

தமயந்தி திடுக்கிடுகிறாள். 'எனக்குக்கூடத் தெரியாத கலையல்லவா அது? "ராஜகுமாரிக்கு அடுப்புதத் தெரியாதேன்?" என்று சொல்லிவிட்டாரே தந்தை பீம மகாராஜா!'

குறத்தியோ, 'பீம பாகம், நள பாகம் என்று கேட்டதில்லையா அம்மா? உங்கள் தந்தையாரைப் போல் நளமகாராஜாவும்......' என்று சொல்லி முடிப்பதற்குள் தமயந்தி குறுக்கிட்டு, 'அந்த பீமபாகச் சமையல்காரர் எங்கள் பீம மகாராஜா அல்ல; இனிமேல் வரப்போகும் பாரத காலத்திலே தோன்றப் போகிற பீமசேன ராஜா, இதுகூடத் தெரியவில்லையா நவீன சாமுத்திரிகா லட்சணக் கலைச் செல்விக்கு?' என்று சிரித்தாள்.

'மறந்துவிட்டேனம்மா, மன்னித்துவிடு. எப்படியும் நளபாகச் சமையல் சாப்பிடவாவது நளமகாராஜாவை மணந்துகொள்ள வேண்டியதுதான்!'

'அது போகட்டும். கண் சிறிதா, பெரிதா?'

'பெரிய கண்கள் அம்மா ஆனால் உன்னுடைய "கடலினும் பெரிய கண்கள்" போல் இல்லையம்மா!'

'என்ன குறத்தி, நல்ல முகஸ்துதி செய்கிறாயே'

'முகஸ்துதி இல்லையம்மா, நயனஸ்துதிதான்!'

'சரி, சிறு கண்ணுள்ள புருஷனை நம்பக்கூடாதே என்று நான் கேட்டேன். காது எப்படி?'

'காதுக்கென்ன? காதுக்குழாய் (Eardrum) உதவியில்லாமலே கேட்கிறது!'

'அதையா கேட்டேன்? காது நீளமா, குட்டையா?'

நீள் செவியர்தான். ஆனால் (அப்போது கழுதை கனைக்க) அதோ அந்தப் பிராணிபோல் அவ்வளவு நீண்ட செவி இல்லை!' என்றாள் குறத்தி, அந்தப்புர ஜன்னலின் வழியாகச் சிறிது தூரத்திலே இராகம் பாடிக்கொண்டிருந்த நீள் செவியனைச் சுட்டிக்காட்டியவண்ணம்.

குறத்தியின் விகடம் தமயந்திக்குக் கோபமூட்டியது. குறத்தியே சிரித்துக் கொண்டே, 'சிறு காதுள்ள சீமான்களை நம்பக்கூடாதென்றுதான், சீமாட்டியே! அவருடைய நீட் செவியைச் சுட்டிக்காட்டினேன்' என்றாள்.

அப்பால், 'அவர் கண்கள் லேசாக நீலம் பூத்த கண்கள்; நீலமலர் காற்றில் அசைவதுபோல் அசையும்' என்று குறத்தி சொன்னதும், தமயந்திக்குத் தாங்கமுடியாத சந்தோஷம் வந்துவிட்டது. 'அந்தகைய நீலக் கண்ணார் பெண்மை யழகை உண்மையாக ரசிக்கக்கூடியவர்தான்' என்று சொல்லிவிட்டு, மயில்போல் ஆடி, அன்னம்போல் நடந்துபோய், ஒரு மேஜைமேல் இருந்த அமெரிக்கப் பத்திரிகையை எடுத்து வந்தாள். 'இதில் ஜார்ஜ் பாஸ்கம் பாட் என்ற நவீன சாமுத்திரிகா லட்சண நிபுணர் எழுதுவதைப் பார். நான் சொன்னபடியே தான் சொல்லுகிறார்; என்றாள்

குறத்தியோ, 'நான் என்னம்மா கண்டேன், வெள்ளைக் காகிதத்தில் கறுப்பு மை கொட்டிய இந்தக் கோணல் வித்தையெல்லாம்?' என்று சொல்லிவிட்டு, நள மகாராஜாவின் நெற்றியில் ஜொலிக்கும் அந்த அருட் பிரகாசத்திற்கு இந்த வெள்ளை நிபுணர்களின் அறிவுப் பிரகாசம்தான் ஈடாகுமா?' என்றாள்.

இது கேட்ட தமயந்தி, அந்த நெற்றியிலுள்ள கோடுகள் திருநாறு இட்டதுபோல் குறுக்காக விழுந்திருக்கிறதா? அல்லது நாமம் இட்டதுபோல் நேரே ஊர்த்துவமாய்ச் செல்கிறதா?' என்று அறிய விரும்பினாள். நெற்றிக்கோடுகள் குறுக்கே

கிடந்தால் புருஷன் கவலைப்படுவா னும். நாமம்போல் அமைந்திருந்தால் அறிவுக்கூர்மையுடன் தர்க்கம் செய் வதில் விருப்பமுள்ளவனாக இருப் பானும்.

இந்தச் சாஸ்திரம் குறத்திக்கும் தெரிந்ததுதான் 'யாரோ ஒரு தமிழ்ப் புலவர் "நாமவேல் நளன்" என்று பாடியிருக்கிறாராம். ஆகவே நாமம்போலத்தான் நெற்றி-ரேகை களும் அமைந்திருக்கவேணும் என்று நினைப்பதாய்ச் சொன்னாள். மற்றப் படி அந்த நெற்றிப் பிரகாசத்தைத் தன்னால் நிமிர்ந்து பார்க்கவும் முடிய வில்லை என்றாள்

'நெற்றிரேகை நிமிர்ந்து கிடந்தால் தர்க்கமிடுவாரே!' என்று கவலைப் பட்டாள் தமயந்தி.

'அதற்கு நீ அஞ்சவேண்டாம் அம்மா! பெண்ணின் ஒரு நாவுக்குப் பதில் சொல்லப் புருஷனுக்கு ஆயிரம் நாவுகள் வேண்டுமே!'

'அிருக்கட்டும். அவர் நிகண்டு முழுதும் படித்திருந்தால்? எனக்குத் தெரிந்த வார்த்தைகளெல்லாம் சுமார் 600 அல்லது 700 தானே. இந்த வார்த்தைகளுக்கு எதிராக அவர் தாம் கற்றிருக்கும் நிகண்டுக் குவியலிலிருந்து வார்த்தைக் கற்களை விச ஆரம்பித்து விட்டால்?'

'அதற்கும் நீ பயப்படவேண்டாம் அம்மா! உன்னுடைய சிறு சொற் குவியலிலிருந்து வார்த்தைகளைப் பின்னிப் பின்னி, பன்னிப் பன்னித் தினுசு தினுசாக, புதுமை புதுமை யாகப் பிரயோகித்துக்கொண்டே இருக்கலாமே! நளமகாராஜாவின் வார்த்தைக் குவியல்களெல்லாம் முன்நிற்க முடியாமல் பறந்து போகுமே"

குறத்தி இப்படிச் சொன்னதும் தமயந்தி, 'அவர் புன்னகை புரியும் போது எப்படியிருக்கிறது, பார்த் திருக்கிறாயா குறப்பெண்ணே?' என்று கேட்டாள். அதற்குக்குறத்தி, 'ஏற்கெனவே அழகுத்துரை, புன்ன கையில் பொலிவு அதிகரிக்கிறது புன்னகையில் முகம் விகாரப்பட வில்லை. நல்ல எஜமானர் அம்மா' என்று பதில் சொன்னாள்

'எஜமானரா? நானல்லவா எஜ மானி? அதெல்லாம் அந்தப் பழைய தமயந்தியிடம்தான் பலிக்கும்; இந்தப் புதுமைத் தமயந்தியிடம் பலிக்காது!

இப்படித் தமயந்தி குறத்தியோடு பேசிக்கொண்டிருக்கும்போதே தந்தையான பீமராஜன்,

அன்னமே! நான்பெற்ற
மானே! தேனே!
அமிர்தமொழிப் பசுங்கிளியே!
கனியே! பாகே!
சோலைமயிலே! குயிலே!
சொல்லைக் கேளாய்!

என்று பாடிக்கொண்டே வந்து சேர்ந்தார்.

உடனே தமயந்தி குறத்தியிடம், 'என்னை ஏதோ பழைய தமயந்தி யென்றுதான் நினைக்கிறார் முத்து. தந்தையாரும் நீ வருணித்த அந்தப் பிராணநாதரும் இப்படி என்னைவிட லாகாது. நீயே தூதுபோய்த் தெரிந்து வா' என்று சொல்லி வேண்டிய அள விற்குப் பொருள் கொடுத்து அனுப்பி வைத்து 'என்ன அப்பா? நான் பழைய தமயந்தி அல்ல, நீ அப்படி யெல்லாம் கொஞ்சுவதற்கு!' என்று சொல்லிக்கொண்டே எதிர் வந்தாள்

## திருமண நடபுடல்

நள மகாராஜாவுக்குத் தன் பெண்ணை மணம் செய்து கொடுக்க விரும்பி அந்தச் செய்தி யைத் தெரிவிக்கத்தான் பீமராஜா வும் அந்தப்புரத்திற்குள் வந்தார். சாய்வு நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டுக்கொண்டு சாய்ந்தவண்ணம் தன் அருமைத் திருமகளிடம் தம் போக்கிஷம் காலியாயிருப்பது குறித் தும் ஆகவே இந்தத் திருமணம் விரை வில் நடைபெற வேண்டுமென்றும் தெரிவித்தார். புதுமைத்தமயந்திக்குக் கோபம் கோபமாகத்தான் வந்தது

'ராஜாக்களெல்லாம் ராஜ்யங்களை யும் செல்வங்களையும் துறந்துகொண் டிருக்கும் இந்த யுகத்திலே நள மன் னர் மட்டும் எப்படிச் செல்வரா யிருக்க முடியும்?' என்பது தமயந்தி யின் கேள்வி ஆனால், 'நவீன நளவிலாசம் ஏராளமான வருமானம் கொடுக்கிறது' என்று பீமராஜா சொன்னதும், தமயந்தி 'கொல்' லென்று சிரித்துவிட்டாள். குறத்தி சொன்ன 'நளபாக'த்தை நினைத்துப் பார்த்ததும், 'நளமன்னர் அந்தப் பாக சாஸ்திரப் புகழை வைத்துக் கொண்டே 'நவீன நள விலாஸம்' என்ற ஹோட்டலும் நடத்திப் பொருள் சம்பாதிக்கிறார் என்று தெரிந்துவிட்டது புதுமைப் பெண் ணல்லவா? — புதுமைப் பெண்ணு இந்தத் தமயந்தி?

திருமணம் தடபுடலாக வெகு ஆடம்பரமாய் நடைபெற்றது. லட் சம் பவுன் செலவில், ஒரு மாத விருந்துகளுடனும், வேடிக்கை கேளிக்கைகளுடனும்.

அன்னமே! என்னுயிருக்(கு)
உயிரே! மானே!

என்று நளமன்னர் பழைய மோஸ் தரில் பேச ஆரம்பித்ததும், 'ஷட் அப் ப்ளீஸ்!'' "ஹல்லோ மை டார்லிங்!'' என்று தான் இனி அழைக்க வேண்டும்' என்றாள் மண மகள். 'அந்த ரப்பர் நாக்கு இன் னும் நீளுமோ?' என்று அஞ்சி 'ஓ. 'கே. என்று மட்டும் பதில் சொல்லிவிட்டு அடங்கியிருந்தார் மணமகனார்.

'இத்தகைய நளதமயந்திகள் காட் டுக்குப் போகவில்லை, செல்வத்தை இழக்கவில்லை; ராஜ்யத்தை இழந் தார்கள் என்பது உண்மைதான். அதற்குக் காரணம் நளனின் சூதாட்டமல்ல, புதிய அரசியல் இணைப்பு முறைதான்!' என்று கதையை முடித்தார்

அன்னமே! உன்பெருமை
அறியாப் பாவி
அரும்பாவி, பெரும்பாவி
அடங்காப் பாவி;
சொர்ணமே! சூதாடத்
துணிந்த பாவி

என்றெல்லாம் நவீன நளமகாராஜா புலம்பவேண்டிய அவசியம் இல்லா மலே கதை முடிந்தது, கற்பனை கனிந்தது' என்றார் கவிராயர்.

* * * *

புதிய நளமன்னர் சூதாடவில்லை யென்று தெரிந்துகொண்டதும் குப்பம்மாளுக்கும் சந்தோஷம்தான். விஜயசுந்தரிக்கோ, புதுமைத் தம யந்தியின் நவநாகரிக மோகமும், அவள் மணப்பந்தலிலேயே மணமக னுக்குக் காட்ட விரும்பிய வழியும் மிகவும் பிடித்திருந்தன. எனினும் 'நளமன்னர் குதிரைப் பந்தயத்திற் குக்கூடப் போவதில்லையா? அதை யுமா தடுக்கப் போகிறாள் புதுமைத் தமயந்தி?' என்று பரிதாபமாய் ஒரு கேள்வி போட்டாள் கவிராயரை நோக்கி. கவிராயர் சிரித்தார்

'அது எப்படி முடியும்?' என்று, மறுபடியும் விஜயசுந்தரி கேட்க, 'அதுவும் முடிந்துபோம் இந்திய அர சாங்கம் மனசு வைத்தால்' என்று சொல்லிப் போய்விட்டார்.

---

### ஆட்டைப்படம்

★

பிரிட்டிஷ் பாதுகாப்பிலுள்ள உகந்தாவில் படத்தில் காண் பதைப்போன்ற மான் வகை கள் அதிகம். சமீபத்தில் பிலடல்பியா மிருகக் காட்சி சாலைக்கு, தாய் மானும் அதன் குட்டியும் கொண்டு வரப்பட்டதாம். காட்சி சாலைக்குவந்த மான்குட்டிக்கு இந்த இடம் புதிதாகயிருந்த தால் ஒரே திகைப்பாக விருந்ததாம். ஆனால் பக் கத்தில் தாய் இருந்தும் போது, விருந்தாளிகள் அலட்டுக் கொள்ள வேண்டுமென்று துணிச்சலாக முன்னே வந்து நின்றதாம். தாயையும் சேயையும் சேர்த்தெடுத்த படம்.





பாப்பாவுக்கு நாலு வயது நிரம்பி மூன்றாவது வயது அந்தச் சின்னஞ்சிறு தளிர்க்கை களை—நன்றாகப் பிடித்துக் கொண்டிருந்த அந்த இலைகளை விலக்கிக்கொண்டு தாய் எழுந்து நின்றாள். 'எனக்கு வேலை இருக்கிறது,பாப்பா, விடு, போகட்டும்' என்று கொஞ்சி னாள். 'நான் இங்கேயே இருக் கவா?...நான் வாசித்துக்கொண் டிருக்கவா?'' என்று கேட் டான் பாப்பா தோட்டத்திற் குப் போ, விளையாடிக்கொண் டிரு இன்று எவ்வளவு அழ காய் இருக்கிறது பார்' என்றாள் தாய்.

குழந்தாய்! சாதாரணமாகக் குழந்தைகள் எல்லாம் விளையாடு வதிலேயே விருப்பமாயிருப்பார் கள். உனக்குக்கூட விளை யாட்டில்தானே விருப் பம் அதிகம்? 'இதை வாசி, இந்தவாசி, என்று தாயோ தொணதொணப் பார்கள் தாய்மார்? ஆனால் இந்தப் பாப்பா 'படிக்கி றேன்' என்று சொல்ல, இவனுடைய அம்மா விளையாடச் சொல்கிறாள். அதிசயமான பாப்பா— இல்லையா? இந்தக் குழந்தைக்குப் படிப்பு விளையாட்டைப் போல் அவ்வளவு இன்பமாய் இருக்கிறது இப்படி. இருந்தால் படிப்பு எவ் வளவு லேசாக—எவ்வ ளவு இனிமையாக வந்து விடும்!

மேலே சொன்ன சம்பாஷணை நடந்ததே, அதற்கு ஒரு வருஷத் திற்கு முன்பு—அதாவது பாப் பாவுக்கு நாலாவது வயது-இவர் கள் வீட்டில் ஒரு வேடிக்கை நடந்தது சொல்லட்டுமா உனக்கு? இந்தப் பாப்பாவின் அக்காள்-மூன்று வயது பெரிய வள்—பாடம் படித்துக்கொண் டிருந்தாள். சாதாரணமான பாடம் பெற்றோர் வாசிக்கச் சொல்லித்தான் அக்காள் வாசித் துக் காட்டினாள். பாடத்தைச் சரியாக வாசிக்கத் தெரியவில்லை. திக்கித்திக்கி வாசித்தாள் உடனே தங்கைப் பாப்பா புஸ் தகத்தை அக்காள் கையிலிருந்து எடுத்துக்கொண்டாள் திறந் திருந்த அந்தப் பக்கத்திலே பாதனை வந்து வாக்கியத்தை உரக்க

வாசித்தாள். பெற்றோர் அதி சயமாய்ப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். ஒன்றும் பேச வில்லை. ஆனால் பாப்பா சந் தோஷமாய் மேலே வாசித்துக் கொண்டு போனாள். இது பாப் பாவுக்கு ஓர் இன்ப விளையாட் டாய் இருந்தது அக்காளுக்குக் கோபம் முகத்திலே, அப்பா வுக்கும்-அம்மாவுக்கும் ஒரே ஆதி சயம் இந்த முகங்களைப் பாப்பா பார்த்தாளோ, இல் லையோ—பயந்தே போய்விட் டாள். 'பெரிய மனுஷி' போல் வாசித்துக் கொண்டிருந்தவள், திடீரென்று அழத் தொடங்கி னாள். 'என்ன அதிசயமான குழந்தை!' என்று பெற்றோர் திகைத்துப் போனார்களே அந் தக் குழந்தை இப்போது சாதா ரணமான நாலுவயதுக் குழந்தைபோல் கண்ணீர் வடித்து அழுதுகொண் டிருந்தாள்.



'மன்னியுங்கள், மன் னித்துவிடுங்கள். நான் வேணுமென்று செய்ய வில்லை. என் குற்றம் இல்லை— அக்காளின் குற்றம்தான். படிப்பது வேகமாகத்தான் இருந்தது' என்றாள் பாப்பா. ஆம், பாப்பா இப்படிப் படித்ததற்குக் காரணம் அக்காள்தான் அவள் தான் தங்கைக்கு எழுத் துக்களைக் கற்பித்தவள். அக்காளுக்கு நெடுங் கணக்கு முழுதும் கற்றுக் கொள்வது கஷ்டமாய்

இருந்தது. அப்போது அந்த எழுத்துக்களைத் தங்கைப்பாப்பாவுக்குக் கற்பிக்க விரும்பினாள். 'நான்தான் வாத்தியாராம், நீ தான் மாணாக்கியாம்' என்று அக்காள் தங்கையுடன் ஒரு விளையாட்டு விளையாட ஆரம்பித்தாள். அக்காளின் இந்த வாத்தியார்-விளையாட்டினால், தங்கைக்கு வாசிக்கத் தெரிந்து விட்டது. 'வாத்தியாரையும் மிஞ்சிவிட்டாள் மாணாக்கி!' இப்போது சொல்லு குழந்தாய்! 'நான் வாசிப்பது குற்றமானால் அது அக்காளின் குற்றம்!'— என்று பாப்பா சொன்னது சரிதானே? இப்படிப்பட்ட பாப்பா சாதாரணக் குழந்தையாக இருக்க முடியுமா?—அதிசயமான குழந்தை தானே?



ஆம், இந்த அதிசயக் குழந்தையின் பெயர் மேரி இவரே மேரிக்யூரி என்று பெரும் புகழும் பெற்ற விஞ்ஞானி ஆனார். விஞ்ஞானி என்றால் உனக்குத் தெரியுமா குழந்தாய்? புதிது புதிதாய் யந்திரங்கள் முதலியவற்றைக் கண்டு பிடிக்கிறார்களே, அவர்களை விஞ்ஞானிகள் என்கிறோம். எலெக்ட்ரிக் வெளிச்சம் இருக்கிறதே அதைக் கண்டுபிடித்தவரும் ஒரு விஞ்ஞானிதான் மேரிக்யூரி அம்மையார் ரேடியம் என்னும் அபூர்வமான பொருளைக் கண்டு பிடித்த விஞ்ஞானி. இதைக் கண்டு பிடித்ததில் இவருக்கு இவர் கணவர் உதவி செய்தார்.

விஞ்ஞானிகள் பல அதிசயமான பொருள்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆனால் ரேடியம்போல் இவ்வளவு அபூர்வமான பொருளைக் கண்டு [illegible]வர் மிகச் சிலர் தான். [illegible] குழந்தாய்! மேரிக்யூரி அம்மையார் [illegible] விஞ்ஞானிகளிலும் அபூர்வமான விஞ்ஞானி என்று சொல்லவேண்டும். இவர் கணவரும் ஓர் அபூர்வமான விஞ்ஞானிதான்.

ரேடியம் இருட்டிலும் ஒளி வீசும்—கேட்டிருக்கிறாயா குழந்தாய்? இவைப்பாறவும் நேரம் இல்லாமல் மேரிக்யூரி அம்மையாரும் இவர் கணவரும் உழைத்தார்கள். இப்படி உழைத்துத்தான் ரேடியம் என்ற பொருளைக் கண்டுபிடித்தார்கள். மேரிக்யூரி அம்மையாரின் கணவர் பியரிக்யூரி கணவரின் பெயரான 'க்யூரி'யையும் தன் பெயரோடு சேர்த்துக் கொண்டார் மேரி அம்மையார். இதனால் மேரி அம்மையார் மேரிக்யூரி ஆனார்.

ரேடியம் கண்டுபிடித்ததற்காக மேரிக்யூரிக்கும், கணவரான பியரிக்யூரிக்கும் நோபெல்பரிசில் பாதி கொடுத்தார்கள். நோபெல் என்பவர் ஏற்படுத்திய பரிசு தான் நோபெல் பரிசு. உலகத்திலே அறிவை வளர்க்கவேண்டுமென்று இந்தப் பரிசு ஏற்பட்டது. (இவரைப்பற்றியும் நம் இந்தியாவில் நோபெல் பரிசு பெற்றவர்களைப் பற்றியும் உனக்கும் இன்னொரு நாள் சொல்லுகிறேன்.)

இந்த நோபெல்பரிசுக்கு மேரிக்யூரி அம்மையாரும், இவருடைய கணவரும் மிகவும் பொருத்தமானவர்கள் — இல்லையா குழந்தாய்? எனினும் இவர்கள் இருவருக்கும் பாதிப்பரிசு தான் கிடைத்தது. வேறொரு பாதி ரேடியத்திற்காகவே உழைத்திருந்த வேறொருவருக்குக் கிடைத்தது

கணவர் இறந்த பின்பும் மேரிக்யூரி ஆராய்ச்சிகள் நடத்தி வந்தார். இவருக்கு இரண்டாவது தடவையும் நோபெல் பரிசு கிடைத்தது. இது முழுப்பரிசு.

குழந்தாய்! ரேடியம்தான், 'எக்ஸ்ரே' என்று சொல்லுகிறோமே இந்தச் சாதனத்திற்கும் உபயோகப்படுகிறது 'எக்ஸ்ரே' என்று கேட்டிருக்கிறாயா குழந்தாய்! பார்த்திருக்கிறாயா? 'எக்ஸ்ரே' படம் பிடிக்கிறார்கள் அல்லவா? அதனால் உடலுக்குள் இருக்கிறது தெரியும்—கேட்டிருக்கிறாயா?

இப்படியெல்லாம் உலகத்திற்கு உபகாரம் செய்த விஞ்ஞானிகளை, நீ தெரிந்துகொள்ள வேண்டுமா குழந்தாய்? சரி, நீயும் இப்படி ஒரு விஞ்ஞானியாக இருக்க ஆசைப்படுகிறாயா? அப்போது ஜனங்களுக்கு எவ்வளவு உதவிசெய்யலாம் என்று தோன்றுகிறதல்லவா?





Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory Ho
Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.



ஸ்தாபிதம்: 1895. போன்: 2250

# ஸுரஜ்மல்ஸ்

வைரங்கள் & நவரத்ன வியாபாரிகள்

313, எஸ்பிளனேட் - மதராஸ்.

144098